# நல்லைக்குமரன் மலர்




## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

இதழ் 22

2014

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 22

## 2014

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

7241(P)V

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2014

| | | |
|---|---|---|
| போஷகர் | : | **திருமதி யோ. பற்குணராசா**<br>மாண்புமிகு மாநகர முதல்வர்,<br>யாழ்.மாநகர சபை |
| தலைவர் | : | **திரு செ. பிரணவநாதன்**<br>மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். |
| செயலாளர் | : | **திரு பு. ஆறுமுகதாசன்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| பொருளாளர் | : | **திரு நா. இரகுமார்**<br>பொறுப்பதிகாரி P.H.E.D |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | **திரு ச. லோகசிவம்**<br>பொதுசனத் தொடர்பு அதிகாரி, யா.மா.சபை<br>**திரு ஞா. மோகனசுந்தரம்**<br>வேலை மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**திரு சோ.கணேசநாதன்**<br>மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**திரு து. இராஜன்**<br>தொழில் நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை<br>**திரு கு. விஜயகுமார்**<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை<br>**திரு கா. ஜெயானந்தா**<br>நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாகம், யா.மா.சபை<br>**செல்வி பொ. புஸ்பலதா**<br>கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை<br>**திரு சி. கிருஷ்ணமூர்த்தி**<br>பதிவகக் காப்பாளர், யா.மா.சபை<br>**திரு செ. பன்னீர்ச்செல்வம்**<br>றோணியோ இயந்திர இயக்குநர், யா.மா.சபை<br>**திரு க. கேதீஸ்வரன்**<br>நீர்வேலைப்பகுதி, யா.மா.சபை<br>**திரு ச.சற்குணமூர்த்தி**<br>வருமான மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**செல்வி இ.தர்சினி**<br>முகாமைத்துவ உதவியாளர், யா.மா.சபை |
| கௌரவ பதிப்பாசிரியர் | : | **திரு ந. விஜயசுந்தரம்**<br>அதிபர்,<br>யா/ பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி. |

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

நல்லூர்க் கந்தப்பெருமானின் மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் இந்த வருடம் 22வது மலராக வெளிவருகிறது. 22 ஆண்டுகள் இடையறாது மலர் வெளிவருவதற்கு நல்லைக்கந்தப்பெருமானின் பேரருளே மூலகாரண மெனலாம்.

நல்லூர்க் கந்தப்பெருமான் எம் தமிழினத்தின் தலைவன். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தோற்றம் தமிழினத்தின் அடையாளம். எனவே எங்கள் இனத்தின் தலைவனாக இருக்கக்கூடிய நல்லூர்க் கந்தனுக்கு மலர் வெளியிட்டு அவனின் பேராற்றலை - பேரருளை - பெருங்கருணைத் திறத்தைப் போற்றி நிற்பது அவனருள் பெறுவதற்கும் அவனின் அருட்பார்வைக்கு ஆளாகுவதற்கும் அரிய வாய்ப்பு எனலாம். ஆலயம் என்பது மனிதனைப் பண்படுத்தும் சன்னிதானம். அதனாலேயே ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றனர் நம் முன்னோர். மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் சிறுபராயத்தில் இருந்து இளமைப் பராயத்தில் காலடி வைக்கின்ற காலப் பகுதிக்குரிய வழிப்படுத்தலில் ஆலயங்கள் கொண்டுள்ள வகிபாகம் மிகவும் முக்கியமானது.

ஆலய வழிபாடு மனிதனை தெய்வீகம் மிக்கவனாக மாற்றுகின்றது. மனிதனிடம் தெய்வீகம் ஏற்பட்டுவிட்டால் அவனே வழிபடு கோவிலாகி விடுவான். மனித வாழ்வின் ஆரம்பகட்டமாகிய ஆலய வழிபாட்டின் இரண்டாம் கட்டநிலை இது வெனலாம். உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் என்ற திருமூலர் காட்டும் தத்துவம் ஆலய வழிபாட்டினூடாக மனிதன் அடைந்து கொள்ளும் பேறாகும். குழந் தைப் பராயம் முதல் பதினாறு வயதுவரை ஆலயத்திற்குச் சென்று வழிபாடாற்றிய சைவசமயி ஒருவன், தன் உடம்பை ஆலயமாக்கிக் கொள்கிறான். மனித உடம்பு ஆலயமாக - தெய்வம் குடியிருக்கும் கோவிலாக மாறும் போது அங்கு தூய்மையும், ஆன்மீகமும், அன்பும், இனியன பேசும் வாய்மையும் தளைத்தோங்கும்.

ஊனுடம்பு ஆலயம் என்ற நிலையை ஒரு இளைஞன் அடையும் போது அவனிடம் பிறழ்வான சிந்தனைகள் ஏற்படுவதில்லை. இவ்வாறாக ஒரு உயர்ந்த நிலையில் மனிதனைத் தெய்வமாக ஆக்கும் பணிகளைச் செய்யும் நோக்கில் நம் முன்னோர்களால் அமைக்கப்பெற்ற சைவஆலயங்கள் இன்று தாமே பிணக்குக்குட்பட்டு நீதிமன்றங்களில் தீர்ப்புக் கேட்டு நிற்பதுதான் எங்களின் அவல நிலைக்கான அடிப்படையெனலாம்.

ஆலயங்களின் அடிப்படை நோக்கம் பற்றி உணராதார் சிறுதெய்வங்களுக்கும் பெருங்கோவில் கட்டி, ஊர் கூடி விளக்கேற்றி வழிபடும் முறைமையை மறையச் செய்தனர். ஒரு காலத்தில் ஆலடி வைரவர் என்றால் அவருக்கான பூசை வழிபாடுகளை அந்த ஆலயத்தின் அயலில் இருப்பவர்களே நடத்தினர். மாலை ஆறு மணியில் எழும் சங்கொலியும், சேமக்கலமும் எங்களை இறைசிந்தனைக்கு அழைத்துச் செல்லும். ஊர்ப் பெரியவர்கள் பாடி நிற்கும் திருமுறைப் பாராயணங்கள் எங்களை இசை வழியில் இறை அனுபவத்தில் திழைக்க வைக்கும். ஆனால் இன்று ஆலடி வைரவருக்கு கருங்கல்லில் கட்டுமானம் செய்து ஆறடியில் கதவிட்டு அவரையும் பூட்டி வைத்து, பூசை நேரம் புரியாமல் வழிபாட்டை மறந்து போன எங்கள் நவீன பண்பாட்டின் பரிதாப நிலை வேதனைக்குரியது.

வெளிநாட்டில் உழைத்த பணம் கோயில் கட்டுவதற்கே என்ற சிற்றறிவு ஊர் முழுவதும் கோவில் ஆகிப்போக, ஆளுக்கொரு ஆலயம் என்ற நிலையில் வழிபாட்டிற்கும் சைவநாற்பாதத்திற்கும் பணம் கொடுத்து ஆள் பிடிக்கும் அவலத்திற்கு எங்கள் சமயம் ஆளாகிக்கொண்டமை வேதனைக்குரியதே. இத்தகைய அவலம் தொடர்வதை இனிமேலாவது நாம் தடுக்க வேண்டும். ஆலயப் பிணக்குகள், சிறுதெய்வங்களுக்கு பெருங்கோவில் கட்டுதல் தொடர்பில் கருத்தறிய - தீர்ப்பு வழங்க நம் சமயத்தலைவர்களை உள்ளடக்கிய ஆலோசனைச் சபை அமைக்கப்படவும் அதனை அங்கீகரிக்கவும் நம் சிவபூமி தயாராகவேண்டும்.

சைவசமயத்திற்கு என அமைக்கப்பட்ட ஆலோசனைச் சபைக்குக் கட்டுப்பட்டு அதன் தீர்ப்பை ஏற்றுக் கொள்கின்ற ஒரு நடைமுறை அவசரமாக ஏற்படுத்தப்படுவது சைவ சமயத்தின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. அதேநேரம் எங்கள் இளைஞர்களை ஆலய வழிபாட்டினூடாக ஆற்றுப்படுத்தும் உபாயங்கள் பற்றியும் ஆலோசனைச் சபை தனது பரிந்துரைகளை முன்வைப்பதும் கட்டாயமானது. இப்பரிந்துரைகள் கால சூழ்நிலைகளுக்கேற்றதாக அமையும் போது - அமுலாகும் போது ஆலய வழிபாட்டின் வழி, உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம் என்ற தெய்வீக நிலை எங்கள் ஒவ்வொருவரிடமும் ஏற்படும் என்ற கருத்தை நல்லைக்குமரனின் 22வது மலரின் கருப்பொருளாகத் தந்து, எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தப்பெருமான் எங்கள் வினைஅறுத்து எங்களுக்கு நல்வாழ்வும் வளமும் தந்தருள வேண்டி, இம்மலரை அவனின் பொற்றிருப்பாதங்களில் சமர்ப்பணம் செய்து போற்றுகின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக்குமரன் மலர்**



# பொருளடக்கம்


பக்கம்

**சமர்ப்பணம்**

**ஆசிச்செய்திகள்**

**வாழ்த்துச் செய்திகள்**

**நல்லையிற் கந்தன் வெளிப்படில் ...** 01-03
ச.தங்கமாமயிலோன்

**அகமகிழும் நாள் அண்மித்துவிட்டது!** 04
விகடகவி மு. திருநாவுக்கரசு

**அம்மையப்பனாய் அருள்வான் அன்பு!** 05-06
த. ஜெயசீலன்

**தமிழர் தெய்வம் அழகன் குமரன்** 07-08
கவிஞர் வ.யோகானந்தசிவம்

**முருகன் புகழ் மாலை** சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள் 09-10

**நல்லைக்குமரன் வெண்பா மாலை** 11-14
கவிஞர் வ. சின்னப்பா

**நல்லைக்கந்தன் நனிவெண்பா** கலாபூஷணம். சந்தக்கவிஞர் நவ. பாலகோபால் 15-18

**"அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே!"** 19-20
கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்

**நல்லைக் குமரன் பாமாலை** நயினை க. ச. அரவிந்தன் 21-23

**நன்நிலை அருளாயோ** கலாபூஷணம் சி. சிவனேசன் 24-26

**என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!** 27-31
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

**யாம் எல்லோரும் முருகப் பெருமானை வழிபட்டு திருவருள் பெறுவோமாக!** 32-33
பேராசிரியர் வி.சிவசாமி

**ஓங்காரத்து உள்ஒளிக்கும் உள் ஒளியாய் விளங்கும் முருகன்** 34-35
சைவப்புலவர் வை.சி. சிவசுப்பிரமணியம்

**தேடிக்கண்டு கொண்டேன் ...** நமசிவாயம் கல்யாணி 36-39

**கந்தன் கருணை** மு. தம்பிப்பிள்ளை 40-44

**சங்க காலத்தில் முருக வழிபாடு** 45-48
சைவப்புலவர் செ.பரமநாதன்

**சுப்பிரமண்ய புஜங்கம்** பி. என். சுதர்ஷன் 49-51

**கௌமார வழிபாட்டு மரபில் சத்த்யஸ்த்ரஸ்தாபனம்** 52-54
கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா

**வேத இலக்கியங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு - ஓர் அவதானம்** 55-59
திருமதி.ஸ்ரீகலா ஜெகநாதன்

**சைவசமயப் பண்பாட்டில் வேதமும் வேள்வியும்** 60-65
வ. கோவிந்தபிள்ளை

**திருவாசகத்தில் சைவசித்தாந்தம்** 66-70
சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்



சிறப்பு ஆய்வு நூலகம்
யாழ்ப்பாணம்.

**திருவாசகத்தின் இருதயம்** 71-72
நயினை ஆ. தியாகராசா

**திருமந்திரம் - ஒரு மெய்யியல் பார்வை** 73-79
த.தவனீசன்

**அருணகிரிநாதரின் திருப்புகழில் விஸ்ணுவின் தசாவதாரங்கள்** 80-88
புவிலோகசிங்கம் அருள்நேசன்

**திருமுறைப் பாடல்கள் அணிசெய்யும் சிவநெறி** 89-94
கலாபூஷணம் மு. சிவலிங்கம்

**கம்பரின் கும்பகர்ணனும் கச்சியப்பரின் சிங்கமுகாசுரனும்** 95-100
கு.பாலஷண்முகன்

**நல்லூரானைச் சிறப்பித்த நல்ல குருநாதர்கள்** 101-102
திருமதி.சன்முகயோகினி ரவீந்திரன்

**ஈழத்து சைவசித்தாந்த வரலாற்றில் சுவாமி ஞானப்பிரகாசரது பணிகள்** 103-108
க.கணேசதேவா

**ஈழநாட்டில் சித்தர் மரபு** ப. பத்மநிருபன் 109-110

**சர்வதேச உலகில் மதம்** ஜெகநாதன் தற்பரன் 111-116

**இந்துசமயம் - கல்வி - சமூகவியல் சில சிந்தனைகள்** 117-121
பேராசிரியர் மா.சின்னத்தம்பி

**கடவுள் என்பது யார்?** அ. நளினாசினி 122-124

**திருக்கேதீச்சரம்** பொ.சிவப்பிரகாசம் 125-132

**நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோயில்** 133-139
திருமதி. வசந்தா நடராசன்

**முருக வழிபாடுகளும் திருத்தலங்களும்** 140-142
செல்வி. கீர்த்தனா ஆறுமுகதாசன்

**சைவசமயமும் நடைமுறை வாழ்க்கையும்** 143-144
சைவப்புலவர் சு.தேவமனோகரன்

**மனமது வசப்பட ...** டாக்டர் திருமதி.அருள்மொழி சுதர்மன் 145-146

**ஆலய தரிசனமும் ஆரோக்கிய வாழ்வும்** 147-151
எஸ்.நடராஜா

**சைவநெறி போதிக்கும் அன்போடு இயைந்த வாழ்வியல்** 152-155
செல்வி. சுரேகா பரமானந்தம்

**ஆடினார் ஆனந்த நடனம்** 156-158
சி. கிருஷ்ணமூர்த்தி

**அறுகும் வன்னியும்** சிவஸ்ரீ க. ஜெயராமக்குருக்கள் 159-161

**2014இல் யாழ் விருது பெறும் வித்யாசாகரம் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்** 162-164
பு.ஆறுமுகதாசன்

**கர்மயோகி சுவாமி சித்ருபானந்தா** 165
கலாநிதி நா.வி.மு.நவரெத்தினம்

# நல்லைக்குமரன் மலர்
# 2014

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்

- **நல்லை ஆதீன முதல்வர்**

  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்
- **இராமகிருஷ்ண மிஷன்**

  சுவாமி இராஜேஸ்வரானந்த
- **ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

  செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன
- **சின்மயாமிஷன் சுவாமி**

  ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்
- **யாழ் மாநகரசபை முதல்வர்**

  திருமதி யோ. பற்குணராசா
- **யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்**

  திரு. சு.அருமைநாயகம்
- **இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர்**

  சாந்தி நாவுக்கரசன்
- **யாழ் மாநகர ஆணையாளர்**

  செ.பிரணவநாதன்

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

## நல்லை ஆதீன முதல்வரின்
## அருளாசிச்செய்தி

முருகன் அடியார்களுக்கு

பழைமையும் பெருமையும் பல சிறப்புக்களையும் உடைய உலகத் தலைவனாக இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நல்லூர் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அனைவருடைய அன்புக்கும் உரியவனாக விளங்கும் நல்லைக் கந்தனுக்கு நடைபெறும் விழாக் காலத்தில் யாழ் மாநகரசபை சைவசமய விவகாரக்குழு நல்லைக்குமரன் மலரை வெளியிட்டு ஒவ்வொரு ஆண்டும் சிறப்புச் செய்வது அனைவருக்கும் மகிழச்சியைத் தருகின்றது.

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனுக்கு தமிழ் அறிஞர்கள் ஒன்று திரண்டு ஆக்கங்களை உருவாக்கி உலகம் வாழும் அனைவருக்கும் முருக சிந்தனையை ஏற்படுத்தும் நற்பணி நடந்து கொண்டிருக்கின்றது. பட்டணம் மேவிய பெருமான் என அருணகிரிநாதரால் வியந்து போற்றப்பட்ட முருகனே அழகன். நல்லை முருகன் தனி அழகன். அழகனுக்கு அழகு சேர்க்கும் வகையில் 22ஆவது மலராக நல்லைக்குமரன் 2014இல் வெளி வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்புனிதப் பணியை ஒவ்வொரு ஆண்டும் நெறிப்படுத்தும் சைவசமய விவகாரக் குழுவினரும் நூலாசிரியரும் சைவத்தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர்களாவர். எல்லோருக்கும் முருகனுடைய அன்பு கிடைப்பதாக.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு".**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்**
**யாழ்ப்பாணம்**

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன்
## சுவாமிகளின் ஆசிச்செய்தி

நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு, யாழ் மாநரக சபையின் சைவசமய விவகாரக் குழு இம் முறையும் "நல்லைக்குமரன் மலர்" வெளியிட இருப்பதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு செயலை பலர் சேர்ந்து தொடர்ந்து சிறந்த முறையில் செய்ய வேண்டுமானால் ஒற்றுமையும் இடையறாத முயற்சியும், இறைவனின் அருளும் வேண்டும். மேலும் சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார் செயலின் பலனில் செலுத்தும் அதேஅளவு கவனத்தை அந்தச் செயலைச் செய்கின்ற முறையிலும் செலுத்த வேண்டும் என்று. அந்தவகையில் யாழ் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாக இம் மலரினை சிறந்த முறையில் வெளியிட்டு வருவது போற்றுதலுக்குரியதாகும்.

சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார் "நமக்கு வேண்டியது உணர ஓர் இதயம், சிந்திக்க ஒரு மூளை, வேலை செய்வதற்கு வலிய கைகள் .. வேலை செய்வதற்கு தகுந்த ஒரு கருவியாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள் ... இதயத்திற்கும் மூளைக்கும் கருத்து வேறுபாடு ஏற்படும் போது, இதயத்தை பின்பற்றுங்கள்".

யாழ் மாநரகரசபையின் சைவசமய விவகாரக் குழுவின் சேவை மேலும் வளரவும். அத்துடன் "நல்லைக்குமரன் மலர்" வெளிவர உழைத்த அனைவரையும் வாழ்த்துவதோடு, இறைவன் தன் அருளையும் ஆசிகளையும் வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

**இறைபணியில்**
**சுவாமி இராஜேஸ்வரானந்த**



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P.No - 0602-213151

திகதி.........................

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் ஆசிச் செய்தி

ஈழத்தமிழர்களின் தலையாய திருக்கோயில் என வர்ணிக்கப்படுவது நல்லூர் கந்தசாமி கோயில். இத் திருக்கோவிலின் பெருந்திருவிழாக்காலம் தனித்துவம் மிக்கது. மக்கள் மனதைப் புனிதப்படுத்துவதற்கு நல்லூரான் திருவிழாக்காலம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. நல்லூர் கந்தனின் பெருவிழாக்குறித்து கடந்த 22 வருட காலமாக யாழ் மாநரக சபையின் சைவசமய விவகாரக் குழு சிறப்பு மலரை வெளியிட்டு வருவது அனைவரும் அறிந்ததே. நல்லைக்குமரன் என்ற நாமத்தோடு வெளிவரும் இம்மலர் மிகவும் கருத்தாளம் கொண்ட மலராக அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மிகச் சிறந்த அறிஞர்களின் ஆக்கங்கள் இம்மலரில் தொடர்ந்து வெளிவருகிறது.

காலம் தவறாமல் ஆண்டுதோறும் வெளியிடப்படும் இம்மலர் இவ்வாண்டும் சிறப்பாக வெளியிடப்படுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். மலரின் பிரதம பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களின் ஆற்றுப்படுத்தலில் இம்மலர் நேர்த்தியாக வெளியிடப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். யாழ் மாநரக சைவ சமய விவகாரக்குழு இப்பணியை மிகவும் புனிதமாக நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியது. இம்மலரில் வரும் ஆக்கங்கள் இந்து சமய ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவ சமுதாயத்துக்கு மிகவும் பயன்தருகிறது. நல்லைக் கந்தப் பெருமானின் திருவருளாலும் நூலாக்கக் குழுவினரின் நன்முயற்சியி னாலும் வெளிவரும் நல்லைக்குமரன் மலர் சூரியன் சந்திரன் உள்ளவரை தொடர்ந்து வெளிவர வேண்டுமென பிரார்த்தித்து எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறுதிருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தலைவர்
சிவபூமி அறக்கட்டளை
உபதலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)

32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344

SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.

web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

SRI LANKA


# சின்மயா மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவானது நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சைவத்தின் பெருமையை எடுத்துச் சொல்கின்ற ஆக்கங்களை உள்ளடக்கிய நல்லைக்குமரன் மலரினை இவ்வருடம் 22வது தடவையாக வெளியிட இருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நல்லைக்குமரன் மலர் இன்றைய இளம் சமூகத்தினருக்கு விஞ்ஞானத்தையும் தர்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட விதத்தில் சைவநெறியின் தத்துவங்களை எடுத்துச் சொல்கின்ற நூலாக மிளிர்வதற்கு எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**யாழ்ப்பாணம்.**

**இறைபணியில்**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்**
**வதிவிட ஆச்சாரியார்,**
**சின்மயாமிஷன்.**

# முதல்வர் - மாநகர சபை யாழ்ப்பாணம்
# නගරාධිපති - යාපනය මහනගර සභාව
# Mayor - Municipal Council Jaffna

## யாழ்ப்பாண மாநகர முதல்வரின்
## வாழ்த்துச் செய்தி

இருபது ஆண்டுகளுக்கு மேலாக சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் வெளியிட்டு வரும் நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையை மகத்தான பேறாகக் கருதுகின்றேன்.

இன்று தனது இருபத்திரண்டாவது மலரை வெளியிடும் இக்குழு கடந்த இருபத்தொரு ஆண்டு காலத்தில் ஆற்றிய மதிப்பிடற்கரிய சேவையை என்றும் எவராலும் மறக்க முடியாது.

திரு முருகா என்று ஒருதரம் சொன்னால் உருகாத நெஞ்சுடையார் எவரும் இவ்வுலகில் இருக்க முடியாது. இதற்கமைய சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கருதிச் செயற்பட்டு வரும் இக்குழுவின் சேவை பல்லாயிரம் ஆண்டு காலம் நிலைத்து நிற்க என் வாழ்த்துக்கள்.

"வேதநெறி தழைத்தோங்க; மிகுசைவத் துறை விளங்க" பணியாற்றி வரும் யாழ் மாநகராட்சி மன்றத்தின் சைவத் திருப்பணி நீடுவாழ இறைவன் அருள் பாலிப்பானாக!

**மாநகராட்சி மன்றம்.**
**யாழ்ப்பாணம்.**

**திருமதி யோ. பற்குணராசா**
**மாநகர முதல்வர்.**

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone
ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 2233, 021-222 2234
General Telephone

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண் } Message from GA
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி }
Date

# யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டிலே தமிழ் மன்னர்கள் மணிசூடிய காலத்தில் அவர்களின் இராசதானியாக விளங்கிய நல்லையம்பதியிலே எழுந்தருளியுள்ள அருள்மிகு நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலங்களில் வெளியிடப்பட்டு வரும் "நல்லைக்குமரன்" மலர் இருபத்திரண்டாவது இதழாக மலரவிருப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் குடாநாட்டில் நல்லைக் குமரனின் வருடாந்த மகோற்சவம் மிகவும் முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும். இத்தகைய புனிதமான காலப்பகுதியில் இளைய தலைமுறையினரிடையே சைவசமய அறிவினையும், இறை பக்தியையும், ஆன்மீக உணர்வினையும் விருத்தியடையச் செய்யும் நோக்கில் எமது சமய வரலாறுகள், தத்துவங்களுடன் அலங்காரக் கந்தனின் பெருமைகளைத் தன்னகத்தே கொண்டு ஆண்டுதோறும் இம் மலரை வெளியிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் மிகுந்த பாராட்டுக்குரியவர்களாவர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த "நல்லைக்குமரன்" மலர் வெளியீடு சிறப்புறவும், அலங்காரக் கந்தன் எனும் அழகு பெயர் கொண்ட கந்தப் பெருமானின் அருட்பார்வை அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல நல்லூரானின் திருவடியைப் பணிந்து எனது நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ் மாவட்டம்,
யாழ்ப்பாணம்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலர்.

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක பணிப்பாளர் Director | 2552643 | ෆැක්ස් தொலைநகல் Fax | 2552825 | ඊමේල් மின் அஞ்சல் E-Mail | hindudir@yahoo.com |
| පොදු பொது General | 2552641 | | | වෙබ් අඩවිය இணையதளம் Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය எனது இல. My No. | | ඔබේ අංකය உமது இல. Your No. | | දිනය திகதி Date | |


# இந்துசமய, கலாசார திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் புகழ்மிக்க முருகன் ஆலயங்களில் ஒன்றாக நல்லூர் கந்தசாமி ஆலயம் விளங்குகின்றது. நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவம் ஆடி மாதத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இம்மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் "நல்லைக்குமரன்" எனும் சிறப்பு மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சமயத்தையும் அதன் உள்ளார்ந்த தத்துவத்தையும் உணர்த்துவனவாக ஆலயங்களும் அவற்றில் நடைபெறும் விழாக்களும் அமைந்துள்ளன. ஆன்மாக்கள் மெய்ப்பொருளின் அருளைப் பெற்று அநுபவித்தற் பொருட்டு ஆலயங்களில் மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. இலங்கையில் நீண்ட மகோற்சவத்தைக் கொண்ட ஆலயங்களில் ஒன்றாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் விளங்குகின்றது. இம்மகோற்சவ காலங்கள் மூலமாக எமது சமய விழுமியங்களை நாம் புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் பேணிப்பாதுகாக்கவும் முடிகின்றது. எமது சமய நம்பிக்கைகள், பாரம்பரியங்கள் அருகி மதமாற்றங்கள் நிகழ்ந்து வருகின்ற இக்காலகட்டத்தில் இத்தகைய செயற்பாடுகள் அவசியமானவையாக உள்ளன.

அந்தவகையில் நமது சமய, கலை, கலாசாரம் பற்றிய சிறந்த ஆக்கங்களைக் கொண்டதாக நல்லைக்குமரன் மலர் அமைய வேண்டுமென வாழ்த்துவதுடன், இவ் அரிய பணிகளை மேற்கொள்ளும் மன்றத்தினர் அனைவரையும் விதந்து பாராட்டுகின்றேன். இவர்களின் இந்த முயற்சி மென்மேலும் சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல முருகப்பெருமான் அருள்புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்**

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**இல 248-1/1 காலி வீதி,**
**கொழும்பு 04.**

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்

## வாழ்த்துச் செய்தி

பழைமையும், பெருமையும், தொன்மையும், பாரம்பரியமும் மிக்க சைவ சமயத்தின் பெயரால் இச்சபையில் இயங்கும் சைவசமய விவகாரக் குழுவினால், வரலாற்றுப் பெருமை மிக்க நல்லைக் கந்தனின் உற்சவ காலத்தில் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சமுதாயத்தில் சமய, சமூக விழுமியங்களைப் பேணி ஆன்மீக உணர்வை வளர்ந்தெடுப்பதில் பெரும் பங்காற்றி வரும் நல்லைக் குமரன் மலரின் வரிசையில் இருபத்தோராவது மலராக விரிகின்ற இம்மலரிலும் காலத்தின் தேவைக்குகந்த ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் வருகைக்கு சகல விதத்திலும் உழைத்த அனைவருக்கும் நல்லைக்கந்தன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**மாநகராட்சி மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

**செ.பிரணவநாதன்**
**சைவசமய விவகாரக்குழுவின் தலைவரும்,**
**மாநகர ஆணையாளரும்.**

உ

# நல்லைக்குமரன் மலர்

# 2014

## கவிதைகள்


- **நல்லையிற் கந்தன் வெளிப்படில் ...**

  ச.தங்கமாமயிலோன்
- **அகமகிழும் நாள் அண்மித்துவிட்டது!**

  விகடகவி மு. திருநாவுக்கரசு
- **அம்மையப்பனாய் அருள்வான் அன்பு!**

  த. ஜெயசீலன்
- **தமிழர் தெய்வம் அழகன் குமரன்**

  கவிஞர் வ.யோகானந்தசிவம்
- **முருகன் புகழ் மாலை**

  சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள்
- **நல்லைக்குமரன் வெண்பா மாலை**

  கவிஞர் வ. சின்னப்பா
- **நல்லைக்கந்தன் நனிவெண்பா**

  கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ. பாலகோபால்
- **"அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே!"**

  கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்
- **நல்லைக் குமரன் பாமாலை**

  நயினை க. ச. அரவிந்தன்
- **நன்நிலை அருளாயோ**

  கலாபூஷணம் சி. சிவனேசன்

# நல்லையிற் கந்தன் வெளிப்படில் ...

ச.தங்கமாமயிலோன்

விண்ணவர் மண்ணவர் வேண்டித்தொழுங்கழல் விளங்குவ தாகாதே
வீதியெலாம் வந்து வித்தைகள் காட்டி வெளிப்பது மாகாதே
தண்ணளி வேந்தனின் செயல்களில் தங்கிடுந் தருமமு மாகாதே
தாவிலறந்தரு தாளாண்மை முயற்சி தங்குவ தாகாதே
திண்ணமும் எண்ணமும் திருவினி லுயர்ந்தெழு தீபங்க ளாகாதே
தீயவை தீண்டாத் திறன்மிகு சீலர்கள் தேசுறல் ஆகாதே
கண்களி கூர்தரு காட்சிகள் நல்கிக் கலந்திடல் ஆகாதே
காணுமருட்டிரு நல்லையிற்கந்தன் காண்படு மாயிடிலே 1

சம்புசதாசிவன் தாள்களிரண்டுந் தரிசன மாகாதே
தாமதமொழியச் சத்துவமோங்கத் தளிர்ப்பது மாகாதே
தம்பமும் விம்பமுங் கும்பமுஞ்சேர்ந்து தத்துவ மாகாதே
தாவிலருட்சுக மாறதுதந்து தழுவிடல் ஆகாதே
உம்பரு மிம்பரும் உருண்டுபிரண்டு ஓதுவ தாகாதே
ஊடுறு மூழ்வினை ஊட்டமதின்றி ஓடுவ தாகாதே
தும்புரு நாரதர் தொழுதெழும்புங்கழல் தோன்றுவ தாகாதே
தோகைமயில் வீரன் நல்லையிற் கந்தன் தோன்றுவதாயிடிலே 2

மூவேடணையவை மும்மையும் நீங்கி மோட்சமு மாகாதே
மூடிய யாக்கையில் முளைத்தெழு மந்திரம் மூள்வது மாகாதே
சாவே நினையாத் தத்துவமுள்ளொளி தங்குவ தாகாதே
சார்பு மெலாங்கெடச் சத்துவமோங்குஞ் சார்பது மாகாதே
மாவேழ்சனனம் மலர்ந்து மறைந்திடல் மாயம தாகாதே
மாடதுகாடது மனைவியுமக்கள் மறந்திடல் ஆகாதே
பூவே தொடுத்துயர் மாலைகள் சார்த்திப் புகழ்வது மாகாதே
புரிதவ ஞானியர் போற்றும் நல்லூரான் புலர்ந்திடு மாயிடிலே 3

மூதுரை நல்வழி புகன்ற ஔவைக்குப் புலப்படல் ஆகாதே
　　பூசுரர் யாவரும் புகழ்ந்து பணிந்திடும் பூங்கழல் ஆகாதே
யாதுரை யாயினும் யாவரும் கொளுந்திறன் எய்துவ தாகாதே
　　யாங்ஙன மாயினும் யாவினும் வல்ல யந்திரம் ஆகாதே
தீதுரை பகராச் சின்மய சித்கனத் தெய்வமு மாகாதே
　　தீக்குறள் கேளாச் செவிகளில் வந்து தெவிட்டுவதாகாதே
வாதுரை கொள்கை மலங்கள் கெடவரம் தந்திடல் ஆகாதே
　　வணங்கிமகிழ் நல்லைக்கந்தனின் வார்கழல் வந்துவெளிப் படிலே　4

சிந்தனை யுயர்ச்சியில் தேசுபெறுங்கழல் செய்குதல் ஆகாதே
　　தேசமெல்லாம்புகழ் தேசினர்வந்து செப்புதல் ஆகாதே
பந்தனை நீங்கிப் பரிசுத்தராகிப் பணிந்திடல் ஆகாதே
　　பண்ணிடு பூசையில் பராபரமெய்திப் பரசுதல் ஆகாதே
அந்தமில் ஆனந்தவாரிதி அணைந்திடல் ஆகாதே
　　அக்கினி ஆறில் அறுமுகத் தொடுமெழு சரவண மாகாதே
வந்தனை செய்து மலரடி இறைஞ்சி வாழ்த்துவ தாகாதே
　　மாதுமை மைந்தன் நல்லையின் நாயகன் வந்திடில் ஆயிடிலே　5

திருச்சீரலைவாய் திருப்பரங்குன்றஞ் சீர்பெறல் ஆகாதே
　　சிறப்பொடு பூசனை செய்திடு வானவர் சிறந்திடல் ஆகாதே
இருநில மீதுறு மீறறம் புரக்கு மெழிலது வாகாதே
　　இயலிசை நாடகமுத்தமிழுந்தரு மியல்பது மாகாதே
அருவமுமாகி உருவமுமாகி அனைத்தறனு மாகாதே
　　ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவதானமும் அமைந்திடல் ஆகாதே
வருசிவபோத உண்மைகள் புகட்டிடும் மாதவம் ஆகாதே
　　வள்ளிமணாளன் நல்லையிற் கந்தன் வந்தெழில் காட்டிடிலே　6

அகத்தியர்க் கன்றருள் செய்ததமிழது அணுகுவ தாகாதே
　　அடுக்கலில் ஆணவத் தடிப்பது நீக்கி ஆளுதல் ஆகாதே
மகபதியான் மகள் மங்கை மணாளனை காணுதல் ஆகாதே
　　மாதவத்தூடொளிர் மைந்தன் முருகனை வணங்குவ தாகாதே
சிகண்டியேறிச் செகமது சுற்றுஞ் சிறுவனும் ஆகாதே
　　சீர்மிகுதில்லைச் சிதம்பரற் குபதேசச் செம்மலு மாகாதே
முகமது ஆறும் கரமீராறும் முகிழ்ந்திடல் ஆகாதே
　　மூவுலகுந்தொழு மூர்த்தி நல்லூரான் முன்னுறல் ஆயிடிலே　7

அட்டமகா சித்தியும் அருட்டிரு நோக்கமும் அணுகுவ தாகாதே
    ஆரவாரப் பேய்களடங்கி அஞ்சுவதஞ்சுதல் ஆகாதே
கட்டந்துன்பம் யாவிலுங் கலந்துலகாண்டிடும் கழலது ஆகாதே
    கடிகமழ் காந்தள் மலர்மிகுமாலை அணிதலும் ஆகாதே
துட்டர்குழாமதை வேருடன்சாய்த்த துரைமகன் ஆகாதே
    தூணிலுந் துரும்பிலுஞ் சுடர்விடு சோதியின் சூழலுமாகாதே
கிட்டவந் தணைந்துநாளுங் கிண்கிணிச் சதங்கையொலி கேட்குதல் ஆகாதே
    கீர்த்தியும் மூர்த்தியுங் கிளர்நல்லை வாசன் வெளிப்படு மாயிடிலே 8

ஆறுபடை வீட்டிலுறு அருணோக்கச் செயல்கண்டு ஆனந்த மாகாதே
    அருவுரு வாகியன்பர்க் காறுதலளித்திடும் ஆதியும் ஆகாதே
நீறுமுறை யாகவணி நீதிநிறை யாளர்தமை நித்தலுங் காணேனோ
    நீலமயி லமர்ந்து நித்தம் நெடுவான் புரக்கும் நீதியைக் காணேனோ
மாறுபடு சூரரை வதைத்து வதஞ்செய்த வள்ளலைக் காணேனோ
    மாறிலா வள்ளிதெய்வ யானையை மணந்திடுதல் காணேனோ
தேறுசிவ நாமமதைச் செப்பித் தினந்தினம் எண்ணுவ தாகாதே
    தெளிந்த வருட்டிரு நல்லையிற் கந்தன் வெளிப்படு மாயிடிலே 9

வாசவன் மருகன் வள்ளல் குமரேசனை வணங்குவ தாகாதே
    வான்வழி வந்து மாங்கனி வாங்க வணங்குது மாகாதே
நீசருறைதரு மாமலை பிழந்து வெல்வது மாகாதே
    நீதியுறைதரு நேர்மைத் திறங்கண்டு நேசம தாகாதே
பாசமது அகன்றிடப் பல்வகையோனி பாறுத லாகாதே
    பாவலர் நாவலர் உள்ளம் மகிழ்ந்திடப் பாடுதல் ஆகாதே
நேசமொ டுள்ளம் நிறைமலர் தூவி நினைத்தலு மாகாதே
    நீறணி கோலத்தொடு நல்லைவாசன் வெளிப்படு மாயிடிலே 10

# அகமகிழும் நாள் அண்மித்துவிட்டது!

விகடகவி மு. திருநாவுக்கரசு
ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி

அன்னையுடன் அப்பனவன்
அரவணைத்துக் கொஞ்ச
ஐங்கரனும் வைரவரும்
அகமகிழ்ந்து போற்ற

கரம் கூப்பி வேலவரும்
கண்கணீர் சொரிந்து
கன்னியர்கள் இருவரையும்
கைப்பிடித்தவாறு

நல்லையிலே கொடியேற
நான் போகின்றேனென்று
நளினமுறு நங்கையரை
தான் அணைத்துக் கொண்டான்.

கானமா மயில் மீது
களிப்புடனே ஏறி
கயிலைதனை விட்டகன்று
வந்தடைந்தான் நல்லை.

மாதமொன்று நானிங்கு
மனமுவந்து கழிப்பேன்
மக்கள் துயர் களைந்திடவே
மனமுவந்து போறேன்

அங்கயற் கண்ணியவள்
ஆசி அதும் கூற
அம்பலத்தான் கை அசைக்க
ஆறுமுகம் வந்தான்.

அல்லல்கள் இனி இல்லை
அஞ்சிட நீர் வேண்டாம்!
ஆனது அனைத்தையுமே
அறிந்திடுவேன் என்றான்

பூதலத்தில் எமது மண்
புகழ்பூத்து நிற்கும்
பொய்யுரைகள் புரட்டுக்கள்
போயகலு மென்று

நம்புவீர் ஈழத்தீர்
நலம் விளையும் நாளை
நம்மவர் துயர் நீங்கும்
நாநிலமே வியக்கும்

அடுத்தாண்டு நானிங்கு
அன்னையுடன் வருவேன்
அற்புதமாய் நீங்கள்
அகமகிழக் காண்பேன்

நல்லைக் குமரனவன்
நம்மவரை வாட்டியது
பொல்லாவினை போக்கி
புதிய யுகம் காண்பதற்கே!

# அம்மையப்பனாய் அருள்வான் அன்பு!

த. ஜெயசீலன்

கொடியேற்றி எங்கள் குலமோங்க நல்லைப்
படிதாண்டி வீதிப் பவனி - நடந்துவரும்
வள்ளி மணவாளன் தெய்வானைக் குங்கணவன்
கள்வனெமைக்... காப்பான் கவர்ந்து!

நல்லை முருகன் நமனை நெருங்கவிடான்!
உள்ளத் தசுரர் உலுப்பவிடான் - தொல்லை
தொடவந்தால் வேலெறிந்து தூக்கியெமை மீட்டு
விடை சொல்வான்... மாறும் விதி!

நூல்பிடித்து எம்மை நொடிப்பொழுதும் நீங்காது
ஆட்டுவிப்பான் ஆறுமுகன்... ஆம்இங்கே - ஆடுகிற
பொம்மைகள் நாம்; ஏதும் புரியா மழலைகள் தாம்...
அம்மையப்ப னாயருள்வான் அன்பு!

ஆண்டுக் கொருதடவை... ஆடிக் களைக்குமெங்கள்
வேண்டுதலை ஏற்றெமக்கு மின்னேற்றி - மீண்டுமிங்கு
நாமொளிர வைக்கின்ற நல்லூர்ப் பெருவிழாவின்
மேன்மைகளைக் கண்டு உணர்.

ஞான அலைவீசும் நல்லூர்த் திருவடியை
வானவரும் போற்றிடுவார் மானுடனே - ஈனங்கள்
விட்டழகன் காலடியில் வீழ்ந்துஎழு; அவனின்
கட்டளையை உட்காதால் கேள்!

பட்ட மரங்கள் நாம்... பாலூறப்... பச்சையிலை
கெட்டில் துளிர்க்கவேண்டிக் கெஞ்சுகிறோம் - நட்டங்கள்

போகட்டும்... நாளை புதிய வாழ்வு பூக்கட்டும்
தாகம் தணிக்க அருள் தா!

எரியும் தணலணைந்து இன்பம் பொலிந்து
தரைகுளிர்ந்து வாழ்வு தளைக்க - வரங்கேட்டு
நேருவோம் வேலவனை நேர்கண்டு; எம்நெஞ்சப்
பாரமிறக்கி வைப்போம் பணிந்து!

ஆறு முகங்களும் அன்னைதந்த கைவேலும்
கூறும் அடியார் குறைபோக்கும்! - ஏறுமுகம்
வாழ்வில் வரும்... அமைதி நிம்மதியும் நல்லூரான்
தாளைச் சரணடைந்தால் தான்!

# தமிழர் தெய்வம் அழகன் குமரன்

கலாபூஷணம்
கவிஞர் வ.யோகானந்தசிவம்

தமிழர் தெய்வம் அழகன் குமரன்
தரணி எங்கும் அவன்புகழ் விளங்கும்
தமிழில் அவனை அர்ச்சனை செய்வோம்
தருவான் சகல பாக்கியம் எல்லாம்
தமிழில் உள்ள உயிரும் அவனின்
தங்க்க் கரங்கள் தன்னைக் குறிக்கும்
தமிழில் உள்ள ஆயுதம் அவனின்
தனித்துவ மான வேலே ஆகும்.

இனிமை யான தமிழால் பாடி
ஏத்தி நின்றாள் ஔவைப் பாட்டி
கனிக்காய் உலகைச் சுற்றி வந்தான்
கருணை உள்ள கந்த வேளே
தனிமை யாக ஆண்டி யாகித்
தாங்கிய வேலுடன் பழனியில் நின்றான்
பனித்த சடையன் பரமனின் குருவாய்
பஞ்சாச் சரத்தை உபதே சித்தான்.

பிரணவ மந்திரம் மறந்தான் பிரமன்
பிடித்துச் சிறையில் அடைத்தான் குமரன்
பரமனின் மைந்தன் தேவரைக் காத்திட
பகட்டுச் சூரனைப் போரிலே வென்றான்
கரத்தில் ஞான வேலுடன் கந்தன்
களத்தில் சூரனின் கொட்டம் அடக்கினான்
வரமும் அளித்து சேவலும் மயிலுமாய்
வாழ்வில் தன்னுடன் சேரவும் செய்தான்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

குறத்தி மகளாம் வள்ளி யம்மையைக்
கூடி மகிழவே குமரன் விரும்பினான்
புறத்தில் பற்பல வேடம் தாங்கியே
புரிய வைத்து உரிமை யாக்கினான்
திறத்தில் வேலனின் காரியம் கைகூடச்
சேர்ந்து உதவினார் அண்ணன் பிள்ளையார்
சிறப்புடன் கந்தன் வள்ளியை மணந்தே
சீருடன் வாழ்ந்தான் உலகம் உய்யவே.

திருப்பரங் குன்றில் தெய்வா னையையே
சிறப்புடன் திருமணம் செய்து கொண்டான்
கருதிய படியவன் ஆடிய நாடகம்
காலத் தாலே அழியா வொன்று
விரும்பிய வாறு இன்பம் பெருகவே
விண்ணவர் வாழ்வு சிறந்து ஓங்கவே
ஒருதிரு முருகன் வந்து உதித்தனன்
உலகம் உய்யவே உயிர்கள் வாழவே.

# முருகன் புகழ் மாலை

**சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள்**
**பிரதமகுரு**
**அரசகேசரிப்பிள்ளையார் கோவில், நீர்வேலி.**

### விநாயகர் துதி

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனைபதம் பணிவாம்

### திருப்பரங்குன்றம்

கார்மாமிசை காலன் வரில் கலபத்து
ஏர்மாமிசை வந்து, எதிரப்படுவாய்
தார் மார்ப! வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே

### திருச்செந்தூர்

வரங் கொண்ட உமை முலைப்பால் மணம் கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மணறயிறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்றன் கண்ணைவிட்டு நீங்காவே.

### திருவாவினன்குடி (பழனி)

படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை, முருகா என்கிலை, முசியாமல் இட்டு
மிடிக்கின்றிலை, பரமானந்தம் மேல்கொள, விம்மி விம்மி
நடிக்கின்றிலை, நெஞ்சமே! தஞ்சம் ஏது நமக்கு இனியே.

### திருவேரகம் (சுவாமிமலை)

நாதா! குமரா! நம! என்று அரனார்
ஓதாய் என! ஓதியாது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே!

### குன்றுதோராடல் (திருத்தணிகை)

ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்து உன் அருள் பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றிலேன்! வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழும் திருத்தணி மாமலை - வாழ்
சேவல் கொடியுடையானே! அமரசிகாமணியே

### பழமுதிர்ச்சோலை

புவனம் ஓர் மூன்றும் வாழப்புராரிதன் நுதற்கண் நோக்கில்
அவிசுடர் ஒளியாய்த் தோன்றி, அறுமுகத் தேவாய் அன்பர்
பலபயம் ஒழித்துக்காக்க பழமுதிர்ச்சோலை மேவும்
சிவசுப்பிர மணியன் வேலைச் சேவிப்பது எமக்கு வேலை.

உருவாய், அருவாய் உளதாய் இலதாய்
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்க்
கருவாய், உயிராய்க், கதியாய், விதியாய்க்
குருவாய், வருவாய், அருள்வாய் குகனே.

# நல்லைக்குமரன் வெண்பா மாலை

கவிஞர் வ. சின்னப்பா
(ஓய்வுநிலை அதிபர்)
தனங்கிளப்பு, சாவகச்சேரி

**காப்பு**

தண்மா முகத்தோனே சக்திசுதா நல்லைநகர்ச்
சண்முகன்மேல் நீங்காத் தனியணியாய் - வெண்பாவில்
பாமாலை சூட்டப் பரிவோ டினியதமிழ்
ஆமாறு செய்க அருள்.

**வெண்பா மாலை**

என்று தணியுமெங்கள் இன்னல் எனநினைந்து
பொன்றுவதோ நாங்கள் பொழில் நலையாய் - அன்றொருநாள்
உம்பர் துயர்தீர ஓர்வேல் எடுத்தவனே
எம்பரனே தீரெம் இடர்.

சொந்த இடம்விடுத்துத் தூர அகலுவதோ
செந்தமிழர் ஐயையோ செவ்வேலா - முந்திவரு
தும்பிமுகன் சோதரனே சுந்தரனே நல்லைநகர்
எம்பரனே தீரெம் இடர்.

மாடிழந்து கன்றிழந்து மண்ணிழந்து வாழ்ந்திருக்க
வீடிழந்து சொந்தம் மிக இழந்து - நாடிழந்து
வெம்புவது கண்டிலையோ வேலோய் "நாம்", நல்லைநகர்
எம்பரனே தீரெம் இடர்.

நல்லைப் பதியினிலே நாரி இருவருடன்
அல்லல் அகற்றியதி அற்புதஞ்செய் - வல்லோனே
சிந்தா குலந்தீர்த்தெம் தேசத்தை ஆளுமையா
கந்தா குகாசண்மு கா.

( நாரி – பெண்; சிந்தாகுலம் – மனக்கவலை)

மஞ்சு தொடரவுயர் மாகோ புரநலையாய்
நெஞ்சில் துயர்கனக்க நெட்டுயிர்த்தே - அஞ்சுகையில்
வந்தா தரிஜயா வாரணனார் சோதரனே
கந்தா குகாசண்மு கா.

(நெட்டுயிர்த்தே – பெருமூச்சு விட்டே)

நம்பால் இரங்குமையா நல்லைப் பதியோனே
உம்பர் துயர்தீர்த்த ஒப்பிலனே - எம்பரனார்
மைந்தா வடிவேலா வைவேற் பெருமானே
கந்தா குகாசண்மு கா.

(வைவேல் – கூர்வேல்)

ஆம்பொழுதில் மாந்தர் அழிகுவதோ ஐயையோ
தீம்பொழிலார் நல்லைத் திருத்தலத்தாய் - நாம்நிமிர
வேறு வழியின்றி விம்மித் தவிக்கின்றோம்
ஆறுமுகா எம்மை அணை.

மாவலியாய் நல்லை வடிவேலா நின்னடியேம்
காவலின்றி நித்தம் கலங்குவதோ - தேவருடன்
மாறுகொண்ட சூர்வதைத்த வள்ளி மணவாளா
ஆறுமுகா எம்மை அணை.

காழ்ப்புணர்வு நீங்கக் கவின்நல்லை யாய்தொடர்ந்து
சூழ்துயரம் அற்றுச் சுகமோங்கி - வாழ்வுயர
ஏறுமயில் வாகனனே ஈசா சிவபாலா
ஆறுமுகா எம்மை அணை.

கந்தா முருகா கதிர்வேற் பெருமானே
கொந்தாரும் நல்லைக் குருநாதா - அந்தோநாம்
ஏங்கித் தவிக்கின்றோம் இன்னல் பெருகுதலால்
காங்கேயா வந்தெம்மைக் கா.

சுந்தரஞ்சேர் நல்லையிலே தோன்றி அருள்கொழிக்கும்
கந்தையா பன்னிரண்டு கண்ணழகா - வந்தெதிர்க்கும்
தீங்கனைத்தும் நீக்கும் செவ்வேட் பெருமானே
காங்கேயா வந்தெம்மைக் கா.

(செவ்வேள் – முருகன்)

அத்தன் பொறியாறில் ஆனவனே, நல்லையிலே
சித்தி அளித்தின்பம் சேர்ப்பவனே - நித்தியமாய்த்
தேங்கும் சுகமளித்துத் தீயேம் தலைநிமிரக்
காங்கேயா வந்தெம்மைக் கா.

நல்லைக் குமரேசா ஞாலம் வலம்வந்தோய்
அல்லல் அகற்றியருள் ஆறுமுக - வல்லாளா
கங்குல் பகலுன்னைக் காணத் துடிக்கின்றோம்
எங்கள் துணையாய் இரு.

எங்கும் பரந்திருக்கும் ஈசாநல் லூர்த்தேவா
பொங்கும் புனற்கூவப் பூம்பொழிலாய் - அங்குகனே
தங்கத் தனிவேலா சண்முகனே பக்கலிலே
எங்கள் துணையாய் இரு.

வாழ்வு வளமாக, வாழ்ந்திருக்கும் எங்களது
சூழ்நிலைகள் எல்லாம் சுகமாக - ஊழ்வினைகள்
தங்கா தகன்றுவிடச் சண்முகனே நல்லூரா
எங்கள் துணையாய் இரு.

அல்லாப் பிணியகற்றி ஆகா தனஅனைத்தும்
இல்லா தொழித்தருளும் எங்குகனே - நல்லூரில்
தங்கத்தேர் ஊர்ந்துவரும் சண்முகனே, வேல்முருகா
எங்கள் துணையாய் இரு.

எண்ணங்கள் கைகூடும் இன்பம் மிகையாகும்
பண்ணியவை எல்லாம் பலித்தோங்கும் - திண்ணமுடன்
சந்தப்பா பாடிநலைத் தண்பொழிலார் நல்லூரில்
கந்தன் கழல்தொழுதக் கால்.

முந்தை வினையழியும் முற்றும் நலமாகும்
செந்திருத்தாய் பார்வை சிறப்புறவே - வந்தெய்தும்
சந்ததமும் நல்லைத் தலத்தே அருள்கூட்டும்
கந்தன் கழல்தொழுதக் கால்.

(செந்திரு – இலக்குமி)

பொல்லாப்போர் ஓய்ந்துவிடும் பூதலத்தோர் வாழ்வுயரும்
அல்லாப் பகைதீரும் அன்புமிகும் - நல்லூரிற்

சந்ததமும் வீற்றிருந்து சால அருள்கொழிக்கும்
கந்தன் கழல்தொழுதக் கால்.

காமருங்கில் ஓங்கும் கவின்நல்லை நற்பதியில்
பாமகிழ்ந்து சொல்லிப் பணியுங்கால் - மாமயிலில்
வஞ்சியரோ டோடி வருவான் அருள்தருவான்
நெஞ்சிற் குகனை நினை.

புத்தி தெளிவிப்பான் போகும் துறையிலெல்லாம்
சித்தி பெறக்கருணை செய்திடுவான் - முத்திநிலை
துஞ்சும் பொழுதளிப்பான் தூநல்லை யிற்றினமும்
நெஞ்சிற் குகனை நினை.

எந்த வழியுமிலை ஈடேற என்றிருந்து
சிந்தை கலங்குவதேன் செந்தமிழா - வந்துவந்து
அஞ்சும்போ தெல்லாம் அருள்தருவான் நல்லூரான்
நெஞ்சிற் குகனை நினை.

நல்லை நகரினிலே நாடிவரும் நல்லடியர்
அல்லல் அகற்றியருள் ஆறுமுகன் - அல்லலையால்
அஞ்சும் அமையத்தே ஆண்டருள்வான் அன்னவனை
நெஞ்சில் நிதமும் நினை.

அல்லல் அகற்றியன்பர் ஆகம் அதிகுளிர
நல்லருளை நல்கியருள் நற்குகனாம் - நல்லைவளர்
வெஞ்சமரில் வெஞ்சூரை வெற்றிகொண்ட வேலவனை
நெஞ்சில் நிதமும் நினை.

நண்ணினர்க்கு நல்லருளை நாடியருள் நல்லைநகர்ச்
சண்முகனைத் தன்னிகரில் தன்மையனைத் - தண்முகனை,
அஞ்சலென அன்பர்தமை ஆண்டருளும் அக்குகனை
நெஞ்சில் நிதமும் நினை.

செந்திருத்தாள், சூரைச் செயித்த திருப்பெருந்தாள்
வந்திப்பார் சூடும் மகிமைத்தாள் - கந்தனெனும்
தண்முகத்தான் நல்லைத் தலத்தான்தாள் ஆகியஅச்
சண்முகன்தாள் எல்லாந் தரும்.

# நல்லைக்கந்தன் நனிவெண்பா

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ. பாலகோபால்

வல்வினைபோம் துன்பம்போம் வந்தவூழ் வினையும்போம்
நல்லூரான் கொடியேற நாற்றிசையும் - வல்லபிரான்
முன்னின்று காத்திடுவான் முத்தமிழும் மேலோங்கும்
நன்றினிது வாழும் நாடு.

கந்தனே நல்லூர்க் கதிர்வேலா வெனவுரைக்க
எந்த வினையு மெதிர்கொள்ளா - சந்ததமும்
உள்ள முருகி உளமாரத் துதிப்போர்க்கு
எள்ளளவும் வாரா திடர்.

ஆர்த்த பிறவித் துயர்நீக்கி யாண்டருளும்
சீர்த்த நல்லூரின் செழுஞ்சுடரே - பார்போற்றும்
பன்னிருகைப் பாலகனே பவவினைகள் நீக்கியெமை
உன்னிருகண் பாராய் உவந்து.

நல்லூர்க் குமரன் நாதமணி ஓசையிசை
பல்திசையும் நாளாந்தம் பரிமளிக்கும் - தொல்லைதரு
சங்கடங்கள் நீக்கும் சலித்தமனம் மேன்மையுறும்
இங்குவேல் காக்கு மிருந்து.

சேவற்கொடி பறக்கச் சிங்கார வேலுடனே
காவல்செய வந்தருளுங் கதிர்வேலன் - ஆவலுடன்
எந்தவினை யானாலும் எடுத்தியம்பப் பதிநல்லூர்க்
கந்தனுளான் வந்து கதை.

கொடியோனே சூரனென கூண்டோ டழித்துவந்த
கொடியோனே சேவற் குமரனவன் - விடிவதனைக்
காட்டிடுவான் நல்லூரான் காலத்தாற் கயவர்களை
வாட்டிடுவான் வந்து வணங்கு.

வள்ளிக்கு வாய்த்த மணவாளன் அடியார்தம்
உள்ளத்தில் குடிகொள்ளும் ஓங்காரன் - புள்ளிமயில்
மீதுவரும் நல்லூரான் மேன்மைகளைச் சாற்றவிங்
கேதுண்டு வார்த்தை எமக்கு.

முச்சங்கம் வளர்த்திட்ட முறையான செந்தமிழைக்
கச்சைகட் டிக்காக்கும் கதிர்வேலன் - நச்சரவம்
பூண்டசிவன் மைந்தன் புகழ்நல்லூர்ப் பதிநின்று
வேண்ட வரமீவான் விரைந்து.

ஞானப் பழத்துக்காய் ஞாலத்தைச் சுற்றிவந்து
தேனெனவே தத்துவத்தைத் தீட்டியவன் - வானவரும்
மண்ணவரும் போற்றும் மறைநல்லைக் கந்தனவன்
எண்ணியவர் நண்ணும் இறை.

கல்லார்க்கும் கற்ற மாந்தர்க்கும் நடுநிற்கும்
நல்லைக் குமரனடி நாடுவமே - எல்லையிலாப்
பரம்பொருளாய் நின்றிந்தப் பார்சூழல வைப்பவனின்
தரமறிந்தோர் வாழ்வரே தாம்.

ஆறுதலைக் கொண்டடியா ரஞ்சுதலை நீக்கிமன
வாறுதலைத் தந்தருளும் அருட்குமரன் - நீறுபட
அடியார் வினையகற்றி ஆலயநல் லூரிருந்து
படிவாக்கும் கந்தன் பதம்.

முன்னைப் பழமைக்கும் முளைத்துவரும் புதுமைக்கும்
என்னிலைக்கு மப்பாலே இருக்குமவன் - அன்புநிறை
நல்லாற்ற லுள்ளிருந்து நல்லைக்கும ரேசனவன்
அல்லும் பகலாள்வா னறி.

தூய மனத்தோர் துயர்துடைத்துத் துட்டர்களின்
மாயச் செயலறுத்து வளஞ்சேர்ப்பான் - நேயமுடன்
நல்லைக் குமரன் நான்குமறை நீதிநெறி
நல்கிடுவான் என்று நம்பு.

எண்ணிய எண்ணியாங் கெய்திடவே செய்திடுவான்
திண்ணியரா யறநெறியிற் தேர்பவரை - வண்ணமயில்

ஏறிவரும் நல்லூரான் எழிற்பாதம் பற்றிடிலோ
ஆறிமறை யும்வினைக ளாம்.

நண்ணினர்க்கு நல்லன் நலமிலன்நல் லூர்க்குமரன்
கண்ணியமாய்க் காத்துக் கரந்தருவான் - எண்ணமுடன்
கொடியோரின் கூண்டறுத்துக் குணத்தோர்கள் யாவற்கும்
படியளப்பா னின்றே பார்.

வாழ்த்தியதும் வானவர்கள் வந்துமுரு கன்பாதம்
தாழ்த்தியதும் தம்மின்னல் தனைத்தீர்த்தான்- சூழ்ந்துவரும்
பல்வினைகள் போக்கியெமைப் பாலூட்டிக் காக்கும்தாய்
நல்லைநகர் கந்தனென நம்பு.

ஓமெனும் பிரணவத்தி னுட்பொருள்சொ ல்லாப்பிரமன்
தாம்திருந்த வேண்டித் தண்டித்த - தூமறையோன்
தந்தைக் குபதேசம் சாற்றியநல் லூர்க்குமரன்
வந்தீவா னென்றும் வரம்.

நல்லைக் குமரன்தாள் நாளுந் தொழுதுவெழ
வெல்லையிலாத் துன்ப மெழுந்தொடும் - வல்வினையும்
ஓடி மறைந்து உள்ளமெலாம் இன்பமயம்
கூடிவரும் என்றே கொள்.

அறிவோடு ஞானம் ஆக்கமுறு செல்வங்கள்
செறிவாகத் தோன்றிச் சிறக்குமே - அறிந்திடுக!
நல்லைக் குமரன்பதம் நம்பியவர் யாவர்க்கும்
இல்லையென மாட்டான் இவன்.

நல்லூரான் திருவடியை நாடித் தொழுவென்று
சொல்லவந்த யோக சுவாமிக்கும் - நல்லவரம்
ஏற்றினான் நல்லூ ரெழிற்குமரன் கருணையினைச்
சாற்றவுண்டோ வார்த்தைச் சரம்.

உறங்குகின்ற வேளையிலு முன்நாமம் நெஞ்சினிலே
மறவாத சிறியேனின் மனமிருந்து - உறவாட
வந்திடுவா யையா வளமேவும் நல்லைநகர்ச்
சுந்தரனே நீயே துணை.

நூலகம்

எள்ளளவு மாற்றலில்லாச் சிறியேனின் மனமிருந்து
தெள்ளுதமிழ் பாடென்று செப்பியவா - உள்ளம்
உருகியும் வணங்கியும் உன்நல்லூற் பதிநின்றேன்
முருகப்பா நீயே முதல்.

கொட்டும் மழையினிலும் கோடையிடி மின்னலிலும்
வெட்டவெளி வெய்யிற் பரப்பினிலும் - இட்டமுடன்
கந்தா!வென வழைத்தேன் கதிர்நல்லூர்ப் பதியிருந்து
வந்தாள வேண்டும் வரம்.

நாயாய்ப் பிறந்திடினும் நல்லைநகர்க் குமரனுனை
வாயால் கவிபாட வரமருள்வாய் - பேயேனின்
பிதற்றுகின்ற வார்த்தைக்கும் பேறுவரச் செய்தருளி
இதமாகக் காப்பாய் இனிது.

கற்சிலையென் றுரைத்திடினும் கற்பனையென் றுரைத்திடினும்
பொற்பதனே நீதான் புவியெல்லாம் - நற்பதத்தை
நல்லூர்ப் பதிநாடி நல்லருளைப் பெற்றுயர்ந்தோர்
இல்லையென மாட்டார் இனி.

ஆயிரத்தைப் பேசி யார்ப்பரித்துத் திரியாதுன்
பாயிரத்தைச் சொன்னாலே பயனுண்டாம் - தாயன்பாய்
தேடிவரும் நல்லூர்த் திருக்குமரன் தாள்போற்றிப்
பாடுவதே எந்தன் பணி.

# "அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே!"

**கலாபூஷணம்**
**கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்**

(கோரஸ்)
கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!

**பல்லவி**

நல்லையில் நாதன்புகழ் பாடுவோமே! - அவன்
நற்கருணை வேண்டியே ஆடுவோமே!
எல்லையிலா ஆனந்தத்தால் மகிழ்வோமே!
ஏறுமயில் வாகனனை போற்றுவோமே!

(கோரஸ்)
கூடுவோம் ...

**அநுபல்லவி**

பண்ணிசைத்து நிற்கையிலே மனங்குளிரும்! அவன்
எண்ணமெலாம் என்றுமெங்கள் மனதிருக்கும்
வண்ணமயில் காண்கையிலே எழில்தோன்றும்! தோகை
விரித்தாட வானவில்லின் வகைதோன்றும்.

(கோரஸ்)
கூடுவோம் ...

**சரணம் - I**

மாதிருவர் புடைசூழ வருவானடி - அந்த
மயக்கத்தில் கேட்டதெல்லாம் தருவானடி
சோதனைகள் வரும்போது அருள்வானடி! - மலர்
சோலையிலே அழகுதனை இரசிப்பானடி!

(கோரஸ்)
கூடுவோம் ....

**சரணம் II**

கார்த்திகை பெண்களும் அணைத்திடவே! - என்றும்
கார்த்திகேயன் என்றபெயர் பெற்றவனாம்!
ஆறுமுகமும் பன்னிரு தோள்களுமாய் - நல்லை
ஆள்பவனே! அழகுதலம் கொண்டவனே!

(கோரஸ்)
கூடுவோம் ....

**சரணம் III**

அன்னையின் திருத்தலமோ நயினையிலே - உந்தன்
அப்பனின் பெருந்தலமோ காரைநகரினிலே!
அண்ணனின் எழில்தலமோ மருதடியினிலே! - முருகாவுன்
அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே!

(கோரஸ்)
கூடுவோம் ...

# நல்லைக் குமரன் பாமாலை

நயினை க. ச. அரவிந்தன்

1. ஆறுபடை வீடெழுந்து அன்புருகும் அடியவற்கு
   அருளொழியை தந்தவனே முருகா - தினம்
   ஏறுமயில் ஏறிவிளை ஆடிவரும் போதிலெமை
   எள்ளிநகை கொண்டணைப்பாய் முருகா
   நீறுபூத்த நெருப்பணைந்து நிலைமாற வேண்டுமென்று
   நித்தம் அருள் புரிபவனே முருகா - தினம்
   ஆறுதலை தந்தெமக்கு ஆறுமுகமோடெழுந்து
   ஆசையுடன் அணைத்தெடுப்பாய் முருகா ...

2. நல்லைநகர் வீதியெங்கும் எழில்கூறும்
   நாடிவரும் அடியவற்கு அருள்கூறும்
   நல்லதையே நம்பினோற்கு நாள்தோறும்
   நானிருக்க பயமென்ன நாகூறும்
   எல்லையிலே எழுந்தபெரு கோபுரமாய்
   எங்கும்நிறை கந்தவேள் காட்சிதரும்
   வல்லவனே வந்து துயர் தீர்த்திடுவாய்
   வாசலிலே வீழ்ந்தவரை தூக்கிடுவாய் ...

3. பச்சைமயில் பாலகனாய் பார்த்திருப்போம்
   பாதியிலே பார்த்தவிழி தோய்ந்திருப்போம்
   இச்செகமே இன்னலுறும் கலியுகத்தில்
   இக்கணமே உந்தனருள் வேண்டிநிற்போம்
   துச்சமென வந்தவர்க்கும் வாழ்வளிக்க
   தூயவனே நின்னருளை வேண்டிநிற்போம்
   அச்சமெனக் இல்லையென்றே வாழ்வளிக்க
   அயராது நின்னருளை வேண்டிநிற்போம் ...

8. காவடிகள் சூழவரும் கந்தருனள் தேடிவரும்
கற்பூர சுட்டியொழி கண்குளிர கூடிவரும்
தேவனடி தேடியவர் ஏதுகுறை என்றுவரும்
தேவ சேனாபதி பாதந்தொழ வீடுபெறும்
பாவடிவாய் அருள்மாலை பண்ணிசைப்போர் கூடிவர
பாலகனாய் பவனிவரும் நல்லைநகர் நாதன்தன்
பூவடிக்கே புகழ்மாலை தினம் சூட்டுகிறேன்
சூடிடுவாய் ஆடிடுவாய் ஆறுமுகனவனே ...

9. வள்ளி தெய்வயானையுடன் வாசல்வரக் கண்டேன்
வந்தவுடன் வீதிவெளி அழகொழிக்க மெய்சிலிர்த்தேன்
துள்ளிவரும் புள்ளிமயில் தோகைவிரித் தாடக்கண்டேன்
தூயதமிழ் ஓசையுடன் ஔவையொலி கேட்டுநின்றேன்
வெள்ளை மணல் வீதியெலாம் புரண்டெழுந்து வரவேண்டும்
வேண்டுதலை நான்வேண்ட வேலவனே வந்தருள்வாய்
அள்ளியொரு முத்தமென அன்புருகி தந்தெனக்கு
ஆசையுற வைத்திடுவாய் வண்ணமயில் வாகனனே ...

10. சித்திரத்தேர் மீதேறி வீதிவலம் வந்திடுவாய்
சீராக தமிழோங்க தானைபலம் தந்திடுவாய்
சித்தமெலாம் கந்தனென கண்குளிர வந்திடுவாய்
சிவனார்தம் மைந்தாநீ நீண்டபலம் தந்திடுவாய்
முத்தெனவே யாழின்இசை முழங்கிடநீ வந்திடுவாய்
முன்னைவினை முழுதறுத்து முத்திபெற வந்திடுவாய்
வித்தகனே நீஎழுந்து தேவர்க்கருள் ஈர்ந்ததுபோல்
ஈழமிதைக் காத்திடவே பேரொளியாய் எழுந்திடுவாய் ...

4. ஆடியிலே அலைமோதும் அடியார்போல்
அப்பனுமை மைந்தனுக்கு நிகரேது
தேடிப்பல வேண்டுதலாய் வந்துசேரும்
தேசமெலாம் நின்னடியார் நிலையேது
ஆடிவரும் காவடிக்கு கணக்கேதுநின்
ஆலயமே தஞ்சமென்பார் நிகரேது
கூடிவரும் கூட்டமதில் குமரேசா
குதூகலமாய் கூடவரும் நிலையேது ...

5. அப்பனுக்கு பாடம்சொன்ன ஆறுமுகன்
அன்புருக பாடுகிறேன் பாடவேண்டும்
இப்பிறப்பின் வேண்டுதலாய் வாய்க்கப்பெற்றே
இன்பமுற பாடுகிறேன் பாடவேண்டும்
தப்பிழைத்து தரங்குன்றி வாழ்வோரெல்லாம்
தலைநிமிரப் பாடுகிறேன் பாடவேண்டும்
எப்பொழுதும் நின்கோயில் வீதியெல்லாம்
எழில்கொஞ்சப் பாடுகிறேன் பாடவேண்டும் ...

6. குன்றுகள் தோறும் குடிகொண்ட குமரேசா
குடியிழந்து குலமொன்று குழறுமொலி கேட்கலையோ
ஒன்றுமே அறியாத பாலகன் நீயன்றோ
ஒருமுறை வந்துதுயர் தீர்த்திட்டால் குறையாமோ
என்றுமே எமக்கில்லை என்றாகி போனாயோ
ஏதும்நீ அறியாத அற்பனாய் வாழ்வாயோ
நன்றிது தீதென்று தீர்ப்பினை எழுதப்பா
நல்லையில் வாழ்கின்ற நாதனே குமரப்பா ...

7. கருணைக் கடவுளாய் வந்த வடிவேலா
காவலாய் காண்போர்க்கு காவல் நீயப்பா
இருளைப் போக்கியே இந்நிலம் ஒளிபெற
இன்றே எழுந்தருள் எங்கள் அழகப்பா
அருணகிரிக் கருள் அன்புடன் தந்தவா
அலைபோல் வருமடியார் வினைதீர்த்தவா
அருவமும் உருவமாய் உலாவரும் குமரனை
ஆதரித் தழைத்திட அகமகிழ்ந் திடுமே ...

# நன்நிலை அருளாயோ

**கலாபூஷணம் சி. சிவனேசன்**
**அல்வாயூர்**

ராகம் : மோகனம் தாளம் : ஆதி

**பல்லவி**

தரிசன மோகனம் தந்திடாயோ - முருகா
தணியாத வேண்டுதலை ஏற்றிசைவாயோ
தரிசன மோகனம் .....

**அனுபல்லவி**

திருநகர் நல்லூரின் நாயகனே - வெற்றி
தருகின்ற வேலேந்தும் மயில்வாகனனே
தரிசன மோகனம் .....

**சரணம்**

கண்நிலை கொள்ளாயோ என்மீதிலே - வாழும்
நன்நிலை அருளாயோ மண்மீதிலே
பொன்பொருள் பெருநிதியம் வேண்டாமே - என்
முன்னிலை வந்தருளும் பேறுபெறவே
தரிசன மோகனம் .....

பொற்பதம் பணிகின்றேன் நல்லை நாதனே - பக்தி
பெருகிடப் பாடுகிறேன் உன் வேதமே
சற்குருவே தாமதம் வேண்டாமே - என்னில்
கரிசனம் காட்டியே கண்நிறைவாக!
தரிசன மோகனம் .....

# நல்லைக்குமரன் மலர் 2014

## கட்டுரைகள்


- என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!
- யாம் எல்லோரும் முருகப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெறுவோமாக!
- ஓங்காரத்து உள்ஒளிக்கும் உள் ஒளியாய் விளங்கும் முருகன்
- தேடிக்கண்டு கொண்டேன் ...
- கந்தன் கருணை
- சங்க காலத்தில் முருக வழிபாடு
- சுப்பிரமண்ய புஜங்கம்
- சங்ககாலத்தில் முருகன் வழிபாடு
- கௌமார வழிபாட்டு மரபில் சக்த்யஸ்த்ரஸ்தாபனம்
- வேத இலக்கியங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு - ஓர் அவதானம்
- சைவசமயப் பண்பாட்டில் வேதமும் வேள்வியும்
- திருவாசகத்தில் சைவசித்தாந்தம்
- திருவாசகத்தின் இருதயம்
- திருமந்திரம் - ஒரு மெய்யியல் பார்வை
- அருணகிரிநாதரின் திருப்புகழில் விஸ்ணுவின் தசாவதாரங்கள்
- திருமுறைப் பாடல்கள் அணிசெய்யும் சிவநெறி
- கம்பரின் கும்பகர்ணனும் கச்சியப்பரின் சிங்கமுகாசுரனும்
- நல்லூரானைச் சிறப்பித்த நல்ல குருநாதர்கள்
- ஈழத்து சைவசித்தாந்த வரலாற்றில் சுவாமி ஞானப்பிரகாசரது பணிகள் பற்றிய மதிப்பீடு
- ஈழநாட்டில் சித்தர் மரபு
- சர்வதேச உலகில் மதம்
- இந்துசமயம் - கல்வி - சமூகவியல் சில சிந்தனைகள்
- கடவுள் என்பது யார்?
- திருக்கேதீச்சரம்
- முருக வழிபாடுகளும் திருத்தலங்களும்
- நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோயில்
- முருகவழிபாடுகளும் திருத்தலங்களும்
- சைவசமயமும் நடைமுறை வாழ்க்கையும்
- மனமது வசப்பட ...
- ஆலய தரிசனமும் ஆரோக்கிய வாழ்வும்
- சைவநெறி போதிக்கும் அன்போடு இயைந்த வாழ்வியல்
- ஆடினார் ஆனந்த நடனம்
- அறுகும் வன்னியும்
- 2014இல் யாழ் விருது பெறும் வித்யாசாகரம் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
- கர்மயோகி சுவாமி சித்ரூபானந்தா



# என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

வழிபாடு மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் என்பதில் இன்னும் பலருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. குறிப்பாகப் பொருள்வளம் ஒன்றையே வாழ்க்கையின் இலக்காகக் கொண்டவர்கள் வழிபாட்டைப் புறந்தள்ளிவிடுகின்றனர். ஆனால் வழிபாடு பற்றிய இன்றியமையாமை அனைவராலும் தெளிவாக உணரப்பட வேண்டும். அதற்காக ஒரு பரப்புரையை நாம் செய்யவேண்டியுள்ளது. நமது வாழ்வியல் நடைமுறைகளில் வழிபாட்டிற்கு ஓர் இடம் இருக்க வேண்டும். எனவே அது பற்றிய தேடல் முயற்சி வேண்டப்படுகிறது. இம்முயற்சி பற்றிய கருத்துக்களை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

வழிபாட்டில் எமது உள்ளமும் உடலும் ஒன்றிணைய வேண்டும். சிறப்பாக இந்த இணைப்பைக் கோவில் வழிபாட்டில் பல நடைமுறைகள் காட்டுகின்றன. தமிழர் பண்பாடு கோயில் வழிபாட்டுடன் பெரிதும் தொடர்புற்றுள்ளது. நாயன்மார் பாடிய பாடல்களும் ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களும் வழிபாடு பற்றிப் பல செய்திகளை விளக்கமாக பதிவு செய்துள்ளன. அப்பதிவுகள் யாவும் அவர்களுடைய உண்மையான பட்டறிவின் விளக்கமாகவே உள்ளன. மனித உள்ளமும் உடலும் ஒன்றிணைய ஒரு பொது இடம் தேவை. அத்தேவையைத் திருக்கோயில் நிறைவேற்றுகிறது. அங்கு செல்வோர் அனைவரும் ஒரே எண்ணத்துடன் செல்கின்றனர். உள்ளத்தையும் உடலையும் ஒருநிலைப்படுத்தி வழிபாடு செய்கின்றனர். அதற்காகச் சில வழிபாட்டு நடைமுறைகளை நமது முன்னோர் கையாண்டுள்ளனர். அவை காலங்காலமாகப் பண்பாட்டு மரபாகப் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால் இன்று அந்த நடைமுறைகள் பற்றிய பயிற்சி கைவிடப்பட்டுள்ளது. எனவே அவற்றை மீண்டும் பயிற்றவேண்டியுள்ளது. பண்பாட்டுப் பயிற்றலைச் செய்யும் பணியைப் பெற்றோரும் ஆசிரியரும் ஏற்றுள்ளனர். குழந்தைப் பருவத்தில் பெற்றோரும் இளமைப் பருவத்தில் ஆசிரியர்களும் இப்பணியைச் செய்யும் கடமையை ஏற்றுள்ளனர். அவர்கள் இப்பணியைச் செய்வதற்கு இன்று சில இடையூறுகளும் ஏற்பட்டுள்ளன. வேகமான மனித வாழ்க்கையும் புதிய கற்பித்தல் திட்டங்களும் பண்பாட்டுப் பயிற்றலைப் பின்னடையச் செய்துள்ளன.

இந்த நிலையை இப்போது சீர்செய்ய வேண்டியுள்ளது. அதற்காகச் சில வழிபாட்டு நடை முறைகளைப் பற்றிய தெளிவை ஏற்படுத்த வேண்டியுள்ளது. வழிபாட்டு நடைமுறைகளில் இறைவன் முன்னிலையில் கரம்கூப்பி நின்று வழிபடுவது உடலையும் உள்ளத்தையும் ஒன்றிணைய வைக்கும் முயற்சியாகும். இந்தப் பயிற்சி மிகவும் எளிதானது. இரு கரங்களையும் குவித்து மார்பிலே வைத்துக் கண்களை மூடிநின்று இறைவனை நினைக்கும் நிலை. ஆனால் கண்களை மூடி நிற்கும் போது சில வேளைகளில் உள்ளம் ஒன்றிணையாமல் அலைபாய வாய்ப்புண்டு. எனவே அலை பாயும் உள்ளத்தை ஒரு நிலையில் வைப்பதற்கு ஓர் உருவம் தேவை. அதனால் வழிபடும்போது இறையுருவைக் கண்களால் நோக்கியபடி கரம் கூப்பி நிற்பது உள்ளத்தையும் உடலையும் நன்கு இணைய வைக்கும்.

இந்த அனுபவத்தினை இளமையிலே பெற்ற வர் ஞானசம்பந்தர். திருக்கோலக்கா என்னும் திருக்கோயிலில் அவர் பெற்ற அனுபவத்தை ஒரு பாடலிலே தெளிவாகப் பதிவு செய்துள்ளார். அங்கு அவர் கண்ட இறைவன் திருக்கோலம் சடையும் பிறையும் சாம்பற் பூச்சும் உடையும் கொண்ட ஒரு திருவுருவம். அந்தத் திருவுருவத்தைக் கண்டவு டன் பலர் அதைக் கைகூப்பி வழிபட்ட வரலாறு நினைவுக்கு வருகிறது.

பெண்டாள் பாகமாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக்காவு கோயிலாகக்
கண்டான்பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலகமுய்யவே.

இறைவன் பெண்ணைப் பாகமாகக் கொண்டி ருக்கிறான். சென்னியிலே பிறையைச் சூடியுள் ளான். அவன் திருக்கோலக்காவில் கோயில் கொண்டிருக்கிறான். இந்த இறைவனை வழிபடச் சென்ற சம்பந்தர் கைகளைக் கூப்பி வழிபடுகிறார். அப்போது அவருக்கு. இறைவன் நஞ்சுண்டு தேவர்களையும் அசுரர்களையும் உயிர்பிழைக்கச் செய்த வரலாறு நினைவுக்கு வருகிறது. இறைவா! நீயே எம்மைக் காக்கவேண்டும் என அவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் ஒன்றுபட்டுக் கைகூப்பி இரங்கி வழிபட்டகாட்சி மனக்கண்ணில் தெரிகி றது. அந்த இறையருளை எல்லோரும் பெறமுடியும் என்பதையே தமது பாடலில் பதிந்துள்ளார். அதனால் கைகூப்பித் தொழுது ஏத்தும் அடியார்களுக்கு இல்லை இடர் என நம்பிக்கையூட்டுகிறார்.

சுந்தரரும் இவ்வழிபாட்டு நிலையை நன்கு உணர்ந்தவர். அதனால் திருமண்ணிப்படிக்கரை என்னும் பதிகத்திலே,

"உங்கைகளாற் கூப்பி யுகந்தேத்தித் தொழுமின்
தொண்டீர்"

எனப் பரிந்துரை செய்துள்ளார். அப்பரும் தம் வழிபாட்டு நிலையை வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கூப்பித் தொழுவார்தங் குற்றேவலைக்
குறிக்கொண் டிருக்குங் குழகாபோற்றி"

கரங்களைக் கூப்பித் தொழுபவருக்கு இறைவன் குற்றேவல் செய்யக் காத்திருப்பதாக அப்பர் பாடி யிருப்பது அவரது சொந்த வாழ்வியல் அநுபவத் தையே தெளிவாக விளக்கிநிற்கிறது. தேவாரம் பாடிய மூவரும் தமது காலத்தில் இவ்வழிபாட்டு நடைமுறையை மிகுந்த நம்பிக்கையோடு பின் பற்றிப் பெரும்பயன் பெற்றவர்கள். ஆனால் அதை நம்பாதவர்களும் நம்மிடையே உளர். இன்று இளைய தலைமுறையினர் எதையும் அறிவு பூர்வமாகவே விளங்கிக்கொள்ள விழைகின்ற னர். கைகூப்பி வழிபடுவதால் என்ன பயன் என்பதை விஞ்ஞானபூர்வமாக அறிய விரும்புகின்றனர். இது அவர்கள் விஞ்ஞானத்தின்மீது கொண்ட அளவற்ற நம்பிக்கையாகும். எனவே அவர்களுக் குரிய விளக்கத்தை வருமாறு தருகிறோம்:

"கைவிரல்களைத் தாமரை மொட்டுப் போல கூப்பிநிற்கும்போது விரல்கள் வழியாக ஜீவ சக்தி மூளையைச் சென்று சேர்கிறது. சிறுவிரல் மூலமாக பூமிசக்தி சேர்கிறது. அது உடலுக்குப் பலத்தைத் தருகிறது. மோதிரவிரல் மூலமாக ஜலசக்தி மூளையைச் சென்று சேர்கிறது. அது உடலுக்கு உயிர்ப் பலத்தைத் தருகிறது. நடு விரல் முலமாக அக்னிசக்தி மூளையைச் சென்று சேர்கிறது. அது மனோபாவத்தைத் தருகிறது. ஆட் காட்டிவிரல் மூலமாக வாயுசக்தி மூளையைச் சென்று சேர்கிறது. அது உடலுக்கு உணர்வு பலத்தைத் தருகி றது. பெருவிரல் மூலமாக ஆகாயசக்தி மூளையைச்சென்று சேர்கிறது. அது ஆத்ம பலத்தைத் தருகிறது."

(டாக்டர் வெங்கனூர் பாலகிருஷ்ணன்)

கைகளைக் கூப்பி இரு கைவிரல்களும் தாமரை மொட்டுப் போல அமையும்போது விக்கிர கத்திலிருந்து காந்தக் கதிர்கள் வழிபடுபவரை நோக்கிப் பாம்பு வடிவத்தில் வந்துகொண்டிருக்கும் அந்நேரம் கைவிரல்களைக் கூப்பிநிற்பதால் ஒன்றுக்கொன்று தொடும் விரல்கள் வழியாக மூளையின் ஜீவசக்தி அதிவேகத்தில் உடல்

முழுவதும் பரவும் எனவும் கருதப்பட்டது.

நமது நாட்டவரான சுவாமி விபுலாநந்தர் கைகூப்பி வழிபடும் நடைமுறையைத் தனது பாடலிலே பிறிதொரு நிலையில் விளக்கியுள்ளார். அவர் ஈசன் உவக்கும் மூன்று மலர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

1. உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.
2. கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டு வது.
3. நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டு வது.

இங்கு கரம் கூப்பி வழிபடுவதை காந்தள் மலர் கள் கொண்டு வழிபடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று கைகூப்பும் நடைமுறை வழிபாட்டு நடைமுறையாக மட்டுமன்றி ஒரு பண்பாட்டு நடைமுறையாகவும் உள்ளது. ஒருவரை ஒருவர் நேரிலே காணும்போது கைகளைக் குவித்து வணங்கும் வழக்கம் உண்டு. அது நாம் நேரிற் காண்பவரை மதிப்பதை உணர்த்தும் ஒரு செயற்பாடாக உள்ளது. உடலும் உள்ளமும் ஒன்றிணைய கைகூப்பி ஒருவரை வரவேற்பது மனித விழுமியத்தின் அறிகுறி. இந்த மரபான வரவேற்பை நாம் மறக்க முனைவது தவறு. அதற்காகவே திருக்கோயில் வழிபாட்டு நடை முறையில் கைகூப்பி வழிபடல் ஒரு நல்ல பயிற்சியாக அமைந்துள்ளது. உள்ளக் கமலத்தை யும் நாட்டவிழி நெய்தலையும் கூப்பியகைக் காந்தளையும் கொண்டு மனிதன் பண்பட்ட வாழ்வை நடத்தலாம். எனவே எல்லோருக்கும் கைகூப்பி நம்மோடு இணைய வைப்போம்.

இசைக்கு மயங்காதவர் யாருமே இல்லை. மனிதர்களைவிட விலங்குகளும் பறவைகளும் இசைக்கு வசப்பட்டு நிற்கும் இயல்புடையவை. எனினும் இசையைக் கேட்டு மகிழ்வதைவிட, இறை வழிபாட்டில் அதை ஓர் அங்கமாக நமது முன்னோர் பயன்படுத்தியுள்ளனர். இசையால் இறைவனை ஏத்தும் மரபு நீண்ட காலமாகவே தமிழரது பக்தி மரபில் இடம் பெற்றுள்ளது. இசைப் பாடல்களை ஆடலாக்கி மடை இடும் மரபும் தொடர்ந்து வந்துள்ளது. இறைவனே இசை வடிவாகவும் ஆடல்நாயகனாகவும் விளங்குகி றான். சிவதாண்டவம் உலகம் போற்றும் ஆடற் கோலமாகும். இயற்கையின் இயக்கமே இறை வன் ஆடலின் விளக்கமாகும். சிவனுடைய ஆடல் பற்றிய விஞ்ஞான விளக்கங்களும் இன்று வெளி வந்துள்ளன.

ஆனால் ஆய்வு வேண்டப்படாத அன்புநெறிக் காலத்தில் இசையும் ஆடலும் இறைவன் உறை யும் திருக்கோயில்களில் இடம்பெற்றிருந்தன. ஆண்களும் பெண்களும் இப்பணியைச் செய்த மைக்குத் தேவாரங்களில் சான்றுகள் உண்டு. பெரிய திருக்கோயில்களிலே ஆடல்மன்றுகள் அமைக்கப்பட்டிருந்தன. பண்ணிசை பாடும் திறனுடையோர் பலர் இருந்தனர். சம்பந்தருடைய பாடலொன்றில் இக்குறிப்பு இடம்பெற்றுள்ளது.

"பண்ணி னேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய வோசை நாடொறும்
கண்ணி னேரயலே பொலியுங் கடற்காழி"

இங்கே இனிய குரல்வளங் கொண்ட மங் கைப் பருவத்தையுடைய பெண்கள் பாடி ஆடு கின்ற ஓசை நாடோறும் கேட்பது பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. அணிகலன் பூண்ட இளமாதர் இசை பாடுவது பல பாடல்களில் பதிவுசெய்யப்பட் டுள்ளது. திருவையாறு என்னும் திருத்தலத்திலே இப்பணி சிறப்பாக நடைபெற்றுள்ளது.

"காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதிக்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவை யாறே"

காந்தாரப் பண்ணிசையைப் பெண்கள் பாட அழகிய வீதியிலே அமைந்த அரங்கிலே அழகான அணிகலன் பூண்ட பெண்கள் ஆடல்செய்யும்

காட்சியைச் சம்பந்தர் பாடிய தேவாரம் காட்சிப் படுத்தியுள்ளது. வீதியை வலம்வந்து பெண்கள் நடனமாடினர். அவர்கள் ஆடலுக்கு ஏற்றபடி முழ வென்னும் இசைக்கருவி இசைக்கப்பட்டது. இந்த ஆடலில் கோல் கொண்டு ஆடும் கோலாட்டமும் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில்களிலே அடியார்கள் கூடி இசை பாடுவது மரபாக இருந்துள்ளது. அவர்கள் பண் ஒன்றப் பாடும் திறனுடையவராக இருந்தனர். பண்ணோடு பாடித் தன்னைப் பரவும் அடியார் களை இறைவன் பாங்கிலே நின்று தாங்குவான் என திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். இன்னிசை தொண்டர்கள் பாட திருவாப்பாடி திருத்தலத்தில் இறைவன் இனிதாக அமர்ந்திருக்கின்றான். அடி யார்கள் இசைபாடித் திருக்கோயிலை வலம்வந்த காட்சியையும் அவர் நேரடியாகக் கண்டு பாடி யுள்ளார். உழவாரத் தொண்டுசெய்து திருக் கோவில்களின் திருவீதிகளை வலம்வந்த நாவுக் கரசர் இசை பாடிய அடியார்களுடைய பணியைத் தமது பாடல்களிலே பதிவு செய்துள்ளார். தொண் டர்கள் நெருங்கிநின்று இன்னிசை பாடித் தொழும் மரபினைப் பல பாடல்களிற் காணமுடிகிறது.

இசைபாடும் காட்சியைச் சம்பந்தருடைய பதிகப் பாடல் ஒன்று வருமாறு காட்டுகிறது.

"தொழுமாறு வல்லார் துயர்தீர நினைந்து
எழுமாறு வல்லார் இசைபாட விம்மி
அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்
வழிபாடு செய்மா மடமன் னினையே"

இறைவனை வந்து தொழவல்லார்களுடைய துயர் தீரவேண்டும் என நினைந்து வல்லார்கள் இசை பாடுகின்றனர். அதைக் கேட்டவர் அழுவார் கள். அவ்வளவு மனத்தை உருக்கும் இசை. அத்த கைய வழிபாட்டைச் செய்யும் மறையோர்கள் வாழும் திருவழுந்தூர் திருத்தலம். பிறர் துயர்தீர இசையால் இறைவனை வேண்டும் இனிய தொண்டுப்பணி இதுவேயாகும்.

இறைவனை நினைந்து இசை பாடுபவர்கள் வினைகள் மடிந்துவிடும். இந்த வழிகாட்டலை மெய்யடியார்களான நால்வரும் தமது பாடல்க ளிலே வலியுறுத்தியுள்ளனர். மேலும் கூட்டாக இசை பாடுவது உள்ளத்தை நிர்மலமாக்கும். தொண்டர்கள் அவ்வாறு இசை பாடிச் சென்றதை யும் பல பாடல்கள் காட்டுகின்றன. அடியார்கள் கூட் டாக இசைபாடி வலம் வருகிறார்கள். இவ்வாறு பாடுவதால் ஏற்படும் பயன்களை வருமாறு கூறியுள்ளார்.

"பாவிரி பாடல் பயில்வார் பழியொடு பாவமிலாரே"
"பண்புனை பாடல் பயில்வார் பாவமிலா தவர்தாமே"
"மருவிய பாடல் பயில்வார் வானுலகம் பெறுவாரே"

இங்கு பழியும் பாவமும் நீங்க ஒரு வழி கூறப் பட்டுள்ளது. இந்த உலக வாழ்வைவிட்டு வானுல கம் செல்வதற்கு இறைவனை இசைபாடி வணங்க வேண்டும்.

இவ்வாறு இசை பாடும்போதும் ஆடல் செய்யும் போதும் பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. முழவு, குழல், யாழ், கின்னரம், பறை, சங்கு போன்ற இசைக்கருவிகள் பாடல் களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. "கிளரும் பேரிசைக் கின்னரம்" என்னும் குறிப்பு கின்னரத்தின் இயல்பு கூறுகிறது. திருக்கடம்பூர் திருக்கோயிலில் இக் கருவி இருந்ததை அப்பர் பாடல் பதிவு செய்துள் ளது. சம்பந்தர் பாடல்களில் திருவீங்கோய்மலை என்னும் திருத்தலத்திலே குழல், யாழ், மொந்தை என்னும் கருவிகள் இசைக்கப்பட்டதற்குச் சான்று ண்டு. திருவவளிவணல்லூர் என்னும் பதிகத்தில் வரும் பின்வரும் அடியும் சான்றாக அமைகிறது.

"கூரவ மொந்தை குழல்யாழ் முழவினொடு
மிசைசெய்ய"

இங்கு நரம்புக்கருவிகளும் தோற்கருவிகளும் பயன்படுத்தப்பட்டமை நன்கு உணர்த்தப்பட்டுள்ளது. இன்று கோவில்களில் இத்தகைய இசைக் கருவி களின் பயன்பாடு அருகி வருகின்றது. குறிப்பாக ஈழத்துக் கோயில்களில் மின்சார மூலம் இயங்கும் கூட்டுக்கருவியே பயன்படுத்தப்படுகிறது.

இசைக்கு அணிசெய்யும் இசைக்கருவிகளின் பயிற்சி முற்காலத்தில் கோயில்களிலேயே நடை பெற்றது. தஞ்சைப் பெருங்கோயிலின் அமைப்பு இன்றும் இதனை விளக்கி நிற்கின்றது. கோயில். கலை பயில் கூடமாகவும் பணியாற்றியுள்ளது. இசையும் ஆடலும் அடிப்படையாக அமைய இசைக்கருவிப் பயிற்சி அதனுடன் இணைந்திருந் தது. இறைவன் திருநடனம் ஆடும்போது இசைக் கருவிகள் இசைக்கப்பட்டதை பின்வரும் அடி சுட்டிக் காட்டுகிறது.

"குழலின் ஓசை வீணை மொந்தை கொட்ட முழவு அதிர
கழலின் ஓசை ஆர்க்க ஆடும் கடவுள் இருந்த இடம்"

இங்கு வீணையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கருவி மணிவாசகரது பாடலிலும் "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு யாழும் வீணையும் இருவேறு இசைக்கருவிகளாகக் குறிப்பிடப்பட்டுள் ளன. வழிபாடு செய்யும் காட்சியை சம்பந்தர் வருமாறு காட்சிப்படுத்தியுள்ளார்.

"அறையும் மலர்கொண்டு அடியார் பரவி ஆடல் பாடல்செய்
பறையும் சங்கும் பலியும் ஓவாப் பழன நகராரே"

அடியார்கள் அக்கோயிலுக்கு வரும்போது பல இதழ்களைக் கொண்ட மலர்களைக் கொணர்ந்து பரவி மலர்மடை இடுகிறார்கள். பின்னர் எல் லோரும் ஆடுகிறார்கள். சேர்ந்து பாடுகிறார்கள். அவர்கள் ஆடலுக்கும் பாடலுக்கும் பறையொலி யும் சங்கொலியும் துணையாக இருக்கின்றன. அந்த வழிபாட்டுச் சூழல் எல்லோர் உள்ளத்திலும் ஒருமித்த இறைசிந்தனையை ஏற்படுத்தும். இதுவே பக்தியின் பரவச நிலை. இன்றும் கிராமப் புறங்களில் இத்தகைய வழிபாடு தொடர்கிறது. "சந்நதம் ஆடல்" என இவ்வழிபாடு புதிய பெயர் பெற்றுள்ளது. சந்நிதி முன்பாக நின்றாடல் என்பது இதன் பொருளாகும். பாடலுக்கும் இசைக்கருவி களின் ஒலிப்புகளுக்குமிடையே எண்ணத்தைக் குவியப்படுத்தும் நிலை. இது தன்னை மறந்து இறைவனை மட்டுமே காணும் நிலை. இந்த ஆடலை வெறியாடல் என்றும் தெய்வமேறி ஆடல் என்றும் கூறுவர். தற்காலத்தில் இந்த ஆடலை மூடப்பழக்கம் எனக் கூறி முகஞ் சுழிப்போர் பலர். ஆனால் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபில் ஆடலும் இசையும் மக்கள் மனம் உருப்பட நெறிப் படுத்தின. திருக்கோயில்களில் நடைபெறும் திரு விழாக்களில் ஆடலும் இசையும் எல்லோரையும் ஈர்த்தன. கூட்டாக வழிபாடு செய்யப் பயிற்றின. இன்று தனியான வழிபாடு மட்டுமே நடைபெறுகி றது. திருக்கோயில்கள் வழிபாட்டு இடங்களாக அன்றி சுற்றுலாச் செல்லும் இடங்களாகவே கருதப் படுகின்றன. ஆனால் சம்பந்தர் பாடல் காட்டும் திரு வலஞ்சுழி திருக்கோயில் வழிபாட்டுத்தலம் வேறு பட்டது. அவர் பாடுகிறார்.

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனுடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே."

நல்லைக்குமரன் மலரின் ஆரம்பகால பதிப்பாசிரியராக இருந்து பணியாற்றியவர் தமிழ்மணி தெல்லியூர் S.நடராசா அவர்கள். 1993 தொடக்கம் 1996 வரை நல்லைக்குமரனின் பதிப்பாசிரியராக அவர் பணியாற்றியுள்ளார்.

– பதிப்பாசிரியர்

# யாம் எல்லோரும் முருகப் பெருமானை வழிபட்டு திருவருள் பெறுவோமாக!

பேராசிரியர் வி.சிவசாமி

ஆதிகாலம் தொட்டு மனிதன் அவ்வந்நாட்டுத் தட்பவெப்பநிலை, சூழ்நிலை ஆகியனவற்றிற்கு ஏற்பவும், தனது மதிநுட்பத்திற்கும், அனுபவத்திற் கேற்பவும் தனக்கு மேலான பரம்பொருள் (இறைவன்) இருப்பதை உணர்ந்து செயற்பட்டு வந்துள்ளான். முதலிலே இயற்கை வழிபாடும், காலப்போக்கில் உருவம், அருவுருவம், அருவமா கவும் இறைவனை வழிபட்டுள்ளான்.

தமிழகத்தின் வரலாற்றுத் தொடக்ககாலமாகச் சங்ககாலம் விளங்கிற்று. இக்காலத்திலே பல தெய்வங்கள் வழிபடப்பட்டனர். இத்தெய்வ வழிபாட் டிலே முருக வழிபாடு முக்கியமான ஒன்றாகும். இதில் ஏற்கனவே தமிழகத்திலே நிலவிய இறை அமிசங்களும், படிப்படியாகத் தமிழகத்திற்கு வடக்கேயிருந்து பரவிய இறைஅமிசங்கள் சிலவும் காலப்போக்கில் ஒன்றுபட்டன. இப்போக்கினைக் குறிப்பாகச் சங்ககால முடிவில் அல்லது சற்றுப் பிந்திய காலத்தில் தோன்றிய திருமுருகாற்றுப்படை, பரி பாடல் முதலிய நூல்களிலே காணலாம். இந்நூல் களிலே முருகப்பெருமான் சூரனை அடக்கியமை, அவர் சிவபிரான் உமாதேவியாரின் திருமகன், கார்த்திகைப் பெண்களாலவர் வளர்க்கப்பட்டமை, வள்ளி, தெய்வயானை ஆகிய சக்திகளையுடைய வர் போன்ற கருத்துக்களிடம் பெற்றுள்ளன. அதே வேளையில் பழைய சங்ககால அகப்பொருள் மரபை யொட்டிய கருத்துக்களும், புறப்பொருள் மரபை யொட்டிய கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

முருகப் பெருமான் ஆறுதிருமுகங்களையும், பன்னிரண்டு திருக்கரங்களையும் உடையவர் என்ற கருத்தும் மேற்குறிப்பிட்ட காலத்ததுவே தமிழகத்தில் அவருக்குச் சிறப்பான ஆறு திருத் தலங்கள் உள்ளன. இக்கருத்தும் இவ்வழிபாடு தமிழகத்திற்கே தனிச் சிறப்பான வழிபாடென்பதை வலியுறுத்தும். பரிபாடலில் உள்ள 25 பாடல்களில் எட்டுப் பாடல்களிலேதான் முருகப்பிரான் போற்றப் படுகின்றார். இவற்றுள்ளே பெரும்பாலானவை திருப்பரங்குன்றத்திலே வீற்றிருக்கும் முருகப் பிரானைப் பற்றியவை. இவ்வாறு குறிப்பிட்ட திருத் தலங்களை முதன்மைப்படுத்தி இறைவனைப் போற்றும் முறை பல்லவர் - பாண்டியர் காலத் தமிழகத்திலே (கி.பி 575-900 வரை) பரவலாக ஏற்பட்டது. சங்ககாலத்திலே போரும் காதலும் இலக்கியத்திலே முதன்மைப்படுத்தப்பட்டன. அடுத்த சங்க மருவிய காலத்திலே (மேற்குறிப்பிட்ட நூல்கள் எழுந்த காலத்திலே) அருள், அன்பு, அறம் என்பன வலியுறுத்தப்பட்டன. இவ்வுலக இன்பங்களன்றி மேற்குறிப்பிட்டனவற்றையே தனக்கு அருளுமாறு கடுவனிள வெயினார் எனும் புலவர் முருகப் பெருமானை.

"யாம் இரப்பவை
பொன்னும் பொருளும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனுமூன்றும்" என இரந்து வேண்டுகிறார்.

பரிபாடல் 17ஆம் பாடலைச் சற்று நோக்கலாம். தொடக்கத்திலே நெருப்பையும், இசைக்கருவிக ளையும், சந்தனம் முதலிய வாசனைப் பொருட்க ளையும், அகிற் புகையினையும், கொடிகளையும் தம்முடன் வருவோர் கொண்டு வர தாம் மலர் களையும் பூந்துகில்களையும், மணியினையும் வேலினையும் சுமந்து வந்து முருகப்பிரான் எழுந் தருளியிருக்கும் கடம்ப மரத்தை துதித்துப் பாடித்

திருப்பரங்குன்றத்தின் அடியிலே மாலை தோறும் பலர் உறைகின்றனர். அவர்களுள் தேவலோகத்து உறைதலை வேண்டுவார் யார் இஃது ஒரு காட்சி.

தொடர்ந்து சில காட்சிகள் வருணிக்கப்படுகின் றன. இருவிதமான செயற்கை. இயற்கை இன் னொலிகள் எழும்புகின்றன. ஒரு புறமாகப் பாணர் களுடைய யாழோசையும். அதற்கெதிரான வண்டின் இன்னிசையும் எழும். பிறிதொரு பக்கத்திலே புல்லாங்குழல் ஒலி எழ அதன் எதிராகத் தும்பி முரலும். ஒரு பக்கத்திலே முழவின் முழக்கம் ஏற்பட அதனெதிராக அருவி நீர் ஒலிக்கும். ஒரு புறத்திலே ஆடு மகளிர் அசைய அவரெதிராகப் பூங்கொடிகள் காற்றினால் அசையும். இன்னோரி டத்திலே பாடு மகளது பாலைப்பண் நிறைகுறை வோடு ஒலிக்க அதனெதிர் ஆடுமயிலினது அரித் தெழுங் குரல் எழும். இவ்வாறு பல்வேறுபட்டவர் களின் போட்டிகள் கொண்ட சிறப்புற்றதாக முருகப் பெருமானின் திருப்பரங்குன்றம் திகழ்கின்றது.

மேலும் இக்குன்றத்திற்கு அண்மையிலே பெண்களும், ஆண்களும் நெருங்கி விளையாடு கின்றனர். அம்மகளிரது கூந்தலினின்றும், ஆண் களது குஞ்சியினின்றும் விழுந்த மாலை பெருந் தொகையாக இருக்கின்றன. இதனால் அப்பகுதி வழி தடுக்கப்பட்டுள்ளதாம். மேற்குறிப்பிட்ட சிறப்பு வாய்ந்த திருப்பரங்குன்றத்தில் முருகக் கடவுள் எழுந்தருளி உலகில் ஆங்காங்கே செய்யப்படும் பூசையினை ஏற்றுக் கொள்ளுகிறார். இதன்போது எழும் பெரிய அகிற்புகை மேலே செல்வதால் தேவர்கள் இமைப்பார்கள். சூரிய மண்டலமும் தோன்றாமல் மறையும். ஆண்களும், பெண்களும் சுனை கண் பாய்ந்து விளையாடுவர். இதனால் வண்டுகள் பயந்து அச்சுனை மலர்த்தாதினை ஊதா வாயின. திருப்பரங்குன்றத்தின் அலங்காரங்கள் அத் தன்மையன. மலையிலுள்ள அருவி பாய்ந்து மலைக்குக் கீழே உள்ள உழவரது வயல்களிலே பரவும். அவ்வருவியிலே விளையாடுகின்ற மகளிர் ஆபரணங்களிலிருந்து விழுந்த நீலமணி அவ்வுழ நிலத்தைச் சிதைக்கும். தெய்வவிழா, விருந்தயர் வாகிய இவை பரங்குன்றிற்கும் வையைக்கும், மதுரைக்கும் தடுமாறி வருதல் நல்லொழுக்கமா யிற்று. இவை யாவும் ஒரே பிரதேசத்திலுள்ளவை என்பது குறிப்பிடற்பாலது.

இவ்வாறு திருப்பரங்குன்றத்தின் பல்வேறு சிறப்புகளையும் அவர் அன்பர்களின் பூசையினை ஏற்று அருள்புரிவதையும் குறிப்பிட்ட பின்னர் புலவர் அப்பெருமானின் அதியுன்னத சிறப்புக்க ளைச் சுட்டிக்காட்டி யாவரும் அவரை வழிபட்டுய்யு மாறு வேண்டுகிறார். அதாவது மணி நிறமயிலை யும், உயர்ந்த கோழிக்கொடியையும், சேவற்கொடி உடைய முருகப்பெருமானே யானையின் மீது ஊர்ந்து போரிலே வெற்றி பெறும் தலைவனே! பிறவித் துன்பம் நீங்கப்பெற்று இன்பம் மலிந்த நாட்களை நாம் பெற வேண்டும். அதற்காக யாமும் எம் சுற்றத்தாரும் மக்களைப் பணிந்தொழுகாமல் தேவரீரின் புகழை ஏத்தி திருப்பரங்குன்றத்தைப் பாடித் தொழுகிறோம். திருவருள்பாலிப்பீராக! என்பதாம். இங்கு திருப்பரங்குன்றம் ஆகுபேராக அங்கு வீற்றிருக்கும் முருகப்பிரானையே குறிக் கின்றது. சுற்றம் என்பது இனத்தாரை மட்டுமன்றிச் சூழவுள்ள சமூகத்தையே குறிப்பதாகவும் கொள்ள லாம். இங்கு தனி மனித ஆன்ம ஈடேற்றமன்றிச் சமூக ஈடேற்றமே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்து சமயத்திலே மனிதன் தனக்காக வழிபடுகி றான். மற்றவர்களுக்காக வழிபடுகின்றிலன்" என ஒரு சாரார் அறியாமையாலே கூறுகின்றனர். உண்மையில் இந்து சமயத்தில் ஒருவன் தனக் காக அன்றி மற்றவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற் காகவும் வழிபடுகிறான் என்பது இதிலும். ஏறக் குறைய இதேகாலத்தில் அல்லது பின்னர் எழுந்த திருமந்திரத்திலும் யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம் என்பதாலும் பிறவற்றாலும் பெறப்படும். மேலும் சைவசமய நித்திய நைமித்தியக் கிரியை கள் முடிவிலும்

ஸர்வேஜநா ஹஸுகிநோ பவந்து!

ஸமஸ்த மங்களாநீ பவந்து

எல்லா மக்களும் இன்புற்றிருப்பாராக! எல்லா மங்கலங்களும் உண்டாவதாக என ஆசீர்வாதத் திலே கூறப்படுவதும் ஈண்டு கவனித்தற்பாலது. எனவே யாம் எல்லோரும் முருகப் பெருமானை வழிபட்டு திருவருள் பெறுவோமாக!

# ஓங்காரத்து உள்ஒளிக்கும் உள் ஒளியாய் விளங்கும் முருகன்

**சைவப்புலவர் வை.சி. சிவசுப்பிரமணியம்**
ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்

ஓம் என்ற குறியீடு குறிக்கும் துனிப்பொருளை ஓங்காரம் என்றும் பிரணவமென்றும் குறிப்பிடும் மரபு எமது சிந்தனைக்கு அப்பாற்பட்ட காலத்திலிருந்தே மரபுவழி பேணப்பட்டு வருகிறது. எவை எவை இதுவரை இருந்தனவோ எவை இருக்கப் போகின்றனவோ அவை அனைத்தும் ஓங்காரமே. எது முக்காலத்திற்கும் இருக்கிறதோ அதற்கு அப்பாலும் இருக்கிறதோ அது ஓங்காரமே என்று அதன் பொருள் விளக்கமாக அமைகிறது.

நீரின் வீழ்ச்சியிலும், ஆற்றின் பாய்ச்சலிலும், கடலின் ஓசையிலும், காற்றின் வீச்சினிலும், நெருப்பின் எழுச்சியிலும், தாவரங்களின் அசைவுகளிலும், சடப்பொருள்களின் நுண் அலை ஓசையிலும் அ-உ-ம என்றோ அல்லது "ஓ" என்றோ ஒலி அலைகள் எழுகின்றன. இதனை விளக்கவோ அல்லது குறியீட்டின் துணைகொண்டு விளக்கவோ முற்று முழுதாக இயல்வதில்லை.

"ஓம்" என்பதற்கு எண்ணற்ற அர்த்தங்களைக் கூறியுள்ளனர் சான்றோர். அவற்றுள் சிலவற்றை எடுத்துச் சுவைத்து இன்புறலாம். அ உ ம் ஆகிய மூன்று எழுத்துக்களும் சேர்ந்து "ஓம்" என்றாயிற்று என்பது சான்றோர் முடிபு. 'அ' என்ற எழுத்து ரிக் வேதத்திலிருந்தும் 'உ' என்ற எழுத்து யஜுர் வேதத்திலிருந்தும் 'ம' என்ற எழுத்து சாம வேதத்திலிருந்தும் எடுக்கப்பட்டவையாகும். முற்காலத்தில் 'வேதம்' என்ற பொருளில் 'த்ரயோ வேதா' என்றே சொல்லப்பட்டிருக்கிறது. 'ஓம்' என்பது வேதம். வேதத்தின் சாரம். அதில் வேதம் முழுமையும் அடங்கியுள்ளது. 'அ' என்பது இறைவனையும், 'உ' என்பது ஜீவாத்மாவையும், 'ம' என்பது இறைவனுக்கு ஜீவன் என்றென்றும் தொண்டு புரிய வேண்டியவன் என்பதனையும் உணர்த்துகின்றன. அ, உ, ம என்பவை பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் ஆகியோரை உணர்த்துவதாகவும் பெரியோர்கள் கூறுவர்.

'ஓம்' என்னும் பிரணவத்திற்கும் முருகப் பெருமானுக்கும் மிகுந்த தொடர்புண்டு என்பதனை பல புராணச் செய்திகள் மூலம் அறிகிறோம். முருகனின் வாகனமாகிய மயில் தன் அழகால் யாவரையும் மயக்க வல்லது. எனவே அதனை மாயை என்பர். கோழியானது நாத தத்துவம். மயில் விந்து தத்துவம். மயிலைப் பிரணவ மந்திரம் என்றும் கூறுவர். மயில் தன் தோகையை விரித்தாடும் போது ஓங்காரம் போல் தோன்றுதல் காணலாம்.

முருகன் அடியார்கள் எப்பொழுதும் தம் சிந்தனையிலே முருகப் பெருமானையே காண்பர். ஓங்காரத்துட் பொருளான முருகனாகிய சிவத்தை தரிசித்து யம - பயமற்று அச்சிவத்தோடு ஏகனாய் நிற்பர். ஆனால் தினையளவு நேரமேனும் பிரணவத்தின் உள்ளொளிக்குள்ளே முருகக் கடவுளுடைய திருவுருவத்தைக் காண இயலாதவர்கள் இறுதிக்காலத்தில் ஏற்படும் யம - பயத்திற்கு என்ன பரிகாரம் செய்து கொள்வர் என்று பின்வரும் பாடலில் கேட்கிறார் அருணகிரிநாதர்.

ஆங்காரமும் அடங்கார், ஒடுங்கார், பரம ஆனந்தத்தே
தேங்கார், நினைப்பும் மறப்பும் அறார், தினைப் போது
அளவும்

ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார், தொழும்பு செய்யார் என் செய்வார்
யமதூதருக்கே
- கந்தரலங்காரம்

அருணகிரியார் ஆடுகின்ற மயிலைப் பார்க்கின்றார். "ஆண்டவனே இதுதான் ஓங்கார சொரூபம் என்பதை இத்துணை நாள் நான் தெரிந்து கொள்ளவில்லையே" என்கிறார்.

"ஆன தனி மந்தர ரூப நிலை கொண்ட
தாடு மயில் என்பதறியேனே" - திருப்புகழ்

அது மட்டுமா, மிகுந்த வலிமையுடையதும் எல்லோராலும் விரும்பப்படுகிறவரும், தேவர்கள் விரும்பும் பிரணவப் பொருளாய் இருப்பவரும், தேவர் உலகத்தைத் தாங்குபவரும் ஆகிய முருகப் பெருமான், தமக்கு உண்மைப் பொருளை அறிய உபதேசித்த சிறப்பையும் பின்வரும் கந்தரனுபூதிப் பாடலில் விளக்குகிறார்.

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா!
விரிதாரண! விக்ரமவேள்! இமையோர்
புரிதாரக! நாக புரந்தரனே!
- கந்தரனுபூதி

சிவபெருமானுக்கு முருகன் 'ஓம்' என்னும் பிரணவத்தின் உட்பொருளை உபதேசித்தருளினார் என்பது கந்தபுராணம். இதனையே அருணகிரி நாத சுவாமிகள் நயம்படச் சொல்கிறார். குரு நாதனை உயர்ந்த இடத்தில் வைத்துக் கேட்க வேண்டும்; அவனை வணங்கி மரியாதையோடு கேட்க வேண்டும். பரமேஸ்வரன் தன் குழந்தைகளாகிய முருகனைக் கையிலே தூக்கி உயர்ந்த நிலையில் வைத்துக் கொண்டு, "என் தலைவனே, குமாராய நம" என்று கூறி, "எனக்குப் பிரணவ உபதேசம் செய், அப்பா" என்று வேண்டினாராம்.

"நாதா! குமரா! நம! என" என்று அரனார்
"ஓதாய்" என, ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே!
- கந்தரனுபூதி

பிள்ளையாகிய முருகன் சிவபிரானுக்கு குருநாதனாக இருக்கிறான். தனது ஒரு காதுக்குக் கிடைத்த இன்பம் மற்றொரு காதுக்கும் கிடைக்க வேண்டுமென்று ஆண்டவன் தன் மறு காதையும் திருப்பிக் கேட்டானாம்.

"சிவனார் மனம் குளிர உபதேச மந்தரம் இரு
செவி மீதிலும் பகர் செய் குருநாதா"
- திருப்புகழ்

இரண்டு செவியும் இனிக்கும்படி சண்முக நாதன் பிரணவ உபதேசம் செய்தான் என்றவாறு.

ஓங்காரம் என்பது ஒலியாகவும் ஒளிப்பிழம்பாகவும் நிற்கும் தன்மையது. அந்த ஒளிப்பிழம்புக் குள்ளே உள்ளொளியாய் விளங்குகிறார் முருகன். "ஓங்காரத் துள்ளொளிக்குள் முருகன் உருவம் கண்டு" என்பது அருணகிரிநாதர் வாக்கு. ஓங்கார சப்தமாகவும் ஒளியாகவும் இருப்பவன் சண்முக நாதன். அவன் திருவுருவத்தை உள்ளத்தில் தியானிக்கும் அன்பர்கள் அவனை ஓங்காரத்துள் உள்ளொளிக்குள்ளே காண்பார்கள். "ஓதிய ஐந்து ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய் நின்றேனே"
- கந்தர் கலிவெண்பா

ஓங்காரம் என்பது ஓர் அடையாளம். சண்முக நாதன் தன்னுடைய வாகனமாகிய மயிலை அணைத்து நிற்கின்ற காட்சியை அப்படியே ஒரு கோடு போட்டுப் பார்த்தால் அது பிரணவமாகத் தோன்றும். நாமும் ஓங்காரத்துள்ளொளிக்குள் முருகன் உருவம் கண்டு உய்திபெறுவோமாக.

**உசாத்துணை நூல்கள் :**

1. கந்தரலங்காரம் - மு.திருவிளங்கம் உரை
2. இந்துசமயக் களஞ்சியம் - மு.திரவியம்
3. கந்தபுராண வரலாற்றுச் சுருக்கம் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
4. இந்துக் கலைக்களஞ்சியம் - பகுதி II
5. வாரியார் வாக்கு - திருமுருக கிருபானந்த வாரியார்
6. கந்தர் கலிவெண்பா - கி.வா.ஜெகநாதன்

# தேடிக்கண்டு கொண்டேன் ...

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
நமசிவாயம் கல்யாணி M.Phil

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்து சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து"

இது மாணிக்கவாசகர் கண்ட அனுபவ உண்மை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவை மூதாட்டி. உலகில் பிறக்கும் எண்ணற்ற உயிரினங்களில் மனிதனே எல்லாவற்றிலும் சிறந்தவனாக மதிக்கப்படுகின்றான். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள். "மன்" என்ற பகுதியடியாக மனம் என்ற சொல் வந்தது. மனத்தை உடையவன் மனிதன். ஏனைய உயிர்த் தொகுதிகளுக்கு இல்லாத சிந்தனை, அறிவு உடையவன். தக்கது இன்னவை, தகாதது இன்னவை என்று பிரித்து அறியும் பகுத்தறிவு மனிதனுக்கே உள்ளது. இந்த அறிவின் துணையால் மனிதன் செய்து வரும் காரியங்கள் வியப்புக்குரியனவாக உள்ளன. அதனால் மனிதப்பிறவி கிடைப்பது மிகவும் அருமையானது என்பர்.

கடவுள் என்பது எம்முடைய மனம் வாக்கிற்கு எல்லாம் அப்பாற்பட்டுக்கடந்து நிற்பது. இறைவன், தெய்வம், ஈசுவரன் என்பன எல்லாம் கடவுளைக் குறிப்பதற்கு வழங்கும் பொதுப்பெயர்களாகும். இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன். எல்லாம் அறிந்தவன். எல்லாம் வல்லவன் அவன் அணுவுக்கு அணுவாகவும் இருப்பான். எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள எண்பத்து நான்கு லட்சம் உயிர்த்தொகுதிகளுக்குள்ளும் உள்ளுறை உணர்வாக உள்ளவன். அவன் இல்லாத இடம் எதுவும் இல்லை.

"பார்க்குமிடம் எங்கனும் நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தம்"

என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைக் காண்பதற்கும் ஏற்ற பக்குவமான காலம் அமைய வேண்டும். மறைந்திருக்கும் பேராற்றலை அறிவதற்கு உயரிய அறிவு ஒருவனுக்கு இருக்குமானால் அவன் கடவுள் எங்குமாய் யாவுமாய் இருத்தலை உணர்வான்.

எள்ளின் உள்ளே மறைந்திருக்கும் எண்ணெயைப் போல. மலரின் மத்தியில் மறைந்து காணப்படும் மதுரமான வாசனை போல, பழத்தினுள் நிறைந்திருக்கும் இனிய பழச்சாறு போல, மரத்தினுள் மறைந்திருக்கும் நெருப்பைப்போல எல்லா ஜீவராசிகளிடமும் தெய்வத்துவம் உள்ளே உறைகிறது.

இறைவன் நிலையையும் அவனைக் காணும் வகையையும் அப்பர் பெருமான் அருளிச் செய்கிறார்.

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

இறைவன் எல்லாப் பொருள்களிலும் உள்ளொளியாக அமைந்துள்ளான். அவனைக் காண்பதற்குத் திண்மை என்னும் கயிற்றினால் கடைய வேண்டும். அப்பொழுது அவர்களுக்கு முன் தோன்றியருளுவான் இறைவன்.

இறைவனை நாம் புறப்பொருளில் காண முயன்று கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மை இதுதான்.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லு மந்திர மேதடா
நட்டகல்லுப் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ."

"நாதன் உள் இருக்கையில்" என்று சித்தர் சிவவாக்கியர் கூறுவதன் படி இறைவன் நம்முள் உள்ளார். நாம் அவரே. அதாவது, என்றென்று முள்ள உண்மையான அகப்பொருள் நாமே. அதை ஒரு போதும் புறப்பொருள் ஆக்க முடியாது. அதற்கான முயற்சியில் நாம் ஈடுபடுவது நேரத்தை யும், ஆற்றலையும் வீணாக்குவதே தவிர வேறல்ல. இதை ஜீவன் உணரும் போது புறப்பொருளாகக் காண்பதற்கான இந்த முயற்சியை விட்டு விட்டு அகப்பொருளை மேலும் மேலும் நம் மனத்திற் குள்ளே இறைவனாகிய பரம்பொருள் இருக்கிறார் என்பது உண்மையாகிறது. இது தான் பரிணாமம், உடல் என்ற நிலையில் வாழ்வது குறைந்து மனதில் வாழ்வது அதிகமாகிறது.

எங்கும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் உள்ளொளியாக நிற்றலைக்காணும் இயல்பு பெருஞானியர்க்கே வாய்ப்பதாகும். சாதாரண அறிவுடையவர்கள் இறையுணர்வு எய்தவே கோவில்களும், கோபுரங்கள், மடங்கள் முதலி யனவும் அமைக்கப்பட்டுள்ளன. நிலத்தின் அடியில் எங்கும் நீர் பரவியிருந்தாலும், நாம் அதனைப் பருக வேண்டுமானால் கிணறு தோண்டியும், குழாய்களை இறக்கியும் அவற்றின் வழியாகப் பெறுகிறோம் அல்லவா? அதுபோல இறைவனு டைய அருள் சுரந்து விளங்கும் இடம் திருக் கோயில்களாகும்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று உலக நீதி அறிவுறுத்துகிறது. ஔவை யாரும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று கூறியுள்ளார். இவற்றிலிருந்து ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம் நன்கு புலனாகிறது. ஆலயம் என்ற சொல்லுக்குப் புறம்பாகக் கோயில் என்ற சொல்லும் வழக்கில் உள்ளது. இச்சொல் "கோ" - அரசன் எனவும், "இல்" - வீடு எனவும் பொருள்படலாயிற்று "ஆ" - ஆன்மாக்கள் "லயம்" - ஒடுங்குதல் என்பதால் ஆலயம் என்ற பெயர் வழங் கலாயிற்று. ஆகவே இறைவன் இருக்குமிடமே ஆன்மாக்கள் லயிக்குமிடமாகும். அப்பரது தேவா ரத்தில் கோயில் என்ற பெயர் பல நிலைகளில் இடம் பெறுகிறது. பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில் எனப் பல கோயில்கள் குறிப்பிடப்படுகின்றன.

"சிவனுறையும் கோவில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"

என்று அப்பர் சுவாமிகள் கோயிலின் பெருமை யைக் குறிப்பிடுகின்றார்.

அறிவியற் கண்கொண்டு ஆலயங்களை ஆராய்ச்சி செய்ததன் பின்னர், சிந்தனை அல்லது நினைவுக்கலையால் திருக்கோயில்களைப் பார்த்தால், கோயில்கள் சாந்தி நிலையங்களென் றும், அங்கு பதிந்துள்ள இறைவனின் வழிபாட்டு எண்ண அலைகள் அளவிடற்கரிய ஆற்றல் நிறைந்துள்ளன என்றும், அப்படிப்பட்ட இடத்தில் மன இயல்புகள் சாந்திபெறுவதோடு அல்லாது, மனத்தில் ஓர் நிறைவுத்தன்மை முகிழ்ந்து மக்கள் வழிபாட்டில் ஈடுபட கோயில்கள் ஒரு சிறந்த சாதன மாக விளங்குகின்றன என்றும் தெரியவரும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து விளங் கும் இறைவனை ஆலயத்தில் தான் சிறப்பாக வழிபட்டு உணர முடிகின்ற காரணத்தால் இந்து நாகரிக வரலாற்றில் ஆலயமரபு சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. ஆலயம் ஒடுக்கத்தையும், அமைதியை யும் தரும் நிலையமமாகக் கொள்ளப்பட்டது.

ஒருநாமம் ஓர் உருவம் இல்லாதவன் இறைவன். ஆனால் ஒவ்வொருவருக்கும் அன்பு ஏற்படவே நம் முன்னோர்கள் கடவுளுக்கு ஓர் உருவம்

கொடுத்தனர். அந்த உருவத்தை நாம் நினைக்க நினைக்க கடவுள் ஞாபகம் உண்டாகும். இதை ஒட்டியே ஞானசம்பந்தர் அருளினார்.

"இன்ன உரு இன்னநிறம் என்றறிவதேல் அரிதுநீதி
பலவும்
தன்ன உருவமென மிகுந்தவன் நீதியொடு தானமர்விடம்"

இதே போன்று நம்மாழ்வார் திரு மொழியில்

"அவரவர் தமதமது அறிவு அறிவகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே"

அதாவது அவரவர் தத்தமது அறிவுகளுக்குத் தோன்றிய வகைப்படியே அந்த அந்தத் தெய்வ வடிவங்களை இறையவர் எனப் பணிவார்கள். அவரவர் தெய்வங்கள் குறைவுடையவரே அல்லர். ஓர் இறைவரே அவரவருடைய விதிப்படியே நின்று அருள் புரிகின்றார்.

"கலைகளின் நோக்கம் கடவுளைக் காணுதல்" என்பது அனுபூதிமான்களின் கூற்று. கட்டடக் கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை முதலிய பல்வகைக் கலைகளுக்கும் கோயில்கள் களஞ்சியங்களாகத் திகழ்ந்தன. ஆகமங்கள் வகுத்த விதிமுறைகளுக்கமையக் கிரியை மரபு உருவாகி இக்கலைகளைத் தோற்று வித்தது.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெரும் தொழில்களை இறை வன் நிகழ்த்துகின்றான். என்று புராணங்கள் இயம்புகின்றன. புராணங்கள் சித்தரிக்கும் இறை வனின் புறத்தோற்றத்தைக் கட்புலனாகும் வண்ணம் சிற்பங்கள் உருவாக்குகின்றன. கோயில் விமானங்களிலும், தூண்களிலும் தெய்வத்திருக்கோலங்கள் சிற்ப சாஸ்திரம் கூறும் முறைக்கமைய பல்வகை வடிவங்களில் அமைக் கப்படுகின்றன.

பிம்பம், விக்கிரகம், மூர்த்தி, பிரதிமை, பேரம் முதலான பல்வேறு பதங்கள் திருவுருவத்தைக் குறிக்க சிற்ப நூல்களில் பயன்படுத்தப்படுகின்றன. விக்கிரகம் என்ற சொல் "வி + கிரகம்" எனப் பிரிக்கத்தக்கது. "வி" என்பது மேலாக என்றும், "கிரகம்" என்பது பற்றுதல் என்றும் பொருள்படும். அழகும் தெய்வீகமும் வாய்ந்த திருவுருவங்கள் இறைவனை நினைவு கூர்ந்து மனத்தினால் கிரகிப்பதற்கு உறுதுணையாயிருப்பதோடு அவனது பெருமையை உணர்த்தும் கருவிகளாகவும் அமைகின்றன. கடவுளிடம் முதலில் அன்பு ஏற்பட விக்கிரக வழிபாடு மிகவும் அவசியம். பசுவின் உடல் முழுவதும் இரத்தம் இருந்தாலும் பால் வெளிவருவது மடியிலிருந்து தான். அது போலவே கடவுளன்பு வெளிப்படுதல் விக்கிரக வழிபாட்டின் மூலமாகவே. இறைவன் ஆன்ம கோடிகள் உய்யும் வண்ணம் கருணை மேலீட்டினால் பல் வேறு வடிவங்கொண்டமையால் விக்கிரகங்களும் பல திறத்தனவாகின்றன. ஆரம்பத்தில் வெறும் சம்பவங்களை மட்டும் உணர்த்தும் இவ் விக்கிர கங்கள் வழிபடுவோனது அறிவு முதிர்ச்சிக்கேற்ப காலப்போக்கில் அச்சம்பவங்களில் மறைந்து கிடக்கும் உயரிய தத்துவங்களை உணர்த்தும் என்பது தெளிவு.

வாக்கிற்கும், மனத்திற்கும் எட்டாத பரத்துவ த்தை அன்பினாலேயே அடையலாம் என்பது தான் பக்தி. பக்தியை ஒன்பது விதமாக பல பக்தி சாஸ்திரங்கள் வகுக்கின்றன. நாயன்மார், கண்ணப்பர் கண்ட, காட்டிய அன்பு பக்திமய மானது. இறைவனாலேயே "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத்தோன்றலே நில்லு கண்ணப்ப! என்று அழைக்கப்பட்ட கண்ணப்பர் அருட்கடல். அப்பர் அன்புக்கடல். இவர்கள் பக்திமான்கள். வாழ்ந்து காட்டிய ஞான வான்கள். இவர்களைப் பின்பற்றி மக்களும் பரமனுக்கு உபசாரங்கள் செய்து, அர்ப்பணம் செய்து வழிபடுகின்றனர். இதுதான் கோயில் பூசைகள், தேர்த்திருவிழாக்கள் முதலியன வெளிப் படையாகப் பக்தியை வளர்க்கும் முறையாகும். இந்தப்பழக்கம் புலன்களை அடக்குவதற்கும், அகங்காரத்தை ஒடுக்குவதற்கும் வழிகோலும்.

இந்தப் பக்குவ நிலையில் கண் திறக்க வேண்டும். உண்மையைக் காணக் கண்திறக்க வேண்டும். தன்னை அறியும் அறிவு உருவாக வேண்டும்.

"உன்தன் உண்மைத் தன்மையைத் தெரிந்ததும்
அமைதியின் உறைவிடம் நீயாவாய்
உள்ளுறைகின்ற தெய்வீகம் ஒன்றே
அமைதியை இங்கே அள்ளித்தரும்"

கஸ்தூரி மான் தன் வயிற்றிலுள்ள கஸ்தூரியின் மணத்தை நுகர்ந்து விட்டு இந்த வாசனை எங்கிருந்து வருகின்றது என்று தெரியாமல் அலைகிறது. தேடித்தேடி அலைந்து ஒரு நிழலில் அமர்ந்து கொள்கிறது. முகத்தை அதன் வயிற்றில் தேய்த்துக்கொள்ளும் பொழுது அதனுள் இருந்து தான் கஸ்தூரி மணம் வருகிறது என்று புரிந்து கொண்டு இது தெரியாமல் எங்கெங்கோ அலைந்தேனே என எண்ணிக்கொள்ளும் கஸ்தூரி மான் போல தன்னுள் இருக்கும் தெய்வீக தத்துவத்தை உணராது மனிதன் அலைபாய்கின்றான். ஒவ்வொரு மனிதனும் தன்னுள் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதை விட உயர்ந்த ஆன்மீக சாதனை எதுவும் இல்லை.

இந்நிலையை ஜீவன்முத்தரான நாவுக்கரசர் மிக எளிமையான வழியில் தானும் அடைந்து எம்மையும் ஆற்றுப்படுத்துகிறார். தொண்டால், சேவையால் உள்ளும் புறமும் புனிதராகி தன் அவயவங்களால் மாலை சூடுகிறார். திருஅங்க மாலை சூடியவர் தான் சாதித்த சாதனையைக் கூறுகின்றார்.

"தேடிக்கண்டு கொண்டேன் – திருமாலோடு நான்முகனும்
தேடித்தேடொணாத் தேவனை என்னுளே
– தேடிக் கண்டு கொண்டேன்.

அப்பர் காட்டிய வழியில் தேடுவோம். எம்முள்ளே தேடுவோம். அறிய வேண்டியதை அறிவோம். விடவேண்டியதை விடுவோம். அடைய வேண்டிய இலக்கை அடைவோம். ஆன்மீக ஆனந்தத்தை எட்டுவோம். பேரின்பப் பெருவாழ்வு பெறுவோம்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

**உசாத்துணை நூல்கள்**


1. திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பனந்தாள் காசிமடம், 1957.
2. திருமந்திரம், உலகநாத முதலியார் (பதி) விவேக போதினி காரியாலயம், சென்னை, 1924.
3. ஏகாம்பர நாதன், ஏ. "கோயிலும் இறை வழிபாடும்", தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிகம் சென்னை, 1986.
4. கோபால கிருஷ்ண ஐயர், ப. "இந்துப் பண்பாட்டு மரபுகள்" வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம், 1992.
5. கைலாச நாதக்குருக்கள், கா. "சைவத்திருக் கோயிற் கிரியை நெறி", கலா நிலையம், கொழும்பு, 1963.
6. சபாரத்தினம், எஸ்.பி. "சைவ ஆகமங்கள்" - ஓர் அறிமுகம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1992.
7. நாராயணஸ்வாமி, வெ. "தமிழக அற்புத ஆலயங்கள்" நர்மதா பதிப்பகம், சென்னை, 1985.
8. சிற்றம்பலம், சி.க, "திருக்கோயில்" இந்துநெறி, யாழ் பல்கலைக்கழக இந்துமன்ற வெளியீடு. 1985.
9. ஶ்ரீநிவாசன், பி.ஆர், கோயிற் கலையும் சிற்பங்களும் கலைஞன் பதிப்பகம், சென்னை, 1965
10. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் "ஶ்ரீவத்ஸன்" பதிப்பகத்தார்.
11. திருவாசகம், ஶ்ரீராமகிருஷ்ண தபோவனம் இரண்டாம் பதிப்பு, 1970.
12. தெய்வீகம் மலரும் பொழுது". பகவான் சத்திய சாயி சேவா நிலையம், வவுனியா, ஐந்தாவது வெளியீடு.
13. தொண்டன், திருநெறித்திங்கள் வெளியீடு, திருவாவடுதுறை ஆதினம், 1951.
14. கோபால கிருஷ்ண ஐயர், ப. கட்டுரை. இந்து நாகரிகத்தில் ஆலயம் இந்து நாகரிகத்துறைக் கருத்தரங்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 1998.

# கந்தன் கருணை

மு. தம்பிப்பிள்ளை
பிரதான வீதி, குருமண்வெளி
களுவாஞ்சிகுடி.

கைலயங்கிரியிலே அர்த்தனாரீஸ்வர வடிவிலே சிவனும், உமையும் இருந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சிவன் இல்லாமல் சக்தி யில்லை; சக்தியில்லாமல் சிவனில்லை என்பது மெய்ப்பொருள் உண்மை!

உலகத்தின் சகல இயக்கங்களுக்கும் சிவனும், உமையுமே மூலகாரணர்களாக உள்ளனர். படைத்தல், காத்தல், மறைத்தல் அழித்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களையும் சிவன், சக்தியுடன் சேர்ந்து செயற்படுத்துகிறார்.

சூரபத்மன் என்னும் அசுரன் சிவபெருமானை நீண்டகாலமாகத் தவமிருந்து பெரும்பேறு பெற்றான். அவன் பெற்ற தவவலிமையினால் தேவர்களுக்குத் துன்பம் செய்து கொண்டிருந் தான். சூரபத்மன் தேவர்களை அசுரத்தனமாகச் சிறைப்படுத்தினான். தேவர்களை அவன் வெயிலில் முழங்காலில் நிறுத்தித் தலையில் கல்லை வைத்துக் கொடும் துயரப்படுத்தினான். தேவலோகத்தையும், பூலோகத்தையும், பாதாள லோகத்தையும் ஆண்டான். சூரபத்மனின் தம்பி சிங்கமுகாசூரன் தேவர்களின் மீது கருணை காட்டி அண்ணா! தாங்கள் தேவர்களைக் கொடு மைப்படுத்துவது உனக்குத் தகாது. இச்செய்கை யினால் நமது அவுணர்குலமே அழிந்தொழித்து விடும் என்று நன்மதிபுகன்றான்.

சூரபத்மன் அவனைக் கடிந்துரைத்து நீ எனது தம்பியாக இருக்கும் தகுதியற்ற கோழையே! என் முன் நில்லாதே! என்று எச்சரித்து அவனை ஒதுக் கினான்.

சூரபத்மன் தேவர்களுக்குச் செய்து கொண் டிருந்த கொடும் துயரத்தைத் தேவர்கள் எல் லோரும் ஒன்றுசேர்ந்து கைலயங்கிரிக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். சூரபத்மன் தேவர்குலத்தை அழிப்பதற்குரிய அத்தனை கருமங்களையும் செய்து கொண்டிருக்கிறான். அவன் எங்களை அடிமைப்படுத்தி மூவுலகங் களையும் ஆண்டு கொண்டிருக்கிறான். சூரபத் மனுடைய ஆணவத்தை அடக்காவிடில் நமது தேவர்குலம் அழிந்தொழிந்து போவதுடன் நம்மை நம்பி நம்மை வணங்கி நமது கருணையைத் தஞ்சமாகக் கொண்டு வாழும் மனித உயிர்களை யும் மற்றும் சகல உயிர்களையும் சூரபத்மன் அழித்தொழித்து விடுவான்! என்று தேவர்கள் சிவ பெருமானைப் பணிந்து வேண்டினர். தேவர் களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சிவ பெருமான், நான் அந்தச் சூரனையும், அவனின் குலத்தையும் அழித்து ஒழித்து உங்களையும், சகல உயிர்களையும் பாதுகாப்பேன்! நீங்கள் இனி எந்தப் பயமும் கொள்ள வேண்டாம் என்று சிவ பெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

சிவபெருமான் சூரனை அழிப்பதற்காகக் கோபம் கொண்டு நெற்றிக்கண்ணைத் திறந்த போது சத்துவம், ராஜ்சதம், ஈசானம், வாமனம், அகோரம், புருடார்த்தம் என்னும் ஆறு தீப்பொறிகள் ஒன்றின் பின் ஒன்றாகப் புறப்பட்டன. அந்தத் தீப் பொறிகளை வாயுபகவான் தன் திருக்கரங்களில் ஏந்தினார். அவற்றை அவரால் தாங்கமுடியாது வருணபகவானின் கரங்களில் ஒப்படைத்தார். வருணபகவான் அவற்றைத் தாங்கமுடியாது

சரவணப்பொய்கையில் வைத்துவிட்டார்.

அந்த ஆறு தீப்பொறிகளும், ஆறு குழந்தை களாக ஆறு தாமரைமலர்களிலே அமர்ந்து கொண்டன. சிவபெருமான் தேவருலகத்திலே இருந்த ஆறு கார்த்திகைப் பெண்களை இந்தக் குழந்தைகள் ஆறையும் வளர்ப்பதற்காக அனுப்பி வைத்தார். சிறுவர்களாக இருந்த முருகக்கடவு ளைக் கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையால் 'கார்த்திகேயன்' என்ற பெயரைப் பெற்றார். ஆறு பாலமுருகர்களும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டபோது அர்த்தனாரீஸ்வரர் சரவணப் பொய்கைக்கு வந்தார். உமையம்மையார் ஆறு அழகிய பாலமுருகர்களையும் தனது கைகளி னால் அணைத்து ஒன்றாகத் தூக்கி முத்தமிட்டார். என்ன? அதிசயம்! அற்புதம்!

ஆறுமுகங்களும், பன்னிரெண்டு கரங்களும் பன்னிரெண்டு தோள்களுமுடைய அழகிய முருகன் தோன்றினார். உடனே அன்னை பராசக்தி முருகக்கடவுளுக்கு ஒளிபொருந்திய வேலாயுதத்தைக் கையில் கொடுத்தார். தேவ கன்னிகளாகிய ஆறுபேரும் மீண்டும் அர்த்த னாரீஸ்வரரின் அருளினால் தேவலோகம் சென்ற டைந்தனர்.

சிவபெருமான் தமது திருக்குமாரர் தனது நெற்றிக்கண்ணிலே இருந்து தன்னிலும் வேறாகாது தோன்றியதால், சிவபெருமான் முருகக்கடவுளை சூரபத்மனையும் அவனுடைய அவுண குலத்தையும் அழித்துத் தேவர்களுக்கு தேவசேனாதிபதியாக நீ! திகழுவாயாக! என்று ஆசீர்வதித்தார். முருகக்கடவுள் அர்த்தனாரீசுவர ரான அம்மை, அப்பனைப் பணிந்து அன்னை கொடுத்த சக்தி வேலைக் கையில் கொண்டு சூரனுடன் போரிடப் புறப்பட்டார். "சூரபத்மன் நீ! சிறு வனாக இருக்கின்றாய்! என்னுடன் போர் செய்யும் தகுதி உனக்கு வரவில்லையே" என்று ஏழன மாகப் பரிகசித்தான். "தேவர்களுக்குத் துன்பம் செய்யும் உனது ஆணவத்தைவிட்டு உனது உயிரையும், உன் குலத்தையும் பாதுகாத் துக் கொள்வாயாக" என்று அவன் மீது பால முருகன் கருணை காட்டினார்.

முருகக் கடவுள், முதலில் வீரவாகுதேவரை சூரபத்மனிடம் தூது அனுப்பி, தேவர்களுக்குக் கொடுமை செய்வதை விட்டு விட்டு உனது உயிரைப் பாதுகாப்பாயாக! என்று கூறச்சொல்லி அனுப்பினார். சூரபத்மன் கடும்கோபம் கொண்டு வீரவாகு தேவரைப்பார்த்து நீ தூதுவனாதலால் உன்னைக் கொல்லாது விடுகின்றேன். நான் போரைவிடமாட்டேன் என்று அந்தச் சிறுவனுக் குக் கூறு என அனுப்பினான்.

சூரபத்மன் தன் தம்பி சிங்கமுகாசூரனைப் போருக்கு ஆயத்தமாகுமாறு பணித்தான். சிங்க முகாசூரன் அண்ணா! "இங்கு சிறுவனாகக் காட்சியளிக்கும் பாலமுருகன் சர்வசக்திகளும் ஒன்றாகத் தோன்றிய முருகக்கடவுளே! அவருடன் போரிட்டு நாம் வெற்றியடைய முடியாது. அவர் கூறும் நிபந்தனையை நாம் ஏற்றுக்கொள்வோம்" என்றான். சூரபத்மன் கோழையே! நீ! என்னுடைய தம்பியாக இருக்கவும் தகுதியற்றவன்! என்முன் நில்லாதே! இவ்விடம் விட்டு அகல்வாயாக! என்று எச்சரித்தான்.

சூரபத்மன் முதலில் தன் இளையதம்பி பகா சூரனை முருகக்கடவுளாகிய சிறுவனுடன் போருக்கு அனுப்பினான். அவன் போரிட ஆற்ற லில்லாது இறந்துவிட்டான். பின்பு சூரபத் மனின் பிடிவாதத்தினால் மனவிரக்தியுற்ற சிங்கமுகா சூரனும் பாலமுருகனுடன் போரிட சென்று முருகக் கடவுளின் வேலினால் உயிர்துறந்தான்.

ஆணவம் தலைக்கேறிய சூரபத்மன் பால முருகனுடன் போரிடப் புறப்பட்டான். அவன் முருகக்கடவுளான சிறுவனைப் பார்த்து, என்னுடன் போர் செய்யும் தகுதி உனக்கில்லை என்று ஆணவத்துடன் நின்றான். முருகக்கடவுள் தன் திருப்பெருவடிவத்தை சூரபத்மனுக்குக் காட்டி

னார். எட்டுத்திசைகளிலும் தன் திருக்கோலத்தை முருகக்கடவுள் காட்டி நின்றார். சூரபத்மன் பார்த்த பக்கங்கள் எங்கும் முருகக்கடவுளின் உருவமே காணப்பட்டது. சூரபத்மன் பூமியைப் பார்த்தான்! ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான்! எங்கும் முருகக்கடவுளின் திருப்பெருவடிவத்தையே சூரபத்மன் கண்டு அதிசயப்பட்டான். எப்படியென் றாலும் போர் செய்வதையே நோக்கமாக கொண்ட சூரபத்மன் தன் ஆணவம் குறையாது முருகக்கட வுளுடன் போர் செய்யத் துணிந்தான்.

முருகக்கடவுள் தன் அன்னை கொடுத்த வேலை சூரபத்மன் மீது விட்டார். அந்தச் சக்திவேல் கிரம்சமலையை உடைத்துக்கொண்டு சூரபத்மனை அழிக்கச்சென்றது. சூரபத்மன் முருகக்கடவுளை எதிர்த்துப்போர் செய்யும் ஆற்ற லற்றவனாக வேங்கை மரமாக நின்றான். முருகக் கடவுள் வேங்கை மரத்திற்கு வேல்விட்டார். வேங்கை மரம் இரு பகுதிகளாகப் பிளந்து தரை யிலே விழுந்தது. ஒரு பாதி மயிலாகவும், மறுபாதி சேவலாகவும் தோன்றி கருணைக் கடலாகிய முருகக்கடவுளின் வீரக்கழல்களில் விழுந்து வணங்கின. சூரனின் ஆணவம் அழிந் துள்ளமையைக் கண்டு முருகக்கடவுள் அவனை அழியாது மயிலைத் தன் வாகனமாகவும், கோழி யைத் தனது கொடியாகவும் கொண்டார். இது கண்டு தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

சூரபத்மன் முருகக்கடவுளின் கருணையைக் கண்டு நான் எனது ஆணவத்தினால் இந்தக் கருணைக் கடவுளுடன் போர் செய்தேனே! என் வீரமும் ஒரு வீரமா? நானும் ஒரு வீரனா? இந்தக் கருணைக் கடவுளை நீ ஒரு சிறுவன் என்னோடு போர்செய்யும் தகுதியுண்டா? என்றேனே! என்று நினைந்து முருகக்கடவுளை மயிலாகவும், சேவலாகவும் பாதம் பணிந்து வணங்கினான். முருகக் கடவுள் சூரபத்மனைத் தனது வாகன மாக்கிக் கோழியைக் கொடியாகத் தன் கரத்திலே எடுத்துக் கொண்டார்.

தேவர்கள் சிவபெருமானிடம் வந்து பணிந்து தங்கள் திருக்குமாரன் சூரனை வென்று எங் களைச் சிறை மீட்டுள்ளார். என்று வணங்கினர். சூரனின் ஆணவத்தை அழித்து தேவலோகத்தை யும் பூலோகத்தையும் பாதாள உலகத்தையும் முருகக்கடவுள் மீட்டார். சூரனின் ஆணவத்தை அழித்து தேவர் குலத்தைப் பாதுகாத்து தேவ லோகத்தை முருகக்கடவுள் தெய்வேந்திரனிடம் கொடுத்தமைக்காகத் தெய்வேந்திரன் தனது மகள் தெய்வானையை முருகக்கடவுளுக்குப் பரிசாகக் கொடுக்க எண்ணித் திருக்கல்யாணம் செய்து கொடுத்தார்.

முருகக்கடவுளை தேவர்கள் எல்லோரும் சிவ பெருமான் கூறியவாறு தேவசேனாபதியாகக் கொண்டனர். தேவர்கள் முருகக்கடவுளின் கருணையினால் தங்கள் துன்பங்கள் நீங்கி தேவலோகத்தையும் பூலோகத்தையும் ஆண்டு வருகின்றனர்.

சுந்தரவல்லி, பங்கயவல்லி என்னும் இரு தேவகன்னிகைகளும் முருகனின் அழகு, லாவண்யம், வீரம், இளமை என்பவற்றைக் கண்டு அவரையே மணமகனாகப் பெற தவம் செய்துகொண்டிருந்தனர். இதில் பங்கயவல்லி தேவேந்திரனின் மகளாக தெய்வானை என்னும் பெயருடன் பிறந்து, முருகப் பெருமானை திரு மணம் செய்ய அதனூடாக அவளின் தவம் நிறை வேறியது.

சுந்தரவல்லி, இலங்கையில் கதிர்காமத்திலே நம்பி என்னும் வேடர்குல மன்னன் ஆட்சி செய்திருந்தபோது ஒரு புள்ளிமான் ஈன்று வள்ளிக்கிழங்கு கல்லி எடுத்த ஒரு பள்ளத்திலே குழந்தையாகக்கிடந்தாள். நம்பிமன்னன் அக் குழந்தையை அள்ளி எடுத்து அழகுச்சிலையான அந்தக் குழந்தைக்கு தன்குலமரபுக்கேற்ப வள்ளி எனப் பெயர்சூட்டி இராஜமகளாக வளர்த்து வந்தார். வள்ளி அழகுத் தேவதையாக மன்னன் நம்பியின் அரண்மனையில் இருந்தாள்.

**பிரணவ மந்திரத்திற்கு பொருளறியா பிரமா**

ஒருமுறை முருகக்கடவுள், பிரமதேவரைப் பார்த்து, உலக உயிர்களைப் படைக்கும் உமக்குப் பிரணவ மந்திரத்திற்குப் பொருள் தெரியுமா? என வினவினார். பிரமதேவன் பிரணவ மந்திரத்திற்குத் தெளிவான பொருள் கூறத் தயங்கினார். உடனே முருகக்கடவுள் பிரமதேவனை சிறை வைத்தார்.

தேவர்கள் இது கொடுமை எனச் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் தன் இளையகுமாரனை அழைத்து வினவி பிரம்மதேவரை விடுதலை செய்யுமாறு கேட்டார். முருகக் கடவுள் பிரணவத்துக்குப் பொருள் தெரியாத பிரமதேவர் எப்படி உலக உயிர்களைப் படைப்பது? அதனால் தான் அவரைச் சிறைவைத்தேன் என்றார். தந்தையார் மகனே! உனக்குப் பிரணவத்துக்குப் பொருள் தெரியுமா? அப்படியானால் எனக்கு அதன் பொருளை உபதேசித்தருளும்! என்று கேட்டார்.

அதற்கு முருகக்கடவுள் தந்தையே! நீங்கள் சிஷ்யனாகவும், நான் குருவாகவும் இருந்தால் தானே தங்களுக்குப் பிரணவத்தின் பொருளை உபதேசிக்க முடியும் என்றார். சிவபெருமான் நான் சிஷ்யனாக இருக்கிறேன். நீ எனக்குக் குருவாக இருந்து பிரணவத்துக்குப் பொருள் சொல்லித்தா! என்றார். முருகன் தந்தைக்குக் குருவாக இருந்து பிரணவத்துக்கு "ஓம்" என்னும் மந்திரப் பொருளை உபதேசித்தார். இதனால் முருகன் தந்தைக்கு உபதேசித்த சாமிநாதன் ஆனார். இந்த உபதேசம் திருவேரகத்தில் நிகழ்ந்தது. முருகன் சாமிநாதன் எனப் பெயர் பெற்றதால் திருவேரகம் சாமிமலையானது. குருவாக இருந்து உபதேசித்ததால் குருமலை எனவும் பெயர் பெற்றது.

முருகக்கடவுள் தந்தைக்கு உபதேசம் செய்த பின் இலங்கையின் தென்பால் உள்ள கதிர்காமத்திற்கு மயில் வாகனத்தில் சாமிமலையிலிருந்து வந்தார். நம்பி மன்னனின் மகள் வள்ளி தினைப் புனம் காவல் செய்யும் போது ஒரு உயர்ந்த பரணில் நின்று சினேகிதிகளுடன் கவண் கொண்டு ஏலேலோ என்று பாடிக்கொண்டு பட்சிகளைத் துரத்திக் கொண்டிருந்தாள். முருகக் கடவுள் மயில் வாகனத்தில் வந்தவர் வள்ளியைக் கண்டு மையல் கொண்டார். வள்ளி சுந்தர வல்லியாக இருந்த காலத்தில் முருகக்கடவுளை மணாளனாக அடைய எண்ணித் தவமிருந்தமையால் விதிகூட்ட வள்ளியை முருகன் கண்டதும் காந்தர்வரூபமாகக் கலியாணம் செய்ய ஆசை கொண்டார்.

முருகக்கடவுள் நரைதிரை மூப்புள்ள ஒரு வயோதிபப் பிராமணவடிவத்துடன் வந்து வளையலிருக்கிறது, வளையல் வாங்கலையோ? என்று வள்ளியை நெருங்கினார். வள்ளி துள்ளி ஓடினாள். எனக்குப் பசியாக இருக்கிறது என்றார். கந்தனின் திருவிளையாடலை அறியாத வள்ளி; தேனும், தினைமாவும் கொடுத்தாள். அதைத் திண்டு உருகக்கண்டு எனக்கு விக்குகிறது என்றார். வள்ளி தண்ணி கொடுத்தார். தண்ணியைக் குடித்துவிட்டு எனக்கு மோகம் என்று வள்ளியை நெருங்கி வள்ளியின் கைத்தலம் பற்ற விளைந்தார்.

வள்ளி பயந்து ஓடினாள். முருகன் உடனே ஆனைமுகமும் ஐந்து கரமும், அருளும் குணமும் கொண்ட தனது அண்ணனை அழைத்தார். உடனே பிள்ளையார் யானை வடிவம் கொண்டு வள்ளியின் பக்கத்திலே வந்தார். யானைக்குப் பயந்து வள்ளிமுருகனின் பக்கம் வந்தாள். கிழப் பிராமணவடிவத்தை விட்டு முருகன் ஆறுமுகங்களும், பன்னிரெண்டு கரங்களும், பன்னிரெண்டு தடந்தோள்களும் கொண்ட அழகன் முருகனாகக் காட்சியளித்தான். வள்ளியும் எழிலரசியாகக் காட்சியளித்தாள். யானை முகத்தையுடைய ஐங்கரக் கடவுள் வள்ளியைக் கலியுகவரதன் கந்தனுக்குத் திருமணம் செய்து வைத்தார். கந்தக்கடவுள் வள்ளியைத் திருமணம் புரிந்ததால் தேவானை முருகன் மீது கோபம் கொண்டாள்.

தேவர்களும் முனிவர்களும் இது தகாது என்றனர். நாரதர் அவ்விடம்தோன்றி; சுந்தர வல்லி. பங்கயவல்லியான இருவரும் முருகனைக் கணவனாக அடையத் தவம் செய்தனர். இவர்கள் வள்ளி. தெய்வானையாகப் பிறந்திருந்தமையால் அத்தவப் பயனாகவே திருமணங்கள் நடந்தன என்றார். எல்லோரும் கந்தனின் கருணையைப் புகழ்ந் தேற்றினார் நாம் கந்தனின் கருணையைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக!

# துணை நீயே முருகா

**பல்லவி**

முருகாவுன் பாதமதில் மலர்குவித்தோம்
தருவாயே வேல்தாங்கி அருளதனை
முருகாவுன் ...

**அனுபல்லவி**

நாமங்கள் பலவுண்டு நாவார நாம்துதிக்க
தாமதம் கொள்ளாதே துணை நீயே!
முருகாவுன் ...

**சரணம் I**

பானூறு பரவசமாய் பக்தரெலாம் பாடி
பூனூறு கர்மேந்தி பட்டோடு கூடி
தேனூறும் இசைவந்து தெவிட்டாது செவிநுழைய
தானுறையும் நல்லைப்பதி தேடிடுவர் பலம் நீயே
முருகாவுன் ...

**சரணம் II**

தேரூரும் வீதியிலே தாங்கி வடம்பிடித்து
தோகை மயிலவனின் தூயநாமம் உளமிருக்க
வானூர்தி ஆயிரமாய் வண்ணமலர் சொரியும்
வீற்றிருந்து அடியவர்கள் வீழாது பாருமையா!
முருகாவுன் ...

**கலைப்பரிதி கே.ஆர்.திருத்துவராஜா**

# சங்க காலத்தில் முருக வழிபாடு

**சைவப்புலவர் செ.பரமநாதன்**
தாவடி

சமயம் என்ற சொல்லின் பொருள் விரிந்து பரந்து சமையல் ஆகிவிட்டது என்றால் உணவு உண்ணக் கூடிய அளவிற்கு, பக்குவமாகி விட்டது என்பது பொருள். மனிதனை மனிதனாக்குவதே சமயம் என்று சொல்லலாம். சமயம் என்பது தமிழ்ச்சொல்லாகும்.

தமிழில் உள்ள கடவுள் என்ற சொல்லும் விரிந்துபட்ட பொருளை உடையது. எல்லாவற்றையும் கடந்தது எதுவோ அதுவே சமயமாகும். எல்லாவற்றின் உள்ளேயும் இருப்பது எதுவோ அது கடவுள். கடந்துள்ளது என்று பொருள்படும்.

இந்துசமயக் கடவுள் சிவபெருமானது ஆற்றல் வெளிப்பாடே முருகன் திருவுருவம். மன்மதனை தனது நெற்றிக் கண்ணால் அழித்தார். அதே கண்ணால் குமரனாகிய முருகனைத் தோற்றுவித்தார். இறைவனுடைய ஐந்து திருமுகங்கள் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம் என்பனவாகும். இவை முறையே ஆகாயம், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்ற ஐந்து திசைகளை நோக்கியுள்ளன.

1. ஈசானம் : எல்லாவற்றையும் ஆளும் தன்மையுடையது.
2. தற்புருடம் : வேதபரீரம் மானுட சரீரம் ஆகியவற்றில் அதிட்டிட்டு நிற்பது
3. அகோரம் : சாந்தமாக இருப்பது
4. வாமதேவம் : அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு அருளவல்லது.
5. சத்தியோஜாதம்:உயிர்களுக்கு உடல்களைத் தோற்றுவித்து உள்தோன்றி அருளவல்லது.

இந்த முகங்களுடன் கீழ்நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகத்துடன் முருகப் பெருமான் உயிர்கட்குத் தனிப்பெரும் கருணை புரிகின்றார்.

இறைவனுக்கும் உமைக்கும் இடையிலே முருகப் பெருமான் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்புரிகின்றார். அருளை தன்னிடத்தே அடக்கிக் கொண்ட சிவபெருமான் அதனை வெளிப் படுத்துகின்றார். அந்த அருளே உமை வடிவில் ஒளிர்கின்றது. அது பின்னும் விரிந்து குழந்தை வடிவில் பாய்கின்றது. அந்தக் குழந்தையே முருகன். அதுவே, மரம் பூத்துக் கனி குலுங்க நிற்பது போலவே அருளின் பயனை அடைய வைக்கும் திருக்கோலம் சோமஸ்கந்தமூர்த்தி யாகும்.

கௌமாரம் என்ற சமயத்துக்குரிய கடவுள், குமரன் என்பதின் பொருளாகும். பிரமாவாய் உலகத்தைப் படைத்தும், விஷ்ணுவாய் உலகத்தைக் காத்தும் உருத்திரனாய் உலகத்தை அழித்தும் நிற்கின்ற பரஞ்சோதிப் பிழம்பே ஆறு முகப் பெருமான் என்பது முருக உபாசகர்களின் நம்பிக்கையாகும். சிவசொரூபம், சக்திசொரூபம் ஆகிய இரண்டும் சேர்ந்து அமையப் பெற்றவன் சரவண பவனாகும். தெய்வத்தையும் அதன் சக்தியையும் பிரித்து உணரமுடியாதது. அக்கினியும் உஷ்ண

மும் பிரிக்க முடியாதது போல சிவமும் சக்தியும் இணைப்பிரியாதவர்கள். காளிதாச மகாகவி குமார சம்பவத்தில் குமரக் கடவுளின் பெருமைகளைக் குறிப்பிட்டார்.

சிவாகமங்களில் காமிகம், காரணம், சாப்பிர பேதம் முருகனின் வரலாற்றுக் குறிப்புகளை கூறு கின்றன. உத்தர காமிகம் முருகனுக்கு தனிக் கோயில் அமைக்கக் கூடிய முறையை கூறுகிறது. குமாரதந்திரம் என்னும் ஆகம நூல் முழுவதும் முருகனின் வரலாறு, பிரதீட்டை முறை, விழா, பூசை விரதத்தைப் பற்றிய முறைகளைக் கூறுகின்றது.

முருகப் பெருமானின் மகிமை இதிகாசங்களில் வருகின்றது. இராமாயணத்தில் விசுவாமித்திரர் இராம லட்சுமணருக்கு கங்கையின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது முருகனைப் பற்றிக் கூறு கின்றார். பாரதம் முருகனை யோக புருஷர் எனப் போற்றுகின்றது. குமரனின் பெயர்கள் மகாபாரதத் தில் வனபர்வதத்தில் முப்பத்திரண்டாம் அதிகாரத் தில் தருமனின் வேண்டுகோளுக்கு இணங்க தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. முருகன் தேவ சேனாபதியாகவும் காட்சி தருகின்றான்.

புராணங்களிலும் முருகனின் பெருமை பேசப் படுகின்றது கந்தப்புராணம் பக்திச்சுவை கொட்டும் காப்பியமாக கச்சியப்பர் அவர்களினால் எழுதப் பட்டது. முருகனே குருவாய் உள்நின்று உணர்த்த இந்நூலைப் பாடியருளினார். அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைப் பெறுவதற்கான வழி முறைகளை வகுத்துக் காட்டி நிற்கும் ஒரு நூல் கந்தப்புராணமாகும். திராவிடர்களின் சிந்தனை யில் தோன்றிய உயர் தத்துவமென அறிஞர்களி னால் போற்றப்படும் சைவசித்தாந்த தத்துவத்தின் சிறப்பியல்புகளை எல்லாம் எடுத்து விளக்கும் உயர்ந்த நூலே கந்தபுராணமாகும். கந்தபுரா ணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலு மில்லை என்ற பழமொழி உண்டு. சமய சாத்திரங் கள் எல்லாம் நிரம்பிய பொக்கிஷம் கந்த புராண மாகும்.

முருகப்பெருமானை கலியுகக் கடவுளாகவே தென்னாட்டவர்கள் கருதி வழிபடுகின்றனர். தமிழகத்தில் குன்றுகள் உள்ள இடங்களிலெல் லாம் முருகன் ஆலயங்களை அமைத்து வழிபட்டு வருகின்றனர். முருகனே தமிழர்களின் முழுமுதற் தெய்வம் என நம்பிக்கையுடன் வழிபடுகின்றனர்.

முருகப் பெருமானின் பன்னிரு தோள்களும் உயிர் எழுத்தாகவும், பதினெட்டு திருக்கண்கள் மெய் எழுத்தாகவும் முருகப் பெருமானின் திரு முகங்கள் ஆறும் இன எழுத்துக்கள் ஆறு. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் தெய்வமானது கலியுகக் கடவுளாகிய கந்தவேள் பெருமான் காட்சி தருகின்றார்.

ஆதித்த நல்லூரில் கண்டெடுத்த பழைய காலத்து சேவல், மயில் ஆகிய சின்னங்கள் தமிழ் நாட்டில் முருக வழிபாட்டின் தொன்மைக்கு சான்றாக இருக்கின்றன. உயர்ந்து காட்டும் மலை களுக்கு உயர்ந்து விளங்கும் முருகனையே உரிய தெய்வமாகவும் காட்டுகிறது. தொல்காப்பியர் இதனை சேயோன் மேயமைவரை உலகமும் என்று செப்புகிறார். "செவ்வேள்" பள்ளி பாடல்கள் பரிபாடலில் உள்ளது. கலித்தொகையிலும் முருகனின் குறிப்புகள் வருகின்றன. சிலப் பதிகாரம் என்ற காப்பியத்திலும் தமிழ்நாட்டில் ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில் இருப்பதாகப் பாடப்பெற்றுள்ளது.

முருகனிடம் அடியார்களை ஆற்றுப்படுத்தும் நூல் திருமுருகாற்றுப்படை ஆகும். திருமுரு காற்றுப்படை சிறந்த பக்தி இலக்கியமாகும். இதில் முருகனின் ஆறுபடை வீடுகள் போற்றப்படு கின்றன. கலித்தொகை, அகநானூறு, புற நானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலெல்லாம் முருகன் பெருமை பேசப்படுகின்றன.

குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையவ

னாகவும் அவர்களுடைய இன்ப துன்பங்களிலும் ஈடுபாடு உடையவனாய் விளங்குகின்றான். சங்க காலத்து மக்கள் முருகனைப் போர்த் தெய்வமாக வும் வருணித்தனர்.

சங்ககாலத்தின் பிற்பகுதியில் ஆரிய வழிபாட்டு முறைகள் தமிழ்நாட்டில் புகுந்தன. ஆரியக்கடவுள் சுப்பிரமணியன் தமிழர்களின் கடவுளான முருக னோடு இணைக்கப்பட்டான். குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் குறிஞ்சி நிலத் தலை மகளாகிய வள்ளியை காதலித்துத் திருமணம் செய்தான் என்றே சங்க இலக்கியங்கள் செப்புகின் றன. ஆதியில் வள்ளியே முருகனின் சக்தியாக தமிழர்களால் வணங்கப்பட்டு வந்ததாகவும், ஆரியர்களின் வருகைக்குப் பின் இந்திரனின் மகளாகிய தெய்வானையும் முருகனின் சக்தியாக போற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

முருகனின் கிரியா சக்தியான தெய்வானை யும், இச்சா சக்தியாக வள்ளியம்மையும், ஞான சக்தியான வேலும் திகழுபவை இன்று நாம் முருக வழிபாட்டில் காண்கின்றோம். சங்க காலத்தில் தமிழ்நாட்டில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்த முருக வழிபாடு, சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் பல்லவர் காலம், சோழர் காலத்தின் முற்பகுதி ஆகியவற்றிலும் முக்கியம் இழந்து காணப்பட்டது. பல்லவர் காலம், பக்தி இயக்க காலமாக பரிண மித்தது. சமண, பௌத்த மத ஊடுருவல்களை எதிர்த்து சைவமும், வைணவமும் போராட வேண்டிய ஒரு நிலை இக்காலத்தில் ஏற்பட்டது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இயக்கத் தின் ஊடாக தமது சமயத்தை வளர்க்க அரும்பாடு பட்டனர்.

சோழர் காலத்திலே சிவ வழிபாடு மேலோங் கிக் காணப்பட்டது என்பதை அக்காலத்தில் கோவில்களும், இலக்கியங்களும், கல்வெட்டு களும் எடுத்துக்காட்டுகின்றன. சோழர் காலத்தில் எழுந்த அற்புதமான காவியமான கந்தபுராணத் தில் சுப்பிரமணியனின் வரலாறு முழுவதும் சித் தரிக்கப்பட்டுள்ளது. சைவசித்தாந்த தத்துவத்தின் உள்பொருளை விளக்கும் கருவூலமாக கந்தப் புராணம் காணப்படுகின்றது. சந்தத் தமிழிலே உள்ளம் உருகும் கவிதைகளால் முருகனைப் பாடித்துதிக்கின்றார் அருணகிரிநாதர். முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடினார் பகழிக்கூத்தர். திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, மயில் விருத்தம், வேல்விருத்தம் என்பன அருண கிரிநாதரால் பாடப்பெற்றவையாகும்.

குமரகுருபரர், தேவராய சுவாமிகள், தண்ட பாணி சுவாமிகள், இராமலிங்க அடிகள் போன்ற வர்கள் முருகனின் அருள் பெற்ற அடியவர்களா வர்.

கதிர்காமத்தில் முருகனோடு எழுந்தருளியுள்ள சக்திகளில் ஒருத்தியாகிய வள்ளி என்னும் பெயர், தூய தமிழ்ப் பெயராகும். இதனால் கதிர்காமத்திற் கும், தமிழர்களுக்குமிடையே உள்ள பழமை யான தொடர்பு புலனாகின்றது. அருணகிரிநாதப் பெருமான் கதிர்காமத் தலத்தின் பெருமையை இறவாமல் பிறவாமல் என்ற பதிகத்தின் ஊடாக வெளிப்படுத்துகிறார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் "அதிரவரும் மாணிக்க கங்கையில் மூழ்கி" என்ற பாடலில் கதிர்காமத் தலத்தின் பெரு மையைத் தெளிவாகக் காட்டுகின்றார். இன்றும் வேட்டுவப் பரம்பரையினரான கப்புறாளைகளே கதிர்காமமக் கந்தனின் பூசகராகவும், அறங்காவ ராயும் விளங்குகின்றார்கள்.

ஆகம மரபுக்கு உட்பட்ட முருகன் வழிபாடே தமிழகத்தில் நிலவி வருகின்றது. இங்கு பிராமிய வழிபாட்டுடன் கூடிய பழைய தமிழ் மரபிலே பெரும்பாலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் முருகன் ஆலயங்களிலெல்லாம் வாயைத் துணியால் கட்டியே பூசைகள் நடைபெறுகின்றன.

ஈழநாட்டிலே முருகன் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள் பலவற்றில் முருகனை வேலில் ஆவாகனம் செய்து வழிபடும் முறையே இன்றும் இருந்து வருகின்றது. சிலப்பதிகாரத்தில் வரும்

வேற்கோட்டம் என்ற தொடர் தமிழ்நாட்டில் வேல் முருகனாக வழிபட்ட வரலாற்றை எமக்குக் காட்டுகின்றது. வேலும். மயிலும் துணை என்பதே முருக அடியார்களின் தியான மொழியாகும். முருகனின் கையிலிருக்கும் வேலாயுதம் உயிர்களின் வினைகளை அப்புறப்படுத்தி உண்மையாக பக்தியை அறிவதற்கு கருவியாக அமைகின்றது. ஞானசக்தியாகிய வேலைத்தாங்கிய முருக வேளை ஞானத்தலைவனாகப் போற்றுகின்றனர்.

புவனேகபாகு மன்னனால் கட்டப்பட்ட நல்லூர் முருகன் ஆலயம் போர்த்துக்கீசரினால் இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டது. பின்பு கந்தப்புராணப் படனம் நடக்கும் வேற்கோட்டமாக ஆரம்பிக்கப் பட்ட மடாலயமே இன்று நல்லூர் கந்தசாமி கோவிலாகக் காட்சி தருகின்றது. இப்படி ஈழத் திருநாடு முழுவதுமே முருகன் ஆலயங்களே செறிந்து காணப்படுகின்றன. முருக வழிபாட்டை உலகம் முழுவதும் பரப்பிய பெருமை நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிமாரையே சாரும். கொழும்பு மாநகரத்தில் வருடாவருடம் இவர்கள் சிறந்ததோர் வேல்விழாவை நடத்தி வருகிறார்கள்.

மூவிரு முகங்கள் போற்றி என்ற பாடலின் இறுதிவரியில் திருக்கைவேல் போற்றி போற்றி எனப் பாடி முடிக்கிறார் கந்தபுராணம் எழுதிய கச்சியப்ப சிவாச்சாரியர். இருபதாம் நூற்றாண்டில் புரட்சிக் கவியாகிய பாரதியார் வேலவனைத் துணைக் கொண்டால் நமது பகையெல்லாம் தூரவிலகிவிடும்; என்று காட்டுகின்றார். வெற்றி வேலன் அவனுடைய வீரத்தினைப் புகழ்வோரை சுற்றி நில்லாதே போ. பகையே. துள்ளி வருகுது வேல். என்ற பாரதியின் பாடல் வடிவேலனின் வேல் நமது பகையை அறுத்து நமக்கு நல் வாழ்வைக் காட்டும் திசைகாட்டி என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

வாழ்க முருகன் புகழ்! வளர்க! முருகன் அருள்!

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு

22வது நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டு விழா 11.08.2014 (திங்கள்) அன்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.செ.பிரணவநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது மலரின் ஆய்வுரை யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

– பதிப்பாசிரியர்

# சுப்பிரமண்ய புஜங்கம்

பி. என். சுதர்ஷன்

ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாக இருப்பவர் ஆறுமுகப் பெருமான். இந்தத் தகவலைப் பல விதங்களிலும், சங்ககால நூல்கள் விரிவாகவே விவரிக்கின்றன. இதிகாசங்களிலும், புராணங் களிலும் முருகப்பெருமானின் மகிமை விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முருகப்பெருமானின் அரு ளாடலை விளக்கும் பிள்ளைத் தமிழ் நூல்களோ, அளவில் அடங்காதவை.

அப்படிப்பட்ட ஆறுமுக வள்ளலைப்பற்றி, ஆசார்ய புருஷரான ஆதிசங்கரர் ஓர் அற்புதமான நூலைப் பாடியிருக்கிறார். அந்த நூலின் பெயர் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய புஜங்கம். 33 பாடல்கள் கொண்ட அந்த நூலுக்கு மிகவும் பெரியவரான ஒருவர், அபூர்வமான உரையை எழுதியிருக் கிறார். அவர்...

காஞ்சி காமகோடி பீடத்திலும், சிருங்கேரி சாரதா பீடத்திலும் ஆஸ்தான வித்வானாக இருந்த வர். சாஸ்த்ர ரத்னாகரம் என்னும் உயரிய விருது பெற்றவர். அவருடைய தகுதியையும், உயர்வை யும், பற்றற்ற தன்மையையும் உணர்ந்ததால், மரியாதை காரணமாக யாருமே அவர் பெயரைச் சொல்லமாட்டார்கள். தேதியூர் பெரியவா என்று மட்டும் தான் கூறுவார்கள். எதிர்காலத் தலைமுறைக் குத் தெரியவேண்டும் என்ற ஒரே காரணத்துக் காகவே அவரது பெயர் இங்கே எழுதப்படுகிறது.

சாஸ்திர ரத்னாகரம் தேதியூர் ப்ரமஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்கள் என்று உரை நூல்கள் அவரது பெயரைக் குறிப்பிடு கின்றன.

மிகுந்த உயர்வும் எளிமையும் கொண்ட அவர், மந்திர ஸித்திகள் பல பெற்றவர். இந்நூலுக்கு உரை எழுதும்போது, முதல் பாடலுக்கான உரையிலேயே, இந்த ஸ்துதியானது ஒரே ஆவர்த்தி பாராயணம் செய்த மாத்திரத்தில் தீராத வியாதிகளையும் போக்கடிக்கக்கூடியது. பூத, பிரதேச, பிசாச உபாதைகள், இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்கிறவர்களின் அருகிலேயே அண்டாது. இந்த ஸ்துதியினால் குஷ்டங்கள், குன்மரோகம், க்ஷயரோகம், வலிப்பு, இழுப்பு முதலான தொற்று வியாதிகள் எல்லாம் பறந்து போய்விடும்.

பன்னீர் மரத்தின் இலையில் விபூதியை வைத் துக்கொண்டு, ஷண்முகனை தியானம் செய்து கொண்டு, இந்த புஜங்கத்தை ஒரு தடவை பாராயணம் செய்து, அந்த விபூதியை அணிந்து கொள்வதால், சகலவிதமான பீடைகளும் அடியோடு தொலைந்துவிடும் என உறுதிபடக் கூறியிருக்கிறார்.

மூன்றாவது பாடலான மயூராதிரூடம் எனும் பாடலுக்கான உரையில், வேதங்களே மயிலாக வடிவம் தாங்கி முருகப்பெருமானுக்கு வாகன மாகிச் சுமந்தன என்று விவரிக்கிறார். அதில் கூறப் பட்டிருப்பவை :

அநாதியாக உள்ள சகல வேதங்களும் முருகப் பெருமானைத் துதிக்க முயன்றன. ஆனாலும், யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ என்ற சாஸ்திரப்படி, வாக்குக்கும் மனத்துக் கும் எட்டாததான மகிமையோடு கூடிய முருகப்

பெருமானின் வடிவத்தை வர்ணிக்க இயலாமல், அவ்வேதங்கள் வருந்தின.

இருந்தாலும், எவ்விதத்திலாவது முருகப்பெருமானை அடைந்தே தீரவேண்டும் என்று தீர்மானித்து இந்த அனைத்து வேதங்களும் ஒன்றாகச் சேர்ந்து தங்கள் தவவலிமையால் மயிலாக வடிவம் கொண்டு முருகப்பெருமானுக்கு வாகனமாகி தங்கள் மனோரதத்தைப் பூர்த்தி செய்து கொண்டன. இதை ஸ்கந்தோபநிஷத் முதலான நூல்கள் கூறுகின்றன.

மயூரபாவம் நிகமா: தபஸா ராப்ய ஷண்முகப் உத்வாஹ்ய த்ருப்திம் பரமாம், ஸம்ப்ராபு ஸர்வதா புவி என ஸ்காந்த புராணமும், வேதம்தான் மயில் எனக் கூறுகிறது. (தேதியூர் உரை பக்கம் 13).

இதையடுத்து உபாஸன மஹிமை, சகல வியாதி நிவருத்தி ஷடக்ஷரீ மஹிமை (ஷடாக்ஷரி என்பது தவறு. ஷடக்ஷரீ என்பதே சரி!) குஹதர் சனத்தால் பரம ஆரோக்யம் என்றெல்லாம் விவரித்துக்கொண்டு வந்த இந்நூல் அதன் பின் அபூர்வமான தகவல்களைக் கூறுகிறது. அதாவது, தேவசேனை ஏன் தேவலோகத்தில் வளர்க்கப் பட்டாள், வள்ளி ஏன் குறவரிடையே வந்து வளர்ந்தாள் என்பதற்கான காரியங்களையும், காரணங்களையும் தெளிவாக விளக்குகிறது.

ஷடக்ஷரீ மந்திரம் என்பது எது என்று சொல்லி, அந்த ஆறு எழுத்துக்களும் எதை எதை அருள்கின்றன என்று விவரித்து, ஸனத்குமாரர், நாரத மஹரிஷி, அகஸ்தியர், பிரம்மா, தேவந்திரன், ஸரஸ்வதிதேவி எனும் அறுவரும், ஆறெழுத்து மந்திரத்தை ஆறுமுகனிடமிருந்தே உபதேசம் பெற்றார்கள் என (பக் 29இல்) விவரிக்கிறது இந்த நூல். இஹாயாஹி எனத் தொடங்கும் 18ஆம் பாடலுக்கான உரையில், ஷடக்ஷரீ மஹா மந்திரத்தை ஜபம் செய்யவேண்டிய முறையையும் விவரிக்கிறது. அம்பிகையின் மடியில் அமர்ந்திருக்கும் அழகு முருகனை சிவபெருமான் அழைத்துக் கட்டித்தழுவி ஆனந்தம் அடைந்ததாக அமைந்துள்ள பாடல் இது.

இதை நினைவில் வைத்துக்கொண்டு ஷடக்ஷரீ மஹாமந்திரத்தை ஜபம் செய்யும் முறையைப் பற்றி விவரிக்கும் உரையைப் பார்க்க வேண்டும்.

ஷண்முகனுடைய ஷடக்ஷரீ மஹாமந்திரத்தை மூன்று பாகமாகப் பிரித்துக்கொண்டு, முதல் இரண்டு அக்ஷரங்களை (எழுத்துக்களை) சக்தி கண்டம் என்றும், நடுவில் உள்ள இரண்டு அக்ஷரங்களை, குமர கண்டம் என்றும், கடைசி இரண்டு அக்ஷரங்களை சிவகண்டம் என்றும் பிரிக்கவேண்டும். இவ்விதம் பிரித்துக்கொண்டு, சிவனோடும் சக்தியோடும் முருகப்பெருமானை இணைத்துத் தியானம் செய்து, ஷடக்ஷரீ மஹாமந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்பவர்களுக்கு சகலவிதமான சவுபாக்கியங்களும் ஸித்திப்பதோடு, குமார சுவாமியுடன் சேர்ந்து பார்வதி பரமேஸ்வரனும், (ஸோமாஸ்கந்தர்) ஒரே காலத்தில் தரிசனமும் அளிப்பார்கள் என (பக்கம் 61-62) விவரித்து வழிகாட்டுகிறது இந்நூல்.

திருச்செந்தூரில், பன்னீர் இலையில் வைத்து அளிக்கப்படும் விபூதிப் பிரசாதம் மிகவும் விசேஷமானது. அந்தப் பன்னீர் இலை விபூதியின் மஹிமையை விவரிப்பதோடு, பன்னீர் இலை விபூதிப் பிரசாதப் பழக்கம் விஸ்வாமித்திரரால் வந்தது எனச் சொல்லி, அதற்கான காரணங்களையும் (பக்கம் 82-83) இந்நூல் விவரிக்கிறது. தொட்ட இடமெல்லாம் பக்தியும் ஞானமும் கொட்டிக் கிடக்கும் இந்த ஸ்ரீஸுப்ரஹ்மண்ய புஜங்க உரையாசிரியரான தேதியூர் பெரியவா அவர்கள் மஹாசாஸ்திரக்ஞர் மட்டுமல்ல, நிறைய நூல்கள் எழுதி எதிர்கால தலைமுறைக்கும் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

அவற்றுள் முக்கியமான ஆதித்ய ஹ்ருதயம், ராமாயணம், சவுந்தர்ய லஹரீ முதலான உரை

நூல்கள் மற்றும் அவரே எழுதிய மீனாக்ஷி பஞ்ச தசி எனும் மந்திரப்பூர்வமான நூல் ஆகியவை இன்றைக்கும் பல ஞானிகளாலும் போற்றிப் பாராட்டப்படுகின்றன.

அந்தக் காலத்தில் (1946) இந்த நூலை வெளியிட்டவர்கள் கிரி பிரஸ் எனும் பதிப்பாளர்கள். இந்நூல்கள் எண்: 96. ஜி.என்.செட்டிதெரு, சென்னை 600 017இல் அதே பதிப்பகத்தாரால் பல ஆண்டுகளுக்கு முன் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கந்தசஷ்டி நேரத்தில் இந்த ஸ்ரீஸுப்ரஹமண்ய புஜங்க பாராயணம் ஸர்வமங்கலங்களையும் அருள ஆறுமுகனையே பிரார்த்திப்போம்!

# மேன்னிலைக்கு என்றும் அருள் புரிந்திடுவாய்!

**பல்லவி**

நலங் காத்திடும் வல்லவனே! வள்ளி மணாளனே! - எம்
நல்லூரினிலே அழகுதலம் கொண்டவனே!
நலங் காத்திடும் ...

**அனுபல்லவி**

நல்லையிலே வீற்றிருக்கும் பேரொளியே! - எங்கள்
தொல்லைகள் போக்கிடும் சண்முகனே!
நலங் காத்திடும் ...

**சரணம்**

நல்லூர் பதியின் அலங்காரக் கந்தனே! - நாளும்
நலம் பல அருளிடும் முருகனே! - உன்
நாமம் சொல்லிடவே அகலுதையா
நம்மைச் சூழ்ந்திட்ட பிணிகள் யாவும்
நலங் காத்திடும் ...

மெய்யடியார் மனங்களில் நீயிருந்து - நிதமும்
மெய்மைக்கு என்றுமே துணையிருப்பாய்
மெய்யுருகியுனை தொழுதிட்டவரின் வாழ்வின்
மேன்னிலைக்கு என்றும் அருள் புரிந்திடுவாய்
நலங் காத்திடும் ...

**கண. கிருஷ்ணராஜன்**
**"ஷத்யகி" ஆவரங்கால் கிழக்கு,**
**புத்தூர்.**

# கௌமார வழிபாட்டு மரபில் சக்த்யஸ்த்ரஸ்தாபனம் (வேலாயுதம் பிரதிஸ்டை) செய்யும் முறை குமார தந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு

கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், மட்டக்களப்பு, கல்லடி.

## அறிமுகம்:

சனாதனதர்மமான இந்து சமய வழிபாட்டு மரபில் சைவம், வைணவம், சாக்தம், காண பத்தியம், கௌமாரம், சௌரம் என அறுவகைச் சமயப்பிரிவுகள் காணப்படுகின்றன. அத்வைத மதஸ்தாபகரான ஸ்ரீ ஆதிசங்கர பஹவத்பாதர் சமய நலம் கருதியும் வழிபாட்டு முறைகளைத் தழுவியும் சண்மதங்களை ஸ்தாபனம் செய்து அக்காலத்தில் நிலவி வந்த சமயம் சார்ந்த வழி பாட்டு முறைகளை மேம்படுத்தி வழிபடுத்தியுள் ளார். கௌமார வழிபாட்டின் முக்கிய கடவுளான சுப்பிரமணிய ஸ்வாமியைப்பற்றிய அனைத்து விடயங்களையும் சிறப்பாகவும் விளக்கமாகவும் விதி முறைகளை எடுத்துக் கூறும் நூல் குமார தந்திரம் எனும் ஆகம நூலாகும்.

இந்து சமயத்திலே அநேக சாஸ்திரங்கள் இருந்தாலும் ஆத்மார்த்த பரார்த்த பூஜை விடை யங்களையும் ஆலயத்திலே நடைபெறும் நித்திய நைமித்திய காம்மிய பூஜை முறைகளையும் கர்ணாதி பிரதிஸ்டாந்தம். பிரதிஸ்டாதி உஸ்ச வாந்தம் உற்சவாதி பிராயச்சித்தாந்தம் எனும் கிரியாக்கிரமங்களையும் சிறப்பாகக் கூறும் நூல்கள் சிவாகமங்களேயாகும். லலிதாகமம் எனும் சிவாகமத்தின் துனை நூலான குமார தந்திரம் எனும் ஆகம நூலின் விதி முறைகளுக் கேற்பவே கலியுகக் கடவுளான கந்தக்கடவுளின் (சுப்பிரமண்ய சுவாமி) மேற்கூறிய பூஜை முறைகளும் வழிபாட்டு மரபுகளும் சாஸ்திரோத்த மாக முருகன் கோவில்களிலே பின்பற்றப்படுகின் றன. இதனடிப்படையில் ஒரு முருகக்கடவுளின் கோவிலில் எவ்வாறு சக்த்யஸ்த்திர ஸ்தாபனம் என்று சொல்லப்படுகின்ற வேலாயுத பிரதிஸ்டை செய்யப்படுகின்ற முறைகளை விரிவாகக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும் வேலாயுதம் எனும் போது கர்ப்பக்கிரகத்தில் மூல விக்கிரமாகவோ அல்லது குகாஸ்ரம் எனும் சக்த் யஸ்த்ரமோ ஸ்தாபனம் செய்யும் விதி முறைகளை விரிவாகக் கூறும் பகுதியே சக்த்யஸ்த்ர ஸ்தாபன மாகும்.[1]

## சக்தி அஸ்திரத்தின் முக்கியத்துவம்

எல்லா உலகத்திற்கும் நன்மையை கொடுப்ப தற்கும் யாவரையும் காப்பதற்காகவும் உலகத்த வர்களால் வணங்கப்படுகிறதும் ஆதி சக்தியிலிரு ந்து உண்டானதுமான சக்தியே அஸ்திரமாகும்.[2] எல்லைத் தேவர்களின் இருப்பிடமாயும் எல்லாத் தேவர்களினதும் ஸ்வருபமாகவும் தேவர்களுக்கு சந்தோசத்தைக் கொடுப்பதும் சக்தி அஸ்திரமாகும். சக்தி அஸ்திரத்தில் இச்சாஞானக்ரியா சக்தியாகிற மூன்று பிரிவுகளையுடையதும். மூன்று தத்துவங் களும் மூன்று அக்கினி ஸ்வரூபங்களும் இச்சா சக்தி மேல் நோக்கிய பத்ரம் ஞான சக்தி நடுப் பத்திரம் க்ரியாசக்தி கீழ் நோக்கிய பத்திரங்களும் எனும் அமைப்பும் நான்கு வேதங்களின் வடிவ மாகவும் சக்தியஸ்த்திரம் விளங்குகின்றது.[3] ஆகையால் அதீத முயற்சியுடனும் சிரத்தையுட னும் சக்தியஸ்திரத்தை ஸ்தாபித்து பூஜிக்க வேண்டும்.

**சக்த்யஸ்ரம் அமைக்க வேண்டிய முறை**

கருவறைக்கு சமமான உயரமுடையது உத்தமமான சக்த்யஸ்திரமாகும். அதில் ஒரு பாகம் குறைவான அளவுடையது மத்யமமாகும். ஏழில் ஒருபாகம் குறைந்தது அதமமாகும். மூன்று சக்திகளில் (இச்சாஞானக்கிரியா) நான்கு அரத்தி உயரமுடையது உத்தமமென்றும், மூன்று அரத்தி உயரமுடையது மத்திமம் என்றும் இரண்டு அரத்தி உயரமுடையது அதமமென்றும் கூறப் படுகின்றது. இவ்வாறு அமையும் அஸ்திர மானது தங்கம் வெள்ளி தாமிரம் பஞ்சலோகம், இரும்பு, கர்ச்சிலை ஆகியவற்றில் ஒரு பதார்த்தத்தினால் வடிவமைக்கப்பட்டு அரசன், யஜமான் இவர்களு க்கு அநுகூலமாக செய்வது யெளகிக சக்த்யஸ்ரம் எனவும் அரசாஸ்கத்திற்கும் ராஜ்ஜபரி பாலனத் திற்கும் செய்வது லெளகிக சக்த்யஸ்ரம் எனவும் கூறப்பட்டுள்ளது[4].

நூறு பாகமாக அமையும் சக்த்யஸ்திரத்தில் பத்ரம், பத்மம், நாற்கோண வடிவம், முக்கோண வடிவம், கூர்ப்பாக அமையும் நுனி, தளம், உருண்டை வுடிவமான கீழ்பாகம், அடியில் பலகை போன்ற அமைப்பு கோணங்களில் அரசிலை போன்ற அமைப்பு தடிகா எனும் கீழ் சரிவான அமைப்பு ஆகிய அம்சங்களோடு கூடிய தாய் குற்றமற்றதாக நேரானதாக சூலஸ்தாபனத் திற்கு கூறப்பட்ட யோக்கியமான வ்ருஸ்களால் சக்தி அஸ்த்திரமானது செய்யப்பட வேண்டும்.[5]

**பிரதிஸ்டை செய்யப்படும் முறை:**

பிரதிஸ்டைக்குரிய (கும்பாபிசேகம் செய்வதற் குரிய) கிரியாக்கிரமங்கள் செய்யப்படவேண்டும். வுழமையாக செய்யப்பட வேண்டிய கிரியைகள் செய்வதற்காக யாகசாலை அமைக்கப்பட்டு நவாக் கினி அல்லது பஞ்சாக்கினி அல்லது ஏகாக்கினி போடப்பட வேண்டும். குறிப்பாக பிரதான அக்கினி குண்டமானது அறுகோண வடிவமாக அமைய வேண்டும். பூர்வாங்கக் கிரியைகள் உத்தங்கக் கிரியைகள் செய்யப்பட வேண்டும். சக்தியஸ்ர த்தை உத்தராயண காலத்தில் சுக்லபசத்தில் நல்ல முகூர்த்த வேளையில் பிரதிஸ்டை செய்யப்பட வேண்டும்.[6]

சக்த்யஸ்திரத்தை கிராமப் பிரதஸணம் செய்வித்து, நயநோன்மீலனம் (கண்திறத்தல்), ஜலாதிவாசம் (நீரில் வைத்தல்), தான்யாதிவாசம் (தானியத்தில் வைத்தல்) சயனாரோபணம் (படுக்க வைத்தல்) ஆகியவற்றை செய்து சக்த்யஸ்ரத்தை சுற்றி எட்டுக் கலசங்கள் ஸ்தாபித்து நான்கு வேதங் களையும் கற்பித்து யாகசாலை நிறுவப்பட்டு யாக பூஜைகளும் குண்ட பூஜைகளும் செய்யப்பட்டு சயனத்தில் இருக்கும் சக்த்யஸ்திரத்தை எடுத்து வஸ்திரம் களைந்து எண்வகை மண் ஜலத்தால் சக்த்யஸ்திரத்தை சுத்தி செய்து, சுத்த ஜலம் (நீர்) வாசனைத்திரவியங்கள் தீர்த்தம் ஆகியவற்றால் அபிசேகித்து இரண்டு சிவப்பு வஸ்திரங்களால் அலங்கரிக்க வேண்டும். ரசபந்தனம் செய்து குறித்த இடங்ளில் தேவதைகளை நியாயம் செய்து ஸ்தாபிக்க வேண்டும்.[7]

தேவதைகளை ஸ்தாபனம் செய்யுமிடங்கள் கிழக்கில் சிவன், மத்தியில் விஷ்ணு மேற்கில் பிரம்மா, வடக்கில் ஸ்கந்தா, தெற்கில் உருத்திரன், மேற்கில் மஹா வல்லி, கிழக்கில் தேவஸேநா ஆகியோர்களையும் மீண்டும் கிழக்கில் பார்வதி, அக்னேயத்தில் ஸரஸ்வதி, தெற்கில் லக்மி நிருதியில் விநாயகர் மேற்கில் சாஸ்தா, வாயுவில் சூரியன், வடக்கில் பூமிதேவி, ஈசானத்தில் சுமித்தி ரன், ஆகியோர்களையும் அந்தந்த பீஜாஹறாங்களு டன் பத்ம முத்திரை காட்டி கிரமமாக ஸ்தாபிக்க வேண்டும்.[8]

**யாகசாலையில் அக்கினி வளர்க்கும் முறை:**

முறைப்படி அமைக்கப்பட்ட யாகசாலையில் அக்கினி குண்டங்களில் குறிப்பிட்ட அக்கினிகளை ஆவாஹனம் செய்து கிரமமாக அக்கினி கார்யம் செய்ய வேண்டும். வன்னி, கருங்காலி, பில்வம், நாயுருவி, ஸமித், நெய், ஹலிஸ், பொரி, சத்துமா, எள், கடுகு, பயறு, உளுந்து, பால், தயிர், தேன் இவைகளினால் மூலமந்திரம், பிரம்மமந்திரம்,

ஷடங்க மந்திரங்களினால் ஹோமம் செய்ய வேண்டும். 100. 50. 25. என்ற எண்ணிக்கை யாக ஒவ்வொரு திரவியத்தையும் அக்கினியில் இட வேண்டும்.[9] திரவியத்தில் வ்யாஹ்ருதி ஹோமம் செய்து சக்தியின் ஹஸ்தகத்தில் நெய்யால் ஸ்பர்சித்து த்ரயம்பக மந்திரம் பிரம்ம யஞ்ஞாந. மந்திரம் இதம் விஷ்னுரிதி மந்திரம் ஜகத்புவம் மந்திரம் ஆகிய மந்திரங்களினால் 16 ஆகுதிகள் கொடுக்கபட வேண்டும்.[10] ஆவாஹனம் செய்யப்பட்ட தேவதைகளின் மூலமந்திரங்களி னால் 3 ஆகுதிகள் கொடுக்கப்பட்டு சிரோமந்திரத்தி னால் பூர்ணாகுதி செய்து ஸ்விக்ஷ்டி கிருத ஹோமம் செய்ய வேண்டும்.

**கும்பாபிக்ஷேகம் செய்யும் முறை**

முகூர்த்த வேளையில் யாக பூஜை. ஜயாதி ஹோமம் ராக்ஷ்ட்ர ப்ருச்ச ஹோமம். க்ருத சிரோர்ப்பணம் செய்து மகா பூர்ணாகுதி கொடுக்கப் பட்டு குருவுக்கு பசு. பூமி. வஸ்திரம். தனம் இவை களைக் கொடுத்து ஸ்தாபிக்கப்பட்ட கும்பங்களை சகல மங்கள வாத்தியங்களுடன் ஆலயத்தை வலம் வந்து பிரதிக்ஷ்டா முகூர்த்தத்தில் கும்பாபி ஷேகம் செய்விக்க வேண்டும்.[11]

முன்னர் எந்த இடங்களில். திசைகளில் தேவதைகள் பூஜிக்கப்பட்டனவோ அதே இடங்க ளில் அதே திசைகளில் குஹாஸ்ரத்தில் ஆவாஹ னன் செய்து அதே இடங்களில் கும்ப நீரினால் அபிக்ஷேகம் செய்யப்பட வேண்டும். கும்பாபி க்ஷேகம் செய்து சக்திக்கேற்றவாறு வஸ்திரம் சந்தனம் குங்குமம் இவைகளால் பூஜித்து மஹாகவிஸ் நிவேதனம் செய்யப்படவேண்டும்.[12]

**கும்பாபிஷேகப் பலன்கள் :**

பின்பு பிராமணர்களுக்கும் ஆதரவற்றவர் களுக்கும் ஏழைகளுக்கும் உணவளித்து சாந்தியை ஏற்படுத்த வேண்டும். மேற்கூறிய விதி களை அனுசரித்து எவன் ஒருவன் சக்தி யாஸ்திரத்தை ஸ்தாபனம் செய்கிறானோ அவன் நிச்சயமாக விரைவில் எதிரிகளை வெல்லுகிறான் யுத்தத்திற்கு போக முன்பு அரசன் சக்தியஸ்திர த்தை பிரதிஸ்டை செய்வித்தல் வேண்டும். இதனால் அவன் சந்தேகமின்றி வென்று பெயரை யும் புகழையும் பெற்றுக்கொள்கிறான். நாட்டிலும் கிராமத்திலும் பட்டினி ஏற்படாது மக்கள் சாந்தியுட னும் சந்தோமாகவும் வாழ சக்தியஸ்திரஸ்தானம் அவசியம் செய்யப்பட வேண்டும்.

**அடிக்குறிப்புக்கள்**

1. குமாரதந்திரம் (தமிழ்மொழிபெயர்ப்பு). அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் பழனி. தமிழ் நாடு 2003. பக். 433.
2. மேற்படி நுல் 28.2பக். 433.
3 மேற்படி நூல். 28.3-8. பக். 433-434.
4 மேற்படி நூல். 28.9-15. பக். 434-435.
5 மேற்படி நூல். 28.25-30. பக். 436.
6 மேற்படி நூல். 28.31-34. பக். 437.
7. மேற்படி நூல். 28.35-38. பக். 437-438.
8. மேற்படி நூல். 28.49-53. பக்.439-440.
9 மேற்படி நூல். 28.55-58. பக். 441.
10. மேற்படி நூல். 28.59-62. பக். 441.
11 மேற்படி நூல். 28.63-66. பக். 442-443.
12. மேற்படி நூல். 28.70. பக்.445.

நல்லைக்குமரன் 13வது மலர் (2005) தொடக்கம்
22வது மலர் (2014) ஈறாக நல்லூர் மதி கலர்ஸ் பிறிண்டர்ஸில்
அச்சிடப்பட்டு வருகின்றது.

# வேத இலக்கியங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு - ஓர் அவதானம்

**திருமதி.ஸ்ரீகலா ஜெகநாதன்**
**தலைவர், சமஸ்கிருதத்துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

பஞ்ச பூதங்களைக் கொண்ட இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிய அவதானங்களைக் கூறும் காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள் வேதங்களாகும். ஆன்மீக, பௌதீக அறிவைப் பெறுவதற்கு வேதங்கள் ஆதாரங்களாய் அமைவது பற்றி மனுதர்ம சாஸ்திரம் கூறும். வேதகால ரிஷிகள் இந்த பிரபஞ்சம் பற்றிய தாம் கண்டறிந்த உண்மைகளை செய்யுள் வடிவில் தந்துள்ளனர். அவை மெய்ஞ் ஞானம் எனப்படும். இவை கூறும் உண்மைகள் இன்றைய உலகின் விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகளினின்றும் மாறுபட்டவையல்ல. நம்மைச் சுற்றியுள்ள இயற்கையின் மொத்த அம்சம் சூழல் எனப்படும். இந்தச் சூழல் இரு வகைப்படும். ஒன்று பௌதீகச் சூழல்; மற்றையது பண்பாட்டுச் சூழல் (மனிதனால் உருவாக்கப்படும் சூழல்) பர்யாவரணம் என்ற பதம் சுற்றுப்புற சூழலைக் குறிக்க வடமொழி இலக்கியத்தில் பயன்படுகிறது. வ்ருதாவ்ருதா, அபிவாராஹ, ஆவ்ருதா, பரிவ்ருதாஹ என்ற பதங்களும் சுற்றுச் சூழலைக் குறிக்க அதர்வவேதத்தில் பயன்படுகின்றன.

### இயற்கையுடன் இணைந்த வாழ்வு

மனித வாழ்வு வளம் பெற இயற்கையாற்றல்கள் அவசியம். இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தால் நன்மை பெறலாம். மனிதன் இயற்கையைப் பேணினால் இயற்கையும் மனிதனைப் பேணும். "அக்கினியே நீ எந்தச் செல்வத்தைத் தருகின்றாயோ, எந்த நன்மையைச் செய்கின்றாயோ, அது ஆங்கிரஸ் என்ற பெயரையுடைய உனக்கே வந்து சேரும்" என அக்னி சூத்திரம் கூறுகிறது. வாழ்க்கையின் சுழற்சிப் போக்கை இந்த மந்திரம் எடுத்துக் காட்டுகிறது. இயற்கையும், மனிதனும் ஒருவருக்கொருவர் துணை செய்து வாழ வேண்டும் என்பதே இம் மந்திரம் கூறும் உண்மையாகும். அதர்வ வேதத்தில் இயற்கைக்கு விரோதமாகச் செயல்புரிந்தால் ஏற்படும் தீமைகள் விவரிக்கப்படுகின்றன. பூமி, அக்னி, வாயு முதலியவற்றிற்கு அநுகூலமாக எதையும் செய்யவேண்டும் என்று கூறப்படுகின்றது.

### பூமி

பிரபஞ்சத்தின் மூன்று பிரிவுகளாவன: பிருதுவி, பூமி, அந்தரிக்ஷம் (இடைவெளி) தியௌ (ஆகாயம்) என்பனவாகும். இவற்றுள் பிருதுவி - பூமி; நாம் இயங்கும் இடமாகும். வசுதா (செல்வத்தை வைத்திருப்பவர்) விஸ்வம்பரா (பிரபஞ்சத்தின் பிரதிநிதி) என்ற பெயர்களும் பூமிக்கு உண்டு. இந்தப் பூமியை நாம் நன்கு பேண வேண்டும்.

"எமக்கு செல்வத்தைத் தருகின்ற, நதிகளைத் தாங்குகின்ற, வளத்தைத் தருகின்ற பூமியை நாம் சேதப்படுத்தக்கூடாது".

"பூமித்தாயே உன்னைத் தோண்டி எதை நட்டாலும் அது விரைவில் வளரட்டும். தூய்மைப் படுத்துபவளே, உனது மர்மப் பகுதிகளை சேதப் படுத்தாமல் இருப்போமாக" என அதர்வ வேதம் கூறுகிறது. பூமியை நன்கு காக்க வேண்டும் என்பது பற்றி ஸ்ரீமத் பாகவதம் பின்வரும் கதையைக் கூறுகிறது. ப்ருது மகாராஜன் என்பவன் ஒரு சமயம், பூமி தானியங்களை நன்கு கொடாததால் அதைத் தண்டிக்க விரும்பி வில்லையும்,

அம்பையும் கையில் எடுத்தான். பூமிதேவி பசுவின் வடிவம் எடுத்து ஓடி மறைய முற்பட்டாள். அயோக்கியர்கள் அதிகம் இருந்ததால் தான் உலகிற்கு தான் தானியத்தை அளிக்கவில்லை என்றும், தான் பசு வடிவம் எடுக்க விரும்புவதாகவும், அதிலிருந்து அவன் வேண்டியதைப் பெறலாம் என்றும் கூறினாள். அரசனும் அவ்வாறே ஔஷதிகளையும், தானியங்களையும், ரத்தினங்களையும் அப்பசுவிடமிருந்து பெற்றான் என்றும். பூமி பசு வடிவம் எடுத்த போது அதன் மடியாக நான்கு சமுத்திரங்களும் அமைந்தன என்றும் கூறப்படுகிறது. பூமியைப் பசுவாகவும் ஜனங்களை அதன் கன்றுகளாகவும் உவமித்து "பூமியை நன்கு பேணினால் தான் அது நல்ல விளைச்சலை - பயனை ஜனங்களாகிய கன்றுகளுக்குக் கொடுக்கும்" எனவும் மநு கூறுவது நோக்கத்தக்கது. இன்று மக்கள் தங்கள் சுகபோக வாழ்க்கைக்காக செய்து கொள்ளும் காடழிப்புகள் பூமியை நாசமாக்குகின்றன. கரியமில வாயுவை வெளிவிடும் வாகனங்களில் நெருக்கமாகப் பயணம் செய்தல், மரங்களை வெட்டி வீடுகள் கட்டும் பரப்பளவைக் கூட்டுதல், தேவைக்கு அதிகமான பொருள்களை வாங்குதல் போன்ற செயற்பாடுகளால் பூமியின் இயற்கை வளங்களை நாம் சுரண்டுகிறோம்.

**நீர்**

நீர் வாழ்க்கையின் உயிர் ஆதாரத்துக்கு இன்றிமையாதது. எல்லாத் தாவரபட்சிகள், பூச்சி, புழுக்கள், பறவைகள், மிருகங்கள் எல்லாவற்றினதும் ஆதாரம் நீரே. நீர் மாசடைதல் என்பது ஏரிகள், கிணறுகள், கடல்கள், குளங்கள், நிலத்தடி நீர் என்பன தூய்மை இழப்பதைக் குறிக்கும். நீர்நிலைகள் தூய்மை இழப்பதால் விலங்குகளும், தாவரங்களும், சகல ஜீவராசிகளும் பாதிப்பை அடையும். ரிக் வேதத்தில் வருகின்ற மார்ஜன மந்திரங்கள் தூய்மைப்படுத்துவதற்காக ஓதப்படுபவை. இவை பொதுவாக சந்தியா வந்தனங்களிலும் தெய்வங்களின் அபிஷேக வேளையிலும் ஓதப்படுகின்றன. தண்ணீர் உடம்பைத் தூய்மையாக்குகிறது. அது போல் மனதைத் தூய்மையாக்குமாறு தண்ணீரின் தேவதைகளைப் பிரார்த்திக்கின்றன இம் மந்திரங்கள்.

"தண்ணீரின் தேவதைகளே, உயர்ந்த சுகத்திற்கு காரணமாக விளங்குகிறீர்கள். அத்தகைய நீங்கள் எங்களுக்கு மகிமை பொருந்தியதும், மேலானதுமான நோக்கத்தையும், ஆற்றலையும் அளியுங்கள்."

தண்ணீர் பொழியும் கார் முகிலை பர்ஜன்யசூக்தம் ஒன்று வர்ணிக்கிறது.

"ஓ பர்ஜன்ய தேவனே! நீ நிலத்தில் பெருமழையைப் பொழிவிப்பாயாகுக! கால்வாய்க்கால் எல்லாம் நீர் நிரம்பி ஓடட்டும். ஆகாயத்தையும், பூமியையும் குளிரச் செய்வாய். பசுக்கள் குடிப்பதற்கு நன்னீர் எங்கும் பெருகட்டும்!"

"ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கை கரவேல்
......... வாழ உலகினில் பெய்திடாய்
தீ தின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ...
தேய்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்க
குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து"

என்னும் ஆண்டாள் பாசுரங்களில் இம் மந்திரக் கருத்து பிரதிபலிக்கின்றது. வேதரிஷிகள் சந்தியா வந்தனம், சந்தியா உபாசனம் போன்ற நேரங்களில் ஜலாஞ்சலி செய்து தெய்வங்களைப் ப்ரீதிப் படுத்துகின்றனர். மூன்று தடவைகள் நீரை உட்கொண்டு தெய்வங்களின் மந்திரங்களை உச்சரிப்பது ஜலாசமனமாகும். ஜலத்தில் இருந்து கொண்டு தெய்வ நாமங்களை உச்சரிப்பது ஜலஜபமாகும். இம் முறைகளால் தொற்று நோய்கள் நீக்குவதுடன் உடல் தூய்மையடைவதாக முன்னோர் நம்பினர். சமகாலத்தில் நீர் உட்கொண்டு நோய்களை நீக்கும் முறையினை (Water Therapy) அக்காலத்திலேயே கண்டு பிடித்துள்ளனர். உஷத்கால சிகிச்சை - வெறும் வயிற்றில் நீரை உட்கொண்டால் நோய் மாறும் என்ற நம்பிக்கை வேதகால மக்களிடையே இருந்தது. நோயுற்றவர்களுக்கு

மந்திரித்த நீரைக் குடிக்க கொடுக்க வேண்டும். இது உதக சாந்தி எனப்பட்டது. கங்கை. யமுனை. கோதாவரி. சரஸ்வதி. நர்மதா. சிந்து. காவேரி போன்ற புனித கங்கைகளில் நீராடுதல் பாவத்தை நீக்கும் என்று கருதப்பட்டது.

பொதுவாக பூஜைகளிலும். மங்கல நிகழ்ச்சி களிலும் ஓதப்படும் மந்திர புஷ்ப மந்திரங்கள் தைத் திரீய ஆரண்யத்தில் பின்வருமாறு ஓதப்படுகின் றன.

"யோ அபாம் புஷ்பம் வேத / புஸ்பவான்
ப்ராஜாவான் பசுமான் பவதி / சந்த்ரமா
வா அபாம் புஸ்பம் / புஷ்பவான்
ப்ரஜா வான் பசுமான் பவதி"/

(யார் தண்ணீரில் மலரை அறிகிறானோ அவன் மலர்களை உடையவனாக. மிருகங்களை உடையவனாக. சந்ததிகளை உடையவனாக ஆகிறான். சந்திரனே தண்ணீரின் மலர். யார் இப்படி அறிகிறானோ அவன் சந்ததிகள் உடையவ னாக. மிருகங்களை உடையவனாக ஆகிறான். தண்ணீர். சந்திரன். அக்கினி. காற்று. சூரியன். நட்சத்திரங்கள். மேகம். மழைக்காலம் எல்லாம் இயற்கையின் அம்சங்கள். இவை ஒன்றுக் கொன்று ஆதாரமானவை. இவற்றைப் போற்று வது இயற்கையைப் போற்றுவதாகும்.

### விருட்சங்கள், செடிகள், மூலிகைகள்

பூமியின் மூன்றிலொரு பகுதி காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் நியதி. காடுகள் மழையைத் தருவதுடன் நிலச்சரிவைக் கட்டுப் படுத்துகிறது. மண் அரிப்பைத் தடுக்கிறது. காடுகள் அழிக்கப்படுவதால் புவியில் வெப்பம் அதிகரிக்கும். இதனால் வரட்சி உண்டாகும். வேதங்களிலும் உபநிடதங்களிலும் மரங்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டு. உபநிடதங்களில் ஒரு ரிஷியின் பெயர் பிப்பலாடன் (அரசமரத்தின்பெயர்). அத்தி மரத்துக்கு அற்புத சக்தி இருப்பதாக அதர்வ வேதம் கூறும். (AV.XIX-31) யாகங்களில் அரசமரக்குச்சி. ஆலமரக்குச்சி என்பன பயன்பட்டன. பகவத்கீதை யில் கண்ணன். மரங்களில் நான் அஸ்வத்தம் (அரசமரம்) என்று கூறுகிறார். விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் ஆலமரம் (ந்யக்ரோத) அரசமரம் (அஸ்வத்தம்) அத்திமரம் ஆகிய மூன்றும் விஷ்ணுவின் பெயர்களாக விளங்கி வருகின்றது. மரங்களிலிருந்தும். இலைகளிலிருந்தும் பெறப் படும் மூலிகைகள் நோய் நீக்குவதற்குப் பயன்படு கின்றன. ஔஷதிகளை ரிக்வேதக் கவி தெய்வத் தாய்மார்கள் என வர்ணிக்கிறார்.

"ஔஷதிகளே. நீங்கள் நோயாளியின் நோயை அவனிடமிருந்து பகைவர்களை வெல்லும் உக்கிர மான அரசனைப் போல் நீக்குகிறீர்கள்" என ஔஷதிகளின் ஆற்றல் குறித்து ரிக்வேதம் (10.97.12) கூறுவது நோக்கத்தக்கது.

ரோஹிணி எனும் செடி உடைந்த எலும்பை இணைப்பதாகவும். திப்பிலி. வாத நோய்களை நீக்குவதாகவும். அபாமார்க்கம் வாயையும். பற்க ளையும் சுத்தம் செய்வதாகவும் கூறப்படுகிறது. தேவர்கள் மரங்களிலும். நீர் நிலைகளிலும் மகிழ்ச்சி அடைவதாகக் கூறப்படுகிறது. விறகுக் காக மரங்கள் வெட்டப்படுவது தடைசெய்யப்பட வேண்டும் என்று கூறுவது கவனிக்கத்தக்கது.

### பறவைகளும், விலங்குகளும்

மிருகங்களும். பறவைகளும் இயற்கையுடன் இணைந்த ஜீவராசிகளாக விளங்குபவை. வேத இலக்கியங்கள் மிருகங்களைப் பேண வேண்டும் என்ற கருத்துடையவை. பசு "அக்னயா - கொல் லத்தகாதது என்று சொல்லப்படுகிறது. ஆகாரத்தில் உரிய அளவு நெய் சேர்த்துக் கொள்வதால் புத்தியும். பசும்பால் அருந்துவதால் ஆயுளும். சாஸ்திரத்தில் சொல்லப்படாத காய்கறிகளை உண்பதால் மாமிசமும் வளருகின்றன என மகாபாரதம் கூறுகின்றது.

க்ருதேன வர்த்ததே புத்தி : சஷீரேணாயுஷ்ய வர்த்தனம்

வீட்டு விலங்குகளும். காட்டு விலங்குகளும் ருத் திரன். பூஷன் போன்ற தெய்வங்களால் காக்கப்படு கின்றவையாகக் கூறப்படுகின்றன.

**வாயு**

உயிர் வாழ்க்கையின் ஆதாரத்திற்கு காற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர் ரிஷிகள். தைத்திரிய உபநிடதம்; உடம்பிலிருந்து வளியின் செயற்பாட்டை பிராணன், அபாணன், உதான, வியான, சமான எனப் பிரிக்கிறது. பிராணன் என்ற உள்ளிருக்கும் சக்தி நமக்கு இயங்குசக்தியாக விளங்குவது பற்றி நாராயண சூக்தம், "பிராண னாகிய அந்த அக்னி முதலில் உண்பதாகவும், உணவைப் பிரித்துக் கொடுப்பதாகவும் நிலைத்து நிற்பதாகவும், தான் பழுதுபடாது ஆகவும் நிற்கி றது" எனக் கூறுகிறது. உள்ளிருக்கும் அந்த ரீஷத்துக்குரிய பிரதம அதிதி வாயு. வாயு இடை வெளியை தூய்மைப்படுத்துவதாக ஒரு கவி கூறுகிறார்.

பூமியைப் பாதுகாக்கவல்ல ஒரு படை வளி மண்டலத்தில் இருந்ததாகவும் இந்தப் படை மண்டலத்தை நாசம் செய்தால் பூமிக்கு நாசம் உண்டாகும் என யசுர் வேதம் கூறும் (யசுர் 23/62) விஞ்ஞானிகள் இன்று கூறும் ஓசோன் படை இதுவே என்ற கருத்தை அறிஞர் முன் வைக்கின்றனர். சாந்தோக்கிய உபநிடதம் வளி மண்டலத்திலுள்ள தூசியினை இந்தப் படை மண்டலம் அகற்றுவதாகக் கூறுகிறது.

**யாகம், வேள்வி**

யாகப் புகை மண்டலம் சுற்றாடலைத் தூய் மைப்படுத்துகிறது. பிரபஞ்சத்தின் படைப்பு யக்ஞ மாக புருஷசூக்தத்தில் குறிப்பிடப்படுகிறது. யாகப் புகை வளர்க்கும் சுற்றாடலில் உள்ளவர்கள் நீண்டகால ஆயுளைப் பெறுவார்கள் என்று யசுர்வேதம் கூறுகிறது. யக்ஞத்தில் வளர்க்கும் யாகப்புகை தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உகந்ததாகக் கூறப்படுகிறது. வளிமண்டல மாசி னைத் தூய்மைப்படுத்தவும் யாகப்புகை உதவு கின்றது. பயிர்களை நோயினின்றும் தடுக்க உதவு கின்றது.

இந்தப் பிரபஞ்சத்தையே மாபெரும் வேள்வி யாகக் கண்டனர் வேதகால ரிஷிகள். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஓர் அங்கம். இங்கே நாம் வாழ வேண்டுமானால் நாம் இங்கிருந்து எடுப்பதை திருப்பிக் கொடுக்க வேண்டும். உணவு, தண்ணீர், பிராணவாயு முதலியவற்றைப் பெறுகி றோம். கரியமில வாயு, கழிவுப் பொருட்கள் என்ப வற்றைத் திருப்பிக் கொடுக்கிறோம்.

சரியான துறையில் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு நிலையிலும் இவ்வாறு சிலவற்றை எடுக்கிறோம். சிலவற்றைத் திருப்பிக் கொடுக்கி றோம். அதுவே சமநிலை. வேள்வி - நியதியும் இதுவே. சாதாரண மனிதர்கள் ஒவ்வொருவரும் இந்த நிலையைப் பின்பற்றியாக வேண்டும். நம்மிடம் கொடுக்கப்படுகின்ற அல்லது நாம் உலகிலிருந்து எடுத்துக் கொள்கின்ற அனைத்தும் திருப்பிக் கொடுப்பதற்காகவே என்ற வேள்வி நியதியைப் புரிந்து கொண்டு, வாழ முயற்சித்தால் நன்மை கிடைக்கும். இந்தக் கருத்தையே பகவத் கீதை "நீங்கள் யக்ஞத்தால் தேவர்களைப் பேணுங்கள்; தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களைப் பேணுவார்கள்". இவ்வாறு ஒருவருக் கொருவர் பேணி வாழ்வதன் மூலம் மேலான நன்மைகளைப் பெறலாம் என எடுத்துக் காட்டியது.

**ரிதம்**

இயற்கையின் சீர்மை, ஒழுக்க வாழ்வின் இன்றியமையாமை என்பவற்றின் குறியீடாக ரிதம் என்பது வணக்கத்திற்குரியதாயிற்று. வருணன் இந்த ரிதத்தின் காவலனாக ரிதகோபன் என்று சுட்டப்படுகின்றான். இந்த ஒழுங்குமுறை நியதிக்கு அனைவருமே கட்டுப்பட வேண்டும். இந்த நியதிக்குக் கட்டுப்படாவிட்டால் மரங்கள் பூக்க வேண்டிய காலத்தில் பூக்கா; மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யா. வசந்தம் முதலிய காலங்கள் ரிதத்தாலே உண்டாகின்றன. இந்த இயற்கை நியதியை மீறினால் ஏற்படும் தீங்கினை குமாரசம்பவம் என்ற மகாகாவ்யம் வர்ணிக்கிறது. பார்வதியை மணப்பதற்கு தவம் செய்து கொண்டிருந்த பரமசிவனாரைத் தவத்திலிருந்து

கலைத்து காமத்தீயை உண்டாக்குவதற்காக மன்மதன் அக்காலத்திலே வசந்தகாலத்தை உண் டாக்கினான். அப்போது சூரியன் தென் திசையி னின்றும் விலகி வடதிசையில் சஞ்சரித்தான். கர்ணிகார பூக்கள் நறுமணமின்றி மனதுக்கு இன்பத்தை விளைவித்தன. இயற்கை நியதியை மீறியதால் உண்டான விளைவாக காளிதாசர் சுட்டிக் காட்டுகின்றார்.


### முடிவுரை

நம்முன்னோரின் சுற்றுச்சூழல் சிந்தனைத் திறனை வேத இலக்கியங்களில் காணமுடியும். பிரபஞ்சத்திலுள்ள நிலம், நீர், காற்று, மரம், செடி, கொடி என்ற அனைத்து அம்சங்களும் எமது உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமானவை. அவற்றை நாம் தூய்மையாக வைத்தால்தான் அவற்றிலிருந்து நாம் நன்மையைப் பெறமுடியும். ரிக்வேதத்தில் வரும் சாந்தி மந்திரம் "சிறந்த செயலைச் செய்கின்ற நமக்கு காற்று இனிமையாக வீசட்டும்;" நதிகள் இனிய நீருடன் ஓடட்டும்; செடி, கொடிகள் வளம் பெற்று விளங்கட்டும்; இரவும், பகலும் இனிமையைத் தரட்டும்; பூமி இனிமையைத் தரட்டும்; வானம் இனிமையைத் தரட்டும்; செடி, கொடிகளின் அதிபதியான சந்திரன் இனிமையாக இருக்கட்டும்; பசுக்கள் அதிக பாலைப் பொழியட் டும்" என்று கூறுகின்றது.

சுப்பிரமணிய பாரதியார்; காக்கை, குருவி எங்கள் யாதி - நீள் கடலும், மலையும் எங்கள் கூட்டம் என மொழிவதும் இதனையே தான்.

### உசாத்துணை நூல்கள்


1. ரிக்வேதம் (தமிழ் மொழிபெயர்ப்பு) ம.ரா.ஜம்பு நாதன், அலைகள் வெளியீட்டகம் 2004.
2. அதர்வவேதம் (தமிழ் மொழிபெயர்ப்பு) ம.ரா.ஜம்புநாதன், அலைகள் வெளியீட்டகம் 2004
3. யசுர்வேதம் (தமிழ் மொழிபெயர்ப்பு) ம.ரா.ஜம்புநாதன், அலைகள் வெளியீட்டகம், 2004.
4. வேதமந்திரங்கள் விளக்கவுரை சுவாமி ஆசுதோசானந்தர், ஸ்ரீராமகிருஸ்ணமடம், சென்னை.
5. உபநிஷத்சாரம்; உரையாசிரியர் அண்ணா ஸ்ரீராமகிருஸ்ணமடம், சென்னை, 1951.
6. ஸ்ரீமத்பாகவதசாரம் (இரண்டாம் பாகம்) உரையாசிரியர் அண்ணா ஸ்ரீராமகிருஸ்ண மடம், சென்னை, 1966.
7. மனுதர்ம சாஸ்திரம் 4ஆம் பதிப்பு பதிப்பாசிரியர் ஏ.ஜே.கோபாலன், ஆர்.கே.பிரிண்டேஸ், சென்னை.
8. ஸ்ரீமத் பகவத்கீதை, சுவாமி சித்பவானந்தர், திருச்சி, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், 1972.


நல்லூர்

கந்தசுவாமி

ஆலயத்திற்கான

கொடிச்சீலை

வழங்கும் மரபு

புகைப்படம் 2014

# சைவசமயப் பண்பாட்டில் வேதமும் வேள்வியும்

வ. கோவிந்தபிள்ளை

சிந்திக்கி லேனின்று சேவிக்கி லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகி லேன்மயில்
வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி லேனுண்மை
சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமும் காயக்கி லேசமும் போக்குதற்கே.

– கந்தரலங்காரம்

சைவசமயம் வைதிக சமயம் எனவும் அழைக் கப்படும். அதாவது வேதத்தின் அடிப்படையில் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது. இதனா லேயே "வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு" என்று திருவாசகம் கூறும். இதனைத் திருமுறை களுள் எட்டாந் திருமுறை என்பர். "வேதம் என்ற சொல் ஆரியக் கலப்புக்கு முன்பே தமிழின்கண் பயின்று வந்துள்ளது. இது மண் திணிந்த நிலனும்" என்பதில் "நா அல் வேதநெறி" என்னும் தொடரால் அறியப்படும். வேதம் என்னும் தமிழ்ச் சொல் "வித்" தென்னும் அடியிலிருந்து தோன்றி யது என்றும் அறிவு விளங்குவதற்குக் காரணமாக விருக்கும் அருள் நூலே வேதம் என்றும் கூறுவர். இதனைத் தொடர்ந்து ஆக்கப்பட்டதே "ஆகமம்" ஆகும். ஆகமம் எனும் சொல் பதிவாக்கியமாதலின், ஆகமமென்னும் சொல்லி ஆ வென்பது ஞானமும் மலநாசமுமாகும். அதாவது மலத்தை நாசஞ் செய்து ஞானத்தைப் புதுப்பித்து மோட்சத்தைக் கொடுத்தலினால் ஆகமமெனப் பெயராயிற்று என்பர் நூலோர்.

எனவே "வேதம் வேறு வேள்வி வேறு இறைவன் வேறு என்று ஒன்றில் இருந்து மற்றையதைப் பிரிக்க முடியாது என்பதை" "வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு" என்ற சொற்றொடர் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இதே கருத்தினை,

"ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனம்
சாற்றிய ஆகமம் தனக்கு மாங்கது
வீற்றுறத வருவது மன்று மேன்மையால்
ஆற்றவும் நமதிய லறையும் நீரதே"

"என்பெய ரதற் கெனிலினிது தேர்ந்துளோர்
துன்பம தகற்றிடும் தொல் புராணமாம்"

அதாவது வேதம், ஆகமம், புராணம் என்பன வாகிய அனைத்துச் சொற்களும் இறைவன் என்ற பொருளைக் குறிப்பதோடு அவனது இயல்பு பற்றியும் அவை நன்கு தெரிவிப்பனவாகும்.

மேலும்,

"பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவு மேன்மையே
மறைபல சான்றுள வாய்மை யேயவை
அறிஞர்க ணாடியே யவற்றைக் காண்கவே"

என்பதிலிருந்து வேதம், ஆகமம், புராணங்கள் ஆகியவனவற்றுள் கூறப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானவை மறுக்க முடியா தவை என்று கூறப்பட்டுள்ளது.

இன்னும் "நற்றவம் வேள்வி மல்க" என்று கந்தபுராண ஆசிரியர் கூறியதை அடியொற்றி.

"மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக அறங்க ளெங்கும்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவ
மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க"

இப்பாடல் மூலம் வேதமுறைப்படி செய்யும் யாக கருமங்கள் குறைபாடின்றி நிறைக. அவ்வித யாகங்களால் மேகங்கள் சூல் கொண்டு மழை பொழிக் அந்த நீர்ப்பெருக்கினால் எல்லா இடங்கள் தோறும் பல்வகைப்பட்ட வளங்களும் பெருகுக் அவ்வளங்களால் தருமங்கள் எனப்படும் முப்பத்திரண்டும் அபிவிருத்தியாகுக் அவ்வகையான தருமங்களால் ஆன்மாக்கட்கெல்லாம் சுகம் உண்டாகுக. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் கூறப்பட்டுள்ள சைவசமயமானது மேம்பட்டு உலக முழுவதும் நிலைபெறுக் இவ்வகையான கருமங்கள் நிகழும் படி நீதியோடு அரசு செய்யும் மன்னவனது செங்கோல் வாழ்க எனத் தெரிவிக்கின்றார். இதில் இருந்து வேள்வியின் சிறப்பும், அது வேதமுறைப் படி செய்யப்பட வேண்டியதொன்று என்பதை "வேதவேள்வி" என்றும் சுருங்கக்கூறி விளங்க வைத்துள்ளார் பரஞ்சோதி முனிவர். இவ் வேள்வி முறையானது விலக்கப்படவேண்டிய தொன்றா யின் இவ்வாறு துணிந்து கூற முற்படார்.

"இணரெரித் தேவுந் தானே யெரிவளர்ப் பவனுந்தானே
உணவுகொள் பவனுந் தானே யாகிய வொருவன்"

அதாவது பலசுடரையுடைய அக்கினி தேவனும் தானே அக்கினியை வளர்ப்பவனும் தானே அவ்வக்கினி மூலமாக அவிகொள்வோனுந் தானேயாகிய சோமசுந்தரக்கடவுள் என வேள்விக்கு விளக்கம் அளிக்கின்றார் அவர் அத்துடன் நில்லாது மேலும்,

"கவைக்கொழுந்தழ னாச்சுவை கண்டவு னிமையோர்
சுவைக்க இன்னமு தாயின"

அதாவது "பிளவுபடுதல் பொருந்திய கொழுந்து விட்டெரியும் அக்கினி பகவானது நாவினால் ருசி பார்க்கப்பட்ட மாமிசமானது தேவர்கள் புசிக்க இனிய அவிசானது" என்பதாகும். இவ்வித பெறு பேறுகளின் காரணமாகவே வேள்விகள் ஆண்டு தோறும் செய்யப்படுகின்றன் முறைப்படி செய்யப் பட வேண்டியனவுமாயுமுள்ளன.

"புன்மை யாம் பசுத்தடிந்து புரையில் வேள்வி யாற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு சுருதி சொற்ற வாறுபோல்
மன்மதன் தனைப் படுத்து மாதை வேட்டு மற்றதன்
பின்ன ராக நல்கவென்று எண்ணி னான்கொல்
எம்பிரான்"

(பசு — யாகப்பசு எனப்படும். யாகத்திற்கென கொண்டு வந்து கட்டப்பட்ட ஓர் உயிர் புரையில் வேள்வி — குற்றமற்ற வேள்வி சுருதி — வேதம்) என நந்தியந்தேவர் கருதுவதாக கந்தபுராண ஆசிரியர் பாடியுள்ளார். இதில் "பசு" பசு வர்க்கத்தைக் குறிப்பதன்று. யாகத்திற்கெனக் கட்டப்பட்ட ஓர் உயிராகும். "புரையில் வேள்வி" என்பதிலிருந்து வேள்வி குற்றமற்றது என்றும் குற்றம் உறாவண்ணம் ஆற்ற வேண்டும் என்பதையும் குறிக்கின்றது. (இது பின்னர் விளக்கப்படும்) அத்துடன் யாகத்தில் வெட்டப்பட்ட உயிரினை எழுப்புகின்ற தன்மை பற்றியும் சொல்லப்பட்டுள்ளதாக இப்பாடல் தெரிவிக்கின்றது.

இச் செயல் உண்மை என்பதனை உறுதிப் படுத்துவதற்குப் பின்வரும் நிகழ்வினை ஆதாரமாகக் காட்டுகின்றார். அது வருமாறு :

"கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கா
ண்மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையான்
கற்பின்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்"

நறுமணம் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சடாமுடியிலணிந்த தந்தையாகிய சிவபெருமான் தமது திருவிழியினால் மீனக் கொடியுடையவனாகிய மன்மதனைச் சாம்பராகும் படி பார்த்து, கற்பின் வழியில் நிற்கும் அவனது

மனைவியாகிய பெண்யானை போலும் நடையை யுடைய இரதிதேவி தனது குறைகளை விண்ணப் பித்து இரக்க பிறகு உயிர்தந்து காத்தமை போல சம்பந்தர் மதுரை நகரத்திற் சைவத் திருமடத்தில் வீற்றிருக்கையில் சமணர் அத்திருமடத்திற்குத் தீயிட. அவர்கள் கொளுவியதீ கூன்பாண்டியனை வெப்புநோய் பற்றித் துன்புறுத்தும்படி செய்து. அவனது மனைவியாகிய மங்கையற்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கி உயிரளித்துக் காத்த சீர்காழிப்பதியில் அவதரித்த திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளை வணங்குவாம் என்ற இரு சம்பவங்களையும் ஒப்புநோக்கிக் காட்டுகின்றார்.

"வெய்ய தீங்கிது வேந்தன்மேற் றொனும்விதி முறையால்
செய்ய னேதிரு வாலவாய் எனுந்திருபதிகம்
சைவர் வாழ்மடத் தமணர்கள் இட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற் காகெனப் பணித்தார்"
என்று பெரிய புராணம் கூறும்.

அதாவது.

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெமை
பொய்ய ராம்அம ணர்கொழு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியர்க் காகவே"

என்று பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயை ஏற்படுத்தியும். பின்பு மங்கையற்கரசியாரின் வேண்டுகோட்படி.

"மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தி லுள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே"
என்று திருநீற்றுப்பதிகம் பாடி மன்னனுக்கு ஏற் பட்ட வெப்புநோய் நீக்கப்பட்டதாக பெரியபுராணம் கூறுவது வருமாறு :

"திருவளர் நீறு கொண்டு திருக்கையால் தடவத்
தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப் பொய்கையிற் குளிர்ந்த"
என்பார்.

மேலும்.

"வேள்வியுந் தானே வேள்விப் பொருள்களும் தானே
வெய்ய
வேள்விவேட் பவனுந்தானே வேள்விகொ ளிறையுந்
தானே
வேள்வியின் பயனுந் தானே யென்பது விளக்கி
யெம்மான்
வேள்வி செய்தீக்கை யுற்றான் விளங்கருட் சக்தியோடு"
என்று வேள்விபற்றி விரிவாகக் காஞ்சிப்புராணம் விளக்குகின்றது. மேற்கூறப்பட்டவாறு செய்யப்படு வனவே வேள்வி எனப்படும். அதாவது வேள்விக் கெனக் கொணர்ந்து வைக்கப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் இறைவனாக்கப்படல் வேண்டும்.

"இந்நிலை ஒழுகுந்தொல்லோ ரியற்றிய தருமம் வேறும்
அந்நிலை நிறுத்தும் வேள்வி அறம்பல ஆக்கஞ் செய்ய
நன்னிதி யளித்தும் வேள்வி நடாத்தியும் செல்வங் கல்வி
தன்னிரு கண்களாகத் தழைந்திட வளர்க்கும் நாளும்"

"கிருகஸ்நாச்சிரம தருமத்தில் ஒழுகும் முன்னோர் செய்த கருமங்களும் அஃதொழிந்த பிரமசரிய முதலிய மூவகை ஆச்சிரமங்களின் தருமங்களும் அவ்வாச்சிரமங்களை நிலைநிறுத் தும் யாகம் முதலிய பலதருமங்களும் விருத்தி பண்ணும் நிமித்தமாக மிக்க திரவியங்களைக் கொடுத்தும். யாகங்களைச் செய்தும். செல்வமுங் கல்வியும் தமது இருகண்களாக எக்காலமும் உயர்ந்தோங்கும்படி தடாதகைப்பிராட்டியார் வளர்த்ததாகத் திருவிளையாடற் புராணங்கூறும்.

ஆச்சிரமம் நான்கு அவை : பிரமசரியம். கிரகஸ்தம். வானப்பிரஸ்தம். சந்நியாசமெனப் படும்.

(1) பிரமசரியம் - ஆசிரியனை அடைந்து நூலாராய்ந்து நிற்றல்.

(2) கிருகஸ்தம் - மனைவியுடன் இல் வாழ்க்கை நடாத்துதல்.

(3) வானப்பிரஸ்தம் - மனைவியுடனாயினும் தனித்தாயினும் வன சஞ்சாரம் செய்தல்.

(4) சந்நியாசம் - முற்றத்துறத்தல் என்பன வாகும்.

அந்நிலைநிறுத்தும் வேள்வி என்றது பிரம சரியர், இல்லறத்தோர், வானப்பிரஸ்தர், சந்நியாசி கள் செய்ய வேண்டிய வேள்விகளாகும்.

பிரமசரியர் செய்ய வேண்டிய வேள்விகள் : பிரமயாகம், தேவயாகம், பிதுர்யாகம் என மூன்று வகைப்படும்.

(1) பிரமயாகம் - வேதமோதல்.
(2) தேவயாகம் - ஓமம் வளர்த்தல்.
(3) பிதுர்யாகம் - பிதிர்க்கடனாற்றல்.

இல்லறத்தோர் செய்ய வேண்டிய வேள்விகள் ஐவகைப்படும். அவை : பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதுர்யாகம், பூதயாகம் எனப்படும்.

(4) மானுடயாகம் - விருந்தோம்பல்
(5) பூதயாகம் - பலியிடுதல். (1), (2), (3) முற்கூறப்பட்டுள்ளன.

சந்நியாசிகள் செய்ய வேண்டிய வேள்விகள்: கருமயாகம், தவயாகம், செபயாகம், தியான யாகம், ஞானயாகம் என ஐவகைப்படும்.

(1) கருமயாகம் - சிவார்ச்சனை முதலியன செய்தல்.
(2) தவயாகம் - சீரம்வாட சாந்திராயன முதலிய விரதங்களை அனுகூஷ்டித்தல்.
(3) செயபயாகம் - திருமந்திரம் செபித்தல்.
(4) தியானயாகம் - மனம் விகூஷயங்களிற் பொருந்தவொட்டாமல் தாரணையில் நிறுத்தி அகூஷ்டாகூஷ்ட மூர்த்தங் களில் ஒன்றைச் சிந்தித் திருத்தல்.
(5) ஞானயாகம் - ஐவகைப்படும். அவை : ஓதல், ஓதுவித்தல், தெளிதல், தெளிவித்தல், சிந்தித்தல் எனப்படும்.

இவ்வாறானவற்றைக் காட்டிலும் கந்த புராணத்தில் வரும் தக்கனின் கதை மிகவும் இன்றியமையாததும் நன்கு தெளிவுபடுத்துவது மாகும். இவன் பிரம்மதேவரின் முதற்புத்திரன். தந்தையிடத்தே வேதங்களைக் கற்றதோடமை யாது,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று தமிழ்மறையிற் கூறப்பட்டமைக்கமைய அதனை அறிந்தும், உணர்ந்தும் அதன்படி ஒழுகியதன் பேறாக இறைவனிடம்,

"நீணிலப் பெரு வைப்பும் நிகரிலா
வீணை வல்லவ ரேனையர் மேவிய
சேனுதும் மாலயன் ஊரும் திசையுமென்
ஆணைசெல்ல அளித்தருள் செய்தியால்"

என தான் விரும்பிய இன்னோரன்ன பலவரங்க ளைப் பெற்றவன். பின்பு வேதத்தினையும், இகழத் தொடங்கி வேதவிரோதியானான். இவனது தந்தை பிரமதேவர், முனிபுங்கவருட் சிறந்தவ ரான ததீசி முனிவர் போன்றோர் கூறிய புத்திமதி களையும்

"முனிவகேள் பலவும் ஈண்டு மொழிவதிற் பயனென் வெள்ளிப்
பனிவரை யுறையும் நுங்கோன் பகவனே யெனினுமாக
அனையவன் தனக்கு வேள்வி அவிதனை யுதவேன் நீயும்
இனியிவை மொழியல போதி என்செயல் முடிப்பன் என்றான்"

என்று புறந்தள்ளி,

"ஒப்பில் நூல்படித்து உறுமதியோடு பலகோடி
செப்பி னாலும்தம் மனம்புரி செயல் விடார் தீயோர்"

என்பதற்கிணங்க தீயவனாக மாறிய தக்கன் அடைந்த நிலைபற்றிப் பின்னர் அவனது தந்தை யாகிய பிரம்மதேவர் அவனைப் பார்த்து,

"சீரையும் தொலைத்தனை சிறந்த தக்கனாம்
பேரையும் தொலைத்தனை பேதை யாகிநின்
ஏரையும் தொலைத்தனை ஏவல் போற்றுநர்
ஆரையும் தொலைத்தனை அலக்கண் எய்தினாய்"

என்று அவன் அடைந்த துன்பத்தைக் கூறுவது மனங் கொள்ளற்பாலதே.

நிர்வாகத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தாபனக் கோவைகளைப் பயன்படுத்தல் போன்று வேதத்தில் கூறப்பட்டுள்ளவற்றைச் சுருக்கமாக ஏடுகளில் எழுதி வைத்திருப்பர். இது ஒரு கையேடு போன்று வழிகாட்டும் ஏடே பத்ததி ஆகும்.

சுருங்கக்கூறின் வேதத்தில் அதாவது தற்போது இதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் "பத்ததி"யிற் கூறப்பட்டனவற்றுக்கு முரணாக யாகப் பசுவினை (உயிரினை) வெட்டுதல் தடுக்கப்பட வேண்டியதே யன்றி வேள்வியையோ பொங்கலையோ செய்யக் கூடாது எனத் தடுப்பது வேதவிரோதிகளின் செய லாகும் என்பதை எவரும் மறுக்க முடியாது. பத்ததி களிற் சொல்லப்படாத செயல்களைச் செய்தல் வணிக நோக்கத்திற்காகச் செய்யப்படுபவை. அவ் வாறான செயல்கள் ஆலயங்களில் விலக்கப்படல் வேண்டும் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த முனைதல் சாலச் சிறந்ததாகும்.

இதற்கு முதற்கண் ஞானயாகத்திற் கூறப்பட்ட வற்றை முறைப்படி மேற்கொள்ளல் வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மாதோட்டம் என்றழைக்கப்படும் ஊர் பண்டைய நாளில் ஒரு பெருமைமிக்க நகரம். இதனை "மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகர்" எனச் சுந்தரர் தமது "திருக்கேதீச்சரம்" என்னும் திருப்பதிகத்திற் பாடியுள்ளார். மாஞ் சோலைகள் மிக்கிருந்தமையால் (மாந்தோட்டம் என்பதை) மாதோட்டம் என அழைக்கலாயினர். திருக்கேதீச்சரத்திற்கு அயலில் மாந்தை, மளிகைத் திடல் (இப்போது மளிகைத்திடல் மாளிகைத்திடல் என அழைக்கப்படுகின்றது) என்னும் கிராமம் உண்டு. அன்றைய காலம் மளிகைத் திடலில்,

"பன்னிறத்த பல்பெருவிலைப் பட்டெலா மவண
அன்ன பட்டின்மேம் படுவிலைப் பருத்தியு மவண
எந்நி லத்தரும் பொருள்பதி னெழுபுல வணிகர்
மன்னி ருக்கையும் மரும்பெறல் வளனெலா மவணள்"

என்று கூறத்தக்க வகையில் அம்மளிகைத்திடல் சிறப்புற்று விளங்கியது எனின் மிகையாகாது. அவ் வூருக்கு அருகாமையில் அமைந்ததே பார்ப்பார் மோட்டை என்னும் கிராமம். இப்பொழுது அச் சொல்லிலுள்ள இரு ரகர ஒற்றுகளும் நீக்கப்பட்டு "பாப்பாமோட்டை" என அழைக்கப்படலாயிற்று.

இப் பார்ப்பார்மோட்டையில் வாழ்ந்த பிராமணர்கள் ஒரு சமயம் திருக்கேதீச்சரத்தில் பசுக்களை வெட்டி யாகஞ் செய்தனர். அவ்வாறு செய்யப்பட்ட வேள்வி "புரையில் வேள்வி"க்குப் பதிலாக "புரை பொருந்திய வேள்வி"யாகச் செய்யப்பட்டதால் வேள்வி செய்த பிராமணர்கள் சாபத்திற்கு ஆளாகி "பெருக்கமரமாயினர்" என்று கர்ணபரம்பரைக் கதையொன்றுண்டு. இப் பெருக்க மரங்கள் பாப்பாமோட்டை தவிர்ந்த ஏனைய அயற்கிராமங்களிற் காணமுடியாது. பின்வந்தோர், வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் கொண்டு வந்து நட்ட பெருமரமே இப் பெருக்க மரம் என எழுதலாயினர்.

ஞானவேள்வி போன்றதே வேதவேள்வியும் ஆகும். வேதவேள்வி பற்றிய அறிவுடையவர்க ளும் "கேள்விச்செவியின் ஊரைக் கெடுத்தான்" என்ற பழமொழிக்கேற்ப வேதவேள்விக்கும், மிருகபலிக்கும் உள்ள வேறுபாடு தெரியாதவர்க ளும் அறிவில்லாதவர்களும் எல்லா இடங்களி லும் உண்டு.

ஒரு சமயம் வேதவேள்வியில் மிருகபலியை விலக்க வேண்டும் என்ற கருத்துடைய சிலர் ஒன்றுகூடி இரகசியமாகத் தமக்குள்ளே திட்டமிட்டு தாமே முன்னின்று பூசகர் உருவேற்றுத்துடன் நின்று கரங்களை நீட்டியபொழுது ஆட்டுக் கடாவைத் தூக்கிக் கொடுப்பதற்குப் பதிலாக இளநீர் ஒன்றைத் துக்கிக் கொடுத்தனர். அப்போது உயிர் ஒன்றிற்கு ஓதப்படும் இரகசிய மந்திர உச்சாடனத் தின் பின்பு அவ்விளநீர் வெட்டப்பட்டது. இதன் தீய விளைவு பற்றி இப்போதும் அதனை நினைவூட்டு பவர்களுண்டு.

சட்டத்திற்கு முரணாக நடப்பவர்கள் தண்டிக்கப் படுவதுபோன்று வேதம், ஆகமம், பத்ததி ஆகியன வற்றுக்கு முரணாகச் செயற்படுபவர்கள்

தண்டிக்கப்படுவார்கள் என்பது தவிர்க்க முடியாத தாகும். சுருங்கக்கூறின் பாண்டியன் நெடுஞ்செழி யன் போன்றோர் தாமாகவே உயிர் நீத்த சம்பவங் களும் தாமாக அக்கினியில் மூழ்கி இறந்த சம்பவங்கள் பற்றி அறியாதவர்கள் இருப்பின் தக்கார் பால்கேட்டு அறிந்து கொள்ளுதல் நன்மை பயக்கும்.

**முடிவுரை**

வேதம், ஆகமம், புராணம் என்பன உண் மைக்குப் புறம்பானவை என்று எவராலும் கூறவோ நிரூபிக்கவோ முடியாது. எனவே வேள்வி, பொங்கல் செய்பவர்கள் ஏதாவது ஒன்றின் அடிப் படையிலேயே அவற்றைச் செய்தால் நன்மை பயக்கும். அஃதல்லாத முறையில் ஒழுகுபவர்கள் தண்டனைக்குட்படுவார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. பிரமதேவரின் புத்திரனான தக்கன் வேதத்திற் கூறப்பட்டனவற்றைப் புறந் தள்ளி யாகம் செய்ய முற்பட்டதனா லேயே வேத விரோதி என்று பெயர் சூட்டப்பட்டுத் தண்டனைக் குட்பட்டான். வேதவேள்வியை நிந்தனை செய் துழல் ஆதமில்லி என்று ஞான சம்பந்தர் பாடுவார். தற்பொழுது புராணங்களைப் படிப்பவர்களும் அதிற் கூறப்படடிருப்பனவற்றைச் செவிமடுப்பவர் களும் அரிதாகிவிட்டது. இதனாலேயே ஆகமம் சாரா வழிபாடுகள் பல்கிப் பெருகலாயிற்று.

வேள்வியையும், மிருகபலியையும் ஒன்றாக் கக் கூடாது. வேள்வி வேறு மிருக பலி வேறு. முன்னையது ஒரு முறைக்குள் ஒவ்வொன்றை யும், இறைபொருளாகச் செய்து நடைமுறைப் படுத்துவது. "யாகங்கள் மிகமதிப்பு உடையன. வேள்வித்தீயில் பொருட்களை அர்ப்பணம் செய்வது அதன் பலனைத் தருவது ஆகும். இது மறுக்க முடியாத உண்மை என இந்துசமய பண்பாட்டில் பசி எனும் நூலில் கு.கோபிராஜ் குறிப்பிடுகிறார் (பக்.29).

மிருகபலி எதேச்சாதிகாரமாகச் செய்வது. தக்கன் செய்த யாகம் மிருகபலிக்கு நிகரானதே யாகும். அவன் செய்த யாகம் வேதவிதிகளுக்கு உட்படாமையால் "வேதத்திறம் கடந்த வேள்விப் பலி" எனப் பலிக்கு இலக்கணம் கூறுவர். இதனா லேயே வேதவிரோதி எனப்பட்டான். சுருங்கக் கூறின் இறைவனுக்கே விரோதியானான். இவ் வாறு வேதவிரோதியான தக்கனின் பின்வரும் கூற்று ஒவ்வொருவர் மனதிலும் பதிந்திருக்க வேண்டியதாகும்.

"அடியனேன் பிழைத்ததேபோல் ஆர்செய்தார் எனினும்
என்போல
படுவதே சரத மன்றோ பங்கயத் தயனை நல்கும்
நெடியவன் துணையென் றுன்னி நின்பெரு
மாயையாலே
அடிகளை இகழ்ந்தேன் யாதும் அறிகிலேன் தீயேன்
என்றான்"

எனவே தக்கன் தடுத்தமை போன்று முறைப்படி செய்யப்படும் ஒன்றனை (எதுவாயினும்) செய்யக் கூடாதெனத்தடுத்தலும், வேதமேன், பத்ததியேன், விதிமுறைகளேன் என்று அவற்றை விலக்கியும், அவற்றிற்கு முரணாகவும் செயற்படுபவர்கள் தக் கனின் கதியையே அடைவார்களென்பது உண்மை.

**ஆய்வுக்குதவிய நூல்கள்**


1. கந்தலரங்காரம்
2. திருவாசகம்
3. கந்தபுராணம்
4. திருவிளையாடற்புராணம்
5. பெரியபுராணம்
6. சிவராத்திரி புராணம்
7. திருக்குறள்
8. திருஞானசம்பந்தர் தேவாரம்
9. காஞ்சிப்புராணம்
10. இந்துசமயப் பண்பாட்டில் பலி - கு.கோபிராஜ்

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

**சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்**
**(ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்,**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)**

## 01. திருமுறைகளின் சிறப்பு

சைவத்தமிழ் மக்களின் கருவூலமாகத் திகழும் பன்னிரு திருமுறைகள் தமிழ்மொழியில் இறைவனைப் போற்றித் துதிக்கும் தோத்திர நூல்களாகும். அருள் மனம் படைத்த அருளாளர்களின் அகத்தில் தோன்றிய அனுபூதி வாசகங்களாகப் பன்னிரு திருமுறைகள் மிளிர்கின்றன. திருமுறைகள் சமயச் சான்றோரது தெளிவுரைகள். வாட்டத்தைப் போக்கி உறுதியை வழங்கும் ஞானத் தேக்கங்கள். துன்ப உணர்வைத் துடைத்து இன்ப உணர்வை எடுத்து வழங்கும் கருவூலங்கள். அறியாமை, ஆசை ஆகிய கட்டுக்களில் இருந்து நீங்கி உயிர் அருள் நிழல் சேர வழிகாட்டும் அருந்துணைகள். துன்பமும் பொய்மையும் சூழ்ந்த உலகத்தினின்றும் விடுபட்டு உண்மையும் ஒளியும் அன்புமாகிய சுதந்திர அரண்மனைக்குள் உயிரைப் புகுவிக்கும் திசைகாட்டிகள். அலைவும், உலைவும் உடைய மனத்தின் போக்கினை மாற்றி இன்பமும் அமைதியும் வாய்ந்த ஞானப் பெருவெளியை உள்ளத்துள்ளே கண்டு ஒளி விளங்கச் செய்யும் திறன் உடையனவாக பன்னிரு திருமுறைகள் விளங்குகின்றன.

திரு என்பதற்கு திருவருள் என்னும் பொருளையும் முறை என்பதற்கு முறையீடு என்னும் பொருளையும் கொண்டு, திருமுறை என்பதற்குத் திருவருளை வேண்டி எழுப்பும் முறையீடு என்னும் பொருளைக் கொள்ளலாம்.

நாயன்மார்கள் நால்வரும் பக்தி இயக்கத்தை மக்கள் முன் எடுத்துச்சென்ற வகையில் அவ்வியக்கத்தைச் செயற்படவைத்த செயல் வீரருமாவர். தாய்மொழியாகிய தமிழிலே பாடல்களைப் பாடினார்கள். இசைத் தமிழுக்கு முதன்மை கொடுத்து தாம் அருளிய பாடல்களை இசைப்பாடல்களாகத் தந்தார்கள்.

"தமிழ் நாட்டின் பல்வேறு ஊர்களுக்கும் நடைப் பயணம் மேற்கொண்ட இவர்கள் பக்தி உணர்வையும் அதற்குத் தூண்டு கருவிகளான ஆகம, புராண, இதிகாசச் செய்திகளையும் பண்ணமைந்த பாடல்களால் பரப்பியவர்கள். நாயன்மார்கள் மக்கள் வாழ்வில் சமய உணர்வை வளர்த்த பெரியவர்கள்.

உலகம், உயிர், இறைவன் என்ற முப்பொருள்களையும் முறையாகத் தருவன திருமுறைப் பாடல்கள். திரு என்ற சொல் செல்வம், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருள்களைக் கொண்டுள்ளது. உடலுக்கு, இவ்வுலக வாழ்விற்குச் செல்வமாக அமைபவை சிலவாகும். ஆனால் உயிருக்கு செல்வத்தையும், அழகையும், ஒளியையும், பொலிவையும், தெய்வத் தன்மையையும், நல்வினையையும் தர உதவியாக இருப்பன திருமுறைகள். உயிருக்கு ஒழுங்கையும், அதனால் வருகின்ற ஒழுக்கத்தையும் உயிருக்கு இறைவனோடுள்ள உறவையும் உயிர் இறைவனோடு கலக்கின்ற கூட்டையும், அதனால் உயிருக்கு ஏற்படுகின்ற நன்மைகளையும் நூலிலே கூறுவன திருமுறைகளாகும். திருநெறிய தமிழ் என்னும் திருமுறைப் பெருநெறியானது மானுட

சமுதாயத்தின் வாழ்வியல் நெறிகளை வளப் படுத்தும் நோக்கில் அருளியல் அனுபவம் பெற்று இந்நிலவுலகில் வாழ்ந்து சிறந்த அருளாளர்களால் வழங்கப்பெற்ற அருளியற் கொடைகளால் விளைந்ததாகும்.

### 02. பன்னிரு திருமுறைகளில் திருவாசகத்தின் முதன்மை

உலக இலக்கியங்களில் உள்ள தெய்வக் கவிதைகளில் தனியிடம் பெறுவது திருவாசகம். திருவாசகத்தை தெய்வ வாசகம் என்றே கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில் குறிப் பிடுகின்றார். வாதவூரடிகள் அருளிய இத் திருவாச கத் தேன் தொல்லை தரும் பிறவித் தளையை நீக்கும்; அல்லல் அறுக்கும்; ஆனந்த மயமாக்கும். ஓதுவார் கருங்கல் மனமும் கரைக்கும். கண்கள் தொடுமணற் கேணியில் சுரந்து நீர் பாயும். மெய் சிலிர்ப்படையும்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்நெறிப்படுத்தும்.

ஒரு பக்தன் என்ற வகையிலும் கவிஞன் என்ற வகையிலும் மட்டுமல்லாமல் ஒரு தத்துவஞானி என்ற வகையிலும் தமிழ் இலக்கிய உலகத்தின் சிகரத்தில் நிற்பவர் மாணிக்கவாசகர். மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம் பன்னிரு திருமுறை களிலும் பலகாலும் ஓதப்பெற்றுவரும் அருள் நூல். மக்களைப் பிறவிக் கடலிலிருந்து முத்திக் கரையில் சேர்ப்பிக்கும் உயரிய தெப்பம். படிப்போரைப் பரவசப்படுத்தி அவர்களின் உள்ளங்களை நெகிழ் வித்து இறையருளில் தோய்விக்கும் திருமறை.

பேரானந்தப் பெரும் பேற்றைத் தருவதுடன் பிறவி நோயை நீக்கவல்ல அருமருந்தாகவும் திருவாதவூரர் அருளிய திருவாசகம் திகழ்கிறது என்பதைப் பின்வரும் திருக்களிற்றுப்படியார் பாடல் தெளிவாக விளக்குகிறது.

பாய்பரியோன் தந்த பரமானந்தப் பயனைத்
தூய திருவாய் மலராற் சொற் செய்து – மாயக்
கருவாதை யாமறியாவாறு செய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

மதத்தாலும் மொழியாலும், ஒழுக்கத்தாலும், உணர்வாலும் அறிவாலும் வேறுபட்ட மேலை நாட்டவர்களையும் ஈர்க்கும் பெற்றிமை வாய்ந்த நூலாகத் திருவாசகம் திகழ்கிறது. G.U.போப் ஐயா அவர்கள் திருவாசகத்தை அனுபவித்துப் படித்த தோடு அதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த் துள்ளார்.

திருவாசகத்தை தேனெனக் கூறுவர் ஆன்றோர். உடல் நோயை அகற்றி வளமளிப்பது தேன். உயிர் நோயை அகற்றி வளமளிப்பது திருவாசகம். இதில் பதி பசு பாச இலக்கணங்களும் இருவினை ஒப்பு, மலபரிபாகம் முதலிய சைவசித்தாந்தப் பொருள்க ளும் இலக்கியச் சுவைகளும் மலிந்து கிடக்கின் றன.

திருவாசகமாகிய எட்டாம் திருமுறை இறைவ னோடு இரண்டறக் கலந்து நுகரும் பேரின்பத்தை இம்மையிலே பெற்று அதனை முற்றிலும் பெறக் கருதுவார். இப்பிறவி விரைவில் ஒழிய வேண்டு மென்று விருப்பம் கொள்ளுதலை மணிவாசகப் பெருமானின் அனுபவத்தால் இனிது விளக்குகிறது.

திருவாசகம் இறைவனின் தலைமைப் பண் பையும் அவனுக்குட்பட்ட உயிர்களின் அடிமைப் பண்பையும் ஆங்காங்கே விளக்கிச் செல்லும். மாணிக்கவாசகர் உயிர்கள் மலம் நீங்கி இறை வனருள் பெறப் பாடியவர். ஆதலின் திருவைந் தெழுத்தின் எல்லா வடிவங்களையும் தனது பாடலில் குறித்திருக்கின்றார். தூலம், சூக்குமம், காரணம் என்ற மூவகைப் பஞ்சாக்கரங்கள் முறையே சமய, விசேட, நிர்வாண தீக்கைக்கு உரியவை. இவ் வகைத் தீக்கைகள் அவரவர் பக்குவம் பற்றிச் செயற்பாலன. திருவைந்தெழுத் தும் அவரவர் தகுதிபற்றியே விதிப்படி ஓதுதற் குரியது. "விதி என்னும் அச்செழுத்தே" எனச் சிவஞானபோதம் இதனைக் குறிப்பிடுகிறது.

### 03. சமய தத்துவங்களின் எழுச்சி

சைவம் உணர்த்தும் பக்தி நெறியில் உண் டாகும் ஐயப்பாடுகளை நீக்கி அதனை உறுதிப்

படுத்தவே சைவ சித்தாந்த தத்துவம் தோன்றியது. சம்பந்தர் அப்பர் காலத்தில் வேற்றுச் சமயங்கள் சைவத்தை தாக்கினவேயல்லாமல் வேற்றுச் சமய தத்துவ வாதங்கள் அளவை முறைகொண்டு அதனைத் தாக்கவில்லை. இதனால் தேவார முதலிகளின் பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஓரளவே காணப்படுகின்றன. ஆனால் மாணிக்கவாசகர் காலத்தில் சமய தத்துவ வாதங்கள் குறிப்பாக வியாசமுனிவர் செய்த பிரம்மசூத்திர வாதமும், மீமாம்சக வாதமும், நாத்திக வாதமும் அதிகமாகத் தமிழகத்தில் புகுந்து சைவப் பக்தி நெறியைத் தளர்வுறச் செய்தன. இவற்றை மணிவாசகர் தான் அருளிய போற்றித் திருவகவல் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்த ழும் பேறினர்
கற்ற மென்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரமாக வேதியரும்
சரத மாகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாகவே அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதம் சுழித்தடித்து ஆர்த்து
உலோகாயதம் என்னும் ஒண்திறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி

(திருவாசகம், போற்றித் திருவகவல் – 46-57 வரிகள்)

மீமாம்சகமும் மாயாவாதமும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை. மீமாம்சகர், மாயா வாதிகள், நாத்திகர் ஆகியோர் தர்க்கத்தின் அடிப்படையில் தமது கருத்துக்களை நிலைநாட்ட முயன்றனர். இந் நிலையில் சைவமும் அளவை நூல் பிறழாது வாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவர்கள் சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களைக் கையாண்டு தத்துவ வாதம் பேசும் சமயிகளை மறுக்கின்றனர்.

### 04. திருவாசகம் கூறும் முப்பொருள்

இறை, உயிர், தளை என்ற முப்பொருளையே சைவ சித்தாந்தம் நிலையானவை எனக் குறிக்கும். உலகப் பொருள்களில் நாம் அறிந்த பொருள்களை இம் மூன்று பொருள்களில் அடக்கி விடலாம்.

"பல்கலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல்"

என்று சித்தாந்த நூலாகிய சிவப்பிரகாசம் குறிப்பிடுகிறது. திருவாசகம் இறைவனின் தலைமைப் பண்பையும், அவனுக்குட்பட்ட உயிர்களின் அடிமைப் பண்பையும் ஆங்காங்கே விளக்கிச் செல்லும்.

பதி உண்டு: பசுக்கள் உண்டு: அவற்றைப் பிணித்துள்ள பாசம் உண்டு. இம் மூன்றும் அநாதி என்பது சைவசித்தாந்தமாகும். கடவுளுக்குப் பதி எனச் சைவசித்தாந்தம் பெயரிட்டிருக்கிறது. (பதி-தலைவன்). ஒரு பொருள் வேறொன்றால் இயக்கப் படாததாய், தோற்றம் இறுதி இரண்டிற்கும் உட்படாததாய், என்றும் உள்ளதாய் இருந்தாக வேண்டும். அதனைத்தான் அநாதி என்றும், பிறப்பிறப்பற்ற கடவுள் என்றும் சைவசித்தாந்தம் வரையறை செய்கிறது.

இறைவனுக்குச் சொரூபநிலை, தடத்த நிலை என இருவகை நிலைகளைத் திருவாசகத்தின் சிவபுராணம் குறிப்பிடுகிறது. இறைவன் தன்னிலையில் ஒருவனாக நிற்கிறான். உலகை நோக்கி அதனைச் செயற்படுத்தும் நிலையில் அநேகனாக இருக்கிறான். முன்னையது அவனின் சொரூபம் (இயற்கை நிலை). பின்னையது அவனின் தடத்த நிலை (செயற்கை நிலை). சிவ மூர்த்தங்கள் அவனது தடத்த நிலையில் உள்ள பற்பல வடிவங்கள். இதனை "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" எனச் சிவபுராணம் குறிப்பிடுகிறது.

பாசத்தால் பிணிப்புண்ட உயிரைப் பசு என்றும், அப் பசுக்களைப் பிணிக்கும் மலங்களைப் பாசம் என்றும் சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களை மணிவாசகர் பல இடங்களில் கையாளுகிறார். கல்லாத அற்ப அறிவினால் கடையவனாகிய நாய் போன்றவனை எல்லாம் வல்லானாய் வந்து திருவருள் பெற்றிருக்கும்படி பலரும்

காண என்னுடைய ஆன்ம அறிவைப் பற்றியுள்ள மும்மலக் கூட்டினையும் போக்கியருளியவனை எல்லோரும் வந்து வணங்குகின்ற தில்லையம் பலத்தில் கண்டேன் எனக் கூறுகின்றார்.

கல்லாத புல் அறிவின் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் ஆய்வந்து வனப்புஎய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே
(திருவாசகம், கண்ட பத்து, 4ஆம் பாடல்)

ஆணவ மலப்பற்றை அறுப்பதற்கு அப்பரடிகள் தேவாரமும், கன்ம மலப் பற்றை நீக்குவதற்குச் சம்பந்தப் பெருமானின் திருக்கடைக்காப்பும், மாயா மலப் பற்றைப் போக்குவதற்கு சுந்தரரின் திருப்பாட்டும் பெரிதும் உதவுகின்றன. திருவாசகப் பாடல்கள் மும்மல வாசனையைப் போக்குகிறது என்பது அனுபவ பூர்வமான உண்மையாகும். ஆகவே உயிர்க்குள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் போக்குதற்கே அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் அவதரித் தார்கள். மும்மல வாசனையை ஆன்மாவிடமிரு ந்து அகற்றவே மணிவாசகர் அவதரித்தார் என்பது தெளிவாகும்.

மணிவாசகப் பெருந்தகை "மயக்கம் ஆயதோர் மும்மலப் பழ வினைக்குள் அழுத்தவும்" என்று அருளச் செய்திருப்பது மும்மலவாசனையைக் குறிக்கும். அஞ்செழுத்து ஒன்றே மும்மல வாசனை யைப் போக்கும். இதனை "நானேயோ தவம் செய் தேன் சிவாயநம எனப் பெற்றேன்" எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது.

தொண்டர்களே! நமது மும்மலங்கள் கெடும் படி இன்பப் பெருந்தேனைச் சொரிகின்ற இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருப்பெருந்துறையை வாழ்த்துங்கள். வாழ்த்தினால் நம் பிறவிக்காடு வேரோடு கெடும் என்பதைத் திருவாசகத்தில் வரும் பண்டைய நான்மறைப் பகுதியில் வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது. மூவர் தேவாரத்தி லும் மலம் என்று சுட்டப்பட்ட சொல் திருவாசகத் தில் மட்டுமே மும்மலம் என்று சுட்டப்பட்டுள்ளது.

உள்ள மலம் மூன்றும் மாய உகு பெரும் தேன்
வெள்ளம் தரும் பரியின் மேல்வந்த – வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்
வாழ்த்தக் கருவும் கெடும் பிறவிக் காடு
(திருவாசகம், பண்டைய நான்மறை – 2ஆவது பாடல்)

திருவாசகப் பாடல்கள் முப்பொருள் உண்மை யைத் தெளிவாக விளக்குகிறது. சிவபுராணம் சிவப்பரம்பொருளின் பழமையைத் திறம்படக் கூறுகிறது. கீர்த்தித் திருவகவல் சிவபெருமானின் புகழைப் பதியின் பெருமையைக் கூறுகிறது. உலகம் பல்கோடி அண்டங்களாக உள்ளதை திரு அண்டப் பகுதி விரித்துக் கூறுகிறது. இது மும் மலங்களில் பாசத்தைக் குறிப்பிடுகிறது. போற்றித் திருவகவல் உயிர்களின் வரலாற்றைத் தெளிவாக வும் எளிமையாகவும் எடுத்து விளக்குகிறது. இது மும்மலங்களில் பசுவாகிய ஆன்மாவைச் சுட்டுகி றது இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வந்த பின்பே இறைவனை அடையலாம் என்பதைத் திருக்கழுக்குன்றப் பதிகம் விளக்குகிறது. இறைவன் குருநாதனாகத் தமக்கு தீக்கை செய்த பாங்கினை அச்சோப் பதிகம் மிக உருக்கமாக விபரிக்கின்றது.

அநாதியாகவே உயிர் மலத்தைப் பற்றியிருக் கும் செயல் மூல கன்மம் எனப்படுகின்றது. பழ வல்வினை என்பது காரிய கன்மத்தைக் குறிக் கிறது. மும்மலத்திற்குள்ளும் கன்மம் வருகிறது. ஆணவம் போல மூல கன்மமும் அநாதியாதலால் மும்மலத்துக்குள் சுட்டப்படும் கன்மம் மூல கன்மத்தையே குறிக்கிறது. மும்மலங்களால் பின்னர் உண்டாகும் வினை காரிய கன்மம் என்று அழைக்கப்படும். காரிய கன்மம் பின்பு தோன்றுவதால் மூல கன்மமாகிய கன்மத்தை மணிவாசகர் முன்னர் கூறி அடுத்து வல்வினை யாகிய காரிய கன்மத்தைச் சுட்டியிருக்கிறார்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் கள் அஞ்ஞானத்தின் விளைவு. அவைகளுடைய சேர்க்கையால் ஆன்மாவிற்குத் துன்பம் ஏற்படு

கிறது. மும்மல சம்பந்தமாகிய வல்வினைக் கடலில் அழுந்தி நின்ற அடியேனின் தளர்ச்சியை நீக்கித் தன்னைத் திருக்கழுக்குன்றிலே அடியார் களுக்கு எதிரில் ஆட்கொண்ட சிறப்பினை உள்ளம் உருகித் தனது பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

இயக்கிமார் அறுபத்து நால்வரை ஒண்குளம் செய்த
ஈசனே
மயக்கம் ஆயது ஓர் மும்மலம் பழவல்வினைக் குள்
அழுத்தவும்
துயக்கு அறுத்து எனை ஆண்டு கொண்டு நின்
தூமலர்க்கழல் தந்து எனைக்
கயக்க வைத்து அடியார் முனே வந்து காட்டினாய்
கழுக்குன்றிலே

(திருவாசகம், திருக்கழுக்குன்றப் பதிகம் 7ஆவது பாடல்)

## 05. திருவாசகம் காட்டும் முத்தி நிலை

இறைவன் குருநாதனாக வருவதற்கு முன்பு உயிரிடைத்து இருவினை ஒப்பும் மலபரிபாகமும் உண்டாகும் எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறு கின்றன. நல்வினையின் பயனாகிய இன்பத்தை யும், தீவினையின் பயனாகிய துன்பத்தையும் சமமாகவே கருதி விருப்பு, வெறுப்பற்ற நிலையில் ஒழுகுவது இருவினை ஒப்பாகும்.

"உனக்கிலாததோர் வித்து மேல் விளையாமல்
என் வினை ஒத்தபின் கணக்கிலாத திருக்கோலம்
நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே"

என வரும் திருக்கழுக்குன்றப் பாடல் வரிகள் இருவினை ஒப்பு நிலை ஏற்பட்ட பின் இறைவன் தன் திருக்கோலத்தைக் காட்டித் தன்னை ஆட் கொண்டார் என்பதை மணிவாசகர் தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

முத்தி நிலையில் ஆன்மா சிவசமம் என்று சிவசமவாதிகளும் அந்நிலையில் ஆன்மா இறைவனோடு கலந்து இல்லாமற் போகுமென்று சிவாத்துவித சைவர் முதலியோரும் கூறுகின்றனர். முத்தி நிலையில் ஆன்மா உண்டென்றும், அஃது இறைவனோடு ஒன்றாகக் கலந்தாலும் இல்லாமற் போவதில்லை என்றும், பேரானந்தத்தை அனுப விக்கிறதென்றும், அது சிவனுக்கடிமை என்றும் சித்தாந்த சைவர்கள் கூறுகின்றனர்.

"அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்"

எனக் கோயில் திருப்பதிகப் பாடலில் மணிவாசகர் குறிப்பிடுகின்றார். ஆனந்த அனுபவம் உண்டென பதும், பெற்றேன் என்பதால் முத்தி நிலையில் அவர் இருக்கவே செய்வார் என்பதும் பெறப்படு கின்றன. முத்திப் பேற்றில் ஆன்மா உண்டென்றும், ஒன்றாகக் கலந்தாலும் இல்லாமற் போவதில்லை என்றும், அது பேரானந்தத்தை அனுபவிக்கிற தென்றும் சித்தாந்தம் சொல்லும் கருத்தை மணி வாசகரும் சொல்வதால் அவர் சித்தாந்த சைவரே என்பது பெறப்படும்.

முத்தி நிலையிலும் இறைவன் தன்னை ஆள்கிறான் என்பதைச் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட" என்ற அச்சோப் பதிக வரிகள் விளக்குகின்றன. மணிவாசகர் சித்தாந்த சைவக் கருத்துக்களையே தமது பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

## உசாத்துணை நூல்கள்


1. மாணிக்கவாசகர் திருவாசகம் - தருமை ஆதீனம்
2. திருவாசகம் - சுவாமி சித்பவானந்தர்
3. இந்தியச் சிந்தனை மரபு - கலாநிதி நா.சுப்பிர மணியன்
4. எட்டாம் திருமுறை - முனைவர் ஆ.சிவலிங்க னார்
5. திருமுறைகளின் பெருமை - கா.சுப்பிரமணிய பிள்ளை
6. திருவாசகச் சுவை - முரு. பழ.இரத்தினம் செட்டியார்
7. திருவாசகத் தேன் - குன்றக்குடி அடிகளார்
8. திருமுறைச் செல்வம் - சிவ.மகாலிங்கம்
9. ஞான தீபம் - சிவ. மகாலிங்கம்.

# திருவாசகத்தின் இருதயம்

**நயினை ஆ. தியாகராசா**
**தலைவர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பரிபாலனசபை**

திருவாசகத்திற்கு உரை எழுதக்கூடாது என்ற ஒரு வழக்குமுறை. இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம் முதல் இருந்து வந்தது. தமிழ்நாட்டில் இருந்த தமிழ் அறிஞரான பூவனார் தியாகராசச் செட்டியார் புலமைமிக்க ஒரு தமிழ்ப் பெரியார். இவரிடம் ஒருவர், ஐயா நீங்கள் திருவாசகத்திற்கு ஒரு உரை எழுதுங்கள் என்று அன்போடு கேட்டுக் கொண்டார். இதைக் கேட்ட செட்டியார், நீர் இன்னும் ஒருமுறை இப்படிக் கேட்பீரானால் நான் காவிரியாற்றில் வீழ்ந்து உயிர் துறப்பேன்; என்றாராம். செட்டியாரின் இந்தக் கூற்று எவ்வளவு ஆன்மார்த்தமான ஆழமுடையது என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். வாதவூரரிடம் மீண்டும் திருவாசகத்தைப் பாடும்படி கேட்டுப்படி எடுத்தவர் யார்? திரு வாசகத்திற்குப் பொருள் கேட்டதற்குத் தில்லை யில் கிடைத்த பதில் என்ன? திருவாசகத் திற்கு பதவுரை, பொழிப்புரை என்பதில் கவனம் செலுத்தினால் திருவாசகம் ஒரு அனுபவப் பொழிவு என்பதை மறந்து விட நேரும். மனதில் தோன்றும் உள்உணர்வுகட்கு முன்னுரிமை கொடுத்து, திருவாசகத்துள் புகுந்தால் ஒரு துளி யேனும் நாம் அனுபவிக்க முடியாது. திருவாசகம் ஊனினை உருக்கி உள் ஒழி பெருக்கும் ஒரு ஞானதீபம் என்ப தனை படிக்கும்போது உணர்ந்து படிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் பெரு மையும் சுவையும் தெரியும். திருவாசகத்தைப் படிக்கும் போது நமது உள்ளத்தில் எப்படியான உணர்வு ஏற்படுகின்றது, என்ன மாற்றம் ஏற்படுகின்றது; என்பதனை அவர் தம் உணர் வால் நாம் அறிந்து கொள்ள முடியும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்று பாடுவார் பலர்.

இறைவனைத் துணையாகக் கொண்ட மணி வாசகப் பெருமான் பெற்ற பேறுகள் பல. அவர் பெற்ற பேற்றினை நாம் பெறமுடியுமா? முடியாது. என்றாலும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதினால் இறைவன் தோன்றாத் துணையாக நின்று அருள்வான். இது அனுபவத்தில் யாம் கண்ட உண்மை.

மார்கழி மாதம் என்றால் திருவாச மாதம் என்ற ஒரு நிலைப்பாடு நம் நாட்டில் இன்று எங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆலயங்கள் தோறும், மன்றங்கள் தோறும், மார்கழி மாதம் முழுதும் திருவாசக முற்றோதல் மிகச் சிறப்பாக நடந்து வருவது நாம் அறிந்த விடயம். மார்கழி மாதம் என்றால் சிதம்பர நடராசன் பற்றிய சிந்தனை எம்முன் எம்மை அறியாமல் ஏற்படுகின்றது. மணி வாசகப் பெருமானை தன்னுருவில் அணைத்துக் கொண்ட நடராசப் பெருமான் தன் கையால் படி எடுத்த திருவாசக ஏடு கிடைத்த இடம் சிதம்பரம்.

திருவாசகத்தில் கோயில் திருப்பதிகத்தில் வருகின்ற "இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்து" என்ற திருவாசகப்பாடல் சித்தாந்தக் கருத்தினை உள்ளடக்கிய ஒரு மிகச் சிறந்த பாடல். திருவாசகத் தின் இருதயமான பாடல் இது என்று கூறினால் மிகையாகாது. ஆன்மா பந்தபாசங்களில் இருந்து விடுபட்டு படிப்படியாகத் தேய்ந்து, தேய்ந்து அணு வடிவில் பேரின்ப நிலையை அடைகின்றது. என்பதை மணிவாசகர் எமக்கு எடுத்துக் கூறுகின் றார். இக்கருத்தை சித்தாந்த நூல்கள், பல இடங் களில் தெளிவுபடக் கூறி இருப்பதையும் நாம்

தெரிந்து கொள்ள வேண்டும். பாடலைப் படித்து தெளிவு பெறுவோம்.

“இன்றெனக்கருளி இருள் கடிந்துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்றுசென்ற அலறுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருபெரும் துறை உறை சிவனே
ஒன்று நீயில்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறிய நிற்பாரே”


என்ற பாடலைப் படித்தவுடன் அதன் பொருட் சுவை, சொற்சுவை, பக்திநயம் என்பனவெல்லாம் எமக்கு எம் மனதில் படிகின்றது. இது திருவாசகத் தின் தனிச்சிறப்பு.


மாணிக்கவாசகர் சிவபுராணத்தைப் பாடி முடிந்ததும் நமக்கு என்ன சொன்னார்? சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபுரம் அடைவர் இது திண்ணம் என்றார். தேவாரப் பாடல்களைத் தந்த ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரும் தம் வாழ்வியல் அனு பவங்களோடு தேவாரப் பாடல்களைத் தந்தார் கள். ஆனால் திருவாசகத்தை ஓதி உணர்ந்து அனுபவமாக காட்டியவர்கள். வள்ளலார் துறை மங்கலம் சிவப்பிரகாச முதலியார் யோகமுறை அனுபவத்தைக் கொண்ட திருவாசகத்தை நன்று சுவைத்து அனுபவித்த பெரியார்கள். இவர்கள் மேலை நாட்டவரான பாதிரியார் ஜீ.யூ.போப் போன்றவர்கள் திருவாசகம் போன்ற ஒரு ஞான நூலை உலகில் எந்த ஒரு மொழியிலும் நாம் கண்டதில்லை என்று கூறி உள்ளார்கள் என்றால் இந்த அனுபவத்தை எம்மவரும் பெற வேண்டு மானால். சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து பாடவும் பாடக் கேட்கவும் ஏற்படுகின்ற உணர்வும் எப்பொழுது ஒன்றாக லயப்படுகின்றதோ. அப் பொழுது தான் திருவாசகம் என்னும் தேனினைப் பருகிய நிலை தோன்றும். என்று திருவாசகத்தில் ஊறி சுவைத்து மகிழ்ந்தவரான வடலூர் வள்ளலார் இப்படிப் பாடியுள்ளார்.

அவரின் திருவாசகப் பற்றும் படிக்கும்போது பெற்ற சுவையும் ஒரு பாடலாக அமைந்துள்ளது.

“வான்கலந்த மாணிக்க வாசகநின் வானுலகத்தை
நான் கலந்து பாடும் கால் நற்கருப்பம் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனி தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமன் இனிப்பதுவே”

திருமுறைகள் எமக்குக் கிடைத்த விலை மதிக்க முடியாத பெரும் செல்வங்கள். இவற்றை இன்றைய எமது இளம் சந்ததியினர் பேணிப் பாதுகாப்பதுடன் இவற்றை உள்ளார்ந்த விருப்பத்துடன் படித்து. நம் முன்னோர் நமக்களித்த பெரும் செல்வமாகப் போற்ற வேண்டும். காலம் காலமாக பேணிக்காத்த எம் சமய இலக்கிய வரலாற்று நூல்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் பயன்தரும் முறையில் நவீன பாதுகாப்பு வழிமுறைகள் மூலம் பேணப்பட வேண்டும் என்பது நம் கருத்தாகவும் இருக்க வேண்டும்.






நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் – 2014

# திருமந்திரம் - ஒரு மெய்யியல் பார்வை

**த.தவனீசன்** B.A (Hons)
**ஆசிரியர்**
**யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.**

## திருமந்திரத்திற்கு ஓர் அறிமுகம்

சிவபூமி என சிறப்பிக்கப்படும் நம் நாட்டின் தொன்மை வாய்ந்த சமயமாகத் திகழ்வது சைவ சமயமாகும். உலக மக்கள் உள்ளத்திலே தெய்வம் உண்டு என்னும் தெரிவினை வழங்கி அன்பு நெறியில் ஒருமுகப்படுத்தி அறிவு நெறியை வளர்ப் பன சைவசமய அருளாசிரியர்கள் அருளிய பன்னிரு திருமுறைகளாகும். இப் பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரம் ஆகும். திருவாவடு துறை ஆதீனத்தில் உள்ள திருக்கோயிலின் அரச மரத்தின் கீழ் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத் தில் அமர்ந்து இருந்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் கொண்ட திருமந்திர மாலையை உலகுக்கு அருளியவர் திருமூலர் ஆவர்.

சித்தர் பாரம்பரியத்தில் அதிமுக்கியமானவரும் சைவசித்தாந்தத்தை உலகுக்கு வகைப்படுத்தி வழங்கியவர் என்ற பெருமையும் திருமூலரையே சாரும். இமயமலையடிவாரத்தில் சுந்தரனார் என்ற பெயருடன் வாழ்ந்த இச் சித்தர் பெருமான் அகத்திய முனியைத் தேடி தென் பொதிகையை நோக்கி புறப்பட்டார். இப்பயணத்தின் போது மேய்ப்பானை இழந்து வாடும் பசுக்களின் மேல் இரக்கம் கொண்டு மூலனாக மாற்றவதாரம் கொண்ட இவர் இறுதியில் திருவாவடுதுறையி லேயே திருமூலராக வாழ்ந்து முடிவில் சமாதி அடைந்தார் என்று வரலாறு கூறுகின்றது.

அறிதற்கரிய நுன்னிய தத்துவங்களை எல்லாம் திருமூலர் தன் தவயோக, ஞான நிலைக ளால் கண்டு எளிய நடையில் இனிமை மிக இயம்பியுள்ளார். எளிய நடையில் கூறுவதிலும் சில முறைகளினை கையாண்டுள்ளார். உவமை களினை கொண்டு தத்துவக் கருத்துக்களை விளக்குதல், உலகியல் செய்திகளை எளிய நடை யில் கூறுவதுபோல் கூறி அதனுள் தத்துவக் கருத்துக்களை அமைத்தல் முதலிய முறையினை கையாண்டுள்ளார். இறைவழிபாட்டுடன் பாயிரத் தைக்கொண்டு ஆரம்பிக்கும் இந்நூல் ஒன்பது தந்திரங்களாக நாற்சீர் அடிகொண்ட கலிவகை யாப்பினால் அமைந்துள்ளது.

திருமந்திரமாலை எனும் இத் திருமுறை சைவ சித்தாந்த சாத்திரமாகவும் இறைவன் திருவருளைப் போற்றிப்பரவும் தோத்திரமாகவும் விளங்கும் தனிச்சிறப்புடையது. வேத நெறியாகிய உலகியல் ஒழுக்கத்தையும் சைவத்துறையாகிய சிவாகம உண்மைகளையும் இனிய தமிழால் விரித்து விளக்குவது இத்திருமந்திரமேயாகும். உலக மக்கள் எல்லோராலும் பொதுவாக மேற் கொள்வதற்குரிய நல்வாழ்க்கை முறையினையும் சிவநெறிச்செல்வர்களால் சிறப்பாக மேற்கொள்ளத் தக்க ஞானயோக நன்பொருட்களையும் ஒருங்கே விளக்குவதாய்ச் சைவசித்தாந்த மெய்நூற் பொருளை அறிவுறுத்தும் செந்தமிழ்ச் சிவாகம மாகத் திகழ்வது திருமந்திரமேயாகும்.

## திருமந்திரம் அருளப்பட்ட காலம்

கி.பி 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும்

அடியேன்" என போற்றியிருந்ததாலும், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்ற தேவார முதலிகள் பாடியருளிய திருப்பதிகங்களுள் திருமூலர் அருளிய திருமந்திரப்பாடல்களின் சொற்தொடர்களும் பொருட்களும் எடுத்தாளப்பட்டிருப்பதாலும் திருமூலநாயனார் காலம் கி.பி 7ம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பது தெளிவு. பொதுவாகத் திருமந்திரம் வெளியிடப்பட்ட ஆண்டு கி.பி 600 என்று ஆராய்ச்சி விதிகள் கூறுகின்றன. திருமூலர் 3000 ஆண்டுகளுக்கு முன்பே சிவ யோகத்தில் இருந்தார் என்பது கணிப்பு. எனவே இன்றைக்கு ஏறத்தாழ 6000 ஆண்டுகளுக்கு முன்பே திருமந்திரம் தோன்றியிருக்க வேண்டும் என்று எண்ணப்படுகின்றது. எனினும் திருமந்திரம் எழுதப்பட்ட சரியான காலம் எது என்பதை எவரும் அறிதியிட்டுக்கூறமுடியாதுள்ளது.

### முப்பொருள் உண்மை

சைவ சித்தாந்தத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைவது திருமூலருடைய திருமந்திரமாகும். பதி, பசு, பாசம் என்கின்ற மூன்றும் முப்பொருட்கள் ஆகும். இவ் முப்பொருட்களும் அநாதி, நித்தியம் என்பது திருமூலரின் முடிவு. இதனை எளிமையாகத் தனது பாடலடியில் கூறியுள்ளார்.

"பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினை போற்பசு பாசம்அனாதி
பதியினைச் சென்று அனுகாப்பசு பாசம்
பதியறு கில்பசு பாசம் நில்லாவே"

இங்கு பதி, பசு, பாசம் என்று சொல்லப்படுகின்ற மூன்றில் பதியினைப் போன்றே பசுவும் பாசமும் அநாதியானவை எனக் கூறியுள்ளார். எனவே முப்பொருட்களும் அநாதியானவைஇ நித்தியமானவை. பசுவின் பாசம் பதியினைச் சென்று அனுகாது என்றும் பதியினது அருள் பசுவினை அனுகினால் பசுவின் பாசம் நில்லாது என்றும் உணர்த்தியுள்ளார். இதனால் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருட்கள் உண்மையானவை என நிரூபிக்கின்றார்.

### பதி / இறைவன்

திருமந்திரத்தின் பிரதான விடயமே இறைவன் பற்றியது. "ஏகம்ஸத்" உள்ளது ஒன்றே என்கின்றது வேதம். அது போலவே உலகத்துக்கெல்லாம் ஒருத்தனுள்ளான் என்கிறது திருமந்திரம்.

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான் ........."

இங்கு எல்லாம் வல்ல ஒருவன் என்பவன் இறைவனே. அந்த இறைவன்தான் அனைத்துமாயுள்ளான். அனைத்து உயிர்களினையும் காப்பவன், மாசற்ற தூயவன், உயிர்களுக்கெல்லாம் உயிராயுள்ளவன். எல்லா ஆறுகளுக்கும் கடல் பொதுவான புகழிடமாக இருப்பது போல, எல்லா சமயங்களுக்கும் அவன் பொதுவானவன். அவனை உணர வேண்டுமாயின் அனைவரும் தங்கள் மனத்தை ஒடுக்கி உள்ளத்தில் புகுத்தி அங்கே நின்று நிலைத்து தியானித்தால் உணர முடியும் என கூறுகின்றார்.

இறைவன் ஒருவனே. அவனே பாரம்பொருள். அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அவனுக்கு ஈடான பொருள் ஒன்றும் இல்லை என்கின்றது திருமந்திரம். திருமூலரின் பார்வையில் இறைவன் பற்றிய எண்ணக்கருத்து அன்புடன் இணைந்த ஒன்றாகவே. அன்பின் வடிவாகவே நோக்கப்படுகின்றது. அன்பே சிவனின் வடிவம், அன்பும் சிவனும் ஒன்றே. இதை அறியாதவர்கள் அவன் கொடுத்த அறிவை சரியாகப் பயன்படுத்தத் தெரியாத மூடர்கள் ஆவார். அன்பும் சிவனும் ஒன்றுதான் என்பதை உணர்ந்தவர் அவன் படைப்பில் உயர்வு தாழ்வு கருதாமல் எல்லாவற்றையும் அன்பு பராட்டி நேசிப்பார். அப்படி அனைத்தையும் சிவனின் வடிவமாகக் காண்பவர்கள் சிவனிடம் இருந்து வேறுபடமாட்டார்கள். அவர்களும் சிவனும் ஒன்றே. இறைவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு வடிவில் அமர்ந்துள்ளான். உயிர்கள் அனைத்திலும் இவ் அன்பு இயல்பாகவே அமைந்துள்ளது. இவ் அன்பினைப் பேணும் பண்புதான் அருள் என்று சொல்லப்படுகின்றது.

இதனையே திருவள்ளுவர் "அன்பு ஈன்குழவி"" என கூறினார். அன்பு இல்லையேல் அருள் இல்லை. அன்பும் அருளும் இல்லையேல் அனைத்தினையும் பேணும் பண்பாகிய அறப் பண்பும் இல்லை. இதனை கீழ்வரும் திருமூலரின் பாடல்களின் மூலம் உணரலாம்.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்.
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே (270)

அதே வேளை இறைவன் எங்கே உள்ளார் என்ற வினாவுக்கு விடைதேடும் திருமூலர் இறைவன் என்பவன் புறத்தில் எங்கும் இல்லை. ஒவ்வொருவரின் அகத்திலேயே இருக்கின்றான் என திருமந்திரத்தின் ஊடாக நிறுவுகின்றார்.

"முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவார் ஈசனை
நெய்தலைப் பால்போல் நிமலனும் அங்குஉளன்
அத்தகு சோதி அது விரும்பாரே" (2090)

இங்கு இறைவனை முக்தி, ஞானம், முத்தமிழ் ஓசை என பலவாறாக வர்ணிக்கின்றார். திருமூலரின் இந்த ஒவ்வொரு வருணனைக்கும் தனிச்சிறப்புகள் உள்ளன. முக்தி என்பது எல்லையற்ற ஆனந்தநிலை (பரமானந்தம்) என்பதனை குறிக்கும் சொல்லாகும். இறைவன் எந்நேரமும் ஆனந்தநிலையில் இருப்பவன். இறை இயல்பு என்பதே ஆனந்தநிலைதான். எனவேதான் பரமனுக்கு பரமானந்தர் என்னும் ஒரு பெயர் உண்டு. இத்தகைய ஆனந்த நிலையில் இருக்கும் இறைவனோடு இணையும்போது அவனது பக்தர்களுக்கு அந்த ஆனந்தநிலை ஒட்டிக்கொள்ளும். எனவேதான் இறைவனை முக்தி என்கிறார். ஞானத்தின் வடிவாகவும் ஞானத்தின் ஊற்றுக் கண்ணாகவும் இருப்பவன் இறைவன். சித்தத்தின் உள்ளே இருக்கும் இறைவனை உணர்ந்து கொண்டவர்களுக்கு மட்டுமே இந்த ஞானத்தின் சுடர் தெரியும். ஞானவடிவிலான இறைவனை ஊனக்கண்களால் காண முடியாது. ஞானக்கண் திறந்தவர்களால் மட்டுமே ஞானவடிவான இறைவனைக்கண்டு கொள்ளமுடியும் என்ற தத்துவம் இதனுள்ளே பொதிந்து நிற்கின்றது. இந்த பிரபஞ்சத்தில் முதலில் தோன்றியது நாதமே (ஓசை) இந்த நாதத்தில் இருந்தே பூமி, கிரகங்கள், நட்சத்திரங்கள் அனைத்துமே தோன்றின என்பது எமது புராணங்கள் கூறும் கருத்து. எனவேதான் இறைவனை நாதவடிவானவன் என்கின்றனர். அனைத்திற்கும் ஆரம்பமாகவும் ஆதாரமாகவும் இருக்கும் நாதபிரம்மத்தை திருமூலர் "முத்தமிழ் ஓசையை" என்கிறார். இயல் இசை நாடகம் ஆகிய மூன்றிலும் ஓசையாகத் திகழ்பவர் இறைவன் என்பது இதன் பொருள்.

"எத்தனை காலமும் ஏத்துவார் ஈசனை"

ஞானமாக, முக்தியாக, முத்தமிழ் ஓசையாக இருக்கும் இறைவனை புறத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டு காலம்காலமாக மக்கள் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு "ஏத்துதல்" என்ற சொல்லுக்கு உயர்வு படுத்திப்பாடுதல், துதித்தல், வணங்குதல் எனப் பல பொருள்கள் உண்டு. இறைவன் அனைத்திற்கும் உயர்வானவர். மனிதர்கள் ஏற்றிப்பாடுவதாலோ அல்லது புகழ்வதாலோ இறைவனுக்கு ஏதேனும் ஏற்றமோ புகழோ புதிதாக வந்து சேரப்போவ தில்லை.

"நெய்தலைப் பால்போல் நிமலனும் அங்கு உளன்
அத்தகு சோதி அது விரும்பாரே"

பாலினுள்ளே நெய்மறைந்திருப்பது போல இறைவன் (நிமலன்) ஒவ்வொருவருடைய மனதினுள்ளும் மறைவாக நிறைந்திருக்கின்றார். அவ்வாறு மனதினுள் இருக்கும் சோதி வடிவைக் காண விருப்பம் இல்லாதவர்களாய் இந்த மானிடர் இறைவனை புறத்தில் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள் எனத் திருமூலர் கூறுகின்றார்.

இங்கே "நெய்தலைப் பால்போல்" என்ற உவமையின் ஊடாக ஆழ்ந்த தத்துவத்தினை திருமூலர் முன்வைக்கிறார். மனிதனை பால் என்றும், இறைவனை அந்தப் பாலினுள்ளே மறைந்து இருக்கும் நெய் என்றும் உருவகப்படுத்தியிருக்கின்றார். பாலினுள்ளே இருக்கும் நெய் எளிதாக

வெளியே வந்துவிடாது. பாலை உறை ஊற்றி தயிராக்க வேண்டும். அத் தயிரை மத்துக் கொண்டு கடைந்து அதிலிருந்து வெண்ணெ யைத் தனியே பிரித்து எடுக்க வேண்டும். பின்னர் அதனை தீயிலிட்டு உருக்கினால் மட்டுமே நெய் கிடைக்கும். அதுபோலவே மனிதர்களின் உள் ளங்களிலும் நல் எண்ணங்கள் எனும் உறை யினை ஊற்றிப் பக்குவப்படுத்தி தயிராக்க வேண்டும். தயிராகப் பக்குவப்பட்ட மனதை இறை பக்தி எனும் மத்தால் கடையக் கடைய ஞானம் எனும் வெண்ணைய் திரண்டு வரும். தயிரில் இருந்து வெண்ணெய் ஒரு முறை பிரித்து வந்து விட்டால் மீண்டும் அது தயிருடன் கலக்காது. தயிரின் உள்ளேயே இருந்தாலும் அது தயிரோடு ஒட்டாமல் தனியே மேலே மிதந்துகொண்டிருக் கும். இந்த உவமையில் ஆழமான இறைத் தத்துவம் பொதிந்து இருக்கின்றது.

மனிதர்கள் உலக வாழ்க்கையோடு இரண்ட றக்கலந்தவர்கள். பந்த பாசங்கள் என்ற மாயக் கயிற்றால் தண்க்கப்பட்ட அடிமைகள். இந்த நிலையில் உள்ளவர்களால் படமாகவும் சிலையா கவும் இருக்கும் இறை உருவங்களினை மட்டுமே காணமுடியும். முக்தியாக, ஞானமாக, முத்தமிழ் ஓசையாக உள்ளத்தின் உள்ளே சோதியாக இறை வனை உணரமுடியாது. தயிரிலிருந்து பிரிந்த வெண்ணெய்யைப் போல ஞானம் நிறைந்த மனமும் உலக ஆபாசங்களிலிருந்து பிரிந்து தனியே நிற்கும். தயிரினுள்ளே இருந்தாலும் வெண்ணெய் தனியே பிரிந்து நிற்பதை போல இந்த உலக வாழ்க்கையிலேயே உழன்றாலும் ஞானம் உருவான மனம் அந்த உலகத்தோடு ஒட்டாமல் தனியே பிரிந்து நிற்கும். மீண்டும் அது உலக நாட்டங்களில் கவனம் செலுத்தாது.

இறைவன் சோதிவடிவமாக மனதினுள்ளே இருப்பதாகத் திருமூலர் கூறுகின்றார். சோதி எரிய நெய் வேண்டும். நமது சித்தத்தில் நெய் எனும் இறை அனுபவத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க உள்ளே இருக்கும் சோதி வளரும். மேலும் பிரகாசம் அடைய நமது உள்ளமும் உடலும் சோதி மயமாகும். இவ்வாறாக இறைவனது உண்மைத் தன்மையினை திருமூலர் பலபாடல் அடிகளின் மூலம் நிறுவுகின்றார்.

**ஆன்மா / பசு**

ஆன்மா பற்றி சிறப்பித்துக்கூறும் திருமூலர் ஆன்மா அல்லது உயிர் நிலையானது. அழிவற் றது என்கிறார். ஆனால் உடலைவிட்டு நீங்கும் இயல்புடையது. அதன் தொடக்கமும் இறுதியும் அறியமுடியாதவையாக உள்ளன. எனவே ஆதி யந்தம் அற்றவை என கூறப்படுகின்றது. உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இறைவனது உரு வங்கள் என்பது திருமூலரின் வாதம். உயிரில் இறைவன் எவ்வாறு அமைந்துள்ளான் என்பதை இவர் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்.

"பூவினில் கந்தம் பொருந்தியவாறு போல்
சீவனுக்கு உள்ளே சிவமணம் பூத்தது"

ஓர் அழகான உவமையினைக் கொண்டு இத் தத்துவத்தை விளக்கியுள்ளார். உயிருக்கு பூவினை உவமையாகக் கொண்டுள்ளார். மலரி னுள் மணம் நிறைந்து இருக்கின்றது. ஆனால் அது கண்ணுக்குப்புலப்படாது ஆயினும் அம் மணத்தின் காரணமாக அதனை விரும்பாதவர் எவரும் அல்லர். இதுவே திருமூலர் கொண்ட உவமையின் தத்துவவிளக்கம். அப்பூவினுள் மணம் கலந்து இருப்பது போன்று உயிரினுள் இறைவன் கலந்து இருக்கின்றான். எனினும் கலந்திருக்கும் இறைவன் கண்ணுக்குப் புலப் படாதவன். மலரைப்பெற்று மணத்தின் இன்பத் தினை பெறுதல் போன்று அனைவரும் உயிரினை விரும்பிப்போற்றுவதன் வழியாக இறைவனை அடைந்து பேரின்பத்தினை அடைதல் என்பது திருமூலரின் உயிர்பற்றிய தத்துவ விளக்கமாகும்.

உயிர் கொண்ட உடம்பு என்பது கண்ணுக்கு புலனாகும் வடிவமாகும். ஆனால் அவ் உயிருக்கு வடிவம் உண்டா எனில் உயிருக்கு வடிவம் இல்லை என்பதே திருமூலரின் வாதம் ஆகும். உயிருக்கு தனியே வடிவம் இருப்பின் அது

உடம்பினுள் குடிகொள்ள வேண்டியதில்லை. எனவே உயிருக்கு வடிவம் இல்லை என்பதே உண்மை என திருமூலர் கூறுகின்றார்.

உயிர் உயிர்ப்புடன் இருக்க வேண்டுமானால் உடம்பு என்கின்ற ஒன்று வேண்டும். உடம்பு என்பது போட்டுக் கழட்டும் சட்டை போன்றது என வேதாந்தம் கூறினாலும் உயிரும் உடலும் வேறல்ல என்பது விஞ்ஞானம். உயிர் இல்லாத உடலும் உடல் இல்லாத உயிரும் பிரித்துப்பார்க்க முடியாதவை. இரண்டும் சேர்ந்த இயக்கம் தான் உடம்பை வளர்த்தேன் அதனால் உயிர் வளாத்தேன் என திருமூலர் சொல்வது விஞ்ஞானத்தோடு மிகவும் ஒன்றிப்போவதனைக் காணமுடிகின்றது.

"........... உடம்பை வளர்க்க உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

உடம்பினுள் இருந்து இயங்குகின்ற ஆன்மாவோடு இறைவன் இருக்கின்றார். அப்படி எப்போதும் உடன் நிற்கின்ற இறைவனுடைய சொரூபத்தை ஆன்மா அறிவதில்லை. இதனைத் திருமூலர்

உள்ளத்து ஒருவனை உள்ளுரு சோதியை
உள்ளம் விட்டு ஓரிட நீங்கா ஒருவனை
உள்ளமுத தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவளை உரு அறியாதே

### பாசம்/பற்று

பாசம் அல்லது பற்று என்பது எமது பிறவி தோன்றுவதற்குரிய வித்து ஆகும். பற்று எந்த அளவுக்கு குறைகின்றதோ அந்த அளவுக்கு துன்பம் குறைந்து இன்பம் கூடுகின்றது. உலகில் உள்ள பொருட்கள் மீதுள்ள அவாவில் அல்லது பற்றில் இருந்து நீங்கி. உலகியல் மீது கொண்ட பற்றுக்களில் இருந்து நீங்கி இறைவனிடத்து பற்று வைப்பதன் மூலம் இந்த பிறவித்தளையிலிருந்து நீங்கி பேரின்ப நிலையினை அடையலாம் என்பது திருமூலரின் வாதம் ஆகும். இதனை திருமூலர் தனது நூலின் அவாவறுத்தல் என்னும் அதிகாரத்தில் பின்வருமாறு எடுத்தியம்புகின்றார்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே"

என்ற பாடலடியின் ஊடாக அறியலாம்.

இப்பாடலடியின் மூலம் ஆசை என்பது உலகில் உள்ள பொருட்களின் மீதும் வாழ்வின் மீதும் உள்ள பற்று என பொருள்படும். உலகியல் மீது உள்ள ஆசை நீங்கினால் அந்த ஆசை இயல்பாகவே இறைவனிடத்தில் செல்லும். உலகியல் தொடர்பு இன்றி இறைவனது தொடர்பு ஒன்றினையே இலக்காக கொண்டு நிற்கும் அந்த ஆசையினுக்குப் பேரின்பநிலை எய்தல் எளிதாகிவிடும் என்று திருமூலர் கூறுகின்றார்.

### சைவசித்தாந்தத்தில் திருமந்திரத்தின் செல்வாக்கு

சைவ சமயத்தவர்களுக்கு மூலநூல்கள் அல்லது முதனூல்கள் வேதம். சிவாகமம் என இரண்டாகும். இன்று இந்து மதத்தில் காணப்படும் பல்வேறு நூல்கள் எல்லாம் இவற்றின் தொகை. வகை. விரி என்ற வேறுபாடுடைய வழிநூல்கள், சார்புநூல்களே. அவை விரிந்து பரந்து கிடக்கின்றன. அனைத்துக்கும் ஆதிநூலாக. முதநூலாக உயர்மதிப்புப் பெற்றவை அநாதியாகவே குற்றமற்ற பரம்பொருளால் உலகம் தோற்றுவிக்கப்பட்ட போதே சொல்லாகவும், பொருளாகவும் படைக்கப்பட்ட போது சொற்பிரபஞ்சமாகத் தோன்றியவை ஆரணம் என்று போற்றப்படும் அறிவுநூல் ஆகும். அது பொது, சிறப்பு என இருவகைப்படும். பொதுநூல் வேதம், சிறப்புநூல் ஆகமம். பொதுநூல் உலகினருக்கே அதாவது உலகில் அறிவுடன் தோன்றிய மனிதருள் சிந்திக்கும் பாங்குடைய உயிரினங்களுக்கே. அவர்கள்தான் உலகம் ஏன் இயங்குகின்றது அதனை எப்படி பயன்படுத்தி பலனைப் பெற வேண்டும் என சிந்திப்பவர்கள் "உலகம் என்பது உயர்தோர் மேற்றே "என்பது தொல் காப்பியம். உலகை விசாரித்து ஏன். எப்படி என உணர்ந்து முழுமையாக பயன்படுத்துபவரே உலகர். அவர்கள் வேதம் காட்டிய வழியில் தியாகம் செய்து

வாழ்ந்து உயர் ஞானத்துக்கு தகுதி பெறுவர். இப்படி தகுதி பெற்றவர்களே சக்தி நிபாதர்கள், திருவருட்சக்தி பதிவதற்கு ஆயத்தமானவர்கள், பக்குவமானவர்கள். அவர்களுக்கா கவே ஆகமம் இறைவனால் ஒவ்வொரு ஆன்மா வின் தகுதிக்கு ஏற்றபடி தனித்தனியே அருளிச் செய்யப்பட்டது.

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உன்னுக."

எனவே இவ் இறைவன் நூல்களாகிய வேதம் ஆகம சிந்தனைகளினை அடிப்படையாக கொண்டு எழுந்த ஒன்றே திருமந்திரம். இத் திருமந்திரம் ஆனது தமிழர் மெய்யியல் வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கும் பல சாஸ்திர, தோத்திர நூல்களின் தோற்றத்திற்கு எவ்வகையில் அடிப்படை கூறாக விளங்கி இருந்தது. என்பதனை நோக்க வேண்டியது இன்றியமையாதது.

திருமூலரின் நூல் முழுக்க முழுக்க ஓர் தத்தவ நூல். வீடுபேற்றினை அடைவதற்கு காரணமான மெய்யுணர்வினை பற்றி பிற்காலத்தில் எழுந்த நூல்களுக்கெல்லாம் திருமந்திர நூல் உணர்த்து கின்ற தத்துவங்களின் விளக்கங்களே எடுத்தாளப் படுகின்றன. அந்நூல்களின் உரைகளில் பல திரு மந்திர சூத்திரங்களினை உள்ளீடாகவும், மேற் கோளாகவும் எடுத்துக்காட்டி தோன்றியுள்ளன. அவ்வாறு எழுந்த நூல்களில் சிவஞானபோதம் சிவஞானசித்தி, சிவப்பிரகாசம், சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, யாப்பருங்கால விருத்தி, தக்கயாக பரணி ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் சனாதன தர்மத்தின் உயிர் சைவ சமயம். சைவசமயத்தின் உயிர் நாடி சைவசித்தாந்தம். சைவசித்தாந்தத்தின் உயிர் ஊற்று திருமந்திர மாலை எனப்படும் திருமந்திரம் என்றால் மிகை யாகாது. சைவ சித்தாந்தத்தின் மூலத்தொகுப்பு மூன்று காரணிகளுள் அடங்கும். இக்காரணிகள் இறை, உயிர், கட்டு / பதி, பசு, பாசம், என்று கூறப் படுகின்றன. ஒன்றாக இருந்து பலவாக புணரப் பட்டு இறுதியில் மீண்டும் ஒன்றாக கலப்பதே ஆன் மாவின் புணர்ச்சிப்பாதை என சைவசித்தாந்தம் கூறுகின்றது. அதாவது அவனாக இருந்த ஆன்மா அவன் எனும் மாஜையினால் அதுவாகக் கேவலப்பட்டு இறுதியில் எல்லாம் அவனே என்று உணர்வதே சைவ சித்தாந்தத்தில் ஆன்மாவின் பயனமாகும். ஆன்மாவின் முதிர்ச்சிப்பாதையில் திருமந்திரத்தின் பங்கு அளப்பரியது. ஆன்மாவின் உருவாக்கத்தையும் அதன் ஆன்மீக முதிர்ச்சிப் பயணத்தையும் இறுதியில் பரவொளியில் அது சங்கமிப்பதையும் ஏனைய ஆன்மீகப்பாதைகளை விட சைவ சித்தாந்தம் மிகவும் விஞ்ஞான பூர்வ மாகவும் அதிமெய்ஞான பூர்வமாகவும் விளக்கு கின்றது என்றால் அதற்கு அடிப்படைக்காரணம் திருமந்திரமே.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினை போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அனுகாப்பசு பாசம்
பதியனு கில்பசு பாசம் நில்லாவே"

இங்கே சைவ சித்தாந்தத்தில் அடிப்படைக் கூறுகளான முப்பொருள் உண்மை விளக்கப்பட்டுள்ளதுடன் பதியின் அருளினால் பசுவினை பீடித்து இருக்கும் பற்று நீங்கி ஆன்மா முத்தியடைவதற்குரிய வழியினை இறைவன் வழங்குவான் என்ற சைவசித்தாந்த உண்மையினை நிறுவ அடிப் படையாக அமைந்து காணப்படுகின்றது. இவ் முப்பொருள் உண்மையினையே கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர் பின்வருமாறு கூறுகின்றார்.

"சான்றவர் ஆய்ந்திடத்தக்க ஆம் பொருள் மூன்றுள......."

அதேபோல திருமந்திரத்தின் உபதேசம் என்ற பகுதியின் தொடக்கத்திலேயே படைப்பின் நோக்கம் சைவசித்தாந்த ஒளியில் விளக்கப்பட்டுள்ளது.

"வினைக்கு ஈடாய் பிறவியைத் தந்து
வின்மன் என்று ஆன்மா ஏறிஇறங்கி
இறைவன் காவலின்படி களிம்பு அறுத்தல்"

இங்கு இறைவன் களிம்பு (மலம்) அறுத்து ஞானக்கண்ணை விளிக்கச் செய்கின்றார். அக் கண்ணை அனுகவும் முடியாது. அது உலகியல் சார்ந்த சூரிய ஒளி, மல அழுக்கு அற்ற ஆன்மா பளிங்கு போல இறை ஒளியை பிரதிபலிக்கின்றது.

"சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா

சூரியன் சந்நிதியில் சுடு மாறுபோல்
அரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"

சூரிய காந்தக்கல்லின் (Magnifying Glass) முன் பஞ்சைப்பிடித்தால் பஞ்சை எரிக்கும் ஆற்றல் அதற்கு ஏற்படாது. ஆனால் சூரியஒளி முன் அக் கல்லைப்பிடித்து அதற்கு முன் பஞ்சை வைத்தால் அப்பஞ்சு எரிந்துவிடும். அதுபோலவே இறைவனின் முன் ஆன்மாவை பற்றிய மலங்கள் அறுந்துவிடும் என திருமூலர் அழகிய உவமை கொண்டு விளக்குகின்றார். இதற்கு உரை விளக்கம் போல சிவஞானசித்தியார் தனது 280 வது பாடலில்

"சூரிய காந்தக்கல்லின் இடத்தே செய்ய
சுடர் தோன்றியிட சோதி தோன்றுமாபோல்
ஆரியனாம் ஆசான் வந்து அருள் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றும்
தூரியனாம் சிவன் தோன்றும் தானும் தோன்றும்
தொல்உலகம் எல்லாம்தன் உள்ளே தோன்றும்
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குஉயிராய் எங்கும்
நின்றநிலை எல்லாம்முன் நிகழ்ந்து தோன்றும்."

குருநெறி பற்றி சிறப்பித்துக்கூறும் திருமந்திரம் குரு இன்றி உலகில் வித்தையும் கைவராது. ஞானசித்தியும் எய்யாது என கூறுகின்றது.

"தெளிவு குருவின் திருமேனிகாண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குரு உருச்சித்தார்தானே"

மேற்கூறப்பட்ட திருமந்திர மையக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே சிவஞானசித்தியார் (276)

"இந்தப்பார்மேல் நாட்டியநற்குலத்தில் வந்தவதரித்த குருவால்
ஞானநிட்டை அடைந்தவர் நாதன்தாளே" என்று பாடுகின்றார்

இதனை ஞானக்கடலாசிரியர் சம்பந்தர்

"குலமிலராகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலம் மிக்கக் கொடுப்பது நமச்சிவாயவே"
என பாடுகின்றார்.

குருவின் மகிமையே சாத்திர ஆராட்சி வேத பாரயணம் எல்லாவற்றிற்கும் முக்கியமானது என்பதனை பழைய சித்தாந்தசாத்திரமாகிய திருக்களிற்றுப்படியார் (6)

"சாத்திரத்தை ஓதினார்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்கும் நலம் வந்துறுமோ?"

என வினாவி. இல்லை என நிருபிக்கிறது. குருவருள் என பத்துக்குறல்கள் திருவருட்பயனில் உமாபதிசிவாச்சாரியினார் பாடப்படுகின்றது.

திருமந்திரம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மூலாதாரங்களினைப் பற்றி சிறப்பித்து கூறுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே சைவ சித்தாந்தம் இதற்கு முக்கிய இடத்தினை வழங்குகின்றது. அதாவது சரியை என்ற ஒழுக்கத்தாலும், கிரியை என்ற அர்ப்பணத்தாலும், யோகம் என்ற பொருந்தி இருந்ததாலும் ஞானம் என்ற அருளால் இறையுணர்த்தலுக்கு சைவசித்தாந்தம் வழிகாட்டுகின்றது.

சேக்கிழார் பெருமான் தனது பெரியபுராணத்தில்
"உள்ளுணர் வான ஞான முதலிய ஒரு நான்கு உண்மை
தெள்ளுதீந் தமிழால் கூறும் திருமூலர்" என்றும்
"நலஞ்சிறந்த ஞானயோகக் கிரியா சரியையெல்லாம்
மலர்ந்த மொழித் திருமூல தேவர்" என்று விளக்குகின்றார்.

இவ்வாறாக திருமந்திரம் தமிழர் மெய்யியலில் அதன் பிற்பட்ட கால இலக்கிய வளர்ச்சியில் அவற்றின் உள்ளீடாய், அடிநாதமாய் விளங்கி இருப்பதனை அவதானிக்கலாம்.

**உசாத்துணை நூல்கள்**


- செந்துறைமுத்து (1972) தத்துவத்தமிழ் மேதைகள், சென்னை: வாசுபிரசுரம்
- ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் (1953) திருமந்திர விளக்கம், கொழும்பு: சுத்தானந்த பதிப்பகம்
- கண்ணப்ப முதலியார் (1965) தமிழ்மந்திரம் மூலமும் விளக்கமும், சென்னை: வானதி பதிப்பகம்

# அருணகிரிநாதரின் திருப்புகழில் விஸ்ணுவின் தசாவதாரங்கள்

புவிலோகசிங்கம் அருள்நேசன்
B.A (Hons)

**நோக்கம்**

இந்து சமயத்தில் அவதாரக் கோட்பாடு வைணவத்திற்குச் சிறப்பானதாகும். தென்னிந்தியாவில் சமணமும் பௌத்தமும் பெருகிச் சைவ நெறியும், வைணவ நெறியும் நலிவுற்ற பொழுது நாயன்மார்களும், ஆழ்வார்களும் சமய மறு மலர்ச்சியைத் தோற்றுவிக்கத் தலங்கள் தோறும் சென்று பதிகங்களையும் பாசுரங்களையும் பாடிப் பரவி மக்களிடையே பக்தி நெறியைப் பரப்பினர். இதுபோன்று கி.பி 14ஆம், 15ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய ஆதிக்கமும் படையெடுப்புக்களும் பெருகி நம் ஆலயங்களையும் சமய நெறிகளையும் சிதைத்த நேரத்தில் விழிப்புற்ற இந்து உணர்வின் விடிவெள்ளியாக அருணகிரிநாதர் ஒருவரே சண்மத வழிபாட்டையும் மறுமலர்ச்சியடையுமாறு தலங்கள் தோறும் சென்று பாடி முருகப் பெருமானை மையமாகக் கொண்டு காழ்ப்பில்லாத சமயநெறியை அவ்வச் சமயத்தோரும் பயிலுமாறு பரவி இன்புற வழியமைத்துக் கொடுத்தார்.

அருணகிரிநாதர் முருகப்பெருமானைப் பாடிய பொழுது பெருமானின் மாமனான திருமாலின் பெருமைகளையும், சிறப்புக்களையும் பாடியுள்ளார். திருமாலைப் பாடும்பொழுது திருமாலின் பல்வேறு பிரபாவங்களையும், ஆயுதங்களையும், தசாவதாரங்களையும் சிறப்பாகப் பாடியுள்ளார். இவ்வாறாக, முருக பக்தரான அருணகிரிநாதரின் திருப்புகழில் காணப்படுகின்ற விஸ்ணுவின் தசாவதாரங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அருணகிரிநாதர்**

அருணகிரிநாதரது தோற்றம், பெற்றோர்கள், பற்றி ஏதும் அறிய முடியவில்லை. அவரது தோற்றம் பற்றிப் பல புனைகதைகள் கூறப்படுகின்றன. இவரது காலத்தினை திருப்புகழ் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு, விஜயநகரப் பேரரசர்களில் இரண்டாவது பிரபுட தேவராயர் (கி.பி 1422-29) காலத்தவர் அருணகிரிநாதர் என்பதினை வரலாற்றாசிரியர்கள் வரையறுத்துள்ளனர். சமகாலத்தில் பிறசமயத் தாக்குதல்களால் நலிவுற்றிருந்த இந்துப் பண்பாட்டினை நிலைநிறுத்தியவர்.

அருணகிரிநாதர் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, வேல், மயில், சேவல் விருத்தங்கள் என்ற ஆறு நூல்களைப் பாடினார். இவரின் படைப்புக்களில் திருப்புகழ் முருகப்பெருமானின் பெருமைகளையும், சிறப்புக்களையும் விரிவாகப் பேசுகின்றது. சந்தப் பாடல்களால் ஆகிய நூல் திருப்புகழ் ஆகும். திருப்புகழ் பாடல்கள் 16,000 பாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அவற்றுள் கிட்டியவை 1311 பாடல்களே ஆகும்.

திருப்புகழில் முருகப்பெருமானைப் போற்றிப் பாடும் பொழுது அப்பெருமானது தந்தையாகிய சிவனையும், தாயாகிய அம்மையையும், அண்ணனாகிய பிள்ளையாரையும், மாமனாகிய திருமாலையும் புகழ்ந்து அமைந்த அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் தனிப்பாங்குதான். வேறெந்தக் கவிஞரும் காணாத ஒரு புதுப் பாதையை அவர் அமைத்துக் கொண்டது அவர்

காலத்தில் அவசியமாக அமைந்தது. இதற்கான காரணங்களை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர சர்வ கலாசாலை மொழித்துறை விரிவுரையாளர் அவர் கள் "விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சி யும்" என்ற ஆய்வரங்கில் சமர்ப்பித்த "விஜயநகர நாயக்கர் காலத்தில் முருக வழிபாட்டின் புத்தெழு ச்சி" என்ற கட்டுரையில் ஆராய்ந்துள்ளார்.[2] ஒரே பாடலில் அறுவகைச் சமயக் குறிப்புக்களையும் காட்டும் வகையில் அமைந்த திருப்புகழ் பாடல் களும் உள்ளன. "சீதன வாரிஜாதக" என்று தொடங்கும் அர்ச்சனைப் பாடலை உதாரண மாகக் காட்டலாம்.[3]

முருகப்பெருமானை "திருமால் மருகனே" என்று பாடுவதில்தான் அருணகிரிநாதருக்கு எத்துணைப் பரவசம். தசாவதாரங்களில் பரசுராம னைத் தவிர ஏனைய ஒன்பது அவதாரங்களைத் திருப்புகழிலும், பலராமனைக் கந்தரந்தாதி தொண்ணூற்றெட்டாவது பாடலிலும் சிறப்பித்துப் போற்றப்படுகின்றன.[4]

**அவதாரக் கோட்பாடு**

விஸ்ணு முழு ஆற்றலோடு பல்வேறு வடிவில் உலகில் தோன்றுவதைக் குறித்து நிற்பதே அவதாரம் ஆகும். அவதாரம் என்பதற்கு "மேலிருந்து கீழிறங்குதல்" என்பது பொருளாகும். "உலகிலே தர்மம் கெடுகின்ற காலங்களில் தர்மத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும், கொடி யோரை ஒடுக்கி நல்லோரைப் பேணுவதற்கும் கடவுள் பூலோகத்திலே தோன்றுவாரென்று" பகவத்கீதை (4.7-8) குறிப்பிடுகின்றது.[5]

விஸ்ணுவின் அவதாரங்கள் பத்து என்பது ஒரு மரபு வழியான கருத்தாகும். விஸ்ணுவின் அவதாரங்களைப் பற்றிய கதைகள் இதிகாசங்கள், மகாபுராணங்களில் மிகுதியாகக் காணப்படுகின் றன. அவற்றிலே அவதார புருஷர்களின் பெயர்கள் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகின்றன. மத்ஸ்ய புராணம் கிருஷ்ணருக்குப் பதிலாகப் புத்தரைக் குறிப்பிடுகின்றது. வடஇந்திய வைணவ நூல்கள் புத்தரை அவதார புருஷர்களில் ஒருவராகக் கொண்டுள்ள போதும் தென்னிந்தியாவில் ஆழ் வார்கள் அந்தக் கருத்தை ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை.[6] இவ்வாறு விஸ்ணுவின் அவதாரங்கள் வேறுபட்டு இருப்பினும் வைணவ சமயத்தில் பத்து அவதாரங்கள் சிறப்பாகக் கூறப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றை "தசாவ தாரம்" என வழங்குவர். மச்ச அவதாரம் (மீன்), கூர்ம அவதாரம் (ஆமை), வராக அவதாரம் (பன்றி), நரசிம்ம அவதாரம் (மனித சிங்கம்), வாமன அவதாரம் (குள்ளன்), பரசுராம அவ தாரம், இராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், பலராம அவதாரம், கல்கி அவதாரம் (கற்கிய அவதாரம்) என்பனவாகும். ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் திருமாலின் தசாவதாரத்தினைப் பாடியுள்ளனர். உதாரணமாக

"தேவுடைய மீனமாய் யாமையாய் ஏனமா யாயாய்க்
குறளாய்
மூவிருவி லிராமனாய்க் கண்ணாய் கல்கியாய் ..."[7]

என பெரியாழ்வார் தனது திருமொழியில் விஸ்ணுவின் பத்து அவதாரங்களையும் பாடி யுள்ளமையினைக் காணலாம்.

**அவதாரங்கள்**

**1. மச்ச அவதாரம்**

பேரூழிக் காலத்திலே விஸ்ணு பெருமீனாக உருவெடுத்துப் பேரழிவில் மிதந்து உயிர்களுக்குப் புகலிடமளித்து அவற்றை அழிவிலிருந்து காப்பாற்றியமை பற்றியதே மச்ச அவதாரம் பற்றிய புராணக் கதையாகும். சதபத பிராமணத்திலுள்ள கதையொன்று இதற்கு மூலமாய் அமைந்தது போலத் தெரிகின்றது. கொம்புடைய மீனொன்று மனுவையும், வேதங்களையும் காப்பாற்றிய தென்று சதபத பிராமணங் கூறும். யக்கிரீவன் என்னும் அசுரன் வேதங்களைக் கவர்ந்து கொண்டு கடலுக்குள் மறைந்து விட்டான். அந்தச் சமயத்தில் மகாவிஸ்ணு மீனாக அவதரித்துக் கடலினுட் புகுந்து யக்கிரீவனைத் தேடிப்பிடித்து, அவனை வதைத்து, வேதங்களை மீட்டார் எனக் கூறப்படுகின்றது. இம் மச்ச அவதாரத்தினை அருணகிரிநாதரும் திருப்புகழில் சிறப்பாகப் பாடியுள்ளார். மீன் உருவங்கொண்டு அவ் வேதங்

களை கொணர்ந்தவராகிய நாராயணமூர்த்தியின் திருமருகன் முருகப்பெருமான் என்பதினை.

"சிறுத்தசெறு வதனு ளிருந்து
பெருத்ததிரை யுததி கரந்து
செறித்த மறை கொணர நிவந்த – ஜெயமாலே
............ மருகோனே"[8]

திருவேங்கடத் தல திருப்புகழ் பாடலில் போற்றி யுள்ளார்.

## 2. கூர்ம அவதாரம்

கூர்மவதாரம் பற்றிய கதை புராணங்களில் வருமாறு கூறப்படுகின்றது. தேவர்களும், அசுரர்களும் நெடுங்காலமாகப் போர் புரிந்தனர். தங்கள் தவவலிமையாலும் கடவுளிடமிருந்து பெற்றிருந்த வரங்களின் காரணமாகவும் அசுரர்கள் பேராற்றல் பெற்றிருந்தனர். தம்மில் இறந்தோரையும் மீண்டும் உயிர் பெறச் செய்யும் ஆற்றலினையுங் கொண்டிருந்தனர். அதனால் அவர்களைத் தேவர்களால் வெற்றி கொள்ள முடிய வில்லை. ஆற்றாமையினால் விஸ்ணுவைத் தேவர்கள் நாடித் தாங்கள் வெற்றி பெறுவதற்கு வழிவகை செய்யுமாறு வேண்டினர். சாவா மருந்தான அமிர்தத்தை உண்டு மீண்டும் வலி பெற வேண்டுமென்று பெருமாள் தேவர்களுக்கு அறிவுரை செய்தார். அதனால் அமரர்கள் திருபாற் கடலைக் கடைய முற்பட்டனர்.

அதற்கென அசுரருடன் ஓர் உடன்படிக்கை செய்தனர். மந்திர மலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கொண்டு தேவர்களும் அசுரர் களும் ஒவ்வொரு பக்கமாக நின்று இழுத்தனர். அச்சமயத்திலே, மத்தாகக் கொள்ளப்பட்ட மந்திர மலை கடலில் மூழ்கத் தொடங்கியது. உடனே மகாவிஸ்ணு ஆமை வடிவமாகி அதனைத் தன் முதுகிலே தாங்கிக் கொண்டார். "நீராழி உலகம் நிலைபெறுவதற்கு நாராயணனே ஆதாரமான வர்" என்ற கருத்தினை இக்கதை விளக்குவதாய் அமைகின்றது.

முற்காலத்தில் தேவர்கள் பொருட்டு கூர்ம அவதாரமெடுத்து கடல் கடைந்தவரும் பெரிய பெரு மாளாகிய திருமாலின் மருமகன் முருகப் பெருமான் என்பதை.

"கடல்முன்பு கடைந்த பரம்பரர்
படரும் புய லென்றவ ரன்புகொள் மருகோனே..."[9]

என முதற் படைவீடான திருப்பரங்குன்றத் திருப்புகழ் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"பார மேருவ ருப்பத மத்தென
நேரி தாக எடுத்துட னட்டுமை
பாக ராரப டப்பணி சுற்றிடு கயிறாகப்
பாதி வாலை பிடித்திட மற்றது
பூர்வ தேவர் பிடித்திட லட்சுமி
பாரி சாதமு தற்பல சித்திகள் வருமாறு
கீர வாரிதி யைக்கடை வித்ததி
காரி யாயமு தத்தைய ளித்தக்ரு
பாளு வாகிய பச்சுரு வச்சுதன் மருகோனே ..."[10]

என கீரனூர் தல திருப்புகழ் பாடலிலும் மேல் வருமாறு இவ் அவதாரத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

## 3. வராக அவதாரம்

வராக அவதாரம் பற்றி எல்லாப் புராணங்களி லும் கூறப்படுகின்றது. ஹிரண்யகசிபு அரக்கியான திதி என்போரின் மகன் ஹரண்யாக்ஷன். அவன் பெற்ற வரங்களின் பயனாக அடங்காத பலத்துடன் விளங்கினான். அதனால் அவன் பல கொடுமைக ளைப் புரிந்தான். பிரம்மனாற் படைக்கப்படும் எந்த மிருகத்தினாலும், மானிடராலும் தனக்கு மரணம் வரக்கூடாதென்று வரம் பெற்றிருந்தான். மிருகங் களின் பெயர்களைச் சொல்லி வரங்கேட்ட பொழுது அவன் பன்றியினைக் குறிப்பிடத் தவறிவிட்டான். ஹரண்யாக்ஷனது கொடுமைகளைப் பொறுக்க முடியாது பூமி நீரில் மூழ்கியது. பூமியைப் பாது காத்தற் பொருட்டு மகாவிஸ்ணு வராகமாகிக் கடலிற் புகுந்து பூமியை மீட்டார். அத்துடன் ஹரண் யாக்ஷனையும் வதை செய்தார். பாசுரங்களில் வராகவதாரச் சிறப்பு போற்றப்படுகின்றது.

அருணகிரிநாதர் முருகப் பெருமானின் மாமனாகிய திருமால், அழகிய பன்றி உருவத்தை யெடுத்து பூமியைத் தோண்டிச் சென்று, பூமியை

மீட்க வந்தமையினை,

"சூரனைத்து ரந்து வேர றப்பி ளந்து
சூழ்சு ரர்க்க ணன்பு செயும்வீரா
சூக ரத்தொ டம்பு தானெ டுத்து வந்த
சூதனுக்கி னசந்த மருகோனே..."[11]

என நான்காவது படை வீடாகிய சுவாமிமலை திருப்புகழ் பாடலில் விளக்குகின்றார்.

"கோல வுருவாயெழுந்து பாரதனையே
யிடந்து கூவிடு முராரி"[12]

மேற்கூறிய அவதாரக் கதையினை பேறைநகர் தல திருப்புகழ் பாடலிலும் பாடியுள்ளார்.

#### 4. நரசிம்ம அவதாரம்

நரசிம்ம அவதாரக் கதை இரணிய சங்காரம் பற்றியது. இரணியன் என்னும் ஹரண்யகசிபு வராக அவதாரம் பற்றிய கதையில் வரும் ஹரண் யாக்ஷன் என்னும் பெரு வலி பெற்ற இரணியன் இறுமாப்பெய்தி, தர்மங்கள் யாவற்றையுந் துறந்த வனாகி, அளவிலாத ஆணவங் கொண்டு மன்னு யிர்களைக் கொடுமைப்படுத்தினான். வராக அவதாரமாகித் தனது தமையனை வதைத்த நாராயணனைப் பூவுலகில் எவரும் போற்றிப் பரவக் கூடாதென்று ஆணையிட்டான். ஆயினும் இரணியனது மகனாகிய பிரகலாதன் நாராயண னின் மீது பக்திமிக்கவனாக விளங்கினான். தந் தையின் கட்டளையினை அனுசரிக்கத் தனயன் மறுத்துவிட்டான்.

அழிவுலகம் வருமுன்னே புத்தி விபரீதமாகி விடும் என்ற முதுமொழிக்கமைய இரணியன் ஆவேசமுற்றான். பெறற்கரிய திருப்புதல்வனை அழிக்க முடிவு செய்தான். நாராயணன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்று பிரகலா தன் பகர்ந்தபொழுது இரணியன் அரண்மனை க்கு முன்பாக அமைந்திருந்த தூணைப் பலமாக உதைத்தான். அச் சமயத்திலே அதிசயமாக மகா விஸ்ணு நரசிம்ம வடிவத்திலே தூணிலிருந்து வெளிப்பட்டு இரணியனை வதம் செய்தார். பகலவன் மறைந்து இருள் சூழாத வேளையிலும், அரண்மனைக்கும் வெளிப்புறத்திற்கும் இடையி லான வாயிற்படியினும் பூமியோ வானுலகோ இல்லாது நரசிம்மன் மடியிலும் எந்த ஆயுதங்களா லும் இல்லாது நரசிங்கரது நகங்களாலும் இரணிய சங்காரம் நிகழ்ந்தது.

சிங்க வடிவங்கொண்டு இரணியன் என்ற அசுரர் தலைவனுடைய மார்பைப் பிளந்து, பசிய குடரை ஒரு சேர வாரியெடுத்து மாலையாகத் தரித்த நீண்ட புயத்தையுடைய திருமாலின் திருமருகன் முருகப்பெருமான் என்பதினை

"அருமறை நூலோதும் வேதிய
னிரணிய ரூபாந மோவென
அரிகரி நாராய னாவென – ஒரு பாலன்
அவனெவ னாதார மேதென
இதனுள னொவோது நீயென
அகிலமும் வாழ்வான நாயக – னொனவேகி
ஒருகணை தூணோடு மோதிட
விசைகொடு தோள்போனு வாளரி யொருமுறை
யுகிர்கொடு வாரா நிசாசர னுடல் பீறு .. மருகோனே ..."[13]

பொதுத் திருப்புகழ் பாடலிலும்,

"சீய மாயுரு வங்கொடு வந்தசு
ரேசன் மார்பையி டந்து பசுங்குடர்
வாரிய ணிந்த நெடும் புயன் மருகோனே .."[14]

திருச்செந்தூர் திருப்புகழ் பாடலிலும்,

"கூடமுறை நீடு செம்பொன் மாமதலை யூடெ முந்த
நாரசிங்கம் மருகோனே ..."[15]

என பேறைநகர் திருப்புகழ் பாடலிலும் பாடியருளி யுள்ளார். இவ்வாறாக திருப்புகழின் பல பாடல் களில் நரசிம்ம அவதாரக் கதையினை (193, 390, 721) குறிப்பிடுகிறார்.

#### 5. வாமன அவதாரம்

இருக்கு வேதத்திலுள்ள மகாவிஸ்ணுவின் சர்ப வியாபகத் தன்மை பற்றிய கருத்து வாமன அவதாரம் தொடர்பான புராணக் கதைகளுக்கு ஆதாரமாகியது. விஸ்ணு மூவடிகளால் உலக னைத்தையும் அளந்தமை பற்றி வேதப்பாடல் குறிப்பிடுகின்றது. வாமனரைப் பற்றிய குறிப்பு முதன் முதலாகச் சதபத பிரமாணத்தில்

வருகின்றது. சர்வலோக ஆதிபத்தியம் தொடர்பாக அசுரரும் தேவரும் தகராறு கொண்டனர். தேவர்கள் அளந்து கொள்ளக்கூடிய பிரபஞ்சத்தின் பகுதியை அவர்களிடம் ஒப்படைப்பதற்கு அசுரர் உடன்பட்டனர். வாமனக் கோலமாகி வந்த மகா விஸ்ணு ஓரடியில் பிரபஞ்சத்தை அளந்து கொண் டார். இக்கதை புராணங்களிலே பெருங்கதையாகி விட்டது.

புராணங்களில் அசுரர்களுக்குப் பதிலாக மாவலியைக் குறிப்பிடுகின்றது. அக்கினி புராணம், மத்சய புராணம், பாகவத புராணம், விஸ்ணு தர்மோத்தரம் முதலானவற்றிலே வாமன அவதாரம் பற்றிய கதை ஓரளவு விரிவாகக் கூறப்படுகின்றது. இவ்வாதாரத்தினை "குறட்பால மாயன்"[16] என திருப்புகழில் பல இடங்களில் குறிப் பிட்டுள்ளார். மேலும், இவ் அவதாரத்தினை அருணகிரிநாதர், காலால் இப் பூமியை மிதித்து, ஓரடியால் உலகை அளந்து விளக்கங்காட்டிய திருமாலுமாகிய நாராயணரது திருமருகரே முருகப் பெருமான் என்பதை திருத்தணிகை திருப்புகழ் பாடலில்,

"துகைத்தி வுலகையொ ரடிக்கு ளளவிடு
துலக்க அரிதிரு மருகோனே..."[17]

இவ் அவதாரத்தினை கந்தரலங்காரத்தின் பதினைந்தாம் பாடலில்,

"உலகை யொரடிக்கு ளளவிடு அரி படி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமாள்..."[18]

திருவகுப்பின் முதலாம் வகுப்பான சீர்பாத வகுப்பு பாடலில்,

"வடிவு குறளாகி மாபலியை
வலிய சிறையிட வெளியின் முகடு கிழிபடமுடியா
வளருமுகில்..."[19]

என தனது ஏனைய நூல்களான கந்தரலங்காரத் திலும், திருவகுப்பிலும் இவ் அவதாரத்தினைக் குறிப்பிட்டுள்ளமையினைக் காணலாம்.

**6. பரசுராமர் அவதாரம்**

விஸ்ணுவின் அவதாரங்களில் ஆறாவது பரசுராமர் அவதாரம். மழு (கோடாரி) ஆயுதந் தாங்கியவர் என்பதனால் அவர் பரசுராமர் என்னும் பெயருடன் விளங்கினார். பரசுராமர் ஜமதக்கினி இரேணுகாதேவி என்போரின் புதல்வர். பரசுராமனின் தந்தையான ஜமதக்கினி முனிவரைக் கார்த்தவீர்ய அர்ச்சுனனின் புதல்வர் கள் கொன்றுவிட்டனர். இரேணுகாதேவி மீளாத் துயரில் புலம்பினாள். தாயின் துயர்கண்டு பொறுக்க முடியாதவராய் ஆவேசமுற்ற பரசுராமர் ஷத்திரிய குலங்களை அழிப்பதென்று சபதஞ்செய்தார். இருபத்தொரு தலைமுறைகளாக அவர் ஷத்திரியர் களை வதை செய்தார் என்பது புராணக்கதை. இவ் அவதாரத்தைப்பற்றிய குறிப்பு திருப்புகழில் காணப் படவில்லை.

**7. இராம அவதாரம்**

ஆதிகவி என்று பாராட்டப்படும் வான்மீகியி னால் பாடப்பட்ட இராமாயணத்தின் கதாநாயக னாக இராமர் விளங்குகின்றார். புராதன காலத்து இந்து சமுதாயத்தின் பண்பாட்டுக் கோலங்களை இணையில்லாத ரசனையோடும் கவர்ச்சிமிக்க பாங்கிலும் உணர்த்தும் உன்னதமான இலக்கியம் ஆதிகாவியம். வான்மீகியாருக்குப் பின்பு சில நூற் றாண்டுகள் கழிந்ததும் இராமனைப் பூலோகத் திலே தோன்றிய கடவுளின் வடிவமாக ஒப்புக் கொள்ளும் மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது. இராமரை அவதார புருஷர்களில் ஒருவராகக் கொள்ளும் மரபு தோன்றியது. இராம அவதாரம் பற்றிய முதன் முதலான குறிப்பு ஹாரணீயம் என்னும் நூலிற் காணப்படுகின்றது. அது கி.பி மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகள் அடங்கிய காலத்தின் ஒரு கட்டத்தில் எழுதப்பட்டது. மகாகவி காளிதாஸர் இராமரை மகாவிஸ்ணுவின் அவதார மானவர் என்று இரகுவம்சத்திலே போற்றுகின் றார்.

வாலியின் மார்பைத் துளைக்குமாறு வில்லில் கணையை ஏவிய மற்போருக்கு ஏற்ற புயங்களை யுடைய அச்சுதனின் மருகரே முருகப்பெருமான் என்பதினை,

"வாலி மார்புதொ ளைத்திட விற்கொடு
வாளி யேவிய மற்புய னச்சுதன் மருகோனே..."[20]

என பழனி திருப்புகழ் பாடலில் குறிப்பிடுவார். சமுத்திரம் வற்றும்படி கணையை விடுத்தவரும், அலை மிகுந்த அக்கடலை அணை கட்டினவரும், ஒப்பற்ற பாணத்தை ஏவி, அகங்காரம் உள்ள இராவணனுடைய முடியுடன் கூடிய பத்துத் தலை களையும் மலைபோல் அறுத்து நிலத்தில் தள்ளிய வரும் சக்தி வடிவினராகிய தேவலட்சுமியாம் சீதா தேவியைச் சிறையிலிருந்து மீட்டவருமாகிய வீர ராமருடைய உயர்ந்த அற்புதம் பொருந்திய திருமருகரே முருகப்பெருமான் என்பதை,

"வேலை வற்றிட நற்கணை தொட்டலை
மீதடைத்து தனிப்படை விட்டுற
வீறரக் கண் முடித்தலை பத்தையு மலைபோலே
மீதறுத்து நிலத்தில டித்து மெய்
தேவலட்சுமி யைச்சிறை விட்டருள்
வீர அச்சுதனுக்ந லற்புத மருகோனே"[21]

என திருக்கழுக்குன்றம் திருப்புகழ் பாடலிலும் பாடி யுள்ளார். மேலும் திருப்புகழில் இராமாயனச் செய்திகள் பலவற்றையும் குறித்துள்ளார். இரா வணன் கயிலை மலையைப் பெயர்த்தது (896), விசுவாமித்திரர் யாகம் காத்தது (128, 839), தாடகையைக் கொன்றது (1302), சிவதனுசை முறித்தது (128, 1198), அகலிகை சாபவிமோசனம் (549), மாரீசனைக் கொன்றது (561), வாலியைக் கொன்றது (909), இராவணனிடம் சூர்ப்பனகை கலகம் செய்தது (783), இராவணன் சீதையை அசோக வனத்தில் இருத்தியமை (1152), அநுமார் முதலியவர்கள் வரலாற்றை இராமர் அறிந்தது (415), இராவணனெதிரில் அநுமார் இலங்கையை எரித்தது (1156), சீதையைத் தேடினது (239, 1040), சேது பந்தனம் செய்தது (333), கும்ப கர்ணன் வதம் (1015), அநுமார் தோள் மீதேறி இராமர் போர் புரிந்தது (855) இராம இராவண யுத்த வர்ணனை (1237), இராவணனை சம்ஹரித்தது (1156), சீதையைச் சிறைமீட்டது (78, 820), இலங்கையை இராமர் விபீஷணனுக்கு அளித்தது (693, 706) என பல இராமாயணச் செய்திகளையும் திருப்புகழில் குறிப்பிட்டுள்ளார்.

## 8. பலராமர் அவதாரம்

கிருஷ்ணரின் மூத்த சகோதரரான பலராம னையும் அவதார புருஷராகக் கொள்வது பழமை. பழந்தமிழ் நூல்களில் பலராமர் குறிப்பிடப்படு கின்றார்.[22] பனைக் கொடியுடைய பலதேவரின் வழிபாடு பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.[23] புகார் நகரிலிருந்த பலராமர் கோயில், திருமால் கோயில் என்பனவற்றைச் சிலப்பதிகாரம் கீழ் வருமாறு குறிப்பிடுகின்றது.[24] பலராமன் கண்ண னுக்கு மூத்தவனாய்ப் பிறந்த காரணத்தினால் "நம்பி மூத்தபிரான்" என்றே வைணவ சம்பிர தாயத்திலே பலராமனைக் குறிப்பிடுவர்.[25]

இவ் அவதாரத்தினை கந்தரந்தாதியில், கலப்பை ஆயுதத்தையும், சக்கர ஆயுதத்தையும் உடைய திருமால் மருமகன் முருகப்பெருமான் என்பதை,

"சீரங்க ராக மறமோது திகிரி செங்கை கொண்ட
சீரங்க ராக மருகந்த தேசிக செந்தினை மேற்
சீரங்க ராக தனகிரி தோய்கந்த செந்தமிழ் நூற்
சீரங்க ராக விநோத வென் பார்க்கில்லை தீவினையே"[26]

என பலராம அவதாரத்தைச் சிறப்பாக சித்தரித்துள் ளமையினைக் காணலாம். தமிழ் நாட்டில் பலராம வழிபாடு நிகழ்ந்ததற்கு இலக்கியங்களைத் தவிர ஒரு சிற்பச் சான்றும் உள்ளது. மாமல்லபுரத்தில் கிருஷ்ண மண்டபத்தில் கிருஷ்ணர், பலராமன், நம்பிள்ளை ஆகிய மூவரும் இணைந்து நிற்கும் சிற்பம் உள்ளது. இச் சிற்பம் ஏறத்தாழ கி.பி ஏழாம் நூற்றாண்டினைச் சேர்ந்தது என்பர்.

## 9. கிருஷ்ண அவதாரம்

கிருஷ்ண அவதாரக் கதைகள் அளவில்லா தவை. அவை புராணங்கள் பலவற்றிலே விரிவாகச் சொல்லப்படுகின்றன. கிருஷ்ணர் ஆயர்பாடியில் வாழ்ந்த காலத்திலே, பாலகப் பருவத்தில், பராக்கிரமச் செயல்கள் புரிந்து, அற்புதங்கள் பல நிகழும்படி செய்து, அவதார புரு ஷனின் மகிமையினை உலகுக்கு உணர்த்திய சிறப்பினை விளக்கும் கதைகள் பல அவற்றிலே காணப்படுகின்றன. மகாபாரதக் கதையிலே பிரதானமான கதாபாத்திரம் கிருஷ்ண பகவான் தர்மஷேத்திரமாகிய குருஷேத்திரத்தில் நடை பெற்ற போரை முடித்து தர்மத்தை நிலை நாட்டிய

பெருமை கிருஷ்ணரைச் சார்ந்தது. தன்னை அழிப்பதற்கென்று பல உபாயங்களை வகுத்த தாய்மாமனாகிய கம்சனைக் கிருஷ்ணர் வதஞ் செய்தமை பற்றிய கதைகள் அவற்றிலே காணப் படுகின்றன.

அருணகிரிநாதரும் கிருஷ்ணரின் லீலைக ளைத் திருப்புகழில் பல கோணங்களில் சித்தரிக் கின்றார். யாதவர்களின் வீட்டில் கோபிகைகளின் தயிரை விரும்பித் திருடிய குறைபாட்டினால் உரலில் கட்டுண்டு சென்று நல்லதொரு செயலைச் செய்த கேசவன் திருமருகரே முருகப்பெருமான் என்பதினை திருத்தணிகை திருப்புகழ் பாடலில்,

"கொச்சையர் மனையிலி டைச்சியர் தயிர்தனை
நச்சியெ திருடிய குறையால் வீழ்
குற்கிரவினியொடு நற்றிற வகையதி
கொற்றவு வணமிசை வருகேசன்
அச்சுத நிறைகடல் நச்சுர வணை துயில்
அச்சுதன் மகிழ்திரு மருகோனே..."[28]

எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் கண்ணன், மலையை குடையாகக் பிடித்த நிகழ்ச்சியை பழனி திருப்புகழ் பாடலிலும்,

"சிகர கடையினில் நிலைவரை இசைதெரி
சதுரன் விதுரனில் வருபவ னணையது
திருடி யடிபடு சிறியவ னெடியவன் மருகோனே..."[29]

ஒப்பற்ற பாரதப் போரில் ஈடுபட்டுப் பெருமை மிக்க அர்ச்சுனனுடைய தேரில் ஏழு குதிரைகளைத் தூண்டிச் செலுத்திய பார்த்தசாரதி என்பதினை திருத்தணிகை திருப்புகழ் பாடலிலும்,

"கரி வாம்பரி தேர்திரள் சேனையு
முடனாந் துரி யோதன னாதிகள்
கள மாண்டிட வேயொரு பாரத
கன பாண்டவர் தேர்தனி லேயெழு
பரி தூண்டிய சாரதி யாகிய..."[30]

கிருஸ்ணர் மகாபாரதப் போரில் அருச்சுனனின் தேர்ச் சாரதியாக நின்று அவனைக் காவல் புரிந்தார். அதனால் பார்த்தசாரதி என்றும் அவரைக் குறிப்பிடுவது வழக்கம். மேலும் கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் சாரதியானது (411, 627, 969, 1232). இடையரிடம் வளர்ந்தது (1191). உரலில் கட்டுப்பட்டு உருண்டது (958). உலக்கையை ராவிக் கடலில் விட்டது (287), உறிகளை உடைத்தது (1048), கம்ஸன் விடுத்த பாசனைக் கொன்றது (703), காளிங்கமர்த்தனம் செய்தது (927, 1196), கோபி சாஸ்ரீகளோடு லீலைகள் புரிந்தது (1240), கோபியர் புடவைகளைக் கவர்ந்தது (274), கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தது (186, 740), சூரியனைச் சக்கரத்தால் மறைத்தது (687, 1037), நெய்; பால்; தயிர்; வெண்ணெய் திருடியுண்டது (1144), பாண்டவர்க்குத் தூது சென்றது (1232), பாரிஜாதத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தது (370), புல்லாங்குழல் ஊதிப் பசுக்களைக் கூட்டியது (1144), யாசோதையிடம் அடிபட்டது (1144), விதுரனுக்கு விருந்தாளியானது (740) என மகாபாரதக் கதைகள் திருப்புகழில் பல கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

## 10. கல்கி அவதாரம்

உலகின் தர்மம் தவறி பொறுமை அழிந்து உண்மை ஒழிந்து அன்பும் அருளும் கலங்கி பூசனைகள் சிதைவுற்று பாவங்களே வெற்றி பெறும் இக்கலியுக முடிவில் இவ்வையகத் தினைக் காக்கக் குதிரை மீது அமர்ந்து கல்கி வடிவில் விஸ்ணு அவதாரம் செய்வார் என்கிறார் கள். இதனையே,

"குறை பட்டேயுயிர் காத்துக் கொள்வாயென
முறை யிட்டோர் கரி கூப்பிட்ட நாளொரு
குரலிற் போயுயிர் காத்துக் கொள்வோர் திருமருகோனே"[31]

என பத்தவதாரத்தால் புவியில் அவதரித்து துஷ்டரை நிக்கரித்து இஷ்டரை ரக்ஷித்து உலகத் தைக் காத்துக்கொள்வரின் திருமருகரே முருகப் பெருமான் என அருணகிரிநாதர் கூறுகின்றார்.

## முடிவுரை

அருணகிரிநாதர் தமது திருப்புகழில் முருகப் பெருமானின் பெருமைகளையும், சிறப்புக்களை யும் பாடுகின்றபொழுது பெருமானின் மாமனாகிய திருமாலின் தசாவதாரங்களையும் மேல்வருமாறு பாடியுள்ளமையினைக் காணலாம். அவர் காலத்து சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு

தலங்கள் தோறும் சென்று அறுவகைச் சமயங்க ளையும், அறுவகைச் சமயக் கடவுளரையும் முருகனுடன் இணைத்துப் பாடியமையினால் அறுவகைச் சமயக் குறிப்புக்கள் திருப்புகழில் காணப்படுகின்றது. அருணகிரிநாதர் முருகனின் பெருமைகளைப் பாடுகின்ற பொழுது, பழந்தமிழ் இலக்கியங்களும் ஆழ்வார்களின் நாலாயிர திவ்விய பிரபந்தமும் விஸ்ணுவை திருமால் என பெயர் சுட்டுவதனைப் போலவே, அருணகிரிநாத ரும் திருப்புகழில் முருகப்பெருமானை "திருமாலின் மருமகனாகவே" பல இடங்களில் குறிப்பிட்டுள் ளார். திருப்புகழில் திருமாலின் தசாவதாரத்தினைக் குறிப்பிடும் பொழுது இந்த உறவு முறையினை சிறப்பாக விழித்துப் பாடியுள்ளமையினைக் காண லாம். விஸ்ணுவின் அவதாரங்களைச் சிறப்பாக விளக்கும் இராமாயணமும், மகாபாரதமும் திருப் புகழில் பல கோணங்களில் சித்தரிக்கப்படுகின்றன. முருகபக்தரான அருணகிரிநாதர் விஸ்ணுவின் தசாவதாரத்தினை சிறப்பாகப் பாடியுள்ளமை வியப்புக்குரியதே.

**அடிக்குறிப்புக்கள்**

1. பாலசுப்பிரமணியன். கே.எம்., 1999, சமய இலக்கியச் சிந்தனைகள், ப.35.
   "அதலசேடனாராட....." எனத் தொடங்கும் திருப்புகழில், விபுட தேவமாராயன் எனவரும் குறிப்பினால் இவர் விஜய நகர அரசர்களுள் ஒருவனாக விளங்கியிருந்த பிரபுட தேவராஜன் என்னும் மன்னனின் காலத்தில் வாழ்ந்தவர் எனத் தெரிகின்றது.
   "உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ, னுளமு மாட வாழ் தேவர் பெருமாளே" திருப்புகழ், (பொதுப்பாடல்கள்) - 1292, ப.833
2. பிராசந்தன். ஸ்ரீ, 2010, விஜயநகர நாயக்கர் காலத்தில் முருக வழிபாட்டின் புத்தெழுச்சி, பக்.243-255.
3. திருப்புகழ் (சிறுவை) - 736, ப.497-499.
4. இராமகேஷன். இ.,கிருஷ்ணன். ரா., 1998, அருணகிரிநாதர் அடிச்சுவட்டில், பக்.29-32.
5. Matchett, Freda., 2001, Krishna, Lord or Avatara? : the relationship between Krishna and Vishnu, p.4.
   "Whenever righteousness wanes and unrighteousness increases I send myself forth. For the protection of the good and for the destruction of evil, and for the establishment of righteousness, I come inti being age after age." (Gita:4. 7-8).
6. பத்மநாதன்.சி., (பிரதம பதிப்பாசிரியர்), 2005, இந்துக் கலைக் களஞ்சியம் தொகுதி ஏழு, (ஞா.தி), பக்.23-32.
7. இராமானுசர்., (தொகுப்பாசிரியர்), 1998, "நாலாயிர திவ்விய பிரபந்தம்" பெரியாழ்வார் திருமொழி - 1.5-9, ப.108.
8. திருப்புகழ் (திருவேங்கடம்) - 244, ப.168.
9. திருப்புகழ் (திருப்பரங்குன்றம்) - 10, பக்.07-8.
10. திருப்புகழ் (கீரனூர்) - 963, பக்.645-646.
11. திருப்புகழ் (சுவாமிமலை) - 26, பக்.153-154.
12. திருப்புகழ் (பேறைநகர்) - 732, ப.495
13. திருப்புகழ் (பொதுப்பாடல்கள்) - 1017, பக்.681-682.
14. திருப்புகழ் (திருச்செந்தூர்) - 61, பக்.42-43.
15. திருப்புகழ் (பேறைநகர்) - 732, ப.495.
16. திருப்புகழ் குன்றுதோறாடல் - 26, ப.201.
17. திருப்புகழ் (திருத்தணிகை) - 283, ப.193.
18. கந்தரலங்காரம் மூலமும் உரையும் - 15, ப.961.
19. திருவகுப்பு (சீர்பாத வகுப்பு) - 01, பக்.873-875.
20. திருப்புகழ் (பழனி) - 144, பக்.97-98.
21. திருப்புகழ் (திருத்தணிகை) - 256, பக்.175-176.
22. பழந்தமிழ் இலக்கியங்களில் புறநானூறு, பரிபாடல் (15.54-66), மற்றும் நற்றிணை என்பன பலராமனைத் திருமாலோடு சேர்த்து அவனுக்கு உடன் பிறந்தவனைப் போலக் குறிக்கின்றன.

"பால்நிற உருவின் பனைக்கொடி யோனும்
நீல் நிற உருவின் நேமி யோனும் என்று"
(புறநானூறு : 58.14-15)

"வள் அணிவளை நாஞ்சிலவை..."
(பரிபாடல்:15.54-66)

"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் எருவி"
(நற்றிணை : 32)

என இருவரையும் ஒரு சேரக் குறிக்கிறார்.

23. இராகவையங்கார். மு., 1964. ஆராய்ச்சித் தொகுதி. ப.54.
தொல்காப்பியம் "வாலியோன்" என்ற தெய்வப் பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. ஆயினும் உயிர் மயங்கியல் நூற்பா ஒன்று (286) பனைமுன் கொடிவரின் என்று தொடங்குகின்றது. இதைக் குறிப்பிட்டு மு.இராகவையங்கார். இங்ஙனம் பனைக் கொடியைத் தனியே எடுத்துக் கொண்டு ஆசிரியர் விதி கூறுதலினின்று அக்கொடி அக் காலத்து வழக்கு மிகுதி பெற்றிருந்தது என்பது பெறப்படும். இங்ஙனம் பிரபலம் பெற்ற பனைக் கொடி நம்பி மூத்தபிரானை பல தேவர்க்கன்றி வேறெவர்க்கும் உரியதென் றென்பது கற்றோர் அறிவர் என்கிறார்.

24. சாமிநாதையர். உ.வே., (பதிப்பு). சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும். 2001. 352
"வால்வளை மேனி வாலியோன் கோவிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"
(இந்திரவீழவூரெடுத்த காதை. 171-172)

25. .......................... நாலாயிர திவ்விய பிரபந்த தொகுப்பு - ஆண்டாள் திருப்பாவை, 1975. ப.08.
திருப்பாவையில் கோபியர்கள் கண்ணனைத் துயில் எழுப்பும் போது "செம்பொற் கழல் அடிச் செல்வா! பலதேவா!" என்று முதலில் பலரா மனைக் கூவியழைத்து "உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்" என்று பிரார்த்திக்கிறார்.
பெரியாழ்வாரும் பலராமனையும் கண்ண னையும் குறிப்பிடும் போது "பலதேவர்க்கு ஓர் கீழ்க்கன்று....." அதாவது கண்ணனை பல தேவர்க்கு இளையவன் என்றே குறிப்பிடு வார். அத்துடன் "மூவுருவிலி ராமனாய்...." என்ற பாடலில் மூன்று இராமன்களாக பரசு ராமர், தசரதராமர், "பலராமர்" ஆகியோரைக் குறிப்பிடுகின்றார்.

26. கந்தரந்தாதி மூலமும் உரையும் - 98, ப.958.

27. Srinivasan, R, K., 1960,Some aspects of Religion as revealed by Early Momuments and Literature, p.147.

28. திருப்புகழ் (திருத்தணிகை) - 257, ப.176

29. திருப்புகழ் (பழனி) - 124, பக்.85-86.

30. திருப்புகழ் (திருத்தணிகை) - 247, ப.170.

31. திருப்புகழ், (சுவாமிமலை) - 37, பக்.182

## குபேர வாசல் இராஜகோபுரம்

- நல்லூர்க் கந்தப் பெருமானின் குபேரவாசல் இராஜகோபுர அமைப்பிற்காக நவதானியம் விதைப்பு 10.08.2012 வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா அன்று காலைப்பொழுதில்
- குபேர வாசல் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது 20.11.2012 செவ்வாய்க் கிழமை கந்தசஷ்டி உற்சவ திருக்கல்யாணத்தின் போது காலை 6.00 மணி
- குபேரவாசல் இராஜகோபுரம் முதலாவது தளத்திற்கான கொங்கிறீற் 29.04.2013 இரண்டாவது தளம் 01.07.2013 மூன்றாவது தளம் 04.08.2013

- பதிப்பாசிரியர்

# திருமுறைப் பாடல்கள் அணிசெய்யும் சிவநெறி

கலாபூஷணம் மூ. சிவலிங்கம்

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

மூவுலகையும் உய்யும் வண்ணம் தோற்றுவித்தவர் முழுமுதற் கடவுளான சிவப்பரம் பொருள். அவனன்றி அணுவும் அசையாது. ஆட்டுவிக்கிறார். ஆடாதவர் எவரும் இல்லை.

மூவுலகிலும் வாழ்வோரை அவரவர் வினைப் பயனுக்கமைவாகவே தோற்றுவித்தார். இதனால் தேவலோக, பூலோக, பாதாளலோக வாசிகளுக்கு மாற்று உலகில் வாழவும் வினைப்பயனை அனுபவித்த பின் உயரிய பிறப்புகளை வழங்கியும் பரிபாலிக்கிறார்.

மனித குலம் பகுத்தறிவின் பேறாக நன்குணர்ந்து செயற்படவும் வேண்டிய ஆதாரங்களை வழங்கி வருகிறார். இறைவழிபாட்டை மனித குலம் சிறப்புடன் அனுசரிக்க உதவும் நோக்கில் காலத்துக்குக் காலம் தகுதியானவர்களை அவதரிக்கவுஞ் செய்துள்ளார். இறைவனின் பணிப்பை ஏற்று மிக அரியதான மானிடப் பிறவியில் அவதரித்த அருளாளர்கள் சித்தர்கள், சமய பக்தர்கள் தம் அருள் வாக்கினால், அரும் பெரும் பாடல்களினால் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியால் வழிகாட்டச் செய்தார்.

மானிடர்கள் நற்றவம் புரிந்து பெற்ற பக்குவ நிலையால் வேண்டுவதை வேண்டியவாறு வாரி வழங்கும் சிவப்பரம்பொருள் தாமே மனித உருவில் தோன்றி வாழ்ந்து காட்டியும் சிவநெறியை யாவரும் போற்றும் வண்ணம் செயற்பட்டார். முன்னொரு காலத்தில் பரத கண்டத்தில் மலையத்துவச பாண்டியன் என்பவன் தனது பிள்ளைக் கலியை நீக்கப் பார்வதிதேவியை மகளாக அவதரிக்குமாறு சிவசக்தியைப் பிரார்த்தித்தான். பாண்டியனின் தூய சிந்தனையை நிறைவு செய்யச் சிவப்பரம்பொருள் திருவுளங் கொண்டார். பார்வதிதேவியை நோக்கிய எம்பெருமான் பாண்டியனின் மகளாக அவதரிக்கும்படியும் உரிய நேரத்தில் தாமும் இணைவதாகவும் திருவாய் மலர்ந்தருளினார். இறையருளின் பேறாகப் பார்வதிதேவி பூவுலகில் பாண்டிய மன்னனின் புதல்வியானார். அப்புதல்வியின் நெடிய கண்ணழகும் சிறப்பும் அவருக்கு மீனாட்சி என்னும் பெயரைச் சூட வைத்தது.

மீனாட்சிதேவி பல வகையாலும் தமது சிறப்பை வெளிப்படுத்திய பேரிளம் பெண்ணாகத் தோற்றம் பெற்றார். முழுமுதற் கடவுளான சிவபிரானையே தாம் அடைய வேண்டுமென்று தியானித்தார். உரிய காலம் வந்ததும் இறைவனாக, சித்தராக, பிச்சாண்டியாக சிவவேடம் பூண்ட எம்பெருமான் பாண்டிய மன்னனின் மருமகனாக வந்து மீனாட்சியை மணந்து பாண்டிய மன்னனாக காட்சி தருகிறார். இக்காட்சியில் எம்பெருமானின் சிவக்கோலமும் மாற்றம் பெறுகிறது.

இறைவனின் தலையை அலங்கரித்த கங்கையும் வளர்பிறையும் அணிந்த சடாமுடி மணிமுடியானது. தோளில் புரண்ட பொங்கரவம் நவமணி மாலைகளாக அமைந்தன. கொன்றை மாலை பாண்டிய மன்னரின் வெற்றிக்கடையாளமான

வேப்பம்பூ மாலைகளாகின. அவர் அணிந்திருந்த யானையுரியும் புலியதலாடையும் பட்டுப் பீதாம்பர மாக மாறின. எம்பெருமானின் கையிலிருந்த தண்டும் திரிசூலமும் செங்கோலாக மாறின. ஏவல் செய்த சிவகணங்கள் பாண்டிய நாட்டின் மந்திரி பிரதானிகளாக மாற்றம் பெற்றனர். இவ்வாறு மாற்றம் பெற்ற இறைவனை அழகும் ஆற்றலும் வற்றாத கருணையும் நீதி தவறாத செங்கோல் ஆட்சியும் சுந்தரேஸ்வரப் பெருமான் என யாவராலும் போற்ற வைத்தது. சுந்தரேஸ் வரர் மீனாட்சி தம்பதியினர் வாழ்வாங்கு வாழ்ந்து யாவரையும் உரிய நெறிப்படி வாழ வழிகாட்டிப் பிற்காலத்தில் சக்திமிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய வழிபாட்டையும் தோற்றுவித்தனர். இக்காலத்தில் செந்தமிழும் சிவநெறியும் செழித் தோங்கியது. "தென்னாடுடைய சிவனே" என இன்றும் சிவநெறியாளர்களின் சிந்தையும் நாவும் உச்சரிக்கின்றன.

இறைவனின் பேரருளால் பரத கண்டத்தில் பாடல் பெற்ற சிவாலயங்கள் 274 உருவானது. இவற்றுள் இருநூற்றையும் தாண்டிய சிவாலயங் கள் தமிழகத்தில் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. பிற்காலங்களில் அவதரித்த நாயன்மார்கள், சிவநெறியாளர்கள், சித்தர்கள் மூலம் சிவநெறி போற்றும் திருமுறைப் பாடல்கள் பல்லாயிரக் கணக்கில் உருப்பெற்றன. இவற்றுட் பல சிதை வுற்றபோதும் ஆயிரக் கணக்கான பாடல்கள் அருளாளர்களால் அறிமுகஞ் செய்யப்பட்டன. எம் பெருமானின் திருவருளால் செந்தமிழ் வளர்ந்தது. தொன்மை மொழியான தீந்தமிழ் பார்போற்றும் சிறந்த செம்மொழிகளுள் ஒன்றாக இன்றுவரை போற்றப்படுகிறது. தமிழ்நாட்டின் சிவநெறி உய்வடையும் வண்ணம் தோற்றுவிக்கப் பெற்ற தேவார முதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மற்றும் திருவாசகமும் திருக்கோவையும் தந்த மாணிக்கவாசகர், திரு மூலர், பட்டினத்தார், காரைக்கால் அம்மையார், திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார், திருப் புராணம் பாடிய தெய்வச் சேக்கிழார் உட்படப் பல அருளாளர்கள் இறைவன் மீது பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப் பெற்றன. இப் பெரியார்கள் யாவரும் சிவபக்தர்கள். செந்தமிழு க்கு அணி சேர்த்தவர்கள். இவர்களின் தூய தமிழி லான திருமுறைப் பாடல்கள் வேறெந்த நாட்டிலும் காணப் பெறாத சிறப்பும் பெருமையும் சொல்லழ கும் வாய்ந்தவை. இப்பன்னிரு திருமுறைகளும் சிவப்பரம் பொருளையே வழிபடு தெய்வமாக அமைந்து சிவநெறியை மேம்படுத்துகின்றன.

சிவம் எவ்வாறு மேம்பட்டதோ அவ்வாறே சக்தியின் பெருமையையும் போற்றும் நவராத்திரி விரத காலம், கௌரி காப்பு நோன்பு காலம், காரடையா நோன்பு காலம் போன்ற பல விசேட காலங்களை அலங்கரிக்கும் சக்திக்குரிய பாடல் கள் பலவற்றைப் பல அருளாளர்கள், கல்வி மான் கள் பாடிப் பல அற்புதங்களையுஞ் செய்வித்துள்ள னர். அவற்றுள் அபிராமி அந்தாதி, சகலகலா வல்லி மாலை மற்றும் முத்தேவியரைப் போற்றும் துதிப் பாடல்கள் மாரியம்மன் தாலாட்டுப் பாடல் கள், தேவி பாகவதம் என்னும் சக்தியின் பெருமை களைக் கூறும் நூல்கள் எனப் பற்பல பாடல் களும் நூல்களும் சக்தி வழிபாட்டுக்கு ஏற்றமை சக்தியின் பேரருளேயாகும்.

விநாயகப் பெருமானை முன்னிறுத்தாத எந்தக் காரியமோ, பாடல்களோ நூல்களோ சிறப் படை யாது. தமிழ் மண்ணில் தோற்றுவிக்கப் பெற்ற சகல ஆவணங்களுக்கும் விநாயக காப்பே முன் நிற்கும். மேலும் விநாயகர் புராணம், ஔவை யார் பாடிய அகவல் மற்றும் விநாயகர் அந்தாதி போன்ற பல அற்புதமான பாடல்கள் விநாயகர் எளி மையாக இருந்தாலும் பெருமையாகப் போற்றப் படுகிறார். இதனால் எம்மண்ணில் சிவநெறியுடன் சைவவழிபாடு சிறப்படைந்தமை குறிப்பிடத் தக்கது.

**முருகப் பெருமான்**

முன்னொரு காலத்தில் அசுர குலத்தவரான சூரன் என்பவன் தமது தம்பியரிருவருடன் சேர்ந்து

மூவுலகையும் அடக்கி ஆள எண்ணினான். இதற் காக இறைவனிடம் வேண்டிப் பல வரங்களைப் பெற்றான். பெற்ற வரங்களினால் தேவர்கள், முனி வர்களைக் கொன்றும் பல கொடுமைகள் புரிந்தும் மூவுலகிலும் அரச போகத்தை அடைந்தான். அசுரனின் கொடுமை தாங்காத தேவர்களும் முனிவர்களும் இறைவனை நாடிக் கயிலயங் கிரிக்குச் சென்று முறையிட்டனர். கொடுமை செய்த அசுரர்களை அழிக்கவென திருக்குமர னொருவரைத் தோற்றுவிக்க இறைவன் திரு வுளம் பாலித்தார். தமது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளை உகுத்தார். அப்பொறிகள் யாவும் தமிழகத்தின் சரவணப் பொய்கையைச் சேர்ந்தன. ஆறு குழந்தைகளாக மாறின.

இக்குழந்தைகளைப் பார்க்கச் சென்ற சிவசக்தி யினர் பெருமையடைந்தனர். உமையவள் ஆறு குழந்தைகளையும் ஒன்றாக வாரி எடுத்தபோது ஆறுமுகப் பெருமான் தோன்றினார். ஆறுமுகப் பெருமான் தமிழகத்தில் உதித்த தமிழ்க்கடவுளா னார். இவர் மழலைப் பருவம் மாறியதும் அசுரர் களை அழிக்கும் பணியை ஏற்றார்.

சூரன் முதலான அசுரர்களை அழிக்கப் புறப்படும் முருகனுக்கு உதவியாக உமையவள் தமது முழுச்சக்திகளையும் ஒன்றிணைத்த ஞானச்சக்தி வேலைக் கொடுத்து "சென்று வா மகனே போரில் வென்று வா" என ஆசீர்வதித்து வாழ்த்தி அனுப்பினார். இறையருள் கைகூட்ட முருகப் பெருமான் சூராதி அசுரர்களை அழித்து யாவரையும் உய்ய வகை செய்தார். தமிழ்க் கடவுளான முருகப் பெருமான் தமிழகத்திலேயே அசுரரை அழித்ததும் இளம் வயதிலான குறும்புப் புத்தியினால் குன்றுகள் தோறும் ஓடி உலாவி வலம் வந்து ஆறு இடங்களில் தங்கியிருந்து அற்புதங்கள் பலவற்றையுஞ் செய்தார். அவர் தங்கிய குன்றுகள் யாவும் ஆறுபடை வீடுகள் என வழங்கப் பெற்றன. இதனால் முருகப் பெருமானு க்கு இருதேவியரின் இல்லற பந்தமும் பெருமை யும் ஏற்பட்டன.

**கச்சியப்பச் சிவாச்சாரியாரின் கந்தபுராணம்**

முருகப் பெருமான் தமது பெருமையையும் புகழையும் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பரந்து வாழும் எம் தமிழினம் அறியவும் விரதமிருந்து ஆசாரசீலர்களாக விளங்கவேண்டுமெனவும் சித்தங் கொண்டார். தமது சொந்த மொழியான தமிழ் சிறக்கவும் தமது புகழைப் பாடல்கள் மூலம் புராண காவிய மூலம் யாவரும் அறியும் வண்ணம் தகவல்களைத் தோற்றுவிக்க எண்ணி னார்.

பதின்நாலாம் நூற்றாண்டில் காஞ்சிமாநகரின் கந்தகோட்ட முருகப் பெருமானின் பரம்பரை அர்ச்ச கர் குடும்பத்திற் தோன்றிய கச்சியப்ப சிவாச்சாரி யாரின் கனவிற் தோன்றிய முருகப் பெருமான் தமது கதையை வரலாற்றுப் புராண நூலாக எழுதுமாறு கூறினார். இப்புராண நூலுக்கு ஆரம்பம் "திகடசக்கரம்" என்று தொடங்குமாறும் பணித்து மறைந்தருளினார். முருகப் பெரு மானின் அன்புக் கட்டளையை ஏற்ற கச்சியப்பச் சிவாச்சாரியார் தம்பணியை ஏற்க எண்ணினார்.

ஒரு சுபதினத்தில் வழமை போல முருகப் பெருமானின் பூசைக் கடமைகளை நிறைவு செய்ததும் நன்கு வழிபட்டார். ஆலயத்தில் ஓர் அமைதியான இடத்திலமர்ந்து ஒரு நாளில் நூறு பாடல்களைப் பாடுவதாக முடிவு செய்தார். முதலில் முருகப் பெருமான் எடுத்துக் கொடுத்த "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" எனும் விநாயகர் காப்பினைத் தொடர்ந்து நூறு பாடலை எழுதி முடித்தார். எழுதிய ஏட்டினைக் கட்டி ஆலய வாசற் படியில் வைத்ததும் வீடேகினார். மறுநாட்காலை வந்து ஏட்டினைப் பார்த்தபோது ஏட்டினிற் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தது. இதனைக் கண்டதும் முருகப் பெருமானே தமது புராண காவியத்தைப் படித்தும் இடையிடையே இருந்த பிழைகளைத் திருத்தஞ் செய்தாரெனவும் உணர்ந்து பெருமகிழ்வடைந்தார். இவ்வாறு கந்த புராண காவியம் நிறைவு செய்ததும் அதனை அரங்கேற்றவும் முன்வந்தார்.

**கந்தபுராண அரங்கேற்றம்**

ஒரு புனித நன்னாளில் தொண்டை மண்டலத்திலுள்ள புலவர்கள், பண்டிதர்கள், கற்றோரும் மற்றோரும் அடங்கிய பலரையும் கந்த கோட்டத்து முருகன் ஆலயத்தில் கூடி தமது கந்தபுராண நூலை ஆசீர்வதித்து அரங்கேற்று மாறு அழைப்பித்தார். உரிய நேரத்தில் யாவரும் ஒன்றுகூடிய மகாசபை ஆரம்பமானது. பலரின் வேண்டுதலுக்கு ஏற்பக் கச்சியப்பச் சிவாச்சாரியார் முருகனை நெஞ்சில் நிறுத்தி "திகடசக்கரச் செம் முகம் ஐந்துளான்" என்ற பாடலைப் பாடி முடித்தார். அப்போது சபையிலிருந்த முதுபெரும் புலவர் பெருமான் எழுந்து "திகள் சக்கரம்" என்ற பதம் "திகட சக்கரம்" எனப் புனைந்த விதியைக் கூறுமாறு வாதாடினார். அச்சமயம் முருகப் பெருமானே இப் பதத்தை அடி எடுத்தார். இதனை நீவிர் ஏற்கலாமே என்று கச்சியப்பர் பணிவுடன் கூறினார். வாதிட்ட புலவர் இதற்கான விதியை முருகப் பெருமானே வந்து இச்சபையில் விளக்க வேண்டும் என்றதும் சபை கலைந்தது. கச்சியப்ப சிவாச்சாரியார் வேதனையுடன் முருகனின் ஆலயத் திருமுன் படியில் ஏடுகளை வைத்ததும் நிலத்தில் விழுந்து அழுது புலம்பினார். நெடுநேரம் அழுத கவலையுடன் அசதியில் அவ்விடத்திலேயே உறங்கிவிட்டார்.

அச்சமயம் முருகப் பெருமான் கனவிற் தோன்றி நாளை மறுபடியும் சபை கூடட்டும். சோழ நாட்டுப் புலவரொருவர் விதிகளைக் கூறுவார் என்றதும் மறைந்தருளினார். உரிய முறைப்படி மறுநாள் சபை கூடியது. மகா சங்கப் புலவர்களி டையே எவருமறியாத இளம் புலவரொருவர் தமது கையில் ஒரு நூற் பிரதியுடன் அமர்ந்திருந்தார். முதல் நாள் வாதிட்ட புலவர் கச்சியப்பச் சிவாச்சாரி யாரை நோக்கி முதல்நாளன்று கூறிய பாடலின் விதியைக் கூறுமாறு கேட்டதும் அங்கு தோன்றிய இளம்புலவர் எழுந்து நாம் சோழ நாட்டினோம். எம்மிடமுள்ள இச்சுவடி "வீரசோழியம்" என்னும் இலக்கண நூலாகும். இந்த நூலின் சந்திப் படலத்தில் பதினெட்டாம் பாடலில் ழகரமும் கூடி டகரமாவதற்குரிய விதி கூறப்பட்டுள்ளதை நீவிர் அறியீரோ என்றார். அப்போது சபையிலிருந்த பல புலவர்கள் "ஆம் ஆம்" வீரசோழியம் பற்றியும் இவ்விதி பற்றியும் அறிந்தோம். தக்க நேரத்தில் இவை எமது சிந்தைக்கு வரவில்லையே என்பது வியப்பாகும் என்றனர். உடனே இளம் புலவர் மறைந்தருளினார்.

அச்சமயம் சபையிலிருந்த புலவர்கள் யாவரும் நேரில் வந்து விளக்கம் அளித்தவர் முருகப் பெருமானே என்று வியந்தனர். வாதிட்ட புலவர் கச்சியப்பரின் பாதங்களில் விழுந்து வணங்கி அரங்கேற்றத்தை இடைநிறுத்தியதை மன்னிக்கு மாறு வேண்டினார். கச்சியப்பர் அவரை நோக்கிப் புலவரே உங்களாலன்றோ நாமும் முருகப் பெரு மானை நேரிற் காணும் பேறு பெற்றோம். இதற் காக எம்மை நீங்கள் மன்னிக்க வேண்டுமென் றார். அச்சமயம் கச்சியப்பரையும் கந்தபுராண ஏடுகளையும் பல்லக்கிலேற்றித் தொண்டை மண்டலம் முழுவதும் பவனி வந்து உற்சாக வரவேற்பளித்தனர்.

இப்பெருமைக்குரிய கந்தபுராண படனம் அன்றுமுதல் கந்தபுராண கலாசாரம் என்னும் பெருமையுடன் பாரெங்கும் சிறப்படைந்தது. முருக பக்தர்கள் யாவரும் உள்ளன்போடு கந்த புராணத்தை ஓதி உணர்ந்து சிறப்படைந்தனர். இக்கந்த புராண கலாசாரம் தமிழகத்தில் அருகிய போதும் நாவலர் பெருமான் யாழ் மண்ணில் கந்த புராண படனஞ் செய்யும் பண்பை ஏற்படுத்தினார். இங்குள்ள பட்டிதொட்டி எங்கணும் கந்தபுராண படனம் செய்யப்பட்டு இன்றுவரை சிறப்பிக்கிறது. இன்று நகர்ப்புற ஆலயங்களில் அருகினாலும் கிராமப்புற ஆலயங்களில் கந்தபுராண படனம் சிறப்புடன் இயங்குவது பெருமைக்குரியது. கந்த புராண படனம் பக்தி வளர்க்கும் திறமையால் இன்று யாழ்ப்பாணம் பாரெங்கும் வியக்கும் பெருமையின் உறைவிடமாக அமைந்தமை இறையருளேயாகும்.

**அருணகிரிநாதரும் திருப்புகழும்**

முருகப் பெருமான் தமது புகழை இசைமூலம் மக்கள் மனமுருகப் பாடி உய்யும் வண்ணம் அருணகிரிநாதரைத் தோற்றுவித்துத் திருப்புகழ் பாட வைத்தார்.

முன்னொரு காலத்தில் திருவண்ணாமலை தியாகேசர் சந்நிதியில் ஆலயப் பணியாற்றிய உருத்திர கணிகையர் குடிப்பிறந்த முருக பக்தை யான முருகம்மை என்பவர் சிறந்து விளங்கினார். முருகம்மையின் கனவிற் தோன்றிய முருகப் பெருமான் முருகம்மையின் மகனாக உதிக்கும் பாலகன் எதிர்காலத்திற் சிறப்படைவான் எனக் கூறி மறைந்தார். முருகப் பெருமானின் திருவாக்குப் படி உரிய காலத்தில் முருகம்மை ஓர் அழகிய ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அப்பிள்ளைக்கு "அருணகிரி" எனப் பெயரிட்டு வளர்த்தாள். மகனின் பள்ளிப் பருவம் வந்ததும் பாடசாலையில் இணைத்தபோதும் மகன் கல்வி யில் நாட்டமின்றி இருந்தான். முருகம்மைக்கு ஏற்கனவே ஆதி என்னும் மகளும் இருந்தாள். ஒருநாள் முருகம்மை மகளை அழைத்து அருணகிரியை அவனின் தாயாகவும் ஏற்று வேண்டியவற்றைத் தந்துதவுமாறு கூறினாள். குறுகிய காலத்தில் முருகம்மை மறுமையடைந் தாள். தாயின் சொத்துக்கள் யாவற்றையும் ஆதி தம்பிக்கே கொடுத்து வளர்க்கவும் ஆயத்த மானாள்.

அருணகிரி முன் பிறவியின் தொடர்பில் இப்பிறவியில் தீய நண்பர்களுடன் உறவாடி பலராலும் அவமதிக்கப் பெற்றார். பதினாறு வயதில் சிறப்பான தோற்றமும் பணப்புழக்கமும் இருந்ததால் பொது மகளிரால் கவரப்பட்டார். இதனால் பாலியல் நோயும் பணநெருக்கடியும் ஏற்பட்டன. தீய நண்பர்கள் அகலவும் அருணகிரி வறுமையாலும் நோயாலும் உடல் வலுவாலும் பாதிக்கப்பட்ட நிலை ஏற்பட்டது. இறையருளும். நல்வினைப் பயனும் உதவிட தான் உயிருடன் வாழ்வதிற் பயனில்லை என உணர்ந்த அருண கிரி திருவண்ணாமலைக் கோபுர உச்சியில் ஏறி "முருகா" எனக் கூறிய வண்ணம் கீழே குதித்தார். உரிய நேரம் காத்திருந்த முருகப் பெருமான் அருணகிரியைத் தாங்கித் தடுத்தாட்கொண்டார். அருணகிரிக்குத் திருநீறிட்டுத் திருவடி தீட்சையும் தந்தார். அருணகிரியின் நோய்கள் அகன்றன. அருள்ஞானம் பெற்றதால் முருகனை வணங்கி நின்றார். முருகனாணைப்படி திருப்புகழ் பாடி ஆலய வடக்கு வாசலில் யோக நிலையிலிருந்தார்.

அருள்ஞானம் பெற்ற அருணகிரி தமது நோய் கள், கவலைகள் தீரவும் முருகப் பெருமானின் பணிப்பின் பேரில் இந்தியாவில் 226 திருத்தலங்க ளைத் தரிசித்த வண்ணம் அழகான திருப்புகழ் பாடியும் பல அற்புதங்கள் செய்தும் பெருமைய டைந்தார். இவர் தாம் பெற்ற அருள் ஞானமும் குரல் வளமும் உதவிடப் பல்லாயிரம் பாடல்க ளைப் பாடினார். சிதைவுற்றவை போக எஞ்சிய 1328 பாடல்கள் தற்பொழுது போற்றப்படுகின்றன. முருகப் பெருமானையே போற்றும் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, வேல் மயில், சேவல் விருத்தங்கள், திருஎழுக் கூற்றிருக்கை, கந்தரனுபூதி போன்ற பல இனிய பாடல்களைத் தந்துள்ளார். பன்னிரு திருமுறை யில் திருவாசகம் போல அருணகிரியாரின் பாடல்கள் தேன் சொட்டும் சொற்சுவை பொருட் சுவை மிக்கவை. யாவும் தெய்வீகப் பாடல்களா கவே அமைந்துள்ளன. இறைவழிபாட்டில் திரு முறைகளுக்குப் பின் பாடப் பெறும் திருப்புகழ் சமய வழிபாட்டின் எல்லைக்கே வரக்கூடியவை. முருக பக்தர்களுக்கு மேலும் பக்தி வளர்க்கக்கூடிய ஆற்றல் மிக்க திருப்புகழ் சைவ சமயத்தவர்களின் அசையாத சொத்தாகவே போற்றி நுகர வைக்கிறது.

**நல்லூர் கந்தசுவாமி கோயிலும் திருமுறைகளும்**

யாழ்ப்பாணத்தின் பெருமையைப் பாரெங்கும் வியக்க வைக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயில் இன்று உலகிலேயே பெருமையுடன் வழிகாட்டி யாகவும் சைவசமயத்தின் அழியாத சொத்தாகவும்

அமைந்தமை எம்மண்ணின் பேறாகும்.

ஆலயத்தின் நிர்வாகம், பூசை முறைகள், நேரக் கணிப்பு, வசதிகுறைந்தோரும் பங்குபற்றக் கூடிய அர்ச்சனைப் பற்றுச்சீட்டின் ஒரு ரூபா பெறுமதி (ஐம்பது வருடங்களுக்கு மேலாகவே ஒரு ரூபா பெறுமதியே தொடர்கிறது) ஆலயத் திருவிழா, அபிஷேகங்களின் குறைந்த செல வினம் (வரையறுக்கப்பட்டவை) பெருந்திருவிழா உபயகாரர்களை நாடிச் சென்று பழைய முறைப் படி மாட்டு வண்டில் மூலம் அறிவிக்கும் பண்பு, அன்று தொட்டே அர்ச்சகர்கள், பூ வேலைக்காரர், இசை வேளாளர், பண் ஓதுவார், கோசாலை, ஆலயப் பணியாளர் மற்றும் கட்டட வேலைக்கான பல்லின வேலையாட்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டோருக்கான சம்பள விநியோகம் (வாராந் தம்) யாவும் ஆலயக் கணக்கப் பிள்ளையின் பணியாக ஆலய அறங்காவலரின் நேரடிக் கண் காணிப்பில் நடைபெறுகிறது. இவ் வாலயத்தின் முகாமைத்துவமும் சிறப்புகளும் பல்லோராலும் போற்றப்படுவதை நாம் அறிவோம். ஒரு ரூபா அர்ச்சனை நிதி மூலமும் பக்தர்களின் ஆதரவும் ஆலயக் கட்டுமானங்கள் வருடா வருடஞ் சிறப் படைகிறது. தெற்கு வாசற் கோபுரம் (2012) வடக்கு வாசற் கோபுரம் (2013, 2014) யாவராலும் போற் றப்படும் விசாலமும் உயரமும் நல்லை முருகனின் பெருமைக்கு அணிகலனாக அமைந்துள்ளது.

### திருமுறைகள்

சைவத்தையும் தமிழையும் உய்விக்கத் தோன்றிய நாவலர் பெருமான் சுவாமி ஊர்வலம் வரும்போது சுவாமியின் பின் திருமுறைகளை ஓதுவார் மூலம் ஓத வைத்தார். இப்பணியானது தோத்திரங்கள், பண்ணிசைப் பாடல்கள், திருப்புகழ் என இன்று வரை தொடர்கிறது. நெடுங்காலமாகப் பூசை வேளையில் நியமிக்கப் பெற்ற ஓதுவார்களே பாடி வருகின்றனர். அண் மைக் காலங்களிற் குறிப்பிட்ட பெருவிழா உள்வீதி உலாவின் போது மங்கல வாத்தியமின்றி திருப்புகழ் மற்றும் வேறு நாட்களில் திருமுறைகள் இசைக் கலைஞர்களால் சிறப்பாக ஓதப்படுகிறது. வெளி வீதியில் அடியார்களின் பல்வேறு குழுக்கள் உள்ள முருகப் பாடி வருகின்றன. தென் திசையி லுள்ள நாவலர் மணி மண்டபத்தில் யாழ் மாவட்ட அற நெறிப் பாடசாலை மாணவர்கள் பெருவிழாக் காலங்களில் திருமுறை ஓதல் சமயச் சொற் பொழிவுகள் நடாத்தி வருகின்றனர். இக்காலத்தில் ஆலய வெளி வீதிகளில் அமைந்துள்ள சகல பொது நிறுவனங்களிலும் பண்ணிசை, மெல்லிசை, வில்லிசை, இசைச் சொற்பொழிவு யாவும் ஆன்மிக நெறிக்கு மெருகூட்டுகின்றன. இவை யாவும் முருகப் பெருமானின் திருவிளையாடலேயாகும்.

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
நேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி"

## சூரிய பகவான் பிரதிஷ்டை

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் **22.07.2012** ஞாயிறு காலை 7.00 மணியளவில் **சூரியபகவான்** எழுந்தருளி விக்கிரகம் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

- பதிப்பாசிரியர்

# கம்பரின் கும்பகர்ணனும் கச்சியப்பரின் சிங்கமுகாசுரனும்

கு.பாலஷண்முகன்
ஆசிரியர்

## அறிமுகம்

மொழி வளர்ச்சி என்பது காலத்தின் தேவை. அதாவது கால மாற்றத்திற்கேற்ப மொழி தன்னை இயைபுபடுத்திக் கொள்வதுவே மொழி வளர்ச்சி யாகும். அவ்வகையில் செம்மொழி அந்தஸ்துப் பெற்ற நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி ஆதியில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாக விடுத்து இனிது அறிவியற்றமிழை ஓரம்சமாக உள்வாங்கி யிருப்பது மொழி வளர்ச்சியில் புதியதொரு பரிணாமம். அது போலவே இலக்கியப் பாரம் பரியத்தில் ஒப்பியல் இன்று ஒரு முக்கிய துறையாக வுள்ளது. இரு மொழிகளிலுள்ள இலக்கியங்கள், பாத்திரங்கள் முதலான அம்சங்களை ஒப்பிடுவது அல்லது ஒரே மொழியில் இரண்டு இலக்கியங்கள் அல்லது பாத்திரங்கள் முதலானவற்றை ஒப்பிடுவ துவே ஒப்பியல் என்பதனால் குறிப்பிடப்படுவது. அந்தவகையில் மொழி வளர்ச்சிக் கூறாகவிருக் கும் ஒப்பியல் எனும் துறை சார்ந்த ஓரம்சமாக ஒரே மொழியில் உள்ள இரு இலக்கியங்களின் உயர்தரங்களை ஒப்பிட்டாராய்வதாக இவ்வெழு த்து முயற்சி அமைகிறது.

## ஒப்பீடு

"கல்வியிற் பெரியன் கம்பன்", "கவிச்சக்கர வர்த்தி கம்பன்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்", "கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கிதயம் களியாதே" என்றெல்லாம் போற்றப்படுபவர் கம்பர். சோழர் காலத்தில் 12ஆம் நூற்றாண்டில் தஞ்சையைச் சேர்ந்த திருவழுந் தூரில் ஆதித்தன் என்பவருக்குப் பிள்ளையாகப் பிறந்தவர். கம்பநாடு என்ற பெயருடைய நாட்டிற் பிறந்ததால் இப்பெயர் பெற்றார் என்றும், தம்பத்தி னடியில் உவச்சன் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டார் எனவே கம்பர் எனப்பட்டார் என்றும் பெற்றோரால் இட்ட பெயர் என்றும் பலவாறு கூறுவர். பல கல்வெட்டுக்களிலும் காஞ்சியில் எழுந்தருளி இருக்கும் இறைவர் திருப் பெயராகிய ஏகம்பர் பெயரைப் பெற்றார் என்றும் கூறப்படுவதால் கம்பர் என்பது இயற்பெயராய் இருத்தலே அதிக சாத்தியமானது; நிற்க இப் பெயருடையார் அறிவில் மேம்பட்ட கவித்துவத்தில் மகோன்னத நிலையில் நின்ற ஒருவர் அற்புதமான பிரபஞ்ச பிரம்மா. வடமொழியில் வசிட்டர், வான்மீகி, போதாயனர் ஆகிய மூவர் பாடிய ராமணக்கவிகளில் வான்மீகியாம் முந்திய கவியின் நூல் நயந்து தமிழிற்கவி செய்தார் என்று தாமேயுரைக்கின்றார். "முந்திய நாவினுரையின் படியான் தமிழ் பாவினல் இஃதுணர்த்திய பண்பறோ" (அவையடக்கம்) என்கிறார் இவர் படைத்த அற்புதமான காப்பியம் இராமாயணம். வடமொழி மூலத்தால் தமிழிற்றமுவகையில் அமைந்தது. பல தமிழ்ப்பண்பாடுகள் உள்ளிறுத்து தமிழ் நாட்டுக் கலாசாரங்களுக்கும் களம் தந்து சில புதுமைகளும் செய்து பாடினர்.

அது போன்று தொண்டைநாடு சான்றோரு டைத்து என்று போற்றப்படுகின்ற தொண்டை நாட்டின் காஞ்சிமாநகரில் கச்சியந்தலத்தில் ஆதி சைவர் திருமரபில் வந்த காளத்தியப்பச் சிவாச்சாரி யார் பயந்த மகவு கச்சியப்பர். கந்தபுராணம் என்பது வடமொழியிலமைந்தது. பெருமை மிகுந்த பண்டைய புராணம். இதன் ஆறு சங்கிதைகள்

சங்கர சங்கிதையின் முதற்காண்டமாகிய சிவரக சிய காண்டம் பேசுகின்ற நம் பெருமையைத் தமிழ் பாடுக என்று செவ்வேற் பெருமான் கனவினால் திருவுள்ளம் பாலித்தமையை நினைந்து இறைவன் திருவிருப்பின் படி, எங்ஙனம் பாடமுடியும் என்று சோர்ந்த கச்சியப்பர் ஒருவாறு அவனருளால் உறுதி கொண்டு தமிழிற்கந்தபுராணம் பாடி நிறைவு செய்தார். கச்சியப்பர் பாடிய பாடல்களில் இறைவன் தம் திருக் கரத்தால் திருத்தங்களும் இடம்பெற்றன என்று வரலாறு பகரும். தமிழிற் சிறந்ததொரு புராண இலக்கியமாக இஃது திகழ்கிறது. 13ஆம் நூற் றாண்டின் இறுதியில் அல்லது 14ஆம் நூற்றாண் டின் நிறைவில் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர் கருத்து.

கம்பருடைய ராமகாதை பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று ஆறு காண்டங்கள் மொத்தம் 114 படலங்கள் ஏறத்தாழ பாடல்கள் 12,000 என்று இன்று நமக்குக் கிடைக்கும் காப்பியத்தகவல்கள் உள.

கந்தபுராணத்தில் வடமொழியில் ஆறு சங்கிதை, சங்கர சங்கிதை 12 காண்டங்கள் அவை 23,000 கிரந்தங்கள். அதில் முதலாவது சிவரகசிய காண்டம். அதிலுள்ள 7 பகுதிகளில் ஆறு பகுதிகள் முருகனது பெருமைபேசுவன. அவற்றைக் கச்சியப்பர் தமிழில் செய்தார். உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என தமிழில் 6 காண்டங்கள் 135 படலங்கள் 10,345 பாடல்கள்.

கம்பர் இராமாயணத்தை மேட்டழகிய சிங்கர் சந்நிதியில் அரங்கேற்றினார். இரணியன் வதை படலம் படித்தபோது மேட்டழகிய சிங்கர், கர்ணனை பண்ணியதாக வரலாறு உண்டு. அரங்கேற்றத் தில் திவலை எனும் பொருளில் "துமி" என்ற சொல் வந்தமைக்கு விளக்கம் கேட்க கம்பர் பதிலிறுத்து அரங்கேற்றினார் என்பது அரங்கேற்ற வரலாறு.

கச்சியப்பர் கந்தபுராணத்தை காஞ்சி மாநகரின் குமரகோட்டச் சந்தியில் அரங்கேற்றம் செய்தார். திகழ்தச என்பது திகடச என்று வந்தமைக்கு ஆட் சேபனை தெரிவிக்கப்பட்டு முருகக் கடவுளே வந்து வீரசோழியத்திலிருந்து விளக்கம் கொடுத்து அரங் கேற்றி வைத்ததாக வரலாறுண்டு. இவ்வகையில் இவ்விரு பெருங்காப்பியங்களும் சோழர் காலத் தவை. 10,000 இற்கு மேற்பட்ட பாடல்கள், 6 காண்டங்கள் உடையவை. இரண்டும் இந்துசமய வழிபாட்டு நூல்களாக அமைந்தவை எனும் ஒற்றுமைகள் உடையவை.

கம்பரது காதையில் ஸ்ரீராமபிரான் காவிய நாயகன் மறம் நிறைந்த அரக்கனாக வில்லன் போன்றமைந்தவன் இலங்கை வேந்தன் இராவ ணேஸ்வரன். அந்த ராவணபவனத்தில் தம்பியாக வருகிறான் கும்பகர்ணன். மற்றொரு சகோதரன் விபிடணன். ஒரு சோதரி சூர்ப்பணகை. இரு ஆண்சோதரர்க்கும் ஒரு பெண் சோதரிக்கும் உறவாய் 2ஆம் பிள்ளையாக அமைந்தவன் கும்பகர்ணன். அறம் உணர்ந்த அறிஞன் தவத்தினாற் கிட்ட வேண்டிய பலன் தேவரிழைத்த வஞ்சனையால் அவமாயிற்று ஆக்கத்திற் கழிக்க வேண்டிய காலத்தைத் தூக்கத்தில் கழித்தான்.

கச்சியப்பரின் கந்தபுராணத்தில் ஸ்ரீமுருகப் பெருமான் காவிபத்திலமைப் பாத்திரம். ஆணவ வடிவினனாக சூரபன்மன் என்ற அசுரன். அவனு க்கு நேரே இளைய தம்பியாக சிங்கமுகாசுரன். அவனுக்குத் தம்பி தாரகன் ஒரு பெண் சகோதரி அசமுகி. சிங்கன் அறம் - தர்மம் பற்றி நன் குணர்ந்தவன் விதிவசம் வேதனைப்படுகின்ற பாத்திரம்.

இரண்டு காவியங்களிலும் காப்பியத் தலை மைக்கு முரணும் பாத்திரங்கள் தவமிருந்து வரம் பெற்ற பக்திமான்கள் தவறிழைத்த குற்றத்திற்கு தண்டனையாக வீழ்ச்சி காண்கிறார்கள். இனி இவ்விரு காப்பியங்களும் அமைந்த குறிப்பிட்ட

பாத்திரங்களான கும்பன் பற்றியும் சிங்கன் பற்றியும் சிறிது நுணுகி நோக்குவோம்.

இராம காதையின் 3ஆம் காண்டமாகிய ஆரண்ய காண்டத்திலேயே புறத்திலிருந்து துன்பம் வருகிறது. அதுவரையில் குடும்பத்தின் இடர்கள் சூழ்ந்திருந்து நிலையோய் அடுத்த வீட்டுக் காரனால் பிணக்குண்டாகிறது. இராவணன் மாரீசன் உதவியுடன் சீதையைக் கடத்திய வரலாறு அது. அனுமன் இலங்கைக்கு வந்து சீதையைக் கண்டு மீளுகின்ற போது பல அழிவுக ளைச் செய்து விட்டான். யுத்த காண்டத்தில் இரண் டாவது படலமாகிய இராவணன் மந்திரப் படலத்தில் அனுமன் வந்து செய்த அழிவு முதல் சகல விடயங்களையும் ஆராயும் காலை தன் மூத் தோன் முயல்வது தவறு என்பதைக் கும்பகர்ணன் கூறுகிறான்.

அறத்தாறுணர்ந்த அறிஞனாகினும் தூக்கத் தில் வாழ்நாளைக் கழிக்கும் வீரனாயினும் நிலை தர்மசங்கடமாகிறது. தமையன் செய்த தவறு களை மற்றோர் போல முகம் அஞ்சி ஒளியாது, முகம் முன்னே புகழ்ந்து முதுகின் கண் இகழாது நேரே ஏசுகின்றான்.

“ஆச இல் தாரமவை அஞ்சிறை அடைப்பேம்
மாசு இல் காதல் உறுவேம் வளமை கூறப்
பேசுவது மானம் இடைப் பேறுவது காமம்
கூறுவது மானுடரை நன்று நம கொற்றம்”

“சிட்டர் செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டு அவிழ் மலர்க் குழவிலானை இனி மன்னா
விட்டிடுது மேல்தளியம் சூதும் அவர் வெல்லம்
பட்டிடுது மேல் அதுவும் நன்று பழி என்றால் என்று

பெருமை மிக்க குலத்தின் மாண்புகாத்து வாழ்ந்திலை குலத்திற்கு சிறுமை தேடினாய் என்று இடித்துரைக்கும் பண்பு சாலவினியதாகும்.

இதுபோலவே சூரபன்மன் பல தவறுகளைச் செய்து பின்னும் முருகப் பெருமானுடன் மோத முற்படும் காலை சிங்கமுகாசூரன் பேசும் தர்மம் மிகவும் உருக்கமானது. கந்தபுராணத்தின் மூன் றாவது காண்டமாகிய மகேந்திர காண்டத்தில் சூரன் அமைச்சியற் படலத்தில் கச்சியப்பர் மிகத் தெளிவுறத் தத்துவ விளக்கம் செய்கிறார். சிங்கன் வாயிலாக சூரனின் தவறுகள் வெளிவருகின்றன.

குரவரைச் சிறுபாலரை மாதவரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மை மேலவரை
அருமறைந் தொழிலாளரை ஒறுத்தனர் அன்றோ
நிரயமுற்றவும் சென்று சென்றமலரும் நெறியோர்
மகேந்திர சூ/ப/ப 20

என்றுரைத்த சிங்க முருகனைப் பற்றி விளக்குங்கால்

“ஞானந்தானுருவாகிய நாயகனியில்லை
யானும் நீயுமாய் இசைத்தும் என்றால் அஃதெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தோற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமுந் தன்பெருந்திலமை”
மகேந்திர : சூ/சு/ப 31

என்று சிங்கன் சகோதரனுக்கு அறமுறைக்கும் மாண்பு கற்றுக் களிகொள்ளக் கிடக்கிறது.

இரு காப்பியங்களிலும் மூத்தவருக்கும் இளை யவருக்கும் இடையே சம்பாசனை நடைபெறுவ தைக் காட்டி, அதன் பின்பே யுத்தம் காட்டப்படுகி றது. இரு காவியங்களிலும் 3ஆம் காண்டங்களில் இவ்வொற்றுமை அமைந்தமை அழகுமிகுந்தது இனி யுத்தகாண்டத்தின் அழகினைத் தரிசிப் போம்.

இராமகாதையில் முதல்நாள் இராவணன் போருக்குப் போய் படுதோல்வி கண்டு “இன்று போய்ப் போருக்கு நாளைவா” என்றும் நிலம் விரல் கிளைந்திட நின்ற இராவணனைப் பார்த்து இராமன் கூறியதும் தம்மிடையுயே இராவணன் நாணத்தாள் சாம்பிய நிலையைக் கம்பர் கவினு றக் காட்டினார். அப்பால் தூங்கிய வண்ணமிருந்த கும்பகர்ணனை எழுப்புகிறார்கள். எழும்பியதும் முதற்கேட்ட கேள்வி சண்டை வந்து விட்டதா? அந்தோ! என்பது கும்பகர்ணன் குறிப்பு.

"ஆனதோ வெஞ்சமம் அலகில் கற்புடைச்
சானகி துயரினும் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமே"

எங்கள் இராவணபவனத்தின் பெருமை விண்ணுக்கும் மண்ணுக்கும் கூட நன்கு தெரியும். அந்த நல்ல பெயருக்கு அழிவு காலம் வந்ததோ எனும் போது அவன் மனவுணர்வு, ஏக்கம் அறம் மீறும் குற்றவுணர்வு யாவும் தெளிவுறத் தெரிகின்றன. இருப்பினும் வீடனன் போல நன்றி கொன்று இறைபோன்ற இராவணன் செய்தாம் மறந்து எதிரியிடம் சரண்புக விரும்பவில்லை. விதியை நொந்து மன்னிப்பும் பெற்று விடை பெறும் காட்சி கற்போர் உள்ளத்தை உருக்குகினிது. நித்திரையைவிட எத்தவனும் இயற்றாத இளையவன், இராவணனிடம் ஏதேனும் தவறுண்டாகின் மன்னியும் என்று விடைபெறுவது மிகவும் சங்கடமான கட்டம்.

தோல்வி உறுதி என்று தெரிந்தும் உறவுக்காக நன்றியுணர்வுடன் போராடும் மனநிலை யாருக்குண்டு? அந்த அறமும் நன்றி உணர்வும் போராட்ட குணம் கும்பகர்ணனிடம் மிகுந்திருந்தன.

"வென்றிவன் வருவன் என்று உரைக்கி லேன்; விதி
நின்றது பிடர் பிடித்து உந்துகின்றது
பொன்றுவென்; பொன்றினால் பொலன் கொள் தோளியை
நன்றென நாயகன் விடுதல் நன்றோ"

(யுத்த; கு/வ/பட/15)

போர் செய்வேன்; மாழுவேன்; மாண்ட பின்னராகினும் சீதையை விடுதி என்று கெஞ்சும் பாசமும் பரிவும் யார் மாட்டுள?

"இன்றை நாள்வரை முதல்யான் செய்தன
குற்றமும் உளஎனின் பொறுத்திடு; கொற்றவ
அற்றதார் முகத்தினில் அழித்தல்; ஆரிய;
பெற்றனன் விடையெனப் பெயர்ந்து போயினன்"

என்று விடைபெற்றுப் போர்க்களம் புக்கான் கும்பகர்ணன்.

இது போலவே சிங்கமுகாசுரன் நிலையும் யுத்தம் வரப்போவதையஞ்சி எவ்வளவோ கூறினான்.

"வான் செய் தேவரை நியமிலங்கின்றதை மதியா
ஊன் செய்கின்ற பல்துயருக்கும் உயிரதாம் ஒருவன்
தான் செய்கின்ற தொல் வரத்தினைத்தான் தவிர்த்திடுமேல்
ஏன் செய்தாயென வினவியே நிறுவுவார் வெரே"

என்று சிங்கன் அறமுறைப்ப

"காற்றில் தள்ளுண்டு, நெருப்பினில் சூடுண்டு, கங்கை
ஆற்றில் தாக்குண்டு, சரணப் புக்கலப்புண்டு
வேற்றுப் பேர் முலையண்டமுதே விடையோடும்
நேற்றைப் பாலனையோ பரம்பொருள் என நினைத்தாய்"

என்று சூரன் எண்ணி நகைகொண்டு ஏளனம் செய்தான். யுத்தமென்று வந்த காலை தன்னைப் போற்றி வளர்த்த முதல்வனும் சூரனிடம் கடைசியாகத் தர்மம் உரைத்து விடை பெற்றுக் கொண்டான்.

மூலமும் முடிவுமில்லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவது ஓர்ந்நிலை

(யுத்த : சி/வ/ப/எ)

ஆலமது ஆனதே ஐய என்மொழி
மேலையின் விதியை யார் வெல்லும் நீரினர்"

என்று விடைபெற்றுச் செல்கிறான். இரு காவியங்களிலும் நாம் ஒப்பீடு காணும் பாத்திரங்கள் இரண்டும் அறம், தர்மம் என்பவற்றைக் காத்தன. அவற்றை ஓதி உரைத்தன. போர்க்களம் புகும் சமயத்திலும் அதனை எண்ணி உரைத்தன. இரு பாத்திரங்களும் விதியை நொந்த வண்ணம் போர்க்களம் புகும் காட்சி ரசனையும் நயமும் மிகுந்தன.

இராமகாதையில் ஒரு புதிய காட்சி. போர்க்களம் வந்த கும்பகர்ணனைப் பார்த்து தமதணி சேர வேண்டும் என்று வீடணன் வேண்டுகிறான் ஆனால் அதனை மறுக்கிறான் கும்பகர்ணன்.

"செம்பிட்டுச் செய்த விர்சித் திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தெரியர் எம்முன் உயர் கொண்ட பகையை
வீழ்த்தி
அம்பிட்டு துன்னங் கொண்ட புன்னுடை நெஞ்சொடு ஐய
கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல்
கொண்டேன்"

"நீர்க்கோல வாழ்வை ரச்சி நெடிது நாள் வளர்த்து
பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர் கொடாது
அங்கு போகேன்
தார்க்கோல மேனிமைந்த என்துயர் தவிந்தி கிர்
கார்க்கோல மேனி பாரினக் கூடுதி கடிதி என்றான்"
(எத்த/கு/வ/ப-18,23)

இது கந்தபுராணத்தில் சிங்கனுக்கு அமையாத ஒரு சந்தர்ப்பம். உணவிட்டுக் காத்த உரவோனுக்கு உயிர் கொடுப்பதற்காகவென்றே போர்க்களம் புகுந்த கும்பன் கடும்போர் தொடுத்தான். அங்கங்கள் அறுபட்டு விழும் பொழுதெல்லாம் வீழ்ந்த அவயங்களைத் தூக்கி அவற்றினால் எதிரிகளை அடித்துப் போர் செய்தான். போரில் கும்பகர்ணன் மாண்டான் என்ற செய்தி கேட்ட இராவணன் கொதித்தான். அவனிடத்தில் துன்பத்தீ கொழுந்து விட்டெரிந்தது.

தம்பியுள்ளான் சண்டைக்கு அஞ்சான் என்ற பாத்திரத்தில் மாண்புமிகும் வாழ்வு வாழ்ந்த இராவணன் கதிகலங்கி அழுகிறான். அவ்வேளையில் வீடணன் கூறும் வார்த்தைகள் மிகுந்த சோகம் வாய்ந்தன.

"....மறங்கிளந் உலகை வென்று வாழ்ந்திலை
மண்ணின்மேலா
இறங்கிலை இனிது கானும் இளமையும் வறிதே போக
உறங்கி என்பதல்லால் உற்றதொன்று ளதோ!"
என்ற அடிகள் மிகவும் உருக்கமானவை.

இதுபோலவே கச்சியப்பரின் புராணத்திலும் சிங்கனது நிலையமைந்தது.

போருக்கு வந்த கும்பகர்ணன் இராமனிடம் அறம், தர்மம், வீரம் பற்றிப் பேசியது போல சிங்கன் முருகனிடம் பேசுகிறான்.

"கண்ணுதல் முதல் வன்மைந்த கழறுவன் ஒன்று
கேண்மோ
எண்ணலர் வலியை மாற்றல் இறையவர்
கடனேயற்றால்
விண்ணவர் தமைத் தண்டித்தோம் அவர்க்கு
றம்அல்லவேறோர்
நண்ணவன் எமருன்இல்லை நடந்த தென்மைருக்
கொன்றான்"

தேவர்கள் விதியும், தவறும் தண்டனை பெற்றுத் தந்தன. நாம் தண்டித்தோம் அதற்காக ஏன் நீர் போர் விளைப்பான் என்கிறான் சிங்கன்.

முடிவில் கடும்போர் நிகழ்ந்தது முருகப் பெருமானின் குலிசாயுதத்திற்கு சிங்கன் வீழ்ச்சி காண்கிறான். இச்செய்தி சூரன் அரண்மனைக்கு வருகிறது. கும்பன் மரணம் கேட்டு இராவணன் துடித்ததை விட ஒரு மடங்கு மேலாக அரக்க உள்ளத்திலும் இரக்க உணர்வு உண்டு என்பதாகச் சூரன் கண்ணீர் விட்டுக் கதறியழுகிறான்
பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பிள்ளையுள பொருளை எல்லாம் பெறலாகும்
என்னை யுடைய இளங்கோவே இப்பிறப்பில்
உன்னையினிப் பெறுவதுண்டோ உரையாயே

அசுரர் உறவிலும் சகோதரபாசம் பீறிட்டுப் பாய்கிறது. கும்பகர்ணன் போனபின் இந்திரஜித்து முதலான முதன்மைத் திலமைகளும் மாண்டபின் இராவணனும் சித்திக்கின்றார். ஜானகி ரகுவன் என்று போர்க்களம் புகுன்று பொன்றிடர் பெருக்கி விட்டான் கிளையொடும் மாண்டான் என்கிறார் கம்பர்.

அதேபோல சிங்கன் போனபின் தானே போர்க்களம் புகுந்து முருகனுடன் பொருத, முருகனது திருப்பெருவடிவத்தரிசனம் சூரனுக்கு கிடைக்கிறது. "சினமும்மை தெரிந்ததில்லை" என்று இராவணன் கூறியது போல பாலகன் என்றிருந்த மூலகாரணமான பரம்பொருளைக் கண்டு வீழ்ந்து வணங்கக் கருதினான். மானம் தடுத்தலால் மனம் திரும்பிப் போர் செய்து மாண்டான் சூரபன்மன்.

கும்பன் அறம் பேசினன்; சிங்கன் தர்மம் பேசினன் கன்மத்துக்கு உவமிக்கப்பட்ட பாத்திரம் சிங்கன். இரு பாத்திரங்களும் தவவலிமை பெற்ற

பாத்திரங்கள் பக்திழந்துமான வாழ்வு வாழ்ந் தார்கள். இந்த அரக்க - அசுரகுலத்திலும் மனிதப் பண்பு உண்டென்பது போலக் காட்டிய பாத்திரங் கள் இவை. "மானிடம் வென்றதம்மா" என்று கம்பன் பேசுவது இதனைத் தானே என்ற எண்ண தேடுபவர்கள் இரு பாத்திரங்களும் இழந்த போது அவர்களின் மூத்த பாத்திரங்களும் கவிகரம் கூட சோகத்தில் அமிழ்ந்த நிலையில் கற்போர் உள்ளத்தை நெகிழ வைப்பன. இப்பாத்திரங்கள் பிறந்த குடும்பம் துன்பியல் நிறைந்தது. சுக்கிர காரத்தில் அதிசயப் பிறவி பிறப்பது போல அரக்க அசுரகுடும்பங்களில் அற்புதப் பிறவிகள் இவை யென்பது மிகையன்று.

**முடிபு**

இலக்கிய உலகில் என்றும் நின்று நிலவும் வண்ணம் படைக்கப்பட்ட பெருமை இப்பாத்திரங் களுக்குண்டு.காப்பியங்களின் இலக்கண ஒற்றுமை தொடக்கம் அறிமுகம், சமூகம், சூழல் அரசியல் என சகலவற்றிலும் சிறந்த ஒற்றுமையுள்ள இப் பாத்திரங்களில் ஒருசில வேறுபாடுகளைத் தவிர நெருங்கிய ஒற்றுமைகளே அதிகம்.

**உசாத்துணை**

1. கம்பராமாயணம் மூலமும் உரையும் - பேராசிரியர் அ.ச.ஞா.பதிப்பு கங்கை நிலையம்
2. கந்தவேள் கருணை. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
3. கந்தவேள் கதையமுதம் கி.வா.ஜ
4. கம்பராமாயணம் - பதவுரை விளக்கம் டி.கே.சி

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் - 2014

## ஜய வருஷம் ஆவணி மாதம்
## மகோற்சவ விசேட தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01.08.14 | வெள்ளி | கொடியேற்றம் | பகல் 10.00 மணி | (01ம் திருவிழா) |
| 10.08.14 | ஞாயிறு | மஞ்சம் | மாலை 05.00 மணி | (10ம் திருவிழா) |
| 16.08.14 | சனி | அருணகிரிநாதர் உற்சவம் | மாலை 06.00 மணி | (16ம் திருவிழா) |
| 17.08.14 | ஞாயிறு | கார்த்திகை | மாலை 05.00 மணி | (17ம் திருவிழா) |
| 19.08.14 | செவ்வாய் | சூர்யோற்சவம் | காலை 07.00 மணி | (19ம் திருவிழா) |
| 20.08.14 | புதன் | சந்தானகோபாலர் | காலை 07.00 மணி | (20ம் திருவிழா) |
| 20.08.14 | புதன் | கைலாசவாகனம் | மாலை 05.00 மணி | (20ம் திருவிழா) |
| 21.08.14 | வியாழன் | கஜவல்லி மஹாவல்லி | காலை 07.00 மணி | (21ம் திருவிழா) |
| 21.08.14 | வியாழன் | வேல்விமானம் | மாலை 05.00 மணி | (21ம் திருவிழா) |
| 22.08.14 | வெள்ளி | தெண்டாயுதபாணி | காலை 07.00 மணி | (22ம் திருவிழா) |
| 22.08.14 | வெள்ளி | ஒருமுகத் திருவிழா | மாலை 05.00 மணி | (22ம் திருவிழா) |
| 23.08.14 | சனி | சப்பறம் | மாலை 05.00 மணி | (23ம் திருவிழா) |
| 24.08.14 | ஞாயிறு | தேர் | காலை 07.00 மணி | (24ம் திருவிழா) |
| 25.08.14 | திங்கள் | தீர்த்தம் | காலை 07.00 மணி | (25ம் திருவிழா) |
| 26.08.14 | செவ்வாய் | பூங்காவனம் | மாலை 05.00 மணி | (26ம் திருவிழா) |
| 27.08.14 | புதன் | வைரவர் உற்சவம் | மாலை 05.00 மணி | (27ம் திருவிழா) |

# நல்லூரானைச் சிறப்பித்த நல்ல குருநாதர்கள்

**திருமதி.சண்முகயோகினி ரவீந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நல்லூர்க் கந்தனைத் தரிசிப்பவர்கள் சிவயோக சுவாமிகளை நினைக்கத் தவறமாட்டார்கள். நல்லூரானின் சிறப்பிற்கு மெருகூட்டியவர்களுள் இலங்கை வாழ் சித்தர்களின் பங்கு பெரும் அளவினதாகும். மானிடர்களின் மத்தியில் சித்தர் களும் சீவன்முத்தர்களும் அவதார புருஷர்களும் தோன்றி இன்றும் அருள் பாலித்து வருகின்றனர். அத்தகையோரில் யாழ்ப்பாணத்தில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் என ஒரு சித்த, சீவன் முக்த குரு பரம்பரை ஒன்று உருவாகப்பெற்றது. கடையிற் சுவாமிகளினால் ஆட்கொள்ளப்பட்டார் நல்லூர்த் "தேரடிச் செல்லப்பர்".

**செல்லப்பா சுவாமிகளும் நல்லூரும்**

நல்லூர் ஆலயச் சூழலிலே அங்கும் இங்கும் ஆனந்தமாக, மங்களகரமான வார்த்தைகளைப் பிரசாதமாக அள்ளி வழங்கியவர் செல்லப்பா சுவாமிகள். நல்லூர்க்கந்தனின் தேரடிப் படிகளைத் தலையணையாகக் கொண்டு உறங்குவதால் தேரடிச் செல்லப்பன் என்றும் அழைக்கப்பட்டார். நல்லூருக்கு வந்து செல்லப்பரை அணுக முற்பட்ட வர்களைப் பேசித் துரத்திய சம்பவங்கள் பல உள. சிலருக்கு கற்களால் வீசித்துரத்தப்பட்ட அனுபவங் களும் உண்டு. வெறித்தபார்வையும், விரித்த சடையும், சிரித்த முகமும், கறுத்த வண்ணமும், மெலிந்த தேகமும் கந்தல் துணியும் பூண்டு உல்லாசமாக உலாவந்தார் செல்லப்பா சுவாமிகள். நல்லூர்க் கந்தப்பெருமானின் அர்த்தசாமபூஜை யின் பின், ஆளரவமற்ற வேளையில் கோபுர வாசலில் நின்றவாறு கைகளை சிரமேற்குவித்து 'அப்பா', அப்பா' எனக் கந்தனைக் கல்லும் கரையும் வண்ணம் உரத்த குரலில் குழைந்து அழைப்பார். அத்தகைய செல்லப்பன் மான், மழு, திங்கள், கங்கை யாவற்றையும் மறைத்து வைத்துவிட்டு மானிட வடிவந்தாங்கிவந்து, குருவாக வாய்த்தார் நல்லூர் முன்றலிலே சிவனாகிய செல்லப்பா தேசிகன் என்பார் சிவயோக சுவாமிகள்.

**நல்லூரில் செல்லப்பரும் சிவயோகரும்**

சிறுபிராயத்தில் சண்முகப்பெருமானை வழிபட யோகர் செல்வதுண்டு. யோகர் நல்லூர்ச்சூழலிலே அங்கும் இங்கும் பிரகாசமாக மௌனமாக திரியும் செல்லப்பாவால் ஈர்க்கப்பட்டார். இளைஞன் யோகன் கிளிநொச்சியில் வேலையிலமர்ந்தார். வார விடுமுறையில் விரைந்தோடிவந்து கந்தனை யும் செல்லப்பனையும் கண்ணாரக் கண்டு உவமை கடந்த இன்பமெய்துவார். யோகர் செல்லப்பரை பலமுறை அணுகினார். செல்லப்பர் பற்பல சோதனைகள் செய்தார். நாற்பது நாள் சாதனை ஒன்றுடன் செல்லப்பன் தன் சோதனை யின் முடிவாக சிவயோகர் தன் சீடனாகும் பக்குவ மானவன் என்பதைக் கண்டார். இவனே முடி சூடத்தக்கவன் என்று யோகரைக் காட்டி நல்லைக் கந்தன் முன்றலில் சிவயோகருக்கு தன் சீடனாகும் மகா பாக்கியத்தை அளித்தார்.

**நல்லூர்வாசன் முன்றலில் பட்டமளிப்பு**

பிரம்மாவினாலும், மகா விஷ்ணுவாலும் அடியையும், முடியையும் காண முடியாத அப்பரம் பொருள் மானிட வடிவந்தாங்கி நல்லூருக்கு

வந்தார்.

"இருவருந்தேடிக் காணா இறைவன்
என்போல் உருத்தாங்கி..."

அங்கே அருவமும்காட்டி, உருவமும்காட்டி அப்பாற்கப்பால் உள்ள சொருவமும் காட்டி சும்மா இருக்கும் அதியுயர் நிலைக்குத் தன்னை இட்டுச் சென்றார் என்று தன் குருவைப்பற்றி சிவயோகர் வர்ணிப்பார். அச்சிவமாகிய நற்குரு சிவயோகரை உற்றுநோக்கி,

ஆரடாநீ
தேரடா உள்
தீரடா பற்று

என்று ஆணையிட்டார். சிம்மம் கர்ச்சித்தது போன்ற அச்சக்தி மிக்க சொற்கள் சிவயோகரை விழித்தெழச் செய்தது. தன் சீடனின் பரிபக்குவ நிலையை உணர்ந்து செல்லப்பா சுவாமிகள் மென்மேலும் பல மந்திரங்களை உபதேசித்தார். "ஒரு பொல்லாப்புமில்லை", "முழுதும் உண்மை", "எப்பவோ முடிந்த காரியம்", "சும்மா இரு" என்று மகாவாக்கியங்களை உபதேசித்து பரிபூரணமாக சிவயோகரைத் தன் சீடனாக்கிய சம்பவம் நிகழ்ந்த இடம் சூரசங்காரன் வதியும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலாகும்.

### குருவால் ஆட்கொள்ளப்பட்ட சிவயோகர்

உலக மகா மாயையிலிருந்து தன்னை விடுவித்த குருவை - சிவனாக, நல்லைக்கந்தனாக சிவயோகர் குறிப்பிடுகிறார். இங்ஙனம் குருவால் ஆட்கொள்ளப்பட்ட சிவயோகர் தன்னிலை மறந்து செல்லப்பர் போல் திரியலாயினார். ஒரு முறை குருவின் ஆணைப்படி சிவயோகர் கொழும்புத் துறையில் ஒரு இலுப்பை மரத்தின்கீழ் மெளன மாக உட்கார்ந்து பலகாலம் சும்மா இருக்கும் பெரும் நிலையைப் பெற்றார். படிப்படியாக பலரது வேண்டுதலால் கொழும்புத்துறையில் உள்ள ஒரு குடிசையில் வசிக்கலானார்.

### நல்லூர்க் கோயிலை வழிபடும் முறை

சிவயோக சுவாமிகளின் திருவார்த்தைகள், பாடல்களின் மூலம் நல்லையம்பதி வாழ் குமரனை வணங்கும் முறை மானிடர்களாகிய எமக்குச் சித்திக்கப் பெற்றுள்ளது. பழம், பாக்கு வெற்றிலை, தேங்காய், இளநீர் கொண்டு முருகன் திருவடிக்குத் தொண்டு செய்தால் சிறப்புறலாம் என யோகர் சாற்றுவார். "நல்ல மலரெடுத்து நல்லூரை நாடி நாம்பணிந்தால்" நாம் எப்பேறுகள் எல்லாம் பெறலாம் எனச் சொல்கிறார். நல்லூரான் திருவடி களை நினைக்கும் போதெல்லாம் தான் தன்னை மறந்த நிலைக்குச் செல்வதை சூட்சுமமாக யோகர் கூறுவார்.

வறுமைப் பிணிக்கு மருந்தொண்டிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்

என்று கூறுமவர்

வந்து மருந்தை அருந்திய மாந்தர்கள்
வாழ்ந்தார், வாழ்ந்தார் வாழ்ந்தாரே

என கந்தனடியிணை பற்றியவர் முக்தர்கள் என சித்தரிக்கின்றார்.

### நல்லூர் அதிசயமிக்க கோயில்

சிவயோகர் யாவரையும் நல்லூருக்குப் போவோம் வாருங்கள் என்பார். எத்தனையோ பாடல்பெற்ற ஸ்தலங்கள் எல்லாம் சென்ற சிவயோகசுவாமிகள் ஒவ்வொருநாளும் நல்லூருக்குச் சென்றீர்களே யாயின் துன்பங்கள் தடைகள் நீங்கிவிடும் என்று பின்வருமாறு கூறுகிறார்.

"எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்களெல்லாம் போமே".

இவ்வாறு உறுதியாகக் கூறும் யோகர் இதற்கான காரணத்தை, தன் ஆசான் அரியபல தவங்கள் செய்த இடம் நல்லூர்க்கந்தன் திருத்தலம். ஆகவே அது அதிசயங்கள் அதிகமாகக் கொண்ட தலம் என்கின்றார் பின்வருமாறு: அந்நாளில் ஆசான் அருந்தவஞ்செய்த இடம். அதுவாதலாலே அதிசயம் மெத்தவுண்டு"

இத்தகைய அதிசயமனேகமுள்ள கந்தன் வாழ் நல்லை நகரைத் தேர்ந்தெடுத்த நல்ல குருநாதர் கள் நல்லுபதேசப்படி வாழ்ந்து சிறப்பித்த நல்லூரானை தினமும் வழிபட்டு பேறுபெறு வோமாக!

# ஈழத்து சைவசித்தாந்த வரலாற்றில் சுவாமி ஞானப்பிரகாசரது பணிகள் பற்றிய மதிப்பீடு

**க.கணேசதேவா** B.A, M.A, M.Ed
ஆசிரியர்,
யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

இலங்கையில் சைவசமயம் வளர்த்த பெரியார்கள் வரலாற்றினை ஆராயும் போது யாழ்ப்பாணத்து - திருநெல்வேலி சுவாமி ஞானப் பிரகாசரது வரலாறு தனித்துவமான இடத்தைப் பெறுகின்றது.

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சைவசித்தாந்த மரபு நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு சுமார் கி.பி 1250- கி.பி 1619 வரை நிலவிய தமிழ் அரசிலே தமிழும் சைவமும் நன்கு போற்றப்பட்டு வந்தன. இவை பற்றி அறிய சமகால நூல்களான கைலாயமாலை, தஷிண கைலாச புராணம், பரராசசேகரம் முதலிய நூல்கள் உதவு கின்றன. சைவ சமய அறிஞர்கள் மட்டுமன்றி சைவசித்தாந்த வித்தகர்களும் சிலரும் அக்காலத் தில் வாழ்ந்தனர் எனக் கூறப்படுகிறது. எனினும் இக்காலப் பகுதியிலே குறிப்பாகப் போர்த்துக்கீசர் ஆட்சி ஏற்பட்டிருந்த காலப்பகுதியிலே (கி.பி 16ம் நூற்றாண்டு முடிவு – 17 நூற்றாண்டு முற்பகுதி) வாழ்ந்தவராகிய ஞானப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர். இவரின் வாழ்க்கை வரலாறு பற்றிச் சான்றுகள் நன்கு கிடைக்காவிடினும் இவர் பற்றி ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது.

சைவசமய மரபுகளை இலங்கையிலும் தமிழகத்திலும் போற்றி வளர்த்த பெரியார்களுள் ஒருவராக ஞானப்பிரகாச சுவாமிகள் போற்றப்படு கின்றார். திருநெல்வேலியை வாழிடமாகக் கொண்டதனால் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் என்றும், திருவண்ணாமலையில் தீட்சையும் உபதேசமும் பெற்றதனால் திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் என்றும், சிதம்பரத்தில் தங்கி யிருந்து சமயப் பணி செய்தவராதலின் சிதம்பரம் ஞானப்பிரகாசர் என்றும் சிறப்புப் பெயர்களை பெற் றவர். ஞானப்பிரகாச முனிவர் தமது வாழ்வைச் சைவசமய மேன்மைக்காகவும், சைவசித்தாந்த வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்த பெருந்தகை. மேலைநாட்டவரினால் எமது பண்பாட்டு விழுமி யங்களுக்குப் பாதகம் ஏற்பட்ட போது அதற்காக மனம் வெதும்பியவர். பறங்கித் தலைவனுக்கு உணவுக்காக பசுவைக் கொடாமல் இரவோடு இரவாக நாட்டை விட்டு வெளியேறி, தமிழகம் சென்று அரியபல சாதனைகள் படைத்தவர் ஞானப்பிரகாச முனிவர் ஆவார்.

கீழை நாடுகளை ஆக்கிரமித்த ஐரோப்பியரின் வருகை கி.பி 16ம் நூற்றாண்டில் இருந்து இலங்கையையும் ஆக்கிரமித்தது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக் காலங்களில் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்ட போது கிறிஸ்தவ சமயமும், அதன் பண்பாட்டு மரபுகளும் இலங்கை யில் தலைதூக்கின. இதனால் சுதேச சமயங் களின் வளர்ச்சி தடைப்பட்டன. அத்துடன் இவர் களின் வழிபாட்டுச் சுதந்திரங்களும் முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தன. இத்தகையதோர் சூழ் நிலையில் சைவத்தின் மீதும், அதன் தத்துவமான சைவசித்தாந்தத்தின் மீதும், தமிழ் மீதும் அக்கறை கொண்ட தமிழ் அறிஞர்கள், பெரியோர்கள் பலர் தமிழ் நாட்டுடன் மிக நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி வந்தனர். தென் நாட்டுக்கும், ஈழ நாட்டுக்குமுள்ள புராதனகால அரசியல், பொருளா

தார, சமயம், கலை, தத்துவம், கலாசாரம் ஆகிய தொடர்புகளின் பயனாக ஈழத்து சைவர்கள் தென் நாட்டில் சைவ இலக்கியங்களையும், சித்தாந்த நூல்களையும் கற்று அதில் புலமை பெற்றுப் பின்பு அவற்றை ஈழத்திலும் பறைசாற்றினார்கள். அவர்களில் முதன்மையானவர் ஞானப்பிரகாச முனிவர் ஆவார். இலங்கையில் சைவசித்தாந்தம் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளில் கி.பி 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரிடமே சித்தாந்த நுட்பங்கள் காணக் கூடியதாக இருந்தது என பல ஆய்வுக் கட்டுரைகள் எமக்கு புலப்படுத்துகின்றன.

சுவாமி ஞானப்பிரகாசர் வாழ்ந்த காலம் பற்றி முரண்பட்ட தரவுகள் கிடைத்துள்ளன. இதனால் இவரது காலத்தினை சரியான முறையில் வரையறுத்துக் கொள்வது கடினமாக உள்ளது. இவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை வைத்து நோக்கும் பொழுது ஐரோப்பியர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர்களது ஆட்சி நிலவிய காலப்பகுதிகளில் வாழ்ந்தார் என்பது மட்டும் உறுதியாகின்றது. யாழ்ப்பாணத்தில் பறங்கியர் ஆட்சி நிலவிய காலம் 1621 – 1658 ஆகும். எனவே 1623ம் ஆண்டளவில் நாட்டை விட்டுப்போன ஞானப்பிரகாசருக்கு வயது முப்பதாக இருக்கலாம் எனக் கருதினால், அவர் 1590ம் ஆண்டினை அடுத்து தேன்றியிருத்தல் கூடும். ஞானப்பிரகாச சுவாமிகள் சிதம்பரத்தில் மடமும், குளமும் அமைத்த காலம் 1650 என கூறுவர். தருமபுரவாதீனத்துப் பெரியவருள் ஒருவராக வெள்ளியம்பலவாணத்தம்பிரான் சுவாமிகள் காலம் 1660-ஐ அடுத்த காலம் என்பர். வெள்ளியம்பலவாணத்தம்பிரான் சுவாமிகள், தருமபுரவாதீனத்து முத்து நிச்சயம் என்னும் நூலுக்குப் பேருரையும், ஞானாவரணவிளக்கம் என்னும் நூலுக்கு மாபாடியமும் எழுதிய காலம் 1660 அளவிலாகும். அவர் கையாண்ட மேற்கோள்களைக் காட்டி நூல்கள் எழுதிய ஞானப்பிரகாச சுவாமிகளின் காலம் 1660ஆம் ஆண்டுக்கு முன்னராய் இருத்தல் வேண்டும். எனவே ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழ்நாட்டில் பணிசெய்த காலம் 1625 – 1550 எனக் கொள்ளலாம். பறங்கியர் என வழங்கிய போர்த்துக்கேயர் எங்கள் பிரதேசத்தில் அதிகாரம் பெற்றிருந்த காலம் 1621 – 1658 என்பதும் கருத வேண்டியதாகும். இக்காலகட்டத்திலேயே அம் மகான் பசுக் கொலைக்கஞ்சிப் பாரத நாடு சென்றார்.

இந்தியா சென்ற சுவாமி ஞானப்பிரகாசர் வடநாடு, தென்நாடு எங்கும் யாத்திரை செய்தார். ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழகத்தில் வேதாரணியம், திருப்புகலூர், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய திருத்தலங்களுக்கும் ஆதீனங்களுக்கும் சென்று வழிபட்டு அருளும் ஆசியும் பெற்றுக்கொண்டவர். வடநாடு சென்ற ஞானப்பிரகாசர் வங்காளத்தை அடைந்து, பிராமணசந்நியாசி ஒருவரது பற்றுள்ளமும் ஆசியும் பெற்று, தென்நாடு மீண்டதாக அறியமுடிகின்றது. ஞானப்பிரகாச சுவாமிகளுக்கு தமிழகத்தில் கிடைத்த மடாதிபதிகள், சந்நியாசிகள் ஆகியோரது ஆசியும், திருத்தலங்களில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களது அனுக்கிரகமும் பல நிலைகளில் சுவாமிகளை மேன்மையடையச் செய்துள்ளது.

சுவாமி ஞானப்பிரகாசர் சிறந்த போதனையாளராக மட்டுமன்றி சிறந்த சாதனையாளராகவும் வாழ்ந்து காட்டியுள்ளார். சைவப் பண்பாட்டு மரபிலே முதன்மை பெறுகின்ற பசு வணக்கம், திருக்கோயில் வழிபாடு, குரு வணக்கம், சைவ சமய சாத்திர தோத்திரங்களைப் போற்றுதல், சைவ சமய உண்மைகளை வெளிப்படுத்துதல், குளந்தொட்டு வளம் பெருக்குதல் ஆகிய பல நற்கருமங்களை அவர் ஆற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வு நோக்கு அவர் காலத்து அறிஞரின் நோக்கில் இருந்து விலகியிருந்ததென்பது பலரின் கருத்தாகும். ஆயினும் அவரின் சிந்தனைத்திறனும் தர்க்கத் திறமையும் பலராலும் போற்றப்படுவதாகும். தர்க்கத்தின் அடிப்படையிலும் அறிவு பூர்வமாகவும் ஆய்வு நடத்திய சுவாமி ஞானப்பிரகாசரை இலங்கையின் சித்தாந்த ஆய்வின் முன்னோடி எனலாம்.

சுவாமி ஞானப்பிரகாசர் காலத்திற்கு முன்பே தமிழில் உள்ள சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் பதினான்கும், வடமொழியில் உள்ள அஷ்ட பிர கரணங்கள், சைவ ஆகமங்களின் ஞானபாதம் முதலியன எழுந்துவிட்டன. இவர் காலத்திலேயே மேற்குறிப்பிட்ட சாத்திர நூல்களுக்கு பல்வேறு விளக்க உரைகளும் எழுதப்பட்டன. இத்தகைய போக்கினை ஞானப்பிரகாச நூல்களிலே காணலாம்.

சுவாமி ஞானப்பிரகாசர் அக்காலச் சூழ்நிலை யிலே தமிழையும், வடமொழியையும் கற்றிருப் பார் எனக்கொள்ளலாம். அத்துடன் மிகுந்த சைவ சமயப் பற்றுடையவர். இவரின் காலத்திலேதான் போர்த்துக்கீசர் ஆட்சி ஏற்பட்டிருந்ததாக அறியப்படு கின்றது. மரபுவழிக் கதை ஒன்றின்படி போர்த்துக் கீசத் தலைவனுக்கு உணவுக்காக ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பசுவை வழங்க வேண்டிய கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஆணையை ஞானப்பிரகாசர் மிகவும் வெறுத்தார். பசுவதைக்கு உடந்தையாக இருக்க அவரின் மனச்சாட்சி இடமளிக்கவில்லை. எனவே தமக்குரிய நாள் வருவதற்கு முன் இரவே தமது இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டு கடல் மார்க்கமாகத் தமிழ்நாட்டுக் குச் சென்றார். இக் கதையின் உண்மைத் தன்மை எவ்வாறாயினும், வரலாற்றிலே துணிகரமான சுதந்திர சிந்தனை உடையோர் தம்முடைய மனச் சாட்சிக்கு எதிரானவற்றைப் பொறுக்க முடியாது சொந்த இருப்பிடங்களைக் கைவிட்டு கஷ்டங்க ளையும் பொருட்படுத்தாது வேறு இடங்களுக்குச் சென்றமை பற்றி அறியலாம்.

சுவாமி ஞானப்பிரகாசரது வாழ்க்கையில் பெரும்பகுதி இந்தியநாட்டிலே கழிந்தது. பாரத தேசம் புகுந்து சைவசித்தாந்த ஞானதீபமாக விளங்கியவரான சுவாமி ஞானப்பிரகாச முனி வரை பெற்றெடுத்த காராளபிள்ளை தம்பதியினர் தவம் செய்தவர்கள். பதினாறாம் வயதினிலேயே தமது நாயகர் தம்மைவிட்டு பிரிய நேரிட்ட போதி லும் பதிவிரதையாக வாழ்ந்தவரான வள்ளியம் மையார் சிறந்த புண்ணியவதி ஆவார். ஒல்லாந்த ரின் பசு வதைக்கஞ்சி இரவோடு இரவாக தோணி ஏறி தமிழ் நாட்டிலுள்ள வேதாரணியத்திற்கு சுவாமி ஞானப்பிரகாசர் வந்து சேர்ந்தார். வேதாரணியத் தலம் திருமறைக்காடு எனவும் அழைக்கப்படுகி றது. யாழ்ப்பாணத்தவரது முக்கிய யாத்திரைத் தலங்களாகத் தமிழகத்தின் சிதம்பரமும், வேதா ரணியமும் விளங்கி வந்துள்ளன. ஆங்கில ஆட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே இத் தொடர்பு நிலவியிருக்க வேண்டும். இத் தலத்திலே சுவாமி ஞானப்பிரகாசர் தரிசனம் செய்து திருத் தொண்டு செய்து சிலகாலம் வாழ்ந்ததாக அறிய முடிகின்றது. பின்னர் திருநாவுக்கரச சுவாமிகள் முத்திபெற்ற தலமாகிய திருப்புகலூரை அடைந்து, அங்குள்ள பெருமானை வழிபட்டு அருள் பெற்றவர். இவ் வேளையிலே ஆதிசைவப் பிராமணராகிய பெரிய அண்ணாச்சாமி ஆசாரியரிடத்துச் சிவதீட்சை பெற்று ஆசாரசீலராய் இருந்தார். திருப்புகலூரில் இருந்து புறப்பட்டு தரிசிக்க முத்தி தரும் தலமாகிய சிதம்பரத்திற்குச் சென்று, இத் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவகாமியம்மை சமேத நடராசப்பெருமானைத் தரிசித்து சில காலம் இத் தலச் சூழலிலேயே வாழ்ந்து, சமயப் பணிகள் ஆற்றியதை அறிய முடிகின்றது.

தமிழகத்தில் பல திருத்தலங்களில் நடமாடி, இறையருள் பெற்ற சுவாமி ஞானப்பிரகாசர் வட நாட்டிலுள்ள வங்களாதேசத்தை அடைந்து, அங்கு சிலகாலம் வாழ்ந்து வந்ததை அவரது வரலாற் றின் மூலம் அறிய முடிகின்றது. வங்களாதேசத் தில் வதியும் காலத்தில் ஒரு பிராமணத்துறவியி டம், வடமொழியில் உள்ள தர்க்கம், மீமாஞ்சம், வியாகரணம் முதலிய சாத்திரங்களைக் கற்றுத் தெளிந்து, மீண்டும் தென்னாட்டுக்குத் திரும்பி னார்.

சுவாமி ஞானப்பிரகாசர் தமிழகத்திலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்தில் சில காலம் தங்கியிருந்து பணிகள் ஆற்றியுள்ளார். அண்ணா மலையான் அடிக்கமலங்களை வணங்கி வாழ்ந்திருந்த ஞானப்பிரகாசர் அங்கே விளங்கிய

ஆதீனத்தை அடைந்து, மடாதிபதிகளை வணங்கி, தாம் செய்யக்கூடியவை எவை எனக் கேட்கின்றார். இவருடைய பக்குவத்தை உய்த்துணர்ந்த மடாதிபதிகள் இவருக்கு வேண்டிய சந்நியாச தீட்சை அளித்துக் காவியும் கொடுத்து படிக்க வேண்டிய சிவாகமங்களை மடத்தில் இருந்தே படித்துணருமாறு பணித்தார்கள். சுவாமி ஞானப்பிரகாசர் திருவண்ணா மலையாதீனத்துத் தொடர்பாலும் தீட்சை வகைகளின் சிறப்பாலும், உபதேச பரம்பரையின் வாய்ப்பாலும், சந்நியாசப் பேறாலும் அம்மடத்தில் தானே தம்பிரான் சுவாமி கள் என்னும் பதவிகளும் பெற்றிருந்தார். இத்த கைய சூழ்நிலையில் ஞானங் கைவரப் பெற்ற ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் சிவாகமங்க ளைக் கற்று ஆதீன தலைவர் கட்டளையைச் சிரமேற்கொண்டு பல வடமொழி நூல்களை எழுதுவாராயினர்.

சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலப்பகுதியில் பல சைவசமய தத்துவ நூல்களை யும் வட மொழியிலும் தமிழ் மொழியிலும் எழுதி வெளியிட்டு, சைவ சமய உண்மைகளை மக்கள் மத்தியில் பரப்பினார். இவர் வாழ்ந்த காலப்பகுதி யில் அறிவாளிகள் பலரும் வடமொழியிலேயே நூல்களை எழுதினார்கள். இவரும் அந்த மரபில் தாமும் வட மொழியில் நூல்கள் எழுதினார். இவர் எழுதிய நூல்கள் பிற்காலத்தவருக்கு ஏட்டுருவில் கிடைத்தன. சுவாமிகள் வடமொழியில் எழுதிய நூல்களாக பௌஷ்கராகமவிருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை, சிவஞானபோத விருத்தி, பிராசாததீபிகை, அஞ்ஞானவிவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதி மான்மியசங்கிரகம், ஓமாத்திரிகற்பம் ஆகியன விளங்குகின்றன. இவ்வாறான உயர்ஞான நூல் களை சுவாமி ஞானப்பிரகாசர் எழுதினார். ஞானப் பிரகாச சுவாமிகள் வட மொழியில் மட்டுமல்லாது தமிழ் மொழியிலும் நூல்களை இயற்றியுள்ளார். ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றிய தமிழ் நூல்க ளாக தீட்சாலட்சணம், தத்துவ வியாபார விவர ணம், அவஸ்தாநிரூபணம், மகாவாக்கிய சங்கிர ணம் ஆகியன விளங்குகின்றன. சுவாமிகள் தமக்குத் தமிழ் நன்றாகத் தெரியும், அன்றிச் செய்யுள் இயற்றவும் தெரியும் எனக் கூறி வசன பாகமாகவும், செய்யுள் பாகமாகவும் மேலே குறிப்பிட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவை ஒரு காலத்தில் கிடைப்பனவாக இருந்து, இன்று கிடைத்தற்கரியனவாகி விட்டன.

பொதுவாக தத்துவ ஞானிகளும், தத்துவ ஆய்வு மரபினரும் பிரமாணங்களிலும், பிரமாண நூல்களிலும் கூறப்படுகின்ற அறிவாராட்சி நுட்பங் களைக் கையாண்டே தத்துவ மரபுக் கோட்பாடு களை உருவாக்கினார்கள். சைவசித்தாந்திகளும் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் என மூன்றுவகையான பிரமாணங்களை ஏற்றுக் கொண்டு பிரமாண சாஸ்திரம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அதன் மூலம் யதார்த்த பூர்வமான அறிவைப் பெற்றனர். மேலும் வேதத்தை பொதுப்பிரமாணமாகவும், ஆகமத்தை சிறப்புப் பிரமாண நூலாகவும் கொண்டும், திரு முறைகளையும், சைவ சித்தாந்த சாத்திரங்களை யும் பிரமாண சாத்திரங்களாக ஏற்றுக் கொண்ட னர். இவ்வாறாக பிரமாண சாத்திரங்களில் பெறப் பட்ட அறிவினைக் கொண்டு உண்மைப் பொருள் பற்றிய தருக்கங்கள் எழும்போது அதன் ஐயப்பாடு களை நீக்கி நிறுவுதல் வேண்டும். இதனைத் தருக்க சாத்திரம் என்று கூறுவர். இவ்வாறு சைவ சித்தாந்திகள் பிரமாண சாத்திரங்களையும், தர்க்க சாத்திரங்களையும் மூலாதாரமாகப் பயன்படுத் தியே மெய்ப்பொருள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இவ்வாறானதொரு ஆராய்ச்சியில் இலங்கையரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கவொரு இடத்தினைப் பெற்றுள்ளது. அவர்களில் முதன் மையானவராக விளங்கியவர் சுவாமி ஞானப் பிரகாச முனிவர் ஆவார். இவரால் எழுதப்பட்ட "பிரமாண தீபிகை" என்னும் சமஸ்கிருத நூலில் பிரமாண சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் பற்றியும் விளக்கமாக ஆய்வு செய்துள்ளார். இவ்வகையில் ஈழத்தின் சைவசித்தாந்த ஆராய்ச்சிக்கு முதன் மையான நூலாக விளங்குவது பிரமாண தீபிகை ஆகும். இலங்கையின் பதினாறாம் நூற்றாண்டின் பின்னர் நிகழ்ந்த ஆய்வுகளின் பிரகாரம் ஈழத்தின்

சைவசித்தாந்த தொடக்கத்தை யாழ்ப்பாணத்து திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரிடத்தே காணலாம். ஈழத்தின் சித்தாந்த வளர்ச்சிக்கு சுவாமி ஞானப்பிரகாசர் செய்த பணிகள் நிகரற்றவை ஆகும்.

இன்று கிடைத்துள்ள சான்றுகளின்படி சைவ சித்தாந்த சிந்தனை மரபிற்குச் செழுமை அளித்த யாழ்ப்பாணத்தவர்களில் இவரே காலத்தால் முந்தியவராகக் கருதப்படுகின்றார். சுவாமி ஞானப் பிரகாசர் வடமொழியிலும், தமிழ் மொழியிலும் எழுதிய நூல்கள், உரை நூல்கள் என்பன ஈழத் தின் சித்தாந்த ஒளி விளக்காக அமைந்தன. வட மொழியில் உள்ள சிவஞானபோதத்திற்கு அதன் மொழியிலேயே விருத்தி உரை எழுதியுள்ளார். அதேபோல் தமிழில் சிவஞானசித்தியாரின் சுபக்கத்திற்கு உரை செய்த அறுவருள் ஞானப் பிரகாச முனிவரும் ஒருவர் என்பது கூறத்தக்கது. இந்நூல் "அறுவர் உரை" என்ற பெயரில் ஈழத்தில் புகழ்பூத்தது. இவ்வுரை மூலம் "பாச ஞானத்தை நீக்கி நின்ற இடம் பசு ஞானம் என்றும், பசு ஞானத்தை நீக்கி நின்ற இடம் பதி ஞானம்" என்றும் சித்தாந்தத்தின் உட்பொருளை தெளிவு படுத்தியுள்ளார். இவ்வுரை சைவசித்தாந்த நிலைப் பாடு தொடர்பான தர்க்கங்களைத் தோற்றுவித்த பெருமை கொண்டது. இவ்வாறு உரை நூல்கள் வாயிலாக சித்தாந்த நுட்பங்களை ஆழ அகலமாக நின்று சிந்தித்த மகானாக சுவாமி ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் விளங்கியுள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசர் வடமொழி நூல்களை யும், தமிழில் சிவஞானசித்தியார் உரையுடன் தீட்சாலஷணம், தத்துவ வியாபார விவரணம், அவஸ்தா நிரூபணம், மகா வாக்கிய நிரூபணம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். இவ்விரு மொழிகளிலும் சைவசித்தாந்த தத்துவம், பிற தத்துவங்கள் முதலியவற்றிலே இவர் பெரும் புலமை பெற்றிருந்தார். இன்று கிடைக்காத இவரின் நூல்களைத் தேடிப்பெற்று பிரசுரிக்கப் படல் வேண்டும். ஏனைய நூல்களும் மறுபதிப்புச் செய்யப்பட்டு, இவை அனைத்தும் பற்றிய முழு மையான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுவாமி ஞானப்பிரகாசரின் நெருங்கிய உறவி னர் வழியிலே தோன்றியவர்தான் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சியின் தந்தையான ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் என்பது குறிப்பிடத்தக்கது. சுவாமி ஞானப்பிரகாசரின் நூல்களை தம்பு கைலாச பிள்ளை வித்துவான்கள் பலரைக் கொண்டு பரி சோதித்து கிரந்தத்தில் அச்சிடுவித்தார். இவற்றில் சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, சிவஞான போதவிருத்தி, சிவயோகசாரம், சிவயோகரத்தி னம் ஆகிய நூல்கள் இன்றும் கிடைக்கக்கூடிய தாக இருக்கிறது. சிவயோகரத்தினம் என்ற நூல் நாகரத்தில் பாண்டிச்சேரியில் உள்ள பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனத்தினால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாச முனிவர் எழுதிய சுபக்க உரையானது யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த நடராஜ ஐயரால் பரிசோதிக்கப்பட்டு சி.பெரு மாள் நாடாரால் பதிப்பிக்கப்பட்டது. சண்முகசுந்தர முதலியாரின் சித்தியார் உரையிலும் ஞானப்பிர காசரின் சுபக்க உரை உள்ளடக்கப்பட்டுள்ளது. இவைதவிர சுவாமி ஞானப்பிரகாசரால் எழுதப் பட்ட ஏனைய நூல்கள் இன்று கிடைப்பதாய் இல்லை.

சிவஞானசித்தியார் என்னும் நூல் மெய்கண்ட சாத்திர நூல்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சிவஞானசித்தியார் நூலினை அருணந்தி சிவாசாரியார் இயற்றியுள்ளார். இந்நூல் பிறசமயக் கொள்கைகளை ஆய்வு செய்து சைவமே சிறந்த சமயம் என்று நிலைநாட்டுகின்றார். சுபக்கம், பர பக்கம் என இரு பகுதிகளாக அமைந்த இந்நூலின் முற்பகுதிக்கு அறுவர் உரை எழுதியுள்ளனர். சிவஞானசித்தியாருக்கு உரை எழுதிய மூன்றா மவர் எங்கள் ஞானப்பிரகாசர் சுவாமிகளாவர். இவர் தமது உரை எழுதுவதற்கு முன் எழுதியவர் களைப் போற்றி வணங்கியுள்ளார். முன்னர் எழுதியவர்களின் உரை அகலவுரைகளாகும் என்றும், தமது உரை சுருக்கமானதாய் அமையும்

எனவும் குறிப்பிட்டுள்ளார். ஞானப்பிரகாச முனிவர் தமது உரையில் தாம் வடமொழியில் சிவஞான போத வியாக்கியானம், பிரமாணதீபிகை, சித்தாந்த சிகாமணி செய்தமையையும் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாச முனிவர் நாயன்மார் களைப் போல பல தொண்டுகளைப் புரிந்தவர். அவரது வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள் சில வற்றை அறியமுடிகின்றது. அவரை தர்மப்பணி செய்யத் தூண்டிய - எதிர்பாராது கிடைத்த திரவிய நன்கொடை பற்றி இருவர் கதைகள் கூறப்படு கின்றன. ஒன்று ஒரு வியாபாரி கொண்டுசென்ற பணம் எதிர்பாராது தவறவிடப்பட்டமை, இதனை சுவாமிகள் கண்டெடுத்து, அவ்வியாபாரியிடம் மீளக்கொடுத்தமையால், அதற்கு நன்கொடை யாகப் பெரும் பணம் அவ்வியாபாரியால் சுவாமி க்கு அன்பளிப்புச் செய்யப்பட்டமை. மற்றொரு கதை இவர் சிதம்பரத்தில் வசிக்கின்ற காலத்தில் பெரும்பொருளை இலங்கை அரசன் ஒருவன் இவரிடம் ஒப்படைத்து விட்டுச்சென்றார். அம் மன்னன் நெடுங்காலமாகியும் திரும்பிவராததால், அப்பொருளைக்கொண்டு ஒரு குளம் தோண்டி மடம் கட்டினார். அக்குளமே இன்று ஞானப்பிர காசர்குளம் என்று வழங்கப்படுகிறது. ஞானப்பிர காச சுவாமிகள் சிதம்பரத்தில் அமைத்த மடம் தற்பொழுது ஆகமசிவப்பிரகாசர்மடம் (சேக்கிழார் மடம்) என அழைக்கப்படுகின்றது. இம்மடம் ஞானப்பிரகாசர் அமைத்த குளம் (தீர்த்தக்குளம்) நேர்எதிரே அமைந்துள்ளது. சுவாமி ஞானப்பிர காசர் சிதம்பரத்தில் பல சைவசமயப்பணிகள் ஆற்றி பங்குனி மாதப்பூச தினத்திற் சிவபதமடைந் தார் எனத்தெரிகின்றது. ஞானப்பிரகாச சுவாமிக ளது திருவுருவச்சிலை சிதம்பரம் சிவபுரி மடத்தில் வைத்துப்பூசிக்கப்படுகின்றது. சுருங்கக் கூறின் இலங்கையில் நிலவிய அந்நியர் ஆட்சியின் கொடுமையினை சகிக்க முடியாத ஞானப்பிரகாசர் தமிழகம் சென்று, சைவசமய சூழலிலே வாழ்ந்து சைவசமய உலகிற்கும் தமிழக சைவ சமய வளர்ச்சிக்கும் அருந்தொண்டுகள் பல ஆற்றி, சைவ அறிஞர்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கினார்.

**உசாத்துணை நூல்கள் :-**


1. சதாசிவம்,ஆ. 1966,
   ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம் சாகித்திய மண்டல வெளியீடு கொழும்பு, 1997.
2. குலரத்தினம்,க.சி.1997
   யாழ்ப்பாணம் - திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்த சபை, யாழ்ப்பாணம்.
3. நடராசன்,க.கி 2003,
   "இந்தியா வந்து புகழ் நிறுவிய ஈழத் தமிழறிஞர்கள்" தமிழ் மாருதம், ஆசிரியர், டாக்டர்.ச.சாம்பசிவனார்,மதுரை.
4. புகலியாகோன்.க 1954
   "இந்தியாவிலும் இசை நாட்டிய ஈழத்துச் சான்றோர்"-2 "ஞானப்பிரகாசர்" இந்து சாதனப் பத்திரிகை – யாழ்ப்பாணம்.
5. இராமலிங்கம்.கே.கே 2000, சிதம்பரம் நடராஜர், திருக்கோயில், சென்னை.
6. மயில்வாகனம் சிதம்பரம் 2004, வரலாற்றில் சிதம்பரம் - நடராஜர் கோயில் - தொகுதி-2, அண்ணாமலைப் பல்கலைக்கழக பவளவிழா வெளியீடு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.


## கந்தா

காவடிக் கந்தா - உன்
பூவடி தாடா
பாவடி வாக
உனைப் போற்றுகின்றோமே - உன்
சேவடி வாழ்த்தி
பூசிக்கின்றோமே.

செல்வி.க.மிதுசா

# ஈழநாட்டில் சித்தர் மரபு

**ப. பத்மநிருபன்**
**சங்கானை.**

இந்தியாவில் தமிழ்நாட்டில் சித்தர் மரபொன்று நெடுங்காலமாக இருந்து வருகின்றது. அறுபத்து மூன்று நாயன்மார்கள் என்பது போன்று சித்தர்களையும் பதினெண்மராக கூறுவது மரபு. ஆயினும் பதினெட்டு பேருக்கு மேல் பலர் இருந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை. சமீபகாலத்தில் பாரத நாட்டிலும் ஈழத்திலும் சித்தர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்.

சித்துக்களிலும் அருட்செயல்களிலும் வல்லவர்கள் சித்தர்கள் என்று மக்கள் பொதுவாகக் கருதுகிறார்கள். சித்தர்கள் அட்டமாசித்திகள் கைவரப்பெற்றவர்கள். யோகமார்க்கத்தில் ஞான நெறி வழி நின்று வல்லவர்களான சித்தர்கள் அந்நெறி நின்று பல சித்துக்களை செய்யும் ஆற்றல்களைப் பெற்றனர். சித்தர்கள் கைக் கொண்ட யோகமார்க்கம் வாசியோகம் எனப்படும். வாசி என்பது சுவாசம். சுவாசத்தை அடக்கி ஆண்டவர்கள் வாசியோகிகளான சித்தர்களாவர்.

சித்தர்கள் சாதி, சமய, ஆசாரக் கட்டுக்கோப்புக்களுக்கு அப்பாற்பட்டவர்கள். சில சித்தர்கள் இவற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். மேலும் உடலை திடமாக வைத்திருக்கவும், நோய்வராது பாதுகாக்கவும் நோயைக் குணப்படுத்தவும் சித்தர்கள் கண்ட வைத்திய முறை சித்த வைத்தியம் எனப்படும்.

ஈழவளநாட்டின் சித்தர் பரம்பரையை பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலிருந்தே தொடர்ச்சியாக வந்ததாகக் கூறப்படுகிறது. அந்த வகையில் கடையிற் சுவாமிகள் தென்னிந்தியாவிலே சஞ்சாரம் செய்து கொண்டு இருந்த காலை வண்ணை வயிரமுத்து செட்டியார் என்பவரின் அழைப்பின் பேரில் இலங்கை வந்ததாகவும் வரலாறு கூறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஈழப்பகுதியில் கடையிற் சுவாமிகள், ஆனைக்குட்டி சுவாமிகள், பரமகுரு சுவாமிகள் எனும் மூன்று சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கடையிற் சுவாமிகளின் பூர்வீக வரலாற்றை திடமாக கூறமுடியவில்லை. வேறு சிலர் கடையிற் சுவாமிகள் பெங்களூரில் நீதிபதியாக இருந்து குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கியமை மனம் பொறுக்காமல் அதனை துறந்து விட்டு ஈழம் வந்ததாகவும் கூறுவர். எவ்வாறாயினும் இவர் இந்தியாவிலிருந்து வருகை தந்தமையும் இங்கு சித்தர் பரம்பரை உருவாகவும் காரணமாயினர்.

ஈழத்து ஞானியாம் சிவயோக சுவாமிகள் தாம் சிறுவயதில் கடையிற் சுவாமிகளைப் பார்த்ததாக கூறியுள்ளார் "கடையிற் சுவாமிகள் சிவபோகத்தை புசித்தவர். அவரோடு ஒப்பிடும் போது நாமெல்லாம் எங்கே? கிருஷ்ண பரமாத்மா போல அவர் பலலீலைகள் புரிந்துள்ளார். அவர் நன்மை தீமைக்கு அப்பாற்பட்டவர். அவர் என்ன செய்தாலும் அவரை குறை சொன்னவர்கள் கிடையாது" என்று கூறியுள்ளார். கடையிற் சுவாமிகளுக்கு சார்ஷன் சுவாமிகள், வைரமுத்து செட்டியார் சுவாமிகள், நன்னியர், குழந்தை வேலுச்சாமி, கடைவரதர், செல்லப்பா சுவாமிகள் போன்ற பலதரப்பட்ட சீடர்கள் இருந்தனர். சார்ஷன்

சுவாமிகளே கந்தர்மடம் வேதாந்த மடத்தை ஸ்தாபித்தார். நல்லூர் வீதியில் சஞ்சரித்து உலகப் புகழ் பெற்றவர் செல்லப்பா சுவாமிகள். யோகர் சுவாமிகளுக்கு ஞான உபதேசம் செய்து ஞான குருவாய் திகழ்ந்தார். இலங்கையின் தெற்கு பகுதிகளிலும் மலையகப் பகுதிகளிலும் பல சித்தர்கள் நடமாடி அருளாட்சி புரிந்திருக்கிறார்கள். அந்த வகையில் ஆனைக்குட்டி சுவாமிகள், நடமாடி அருளாட்சி புரிந்திருக்கிறார்.

ஈழத்து சித்தர் வரிசையில் எல்லோராலும் அறியப்பட்டவராகவும் அருள் பிரவாகத்துடன் சிவப் பொலிவோடு உலவிய தவமுனிவன் சிவயோக சுவாமிகள் முக்கியமான இடத்தை பெறுகின்றார். கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து ஆன்மீகப்பணியாற்றி யாழ்ப்பாணத்திலும் மட்டக் களப்பு செங்கலடியிலும் சிவதொண்டன் நிலையம் அமைத்து அரும்பணியாற்றி சிவதொண்டன் எனும் அறிவு சார் மாத இதழையும் இவ் உலகுக்கு நல்கி நல்வழி காட்டியவர். 1872ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் மாவிட்டபுரத்தில் பிறந்து அருள்ஞான சித்தராகி 1964ம் ஆண்டு பங்குனிமாத ஆயிலிய நட்சத்திரத் தில் மகாசமாதி கூடி அடியார் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். சித்தர் மரபும் வேதா கம மரபும் சுவாமிகளிடத்தில் சங்கமமாயின.

சித்தர்கள் நம்நாட்டில் வாழையடி வாழையாக வாழ்ந்து அருள்ஞான ஊற்றைப் பெருக்கி சித்தர் மரபு வாழ வகை செய்திருப்பதுடன் இதுவே நமது ஆன்ம ஈடேற்றத்திற்கான தனிச் சிறப்பாகும்.



## நல்லூர் ஷண்முகர் வாசல் இராஜகோபுரம்

- நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான யந்திரம் 31.08.2010 (கார்த்திகைத் திருவிழா) அன்று காலை வேளை பிரதிஷ்டை செய்யப்பட்டது
- நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான நவகலசம் 25.07.2011 (கார்த்திகை தினம்) அன்று மாலை வேளை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.
- அதிகம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள ஸ்ரீ ஷண்முக இராஜகோபுரம் ஸ்ரீ ஷண்முகப்பெருமான் ஸ்வர்ண வாசல் தரிசனம் நவகலஷாபிஷேகம் 21.08.2011 ஞாயிறு (கார்த்திகை உற்சவ தினம்) காலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்

# சர்வதேச உலகில் மதம்

ஜெகநாதன் தற்பரன்

நல்லைக்கந்தன் பன்னாட்டு, பல்லின மக்களும் பாரபட்சமின்றி ஒன்று கூடும் கோவில் / புனித பிரதேசம்: அரசியல், சமூக, கலாசார, ஒழுக்க, பண்பாட்டு விழுமியங்களின் "தனியன் கள்" வருகைதரும் ஓர் இடம். பல்லாண்டு கால மாகவே சரணாகதி அடைய வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உயிர் காத்த ஓர் அற்புதமான இடம். மத நிறுவனங்கள், சமய அமைப்புக்கள் "சேவைகள்" பல ஆற்றி வருகின்ற சமகாலத்தே, சமூக சேவைகளினை ஆலயத்தி னைச் சுற்றியுள்ள அமைப்புக்கள் மூலமாக ஆற்றி வருகின்ற அதேவேளை சமூகத்தினை, சமய நிறுவனங்களினை தன்னகத்தே பிணைத்து வைத்திருக்கும் நிலைமையானது சமகாலத்தே மதம் சார்ந்ததால் நெருக்கடிகளினைத் தோற்று வித்திருக்கும் மத நிறுவனங்கள் கவனிக்கத்தக்க தான அம்சமாகின்றது. சமயக் கரணங்களிலிரு ந்து கலையம்சங்கள், கலைகள் ஐரோப்பாவில் எங்ஙனம் தேவாலயங்களிலிருந்து வெளிக் கிளம்பி நாடகக்கலையாகவும், பிற பல கலைகளா கவும், சமூகப் பணிகளாகவும் பரிணாம வளர்ச்சி யடைந்து நாகரிக உலகில் மனித உரிமைகளின் வகுதிகளாக, பண்பாட்டு உரிமைகளாக உள் வாங்கப்பட்டன. அக்கால கட்டத்திற்கு முன்னமே நல்லூர் முருகன் கோவில் ஆன்மீகத் தலமாக வும், ஒழுக்கவிழுமியங்களினை சமூகத்திற்கு ஒருங்கிணைத்து தருவதாகவும் இருந்தது என்பது வரலாறு. இருப்பினும் சமகாலத்தே இந்துசமயம், இந்து நாகரிகம் என்பன அதன் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த இயல்பு நிலைமை காரணமாக மதவாத சக்திகளது ஆதிக்கத்தின் போட்டி நிலைக்கு தள்ளப்பட்டுள்ள இக்கட்டான நிலையின் காரணமாக சர்வதேசங்களது மத சார்புக் கொள் கைகளுக்கு அமைவான ஸ்திரப் போக்கினை - கட்டமைக்கப்பட்ட தந்திரோபாய அணுகு முறை யினை நீண்ட கால வளர்ச்சிப்போக்கில் கொண் டிருக்காத காரணத்தினால், இன்னல்களினைச் சந்தித்திருக்காத போதிலும் நலிவடைந்து செல் கின்றதான போக்கு காணப்படுவது மறுக்கப்பட முடியாத உண்மையே.

இதனைத் தடுப்பதற்கு அல்லது இத்தகைய நிலைமையினை சீர்திருத்துவதற்கு அகில இலங்கை மற்றும் சர்வதேச இந்துமாமன்றம், சைவ பரிபாலனசபை, ஆதீனங்கள், கம்பன் கழகம் முதலானவை மேற்கொள்கின்ற சேவைகள் பாராட்டத்தக்கன. இருப்பினும் துாரதரிசன நோக்கின் ஆரம்ப நிலைகளில் தான் நாம் இன்ன மும் உள்ளோம் என்பதனை நிலை நிறுத்தவும், இத்தகைய சமகால அரசியல் செல்வாக்கு மிக்க மதவாதப்போக்குகளின் மிதவாதச் செயற்பாடு களுக்குள் எமது பங்கும், செயற்பாடும் எவ்வாறா னதாக அமையலாம் என்பதனை நல்லைக் குமரன் வழி எடுத்துக் கூறுவதற்கான எத்தனிப்பே இக் கட்டுரை. இங்கு நல்லையில் கூடும் அனை வரும் பொறுப்புணர்வுடன் செயற்படுவது என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

மதம்-நாகரிகமடைந்த மனிதனது ஒரு பண் பாட்டு அடையாளம், மொழி, இனம், நிறம், ஜாதி, பேதம், குலம், வர்க்கவேறுபாடு, பால்நிலை வேறு பாடு என்பனவற்றுக்கு அப்பால் ஒழுக்கநெறியினை

விளக்கும். வாழ்வின் தத்துவார்த்தத்தினைப் போதிக்கும் மார்க்கம். மனித மனங்களுக்கு இந்த மதமானது விருப்பத்திற்குரிய தேர்வு ஆகின்ற பொழுதிலே பக்தி பிறக்கின்றது எனலாம். மறு தலையாக இப்பக்திநிலை மனித மனங்களினைப் பிடிக்கின்ற போது — மதம் பிடித்த போது — மதவெறி நிலை வருகின்றது. மதவெறிஞர்களுக்குள் பக்தி இருக்கலாம். ஆனால் பக்தனுக்குள் மதவெறி வரல் என்பது வேடிக்கையே. சில ஆண்டுகளுக்கு முன்பு — மனித உரிமைகளினுள் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகள் கோலோச்சிய காலத்தில் - மதசார்புக் குழுக்கள் அரசியல் கலப்படமற்ற வெறும் அமுக்கக் குழுக்களாகவே (Pressure Groups) சர்வதேச உலகின் பல நாடுகளிலும் செயற்பட்டு வந்தன. காலப்போக்கில் இத்தகைய குழுக்களே அரசியல் தலைமைகளினைத் தீர்மானிப்பவையாகவும் காலவோட்டத்தில் அரசியல் கட்சிகளாகவும் தம்மை மாற்றியமைத்துக் கொண்டன.

சிறப்புரிமை. முன்னுரிமை (Previlage and Priority) பிரச்சினைக்கு தீர்வு வேண்டி அரசியலமைப்பில் குறிப்பிடப்படும் அல்லது இனங்காட்டப்படும் நாட்டின் மதம் என்பதுவும் இக்காரணத்தால் பிழையான பொருள் கோடல்களுக்கு (Misintepretation) உள்ளாக்கப்பட்டது. நாட்டின் மதம் என்பது குறித்த நாட்டின் குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டுமானது என்றும். ஏனைய மதத்தவர்கள் மதம் சார்பான சமவுரிமையினைக் கொண்டிருக்காதவர்கள் என்கின்ற கருத்தும் மதவெறிஞர்கள் வழி பரப்புரை செய்யப்படலாயிற்று. இதன் விளைவாக நெருக்கடிகள், மதக்கொள்கைகள், விமர்சனமாக்கப்படுதல். மத நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள். ஆட்கொலைகள். பொருட்கள்/உடமைகள் சேதமாக்கப்படுதல் என சமகால உதாரணங்கள் ஏராளம். இவற்றுக்கு அப்பால் மதச்சார்பு தமது நிலைப்பாட்டினை ஸ்திரப்படுத்துவதற்காக வரலாற்றினை, சரித்திரக் குறிப்புக்களினை (History, Historical Profile) மாற்றியமைத்து நிலைமைகளினை மேலும் முரண்பாட்டுச் சிக்கல்களுக்குள் தள்ளி விடுவதற்கே சமகால அரசியல் தலைமைகள் திடசங்கற்பம் கொண்டுள்ளன எனலாம். இத்தகைய நிலைமைகளினை உன்னிப்பாக அவதானித்து இந்து சமயத்தவர் அனைவரும் ஏதோவொரு வகையில் முன்னோக்கிய செயற்பாட்டு நடைமுறை-படிமுறைகளில் (Pro-Active) சிந்தித்துச் செயற்பட வேண்டிய தேவை பலருக்கும் உள்ளமை மறுக்க முடியாததே!

இந்நிலைமைகள் வலியுறுத்தப்படுவதற்கு மூலகாரணமாக பல்வேறு எடுத்துக்காட்டுகளினை சர்வதேச உலகிலும், எமது நாட்டிலும் காணலாம். அவற்றுள் சில வருமாறு:-

**(i) கம்பூச்சியா இந்து ஆலயம்சார் சர்வதேச வழக்கும். இலங்கையின் அக்கறையும்.**

இந்து நாகரிக வளர்ச்சியில் இந்து மதம் பின்பற்றப்பட்ட கிழக்கு ஆசிய நாடுகளில் இன்னமும் சான்றுகள் (Evidence) உள்ள நாடு கம்போடியா/கம்பூச்சியா. இது அடிப்படையில் ஒரு இந்து நாடு. இதன் அண்டை நாடான தாய்லாந்து பௌத்த நாடு என தன்னை பிற்காலத்தே உருவகப்படுத்தியது. பௌத்ததத்துவம் இந்து சமயத்தின் ஒரு தத்துவ மார்க்கமே என்பதனை இங்கு கைவிடுவோம். இவ்விரு நாடுகளுக்கும் இடையே காணப்படுகின்ற: எல்லைப்பகுதியில் காணப்படுகின்ற இந்துக்கோவில் ("Preach Vihear") 900 ஆண்டு காலத்திற்கும் முன்னையது. 2008ஆம் ஆண்டு UNESCO-யுனெஸ்கோவினால் பூகோள மரபுரிமைச் சொத்துக்களின் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இப்புராதன கோவிலானது 1954ஆம் ஆண்டு தாய்லாந்து இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு வரலாற்றில்-பௌத்தமத சான்றாக இணைத்துக்கொள்ளப்பட்டது. சர்வதேச நீதி மன்றத்தினால் கவனத்தில் கொள்ளப்பட்ட இம் மதம்சார் வழக்கு 1962இல் கம்போடியாவிற்குச் சார்பான தீர்ப்பினைக் கொண்டிருந்த போதும் தாய்லாந்து இராணுவப் பிரசன்னம் நிலை பெறவே செய்தது. மீளவும் 2011இல் கம்போடியாவின் கோரிக்கைக்கு அமைவாக மீண்டும் இவ்

வழக்கு சர்வதேச நீதிமன்றத்தினால் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மூன்று வருடகாலப் பகுதியின் பின்பு 11.11.2013இல் குறித்த பழமை வாய்ந்த இந்துக்கோயில் கம்போடியாவுக்கு உரியது எனவும், அதன் உரிமம், நிலவுரிமை அந் நாட்டுக்கே உரியது எனவும் தீர்ப்பு வழங்கியிருந் தது. இருப்பினும் இன்றுவரை இராணுவப் பிரசன்னம் விலக்கிக்கொள்ளப்படவுமில்லை; தாய்லாந்து வழியான நுழைவுவாயில்களின் மூலமாகவே கோவிலுக்குள் உள்நுழைய முடியும் என்கின்ற நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதா கவும் இல்லை. இவ்வழக்கிற்கு தாய்லாந்து அரசு வருடாந்தம் 165 மில்லியன் டொலரையும், அப் பகுதி பாதுகாப்பிற்கு மட்டும் 45 மில்லியன் டொல ரையும் செலவழித்திருந்தது என்பதுவும், பங்குனி மாதம் 2013ஆம் ஆண்டு எமது இலங்கை ஜனாதி பதி தாய்லாந்து விஜயம் செய்திருந்த சமயத்தில் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் இந்த வழக்கிற் கான தனது பூரண ஆதரவு நிலையினை வெளிப் படையாக பிரதமமந்திரி ஜின்லுக் சினாவத்ரா விற்கு வழங்கியிருந்தமையும் இங்கு நோக்கத் தக்கது. (The Nation, April 27, 2013, Saturday, Bangkok).

(ii) பாபர் மசூதி தொடக்கம் அளுத்கம வரை

மதவாதிகளினால் மத அமைப்புக்கள் தாக்கப் படுவது என்பது சர்வதேச அரங்கிலும் நமது நாட்டி லும் புதிய விடயமன்று. பாபர் மசூதி, அயோத்தி தாக்குதல், பங்களாதேஷ் நாட்டில் இந்துக்களுக்கு தொடரும் அச்சுறுத்தல், மியன்மாரில் முஸ்லிம் மதத்தவர்கள் இலக்கு வைக்கப்படல், முஸ்லிம் மதப்பிரிவுகள் (சுன்ஹி மற்றும் ஷியா), பண்டைய காலத்தில் காணப்பட்ட சமண/வைஷ்ணவ, சைவ சமய பிரிவுகளுக்கு இடையேயான பகைமை, கிறிஸ்தவ மத சமூக அமைப்புக்கள், கிறிஸ்தவ மத தலைமைகள் குற்றச்சாட்டுதல்களுக்கு உள்ளாக் கப்படல் என மதச்சார்பு சமகால நிலைமை தீவிர வாதப்போக்கிற்கு ஒப்பான நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளது எனலாம். முன்னர் நாம் நோக்கி யது போன்று மதம்சார் அமுக்கக்குழுக்கள் அரசியல் தலைமைகளினை நிர்ணயம் செய்ய அல்லது அரசியல் கட்சிகளாக தம்மை உருமாற்றிக் கொள்ள, மறுபுறத்தே சுதந்திர வேட்கையுடன் போராட்டம் நடாத்திய கிளர்ச்சிக்குழுக்கள் அரசியல் தலைமைகளினைத் தீர்மானிக்கின்ற மதத் தலைமைகளினைத் தாக்கத் தொடங்கின. இது பல அரசுகளினாலும் விமர்சனங்களுக்கு உள்ளாகியதோர் அம்சமாயிற்று.

தலதாமாளிகை, அநுராதபுரம் மஹாவிகாரை போன்றவற்றின் மீதான தாக்குதல்கள் இவற்றிற் கான எடுத்துக் காட்டுக்கள். இவை போன்ற மறு தாக்குதல்களும் நிகழ்த்தப்படாமல் இல்லை. யாழ்-வண்ணைச் சிவன் மீதான அவ்ரோ விமானக் குண்டுவீச்சு, நவாலி சென்பீற்றர்ஸ் மற்றும் யாழ் பேராலய அவலங்கள் என எதிர் தாக்குதல்கள் நிகழ்த்திய அரசாங்கங்களும் நமது நாட்டிலேயே இருந்தன. இவையாவும் இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதனைப் பறைசாற்றுபவன வாகவும் பிற மதத்தவர்களது மதச்சுதந்திரம் என்பது வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதான போக்கினைக் கொண்டனவாகவே உள்ளன என்கின்ற முடிபுக்கும் வர அடிப்படை அம்சங்களா கின்றன. இருப்பினும் சர்வதேச இந்து மாநாடு (இலங்கை) நடாத்தியமை, மல்கம் றஞ்சித் ஆண்டகையின் தெரிவிற்கான சிறப்பு வரவேற்பு என சில விதிவிலக்கான செயற்பாடுகளும் நிகழா மலில்லை. இருந்த பொழுதிலும் பிற மதத்தினரும் பௌத்த மதத்தினருக்குரிய சம அந்தஸ்து கொண் டிருக்காமை என்பது கண்கூடு. சாதாரண பேருந் தில் செல்லும் ஒருவர் பௌத்த துறவிக்கு ஆசனம் வழங்கும் பண்பு ஏனைய மதத்தலைமைகளுக்கு (கேட்டும்) கிடைப்பதில்லை என்பதுவும் மதம்சார் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலில் தீவிரம் காட்டப்படுதலின் விளைவாக பொதுவுடமைகள் சேதமாக்கப்படல் என்பதற்கு அளுத்கம சம்பவங் களும் சிறந்த எடுத்துக்காட்டுக்களே ஆகும்.

(iii) மதப்பின்பற்றுகையில் நெகிழ்வுத்தன்மை

மானிடத்தின் பிறப்புரிமை அடையாளங்களில் மதமும் ஒன்று. இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம்

அடிப்படையில் / பிறப்பில் உடமை கொண்டிருந்த உரித்துக் கொண்டிருந்த மதத்தினை, மார்க்கத் தினை மட்டுமே பின்பற்றுவதற்கு ஊக்கமளிக்கப் படுகின்றன. சில வேளைகளில் கட்டாயமாக்கப்படு கின்றன. மார்க்க நெறிகளாக இம்மதங்கள் பல் வேறு சிருஷ்டிப்பு செய்யப்படுவதற்கு இந்நிலைமை காரணமாகின்ற பொழுதிலும் இம் மாதிரியான தோர் கட்டாயப்போக்கு இந்து சமயத்தில் காணப் படுவதில்லை. சற்று அதிகப் படியான நெகிழ்வுப் போக்கே அனுசரிக்கப்படுகின்றது. உலகின் ஒரே இந்து நாடான நேபாளம் கூட தனது அரசியல மைப்பில் இந்துசமயத்தினையும் ஏனைய மதங் களுக்கு இணையாக சம காலத்தே மாற்றியமைத் துள்ளது. பிறமதத் தலையீடு என்பது மரணதண்ட னைக் குற்றமாக சட்டங்களினைக் கொண்டிருந்த இந்து தத்துவ நாடு சமமத உரிமைக் கோட்பாடு களின்படி நெகிழ்வுப் போக்கினைப் பின்பற்றியிருந் தது. இருப்பினும் இத்தகைய நேர்வுகளினை இஸ் லாம் மதத்தினைப் பின்பற்றும் அரபு நாடுகளிலோ கிறிஸ்தவத்தின் தலைமையகமான வத்திக் கானிலோ பௌத்த நாடான தாய்லாந்திலோ எதிர் பார்க்க முடியாது. இங்கு அடிப்படை அம்சம் யாதெனில் இந்துமதம் தனது நெகிழ்வுப் போக்கி னால் இருப்பினை, தனக்குரிய அந்தஸ்தினை இழக்கின்றது என்பதுவே. இந்நிலைமை மதவாதி களினைத் தோற்றுவிக்காமல் மாறாக மதம்சார் விடயப் பரப்புக்களினை எதிர்காலத்திற்கு அதன் உண்மைத்தன்மை மாறாமல் எடுத்துச் செல்ல வேனும் சிறப்பானதோர் ஆளணியினர் உருவாக் கப்படுதல், அதற்கான உபாயமான நிகழ்வுத் திட்டங்கள் அமைந்து காணப்படலின் அவசியம் குறித்துமே வலியுறுத்துகின்றது என்பது அவதானிக் கத்தக்கது. ஆங்கிலேயருடன் எங்ஙனமாக தந்தி ரோபாய அணுகுமுறை மூலம் சைவத்தினை நாவலர் வளர்த்திட அரும்பாடுபட்டாரோ அந்தளவுக் கேனும் வினைத்திறனுடனும், முனைப்புடனும் செயற்பட தனியன்கள் பலவும் புறப்பட வேண்டிய தருணமாகவே சம காலம் காணப்படுகின்றது. கட்டாயத்தன்மை வாய்ந்த வணக்க முறைமையோ, பின்பற்றுகைகள் வலியுறுத்தப்படுதல் என்ப துவோ. பரம்பரைச் சமூகம் அதே மதத்தினைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்று "இல்லாத நிலைமை" காணப்படுவதனாலோ, இவற்றுக்கு எல்லாம் அப்பால் நலிவடைந்த சமூகம் (தமிழ்) பின்பற்றுகின்ற காரணத்தினாலோ இந்துசமயம் தனது ஸ்திரமான போக்கினைக் கொண்டுள்ள ஒரு மதமாக உள்ள பொழுதிலும் சமகாலத்தே பெரும் சர்ச்சைக்குரியதாகவும், பிரபல்யமடைந்து வருகின்றது மான "மதமாற்றம்" என்பதற்கும் தடுப்பு நடவடிக்கைகள், முன்னேற்பாட்டு முயற்சி கள் ஏதேனும் செய்யப்படுவதாகத் தெரியவில்லை என்கின்ற நிலைமையினையே கொண்டுள்ளது. இந்து சமயத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு பின்பற்றுவதாக இளைஞர், யுவதிகள் தேசிய பத்திரிகைகள் மூலம் விடும் அறிவித்தல் களது எண்ணிக்கையும் யுத்தவடுக்களினால் பணிவி யல், குடும்ப பொருளாதாரம் பாதிப்புற்று வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் குடும்ப நிலைமை களினைச் சாதகமாகப் பயன்படுத்தி மதமாற்றுச் சிந்தனைகள், செயற்பாடுகள் அதிகமாகவே மேலோங்கியுள்ளதால் அத்தகைய அமைப்புக் களினது கட்டமைப்புக்களும், அவை வழங்கும் சமூக சேவைகளும் பல்வேறு மக்கள் கூட்டத் தினை ஞாயிறு தோறும் அள்ளிச் செல்கின்றதை யும் இந்துசமயம் சார் நிறுவனங்கள் யாவும் கவனத்தில் கொள்ள வேண்டியமை உடனடித் தேவைகளாக உள்ளன.

இவற்றுக்கு அப்பால் இந்துசமய நிறுவனங்கள் ஆற்றுகின்ற சமூகப்பணிகளினை எடுத்து நோக்கு கின்ற போது சிறுவர் இல்லங்களினை நடாத்து தல், திருவிழாக் கொண்டாட்டங்கள், அதீத பணச் செலவுடன் கூடிய களியாட்ட நிகழ்வுகள் என ஒருங்கிணைப்பாளர்களுக்கும் உள்ளூர் அரசு களுக்குமே வருவாயினை சம்பாதித்துக் கொடுக் கின்றன. அறநெறிப்பாடசாலைகள் சமயம் கூறும் அறக்கருத்துக்களினை அதன் உட்கருத்து (Context) மாறாது சமூகத்தின் பல்வேறு இலக்கு குழுக்களுக்கும் இலகுவழியில் பல்வேறு அணுகு முறைமையினூடாக எடுத்துச் செல்ல முன்

வருதல் வேண்டும். சிறுபராயம் முதல் முதியவர் கள் வரை-ஆன்மீகத்தின் வழி-அனைவரும் சமய நிறுவனங்களுடன் - அவர்கள் ஆற்றுகின்ற சமூகப்பணி மூலமாக கட்டுண்டு / பிணைக்கப் பட்டு மதஉரிமைகளை அனுபவிக்கின்ற அதே சமயம் பிணிக்கும் கட்டுப்பாடுகளினை (Binding Obligations) வலியுறுத்துகின்ற செயற்பாடுகளினை செய்திடவேண்டும். இவற்றின் வழியாக பிற மதத் தினருடன் பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்ள லாம். "PEACE" தொலைக்காட்சியில் பேராசிரியர் சாயிக்நாயக் என்பவர் இஸ்லாம் -இந்துசமயம்-பௌத்தமதம் காட்டுகின்ற அறநெறி களினை, சிறப்பான அம்சங்களினை குர்-ஆன், பகவத்கீதை, மகாவம்சம் மற்றும் பைபிள் மூலமாக பரப்புரை செய்கின்றது போன்ற பல்வேறு கலையம்சமான புதிய படைப்புக்கள், பல்துறை ஊடகங்கள் மூலம் பரப்புரை, விழிப்பு நிலை அடையச் செய்தல் வேண்டும். இது அனைவரினதும் கடமையும், பொறுப்புமாகும்.

### (iv) சர்வதேச சட்ட கொள்கையும் மத ஒற்றுமை / ஒருங்கிணைப்பு வேலைத்திட்டங்களும்

மதம் என்பது பல்வேறு வடிவங்களிலும் ஒற்றுமையினை - ஒருங்கிணைப்பினை வலி யுறுத்தும் ஒரு மார்க்க நெறியாகவே பல்லாண்டு காலமாக திகழ்ந்து வருகின்றது. இந்துசமயம் தமிழர்களுக்கு / ஒரு இனத்திற்கு உரிய மதம் அன்று. சில இடங்களில் ஜாதி, சமூக ஏற்றத்தாழ்வு களுக்குள் பாகுபடுத்தப்பட்டு மதம் சிருஷ்டிப்பு செய்யப்பட்டு தவறுதலான பொருள் கோடலுக்குள் உள்ளாக்கப்பட்டிருப்பினும் இத்தகைய பாகுபாடு காட்டப்படுதல் என்பது அறவே இல்லாதொழிக்கப் பட வேண்டும். பாகுபாடு காட்டாமை (Non-Discrimination) என்பதுவே அடிப்படைக் கொள் கையாக சர்வதேச சட்டத்தில் வலியுறுத்தப்படுவது டன் ஏனைய சர்வதேச நியதிகளினையும் அனு சரித்து நடக்கவே எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிலைமை மனித உரிமைகளினை நிலைபேற டையச் செய்வதுடன் மனிதநேயத்தினையும் வளர்ச்சியடைய / செயற்பாடு உடையதாகச் செய்வதுடன் சாதியம், மிருகபலியிடல் போன்ற சில வேண்டத்தகாத பின்பற்றுதல்களினையும் சீர் மயப்படுத்துகின்றது. சாதிச்சிக்கல்கள் காரணமாக பிராமணர்களே திருவிழா கொண்டாட அனு மதித்த சமூகம், சமூக ஏற்றத்தாழ்வுகளினால் மூடப் பட்டிருக்கும் கோவில்கள் இறையன்பு இருந்தும் சில பல ஏற்றத்தாழ்வுகளினால் சுவாமிகாவ அனு மதிக்கப்படாத சமூகவர்க்கம் போன்றன இல்லாமை என வடமாகாண இலங்கை சம காலத்தே சமயம் வழி முன்னேற்ற நிலை அடைந்துள்ளமை வரவேற்கத்தக்கதே. இச்சமகால நிலை சற்று முன்னேற்றகரமாக அடுத்த நிலைக்குள் எடுத்துச் செல்லப்படலாம். உள்ளூர் குடும்ப பிணக்குகளினை சமரசம், மத்தியஸ்தம் செய்தல், சிறுவர் இளைஞர் களினை இந்துமத நிறுவனங்களுடன் பிணைத் திருக்கும் கலைகளுடன் தொடர்புற வைத்தல், மகளிர் முதியவர்களுக்கு வேண்டிய சேவைகள் வழங்கல், பிரசுரங்கள் வெளியிடல் என செய்யப் படக்கூடியவை ஏராளம் பட்டியலில் உண்டு. இவற்றை மதத் தலைமைகளும் இனங்காணு தல் என்பதுவும் வழிநடத்திச் செல்லல் என்பதுவும் அவசியமாகின்றது. இந்து சமயத்தினைப் பின் பற்றுகின்ற இளைஞர் யுவதிகள் பருவ, பராய வயதினை அடைகின்ற போது பெற்றோர்களாக வருகையில் ஏற்படக்கூடிய பொறுப்புக்களினை (Parental skills/Parental education) திருமண பந்தத்திற்கு முன்னமே எடுத்துக் கூறாததினால் அநேகமான திருமண முறிவுகள், குடும்பப் பிரச்சினைகள், குழந்தைப் பராமரிப்பில் பொறுப் புணர்வற்ற தன்மை என பல்வேறு சமூகச் சிக்கல் கள் தோற்றம் பெறுகின்றன. இதன் விளைவாக அதிகரித்த எண்ணிக்கை கொண்ட; கைவிடப்பட்ட நிலையில் முதியவர்களினை, சிறுவர்களினை முதியோர் இல்லங்களும் சிறுவர் இல்லங்களும் பொறுப்பெடுத்து இல்லமயமாக்குகின்றன. இந்து மதத்தினைப் பின்பற்றுபவர்களிடத்தே இவ் எண்ணிக்கை பல மடங்கு உயர்வாக உள்ளமை அவதானிக்கத்தக்கது.

இவ்வாறான, சமகாலநிலை ஆரோக்கியமான

தன்று. ஒருபுறத்தே மதவாதிகள் மதநிறுவனங் களினை திட்டமிட்டு சூறையாடிய வரலாற்றினையே மாற்றுகின்ற திட்டத்திற்கு திடசங்கற்பம் கொண் டிருக்க, மறுபுறத்தே சமூக அக்கறைகளினையும் மறந்து சர்வதேச சட்டங்களினையும் உதாசீனம் செய்து நீண்டகால இருப்பு, சான்றுகளினை (வர லாற்றுடன் கூடிய) கொண்டுள்ள மதம் என்கின்ற (தற்) பெருமைகளினை யதார்த்த நிலைமைகளு க்கு ஏற்ப நடைமுறைப்படுத்த வேண்டும். பரந்து விரிந்துள்ள இந்துசமயம் சார் நிறுவனங்களும் ஒரே நோக்கெல்லையினுள் கொணரப்பட்டு ஒற்று மைப்படுத்தப்பட்டு வேறுபட்ட தத்துவக் கருத்துக்க ளினை பல்வேறு சமூகமட்டத்திற்கும் - அடிப்படை யில் மாறாமல் - ஆனால் தேவைகளுக்கு அமைவாக எடுத்துச் செல்லலாம். கவுணாவத்தை வழக்கு கூட இந்நிலைமையின் தேவைப்பாட்டி னையே பறைசாற்றுகின்றது. இந்துமத நிறு வனங்களும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் மிருகவதை பற்றிக் கூற எங்கோ ஒரு மூலையில் வெட்டிச்சாய்க்கப்படும் மிருகங்களின் மூலமான வெறியாடலுக்கும் ஏககாலத்தே அரங்கேறிய பொதுபலசேனாவின் அளுக்கம மோதலுக்கும் அடிப்படையில் ஒருமித்த - ஏகோபித்த குரலின் மையே காரணமாகும். திருகோணமலை இலங் கைத்துறைமுக கலியுக விநாயகர் தேவஸ்தானம் லங்காம்பட்டினம் சமுத்திரகிரி விகாரையாகி விநாயகர் விகாரையினுள் தஞ்சடைந்துள்ள நிலைமையும், கல்லடி அருகே வெருகல் முகத்து வார மலைதீலி (றோட்டோர) அம்மன் கூட, விகாரை ஆக்கப்பட்டிருப்பதுவும் கந்தரோடை சிவ சரித்திரம் மாற்றலாகிப் போனமையும் பல்வேறு இடங்களிலும் உயர்ந்து வியாபித்து வரும் மதப் பிரிவினரது கட்டிடங்களும் நல்லூர் புனிதப் பகுதி யில் (முருகனின் பின் வீதியில்) மாமிச வண்டில் வலம் வருவதுவும் என கவனிக்கப்படாமை (Negligence) காரணமாக முளைவிட்டிருக்கும் எடுத்துக்காட்டுகள், எதிர் காலத்தினை அது குறித்த எண்ணத்தினை அச்சம் கொண்டதாக்குகின்றன. ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் மதம் ரீதியான தீவிரப்போக்கின் அம்சமாக புராதனகால புத்தபக வானது சிலையினை குண்டு வைத்து தகர்க்க உள்ளதாக அறிவித்த போது அந்தச் சிலையினை நமது நாட்டுக்கு எடுத்து வருவதற்கு அயராது முயற்சி செய்தவர்களில் முதன்மையானவர் அதி மேதகு ஜனாதிபதி. அதிகப்படியான செலவு மற்றும் மதத்தலைமை களது உந்துதல்கள் காரணமான முயற்சி தோல்வி அடைந்த போதும் / அதே அரச தலைமை மத நல்லிணக்கம் தொடர்பில் முன் னேற்றகரமான ஆரோக்கியமான நிகழ்ச்சி நிரல் எதனையும் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

அத்துடன், மத விவகாரங்களினை கையாள்வ தற்கு ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ்துறை கூட தனது செயற்பாட்டு விபரத்தினை (Terms of Reference / Jop Discrition in detail) தெளிவாகக் கொண்டிருக் காத நிலைமையே காணப்படுவதுவும் இந்து சமயத்தினைப் பின்பற்றுகின்ற அனைவரும் நோக்க வேண்டிய அம்சமாகின்றது. இவ்விதமாக மதம்சார் அணுகுமுறைகள் மேல் மட்டத்தில் தெளிவற்று இருக்கின்ற போது அதில் (மேல்மட்டத் தில்) அதிகம் தங்கி இருப்பதில் பயன் இருப்பதாகத் தெரியவில்லை. மதம்சார் புராதன தொல்பொருள் கள் காணப்படும் வடபுலத்து இடங்களினை மரபுரி மைச் சொத்துக்களாக வர்த்தமானிப் பிரகடனம் செய்த அரசு, பௌத்த மதத்தினைத் தவிர ஏனைய மதச் சான்றாதாரங்கள் பலவற்றினைக் கைவிட்டி ருந்தமையும் இதற்குச் சிறந்த உதாரணமே.

எனவே, அடிப்படையில் எமக்கு இருக்கின்ற அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் அவரவர் நியாயா திக்க எல்லைகளுக்குள் வன்முறைகளற்ற (Nonviolent) முறைமையினூடாக இறைபற்றிப் பேசுவோம், இறையருள் போதிப்போம்; கூடவே இறையுடன் இணைந்து சில சமூகப் பணிகளி னையும் சமய நிறுவனங்களினூடாகச் செய்வ தற்கு உறுதி கொள்வோமாக! சற்றே விரிவான செயற்திட்டத்தினைத் தீட்டுங்கள், பிறரையும் ஒருங்கிணையுங்கள், விரைவாகவே செயற்படுத் துங்கள். நாளை என்பது தாமதமே! தாமதம் என்பது தவிர்ப்பின் ஆரம்பப்படிநிலையே!

# இந்துசமயம் - கல்வி - சமூகவியல் சில சிந்தனைகள்

**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**
**ஓய்வுநிலைப் பேராசிரியர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## அறிமுகம்

சமயங்கள் மனிதகுலம் தமது கூட்டு வாழ்க்கையை நிலைநிறுத்துவதற்காக தானாக கண்டறிந்த சமூகவியல் மூல உபாயங்களில் ஒன்றாகும்; அது மிகவும் பலமானது. இதனால் தான் எத்தனையோ, அரசியல், தொழில்நுட்ப, புவியியல் மாற்றங்களுக்குள்ளும் தப்பிப்பிழைத்து நிலை பெற்றுள்ளது.

சமுதாய வளங்களையும், மனிதர்களையும் ஒருங்கிணைத்து கண்ணுக்கு புலனாகாத - பிரகடனப்படுத்தப்படாத பல சமூகவியல் நலன்களை சமயங்கள் நிலைநிறுத்தி வருகின்றது.

சமயங்களிடையில் பக்கவாட்டிலான அசைவியக்கங்கள் சுயமாகவோ, பிரச்சாரங்களின் மூலமாகவோ நடைபெற்றாலும் ஏதோ ஒரு சமய நம்பிக்கையுடனும் உணர்வுடனும் அது சொல்கின்ற வாழ்க்கை மாதிரியின்படியும் அவர்கள் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றனர்.

இந்துசமயமும் மிகவும் தொன்மையானது; நிலைபேறாற்றல் கொண்டது; மனித நாகரிகத்தின் மூலக்கூறுகளில் ஒன்றாக வளர்ந்தது: இப்போது உலக ரீதியிலான சுற்றுலாவினதும் புலம் பெயர்வினதும் செல்வாக்கின் ஒரு அம்சமாகவும் விளங்குகிறது.

சமயங்கள், இலக்கியங்கள், கல்வி, கட்டிடக் கலை, மனித மேம்பாடு, உடல் நலன், உள ஆரோக்கியம், குடும்பப் பிணைப்பு போன்ற பலவற்றையும் இணைக்கின்ற மையநிலை இயல்பாற்றலுடன் வரலாறு முழுவதும் நிலை பெறும் தகைமை கொண்டது.

இக்கட்டுரை இந்து சமயத்தின் சமூக, பொருளாதார இலக்குகள், செயற்பாடுகள் என்பவற்றின் பலமான சில அம்சங்கள் பற்றிக் கவனம் செலுத்த முயல்கிறது.

## சமயம் பற்றிய எண்ணக்கரு

சமயம் என்பது முடிவற்ற தன்மை கொண்ட பொருத்தப்பாடு மிக்க அகநிலை அம்சம் தான் என்று மாக்ஸ் முல்லர் (Max Muller) விளக்க முற்பட்டார்.

எல்லாவகையான சுயநிலை குறிக்கோள்கள், ஆசைகள் என்பவற்றை சரியான முறையிலும் மிகவும் உயர்ந்த தரநிலையிலும் அங்கீகரிக்கச் செய்கின்ற வலுமிக்க வழிகாட்டல் செயல்நிலை பற்றிய இலட்சிய அம்சமே சமயம் என்று ஜோன் ஸ்ரூவாட் மில் (John Straurt Mill) விளக்க முயன்றார்.

எங்களுக்கு அப்பால் இருப்பது போலவும், எங்களுக்குப் பின்னால் இருந்து இயங்குவது போலவும் எங்களுக்குள்ளேயிருந்து செயற்படுவது போலவும் இன்னும் உணர வேண்டிய பல இயல்புகளைக் கொண்டிருப்பது போலவும் பல ஆற்றல் நிலை இயல்புகளைக் கொண்டதே சமயம் என வைற் ஹெட் (White Head) விளக்க முயல்கிறார்.

டேக்ஹெயிம் (Durk Heim) என்ற அறிஞர் கருத்தின்படி ஒன்றிணைந்த வாழ்க்கை முறையின் நன்கொடை தான் சமயம். கூட்டு வாழ்க்கையையும் தனி நபர்களின் வாழ்வையும் உறுதியான வாழ்வையும் தரவல்லது. தனிநபர்கள் ஒவ்வொருவரிடமும் மகிழ்ச்சிகரமான பரபரப்பையும், உளநிலை உறக்கத்தையும் தரக்கூடிய பேராற்றல் கொண்டது தான் சமயம் என்று அவர் மேலும் தெளிவுபடுத்துகிறார். சமூகவியல் ரீதியில் இவ்வாறு விளக்கமளிக்க அவர் முனைகின்றார். நம்பிக்கை, பற்றுதல், உண்மை, விசுவாசம், பழக்கவழக்கங்கள் போன்ற எல்லாவற்றையும் அவை கவனமாக ஒருங்கிணைத்திருப்பதாக அவர் விளக்க முற்படுகிறார்.

மனிதர்களிடம் விழுமியங்களை புனிதமான உணர்வுகளுடன் வளர்க்கும் இயல்பாற்றல் சமயங்களுக்கு இருப்பதாலேயே புனிதமான அதி உயர் உணர்வாகவும், செயல்நிலைகளாகவும், சமூக நியாயமாகவும் சமயம்; உலகம் முழுவதும் நிலைபெற்று வளர்கிறது.

தேசிய வாழ்க்கை முறையை அகநிலைக் கட்டுப்பாட்டு உணர்வுகளுடன் உலக மக்கள் அனைவரும் பின்பற்றும் படி செய்யும் ஆற்றல் சமயங்களுக்கு உண்டு.

மகாத்மா காந்தியும் சமய உணர்வு என்பது முடிவானது; உண்மையானது; உண்மை வெளிப்பாட்டுக்குரியது; எல்லோருக்கும் பொருந்துவது என்றும் இதனால் எல்லா சமயங்களும் ஒன்றிணைந்து சமூக நலன்களை மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இத்தகைய விளக்கங்கள் எல்லாவற்றுக்கும் பொருந்துகின்ற இயல்புடையது இந்துசமயமாகும். அது பழைமையின் தூய்மையையும், வலிமையையும் கொண்டதாக விளங்குகிறது.

ஆத்மாவுக்கும் கடவுளுக்குமான தொடர்பாடலையே இந்துசமய இலக்கியங்கள் விளக்குகின்றன. நாயன்மார்கள் சமய பக்தர்கள் மாத்திரமல்ல அவர்கள் புலவர்கள்; மொழியாற்றலும் புனைவு ஆற்றலும் கொண்டவர்கள்; உரைநடை வளராத காலத்தில் பின்பற்றப்பட்ட மொழியமைதியின் படி மேன்மையான உணர்வுடன் சமூக அறிவியல் பற்றியும் சமூக உன்னதங்கள் பற்றியும் பலவற்றை அவர்கள் படைத்துள்ளனர்.

இந்துசமயத்தின் நேர் முறையான தொழிற்பாடுகள் எவ்வாறு சமூகத்தின் கல்வி இலக்குகள், கல்விச் செயல்முறை, கல்வி விளைவுகள் என்பவற்றுடன் பிணைந்திருக்கின்றன என்று நோக்குவது அவசியமாகின்றது.

**இந்துசமயமும் கல்வியும்**

கல்விக்கு சமயம் எத்துணை தூரம் துணை செய்து வந்துள்ளதென்பது தொடர்பாக நீண்ட வரலாற்றுக்கால விவாதங்கள் நிறையவே காணப்படுகின்றன.

கல்வி என்பதே சமயங்களின் பொறுப்பாக இருந்துள்ளதையும் சமயக் குழுக்களே அதை நிர்வகித்து வந்தன என்பதையும் மத்தியகால வரலாறு முழுவதிலும் காணமுடிகின்றது.

தற்போது நாடுகளின் அரசாங்கங்கள் கல்வி வழங்கும் பொறுப்பை எடுத்துள்ளன. ஆனாலும் தொடர்ந்து கல்வி மீது சமயத்தின் செல்வாக்கு மிகவும் வலுவானதாகவே இருந்து வருகிறது.

கல்வி, சமூக நிறுவனங்களை வலுவானதாக மாற்றி வந்துள்ளது என்பதற்கப்பால் கல்வி நிறுவனங்கள் என்ற வலுவானதும், உயிர்த்துடிப்பு மிக்கதுமான நிறுவனங்களை சமூக நிறுவனங்களாகவும் அது வளர்த்து விட்டுள்ளது.

தனிநபர் சமயம் என்பதை விட, நிறுவன ரீதியிலான சமயம் (Institutional Religion) என்பது மிகவும் பலம் வாய்ந்த அரசியல் முக்கியத்துவம்

கொண்டது; அது கல்வியில் மிகவும் பலமான செயல்நிலையில் காணப்படுகிறது என்கிறார் ரஸல்பிரபு (Lord Russel)

இலங்கையில் நானூற்றி ஐம்பதுவருட போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சிக் காலம் முழுவதும் அரசியல் வலு என்பது கல்வி நிறுவனங்களுடாகவே சமுதாயத்தைக் கட்டுப் படுத்தியது; சமுதாயத்துக்கு துணை செய்தது; சமூக ஆதரவை பெற்றுத் தந்தது. கிறிஸ்தவ மதப்பாடசாலைகள் அறிவையும், உணர்வையும், ஒழுங்கையும், தொழில்களையும், சமூக மேலாண்மையையும் மக்கள் தொடர்பாக வளர்ப்பதற்குப் பாடுபட்டன. இதற்கு முன்பே இந்து சமயம் தனது இதேவகைப் பங்களிப்பை ஆற்றி வந்தது. குரு - சிஷ்ய முறை, வேதங்கள், ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு, உயர் சிந்தனை போன்ற பல்வேறு ஏற்பாடுகளின் ஊடாக இந்துசமயம் கல்வியை சமூக செயல்முறையாக்கி வந்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்து ஆறுதசாப்தங்கள் நிறைவடைந்த நிலையிலும் பௌத்த பாடசாலை கள், இந்து பாடசாலைகள், கிறிஸ்தவ பாடசாலை கள் என்ற பெயருடன் வெவ்வேறு சமூகக் கட்டமைப் பினருக்குரிய கல்வியை வழங்கி வருகின்றன.

பிரிவேனாக்களும்; மதரசாக்களும்; அறநெறிப் பாடசாலைகளும், குருமடங்களும் சமாந்தரமாக தத்தமது சமய நம்பிக்கை, சமய நடைமுறை, சமய வாழ்வு, சமயக் கட்டுப்பாடு, சமயப் பொதுமகிழ்ச்சி என்பவற்றைப் பேணுவதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன.

இந்துசமயம் நெகிழ்ச்சியுடையதும், சுதந்திர மானதும், மென்மை செயல்மாதிரிகளுடனும் கல்வியை அணுகுவதையும் அதன்வழி சமுதாய மேம்பாட்டைப் பேண முயல்வதையும் காண லாம்; இது தனித்துவமான மேன்மையாகும்.

கல்விஅறிவு நிறைந்த "ரிஷிகள்" என்று அழைக்கப்பட்ட குருமார், ஆசிரமங்களில் கல்வி என்பதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வந்ததை புராதன வரலாறு எடுத்தியம்புகிறது. வாழ்க்கையின் தத்துவங்களையே இந்து சமயம் தனது கல்வியின் உள்ளடக்கமாக கொண்டிருந் தது "மெய்ப்பொருள்" பற்றிய வியாக்கியானத்தை தருவதிலும் அது கல்வியுடனும் வாழ்வியலுட னும் தொடர்புறும் முறைமையையும் இந்து சமயம் தெளிவுபடுத்தி வந்துள்ளது.

இதன் வழியாகவே எல்லா அரசும் கல்வி நிறுவனங்களைப் பாதுகாப்பதையும், வளர்ப்பதை யும் தார்மீகக் கடமையாக ஏற்க வேண்டுமென்று இந்து சமயிகள் வலுவாக நம்பி வந்தனர்.

உண்மை, துயரங்களிலிருந்து விடுபடுதல், தூய்மை, ஒழுங்கு, சுயநேர்மை, பொது வாழ்வி லான கட்டுப்பாடுகள், பகிர்ந்து உண்ணுதல், கூடிக் குதூகலித்தல், உணர்வு நிலையிலான அதீத நம்பிக்கை, அதன்வழியான சமூக நடத்தைக் கோலங்கள் போன்ற பல சித்தாத்தங்கள், கோட் பாடுகள், விதிகள் என்பன இந்து கல்வி நிறுவனங் களின் கற்பித்தலின் மையப் பொருளாக இருந்து வருகின்றன.

ராஜபுத்திரர்களின் பின்பு இந்தியாவில் இஸ்லா மிய ஆட்சியாளர்கள் அதிகாரம் பெற்ற காலத்தில் கூட இந்து சமயக் கல்வியில் தம் மேலாதிக்கத் தைப் பிரயோகிக்கவில்லை. இந்து சமய மற்றும் பண்பாட்டு நிறுவனங்கள் தொடர்ந்தும் சுதந்திர மாக இயங்கி வந்துள்ளன.

இந்துக்களின் கல்விச் சிந்தனைகளில் அறிவி யல் பண்பு மிகுந்திருந்தது. சமயம் செயற்பாடுகள் எல்லாம் தனிநபர்களினதும் முழுச் சமூகத்தினதும் நலன்களை மேம்படுத்த உதவின; செல்வத்தை மறுபங்கீடு செய்ய வழிகாட்டின; கொடுப்பதில் மகிழ்ச்சி வளரும் என்ற சித்தாந்தத்தை இந்து சமய சிந்தனைகள் வலியுறுத்தி வந்துள்ளன.

பொதுவான கல்வி ஏற்கப்படுகின்ற அதே சமயம் சமாந்தரமாக இந்துசமயக் கல்வியும் வளர

வேண்டும் என்பதில் இந்திய சிந்தனையாளர்கள் அதிக ஆர்வம் காட்டினர்.

இந்தியாவில் சமயக்கல்விச் சிந்தனையாளர் களான சி.இராஜகோபாலச்சாரியாரும், முனைவர் இராதாகிருஷ்ணனும் மகாத்மாகாந்தியும் சமயக் கல்வி, சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் அறி வாகவும் உணர்வாகவும் சக்தியாகவும் செயற்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தனர்.

சமய அறிவு மாத்திரம் சமூகங்களை ஒழுங்கு படுத்தி விடமுடியாது. ஒழுங்கு, ஒழுக்கம், பயிற்சி என்பன கல்வியின் இணைச்செயற்பாடுகளாதல் வேண்டும் என்ற கருத்தும் மேலோங்கியிருந்தது.

ஆன்மீகப்பயிற்சி அகநிலைப் பயிற்சியாக அனைவரிடமும் பரவும் போது சமூகம் முழு வதற்குமான ஒழுங்கும் ஒழுக்கமும் நிறைந்த சமூகப் பண்பாட்டை வளர்த்து விடும் என்று இந்து சமயக்கல்வி அறிஞர்கள் நம்பினர். இதுதான் இந்துசமயம் காட்டும் சமூகவியல் (Sociology of Hinduism) ஆகும்.

இந்திய பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் சமயம் பாடமாகப் போதிக்கப்படுவதில்லை. ஆனால் சமூகங்களினால் போஷிக்கப்படும் கோவில்களும், மதபீடங்களும் அதிக விசையுடன் சமயக்கல்வி யையும் சமய நடைமுறைகளையும் ஒருங்கி ணைத்து வருகின்றன.

தர்க்க நியாய வினாக்களுக்கு முகம் கொடுக்கா மல் இந்துக்கல்வி சமூக மட்டத்தில் வலுவாகவே வளர்ந்து வருகிறது.

**நல்லூர் கந்தசாமி கோவிலும் சமூக விளைவுகளும்**

கந்தபுராண கலாசார மையமாகவே நல்லூர் கந்தசாமி கோவிலை மையப்படுத்தி செயற்படும் யாழ்ப்பாண சமூகம் நோக்கப்படுகிறது. நாவலரின் சமயப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி எல்லாமே நல்லூர் கந்தசாமி கோவிலையும் கந்தபுராண பண்பாட்டையும் மையப்படுத்தி வளர்ந்திருந்தன.

யாழ்ப்பாணத்தின் இன்றைய குறியீடுகளாக உலகம் முழுதும் நம்பப்படுவன. நல்லூர் கந்தசாமி கோவிலும், யாழ்ப்பாண நூலகமும், தலைசிறந்த இந்துப்பண்பாட்டுக் கல்வி நிறுவனங்களும் தான்.

உலகம் முழுதும் சிதறி வாழும் இந்துக்களிடம் ஒரே சமயத்தில் உணர்வலைகளை உருவாக்கும் பேராற்றல் கொண்டவன் நல்லைக்கந்தன்.

உலகம் முழுவதிலுமிருந்தும் செல்வத்தை யாழ்ப்பாணத்துக்கு அதீத விருப்புணர்வுடன் அசையச் செய்வதில் நல்லைக்கந்தனுக்கு மிகப் பெரிய பொருளாதார வலிமை உண்டு.

பலதசாப்தங்கள் தாய் மண்ணை விட்டு விலகி தொலைவில் நவீன வாழ்வு என்ற புதிய பொற் கூண்டினுள் அடைபட்ட இலட்சக்கணக்கான குடும்பங்களையும் தனி நபர்களையும் பல்லாயிரக்கணக்கான மைல்களைப் பயணம் செய்து எங்கள் நல்லையம்பதிக்கு வந்து எளிமை யின் ஆனந்தத்தையும், ஒன்று கூடுதலின் குதூகலத்தையும், உணர்வின் பேராற்றலையும் அனுபவிக்க உதவுபவன் எங்கள் நல்லைக் கந்தனே. இது சட்டத்தால் முடியாது; அரசியல் அதிகாரத்தினால் சாத்தியமாகாது; எங்கள் ஆன்மீக உணர்வு உந்துதல், பற்றுதல் என்ப வற்றால் மாத்திரமே இது சாத்தியமாகிறது.

எங்கள் சமூகத்தில் வேதனத்துக்காக வேலைக் குச் செல்லாத மாதர் சமூகத்துக்கு வெளியே செல்ல சுதந்திரம் கிடைக்கிறது. இந்த திருவிழா நாட்க ளில் சமூகம் ஆமோதிக்கின்ற விடுதலை இது. உடையில் சீர்மையும், உள்ளத்தில் தூய்மையும், ஒழுங்குமுறை தினசெயல்களும் விபரிக்க முடியாத சுதந்திர உணர்வும் எங்கள் இல்லத்தரசிகளுக்கு வருடத்தில் இருபத்தி ஐந்து நாட்கள் தருவது மிகப்பெரிய சமூக விளைவல்லவா?

உபந்நியாசங்களைக் கேட்கவும்; தேவாரங்களின் இனிமையை சுவைக்கவும்; இசைப்பாடல்களின் சந்தங்கள் ஏற்படுத்தும் அகநிலை திருப்தியையும் இந்த இல்லத்தரசிகள் பெற எங்கள் நல்லைக்கந்தன் துணை செய்கிறான். இது பெண்கல்வியின் மற்றொரு பக்கம் தானே!

சிறார்களுக்கு, சுத்தம், அழகு, ஒழுங்கு, கூட்டு உணர்வு, இசை, மனஒருமைப்பாடு போன்ற எல்லாவற்றையும் நல்லை முருகனின் திருவிழாக்காலம் அள்ளி வழங்குகிறதே! பார்த்து ஒழுகுதல், கூடி மகிழுதல், பொது நன்மைக்காக கட்டுப்பாட்டுடன் செயற்படுதல் போன்ற எல்லாவற்றையும் செயல்முறைக் கல்வியாக வழங்கமுடிகிறதே! இதுவும் நல்ல சமூக விளைவல்லவா!

நல்லைக்கந்தனின் தேர் உற்சவ நாளில் ஒரு இலட்சம் மனிதர்களும் ஒரே சிந்தனைக் கூட்டுக்குள் அடைபடவும், ஒரே உணர்வு நிலைக்கு ஆட்படவும் முடிகிறதே. இது வேறு எந்த பொறிமுறையாலும் சாத்தியமாகிவிடாது. ஒரு மையப் புள்ளியை நோக்கி உணர்வைக் குவியச் செய்யும் பேராற்றல் நல்லைக்கந்தனுக்கு உண்டு. இது மிகப் பெரிய ஆன்மீகப் பயிற்சியாகும்.

**முடிவுரை**

நல்லூர்க் கந்தசாமி கோவில் தனது எல்லா ஆற்றல்களையும், தொடர்புகளையும் பயன்படுத்தி எதிர்காலத்தில் உயர்கல்விக்கும், ஆராய்ச்சிக்கும் வழிகாட்டும் தமிழ், இந்து பண்பாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்க வேண்டும்.

அது சமூகத்தின் கல்வி மேலாண்மையை நல்லைக்கந்தனிடம் ஒப்படைத்து விடும் என்று உறுதியாக நம்ப முடியும்.

யாழ்ப்பாண சமூகத்தின் பிரிக்க முடியாத ஆன்மீக சாம்ராஜ்யமாக நல்லையம்பதி எப்போதும் வளரும்; உன்னதம் பெறும் என்பது உறுதி.



நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ திருவிழாக்களை உபயகாரர்களுக்கு அறிவிக்கும் பழைய காலத்து நடைமுறை 2013ம் ஆண்டு மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. இப்புகைப்படம் 2014ம் ஆண்டிற்குரியது.

# கடவுள் என்பது யார்?

அ. நளினாசினி
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(கோண்டாவில் கிழக்கு)

அணுவுக்குள்ளும் அணுவைத்தேடி அனுதினமும் நகர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் யுகத்தில் வாழும் எங்களுக்கு அறவியலோ அன்பியலோ அந்நியமாகவே இருக்கிறது. எதற்காக உழைக்கிறோம், ஏன் வாழ்கிறோம் என்று எந்த உணர் வும் இல்லாமல் மனம் போன போக்கில் எதன் பின்னாலோ ஓடிக் கொண்டிருக்கும் இயந்திர வாழ்க்கை தான் எமக்கு. இந்த நேரத்தில் கடவுள் பற்றிச் சிந்திக்க எங்கே நேரம் இருக்கிறது வாழ்க்கைக்கு அர்த்தம் தேட ஒரு சிலர்தான் உண்மையை நாடி பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நிலையாமை வலியுறுத்தப்படுகின்ற இந்த வாழ்விலே நிலையானது எது என்பதுதான் பலரது கேள்வியும் கூட. இறைவன் தான் நிலையானவர் என்று சிலர் தங்கள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். எது எவ்வாறு இருந்தபோதும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலே கடவுளை கண்ணால் கண்டவர் எவருமிலர். கடவுள் என்பது காட்சிப் பொருளல்ல. அவர் உணரப்படவேண்டிய உள்ளார்ந்தமான பொருள் என்பது ஆன்றோர் கண்ட உண்மை. எனவே ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவராக இறைவனை சித்தரிக்கும் போது அவர் எப்படி இருப்பார், அவரை எப்படிக் காண்பது போன்ற ஆவல் எமக்குள் எழலாம்.

இறைவன் என்பவர் பேரானந்தத்தின் சொரூபமாகவும் வரையறை அற்றவராகவும் இனம் காணப்பட்டவர். எனவே பேரானந்தத்தை நோக்கிய பயணமே இந்த உண்மையை நோக்கிய தேடலாக அமையப் போகின்றது. இந்த தேடலின் முடிவே கடவுள் என்பதும், அந்தக் கடவுள் எப்படிப்பட்டவர் என்பதையும் பற்றியே எனது கட்டுரை ஆராயப்போகிறது.

இன்றைய தலைமுறை கடவுள் பற்றிய சிந்தனை இல்லாத நாஸ்திக சமூகமாக உருவாவதற்கும், அதர்மத்தின் பாதையில் செல்வதற்கும் எமது மூத்த தலைமுறையின் தவறான சில மூடக் கொள்கைகள் காரணமாயின. அவை தான், இளைய தலைமுறை கடவுட் பற்றற்று தனித்த போக்கில் செல்லக்கூடிய பாதையை வழிசமைத்துக்கொடுத்தது எனலாம். ஏனெனில் ஒரு சிறு குழந்தை பிறந்தது முதல் வளரும் வரையான காலகட்டத்தில் மதத்தை அக் குழந்தைக்குத் திணிக்க முற்பட்டார்கள். ஏன் எதற்கு என்ற காரணங்களைப் போதிக்க மறந்து காலம் காலமாகப் பின்பற்றி வந்ததை தாமும் செய்வதாகவும் அதற்கு நம்பிக்கை என்ற பெயரையும் கொடுத்து அடையாளப்படுத்தினார்கள். இது பிற்பட்ட காலங்களில் குழந்தை அறிவியலோடு இணைந்து வாழ முற்படுகையில் அறவியலை மறுக்கவும் அதைப் பின்பற்றாது வாழவும் காரணமாகின. எனவே குடும்பம் என்ற காரணி கடவுள் பற்றிய எண்ணக் கருவை ஒரு குழந்தைக்கு சிறு வயதிலிருந்து எப்படிச் செலுத்துகிறதோ, அது அக் குழந்தையின் எதிர்கால வாழ்வில் தடக்கிவிழும் போதும் தூக்கி விடுவதாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே கடவுள் என்பது என்ன என்ற கருத்தை எப்படி இளைய தலைமுறைக்குக் கொடுக்கப் போகிறோம் என்பதில்தான் சிக்கல் உள்ளது.

ஆரம்பத்தில் இயற்கையில் இறைவனைக் காணும் மரபு இருந்தது. பின்னர் மனிதன், தான் மகிழ்ச்சியாக இருக்க தனது குறை நிறைகளைப் பகிரிந்துகொள்ள பொருத்தமான ஒன்றைத் தேடிய போதுதான் கடவுள் என்ற ஒன்றை மனிதன் தன்னுடைய வடிவத்தைக் கொடுத்து தன்னைப் போன்றவராக அவரை உருவாக்க முற்பட்டான். உதாரணமாக சிவனை எடுத்து நோக்கினால் அவருக்கு மனிதவடிவம், மனைவி, பிள்ளைகள் போன்ற வாழ்க்கை சார் அம்சங்களை உருவாக்கி யவன் மனிதன். இந்தக் கருத்துக்களை இந்து நாகரிக நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. இப்படி யாக மனிதன் தான் இன்பமாக வாழ வேண்டு மென்று எண்ணித்தான் அனைத்தையும் செய் தான். "தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற ஆன்றோர் மொழிக்கமைவாக மனிதன் இயற் கையை வழிபட்டு வந்த போது இயற்கை பேணப் பட்டு நல்ல விளைவுகளை எதிர்நோக்கினான். இன்று அதைப் பின்பற்ற மறந்து விஞ்ஞானம் நடத்தும் சோதனைகளால் சுனாமி, வெள்ளப் பெருக்கு என்று பல இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே இன்பமாக வாழ முதலில் எமக்குத் தேவைப்படு வது விழுமியங்கள் தான். அவை சீராக அமையும் போது வாழ்க்கையும் சிறப்பாக அமையும் என்பதே நம் கருத்து.

இனி கருத்துக்கள் உள்நுழைவோமாயின் எம் முதலாவது கடவுள் அன்புதான். "அன்பே சிவம்" என்று அன்றே திருமூலர் திருவாய்மலர்ந்து விட்டார். "ஏகம் ஸத் விப்ர வஹிதாவதந்தி". அதாவது உண்மைப் பரம்பொருள் ஒன்றே என்று இருக்கு வேதம் கூறுகிறது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது ஆன்றோர் கண்ட மிகப்பெரும் உண்மை. எனவே மதத்திற்கும் இனத்திற்கும் அப்பாறபட்டு கடவுளைத் தேட ஆரம்பிக்கும் தேடலில் நாம் காணவேண்டிய முதலாவது உண்மை இது. இதை யதார்த்தத் துடன் பொருத்திப் பார்க்கும்போது கூட தற்கால உலகு அன்பையே வேண்டி நிற்கிறது. பலரது எதிர்பார்ப்பும் ஏக்கமும் அதுவாகவே அமைந் திருக்கின்றது. உதாரணமாக ஒருவருடன் மிகுந்த அன்புடன் பழகும்போது அதை அவரும் எமக்கு திருப்பி தருகிறார். எதிரியைக்கூட நண்பனாக மாற்றும் வலிமை அன்பிற்கு உண்டு. அன்பே அகிலம் ஆள்வது. எந்த ஒரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டென்ற நியூட்டனின் மூன்றாம் விதிபோல் நாம் செலுத்தும் அன்பு எமக்கே திரும்பி வருகிறது. "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்க நின்தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே" என்ற பரந்த மனப்பான்மையுடன் வாழ வேண்டும். "ஏழை களிடமும் நோயுற்றவர்களிடமும் இறைவனைக் காணுங்கள்" என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றுப்போல் நாம் எவ்விடத்திலும் எதிலும் இறைவனைக் காண ஆரம்பித்தால் அவையே பேரின்பத்திற்கான முதலாவது படியாக அமையும். இறைவன் என்ற ஒரு சக்தி இருக்குமானால் அவர் நிச்சயம் எதிர்பார்ப்பது அன்பு என்ற ஒன்றைத் தான். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதுபோல் ஆலயம் சென்று வழிபடாவிட்டாலும் மக்களுக்குச் சேவை செய்தால் நிச்சயமாக இறை வனின் அன்பிற்குப் பாத்திரமான அடியவனாக நாம் இருப்போம் என்பதில் ஐயமில்லை. எனவே யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று அன்பினால் அகிலம் எங்கும் ஒளிபெறச்செய்ய வேண்டும். அன்னை தெரேசா போன்று அன்பின் கடவுளாய் மாற வேண்டும்.

ஆழ்ந்து ஆய்ந்தில் நம் சித்தர்கள் கண்ட அடுத்த உண்மை கடவுள் என்பது புறத்தே இல்லை. அகத்தே இருக்கிறார் என்பதாகும். இன்பம் என்பது பொருட்கள் மற்றும் உலகு சார்ந்த விஷயமல்ல. அது அவன் தனக்குள்ளே தேடிப் பெறவேண்டிய உள்ளார்ந்த அனுபவமே! அழியும் பொருட்களில் அழியாத இன்பத்தைத் தேடும் பேதமை கண்டே, "இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம்தேடி எங்கெங்கோ அலைகிறார்" என்று சித்தர்கள் பாடினர். இறை அனுபவம்

என்பது மனம் சார்ந்த அம்சம். எண்ணங்களுடன் தொடர்புபட்டது. எம் மனதினுள் இருக்கும் எண் ணங்கள்: இரண்டாக வகுக்கப்பட்டுள்ளது. ஒன்று நேரான எண்ணங்கள் மற்றது மறையான எண் ணங்கள். இரு எண்ணங்களுக்கும் அதீத சக்தி உள்ளது. இதனால் சுவாமி விவேகானந்தர் "நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிவிடுகி றாய்" என்றார். டாக்டர் அப்துல் கலாமை வாழ்வில் உயர்த்திய திருக்குறளான "எண்ணிய எண்ணி யாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்" என்ற குறளும் வலியுறுத்துவதும் இதைத் தான். மனம்தான் மனிதன். மனம் போலவே வாழ்வு என்பதெல்லாம் இதனையே தெளிவு படுத்துகின்றது. ஆதிசங்கரர் தன் "விவேக சூடா மணியில்" மனமே மனிதனின் அடிமைத் தளைக் கும், பரிபூர்ண சுதந்திரத்திற்கும் காரணமாகிறது". அலைபாயும் மனதை உடையவன் துன்பச் சேற்றில் வீழ்ந்து கட்டுண்டு அடிமைத் தளையில் சிறைப்படுகிறான். அதே மனம் தூய்மை பெற்று இலேசாக சிறகடித்துப்பறக்கும் வெண்புறாவைப் போல் விடுதலை பெற்று மனிதனை மாமனித னாக்கி மகாத்மாவாக்கி விடுகிறது.

எனவே கடவுள் என்பது எங்களுக்குள் உள்ள எண்ணங்களின் ஆதிக்கத்தைப் பொறுத்தே அமையும். நேரான எண்ணங்களின் சக்தி எங் களை ஆட்சிப்படுத்தும் போது நாம் நல்லவர் களாகத் திகழ்கிறோம். தீய எண்ணங்களின் சக்தி எம்மை அடிமைப்படுத்தும் போது நாம் சாத் தானாக மாறுகிறோம். நேரான எண்ணங்களின் சக்தியே கடவுள் என்பதை நாம் உணரும் பட்சத் தில் நாம் மனித நிலையிலிருந்து மகாத்மாவாக உயர்த்தப்பட்டு சிறந்த பண்புகளைக் கொண்ட அடுத்த தலைமுறையை வழிநடத்தக்கூடிய நிலையை எய்துகிறோம். கடவுள் உருவம் அற்ற வர். மதம், மொழி, இனங்களுக்கு அப்பாற்பட்ட வர். எண்ணங்களின் சக்தியே எம்மை இயக்குகி றது. எமது செயல்களுக்குக் காரணமாகிறது. இதை யாவரும் உணர்ந்தால் மதத்தின் பெயரால் நிகழும் அகோரங்கள், மதத்திற்காக மடிந்து போகும் உயிர்கள், மூடக்கொள்கைகள் மற்றும் இனப்பிரச்சினைகள் அனைத்தும் ஒரு நொடியில் சிதைந்து விடும். ஒன்றே குலம். அன்பு ஒன்றா லேயே தேவனாய் - பேதமற்ற புனித பூவுலகை நம்மால் உருவாக்க முடியும். எமக்குள் இருக்கி ன்ற நேரான சிந்தனைகளை வளர்த்து அவற்றி ற்கு மேலும் சக்தியை சேர்க்கும்போது கடவுள் என்ற தேடலுக்கு முற்று வைக்கமுடியா விட்டாலும் நிச்சயம் மனிதன் மனிதனாக வாழ்வான். அதுவே அவனை பேரானந்தத்தை நோக்கி நகர்த்திச் செல்லும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்குப்போல நன்மை, தீமை, இன்பம், துன்பம், சொர்க்கம், நரகம் எல்லாம் மனிதனால் உருவாக் கப்பட்டவைதான். கடவுள் என்ற எண்ணக்கரு விற்கு புதிய வடிவம் கொடுத்து புதிய கோணத்தில் சிந்தித்தால் நிச்சயம் எம் நல்லெண்ணங்களால் நல்லதொரு வீணை செய்து நலம்பட அடுத்த சந்ததியிடம் கையளிக்கமுடியும். எனவே அடுத்த தலைமுறைக்கு கடவுள் என்பது எண்ணங்களின் சக்திதான் என்பதை வலியுறுத்தி அவர்களை நல் லெண்ணங்களை வளர்த்துக்கொள்ள ஊக்கப் படுத்துங்கள். மதம், இனம் அற்ற புதிய கடவுளை அவர்களுக்கு காட்டிக்கொடுங்கள். விழுமியம் சார்பான கடவுட் கொள்கைகளை ஏற்படுத்துங்கள். நம்பிக்கை தான் வாழ்வு என்பதை, புகுத்துவதற் குப்பதிலாக தன்நம்பிக்கையுடன் வாழ கற்றுக் கொடுங்கள். எண்ணங்களுக்கு அளவற்ற சக்தி இருப்பதாக உணர்த்துங்கள். எனவே புதிய தலைமுறை வன்முறை அற்ற புதிய பாதையில் செல்ல வழிகாட்ட வேண்டிய நாம் நல்லவற்றை அவர்களுக்கு நலம்பட எடுத்துரைப்போம்.

கடவுள் என்பவர் யார் என்பது இனி உங்கள் சிந்தனைக்கு...

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

# திருக்கேதீச்சரம்

**பொ.சிவப்பிரகாசம்**
**கொழும்புத்துறை**

பண் – நட்டராகம் இராகம் – பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தரு நட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி
லெழிறிகழ் மா தோட்டம்
கேடி லாத கேதீச்சரந் தொழுதெழக்
கெடு மிடர் வினைதானே

திருச்சிற்றம்பலம்.

2ஆம் திருமுறை – சம்பந்தர் தேவாரம்

ஈடம் – உறையும் இடம்

## புராண வரலாறு

புராணம் என்றால் பழைய கதை (ANCIENT LEGEND) என்பர். திருக்கேதீச்சரத்தின் புராண வரலாறு மிகச் சிறப்பானதாகும். கடற்கோள்களால் பூமியின் சில பகுதிகள் கடலுக்குள் அமிழ்வதும், மேலும் சில பகுதிகள் கடல் மேவி தீவுகள் தோன்றுவதும் உண்டு. முன்னொரு கால், வாயு தேவனுக்கும், ஆதிசேடனுக்கும் இடையே சொற்போர், பலப்பரீட்சை ஒன்று உருவாகியது. இந்த பலப் பரீட்சையைத் தீர்க்க, நடுவராக நந்திதேவர் நின்று ஆலோசனை வழங்கினார். மகாமேருவின் சிகரங்களை ஆதிசேடன் தனது ஆயிரந் தலைகளைக் கொண்டு மறைக்க, வாயு பகவானோ தனது பலம் முழுவதையுங் கொண்டு, மகாமேருவின் மூன்று சிகரங்களையும் பெயர்த்து, பறித்து தென்திசைக் கடலில் வீசினான். இவ்வண்ணம் வாயுதேவனால் வீசப்பட்ட, மூன்று மேருமலைச் சிகரங்களில் ஒன்றுதான் திருக்கேதீச்சரம் என்னும் பெரும் சிவத்தலம் அமைந்த புனித பூமியாகும். ஆதிகாலத்தில் பெரும் தவமுடைய கேதுவால், பூசிக்கப்பெற்ற சிவத்தலம் ஆகையால், கேதீச்சரம் என்ற புனிதமான பெயரைப் பெற்றது இப்பெருந்தலம்.

## மாதோட்டம்

பின்னாளில் மகா துவட்டா என்ற பெயர் உடைய தேவதச்சன், இந்தச் சிவபூமியில் ஒரு சிறு நகரம் செய்து, அந்த நகரத்தின் நடுவில் ஒரு சிவத்தலத்தையும் அமைத்தான். மகாதுவட்டா, தான் அமைத்த சிவத்தலத்திற்கு திருப்பணி பல செய்து, பூசனை புரிந்து வந்ததால் இந்தச் சிறு நகரம் மகாதுவட்டாபுரம் எனப் பெயர் பெற்றது் என்று கந்த புராணம், தட்சிண கைலாய மான்மியம் முதலிய நூல்கள் கூறும். இந்த மகாதுவட்டாபுரமே இறுதியில் மாதோட்டம் என மருவிற்று. ஆதியில் பெரும் தவமுடைய கேதுவால் பூசிக்கப் பெற்ற, மாதோட்டத்தில் இருந்த இந்த சிவத்தலமே, அன்று திருக்கேதீச்சரம் என எமது சமயகுரவர்களாகிய சம்பந்தர், சுந்தரர் ஆகிய அருளாளர்களால் பதிகம் பாடப்பெற்ற சிவத்தலமாக திருக்கேதீச்சரம் புனிதமடைந்தது. மன்னார் பிரதேசம் என்று, இன்று சொல்லப்படுகின்ற நிலப்பரப்பு முழுவதும், முன்பு மாதோட்டம் என்றே அழைக்கப்பெற்றது. இராசேந்திர சோழமன்னன் ஆட்சிக்காலத்தில் மாதோட்டம் உன்னத நிலையில் இருந்தது.

## மாதோட்டத் துறைமுகம்

கோவில் நகரமாகிய மாதோட்டம் ஈழத்திரு

நாட்டின் புராதன துறைமுகம் ஆகும். இந்தத் துறைமுகம் இராமர் அணை (ADAMS BRIDGE)இல் உள்ள பவளக்கற் பாறைக்கும், மன்னார்த் தீவிற்கும், சிலகல் தொலைவில் அமைந்திருந்தது. இதனால் தென்மேற்கு பருவக் காற்றின் மோத லில் இருந்து வாணிபம் செய்த கடற் கலங்கள் தப்பித்துக்கொள்ள மாதோட்டத்துறைமுகத்திற்குள் பாதுகாப்புக்காகப் புகுந்து நங்கூரமிட்டன. மன்னார்த் தீவிற்கும் மாதோட்டக்கரைக்கும் இடையில் போதிய அகலமும், நல்ல ஆழமும் கூடிய சிறப்புடன் விளங்கிய இத்துறைமுகம், இயற் கைக் கோளாறாலும், கடற்கரையை நோக்கி வருடா வருடம் வீசிய சோழகக் காற்றாலும், மணற் குன்றுகளாகவும் மணற்றிடலாகவும், நிறைந்து அடர்ந்த காடாகத் தோற்றந் தருகிறது. மன்னார், தீவாக இருந்த காலத்தில் திருக்கேதீச் சரக் கடல் ஆழமாக இருந்தது. மன்னார்ப் பாலம் அமைந்து, புகையிரதப் பாதையும் உருவாகிய பின், கடல் நீரோட்டம் தடைப்பட்டு, கடற்கரை ஆழம் குறைந்த நிலைக்கு மாறியது. மாதோட்டக் கடலில் சென்ற கடற் கலங்கள், திசை அறிய வசதி யான வெளிச்ச வசதி உள்ள காந்தக் கோட்டை அன்று அமைந் திருந்தது. சென்ற சில தசாப்தங் கட்கு முன் தலை மன்னாரிலிருந்து இராமேஸ் வரத்திற்கு கப்பல் சேவை இருந்தது. மீண்டும் இந்த கப்பல் சேவை ஆரம்பித்தால் பயனுள்ளதாக அமையும். புகையிரத சேவை மீண்டும் ஆரம்ப மாக இருப்பதால், ஏற்கனவே இருந்த திருக்கேதீஸ் வரம் புகையிரத நிலையத்தில், அடியார்கள் வசதிக்காக புகைவண்டி தரித்துச் செல்ல வேண்டும்.

**பன்னாட்டு வாணிபம்**

மன்னாரில் உள்ள மாதோட்டம், அருவி ஆறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந் திருந்தது. அருவி ஆறு கடலோடு கலப்பதால் சங்கும், சிப்பியும் முத்தும் மிகுதியாக விளைந்தன சங்கு, சைவ மக்களுக்கு ஒரு மங்கலப் பொருள் ஆகும். எனவே இப்பகுதி செல்வம் பெருகிய இடமாகக் கருதப்பட்டது. முத்துச் சிப்பிகள் பெருமளவில் கடலில் காணப்பெற்றதால், கடலாடிகள் முத்துக் குளிப்பதை பண்டைய காலத்தில் வருவாய்க்கு உரிய தொழிலாக மேற்கொண்டனர். கி.பி 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை பண்டமாற்று வியாபாரம், இந்த மகாசந்தை யில் இடம்பெற்றது. இந்தியர், உரோமர் எகிப்தியர், கிரேக்கர், சீனர், அரேபியர் ஆகியோர் பல நாடுகளிலும் இருந்து வந்து, இந்த மகா சந்தையில் கூடினர். பண்டமாற்று வியாபாரம் அமோகமாக இடம்பெற்றது. இந்த மகா சந்தையே, பின்னாளில் மாந்தையாக மருவியது.

பண் – நட்டபாடை　　　　இராகம் – நாட்டை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக் கேதீச்சரத்தானே

திருச்சிற்றம்பலம்

ஏழாம் திருமுறை – சுந்தரர் தேவாரம்

செத்தார் – பேரூழிக் கால முடிவிலே இறந்தவர்கள்

**அமைவிடம்**

மன்னார் ஒரு தீவு. இத்தீவினை வட மாகாணப் பெருநிலப்பரப்புடன் இணைப்பது, செயற்கையான பாலம். இந்த பாலத்தின் வழியாக வடக்கே சுமார் 6½ மைல் தூரத்திலும், வடமேற்கு கடலோரத்தில் இருந்து ½ மைல் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளதும் சைவ சமயக் குரவர்க ளாகிய சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பதிகம் பாடப்பெற்றதுமான திருக்கேதீச்சரப் பெருந்தலம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகவும் புராதன மானதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச் சிறப்புக்களும் ஒருங்கே அமைந்த சிவத்தலம் ஆகும். இத்தகைய பெருந்தலைவர்திருவடிமேல், அடியார்கள் அனைவரும் தலைதாழ்த்தி வணங்குவர் என்று சம்பந்தப் பெருமான்
"முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல்
மொய்த் தெழும் வினைபோமே" என்று பாடினார்.

சுவாமி பெயர் : கேதீச்சரநாதர்
அம்மை பெயர் : கௌரிநாயகி
தலவிருட்சம் : வன்னி
தீர்த்தம் : பாலாவி

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பூநகரி – சங்குப்பிட்டி பாலமூடாக மூன்று மணி நேரத்தில் திருக்கேதீச்சர பெருந்தலத்தை சென்று அடைய முடியும். நேரத்திற்கு நேரம் பேருந்து வசதி உண்டு. கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்தும் புகைவண்டி மற்றும் வாகனங்கள் மூலம் சிவாலயத்தை வந்தடைய முடியும். வவுனியா – மன்னார் வீதியில் சிவாலயத்திற்கு திரும்பும் முகப்பில் அழகான அலங்கார வளைவு சிவனடியார்களை அன்புடன் வரவேற்கின்றது.

**கோட்டையும் அகழிகளும்**

திருக்கேதீச்சர வளாகம், அதன் சூழல் கிட்டத்தட்ட ஆயிரத்தி நூற்றிருபது ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இந்த சிவாலயப் பகுதியை இரட்டை அகழி சுற்றி வருகிறது. ஒரு பக்கம் கடல் உள்ளதால், ஒரு அகழிக்குள் கடல் நீரும், மற்றைய அகழிக்குள் ஆற்றுநீரும் நிரம்பி இருக்கும். இந்த வளாகச் சூழலின் பெரும் பகுதி, நிலத்தடியில் செங்கட்டி, உடைந்த ஓடுகள், கருங்கல் துண்டுகளை அனைத்து இடங்களிலும், நிலத்தடியில் காணமுடியும் 15 -20 ஆடியின் கீழ் நிலத்தைத் தோண்டினால், கட்டடச் சிதைவுகளை இன்றுங் காணமுடியும் இந்தச் சுற்றாடலில் நாம் காண்பது, பாரிய சிவாலயம் ஒன்று இருந்ததன் அறிகுறியே!

**மாந்தை**

சங்ககாலத்தில் எழுந்த நுல்களில் மாதோட்டதின் மகாசந்தையாக விளங்கிய மாந்தையைச் சிறப்பித்துப்பாடி இருப்பதை பரக்கக் காணலாம்.

1. "நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
   பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்"
   – அகநானூறு
2. "புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ் மாந்தை"
   – முத்தொள்ளாயிரம்

மன்னார் அன்று மாதோட்டம் என்றே அழைக்கப் பெற்றது. மாதோட்டத்தின் தலைநகராக மாந்தை விளங்கிற்று. இன்றைய மாந்தைச் சந்தியும், திருக்கேதீச்சர சிவாலயமும், அதன் தேரோடும் வீதிகளும் அதன் நடைபாதைகளும், வரவேற்பு வளைவும் போக்குவரத்து பேருந்துகளும் இன்றைய சிவாலயச் சூழலுக்குப் பெருமை சேர்க்கின்றன.

**பாலாவித் தீர்த்தம்**

பாலாவி ஆற்றின் நீரோட்டத்தை அன்று குறுக்கே தடுத்து நிறுத்தி, அணைகட்டி, கட்டுக்கரைக் குளமாக (Giant's Tank) ஆக உருவாக்கியதால், மன்னார் நெல்வயல்கள் முறையான பாசனம் பெற்று, பெருவிளைச்சல் காண்கிறது. மறுபுறம் ஆற்றின் முகத்துவாரத்தில், புனிதமான இந்த சிவாலயம் உளது. தற்போது ஆலயத்தின் தென்பகுதி இரண்டு அகழிகளையும், ஒன்றாக்கி பாலாவித் தீர்த்தமாக்கினர். கட்டுக்கரை குளநீர் வாய்க்கால் வழியாக பாசனத்திற்குப் பயன்பட்டு, பாய்ந்து மேலதிக நீர், தூய பாலாவித் தீர்த்தமாகி குளம் நிரம்பியதும், எஞ்சிய நீர், கடலில் கலக்கிறது.

தலம் – திருவீழிமிழலை திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பூதியணி பொன்னிறத்தார் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதீச்சரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட்டத்தார்
மாதுயரம் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே

திருச்சிற்றம்பலம்.

ஆறாந்திருமுறை – அப்பர் தேவாரம்

நாவுக்கரசர் திருவீழிமிழலைப் பதிகம் பாடும் போது தமது திருத்தாண்டகத்தில் "கேதீச்சரம் மேவினார்," என்று கேதீச்சரப் பெருமானை இராமேஸ்வரத்தில் இருந்து பாடத்தவறவில்லை. சுந்தரரும் தன் பாண்டிநாட்டு யாத்திரையின்

போது, சேரமானுடன் இராமேஸ்வரம் வந்தார். அங்கிருந்த வண்ணமே திருக்கேதீச்சரப் பெருமானை ஈழநாட்டு திசைநோக்கி பதிகம் பாடினார். சம்பந்தரும் சிவனடியார் திருக்கூட்டத்தோடு வந்த போது இராமேஸ்வரத்தில் இருந்த வண்ணம் கௌரியுடனுறை வல்லாளன் கேதீச்சரநாதன் மீது பதிகம் பாடிப் பணிந்தார்.

**தேனிருந்த பொந்து**

நீராரும் கடலுடுத்த நிலவுலகின்கண் பல்வேறு நாடுகள் இருந்தாலும், சிவபூமி எனப்பட்ட ஈழத்திரு நாட்டில் திருப்பெருந்திரு நாவலர் பெருமான் அவர்கள், கி.பி 1872இல் யாழ்ப்பாணச் சமய நிலை என்ற வெளியீட்டில் ஒரு விண்ணப்பஞ் செய்திருந்தார். இலங்கையில் உள்ள தேவாரம் பெற்ற திருத்தலம் திருக்கேதீச்சரம். இந்த சிவத் தலம் அழிந்து போன படியால், அந்த நிலம் அரசினருக்காகி விட்டது.

இந்தத் தேனிருந்த பொந்து, மாதோட்டத்தில் நாம் மறந்து போன ஒரு அருமருந்து இருக்கிறது. ஆகவே அரசினருக்காகிவிட்ட நிலத்தை நாம் திரும்பப் பெற வேண்டும். அந்த நிலத்தில் மீண்டும் அக்கோயிலை முன்போல உருவாக்க வேண்டும், என்ற ஆசை மிகுதியால், நாவலர் பெருமான் அந்த நிலத்தைப் பெற, யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் செய்தார். ஆனால் அவரது காலத்தில் அந்த நிலம் கிடைத் திருந்தால், ஒரு பெரும் சிவாலயம் உருவாகி இருக்கும்.

நாவலர் பெருமானின் காலத்தில் வண்ணார் பண்ணையைச் சார்ந்த வேலுப்பிள்ளை உடையார் என்பவர் விடத்தல்தீவில் உடையாராக இருந்தார். விடத்தல் தீவில் இருந்து திருக்கேதீச்சரம் சில காத தூரத்தில் உளது, எனவே இந்த வேலுப் பிள்ளை உடையாரின் வழிகாட்டலில், எமது அருமருந்து இருந்த இடம், காடார்ந்த நிலையில் கண்டறியப்பட்டது. மண்மூடி, மேடாகி, அழிவுற்று இருந்த எமது திரவியத்தை, நாவலர் பெருமானின் அறிக்கை வெளிவந்து, 21 வருடங்களின் பின், நாவலர் பெருமானின் மறைவின்பின் யாழ்ப்பாணச் சைவ மக்களின் தொடர் வேண்டுகோளால், அக்காலத்தில் அரச அதிபராக இருந்த சேர். வில்லியம் துவைனம் அவர்கள் 43 ஏக்கர் நிலத்தையும் பகிரங்க ஏலத்திற்கு விட்டார்.

அக்காலத்தில் கொழும்பில் வசித்து வந்த நாட்டுக்கோட்டைச் செட்டியாரான திருராம அருபழனியப்பச் செட்டியாரின் நிதி உதவியுடன், 13 – 12 – 1893 புதன்கிழமை அவிட்டநாளில், சைவ மக்கள் சார்பில், அந்தப் புனிதமான பூமி, திருக்கேதீச்சர பெருந்தலத்திற்கு அறுதி ஆயிற்று. நாவலர் பெருமானின் பெருவிருப்பு நிறைவேறியது.

**சிவாலயச் சிதைவுகள்**

கி.பி 1545இல் இடம்பெற்ற கடற்கோளாலும் பெரும் புயலாலும், மாதோட்டத்தின் சில பகுதிகள் கடலில் அமிழ்ந்து பாலாவியும் மேடாகி குளமாகக் குறுகியது. இருந்த போதும், சிவாலயத்தின் நித்திய பூசைகள் தொடர்ந்தன. கி.பி1585இல் போத்துக்கேயப் படைகள் ஆலயத்துள் புகுந்தது. பொன்னையும், பொருளையும் அள்ளிச் சென்றது. விக்கிரகங்கள் தகர்ந்தன, கோபுரம், மதில்களை பீரங்கியால் தகர்த்தனர். உடைவுகள் மேடாகின. தென்மேற்கு பெயர்ச்சி பருவக்காற்றால், இடிபாடுகள் மண்ணுள் மறைந்தன. கி.பி.1585 முதல் கி.பி 19ஆம் நூற்றாண்டு வரை (318) வருடங்கள் கேதீச்சர நாதனுக்கு கோயிலோ, உருவமோ, பூசைகளோ எதுவும் இன்றி எம்பெருமான் அஞ்ஞாதவாசம் செய்தார். இந்த இடைப்பட்ட காலத்தில் தேவர்கள் அர்த்தசாமத்தில் வந்து, எம்பெருமானுக்குப் பூசை செய்ததாக மாதோட்ட மக்கள் கூறுவர். பூசைகள் எதுவும் இடம்பெறாத இருள் சூழ்ந்த காலத்தில், பரம்பொருள் தமிழ் வேதமாகிய தேவாரத் திருமுறைகளில் மட்டுமே உறைந்திருந்தார். மிகமிக அண்மையில் 1990ல் இருந்து 12 ஆண்டுகள், எமது நாட்டில் நடந்த, உள்நாட்டு போர் காரணமாக சிவாலயம் உட்பட மூன்று

மைல் பிரதேசம் பாதுகாப்பு பகுதியாக வந்தது. சிவாலயச் சுற்றாடலில் வாழ்ந்த 253 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. சிவாலயத்தின் நித்திய பூசைகள் நின்றன.

1948ஆம் ஆண்டிற்கு பின் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் பெருமுயற்சியால் உருவாகிய மண்டபங்கள், குடிமனைகள், முதியோர் இல்லங்கள், கல்விக் கூடங்கள், குருகுலம், மருந்தகம், பஞ்சஇரதங்கள், சகடைகள், சப்பரம், மடங்கள், கேடகங்கள், தண்டிகைகள், வாகனங்கள் அனைத்தும் சேதமுற்றன. 1990ஆம் ஆண்டிற்கு முன் இருந்த நிலைக்கு, சிவாலயம் வர சுமார் 135 கோடிரூபாவிற்கு மேல் தேவை என திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை, மதிப்பீடு செய்துள்ளது. சைவ மக்களின் மனம், வாக்கு, காயம், மூலமாக இப் பெருநிதியைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கை உளது. திருக்கேதீச்சரத்தின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் ஏற்ப, சைவ மக்களின் வாழ்வும் தாழ்வும் காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வந்தது என்று எடுத்து இயம்ப முடியும்.

**நடந்தேறிய அகழ்வாராய்ச்சி**

திருக்கேதீச்சரத் தென்பகுதியில், சில ஆண்டுகட்கு முன் நடந்த அகழ்வின் போது, அறுபதடி ஆழம் வரை தோண்டியபோது, இரண்டடி அகலமான பாரிய செங்கற் சுவர் காணப்பட்டது. அத்தோடு சிப்பிகள், சங்குகள் வளையல்கள், மட்பாண்டங்கள், சிறுவர் விளையாடும் சிறு தேர்கள், காணப்பட்டது. மேலும் பலராலும் கண்டு எடுக்கப்பட்ட உரோம, அரேபிய, இந்திய நாணயங்கள் இருந்ததை உற்று நோக்கும்போது மாதோட்டம் ஒரு பட்டினமாக இருந்ததன் அறிகுறியே! இவை மாந்தையின் பொற்கால வரலாறு ஆகும். காற்றாலும், காலத்தாலும் இயற்கை மாறுபாடுகளாலும், போத்துக்கேய ஆக்கிரமிப்பாலும், பாதிக்கப்பட்ட இந்த சிவாலயம் அழிந்து, இன்று சைவ மக்களின் பெருமுயற்சியால், பழைய நிலைக்கு மெல்ல மெல்ல திரும்ப அடியெடுத்து வைக்கின்றது. நாம் செய்த தவமே!

இராஜகோபுரத்தின் வெளியே உளது, நந்தி மண்டபம், அகழ்வின் போது பெறப்பட்ட அழகான பெரிய நந்தி தனது நாதராகிய கேதீச்சரப் பெருமானையே உற்று நோக்கியவாறு இந்த மண்டபத்தில் அமர்ந்துள்ளது அருங்காட்சியாகும். சோழர் ஆட்சி இலங்கையில் நிலவிய காலம் கி.பி 10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியே! சோழர் ஆட்சி நிலவிய காலத்தில், இந்தச் சிவாலயத்திற்கு அவர்களின் பேராதரவு இருந்தது. அகழ்வின் போது பெறப்பட்ட கருவூலங்களே இந்த நந்தியும், அழகான தோற்றமுடைய மகாலிங்கமும் ஆகும்.

**சிவாலயத்தின் புனருத்தாரணம்**

வண்ணார்பண்ணையில் வாழ்ந்தவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிதாபகரில் ஒருவரும், பெரியாருமான சிவஸ்ரீ பசுபதிச் செட்டியார் அவர்கள், திருக்கேதீச்சரப் பெருந்தலம் முன்பிருந்த இடத்தை திடமாகக் கண்டறிந்து 1894ஆம் ஆண்டு சிவாலயத்தின் மூலப்பகுதியில் சுவாமி கோவிலையும் அம்மன் கோவிலையும் அமைத்தார். பூமியின் அடியைத் தோண்டிய போது கிடைத்த சிவலிங்கம் மாசடைந்து இருந்த படியால், காசியில் இருந்து மிகவும் மகிமை பொருந்திய, சிவமாம் தன்மை வாய்ந்த சிவலிங்கம் ஒன்றைத் தருவித்தார். மேலும் தக்க சிற்பியைக் கொண்டு, கௌரி அம்மையாரின் திருவுருவை செதுக்கி, சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 14ஆம் நாள் (28.06.1903) ஞாயிற்றுக்கிழமை அன்று வளர்பிறை சதுர்த்தி நன்நாளில், திருமஞ்சன விழாவைச் செய்து, ஆத்மதிருப்தி அடைந்தார், வள்ளல் பசுபதிச் செட்டியார் அவர்கள், காடு வெட்டிய போது சோழர்கால கிணறும் கண்டறியப்பட்டது.

தேவாரத் திருமுறைகளில் மட்டும் நீண்ட காலமாக மறைந்திருந்த கேதீச்சரப் பெருமானை, சைவ உலகிற்கு, அறியத் தந்தவர் நாவலர் பெருமான் அவர்கள். விலை மதிக்கமுடியாத பெரும் புதையல், எமக்கு கிடைக்கப்பெற்றும், காலப் போக்கில் திருப்பணி தொடராமல், திருக்கேதீச்சரம் மீண்டும் சிதைந்து வரலாயிற்று, நாம் செய்த

தவப்பேறால், 1944ஆம் ஆண்டு சிவனடியார் திருக்கூட்டம் உருவாக்கிய சைவ அமைப்பின் பெரு முயற்சியால், 1948இல் கொழும்பில் திருக் கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை உருவாகியது. சைவப் பெரியாரும், கல்வி மானும் ஆகிய சு. சிவபாதசுந்தரம் அவர்களின் பிரசாரம், பெரு முயற்சி, பெரும்பயனைத் தந்தது. திருப்பணிச் சபை ஆழவேரூன்றி, 1948இல் திருஞான சம்பந்தர் மடம் ஆலய வீதியில் உருவாகியது. சட்டத்தரணி S. சிவசுப்பிரமணியம், சேர் கந்தையா வைத்தியநாதன் ஆகியோரின் பெரு முயற்சியால், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை கொழும்பை தலைமையகமாகக் கொண்டு தளர் வின்றி தொடர்ச்சியாக பெரும் பணி ஆற்றி வருகிறது.

கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சீர்காழிச் செம்மல் திருஞானசம்பந்தரரும், 8ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த சுந்தரரும் திருக்கேதீச்சரம் மீது பாடிப் பரவிய தேவாரத்திருமுறைகளால் இந்த சிவாலயம் புனிதமடைந்தது. ஆலய வளாகத்தில் குடிமனைகளை அமைத்து, சைவ மக்களை குடியமர்த்த வேண்டும், அழகிய வீதிகளைக் கொண்ட பட்டணம் உருவாக வேண்டும். திருக் கேதீச்சரம் தமிழ் நாட்டுத் திருத்தலங்களைப் போல, காலாதிகாலமாக நிலைத்து நிற்கக் கூடிய தாக, கருங்கல் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற சைவப் பெரியார்களின் கனவு இன்று நனவாகி வருகிறது. 2014ஆம் ஆண்டு வைகாசி மாதம் மகோற்சவம் நிறைவேறியதும், மகா மண்டபம் பிரித்து கருங்கல் திருப்பணி வேலை களில் மாமல்லபுர சிற்பிகள் ஈடுபட உள்ளனர். இலங்கை இந்திய அரசுகளின் கூட்டு உடன் பாட்டின் படி இந்திய அரசாங்கத்தின், புனரமைப் புத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் நிதி உதவியுடன் கருங்கல் திருப்பணி ஆரம்பமாக உளது என திருக்கேதீச்சர ஆலயத்தில் தங்கி இருந்து பெரும் பணி ஆற்றிவரும், முகாமையாளர் புலவர், அ.திருநாவுக்கரசு ச.நீ. அவர்கள் இந்த தகவலைத் தந்தார். சைவப்பெரியார்கள் திரு.S.சோமசுந்தரம், திரு.இ.நமச்சிவாயம், திரு இரா. சபாநாயகம், சித் தாந்த வித்தகர் திரு.மு.ஞானப்பிரகாசம், போன்ற பல பெரியார்கள் ஆற்றிய அரும் பெரும் பணிகள் ஆலய சரித்திரத்தில் இடம்பெறும். பஞ்சரதங்கள் வீதி வலம் வர, வைகாசி விசாகத்தில் பாலாவியில் தீர்த்தோற்சவம் நடைபெறு வதைக் காணக்கண் ஆயிரம் வேண்டும்.

**சிவாலயத்தின் சிறப்புகள்**

மாசி மாதம் மகா சிவராத்திரியின் போது இலட்சக்கணக்கில் சைவ மக்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் புகையிரதம், பேருந்து, தனியார் வாகனங்கள் மூலம் ஆலயத்தை வந் தடைவர். ஆலயத்தின் உள் வீதியில் மேற்குப் புறமாக வீற்றிருக்கும் சோழர்கால மகாலிங் கத்திற்கு அடியார்கள் பாலாவியில் மூழ்கி ஆசார மாக ஈர உடையுடன், ஆலயத்தில் இருக்கும் குடங் களைப் பெற்று பாலாவித் தீர்த்தத்தை மொண்டு வந்து தாமாகவே அபிடேகம் செய்து, தமது நேர்த்திக்கடனை பயபக்தியுடன் நிறைவேற்றுவர். இந்த அடியார்களின் அபிடேகம், திருக்கேதீச்சரத் திற்கு உள்ள தனிச் சிறப்பாகும். தினமும் அதிகாலையில் கோவில் உள் வீதியில், கௌரி அம்பாள் வாயிலில் கோமாதா பூசை இடம் பெறுகிறது. தினமும் இந்தப் பசு பூசிக்கப்படுவதால், அதன் நெற்றியில் திலகமும், கழுத்தில் பட்டும் பூமாலையும் என்றும் காணப்படும். சிவாலய வளாகத்தில் ஆநிரைகளைக் காணமுடியும். ஆகவே கௌரியுடனுறை கேதீச்சரப் பெருமானு க்கு பால், தயிர் தடையின்றி கிடைக்கிறது.

சாயங்காலப் பூசை நேரத்தில் இராஜகோபுர உச்சியில், மயில்கள் நடமாடி உறங்கும். மயில்கள் தோகைவிரித்து ஆடுவதைக் காலையில் காண முடியும். கர்ப்பக்கிரக தென்புறச்சுவரில், சாந்தமே உருவான, கலையழகு மிக்க தெட்சணாமூர்த் தியை காணமுடியும். மூலவருக்கு பின் புறச் சுவரில், வெளியே சிறப்பான சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக, லிங்கோற்பவர் காட்சி தருகிறார். சோமாஸ்கந்த அம்பாள் பஞ்சலோக, கனதியான

விக்கிரகம் கும்பகோண ஸ்தபதியால் வார்க்கப் பட்டது.

திருக்கேதீச்சரத்தின் தென்பாக உள் வீதியில் தேவாரத் திருமுறைகட்கு தினமும் பூசை நடை பெறும். பூசை நடைபெறும்போது. வெண்கலத்தி லான கண்டாமணி ஓசை, நாதம் அனைவரின் இதயத்தையும் ஈர்க்கும். ஆலயத்தின் வெளியில் வடபால் வசந்த மண்டபம், அடுத்து குணவாசல் பிள்ளையார் தெற்கிலும், வடக்கில் முருகப் பெரு மானையும் வழிபட்டுக்கொண்டு உள்ளே செல்ல முடியும். கௌரி அம்பாள் தென்பகுதி வாசலில் சிறிய கோபுரம் உண்டு. இராஜகோபுர வாசலைத் தாண்டி. உள்ளே பாரிய கொடித்தம்பம், அடுத்து அழகான நந்தி, தனது நாதனை கூர்ந்து நோக்கிய வாறு அமர்ந்துள்ளது. மூலவர் கேதீச்சரப் பெருமான் கிழக்கு நோக்கியவாறு சாந்தமாக நிலைத்துள் ளார். சுவாமி வாயிலில் துவாரபாலகர் மிகவும் கம்பீரமாக தலை சாய்ந்து வழிவிட்டு நிற்கும் நிலையும், கௌரிநாயகி அழகே உருவாக தெற்கு நோக்கியவாறு, வாயிலருகே துவாரசக்திகள் உளர். கோபுரவாயில் உள்ளே சூரிய. சந்திரர், சனீஸ்வரர், நவக்கிரக மண்டபம் அலங்காரமாக உள்ளன. சண்டேஸ்வரர், கோமுகி அருகே சுவாமியை நோக்கியவாறு தியானத்தில் உள்ளார்.

உள்வீதி தென் புறமாக வரிசையில் பதிகம் பாடிய சம்பந்தர், கேது பகவான், சமய குரவர் நால்வர் பெரியபுராணம் பாடிய சேக்கிழார், சந்தானக்குரவர் நால்வர், திருமுறை வேதாகம பூசை அறை, இராஜராஜ சோழன், நம்பி ஆண்டார் நம்பி, அறுபத்திமூவர், மேற்கு பிரகாரத்தில், மகாகணபதி, மகாவிஷ்ணு மகாலிங்கம் மிகவும் அற்புதமாக உள.

சிவாலயத்தின் நாற்புறமும் அடியார்கள் தங்க வும், மகேஸ்வர பூசை (அன்னதானம்) செய்யவும் விசாலமான மடங்கள் அமைந்துள்ளன. நான்காம் பிரகாரத்தில் தேரோடும் வீதிகள் சிறப்பாக உள. சிவாலயத்திற்கு வடபால் உள்ளது நந்தவனம் இங்கே சிவபூசைக்கு வேண்டிய மலர்களை கொய்ய வசதி உண்டு. சிவாச்சாரியார் கள், அந்தணப் பெருமக்கள், மங்கள வாத்தியம் வாசிப்போர், மலர் மாலை தொடுப்போர் கோயில் பணியாளர்கட்கான விடுதி வசதிகள் உண்டு.

12ஆம் நூற்றாண்டில் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் சுவாமிகளும், கௌரி பங்கனை பின்வருமாறு பாடியுள்ளர்.

திருச்சிற்றம்பலம்

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந் தொலிக்கும் ஈழம் தன்னில்
மன்னுத்திருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந் தேத்தி யன்பரோடும்
உலவாத கிழி பெற்றார் உவகை உற்றார்.

திருச்சிற்றம்பலம்.

12ஆம் திருமுறை
சேக்கிழார் சுவாமிகள்.

**தவசிரேஷ்டர்கள்**

தவமுடைய கேது, மயன், மகாதுவட்டா, மண் டோதரி, அகத்தியர், இராமர் ஆகியோர் அருட்கட லாகிய கேதீச்சரப்பெருமானை வணங்கிய திருத் தலம் இதுவே. திருக்கேதீச்சரம் 3ஆம் நூற்றாண் டிற்கு முற்பட்ட தலம். திருக்கேதீச்சரம், திருக் கோணமலை போன்ற சிவத்தலங்கள் ஈழத்தில் இருந்தபடியால்தான், 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலர் தனது திருமந்திரத்தில் ஈழத்தை சிவபூமி என்றார். மாநகர் மதுரையைப் போல் அன்றைய திருக்கேதீச்சரம் இருந்தது சிவாலயத்தைச் சுற்றிவர நாலாபக்கமும் வீதிகள், வீதிகளின் இருமருங்கும் குடிமனைகள், கடைத் தெருக்கள், மாதோட்டத்தில் மக்கள் நாகரிகமாக வாழ்ந்தனர். திருக்கேதீச்சரத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் மாளிகைத்திடல் என்ற கிராமம் இருந்தது. இதற்கு வடக்கே பாப்பா

மோட்டை என்ற கிராமம் உண்டு. திருக்கேதீச்சரப் பெருமானுக்கு அர்ச்சனை புரிந்த அந்தணர்கள் பாப்பாமோட்டையில் வாழ்ந்தனர்.

ஆதியில் நகரத்தார் (செட்டிமார்) மாளிகைத் திடலில் 78 ஏக்கர் வயல் நிலத்தை வாங்கி வைத்த படியால், இன்று நிவேதனத்திற்கு அரிசியும், மேலதிக நெல் கோவில் வருவாயாகவும் உளது. சைவப் பாடசாலை, தனியார் குடியிருப்புக்கள், போர்க்காலத்தில் பாதிப்படைந்ததால், மீண்டும் மக்கள் குடியேறினால் தான் கேதீச்சரம் சிறக்கும். கோவிலுக்கு கிழக்கே தேவஸ்தான பணிமனை, விற்பனைக் களஞ்சியம், சைவசித்தாந்த நூல் நிலையம், நீர் விநியோக நிலையம், மின்சார நிலையம், அஞ்சல் நிலையம், தேநீர்ச்சாலை, பலசரக்குக்கடைகள், மருத்துவ நிலையம், கிராமிய வங்கி, கூட்டுறவு பண்டகசாலைகள், சிறப்பாக இயங்க வேண்டும். வாகனசாலை, ஆலய களஞ்சியம் விரிவாக்கம் பெறவேண்டும். தென்னந்தோப்பில் இருந்து இளநீர், தேங்காய் ஆலய தேவைக்கு பெறக்கூடியதாக உளது. கதலி வனம் இருப்பதால், வாழைஇலை, கதலிப்பழம், பெறக்கூடிய நிலை தன்னிறைவாகிறது.

**தொகுப்பு**

இதுவரை திருக்கேதீச்சரத்தின் புராண வரலாறு, மாதோட்டம், மாதோட்டதுறைமுகம், பன்னாட்டு வாணிபம், அமைவிடம், கோட்டையும் அகழிகளும், மாந்தை, பாலாவித் தீர்த்தம், தேனிருந்த பொந்து, சிவாலயச் சிதைவுகள், நடந்தேறிய அகழ்வாராய்ச்சி, சிவாலயத்தின் புனருத்தாரணம், சிவாலயத்தின் சிறப்புகள், தவசிரேஷ்டர்கள் சம்பந்தமாக ஓரளவு விரித்துரைத்தோம்.

**தொகுத்து எழுத உதவிய நூல்கள்**

1. திருக்கேதீச்சர திருமஞ்சன மலர்
2. திருக்கேதீச்சர பதிகங்கள் - ஆய்வுரை சைவப் புலவர் அ. சிறீஸ்கந்தராஜா (எம்.ஏ)
3. நாவலர் பெருமான் - யோகி சுத்தானந்த பாரதியார்
4. ஆறுமுகநாவலர் சரித்திரம் - திரு.த. கைலாச பிள்ளை
5. கலைக்களஞ்சியம் தொகுதி – 5

## நல்லைக்குமரன் மலர் 2014

நல்லைக்குமரன் மலர் 2014ற்கு ஆக்கங்கள் அனுப்பி வைத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தரமான ஆக்கங்களாக இருந்த போதிலும் எமது இட நிலைமை காரணமாக பின்வருவோர் எழுதிய கட்டுரைகள் பிரசுரிக்க முடியாமல் போயிற்று.

- **திரு.சி.இராஜேஸ்வரன்** (இளைப்பாறிய இலங்கை வங்கி உதவி முகாமையாளர்)
- **சைவசித்தாந்த பண்டிதர் திருமதி.தயாளினி செந்தில்நாதன்**
- **புலோலியூர் வேல்நந்தகுமார்** M.A
- **திரு.காந்திராசா பிரதீஸ்** B.A - பூவரசங்குளம், வவுனியா
- **டாக்டர்** K.S.**கனகரட்ணம்** J.P கொழும்பு
- **இராம ஜெயபாலன்**

- பதிப்பாசிரியர்

# நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோயில்

**திருமதி. வசந்தா நடராசன்** B.A
**416-332-0269** Toronto, Canada

"விரியுந் தண்டணிள வேனிலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமும்
திரியு மெல்லையில் மும்மதில் தீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்ப ஈசனே".

"துவேஷமுடையவர்களை, கொடியவர்களை, கடையரை, இழிந்தோரை, பிறரை துன்புறுத்து பவரை, பிறந்து இறந்து உழலும் உலகில், அசுரப் பிறவியிலேயே திரும்பத் திரும்ப அவர்களைத் தள்ளுகின்றேன்." பகவத்கீதை.

இலங்கையிலே வழங்கும் சமய நெறிகளுள் சைவம் புராதனமானது. ஆதிகாலத்தில் இருந்தே சிவாலயங்கள் பல நிலைபெற்றுக் காணப்பட்டுள் ளன. இதனை மகாவம்சக் குறிப்புக்கள் மற்றும் தமிழ், சிங்கள, பாளி, சமஸ்கிருதக் குறிப்புக்களிலி ருந்தும் அறியலாம். ஆயினும் ஈழ வரலாற்றிலே காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அன்னியர் படை யெடுப்புக்களும், அன்னிய மதச் செல்வாக்கும் சைவ மதத்தவர்கள் வேற்று மதங்களைத் தழுவ வழி அமைத்தது. ஈழத்தின் வடக்கினையாண்ட மன்னர்கள் பலரோடு இங்குள்ள ஆலயங்கள் பலவும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன.

இத்தகைய ஆலயங்களுள் வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயமாக நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயம் திகழ்கின்றது. இவ்வாலயம் பற்றிய குறிப்பினை யாழ்ப்பாண வைபவமாலை யிலே காணக்கூடியதாயுள்ளது. "...கீழத்திசைக் குப் பாதுகாப்பாக வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்குத் திசைக்குப் பாதுகாப்பாக வீரமாகாளியம்மன் கோயிலையும், வடதிசைக்கு சட்டநாதேஸ்வரர் கோயிலையும், கட்டுவித்து வாழ்ந்திருந்தான்..." என்ற குறிப்பிலே குறிப்பிடப் பட்டுள்ளமையும் இவ்வாலயத்தின் பழமையை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது.

இக் கோயிலின் மணிக்கூட்டுக் கோபுரத்திலே ஆலய மணியிலே பொறிக்கப்பட்டுள்ள சாசன மானது, இவ்வாலயத்தின் பழமையை விளக்குவ தாக அமைந்துள்ளது. அச்சாசனம் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

உ
சாலிவாகன சகாப்தம் 1784
கலியப்தம் 4963
தந்தபி வருஷம்
யாழ்ப்பாணத்தைச் சார்ந்த
நல்லூர் சட்டநாதன் கோயிலுக்கு
சிவசம்பு - ம

நல்லூர் சட்டநாதேஸ்வரர் என்ற பெயர் கி.பி.18 ஆம் நூற்றாண்டு காலத்திலும் அதற்கு முன்பும் வழக்கில் இருந்துள்ளது என்பதற்கு மேற்கூறிய சாசனமே ஆதாரமாகின்றது.

இவ்வாலயத்திலே சட்டைமுனியின் சமாதி அமைந்துள்ளது என்ற கருத்தோடு, இக்கோயி லோடு தொடர்புடைய இரு பெருமக்களின் சமாதி யும் இங்கு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயம் யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னனோடும் தொடர்புபட்டுள்ளது. இவ்வாலயத் திற்கு அண்மையில் சங்கிலிய மன்னனின்

அமைச்சர் தங்கியிருந்த இருப்பிடம் அமைந்திருந்தது. சங்கிலியன் தனது அரண்மனையிலிருந்து அமைக்கப்பட்ட சுரங்கப் பாதையினூடாக, நல்லூர் சட்ட நாதேஸ்வரர் ஆலயத்திற்கு வந்து வணங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அண்மைக்காலமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, இச்சுரங்கப்பாதை மூடப்பட்டுள்ளது. உள்நாட்டு யுத்தத்தினால் மட்டுமன்றி, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் பெருங்கோயிலாக இருந்த நல்லூர் சட்டநாதேஸ்வரர் ஆலயம் உடைத்து, அதன் கற்களைக் கொண்டு ஊர்காவற்துறைக் கோட்டையை அமைக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாலயத்தின் தோற்றம் சோழப்பேரரசோடும் தொடர்புபடுத்தப்பட்டு ஆய்வுகள் நிகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. சோழர்கள் அமைத்த ஆலயங்கள் பலவும், திராவிட சிற்பக்கலையின் அம்சமாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. சோழர்கள் ஈழத்தை கி.பி 993க்கும் 1070க்கும் இடைப்பட்ட காலத்திலே ஆண்டுள்ளனர். இக் காலப் பகுதியில் சிவன் கோயில்கள் பலவற்றைக் கட்டி உள்ளனர். அவர்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் பல ஈஸ்வரம் என்ற பெயரைக் கொண்டு அமைந்துள்ளன. இராசராச ஈஸ்வரம், வானவன் மாதேவி ஈஸ்வரம் என்பவையும் சோழர்களால் அமைக்கப்பட்ட சிவன் கோயில்களாகும். ஜனநாத ஈஸ்வரம் என்ற பெயரே மருவி ஜடாநாத ஈஸ்வரம் என்றாகி பின்னர் சட்டநாத ஈஸ்வரம் என வழங்குவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சோழர்களோடும், சட்டை முனியின் சமாதியோடும் இக்கோயில் தொடர்புபட்டிருந்தாலும், சிவனை சட்டைநாதர் என அழைக்கும் வழக்கும் காணப்படுகின்றது. சிவனுடைய பைரவ மூர்த்தங்களுள் ஒன்றாக சட்டைநாதர் என்னும் பெயர் அமைந்துள்ளது. இரணியனைக் கொன்றதால் அகங்காரம் கொண்டலைந்த நரசிங்கத்தை அடக்கி, அதன் எலும்பை கதையாகவும், தோலைச் சட்டையாகவும் தரித்தவர் சட்டைநாதர் என புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. அக் காலத்திலே கோயிலோடு பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள் தமது பெயரையே ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்கும் சூட்டுவது அன்பின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

ஏனைய கோயில்களைப் போலவே இக் கோயில் பற்றிய கருத்து வேறுபாடுகள் பலவாகக் காணப்படுகின்றது. பணத்திற்கும், புகழுக்கும் பாடிய - எழுதிய அக்காலப் புலவர்களும், அறிஞர்களும், தமிழர்களின் வரலாற்றின் ஆதாரமாக விளங்கும் கோயில்களின் வரலாற்றை உரிய தகவல்களோடு குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இக் கோயில், தோற்றத்திலே பெருங்கோயிலாக அமையாவிட்டாலும், தன்னுள் சரித்திரச் சான்றுகள் பலவற்றை அடக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்திலே நித்திய, நைமித்திய பூசைகளோடு, சிவனுக்குரிய ஏனைய திருநாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தனால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே"

"மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு கால னங்கி நமனொடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே".

"பற்றுதலையும் பயனையும் விட்டு, செய்தற்குரிய எந்த நித்தியாகர்மம் செய்யப்படுகிறதோ,

அந்தத் தியாகம் சாத்வீகமானதென்று கருதப் படுகிறது."

- பகவத்கீதை

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நல்லூரில் அமைந்துள்ள சட்டநாத ஈஸ்வரர் ஆலயம், தமிழர் வரலாற்றோடும், இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களோடும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முந்திய வரலாற்றினைக் கொண்ட இவ்வாலயம், காலத்திற்குக் காலம் அழிவுகளையும், அனர்த்தங் களையும் கண்ட போதிலும் மீண்டும் மீண்டும் எழுந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாண இராச் சியத்தை ஆட்சிசெய்த மன்னர்கள், யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பல ஆலயங்களை எழுப்பினர். அவற்றுள் ஒன்றாக நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயமும் காணப்படுகின்றது.

இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம், கி.பி 950ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து அரசோச்சிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி யால் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கு மற்றுமொரு தனிச்சிறப்பும் காணப்படுகின்றது. யாழ்ப்பாண த்தை அரசாண்ட தமிழ் மன்னர்களின் இராச தானிக் கோயிலாகவும், இம் மன்னர்களின் குடும்ப குலதெய்வமாகவும் சட்டநாத ஈஸ்வரர் விளங்கியுள்ளார். இவ்வாலயத்திலே எழுந்தருளி உள்ள சுவாமி, நல்லநாத சுவாமி என்ற திருநாமத் தோடும் இங்கு எழுந்தருளியுள்ள தாயார், நல்லை நாயகி என்ற திருநாமத்தோடும் எழுந்தருளி அருள் பாலிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தை அரசாண்ட மன்னர்களால் பேணப்பட்ட இத்திருக்கோயில், அன்னியர் ஆட்சியில் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந் தது. கி.பி 1505ஆம் ஆண்டு இலங்கைக்குள் காலடி எடுத்துவைத்த போர்த்துக்கேயரைத் தொடர் ந்து, அன்னிய தேசத்தவர் ஈழத்தைப் பல வகையி லும் சூறையாடினர். குறிப்பாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பறங்கியர், தமது ஆதிக்கத்தையும் மதத்தையும் மேம்படுத்த எண்ணங்கொண்டனர். இதன் வெளிப்பாடாக சைவ கலாசாரத்தையும், அதன் ஆணிவேராகத் திகழ்ந்த கோயில்களை யும் அழித்தொழிக்க முற்பட்டனர். இத்தாக்குதலு க்கு யாழ்ப்பாணமெங்கும் காணப்பட்ட சைவக் கோயில்கள் பலவும் இரையாகின. இந்தவகை யிலே மன்னர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட சட்டநாத ஈஸ்வரர் ஆலயமும், அதனோடு தொடர்பு டைய இராசதானிச் சுவடுகளும் அழிந்தொழிந்தன. இதன் விளைவாக இக்கோயில் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

இவ்வாறான நிலையிலே காலச்சக்கரம் உருண்டோட, ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சி மாற் றங்களும் காலத்திற்குக்காலம், இயற்கையின் நியதிபோல இடம்பெற்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பின் ஆங்கிலேயர் என ஈழத்தை அன்னியர் பலரும் ஆள நேரிட்டது. ஆயினும் 19ஆம் நூற்றாண்டிலே ஈழத்தை ஆட்சிசெய்த ஆங்கிலேயர் காலத்திலே, கணிசமான மதச் சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்பட்டது. இதன் வெளிப்பாடாக, நீறுபூத்த நெருப்பாகக் காணப்பட்ட சைவ மதமான ஆதி சிவ வழிபாடு, சிறிது சிறிதாக மக்கள் மத்தியிலே வளம் பெறத் தொடங்கியது. இந்நிகழ்வு காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்த சைவமக்கள், தாம் வணங்கி வழிபட்டு அன்னியர்களால் அழிக்கப்பட்ட சைவத்தலங் களை, புனரமைப்புச்செய்ய முற்பட்டனர். இவ் வாறான சூழ்நிலையில் நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயமும் மீண்டும் தோற்றம் பெற்றது. சிவ முகூர்த்தத்திலே மண் குடிசையிலே பரம்பொரு ளைப் பிரதிஷ்டை செய்து, மக்கள் போற்றி வழிபாடாற்ற ஆரம்பித்தனர். அக்காலத்திலே இவ் வாறாயமைந்த மண்குடிசைக் கோயிலுக்கு ஐந்து பேர் முகாமையாளர்களாக இருந்துள்ளனர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் வசித்த, உலகலாவ முதலியார் குடும்பம் மிகவும் புகழ் பெற்றுக் காணப்பட்டது. இவரது வழித்தோன்றலான சீனிவாசகம்பிள்ளை

தம்பிப்பிள்ளை என்பவரை. கோயில் விடயமாக சட்டநாத ஈஸ்வரர் கோயிலின் ஐந்து முகாமையா ளர்களும் சென்று சந்தித்தனர். இவரை தம்பையா பிள்ளை எனவும் அழைப்பர். சந்திப்பின்போது மறைந்த கோயிலை மீளக்கட்டி உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். முகாமையாளர் களின் கோரிக்கையை ஏற்ற தம்பிப்பிள்ளை அவர் கள், மண்குடிசைக் கோயிலையும், அது சார்ந்த நிலத்தையும் சுவாமியின்பேரில் விலைக்கு வேண்டி, மண்குடிசைக் கோயிலை கற்கோயிலாக கி.பி. 1850ஆம் ஆண்டு கட்ட ஆரம்பித்தார்.

1862ஆம் ஆண்டு அனைத்து வேலைகளும் நிறைவுபெற்று, முதல் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இக்கோயில் சிறப்பாக நடைபெறுவதற்காக கோயிலுக்கண்மையிலுள்ள நிலங்களை அவ்வப்போது வாங்கினர். சட்டநாத ஈஸ்வரர்மீது அன்பும், பக்தியும் கொண்ட மக்க ளும், சுவாமியின் பேரிலே காணிகளை அளித்த னர். கோயிலின் நித்திய நைமித்திய பூசைகள் தங்குதடையின்றி அமைய, இவ்வாறான காணி களிலிருந்து கிடைக்கும் குத்தகை மற்றும் வருமானங்கள் பெரிதும் உதவின. இச் செயற்பாடு காலங்காலமாகத் தொடரும் ஒரு மரபு முறையாகச் சைவ மக்களிடையே பேணப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இக்கோயிலின் விரிவாக்கம் காரணமாக, கோயிலின் தெற்குப் புறமாக அமைந்திருந்த சங்கிலித் தோப்பு எனப் புகழ்பெற்ற காணியை, திரு.தம்பிப்பிள்ளை அவர்கள் வாங்கினார்கள். இந்நிலத்திலே இவர் குடும்பத்தினர், திரிஒலக்கை வாயிலான மடத்தைக் கட்டினர். இவ்வாலயத்தை மீண்டும் கட்டி, அதன் வளர்ச்சிக்குப் பல வழிகளி லும் துணைநின்ற திரு.சீனிவாசகம்பிள்ளை தம்பையாபிள்ளை அவர்கள், கி.பி. 1868இல் சமாதி அடைந்தார்கள். அதன் பின்னர் இவரது புதல்வரான டாக்டர் சிவப்பிரகாசபிள்ளை அவர் கள், ஆலயத்தின் முகாமையாளர் பொறுப்பை ஏற்றார். இவர் முகாமையாளராகப் பொறுப்பி லிருந்த காலத்தில், நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயத்தில் பல்வேறு கட்டடத் திருப்பணிகளைச் செய்துள்ளார். அன்னியரால் அழிக்கப்பட்டு மீண்டும் மீளமைக்கப்பட உதவிய திரு.சீனிவாச கம்பிள்ளை தம்பையாபிள்ளை மற்றும் இவரது துணைவியார் திருமதி சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரது சமாதிகள் இக்கோயிலின் தெற்குப் புறத்தே அமைந்துள்ளன.

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தூயானைத் தவமாய தன்னை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே".

"நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாயிருக்கி றேன். எனக்குப் பகைவனுமில்லை; நண்பனு மில்லை. ஆனால் உளசுத்தியோடும் பக்தியோடும் பூசிப்பவர்கள் என்பால் உளர். நானும் அவர்கள் பால் உள்ளேன்."

- பகவத்கீதை

இலங்கையின் வடபாகத்திலுள்ள பழம்பெரும் தமிழ் இராசதானியாகத் திகழ்ந்த நல்லூரிலே அமைந்துள்ள சட்டநாத ஈஸ்வரர் ஆலயம், தொன் மைச் சிறப்புக்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கிய தாக விளங்குகின்றது. 1868ஆம் ஆண்டு சீனிவாசகம்பிள்ளை தம்பையாபிள்ளை அவர்கள் சமாதியடைய, அவரது புதல்வர் டாக்டர் சிவப்பிர காசபிள்ளை அவர்கள் ஆலயத்தின் பரிபாலன முகாமையாளராகப் பொறுப்பேற்றார்கள். தம்பை யாபிள்ளையவர்கள் சங்கிலித்தோப்பு எனப் புகழ் பெற்ற காணியிலே அமைத்த மடம், அமைக்கப் பட்ட காலச் சிறப்புக்களையும், அக்கால மரபுகளை யும் எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது.

இந்த மடத்தினை அக்காலத்தின் கலை, கலாசார, நாகரிகத்தின் அடையாளமாகக் கொள்ள முடியும். திராவிட, றோமன், டச்சு மற்றும்

ஆங்கிலேய கட்டிடக்கலையின் அம்சங்கள் பலவற்றைத் தன்னுள் கொண்ட கட்டிடமாக இம்மடம் காணப்படுகின்றது. இம்மடம் மேல்வீடு, நில அறை ஆகியவற்றைக் கொண்டதாக 1890ஆம் ஆண்டு திருவாளர் தம்பையாபிள்ளை சிவப்பிரகாசபிள்ளை அவர்கள் நிர்மாணித்துள்ளார்கள். இதற்குச் சான்றாக இங்குள்ள கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டு ஒன்றிலே, "அம்பலவாண சீனிவாசகம்பிள்ளை தம்பையா பிள்ளை திரிஓலக்கைவாயில் 1890..." என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பண்டைய அமைப்புத் தோற்றம் காரணமாக இதனை, மந்திரிமனை எனவும் குறிப்பிட்டுள்ளனர். இம்மடம் கோயிலை மீளத்தாபித்தவர்கள் அவ்வப்போது தங்கும் மடமாகவும் விளங்கியுள்ளது. இந்த மடத்திலே கோயிலின் முக்கிய நிகழ்வுகளும், சமாதிக் குருபூசைகளும் நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்தோடு சட்டநாத ஈஸ்வரர் ஆலயத்திலே பூசைபண்ணும் குருக்கள்மார் வதியும் இல்லமாகவும் இம்மடம் காணப்படுகின்றது.

டாக்டர் தம்பையாபிள்ளை சிவப்பிரகாசபிள்ளை அவர்களின் இருபுதல்வர்களான, திருவாளர்கள் தம்பையாபிள்ளை, சின்னத்தம்பையாபிள்ளை ஆகியவர்களின் முகாமைத்துவத்தில், இக்கோயிலின் திருப்பணிகள் சிறப்புற நடைபெற்றன. இவர்களின் பின் டாக்டர் நல்லைநாதன், முடிக்குரிய வழக்குரைஞர் முத்துசாமிப்பிள்ளை, பொறியியலாளரும் பேராசிரியருமான சிவப்பிரகாசபிள்ளை, புறக்டர் சின்னத்தம்பையாபிள்ளை துரைசிங்கம் ஆகியோரின் முகாமைத்துவத்தில், கோயிலும் அதன் சொத்துக்களும் பராமரிக்கப்பட்டன. தற்காலத்திலே இந்தப் பரம்பரை வழிமுறைக்குரிய தர்மகர்த்தாவாக, வங்கி அதிகாரியான சின்னத்தபையாபிள்ளை துரைராசா அவர்கள் முகாமைத்துவ தர்மகர்த்தாவாகப் பணிபுரிகின்றார். மற்றைய பரம்பரை வழிமுறைக்குரிய தர்மகர்த்தா, அமெரிக்காவில், கானக்டிக்கட் மாநிலத்தில் வசிக்கின்றார். சிறுபிள்ளை நரம்பியல் நிபுணரான இவர், யேல் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் நல்லைநாதன் அவர்களாவார். இவர்களின் பிரதிநிதியாக, இக்கோயிலை மீளத் தாபித்தவர்களின் பரம்பரை வழிவந்த, டாக்டர் கதிர்காமலிங்கம் செந்தில்குமரன் அவர்கள், இக்கோயிலை சிறப்பான முறையிலே பராமரித்து வருகின்றார்.

இவர் ஆலய திருப்பணியிலே ஆர்வமுள்ள ஊர் மக்களை ஒருங்கிணைத்து, இத்திருக்கோயிலுக்குரிய அபிவிருத்திச் செயலகம் ஒன்றினை அமைத்து, அவர்களின் அனுசரணையோடு கோயிலையும்,. கோயிலுக்குரிய சொத்துக்களையும் பராமரிப்பது, கோயில்களின் பேணலுக்குரிய சிறந்த வழிமுறையாகவும், ஏனைய கோயில்கள் பின்பற்றவேண்டிய சிறப்பம்சமாகவும் காணப்படுகின்றது. இந்த அபிவிருத்திச் செயலக அமைப்பு முறை, பரம்பரை தர்மகர்த்தாக்களும், ஊர்மக்களும் ஒன்றிணைந்து திருப்பணிகளில் ஈடுபட வழிசமைக்கின்றது. அத்தோடு, இவ்வாலயத்தின் கணக்கு வழக்குகள் பொது தர்மசாதனத்திற்கு உரியவைபோலப் பேணப்படுவதும் சிறப்பம்சமாகும். இவ்வாலயம் தனியார் தர்மசாதனமாக விளங்கினாலும், பல வழிகளிலும் ஆலயத்தின் வளர்ச்சியிலும், பேணலிலும் ஆர்வமுள்ள பக்தர்களின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஒரு சிறந்த நெறிமறையாகவும் விளங்குகின்றது.

இக்கோயிலின் தோற்றம், கி.பி 950ஆம் ஆண்டு காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இக்காலம் சோழர்களின் ஆட்சிக்காலமாகும். இவர்களது ஆட்சிக்காலம், தமிழர்களினதும் சைவ சமயத்தினதும் பொற்காலமென வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. நால்வருள் ஒருவராகிய, சீர்காழியிலே அவதரித்த, சைவசமய வளர்ச்சிக்கு பலவழிகளிலும் உந்துதலாக இருந்தவர், திருஞானசம்பந்தப் பெருமான். இவரது தேவாரப் புகழ், முதலிலே மலர்ந்த ஸ்ரீ சட்டைநாத சிவபெருமானின் பிரதிபலிப்பாக, இச்சிவாலயம் ஈழத்திலே தோற்றம் பெற்றது. கால மாற்றத்தின் காரணமாக, பெயர் வழுவல்கள் பல துறைகளிலும் நிகழ்ந்துள்ளன. அவ்வாறே, சோழ இராச்சியத்தின் புகழ் பெற்ற ஸ்ரீ சட்டைநாதசுவாமி கோயில், சட்டநாத

சுவாமி கோயில் என மருவி, மக்களால் அவ்வாறே அழைக்கப்படுகின்றது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தி கிரியாலிங்க மாகும். சைவ வழிபாட்டிலே இலிங்கம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பாரதத்திலே ஆங்காங்கு காணப்படும் புண்ணிய தீர்த்தங்களில், இலிங்கத் திருவுருவங்கள் நிறுவப்பட்டுள்ளன. பாரத நாட்டிலே சிவனுக்குக் கோயில் அமைத்துள்ள இடங்களிலெல்லாம், வழிபடுவதற்கு இலிங்கத் தையே முக்கிய விக்கிரகமாக நிறுவியுள்ளனர். தெற்கே கன்னியாகுமரியிலிருந்து, வடக்கே காஷ்மீரம்வரை இலிங்க வழிபாடு மாற்றமின்றி, ஒரே மாதிரியாகவே பரவியுள்ளது. வடக்கே வழிபடுமிடங்களிலெல்லாம் இலிங்கங்களையே நிறுவி வழிபடுகின்றனர். ஈழத்திலும், ஆகம நெறியிலமைத்த கோயில்களிலெல்லாம் சைவர் கள், இலிங்கங்களை மட்டுமே நிறுவி வழிபாடி யற்றுவர். சிவனுடைய மூர்த்தி பேதங்களை வழிபடும் வழக்கம், அவ்வளவு பிரசித்திபெற்ற வழிபாடாக அமையவில்லை. சிவன்கோயில் கரு வறைகளில் இலிங்கமே நிறுவப்படுவது, தொன்று தொட்டு காணப்படும் தொன்மையான முறை யாகும்.

"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பல்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

"பொருள்களை நினைப்பதால் பற்று உண் டாகின்றது. பற்று ஆசையாகப் பரிணமிக்கின்றது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது. சினத்தால் மனக் குழப்பம், குழப்பத்தால் நினைவின்மை, நினைவு நாசத்தால் புத்திநாசம், புத்திநாசத்தால் ஒருவன் அழிகின்றான். மன அமைதியில் துன்பங்கள் அனைத்தும் ஒழியும். விரைவில் ஆத்ம சொரூபத் தில் நிலைபெறும்."

- பகவத்கீதை

திருக்கோயில் வழிபாடு தனிமனுதனுக்கென உருவாகவில்லை. மக்கள் அனைவரும் சென்று வழிபடுவதற்காகவே ஆலயங்கள் ஏற்பட்டன. இம் மக்கள் பெருந்தொகையினர். மக்கள் பல நிலை களில் அறிவுநிலையில் காணப்படுவர். இத்தகைய மக்கள் அனைவரும் எளிதாய் வழிபடும் நிலைக் கேற்பவே, வழிபடும் சாதனங்களும் அமையும். அனைத்து நிலையிலுள்ள மக்களும் எளிதாய் வழிபட உதவுவது விக்கிரக வணக்கமுறை யாகும். குணங்குறியற்ற இறைவனை, குணங் குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் அகப்படுத்தி, புறத்தோற்றங் கொடுத்து, எமது கட்புலனுக்குள் அடங்கச் செய்யும் முயற்சியின் விளைவே, சைவ சமயத்திலுள்ள விக்கிரக வடிவங்களாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே சைவாலயங்கள் எழுப்பப்பட்டன. மக்களும், மன்னர்களும் இவ் வாலயங்களை அமைப்பதில் பெருந்துணை நின்றுள்ளனர். இவ்வாறு மன்னர்களால் எழுப்பப்பட்ட ஆலயங்களுள் ஒன்றாக, சரித்திரச் சான்றாக விளங்கும் பெருமை பெற்றது நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயமாகும்.

சிவன்கோயில்களின் கருவறையில் எழுந்தரு ளச் செய்யும் இலிங்கத் திருவுருவம், பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இச் சிறப்புக்களை அறிவது சைவசமயிகளின் கடமை யாகும். இலிங்கத் திருவுருவத்திற்கு ஏனைய திருவுருவங்களுக்கு இல்லாத சிறப்பு உண்டு. இத் திருவுருவம் எதைக் குறிக்கின்றது? இலிங்க வழி பாட்டின் நோக்கம் என்ன? இக் கேள்விகளுக்கு பலரும் பல்வேறான விளக்கங்களை அளித்துள் ளனர். சமய இலக்கியங்களும் பல்வேறு விளக்கங் களைத் தந்துள்ளன. இலிங்கம் உயரிய தத்துவங் களை உணர்த்துகின்றது. லிங்கம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு, 'அடையாளம்' என்பது கருத்து. முழுமுதற் கடவுளாகிய சிவனைக் குறிக்கும் குறியாக நிறுவப்பட்டமையால், இது இலிங்கமாயிற்று.

உபநிடதங்கள் இறைவன் பெருமையை எடுத்தோதுகின்றன. சிவனை வாழ்த்தி வணங்கும் பொழுது, அவனை உள்ளக்கமலத்திருத்தி கிரகிக்க முற்படும்பொழுது, இலகுவாக மனதிருத்தி வணங்க இறைவனைக் குறிக்கும் அடையாளமாக, அவனையுணர்த்துங் கருவியாக இலிங்கம் விளங்குகின்றது. இது பற்றியே இதற்கு இலிங்கம் என்னும் பெயர் ஏற்பட்டது. வேதங்கள் யாகத்தில் வளருந் தீயைப் போற்றியுள்ளன. தூய்மை வாய்ந்த தெய்வீகத் தீயை நடுநாயகமாகக் கொண்டுதான், வேதகால வழிபாடு நிகழ்ந்துள்ளது. இது அவிசொரிந்து வேட்கும் வழிபாடு. பொன்னிறமான தீ, குளிர்ந்த நிலையில் கருநிறம் பெறும். இவ்வாறு அக்கினி எய்திய நிலை, இலிங்கம் எனப்படும். பிரம்மனும், மாலும் அடிமுடி தேடும் வண்ணம், இறைவன் ஒளிவீசும் தீப்பிழம்பாய்த் தோன்றிய நிலையினை நினைவூட்டுவது இலிங்கம். தேவர்கள் வேண்டத் தீப்பிழம்பு வடிவம் நீங்கி, இலிங்க வடிவாயினன் என சமய நூல்கள், இலிங்கத்தின் குவிந்த தோற்றத்திற்கு விளக்கம் கூறி உள்ளன.

இத்தகைய தத்துவக் கோட்பாடுகள் நிறைந்த இலிங்கவடிவமே, நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயத்தின் கருவறையிலும் நிறுவப்பட்டுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள கருவறை இலிங்கத்தினை, கிரியாலிங்கம் என அழைப்பர். இக்கிரியாலிங்கம் மிகவும் விசேடமானது. இந்த இலிங்கத்திற்கு சிறப்பாகப் பூசைகள் செய்து வழிபாடு இயற்றினால், மிகுந்த பலன் கிடைக்கும், எம்மவர்கள் வாழ்வு சிறக்கும், நாடு உயர்ச்சி பெறும் என்பது ஐதீகமாகும். தற்போதுள்ள மூலமூர்த்தியான இலிங்கமும், அம்பாள், பிரகார மூர்த்திகள் ஆகியவற்றின் அமைப்புக்கள், இந்தியாவில் செய்யப்பட்டமைக்குச் சான்றாக உள்ளதாக, இவ்வாலயத்திலே பூசைநெறி செய்த, அந்தணப் பெருமக்கள் கூறியுள்ளனர். மேலும் இங்கு அமைந்துள்ள தீர்த்தக் கேணியில், இலக்குமி விக்கிரகம் கண் டெடுக்கப்பட்டதாகவும், அவை நூதனசாலையில் பின்னர் வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஈழத்திலுள்ள சைவாலயங்கள் பலவும், காலத்திற்குக்காலம் கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. சைவ ஆலயங்களை அழித்து வேற்றுமத ஆலயங்களை அவ்விடத்திலே நிறுவியும் உள்ளனர். இச்செயல்கள் அன்றுதொட்டு இன்று வரை நிகழ்ந்து வருகின்றது. ஆயினும், வெட்ட வெட்ட தளைக்கும் விருட்சம்போல, முன்னர் இருந்த நிலையைவிட, ஈழத்திலுள்ள கோயில்கள் அனைத்தும் மீண்டும் உயர்நிலை பெற்று, மேலோங்கிக் காணப்படுகின்றன. இந்நிலைக்கு தாம் வணங்கும் தெய்வங்களின் மீது மக்கள் கொண்ட பக்தியும், ஆதரவும், ஆலய அறங் காவலர்களின் துணையும், யாவற்றிற்கும் மேலாக, பிரபஞ்சத்தையே ஆட்டுவிக்கும் இறை சக்தியும் துணையாக விளங்குகின்றது. இதற்கு உதாரணமாக பல நிலைகளில் அழிக்கப்பட்டும் மீண்டும் புனர்நிர்மாணம் பெற்றிருக்கும், நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் ஆலயமே ஒரு சான்றாகும்.

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்விகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலந்தார்".



பொது நூலகம் யாழ்ப்பாணம்.

# முருக வழிபாடுகளும் திருத்தலங்களும்

செல்வி. கீர்த்தனா ஆறுமுகதாசன்

இறைவன் இந்த பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்து அனைத்தையும் இயக்கும் சக்தியாக காணப்படுகின்றான். ஐம்பூதங்களாக வியாபித்து நிற்பவன் இறைவன் என்பதை "வான் ஆகி மண்ஆகி வளி ஆகி ஒளி ஆகி" எனத் திரு வாசகம் விளக்குகிறது. ஞானிகளால் நினைக்கப் படுகின்ற முருகனை ஞானத்தானுருவாகிய நாயகன் எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. சிவனுடைய மூர்த்தங்களுள் குருமூர்த்தமாக நிகழ்வது தட்சணாமூர்த்தி வடிவம் ஆகும். தட்சணாமூர்த்திக்குப் பிரணவத்தை உபதேசித்த குருபரனாக முருகன் திகழ்கிறார். உருவம் நாமம் அற்ற இறைவனின் நிலையைச் சொரூபநிலை என்றும் உருவம் நாமத்தோடு கூடியநிலையைத் தடத்தநிலை என்றும் சைவசித்தாந்தம் குறிப்பிடுகி றது. அருவமாகவும் உருவமாகவும் அநாதியாக வும் ஒன்றாகவும் பலவாகவும் பிரம்மமாகவும் நிற்கின்ற பரசிவ சோதிப்பிழம்பே ஆறுமுகங் களும் பன்னிரு கரங்களும் கொண்டு முருகப் பெருமானாகத் தோற்றம் பெற்றார் என்பதை "அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாக" என கந்தபுராண வரிகள் குறிப்பிடு கின்றன.

முருகப்பெருமானை உள்ளம் உருக வழிபட வேண்டும். உள்ளம் உருகினால் உயிர் உருகும். உயிர் உருகினால் உயிருக்கு உயிராய் இருக்கும் இறைவனுடன் ஒன்றுபடும் அத்துவித முத்தி ஆன்மாவிற்குக் கிடைக்கும். முருகனுக்குப் பல நாமங்கள் உண்டு. அவற்றில் சில கந்தா, கடம்பா, கார்த்திகேயா, குமரன், குகன், வேலன், கந்தன் இவை அனைத்திலும் முருகன் உபாசகர்கள் அனைவராலும் உள்ளன்போடு உச்சரிக்கப்படும் நாமம் முருகன் என்பதாகும். "அரும்பெறல் மரவிற் பெரும்பெயர் முருக" எனத் திருமுரு காற்றுப்படையும், "மொழிக்குத்துணை முருகா என்னும் நாமம் எனக் கந்தரலங்காரமும் முருக நாமத்தின் மகிமையை எடுத்து இயம்புகின்றன. இவ்வாறான முருக வழிபாடானது ஆதிகாலம் தொட்டு விளக்குகிறது என்பதற்குச் சான்றாக சங்க இலக்கியங்களில் மிகவும் போற்றப்படும் தெய்வ மாக முருகனைக் காணலாம். மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சியில் முருகன் முழு முதற் தெய்வமாகப் போற்றப்பட்டான். இதனை தொல்காப்பியம் "சேயோன் மேயவரை உலகம்" எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறு வீரமும் காதலும் நிறைந்த சங்ககால மக்களின் வாழ்வில் முதிர்ந்த அறிவு நிலை கடவுட் கொள்கையாக முருக வழிபாடு நிரம்பி இருந்தமையைக் காணலாம். எனவே தொகுத்து நோக்குமிடத்து முருகவழிபாடு என்பது எத்தனை தூரம் பழைமையானதும் தொன்மையானதும் என்பதை நாம் உணரலாம்.

அடுத்து முருகப்பெருமான் எழுந்தருளும் திருத்தலங்கள் பற்றி நோக்குகையில் தமிழகம் சார்ந்த திருத்தலங்கள், ஈழம் சார்ந்த திருத்தலங் கள், புலம் பெயர் நாடுகள் சார்ந்த திருத்தலங்கள் என வகைப்படுத்தலாம். அவற்றுள் தமிழக திருத் தலங்கள் என்னும் போது வல்லக்கோட்டை திரு மயிலாடி, வடபழனி, குமரன்கோயில், திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணி,

பழனி, பழமுதிர்ச்சோலை என்று பல தலங்களை கூறலாம். இவற்றுள் கருணையே வடிவான கந்தக்கடவுள் விரும்பி உறையும் இடங்களாக ஆறுபடை வீடுகளின் சிறப்பு பற்றி நோக்குவோமாயின் முருகப் பெருமானின் முதலாவது படை வீடு திருப்பரங்குன்றம் என்பதாகும். இத்தலத்தில் தான் முருகப்பெருமான் தேவேந்திரன் மகளான தெய்வானையின் கரம் பற்றி திருமணம் புரிந்தான். அடுத்து இரண்டாவது படைவீடாக திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர். இந்த இடம் அவர் அவதாரப்பணியை முடித்த இடமாகும். சூரபத்மனை வதம் புரிந்து தேவர்களுக்கு நல் வாழ்வு கொடுத்த இடம். மூன்றாவது படை வீடாகத் திகழ்வது பழனிமலை அடிவாரத்திலுள்ள திருவாவின் குடியாகும். இத்தலத்தில் முருகப் பெருமான் ஒரு பழத்திற்காக வேண்டி தம் தாய் தந்தையரிடம் வேற்றுமை கொண்டு தம் ஆடை, ஆபரணங்கள், வாகனம் அனைத்தையும் துறந்து கவசணம் தரித்து ஆண்டியாய் எழுந்தருளிய இடம். நான்காவது படைவீடாகச் சிறப்பிக்கப்படுவது சுவாமிமலை. இந்த இடம் முருகப்பெருமான் பிரணவ மந்திரத்தை தம் தந்தைக்கு உபதேசித்த இடம். அதனால் தான் சுவாமி நாதனாக இம் மலையில் எழுந்தருளியுள்ளார். ஐந்தாவது படை வீடாகக் குறிப்பிடுவது குன்றுதோறாடல் என்பதாகும். இது ஒரு இடத்தையல்லாது முருகப்பெருமான் எழுந்தருளி திருவிளையாடல் புரிந்த எல்லாக் குன்றுகளையும் குறிக்கும். அருணகிரிநாதர் போன்றவர்கள் திருதணிகை மலையை குன்று தோறாடல் என்று சிறப்பித்துக் கூறுவார். அந்த இடம் வள்ளியை மணம் புரிந்த இடமாகும். ஆறாவது படைவீடு பழமுதிர்ச்சோலை ஆகும். இதனை அழகர் கோவில் என்றும் கூறுவர். அவ்வை மூதாட்டிக்கு நாவல் பழங்களை உதிர்த்து கொடுத்து அதன் வாயிலாக ஞானத் தத்துவத்தை உணர்த்திய காரணம் பற்றியே பழமுதிர்ச்சோலை என்னும் பெயர் பெற்றது. இவ்வாறு தமிழ் நாட்டுத் திருத்தலங்கள் அமைகின்றன. இவற்றைத் தவிர அடுத்து ஈழத்து திருத்தலங்கள் வரிசையில் மண்டூர் முருகன் கோவில், நல்லூர்க் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கதிர்காமம், செல்வச்சந்நிதி ஆலயம் எனப்பல ஆலயம் காணப்படுகின்றன. இவற்றுள் அலங்காரக்கந்தன் என்று போற்றப்படும் நல்லைக் கந்தனுடைய ஆலயத்தை மையமாக வைத்தே யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம் அமைக்கப்பட்டது. உலகியல் வாழ்வில் நாம் படும் துன்பங்கள் துயரங்கள் வேதனைகள் நீக்க வேண்டுமானால் செல்லப்பசுவாமிகள் தவம் செய்த நல்லூரை நாம் வலம் வந்து வணங்க வேண்டும் என்று நற்சிந்தனைப்பாடங் குறிப்பிடுகின்றது. நல்லைக்கந்தனை தஞ்சமென வழிபடும் அடியவர்கள் எதற்கும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. பஞ்சம் வந்தாலும் படை வந்தாலும் ஆறுமுகனைத் தஞ்சம் எனப்பிடித்தால் அவனுடைய அபயகரம் அடியவர்களைக் காக்கும்.

அடுத்ததாக, தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கும் அன்னதானக் கந்தனை பற்றிச் சொல்லுகையில் செல்வச்சந்நிதி ஆலயமானது ஒரு வைத்தியசாலைக்குச் சமமானது. சந்நிதியானை தரிசிக்க வரும் அடியார்கள் ஏதோ ஒரு மனக்குறையுடன் வருகின்றனர். அதிலும் தேக ஆரோக்கியம் நலிவுற்றவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து ஆற்றில் நீராடி சந்நிதியானது மருந்தாகப் பயன்படும் பிரசாதங்களை பயபக்தியுடன் வாங்கி அதனை உட்கொண்டுவர அவர்களது நோய் நீங்கி குறைகளும் நீங்குகின்றன. இவ்வாறு அன்னதானக்கந்தன் அருளுகின்றான். மேலும் கற்பூரக்கந்தனாக கதிர்காமக் கந்தனும் அபிஷேகக்கந்தனாக மாவிட்டபுரக் கந்தனும் ஈழத் திருநாட்டிலே எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பொழிகின்றனர். மேலும் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அழகிய முகமும் எழில் தோற்றமும் கொண்ட முருகப் பெருமானுக்கு தம்மைச் சூழ்ந்த பிரதேசங்களிலே சிற்சில கோவில்கள் அமைத்துள்ளனர். அதிலே மலேசியா வாழ் தமிழ் மக்கள் கருணையே வடிவான கந்தக் கடவுளுக்கு பத்துமலையில் முருகன் ஆலயம் ஒன்று அமைத்துள்ளனர்.

இவ்வாறு முருகப் பெருமான் பல்வேறு திருக் கோலத்துடன் பல்வேறு தலங்களில் காணப்படு கின்றார்.

மேலும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகப்பெருமானது வழிபாடானது ஆதிகாலம் தொட்டு இன்றுவரை மிகவும் உன்னத மான ஒருநிலையில் காணப்படுகின்றது. ஈழத்திரு நாட்டில் மட்டுமல்லாது தமிழ் நாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் முருக வழிபாடும் எம்பெரு மானது திருத்தலங்களும் மிகவும் சிறப்பாக போற்றிக் காக்கப்படுகின்றன. ஆறுமுகப்பெரு மானது திருவுருவத்தைத் தரிசிப்பதையே நமது கண்கள் பெற்ற பயனாகவும் அவரது புகழைக் கேட்டதையே நமது செவிகள் பெற்ற பயனாகவும் அவரது நாமத்தை கூறுவதையே நமது நாபெற்ற பயனாகவும் அவரது திருப்பாதவிந்தங்களை தொழுவதையே நமது கைகள் பெற்ற பயனாகவும் அவரது தொண்டுகளுக்கு ஆட்படுவதையே நமது வாக்கு மனம் காயம் முதலிய கரணங்கள் பெற்ற பயனாகவும் கருதி இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்வோமாக. குமரனை நாளும் போற்றி நலம் பல பெற்று வையகம் திழைக்கச் செய்வோம்.

# யாழ் விருது பெற்றவர்கள்

1. வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் (சைவசமய விவகாரக்குழுவின் ஆரம்பகர்த்தா) — 2006
2. உயர்திரு வே.பொ.பாலசிங்கம் (முன்னாள் ஆணையாளர், யா.மா.ச) — 2007
3. வைத்தியநிபுணர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி (யாழ் போதனா வைத்தியசாலை) — 2008
4. உயர்திரு க.கணேஸ் (முன்னாள் அரச அதிபர், யாழ் மாவட்டம்) — 2009
5. சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தேகாந்தநிலை) — 2010
6. வைத்தியநிபுணர் ந.ஜெயக்குமார் (புற்றுநோயியல் வைத்தியநிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) — 2011
7. நயினாதீவு நாகபூஷணி அம்மன் அமுதசுரபி அன்னதானசபை — 2012
8. அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் (அமைப்பாளர், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்) — 2013
9. வித்யாசாகரம் சிவஸ்ரீ. சபா வாசுதேவக்குருக்கள் (தலைவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்) — 2014

# சைவசமயமும் நடைமுறை வாழ்க்கையும்

சைவப்புலவர் சு.தேவமனோகரன்
இணுவில்.

சமயம் மக்கள் வாழ்க்கையை வளம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நம் முன்னோர்கள் சமயவழி நின்றனர். சமயத்தில் கூறப்பட்ட விடயங்களைத் தமது நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றினர். நாளாந்தக் கடமைகளை இறை வணக்கத்துடன் ஆரம்பித்தனர். ஆலயத்தையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருத்தல், சுற்றாடலை தூய்மையாகப் பராமரித்தல், குளித்துத் தோய்த் துலர்ந்த ஆடை அணிதல், ஆலய வழிபாடு செய்தல் என்பன ஆரோக்கிய வாழ்விற்கு வழி செய்தன.

மனித வாழ்வு இயற்கையுடனும் சமயத்துடனும் இணைந்துள்ளது. நாம் அவற்றுக்கு அப்பால் சென்றுவிடாமல் இயற்கைச் சமநிலையுடன் சுற்றாடலைப் பாதுகாத்து வாழ்ந்தால் நோய் அணுகாது. மனச் சந்தோசத்துடன் வாழலாம். நாயன்மாருடைய வாழ்க்கை வரலாறு, அவர்கள் பாடிய தேவார திருவாசகம் மனிதவாழ்வு மேன்மையடையக் கூடிய வகையில் அமைந்துள்ளது மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அவர்கள் நடைமுறை வாழ்க்கையுடன் சேர்த்து சமயக்கருத்துக்களையும் கூறியுள்ளனர். சமயப் பணிகள், சமூகப்பணிகள் செய்வதன் மூலம் திருப்தியடைந்து வாழலாம் என்பதை அவர்கள் தம் வாழ்க்கையனுபவங்களுடாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

அர்த்தமுள்ள இந்துமதம் அவரவர் கடமைகளை வகுத்துள்ளது. ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் சரியாகச் செய்து திருப்தியாகவும் சந்தோசத்துடனும் வாழ இந்துமத நடைமுறைகள் வழிவகுத்துள்ளன. சமய சமூகப்பணிகளில் ஈடுபட்ட அறிஞர்கள், பெரியோர்கள் நடைமுறை வாழ்க்கை எவ்வாறு அமைந்தால் நன்று என்பதனை வாழ்ந்து காட்டினார்கள்.

இலங்கையில் நல்லை நகரில் தோன்றிய நாவலர் அவர்கள் தாம் வாழ்ந்த காலச்சூழ் நிலையில் சைவத்தையும் தமிழையும் எவ்வாறு வளர்க்கலாம் என்பதனை தான் செய்த பணிகளினூடாகக் காட்டியவர். செய்யுள் இலக்கியத்திலிருந்து உரைநடை இலக்கியம் தோன்றிய காலப் பகுதியில் சமய நெருக்கடிகளுக்குள் வாழ்ந்தவர். சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு சமயக் கருத்துக்களை வசன நடையில் எழுதி வெளியிட்டார். சைவசமயப் பிரசங்கம் நடத்தி மக்களிடையே சமய விழிப்புணர்வையும் பக்தி உணர்வையும் ஏற்படச் செய்தார். சமய இலக்கியங்களை உரைநடையில் எழுதிப் பதிப்பித்தார். வசனநடை கைவந்த வல்லாளர் என்று கூறுமளவிற்கு அவரது வசனநடை அமைந்து மக்களை சமய வாழ்க்கையில் ஈடுபடச் செய்தது.

ஆலயங்களில் புராணபடனம் செய்வதை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். பாலபாடம், சிவாலய தரிசன விதி, நித்திய கருமவிதி, பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம் போன்ற நூல்களை இலகு தமிழில் யாவரும் படிக்கக்கூடிய வகையில் செய்தார். சமயப்பணி, தமிழ்ப்பணி என்பவற்றுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தமையால் அவர் வாழ்ந்த காலம் முக்கியமான

காலமாக அமைந்தது. சமயத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகப் போற்றிப் பாதுகாத்தார். "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே" எனும் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் வாசகம் அவரது சமயத் தமிழ்ப்பணிகள் எந்தளவு முக்கிய மானது என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

நல்லூர் ஆலய முன்பாக நாவலர் மண்டபம், அமைந்துள்ளது. நாவலர் கலாசார மண்டபம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ளமை நாவலரை இன்றும் நினைவுகூரும் வகையில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" எனும் பட்டமளித்துக் கௌரவித்தமை இவரது பேச்சாற்றலுக்குத் தக்க சான்றாகும்.

நாவலர் அவர்கள் சமயத்தை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி மக்கள் வாழ்க்கை வளம்படப் பணியாற்றினார். இவரது செயற்பாடு பின்வந்த காலங்களில் சமயச் செயற் பாடுகள் நிறுவனம் சார்ந்ததாக வளர்ச்சியடைய வழிவகுத்தது. சைவ பரிபாலன சபை, சைவாசிரி யர் கலாசாலை போன்றன தொடர்ந்தும் சமயப் பணி ஆற்றின.

ஆலயங்களை அடிப்படையாகக்கொண்டு மக்கள் வாழ்க்கை அமைந்தன. கோயில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பதற்கமைய ஊர்கள் தோறும் கோயில்கள் அமைந்துள்ளன. கோயில்களில் பூசைகள் மணியோசைகள் ஊர் மக்களைச் செயற்பட வைக்கின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மிக நீண்ட காலமாக புகழ்பெற்று விளங்குகிறது. நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலம் மிகவும் முக்கியமானதாகும். குடாநாடு முழுவதும் பக்தி மயமாகக் காணப்படும். 25 தினங்கள் திரு விழாக்கள் நடைபெறும். பல இடங்களிலிருந்தும் அடியவர்கள் வந்து வழிபடுவார்கள். வீதி ஒழுங்கு கள் மற்றும் விடயங்களில் முன்னாயத்தங்கள் செய்து திட்டமிட்டு திருவிழாக்காலம் மிகவும் பக்திச் சூழலுடன் காணப்படுவது சிறப்பானதாகும். விரதமிருந்து உடலாரோக்கியத்தைப் பேணல், வீதி வலம் வருதல், அங்கப் பிரதட்டை செய்தல், ஆலயப்பணி செய்தல் மூலம் உடலுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்தல், ஆலயச் சுற்றாடலைத் தூய்மைசெய்து நோய்களைத் தவிர்த்தல், உண வளித்தல் தாகசாந்தி செய்தல் மூலம் பிறருக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் சைவ சமயம் கூறும் நடைமுறை வாழ்க்கையை எவ்வாறு கடைப்பிடித்து வாழலாம் என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

சைவசமயப் பழக்கங்கள் இளமையில் இருந்தே பிள்ளைகளுக்குப் பழக்குவதால் வளர்ந்து பெரிய வர்களாகும் போது நற்பழக்கங்கள் வழக்கங்க ளாகி விடுகின்றன. விபூதி பூசுதல், பெரியவர்க ளைக் கனம் பண்ணல், ஆலய வழிபாடு - காலையில் நேரத்துடன் எழுதல், பாடங்களைப் படித்தல் போன்ற செயற்பாடுகள் இளமைக் காலத்தில் கஷ்டமாக இருந்தாலும் பழகிய பழக்கங்கள் வழக்கங்களாகிப் பின்னர் தாமாகவே அவற்றை மறக்காது செய்வதற்குத் தூண்டுகிறது.

சமயத்திலே கூறப்பட்டுள்ளவை நடைமுறை வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்வதற்கு வழிவகுத் துள்ளன. ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் காரண காரியத் தொடர்பிருக்கின்றன. விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் இருக்கின்றன. நாமும் நடை முறை வாழ்க்கையை வளமாக வாழ்வோம்.

# மனமது வசப்பட ...

டாக்டர் திருமதி.அருள்மொழி சுதர்மன்
ஆயுள்வேத மருத்துவ பொறுப்பதிகாரி
யா.மா.ச, பாசையூர்.

எமது மனம் என்பது ஒரு குரங்கைப் போல எந்நேரமும் அங்குமிங்கும் தாவி அலைந்து கொண்டு இருக்கும். அதே சமயம் மனம்தான் எமது செயற்பாட்டின் உள்ளார்ந்த கருவியாக தொழிற்படுகின்றது. மனதை கொண்டவர்களே மனிதனாக மிளிரமுடியும். இன்று மனிதர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் பலர்மனதைக் கொண்டவர்களா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

எமது ஐம்புலன்களினூடாக வெளி உலக செய்திகள் மனதை அடையும்போது அது எமது மனதில் ஏற்படுத்தும் மாற்றமே எம்மை சந்தோச மடையச் செய்கின்றது அல்லது துக்கத்தினை ஏற்படத்துகின்றது. ஆக,எமதுமனதினைநாம் எம் வசத்தில் வைத்திருப்போமானால் எமது செயற் பாட்டிலும் திருப்தி ஏற்படும். மனம் தனது நிலை யில் நரகத்தை சொர்க்கமாகவும், சொர்க்கத்தை நரகமாகவும் மாற்றும் ஆற்றல் வாய்ந்தது.

எமது மனதிலே உடன்பாடற்ற எதிர்மறைச் சிந்தனைகள் (Negative thoughts) வருவதை, உருவாவதை தடுத்து உடன்பாடான சிந்தனை கள் (Positive thoughts) அதாவதுநான் தைரிய மானவன், நான் அழகானவன், அன்பானவன், சகிப்புத்தன்மையுள்ளவன், பொறுமையானவன், மன்னிக்கும் பண்புள்ளவன் ... போன்ற நல்லெண்ணெங்களை எமது மனதில் தோன்றச் செய்தல் வேண்டும்.

ஒருவனில் உள்ள தெய்வீகத்தை வெளிக் கொணர்வதற்கு மனதைக் கட்டுப்படுத்துவது அவசியம். மனதில் தீயஎண்ணங்கள் எழா வண்ணம் தடுப்பதற்கு நல்ல அனுபவங்கள், நல்ல புத்தகங்கள் இவற்றுக்கு உறுதுணை யாகின்றன.

மனதை வசப்படுத்துவதற்கு ஆத்மீக சாதனைகள் உள்ளன. அதில்

1. **தூய்மை** (Purity)
   நாம் செய்யும் செயல்களில் தூய்மை,நாம் பேசும் பேச்சுக்களில் தூய்மை,நாம் எண் ணும் எண்ணங்களில் தூய்மை, உண்ணும் உணவில் தூய்மை,செய்யும் சேவையில் தூய்மை, நல்லவற்றைப் படித்தல், நல்லவற் றைக் காணல், குடும்பவாழ்வில் தூய்மை என எமது செயற்பாடுகள் அனைத்தும் தூய்மை யாக இருத்தல் வேண்டும்.
2. இறைவழிபாடு
   ஆலயதரிசனம், தெய்வீக நூல்களை வாசித் தல், பிரசங்கங்கள் கேட்டல், பஜனைகளில் ஈடு படல் என்பனவாகும்.
3. எல்லோருடனும் மென்மையாகவும் அன்பாக வும் பேசுதல்.
4. தன்னலமற்றசேவை - பிறர்க்கு உதவுவதில் மகிழ்தல்.
5. ஆசைக்கு வரம்பு வைத்தல் - மிதமிஞ்சிய ஆசையை அடக்குதல்
6. தியானம்
   தியானம் செய்வது எனும் போது இது முனிவர்களால் செய்யப்படும் ஒரு செயற்பாடு

என நாம் எண்ணுகின்றோம். நாம் சிறுவயது முதற் கொண்டு தியானம் செய்து வருதல் வேண்டும். எனவே சிறுவர்களுக்கு தியானம் செய்யப் பழக்குதல் வேண்டும். தியானம் என்பது எமது சுவாசத் தின் மீது நாமே கவனம் செலுத்துதல் ஆகும்.

தியானம் செய்வதற்கு ஆரவாரமற்ற காற் றோட்டமான இடத்தில் அமருதல் வேண்டும். மனதை ஒருமுகப்படுத்தி எமது சுவாசத்தினை கவனித்து எமது எண்ணங்களை ஒருமுகப்படுத்தி புருவ மத்தியில் மனதினை ஒருமுகப்படுத்தல் வேண்டும்.

"கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான் – என்
எண்ணில் கலந்தே இருக்கிறான்
கையறவிலாதுநடுகண் புருவபூட்டு கண்டுகளி"
என்று வள்ளலர் கூறுகின்றார்.

பதஞ்சலிமுனிவர் தியானத்தை, மனதைச் சிந்தனையற்றநிலையில் வைத்திருத்தல் என்கின் றார் (நிர்விஷய மனஹா). எமதுமனதில் எண் ணங்கள் அற்றநிலையினையே தியானம் என்கின்றோம். ஆரம்பத்தில் தியானம் செய்யும் போது குறைந்த நேரத்தில் தொடங்கிபின்னர் படிப் படியாக நேரத்தினை அதிகரிக்கலாம். ஒரு நாளில் 10 நிமிடம் தியானம் செய்வதே அபரிமிதமானது.

தியானம் செய்வதால் ஏற்படும் பயன்கள் பற்றிபல ஆராய்ச்சிகள் இன்று செய்யப்பட்டுள்ளன. தியானம் செய்யும்போது

1. ஞாபகசக்தி அதிகரிக்கின்றது.
2. மனச்சோர்வு அல்லது மனஅழுத்தம் குறை கின்றது.
3. மற்றவர்களிடம் குறைகாணும் தன்மை குறை கின்றது.
4. எதையும் இலகுவாக எடுக்கும் தன்மை அதிகரிக்கின்றது.
5. எதிர்க்கும் மனப்பாங்கு (Aggressive) குறை கின்றது.
6. தன்னம்பிக்கை அதிகரிக்கின்றது.
7. எமது தெய்வீகசக்தி (Self potency) அதிகரக் கின்றது.
8. ஆரோக்கியம் மேம்படுகின்றது.

எனவே இவ்வளவு நன்மைகளை கொடுக்கும் தியானதத்தினை நாம் கட்டாயமாக சிறுவயது முதற்கொண்டு செய்து வருதல் வேண்டும்.

மனதை ஒருமுகப்படுத்த, எமதுவசம் வைத் திருக்க, எடுக்கும் முயற்சிகள் யாவும் ஒருநபரின் ஆத்மீக நலத்தைப்பேண உதவுகின்றது. எல்லா சமயங்களும் மனதை ஒருமுகப்படுத்துவத னையே நோக்கமாக கொண்டிருக்கின்றன. எமது மனதினை சமநிலையில் வைத்திருத்தல் வேண்டும். "நன்றும் தீதும் பிறர்தரவாரா".

மேற்கூறிய ஆத்மீக சாதனைகளை நாம் மீண்டும் மீண்டும் செய்துவரும் போது எமது மன மானது எம்வசத்தில் எமது கட்டுப்பாட்டில் இருக்கும்.

நாம் இவ்வுலகில் வாழும் காலம் சொற்பம். அக் காலத்தில் மனத்திருப்தியுடன் கழிப்பதற்கு எமது மனதை நாம் வசப்படுத்துவது அவசியம்.

"திருப்தியுற்ற நிலையை சுகம் என்பர்"

# ஆலய தரிசனமும் ஆரோக்கிய வாழ்வும்

**எஸ்.நடராஜா**
ஓய்வுநிலை அதிகாரி,
இலங்கை வங்கி

இறைவன் உலகைப் படைக்கும் போது மனித குலம் சகல சௌபாக்கித்துடன் வாழ்வதற்கு அனைத்தும் தந்தே படைத்தார். எத்தனையோ தெரிவுகளுக்கு மத்தியில்தான் நாம் பிறக்கின்றோம். நமது தெரிவே வாழ்க்கையின் வெற்றி தோல்வி யையும் நிர்ணயிக்கின்றது. வாழ்ந்த சித்தர்களும் நெறிமுறைகளை தெரிவு செய்து நோயின்றி வாழப் பல வழிமுறைகளை போதித்து சென்றார் கள். ஆனால் ஆதியில் இருந்த உணவுப் பழக்க வழக்கமும் வாழ்க்கை அமைப்பும் தற்போது அடியோடு மாறிவிட்டதால் மருந்து உட்கொள்ளா மனிதரைக் காண்பது அரிதாகிவிட்டது. நோயைச் சுமந்து செல்லும் ஒரு கருவியாகவே இவ்வுடல் வாழ்ந்து மடிகின்றது.

நோய்க்கான காரணிகளாக உணவுப் பழக்க வழக்கங்கள் மட்டுமல்லாது கடந்த கால செயல்கள் மற்றும் நிகழ் காலத்தில் நம்மிடம் உள்ள எதிர் மறையான சிந்தனை, அணுகுமுறை, செயல்கள் போன்றவையும் அமைகின்றன.

தற்பொழுது பொதுவாக, மனிதர்கள் மற்றவர் களுடன் சேர்ந்து வாழ்வதை சிரமமாகக் கருதுப வர்களே அதிகம். அதேசமயம் இவர்களால் தனி யாகவும் வாழ முடிவதில்லை. அன்பு குறைவாக இருப்பதன் காரணமாக, பிறருடன் சேர்ந்து வாழ முடியாதவர்களாக இருக்கின்றார்கள். எல்லோரும் தன்னிடம் அன்பாயிருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் இந்த அன்பை, பிறரு க்கு இவர்களால் கொடுக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இதற்கு உண்மையான காரணம், ஆத்மாவிலிருந்து அன்பு சுரக்கவில்லை அதாவது காலியாக இருக்கிறது என்பது தான்.

இயல்பாக ஆத்மாவானது தூய்மை மற்றும் அமைதி என்னும் ஆற்றலை கொண்டுள்ளது. ஆகவேதான் ஆத்மாவின் சுய தர்மம் தூய்மை மற்றும் அமைதி என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பாதிப்பு உண்டாகும் போது, அன்பு மகிழ்ச்சி என்பவற்றை இழந்து விடுகின்றோம். ஆத்மாவில் அன்பு குடி கொண்டிருக்குமானால் நிச்சயமாக மற்றவர்களிடத்தில் அன்பாயிருப்போம், மகிழ்ச்சியோடு வாழ்வோம். அன்பு மற்றும் மகிழ்ச்சிக்கு ஊற்றாக இருப்பது தூய்மை - உணவுப் பழக்க வழக்கங்கள் உட்பட மற்றும் அமைதியாகும். அடுத்தவனை நேசியாது ஆத்மா வையும் தூய்மையாக வைத்திருக்காது வாழும் வாழ்க்கையால் ஆரோக்கியம் தூர விலகி நிற்கின்றது.

இதனால் பிறரை தவறான கண்ணோட்டத்து டன் பார்ப்பதும் சந்தேகிப்பதும். குற்றம் சுமத்திக் கொண்டு இருப்பதாலும் மனமானது ஆரோக்கிய த்தை இழக்கும் போது நோய் வருகிறது. இந்த மாதிரியான நோய் தொற்று நோய் போல் தன்னை யும் தான் சம்பந்தப்பட்ட அத்தனை பேரையும் வேதனைக்கு உள்ளாக்கும். இதன் காரணமாக தன்னைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாமல் பிறரைப் பற்றியே நினைத்து நினைத்து வருத்திக் கொள் கின்றோம். இவையெல்லாம் கவலையைத் தரும் நோய்க்கு காரணமாகவும் அமைந்து விடுகிறது.

அதுமட்டுமல்ல பொறாமை, பேராசை, சுயநலம் காரணமாக பலவிதமான சர்ச்சைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறோம். இப்படியே தொடருமானால் இதற்கு என்ன வழி. நோய் வாய்பட்டு, துன்பத்தை அனுபவிக்க வேண்டும். அச்சமயத்தை நல்ல மாற்றத்திற்காக பயன்படுத்திக் கொண்டால் நோய் சீக்கிரம் குணமாகலாம். சில சமயம் நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று நினைப்போம். நல்லதை உடனே செய் வதற்கான தைரியம் இருக்காது. எது தவிர்க்கப்பட வேண்டுமோ, அது தெரிந்தும் அதை நீக்கி விடும் தைரியம் இல்லாமலும் இருந்தால், என்ன நடக்கும். நல்லதைச் செய்யவும் முடியவில்லை கெட்டதைத் தவிர்க்கவும் முடியவில்லை. அப்படியானால் மனதில் அமைதி இருக்குமா? இவ்வாறு சிறு சிறு விஷயங்களிலெல்லாம் கூட எம்மை நாமே பலவீனப்படுத்திக் கொண்டு நோயை வரவேற்கின்றோம்.

மேலும், நாம் ஆற்றும் காரியம் நினைத்தபடி வெற்றியாக அமைந்து விட்டால் அகம்பாவம் உண்டாகிறது. இது ஒரு தீய குணம் அல்லது விகாரமாகும். மேலும் ஒருவர் ஒரு காரியத்தை செய்யவேண்டுமென்று விரும்புகின்றார். ஆனால் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. உடனே அவர் மனம் தளர்ந்து விடுகின்றார். நம்பிக்கையற்றவராகவும் ஆகிவிடுகின்றார். இதுவும் ஒரு விகாரமே. ஏனெனில் அவ நம்பிக்கை உண்டாக வழி ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார். இது பலவீனம் - மாறாக தனது அணுகுமுறையில் ஏதாவது குறை இருக்கின்றதா எனக் கவனித்து தைரியமாக முயற்சியயைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இதுதான் ஆரோக்கியமானதாகும்.

ஒரு வேளை எனது கோபம் பொறாமையின் காரணமாகவே எனக்கு இந்த வியாதி வந்தது என்பதை அறிய முடியுமானால் என்னை மாற்றிக் கொள்வதன் மூலமாக வியாதி குணமாகலாம். வியாதிக்குக் காரணம் இதுதான் என்பதைப் புரிந்துகொள்வதற்கு சிறிது காலமாகலாம். பொறுமை அவசியம். வியாதியால் அவதிப்படும் நேரத்தில் கவலையைத் தரும் எண்ணம் வராமல் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். மனநிலை சரியாக இல்லாத போது வியாதிக்கு அது காரணமாகிவிடும். உதாரணமாக ஏதாவது ஒன்றை நினைத்துக் கவலைபடுவது இரண்டாவது இப்படியாகி விட்டதே என்று அங்கலாப்பது மூன்றாவது. இதைப் பற்றி விடாமல் திரும்ப திரும்ப பேசிக் கொண்டேயிருப்பது இம் மூன்றும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டால் வியாதி கூட பெரிய வியாதியாகி விடக் கூடும்.

இம்மாதிரியான நிலையிலிருந்து, விடுபடுவதற்கு உத்தரவாதமுள்ள மருந்து நமது மனமே, அது தோற்றுவிக்கும் எண்ணங்களை நேரியதாக நெறிப்படுத்தினால் ஆரோக்கியம் உள்ளதாக மாற்றலாம்.

எமது கடந்த காலம் திரும்ப வராதாயினும் நிகழ் காலத்தை மற்றும் எதிர் காலத்தை நெறிப்படுத்தலாம். மனதின் மார்க்கமே வாழ்வின் நீரோட்மாகும். வியாதி வந்த போது அந்த வைத்தியரின் மருந்துதான் என்னைக் குணப்படுத்தும் என்று சொல்வதில்லையா? அதற்குக் காரணம் மனம். அந்நபரின் மனோ நிலை. அது தோற்றுவிக்கும் எண்ணங்கள்.

சரி, இப்போது மனம் உடலின் எப் பாகத்தில் இருக்கிறது. இதயத்திலா மூளையிலா. மனம் அமைதியை இழக்கும் போது எமது கைகளால் எனக்கு நிம்மதியில்லை என்று தலையில் அடித்துக் கொள்கிறோமே! அப்படியாயின் மனம் தலையில் உள்ளதா? அல்லது எனது இதயத்தின் அடித்தளத்தில் இருந்து வெளிவரும் வார்த்தை இது என்பார்களே வேதனையின் உச்சக் கட்டத்தில் நெஞ்சு வலிக்கிறது என்பார்களே அப்படியாயின் மனம் இதயத்தில் உள்ளதா? எனவே, மனம் உடலில் எங்குதான் உள்ளது.

பஞ்ச புதங்களின் முறையான கூட்டு இயக்கம் உடல். பஞ்ச பூதங்களுக்கு மூலம் பிரபஞ்ச காந்த சக்தி. இப்பிரபஞ்ச காந்த சக்தியில் பிரபஞ்ச தோற்றம் அனைத்தையும் ஆக்கி இயக்கி மாற்றி மறைக்கும் பேரறிவும் பேராற்றலும் மறைவாக

இருக்கிறது. சீவன்களின் உடலில் பஞ்ச பூதங்க ளும் கரைந்து சீவ காந்தம் உற்பத்தியாகிறது. சீவகாந்தம் உடல் கருவிகளை இயக்கும் போது அழுத்தும் ஒலி ஒளி சுவை மற்றும் வாசனையாக தன் மாற்றம் பெற்று செலவாகிக் கொண்டிருக்கி றது. இக் காந்தசக்தி புலன்கள் மூலம் செலவா வதை காந்த சக்திக்குள் உள்ள அறிவு உணரும் போது அதைத்தான் மன இயக்கம் என்கிறோம்.. அதாவது எண்ணங்களின் தொகுப்பே மன மாகும்.

எண்ணங்கள் மற்றும் முற்பிறவியில் ஏற்பட்ட கர்ம வினையும் சேர்ந்தே எமது செயல்கள் உருவாகின்றது. தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்றார்கள். எதை எண்ணங்களில் விதைக்கின்றோமோ அதுவே செயலாகின்றது. அதற்கே நற்பயனோ அல்லது தண்டனையோ நிறைவேற்றப்படுகின்றது.

எனவே மனித குலத்தை நெறிப்படுத்தி ஒழுக்க சீலர்களாக ஆரோக்கியமாக வாழ இந்து மதத்தில் கோவில்களின் அமைப்பு, வழிபாட்டு முறை, உபவாச அனுட்டானங்கள் என்பன உன்னதமாக வகுக்கப்பட்டுள்ளன. ஒரு இந்துவாக வாழ்ந்தால் ஆரோக்கிய பாதையில் நடந்து வெற்றிப் படிகளில் நிற்கலாம்.

அந்தவகையில், இந்துக் கோவில்களின் அமைப்பை சற்று நோக்குவோமாயின் மூலஸ் தானத்தில் வீற்றிருக்கும் மூலவரை நோக்கி பலிபீடத்தின் முன்னால் உள்ள பசு(ஆன்மா), இது கோவில்களுக்கு கோவில் வேறுபடலாம். எலி யாகவோ, மயிலாகவோ, பசுவாகவோ சித்தரிக்கப் பட்டிருந்தாலும் ஆலயத்தின முன்புற வாயிற் கதவை நோக்கி அமைக்காது மூலவரை நோக்கி அமைக்கப்பட்டிருப்பதன் விளக்கமே ஆன்மா (ஆன்மாவின் சக்தியாக இருக்கும் மனம்) இறைவனை நோக்கி எப்பொழுதும் அன்பு குடி கொண்டதாய் இருக்க வேண்டும் என்பதே. மாறாக வாயிற் கதவருகே காவல் காத்து நிற்கும் துவாரபாலகரிடம் எமது அகந்தையை ஒப்படைத்து அன்பே உருவான இறைவனிடம் அவனின் அன்பைப் பெறுவதற்காக உள்ளே நுழைந்து நாம் செய்யும் வழிபாட்டுமுறையும் ஆன்மாவையும் உடலையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. அன்பே சிவம் என்றார் கள். ஔவையாரும் கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்.

பசு (ஆன்மா) மூலவரை நோக்கி இருப்பது போன்று வேறு சிந்தையின்றி ஆன்மாவை (மனதை) ஒருநிலைப்படுத்துவதைக் குறித்து நிற்க உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு முதலில் ஆலயத்துள் சென்றதும் விநாயகரை வழிபடுவற்தாக எமது ஆத்மா வீற்றிருக்கும் நெற்றியில் மும்முறை குட்டி தோப்புக் கரணம் இடுவதன் மூலம் ஆத்மாவும் உடலும் உசார் நிலை அடைந்து ஆத்மாவை ஒருநிலைப்படுத்தி வழிபட வைக்கின்றது நமது இந்து மதம். ஆண் பெண் வழிபாட்டை முறையே அஷ்டாங்கம் பஞ் சாங்கம் என உடலை ஆரோக்கியமாக வைத்திரு க்க வழிகாட்டி மூலவருக்கு பஞ்ச ஆலார்தி தீபம் காட்டுகையில் இரு கைகளையும் சிரசின் மீது உயர்த்தி வழிபடும்போது கூட உடற் பயிற்சியின் நெறிப்படுத்தலாக அமைந்துள்ளது. ஒரு முறை வீதி வலம் வராது மும் முறை அல்லது ஐந்து ஏழு முறை என வகுத்து வைத்ததும் வெறுமனே நடை பயில அல்ல ஆரோக்கியமாய் வாழ்வதற்கே.

கோவிலுக்குள் நுழையும் முன் கோபுர தரிசனம் செய்கிறோம் அல்லவா,? கோபுர அமைப் பானது விஞ்ஞானத்தையும் கடந்து மெஞ்ஞான மாகி நம்மைக் காத்து நிற்கிறது. விஞ்ஞானம் வளர்ந்து வானுயரக் கட்டடங்கள் அமைத்த போதும் இடிதாங்கி இல்லாத கட்டிடங்கள் இல்லை. ஆனால் விஞ்ஞான வளர்ச்சிக்கு முன்பே கோபுரக் கலசங்களில் தானியம் போட்டு இடி மின்னலைத் தடுத்தார்கள். அத் தானியங்களைக் கூட ஒவ் வொரு கும்பாபிஷேகத்தின் போதும் மாற்றுவதற்

குக் கூட நாள் குறித்து வைத்தார்கள். கோபுரதின் சிற்பங்கள் கோபுரத்தை அச் சிற்பங்கள் தாங்கி நிற்பது போல் சித்தரிக்கப்பட்டாலும் உண்மை அதுவல்ல கோபுரச் சிற்பங்கள் போல் ஆணவம் கொண்டு நம்மால் தான் இந்த உலகம் இயங்குகிறது என எது வேண்டுமானாலும் உலகில் செய்யலாம் என்பதற்கு ஆப்பு வைத்து இறைவன் ஒருவனே உலகின் அச்சாணி என்று கோபுர அமைப்பு இடித்துக் கூறுகின்றது.

எந்த வித கருவிகள் துணையுமின்றி அந் நாட்களில் மேல் விதானக் கல்லை தூக்கி வைத்து அதன் மீதே கோபுரத்தை அமைத்தார்கள். மெல்லென வீசும் காற்று சூறாவழியாக மாறும் போது ஊடறுத்துச் செல்லத் தக்க விதத்தில் கோபுரத்தில் வாசல் ஐந்து அல்லது மூன்று என அமைத்து கோபுரத்தை கட்டினார்கள்.

அதுமட்டுமல்ல இலட்சக்கணக்கில் செலவு செய்து இரதம் (தேர்) செய்து வருடத்தில் ஒருநாள் மட்டும் இரதோற்சவ நாளில் ஊர் கூடி ஒரு நிலை நாடி தேர் ஓடி உலகம் உய்ய வருடம் ஒன்றில் நாள் குறித்து வைத்தார்கள். பக்கர்கள் ஒன்று சேராவிட்டால் இரதம் நகராது. அது போன்றே இந்த உலகம் உய்யும் தத்துவத்தை இந்து மதம் என்றோ கூறி விட்டது.

தெய்வத்தை கல்லினில் சிலை வடித்த போது கல்லினில் அந்தக் கல்லையும் ஆண் பெண் எனக் கண்டு பிடித்து அதற்குரிய கல்லையே தெரிவ செய்து சிலை வடித்தார்கள். கற்பக் கிரகத்தில் வீற்றிருப்பதும் கால் கடந்து செல்லும் கோபுரப் படிக்கட்டில் இருப்பதும் கல். இரண்டிற்கும் வித்தியாசம் இல்லை என்று கேலி செய்த ஆங்கிலேயனுக்கு தாயும் பெண் மனைவியும் பெண் திருமணபந்தம் எதற்கு என்று இடித்துரைத்த கதையும் இந்து மதம் கொண்டுள்ளது. மூலவர் சிலை வைக்கும் பொழுது அதன் கீழ் வைக்கப்படும் ஐம்பொன் தகடு கூட செய்யப்படும் அபிஷேக ஆராத்திகளால் வெளிப்படுத்தும் கதிர் வீச்சினை எந்த விஞ்ஞானத்தாலும் விளக்கம் கூறமுடியாது.

ஆலயத்தினுள்ளே சுத்தமாகவும் தோய்த்து உலர்ந்த ஆடையை அணிந்து செல்ல வேண்டும் என்பதையும் மனதளவில் ஆசௌசம் (துடக்கு) உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும் என்பதையும் கற்றுத் தருகின்றது. ஆக மொத்தத்தில் மனதையும் உடலையும் ஆரோக்கியமாக மற்றும் சுத்தமாக வைத்திருப்பதற்கு வழிபாட்டு முறையை தகுதி ஆக்கியுள்ளது.

வாழ்க்கை நெறிமுறைகளை கொண்டுள்ள நாம் அசைவ உணவு உட்கொள்ளக் கூடாதென்றும் வலியுறுத்துகின்றது. உடல் அமைப்பும் நமது பழக்க வழக்கமும் மனிதர்கள் மாமிசம் புசிக்கும் பிராணிகள் அல்ல என்பதையும் ஆலயம் கற்றுக் கொடுக்கின்றது. நமது உடல் அசைவ உணவு உட்கொள்வதற்கு ஏற்றதில்லையே. பற்கள், குடல் அமைப்பு ஆகியனவும் அதற்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளது. மாமிசம் புசிக்கும் பிராணிகளைவிட பருத்த உடல் உள்ள யானை அதிக வருடம் உயிர் வாழ்கின்றது. அதனால் போலும் ஆலய சடங்குகளுக்கு மாமிசம் புசிக்கா மிருகங்களில் அறிவுள்ள குதிரையையும் அதிக வருடம் உயிர் வாழும் யானையையும் அழைத்தார்கள்.

ஓர் இந்துவாக வாழ்ந்தால் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் தன்னுடன் தான் எவ்வாறு உறவு வைத்துக் கொள்வது, கடவுளுடன் எவ்வாறு உறவு வைத்துக் கொள்வது, மற்றவர்களோடு, உறவினர்களோடு, இயற்கையோடு எவ்வாறு உறவு வைத்துக் கொள்வது என்பதைக் கற்றுத் தருகிறது.

காவடி எடுக்கிறார்கள, தீ மிதிக்கிறார்கள், பாற்சொம்பு, கற்பூரச் சட்டி எடுப்பதும் ஆலயத்தினுள்ளே அமைந்திருக்கும் நவக்கிரக நாயகர்களை சித்தரித்திருக்கும் விக்கிரகங்களை நாம் சுற்றி வழிபடுவதும் அபிஷேகம் செய்து விக்கிரகங்களைக் குழிரச் செய்வது, விபூதி அணிந்து பொட்டு

(ஆத்மா இருக்கும் இடத்தில்) வைத்து ஆத்மாவைக் மங்களகரமாக இயங்க வைப்பது போன்ற சடங்கு களை செய்வதெல்லாம் மனதின் மாற்றத்தின் ஏற்றத்திற்காகவே.

பயத்தைப் போக்கினால் மனம் துணிச்சலுடன் வெற்றி அடையும் என்பதற்கு இந்து மதம் கற்றுத் தரும் வழிமுறைகள் ஆகும்.

வாழ்க்கை என்பது பாம்பும் ஏணியும் கதை போன்றது. மனதளவில் நன்றாய் நடந்தால் ஏணிப் படிகளில் உயர்ந்து செல்லலாம் தீயதை நினைத் தால் பாம்பின் தலையில் கால் பாதித்தது போன்று வாழ்வின் கிழ் மட்டத்துக்குள் வந்து விழலாம். பாம்பு தன் அழுக்கான செட்டையைக் கழற்றுவது போன்று நம் துன்பத்தை அகற்ற ஆலயமே ஓர் இடமாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று இல்லையா?.

எனவே ஓர் இந்துவாக வாழ்வோம். உடலும் மனமும் ஆரோக்கியம் அடைய ஆலய வழி பாட்டை அனுதினம் மேற்கொள்வோம்.

அதுமட்டுமில்லை , பக்கிப் பரவசத்தின் உச்சத் தில் ஞானப் பாதையைத் தெரிந்தெடுத்து இறைவ னோடு ஐக்கியமாக. ஞான வழியையும் தியான முறைமையையும் இந்து மதம் கற்றுத் தருகின் றது. இறைவா! பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்டேல் உனை என்றும் மறவாமை (ஆத்மாவின் சக்தியான மனதின் செயற்பாடு) வேண்டும் அந்தவகையில் ஆரோக்கியமாய் வாழ்ந்து ஆரோக்கியமாய் இறையடி சேர்வோம். நோயோடு வாழ்ந்து நோயை சுமந்து ஆத்மாவை செல்ல விடாது இன்றைய ஒத்திகையே நாளைய மேடையேற்றமாகையால் நன்றாய் அமைய வித்திடுவோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமாய் வாழ்வோம்.

## கீர்த்தனை

**பல்லவி**

முருகனே முத்துக் குமரனே நல்லைக் கந்தனே!
வருவாய் மயில்மீது நல்வாழ்வு தரவே கந்தா
- முருகனே

**அனுபல்லவி**

உருகாத மனமும் உருகுமே உன்பெயர் சொன்னால்
பெருகாத கண்ணீரும் பெருகுமே முருகா என்றிட்டாலே!
-முருகனே

**சரணம்**

திருமுருகா மால்மருகா தீராத வினை தீர்க்கும்
ஒரு முருகா உன் நாமம் உச்சரித்து நிற்கின்றோம்
பெருமனது பண்ணிநீ திருவருள் தரவேண்டும்
கருமுகில் வண்ணன் கண்ணனின் மருகனே சரணம்!

ஒருதரம் முருகா என்றால் ஓடியே வந்திடுவாய்
தருணமிது கந்தா தமிழ்க் கடவுளே குமரா
மரண பயம் நீக்கி மங்களா வாழ்வருள்வாய்
சரணம் என்றே பணிந்தோம் திருவருள்புரிவாய் கந்தா!
- முருகனே

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# சைவநெறி போதிக்கும் அன்போடு இயைந்த வாழ்வியல்

**செல்வி. சுரேகா பரமானந்தம்**
முகாமைத்துவ உதவியாளர்,
யாழ் மாநகரசபை.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே" என்றும், "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்றும் பாடிய தாயுமான சுவாமி களின் பாடலடிகளுக்கிணங்க அனைத்து மனித உயிர்களையும் நேசித்து அன்பு செலுத்தி வாழ் வதே உண்மையான சைவநெறி சார்ந்த வாழ் வியல். "ஒருவர்மீது அன்பு செலுத்துவதற்கு ஒரு சதம் கூடச் செலவுசெய்ய வேண்டியதில்லை" என்கிறார் ஓர் அறிஞர். ஆம் உண்மைதான். அன்பு என்பது இன்ப ஊற்று, அது அள்ள அள்ள வற்றாத ஜீவநதி; கொடுக்கக் கொடுக்கக் குறையாத பெருஞ்செல்வம். இதனால்தான் புரட்சிக்கவிஞன் பாரதியும் "அன்பென்று கொட்டு முரசே" என்றும் "உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும்" என்றும் பாடியுள்ளார்.

உலகிலே பிறந்த அனைத்து மனித உயிர்க ளையும் இன, மத, மொழி, சமூக எல்லைகளைத் தாண்டி மனிதநேயம் என்னும் மாண்புமிகு தளத்தில் ஒன்றிணைப்பது அன்பு என்னும் மகா சக்தியே. அன்பு என்னும் மந்திர சக்தி மண்ணிலே மலராவிட்டால் உலகம் மலர்ச்சியடைய முடியாது. மகிழ்வான வாழ்வை எண்ணவும் முடியாது. மாறாக ஒற்றுமை சீர்குலைந்து சண்டை களும், சச்சரவுகளும், வாக்குவாதங்களும் மலிந்து மனித குலம் மடிந்து போக வழி சமைக் கும். ஆனால் அன்பு எங்கெங்கெல்லாம் இயக்கு சக்தியாகவும், இயக்க சக்தியாகவும் தொழிற்படு கின்றதோ அங்கங்கெல்லாம் அனைவரும் அடைய வேண்டும். அன்பினால் ஆகாதது எதுவும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே எமது சைவநெறியும் அன்புடன் இயைந்த வாழ்க்கை முறையைப் போதிக்கின் றது. அன்பு வாழ்க்கையை அடையாளம் காட்டு கின்றது.

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்" என்றும், "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்றும் அன்பைக் கடவுளாகக் காட்டும் சிறப்பு நமது சைவநெறிக்கே உரியதாகும். சைவநெறி யின் உயிர்நாடியே அன்புதான். கடவுள் மீது அன்பு கொள்ளும் ஒருவன் நிச்சயமாக உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் நேசிப்பான். இதனையே சைவசமயமும் போதிக்க முயல்கி றது. இதனால்தான் "மனிதனை நடமாடும் கோயில்" என்றும் "இயங்கும் உயிரனைத்தும் ஈசன் கோயிலாகும்" என்றும் "எவ்வுயிரும் ஈசன் சந்நிதியாகும்" என்றும் மனிதனை கோவிலுக்கு ஒப்பாகச் சொல்கிறது சைவநெறி. அதே சைவநெறி மனிதனிடத்து அன்பு காட்டாதவர்கள் இறைவனி டம் அன்புடையவர் போல் செயற்படுவதையும், கோவிலுக்காக பல இலட்சம் செலவு செய்வதனை யும் வேடிக்கையான விடயம் எனச்சாடுகின்றது. எனவே சைவசமயிகளாகிய நாம் ஒவ்வொரு வரும் "அன்பே கடவுள்" என்ற உயர்ந்த தத்துவ த்தை உணர்ந்து அதன்படி வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தம்நோய் போல் போற்றாக்கடை" என்கிறார்

பொய்யாமொழிப் புலவராகிய வள்ளுவப் பெருந்தகை. அதாவது பிறரது துன்பத்தைத் தனது துன்பமாகக் காண்கின்ற நற்பண்பு நம்மிடம் வளர வேண்டும். அப்போது தான் அன்புநெறியைக் காட்டும் சைவசமயத்தின் குழந்தைகளாக நாம் இருக்கமுடியும். "தன்னுயிர் போல் மன்னுயிரையும் நேசி" என்றும் "பிற உயிர்களிடத்து அன்பு செய்" என்றும் வலியுறுத்தும் சைவநெறியை நாம் பின்பற்ற வேண்டும். அதற்குத் தக்கவாறு நடைமுறை வாழ்வில் ஒழுக வேண்டும். சமயக்கதைகளும், புராணக்கதைகளும் அன்பு பற்றிக் கூறும் மகிமைதனைச் சீர்தூக்கிப் பார்த்தால் அதன் உயர்வு நமக்குப் புலனாகும். தேர்ச்சில்லு மோதியதால் கன்றை இழந்த தாய்ப்பசு ஆராய்ச்சி மணி அடித்ததைக்கண்டு அல்லலுற்றுத் தன் ஒரே மகனையே தேர்ச்சில்லுக்குப் பலியாக்கிய மனுநீதி கண்ட சோழனை நினைத்துப்பாருங்கள். தாய்ப் பசுவின் துன்பத்திற்குக் காரணமான மகனை இழந்து பசுவின் துயரைத் தானும் அனுபவிக்கவில்லையா? தன் காலடியில் வந்து வீழ்ந்த புறாவைப் பருந்து ஒன்றிடம் இருந்து காப்பாற்றுவதற்காகத் தன் தசைகளையே நிறுத்தி வழங்கிய சிபிச்சக்கரவர்த்தியை எண்ணிப்பாருங்கள். இவையெல்லாம் அன்பின் பெருமைதனைப் படம் பிடித்துக்காட்டும் செயல்கள் அல்லவா? ஆகவே நாமும் அதனைக் கடைப்பிடித்து சைவநெறி காட்டும் அன்பு வாழ்க்கைக்குள் பிரவேசிக்க முயல வேண்டும்.

ஆயினும் இன்றைய நவீனம் தலை விரித்தாடுகின்ற நவநாகரிக உலகிலே வாழும் மனிதர்களாகிய நாம் அன்பு வழி நடக்கின்றோமா? என்பது கேள்விக்குறியே. சுயநலம் மிக்கவர்களையும் "நாம், நமது குடும்பம், நமது சுற்றம்" என்ற குறுகிய மனப்பாங்குள்ளவர்களையும், தமது முன்னேற்றம் ஒன்றையே சதா சிந்திப்பவர்களையுமே நாம் காண்கின்றோம். பிற உயிர்கள் மீதோ அல்லது பிற மனிதர்கள் மீதோ அன்பு செலுத்துவதையும், அவர்களை அன்பான கண்ணோட்டத்தில் நோக்குவதையும் கண்டு கொள்ள முடிவதில்லை. "கூட்டுறவே நாட்டுயர்வு. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு", "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற அன்புடன் இயைந்த மகுடவாசகங்களை மறந்து ஏகபோக வாழ்வில் இணையும் இரக்க மற்ற மனிதர்களே ஏராளம் ஏராளம். ஏழைக ளைக் கண்டால் ஏறெடுத்தும் பார்க்காமல் செல்வதும், விபத்து ஒன்றைக் கண்டால் விழுந்து கிடந்தவனைத் தூக்கிவிடாமல் மறைந்து விடுவதும், பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை முதியோர் இல்லங்களிலும், வீதியோர மடங்களிலும் விடுவதும், பிறரது துன்பங்களுக்குக் காரணமாவதும், பிறரைத் துன்புறுத்தி வதைப்பதும், பகைமையை வளர்ப்பதும், தீய சொற்களால் திட்டுவதும் என எண்ணற்றவன் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இந்த நிலைமாற வேண்டும். அன்புமிக்க ஆரோக்கியமான ஓர் சமுதாயம் உருவாக வேண்டுமென்றால் சைவ நெறி சார்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

பொய், கொலை, களவு, கள், காமம், மாமிசம் என்ற தீயனவற்றை விலக்கி அன்பு நெறியில் நடக்கவேண்டும் என்று வலியுறுத்தும் நமது சைவசமயம் இன்று சாபக்கேடான வாழ்வியலையே கண்டுகொள்ளும் பரிதாப நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படைக் காரணம் எங்கே உள்ளது என்பதை ஆராய்ந்து பார்த்தால் அன்பு சிதைவடைந்து அறியாமையும் அற்ப ஆசைகளும் தலைதூக்குவதே காரணமாகின்றது. இதனைவிட நமது உடலை வளர்த்தெடுப்பதற்காய் பிற உயிர்களை வதைத்து உணவாக்கிக் கொள்ளும் இழிநிலை மாற்றப்பட வேண்டும். அதேவேளை கோயில்கள் திருவிழாக்களில் சிலர் வேள்வி, பலியிடல் என்ற போர்வையில் உயிர்க் கொலை நிகழ்த்தும் மோசமான நிலை ஒழிக்கப்பட வேண்டும். கருணையே வடிவான கடவுள் இதனை ஏற்றுக் கொள்வாரா என்று ஆத்மார்த்தமாக அறிவுநிலை கொண்டு யோசித்துப்பார்த்தால் நமது மடமைத் தனம் நமக்கே புரியும். எமது

உயிர்போல, எமது உடல் போல, எமது துன்பம் போல பிறவற்றையும் நோக்கும் ஞானநிலை வேண்டுமாயின் நமது சைவநெறியை வாழ்வின் ஆதாரமாகக் கொண்டு நடக்க முயலவேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இன, மத, மொழி, சமூக வேறுபாடுகளும், ஏழை - பணக் காரன், கற்றவன் - பாமரன், உயர்வு - தாழ்வு என்ற அந்தஸ்து வேறுபாடுகளும் இன்று மனித குலத்தைப் பிளவுபடுத்தும் கூரிய ஆயுதங்களாகத் திகழ்கின்றன. இது அன்பு சீர்குலையவும், வேற்றுமைகள் தலைதூக்கவும் காரணமாவ துடன் வீதிக்கு வீதி, நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம், நபருக்கு நபர் என எங்கெங்கு பார்ப்பினும் சண்டைகளும் அடாவடித் தனங்களும் அடக்கு முறைகளும் உரிமை மறுப்புக்களும், எல்லை மீறல்களும் முரண்பாடுகளும் தாண்டவமாட வழிகோலுகின்றன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என எதைப் புரட்டிப்பார்த் தாலும் கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் பலாத்காரம், வெட்டுக்கொத்து என அகராதியில் இருந்தே அகழ்ந்து எடுக்கவேண்டிய வன் தொடர்களே பரவலாகக் கிடப்பதைக் காண்கின் றோம் இந்நிலை தொடர்வதை நிறுத்த வேண்டும். இனியொரு பொழுதும் இவை தலைகாட்டக் கூடாது என்றால் அன்பெனும் சக்தி அனைத்து உள்ளங்களிலும் அலைமோத வேண்டும். இல்லையெனில் இவை புறக்குடத்து நீரே!

"அன்பின் வழியது உயர்நிலை - அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு" என்கிறது திருக் குறள். உண்மையில் அன்புநெறியில் ஒழுகுபவர் கள் அதன் பயனாக நல்லனவற்றையே நாளும் செய்து நல்வாழ்வு வாழ்வார். அத்தகையவர்கள் இருக்கும் இடங்களில் வன்முறைக்கோ, அநீதி அநியாயங்களுக்கோ இடமிருக்காது. இவர்களிடம் விட்டுக்கொடுக்கும் மனோபாவம், விருந்தோம்பல் நல்லுறவைப் பேணுதல், பொறுமை, சகிப்புத் தன்மை என சங்கிலித்தொடராக பல நற்பண்பு கள் தவழும். மாறாக அன்பற்ற அரக்கத்தனம் கொண்டவர்கள் அழுக்காறு, அவா, வெகுளி, புறங்கூறல், பொய் சொல்லுதல், பொறாமை, போன்ற பல தீய பண்புகளின் இருப்பிடமாக மிளிர்வர். உண்மையில் உலகத்திலே தோன்றிய அனைத்து மதங்களும் அடிப்படையில் அன்பையே போதிப்பன. ஆனால் அம்மதங் களுக்கிடையிலேயே பூசல்களும், விரிசல்களும் உண்டாகும் இழிகோலநிலை நடைமுறையில் உண்டு என்பது கண்கூடு. எனவே தான் மதங்கள் அன்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி உலகம் தழுவிய மனிதநேயத்திற்கு வழிகாட்டும் திசைகாட்டிகளாகத் திகழ்கின்றன. அதற்கு நம் சைவசமய மும் விதிவிலக்கல்ல.

இவை ஒருபுறம் இருக்க "எந்தவொரு தாக்கத் திற்கும் சமனானதும், எதிரானதுமான மறு தாக்கம் உண்டு" என்ற நியூட்டனின் கொள்கைக் கிணங்க உலகை இயக்கும் அன்புக்கும் ஒரு மறுபக்கம் உண்டு என்பதை மறுக்க இயலாது. அதாவது மனிதனை மகாத்மாவாக்கும் ஆற்றல் எவ்வாறு அன்பிற்கு உண்டோ அதே போல் மனிதனை மிருகமாக்கும் சக்தியும் அதே அன்பிற்கு உண்டு. இதனால் தான் வள்ளுவப் பெருந்தகையும் "அறத்திற்கே அன்புசார் என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை" என அழகாக எடுத்துரைக்கின்றார். ஏனென்றால் அன்பு அளவுக்கதிகமாக மாறும் போது அன்பு ஓர் ஆயுதமாகவும் தொழிற்பட வாய்ப்பாகின்றது. அறத்தைப் போதிக்கின்ற அன்புதான் சில இடங் களில் உயிர்களைக் கொல்லவும், மிரட்டவும், பயமுறுத்தவும் பயன்படுகின்றது. இன்றைய திரைப்படங்களானாலும் சரி, யதார்த்த வாழ்க்கை யானாலும் சரி, இத்தகைய பரிதாப நிலை ஒன்று அலைமோதுவதைப் பார்க்கின்றோம். அதீத அன்பும் ஒரு வகையில் ஆபத்தே. ஏனெனில் அன்பு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்தது. அதற்கு தக்கது எது? தகாதது எது? என சித்தித்துச் செயல்படும் அறிவு இல்லை என்பதே பொதுவான வாதம். எனவே தான் "அன்பை குறுகிய எல்லைக் குள் பேணாது எல்லையற்ற இந்தப் பிரபஞ்சம்

தழுவியதாக மாற்றும் போது அன்பு மாபெரும் வலிமையையும், வல்லமையையும் தனதாக்கிக் கொள்ளும்" என சைவநெறி போதிக்கின்றது.

இந்நிலையில் அரிதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்ற நாம் மாக்களிடமிருந்து வேறுபட்டுப் பண்பான வாழ்வினை மேற்கொள்ள அன்பே அடிநாதமாகின்றது என்பதையும் அதனைச் சைவசெறி நமக்குப் புகட்டுகின்றது என்பதையும் மறந்துபோகக்கூடாது. அத்துடன் அன்பின் சித்தத் தைப் புரியாதவர்களாய் ஆலயமிருக்குமிடம் எது? ஆண்டவன் இருக்குமிடம் எது? என்று அலைந் துலைவதைத் தவிர்த்து உயிர்களிடத்து அன்பு வழி நடப்பதன் பொருட்டு இறைவனை அடைவோம். கருணை வடிவான இறைவன் குழந்தை வடிவிலும், ஏழை வடிவிலும் விலங்கு வடிவிலும், அடியவர் வடிவிலும் நம்மை ஆட்கொள்ளலாம். எனவே நாம் கடவுள் மீது கொண்ட பக்தியை அன்பாக மாற்றி அனைத்து உயிர்களையும் நேசிக்கப்பழகுவோம். எல்லாவற்றிற்கும் மேலாக "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடி நின்றேன்" என்ற இராமலிங்க அடிகளாரின் தாரக மந்திரத்தை மனதிற் பதித்து எல்லாவற்றையும் அன்பினால் நோக்கி அன்பினால் ஆராய்ந்து அதன்படி நடப்போம்.

"அன்பே சிவம்"

## நல்லூர்க் கந்தன் நற்றமிழ்ப் பாமாலை

நல்லூர்ப் பதியுறையும் ஞானவடி வேலவனே!
எல்லோரும் ஒருமனதாய் உன்திருத்தாள் பணிந்தோம்
பல்லோரும் பரவிநிற்கும் பாலசுப்ரமண்யனே! குகனே!
சொல்லாலே புனைமாலை சூட்டினேன் சரணம் ஐயா!

முருகனே! முத்தமிழ்க் காவலனே! குருபரனே! சண்முகனே!
திருமாலின் மருகனே! தெய்வயானை மகிழ் குமரனே!
ஒருதரம் உன்நாமம் உச்சரித்தால் ஓடி வருவாய்!
உருகிநாம் நிற்கின்றோம் சரவணனே! சரணம் ஐயா!!

நல்லையிலே கோயில் கொண்ட நல்ஞான பண்டிதனே!
தொல்லையெலாம் தீர்த்தே மங்கள நல்வாழ்வருள்வாய்!
கல்லையொத்த மனமது கசிந்துருகக் காட்சி தந்து
இல்லையெனாது வரமருள்வாய் ஈசன் மகனே! சரணம் ஐயா!!

சரவணப் பொய்கையிலுதித்த சண்முகனே! சரவணனே!
வரமது தந்தே நாம் வாழ வழிகாட்டிடும் முருகா!
கரமது குவித்தே நின் திருவடி மலர்த்தாள் பணிந்தோம்!
பரமசிவன் திருமகனே! சரவணபவனே! சரணம் ஐயா!!

**செந்தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன்**

# ஆடினார் ஆனந்த நடனம்

**சி. கிருஷ்ணமூர்த்தி**
அமைப்பாளர்,
அகில இலங்கைத் திருமுறை மன்றம்,
பதிவகக் காப்பாளர், யாழ் மாநகரசபை

உலகில் நாம் இதுவரை அனுபவித்த இன்பங்கள் எல்லாமே தினையளவுதான். எப்போதும் நிலைத்த இன்பத்தை - எதனாலும் மாறாத பேரின்பத்தை - இறைவன் நமக்குத் தந்திருக்கின்றான். இதனை நன்றாக உண்டு சுவைத்து சுவை கண்டவர் மாணிக்கவாசக சுவாமிகள்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினுள் தேனுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"

என்றார். அந்த இன்பத்தை நாமும் பெற, இறைவனும் ஆனந்த தாண்டவத்தை, அதன் அற்புதத்தை சிறப்பை நன்றுடையான் அவனை சென்றடைந்தால் நாம் பெறும் இன்பங்களுக்கு ஈடு இணைதானுண்டோ!

மகேஸ்வரனுடைய வடிவங்கள் இருபத்தைந்து வடிவங்களாகும். இதிலே நடராஜமூர்த்தி பிரணவம் திருவாசியாகவும் பஞ்சாட்சரம் திருவுருவாகவும் பராசக்தி சிற்சபையாகவும் கொண்டு மருகத்தால் சிருஷ்டியும், அபயஹஸ்தத்தால் திதியும் எரியால் சங்காரமும், ஊன்றிய திருவடியால் திரேசமும் ஸ்ரீகுஞ்சித பாதத்தால் அனுக்கிரகமும் ஆகிய பஞ்சகிருத்திய தாண்டவஞ் செய்யும் மூர்த்தியாம்.

சிவபெருமானின் கூத்து அறியப்படாததோர் கூத்து". இக்கூத்தை அறியும் வகையில் நடராஜ மூர்த்தி அமைந்துள்ளது.

சிவபெருமானுக்குத் திருமேனி சிவசக்தியே ஆகும். அச்சிவனின் அருளாற்றல் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அச்சிவபெருமான், தான் செய்யும் திருவருள் தொழில்களை எல்லாம் சிவ சக்தியின் வாயிலாகவே செய்தருள்கின்றார்.

அச்சிவபெருமானும் திருவருளும் நுண்ணறிவு அம்பலமாம் திருச்சிற்றம்பலத்திலே விளங்கி அருளுகின்றார். அதனால் எங்கும் சிதம்பரம் என்றனர். அவன் செய்யும் திருக்கூத்தும் எங்கும் நிறைந்ததே.

திருவருள் எப்பொழுதும் ஒப்பிலா இன்ப வடிவமாகவே இருக்கும். அத்திருவருளின் மேல் திருவடிச் செந்தேன் முந்திப்பொழியும். அங்கு சிவபெருமான் இன்பத்திருக்கூத்து - ஆனந்த தாண்டவம் இயற்றி அருளுகின்றார்.

சிவபெருமான் ஆடலுக்கு வேண்டிய பதினொரு உறுப்புகளும் குறைவில்லாமல் நடித்திருக்கின்றார். திருவடியிலே மறைச்சிலம்பு, திருக்கையில் உடுக்கையும் என்றும் பொன்றாது நின்று "ஓம்" என்னும் நுண்ணிய ஒலியினை நன்றாக ஒலிக்கும். "மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய்" இயற்கை உண்மை அறிவுடன் இன்ப வடிவத்தே நின்று திருக்கூத்தருள்கின்றான். அத்திருக்கூத்து புறமாகிய அண்டத்துள்ளும் அகமாகிய உடம்பினுள்ளும் அவனருளால் ஓவாது இயற்றப்படுகின்றது.

"ஆடல் பதினொரு றுப்பும் அடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகை கொள்துடி
நீடிய நாதம் பராப்பர நேயத்தே
ஆடிய நந்தி புறமகத் தானன்றே"

என்பது திருமந்திரச் சிறப்பு

இக்கூத்தினை பரதநாட்டியம், குச்சிப்பிடி கதகளி போன்ற எவ்வகை ஆட்டமோ - எக்கூத்தினை எவர் ஆடினும் அவை அத்தனையும் சிவபெருமான் ஆடிய திருக்கூத்திலிருந்தே தோன்றியவையாகும்.

கலைக்கும் கடவுளுக்கும் உயிருக்கும் உற்ற தொடர்பினை நடராஜரின் திருவுருவத்தின் மூலம் நாம் நன்கு தெளிய முடியும். இறைவனுடைய ஆடல்களில் மிகவும் சிறப்புடையது ஆனந்த தாண்டவம். ஐந்து தொழில்களையும் ஒருசேர இயற்றுகின்ற ஆடல் இது என்பதை

"தோற்றத் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு"

என்பது பெரியோர்களின் உண்மை விளக்கம்.

நாம் செய்யும் தீமைகளை விலக்கி நல்லருள் பாலிக்க ஞானத்தை நமக்கு ஊட்டி நம் மனம் அடங்க தென்முகக் கடவுளாக தக்ஷிணாமூர்த்தமாக திருவுருவம் தாங்கி அருள்பாலித்து பேரின்ப நிலையை எய்துவிக்கின்ற பெருங்களிப்பில் இறைவன் ஆடுகின்ற தாண்டவம் ஆனந்தத் தாண்டவமாகும்.

இத்தாண்டவமே உலகம் படைக்கவும் காக்கவும் பின்னர் ஒடுக்கவும், வினைகளை மறைத்தல் தொழிலால் நுகர்க்கவும் பின் அருளவும் பயன்படுகின்றது என்பதை திருமூலர்

"அரன்துடி தோற்றம் அமைப்பில் திதியாம்
அருண் அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே"

என அருளினார்.

இத்தாண்டவ நிலை சடைமுடியாகவும் விரிந்த பரந்த சடையாகவும் இருப்பதுண்டு. தாண்டவப் பெருமானின் திருக்காது ஓங்காரத்தைக் குறிக்கும். இறைவன் தமது கையிலுள்ள துடியை ஒலித்து உண்டாக்கும் ஓசை என்னும் நாதம் ஓங்கார வடிவை உடையது. அந்த ஓங்காரத்தைதான் இறைவனது திருச்செவி குறிக்கின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் "தோடுடைய செவியன்" என்று திருச்செவியை முதன் முதலில் எடுத்தோதியதும் ஓங்காரத்தையே தான் எனக் கூறுவதும் உண்டு.

தாமரை வடிவான பதும பீடம் அது எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாக அமைந்திருக்குமாயினும் தாண்டவ மூர்த்திக்கு அமைந்தது; மிகச் சிறப்பும் கருத்துப் பொழிவும் கொண்டதாகும். ஆதலால் பதுமபீடத்தில் உறையும் இறைவன் இருதயத்தாமரையில் இருப்பவராக எண்ணி வழிபடத்தக்கவராகிறார். இவ்வண்ணமே தாண்டவ மூர்த்திக்குத் திருவாசியும்.

திருவாசி - பிரணவம்

நடராஜர் - ஸ்ரீ பஞ்சாட்சரம்

பிரணவம் இல்லாமல் ஸ்ரீபஞ்சாக்கரத்தை ஜெபித்தல் கூடாது. திருவாசி இல்லாமல் நடராஜ மூர்த்தி அமைக்கக்கூடாது.

ஆனந்த தாண்டவ மூர்த்தியின் முகத்தில் அபிசேகம் செய்தால் அந்நீர் மூக்கு நுனி வழியாக வழிந்து, அது கரிகரத்தின் விரல்நுனி வழியாகத் தூக்கிய திருவடியின் விரல் நுனியில் வழிந்து கீழே சொட்டுமேயானால் அவ்வுருவமே சிறந்ததென சிற்பரத்தனாகரம் விரித்துரைக்கின்றது.

இத்தகைய ஆனந்த தாண்டவம் பல கோயில்களில் உண்டு என்றாலும் திருத்தில்லை சிதம்பரப்பதியில் உள்ள திருவுருவம் "கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாக" அமைந்துள்ளது. பூசனைப் பொருளாக உள்ளதால் பல்லோரும் பக்கத்தில் சென்று பார்த்தல் அரிது. அவ்வுருவில் உள்ள "குமிண் சிரிப்பு" வேறெங்கும் காணொனா

தது. இவை கருதியே.

"குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயிற்குமி ண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே"

என்று அப்பர் சுவாமிகள் தம் முதிர்ந்து பழுத்த அனுபவத்தின் அருளை உரைக்கின்றார்.

சுவாமி தரிசனத்திற்காக சிதம்பரம் சென்றால் அங்கு விளங்கும் ஆனந்த தாண்டவ மூர்த்தியின் அபயகரம்; மலமகற்றி, மாசு நீக்கி, பேரின்பம் காண "என்னிடம் எப்போது வந்தாய்?" என்ற பரத குறிப்பையும், "நலந்தானே"? என்று வினவுகின்ற அபிநய - அதிவிநயக் குறிப்பையும் நமக்குணர்த்து கின்றது.

"ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலர்
ஆனந்த மாநடமாரும் அறிகிலர்
ஆனந்த மாநடமாரும் அறிந்தபின்
தானந்தம் அற்றிடம் ஆனந்த மாகுமே".

(திருமூலர் திருமந்திரம்)

# சிவசாமி மைந்தா

இராகம் : ஹம்சானந்தி    தாளம் : ஆதி

**பல்லவி**

நல்லைநகர் கந்தா ஞாலம் போற்றும் சற்குரு நாதா வாவா

(நல்லை)

**அனுபல்லவி**

எல்லையிலாப் பரம் சோதியே எழில்மயில் வாகனனே எமைக்காவாய்
அல்லல் செய்த அவுணரை அடக்கித் தேவர்துயர் தீர்த்த வீரா

(நல்லை)

**சரணம்**

தில்லைக் கூத்தன் திருக்குமரா சிவசாமியின் செல்வக்குமரா
நல்லையில் வலம்வரும் அன்பர் துயர்துடைப்பாயே
தொல்லை வினையகற்றும் தெய்வமே தும்பிக்கையான் தம்பியே
அல்லல் அறுத்தெமக்க ருள்வாய் வள்ளி தெய்வானை மணவாளா

(நல்லை)

**பேராசிரியர் வி.சிவசாமி**

# அறுகும் வன்னியும்

"தமிழமுதக் குருமணி"
சிவஸ்ரீ க. ஜெயராமக்குருக்கள்
(வளலாய் - அச்சுவேலி)

அறுகம்புல் பூமியில் இருந்து கிளம்பும்போது நேராக தலைநிமிர்ந்து கிளம்பி, பின்பு கொடியாகப் பரவி, ஒவ்வொரு கணுவுக்கும் வேரை ஊன்றி, அதில் குருத்தும் கிளம்பி பரவிக்கொண்டே போகும். அப்படி நன்றாக வளர்ந்ததைச் சீக்கிரத்தில் அழித்துவிட முடியாது. அது சிறந்த மூலிகையாகவும் இருக்கிறது. அத்துடன் இதைப் பச்சையாக தீயில் போட்டாலும் அது உடனே நன்றாக எரிய ஆரம்பித்துவிடும். அப்படிப்பட்ட அறுகம் புல்லிற்கு தூர்வை என்ற பெயரும் உண்டு. ஆலமரம் பூமிக்கு மேல் உயரமாக வளர்ந்து படர்ந்து விரித்த குடைமாதிரியாக இருக்கிறது. அறுகு பூமியில் மேல் நோக்கிப் படர்ந்து பசுமையாக இருக்கிறது. அதுபோல் மனித சரீரத்தில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாகக் கணபதி திகழ்கிறார். அந்த குண்டலினி சக்தியானது. அறுகு நிமிர்ந்து பசுமையாகப் படர்வதுபோல் ஆறு ஆதாரங்களிலும் வேரூன்றிப் படர்ந்து "ஸஹஸ்ராரம்" என்ற தலை உச்சியை அடைந்த ஆலமரம் போல் தழைத்து விரிந்து இருக்க வேண்டும் என்ற தத்துவமாக விநாயகருக்கு அறுகு முதல் இடமாக அமைகிறது.

இந்த அறுகு வெப்ப நோய்களை நீக்குவதாகவும் அருமருந்தாகவும் இருக்கிறது. விநாயகர் அனலாகரன் என்பவனை விழுங்கியதால் ஏற்பட்ட வெப்பத்தை அறுகு தண்ணீரால் தணித்ததாக விநாயக புராணம் கூறுகிறது. ஜுரம் கண்டவர்களுக்கு அறுகை நீரிலிட்டு நன்றாகச் சுண்டக் காய்ச்சி கஷாயமாகக் கொடுத்தால் ஜுரம் நீங்கிவிடும். இந்த அறுகை மஞ்சளுடன் சேர்த்து அரைத்து சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மேல்பூச்சாகத் தடவக் குணம் உண்டாகும். அறுகினால் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கும் குணம் உண்டாகிறது என்று சித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள். அறுகை சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து அம்மியில் நன்றாக அரைத்து கெட்டித் தயிருடன் சேர்த்து வாரம் இரண்டு முறை உணவுடன் உட்கொண்டால் அல்சர் போன்ற குடல் சம்பந்தமான வியாதிகள் வராமல் தடுப்பதுடன் உடலின் வெப்பத்தையும் சரியான முறையில் நிலைக்கச் செய்யும் என்று மூலிகை வைத்தியத்தில் கூறப்படுகிறது. யோகிகள் நீண்ட நேரம் உட்கார்ந்து யோகத் தியானம் செய்வதால் மூலாதாரத்தில் ஏற்படும் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு அறுகைக் கஷாயம் வைத்து அருந்துவார்கள். அந்தக் கஷாயத்திற்கு "மூதண்டக் கஷாயம்" என்று பெயர்.

இவ்வளவு பெருமைகளைப் பெற்ற அறுகம் புல் முழுமுதற் கடவுளாகவும், பிரணவ ரூபமானவருமான கணபதிக்கு மிகவும் உகந்ததாக அமைந்து இருக்கிறது. அதன் காரணமாக அறுகு என்ற தூர்வையால் விநாயகர் அர்ச்சிக்கப்படுகிறார். அந்த அர்ச்சனை "தூர்வாயுக்ம அர்ச்சனை" என்றும் "தூர்வாயுக்ம பூஜா" என்ற பெயரிலும் அழைக்கப்படும். தூர்வா என்றால் அறுகம்புல். யுக்மம் என்றால் இரண்டு சேர்ந்தது. ஆகையால் இரண்டு இரண்டு அறுகம் புல்லாகக் கணபதியை இருபத்தியொரு தடவை அர்ச்சிக்க வேண்டும். அதாவது ஓம் கணாதிபாய நம: தூர்வாயுக்மம் - ஸமர்ப்பயாமி என்ற முறையில் பாஸாங்குஸத

ராய. ஸர்வ ஸித்திப்ரதாய. ஏகதந்தாய. இபவக்த ராய. மூஷிகவாகனாய. குமாரகுருவே. கபில வர்ணாய. ப்ரஹ்சமாரினே. மோதகஹஸ்தாய. ஸுராச்ரேஷ்டாய. கஜ நாஸிகாய. கபித்த பலப்ரியாய. கஜமுகாய. ஸுப்ரஸந்தாய. ஸுராக்ர ஜாய. உமாபுத்ராய. ஸ்காந்தபரியாய என்ற இருபத்தியொரு (ஏகவிம்ஸதி) நாமாக்களைக் கொண்டு இரண்டு இரண்டு அறுகம் புல்லாக அர்ச்சிக்க வேண்டும் என்று புராணம் கூறுகிறது. இந்த முறையில் கணபதியை வழிபட்டு நன்மைகள் அடைந்தவர்கள் பலர் இருந்தாலும் அதில் கவுண்டின்னிய முனிவரும். அவருடைய மனைவி ஆசிரியையும் மிகச் சிறந்தவர்கள் ஆவர்.

**வன்னி பத்தரம்**

அவுரவ முனிவர் என்பவருக்கு சமி என்ற மகள் இருந்தாள். அவளுக்கும் மந்தாரன் என்பவருக்கும் திருமணம் ஆகி. இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம் கணேசரின் பூர்ணமான அருளைப்பெற்று கணேச ரூபமாக இருந்த புருசுண்டி என்ற முனிவரை இகழ்ந்து பேசியதால் அவருடைய சாபத்தினால் இருவரும் வன்னி மரமாகவும். மந்தார மரமாகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் இருவரும் தங்கள் தவறை உணர்ந்து விநாயகப் பெருமானை வழிபட்டு அவருடைய அருளைப் பெற்று சாப விமோசனம் அடைந்தார்கள். அவர்கள் இருவரும் விநாயகப் பெருமானிடம் நாங்கள் இருவரும் தங்களின் வழிபாட்டுக்கு உரிய பத்தரம் - புஷ்பமாக இருக்க வேண்டும் என்றும் அப்படி வழிபடுபவர்களுக்கு தாங்கள் அருள வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள் (பத்தரம் = இலை) விநாயகர் மனமகிழ்ந்து வரம் அளித்த படியால் சமியும் - மந்தாரனும் இன்றும் வன்னி மரமாகவும் - மந்தார மரமாகவும் இருக்கிறார்கள். விநாயகரின் அருளால் உண்டான வன்னியின் பத்தரமும் (இலை) மந்தாரையின் புஷ்பமும் விநாயருக்கு உகந்ததாக இருக்கின்றன.

ஸம்ஸ்கிருத மொழியில் வஹ்னி என்றால் நெருப்பு என்று பொருள். நெருப்பை தன்னில் அடக்கிக்கொண்டு இருப்பதால் வன்னி என்ற பெயரை அடைந்தது. சூரியகாந்தக் கல்லோடு சூரிய ஒளி கலந்தால் அதில் இருந்து தீ வெளிப்படுவது போல் வன்னியின் கட்டையைக் கொண்டு தயிர் கடைவது போல் கடைந்தால் தீ வெளிப்படுகிறது. அப்படியாக வன்னியில் இருந்து கடைந்து எடுக்கப்பட்ட தீயை ஹோமம். யாகம் முதலிய நற்காரியங்களுக்கு மிகவும் உகந்ததாகச் சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. இதுவே முதன்மையானதாகவும் மற்ற வழிமுறைகள் இதனை அடுத்ததாகவும் கூறப்படுகின்றன. தீயை அடைந்த பொருள்கள் எரிந்து பஸ்பமாகி விடுகிறதோ. எப்படி தீயை சார்ந்த தங்கம். சங்கு போன்ற பொருள்கள் மேலும் மேன்மையானதாக ஆகிறதோ. எப்படி தீயில் சம்பந்தப்பட்ட பொருள்கள் மிகவும் சுத்தமானதாக. தூய்மையானதாக ஆகிறதோ அது போல் வன்னி மரம் மற்றும் அதன் இலையைத் தொட்ட மாத்திரத்திலேயே மனிதர்களின் பாவம் அழிகிறது. வன்னி என்ற நெருப்புடன் மனிதனின் தேகம் சம்பந்தப்படுவதால் அவன் தங்கம். சங்கு போன்று மேன்மை ஆனவனாக ஆகிறான். வன்னியின் இலையைக் கொண்டு பக்தியுடன் ஈஸ்வரார்ப்பணம் செய்யும் போது தீயில் சம்பந்தப்பட்ட பொருள் சுத்தம் அடைவது போல. மனிதனும் தெய்வீக ஞானம் மிக்கவனாகின்றான். மண்ணுலகில் பிறவி என்ற மாசை அகற்றிடச் செய்பவர் விநாயகப் பெருமான். அதன் காரணமாகவேதான் வன்னிப் பத்திரத்தைத் தனக்கு உகந்த பத்திரமாக வைத்துக் கொண்டு வன்னி மரத்தடியிலும் கணேசர் எழுந்தருளியிருக்கிறார்.

வன்னி இலைக்கு ஸ்ரீசமி பத்தரம் என்று பெயர். விநாயக பூஜையில் இருபத்தொரு நாமாவால் அறுகம்புல்லால் அர்ச்சிக்கப்படுவதுபோல இருபத்தொரு வன்னி பத்ரங்களால் (இலை) அர்ச்சிக்கப்படவேண்டும். அதற்கு "ஏகவிம்சதி-பத்ர பூஜை" என்று பெயர். அதில் மாசிப்பச்சை. கண்டங்கத்திரி. பில்வதளம். அறுகம்புல். ஊமத்தை. இலந்தை. நாயுருவி. துளசி. மாவிலை.

அரளி. விஷ்ணுகிராந்தி. நெல்லி. மருக்கொழுந்து. நொச்சி. ஜாதி. வெள்ளெருக்கு. வன்னி. கரிசிராங் கன்னி. வெண் மருதை. கிளுவை. நாகை என்ற 21 பத்ரங்கள் கூறப்படுகின்றன. இந்த வன்னியின் இலை கொண்டு வழிபடுவதால் நன்மை அடைந் தவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சாம்பல் என்ற மன்னனும் அவனுடைய மந்திரி யும் அடைந்த பலன் விசித்ரமானது. எனவே அறு காலும் வன்னியாலும் ஆனைமுகனை அஞ்சலி செய்து "மண்ணுலகத்தினிற் பிறவி மாசை" அறுத்தெறிவோம்.

# நல்லைக்குமரன் மலரை ஆய்வு செய்தோர்

| | | |
|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் **1993** | திரு.கானமயில்நாதன் |
| 2. | நல்லைக்குமரன் மலர் **1994** | பேராசிரியர் ப.கோபாகிருஷ்ணஜயர் |
| 3. | நல்லைக்குமரன் மலர் **1995** | பேராசிரியர் இ. குமாரவடிவேல் |
| 4. | நல்லைக்குமரன் மலர் **1996** | சிவஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக்குருக்கள் |
| 5. | நல்லைக்குமரன் மலர் **1997** | கலாநிதி எஸ்.சிவலிங்கராசா |
| 6. | நல்லைக்குமரன் மலர் **1998** | திரு.கோ.சி.வேலாயுதம் |
| 7. | நல்லைக்குமரன் மலர் **1999** | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| 8. | நல்லைக்குமரன் மலர் **2000** | கலாநிதி மா.வேதநாதன் |
| 9. | நல்லைக்குமரன் மலர் **2001** | திருமதி நாச்சியார் செல்வநாயகம் |
| 10. | நல்லைக்குமரன் மலர் **2002** | கலாநிதி கலைவாணி இராமநாதன் |
| 11. | நல்லைக்குமரன் மலர் **2003** | கலாநிதி செ.திருநாவுக்கரசு |
| 12. | நல்லைக்குமரன் மலர் **2004** | திரு.க.சிவராமலிங்கம் |
| 13. | நல்லைக்குமரன் மலர் **2005** | பேராசிரியர் அ.சண்முகதாஸ்<br>திரு.ஈ.குமரன் |
| 14. | நல்லைக்குமரன் மலர் **2006** | ஆய்வு செய்யப்படவில்லை |
| 15. | நல்லைக்குமரன் மலர் **2007** | பேராசிரியர் எஸ்.இரகுநாதன் |
| 16. | நல்லைக்குமரன் மலர் **2008** | திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி) |
| 17. | நல்லைக்குமரன் மலர் **2009** | பேராசிரியர் என்.ஞானக்குமரன் |
| 18. | நல்லைக்குமரன் மலர் **2010** | பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் |
| 19. | நல்லைக்குமரன் மலர் **2011** | கலாநிதி த.கலாமணி |
| 20. | நல்லைக்குமரன் மலர் **2012** | பேராசிரியர் கி.விசாகரூபன் |
| 21. | நல்லைக்குமரன் மலர் **2013** | கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் |
| 22. | நல்லைக்குமரன் மலர் **2014** | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை |

# சைவசித்தாந்தம் கூறும் யோகநெறியும் வாழ்வியல் செல்நெறியும்

**பேராசிரியர் திருமதி.கலைவாணி இராமநாதன்** MA, Ph.D
**இந்துநாகரீகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**அறிமுகம்**

சைவசித்தாந்தம் கூறும் முத்திநெறிக்கான மார்க்கங்கள் நான்கிலும் யோகமார்க்கமும் ஒன்றாகும். சரியை, கிரியை மார்க்கங்களில் வாழ்வோரும் யோகமார்க்கத்தை அடைந்தாலே ஞானமார்க்கமாகிய சிவசாயுச்சிய லட்சியத்தை அடைய முடியும் என்பது சைவசித்தாந்தம் காட்டும் ஒரு சிறந்த உபாயமாகவுள்ளது. "யோகம்" என்பது இந்து தரிசனங்கள் ஆறு பிரிவிலும் "யோகதத்துவம்" ஒன்றாக இடம் பெற்றிருப்பது இந்துக்கள் யோகக்கலைக்கு - யோகநெறிக்கு வழங்கிய முக்கியத்துவத்தை உணர்த்துவதாகவுள்ளது. பகவத்கீதையானது பதினெட்டு வகை யோகங்களைக் கூறுகின்றது. பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரமே யோகதத்துவம் பற்றிக்கூறும் காலத்தால் முற்பட்ட நூலாகக் கருதப்படும். "யோகம்" என்பதன் பொருள், "யுஜ்" என்னும் வடமொழிச் சொல்லிலே "இணைதல்" எனப்பொருள்படும். அதனால் "யோகம் என்றால் பரம்பொருளுடன் இணைதல்" என்ற பொருளில் யோகதத்துவம் கூறும்.

யோகம் என்பது பிரிதல் என்னும் பொருள் கொண்டதாக சாங்கியதத்துவம் கருதும் அதாவது பிரகிருதி பாசங்களிலிருந்து மனிதன் தன்னைப் பிரித்துக் கொள்வது எனக் கூறப்படும். எனவே "பிரகிருதியிடமிருந்து பிரிதலும் பரம்பொருளுடன் இணைதல் என்பதுமே யோகதத்துவத்தின் சாராம்சமாக உள்ளதென அறிய முடியும் Re - Liger என்ற கிரேக்கச் சொல்லிருந்து வந்ததே Religion என்ற ஆங்கிலச் சொல்லாகும். அதன் விளக்கமாவது மீண்டும் - இணைதல் Re- link அதாவது உலக ஆசாபாசங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மனிதன் தான் எந்த நிலையில் எங்கிருந்து வந்தானோ அதனுடன் மீண்டும் தன்னை இணைத்துக் கொள்ளுதல், என்பதே சமயம் என்பதன் உள்மையக் கருத்தாகும். மேலும் தெய்வீகக்காதலே யோகம் எனவும், இருமைகள் தேக சம்பந்தங்கள் என்பவற்றிலிருந்து விடுபடுதலே யோகம் என பக்திவேதாந்த பிரபாதா சுவாமிகள் விளக்குவர். கடமையைச் சரிவரச் செய்வதே யோகமாகும். என்பது பகவத்கீதை தரும் விளக்கமாகும்.

உலக மனித சிந்தனை வரலாற்றிலே சைவ சித்தாந்தம் தற்காலத்திலே சிறப்பாகப் பேசப்படும் ஒன்றாக விளங்குவதற்கு அதன் யோகமார்க்கம் காட்டும் யதார்த்த வாழ்வியல் நோக்கும் அணுகு முறையும் ஒரு பிரதான காரணமெனக் கொள்ள முடியும்.

> "சைவத்தைப் போன்றே யோகமும் வேத மக்கட்குற்பட்டகாலத்து மக்களிடையே தோன்றி வழங்கிவந்தது. சாமராஜ்யம் உருவான காலங்கள் வரை இந்தோ ஆரிய சமயத்திலே யோகம் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதற்கு இதுவே காரணமாகும்."

என்னும் சேர். ஜோன் மார்ஷல் என்பவரின் கூற்றும் யோகவாழ்வியலானது வேதகாலத்திற்கும் முற்பட்ட பழமையுடையது என்பதனை எடுத்துக்காட்டுகிறது. அத்துடன்

"வரலாற்றுச் சிவனுடன் வேத காலத்துக்கு முற்பட்ட இக்கடவுளைப் பிணைக்கும் மற்றொன்று யோகவடிவமைப்பாகும்"

என்பன போன்ற ஆய்வுக்குறிப்புக்கள் யோகக் கலையானது வரலாற்றுக்கு முற்பட்டது என்பத னைக்காட்டுவதாகவுள்ளது. இது பற்றி பிற்கால ஆய்வாளர் கூறும் போது:

"சிவனின் பண்டைய வடிவம் என்று ஆய் வாளரால் கருதப்பெறும் இலச்சினையில் அவர் விலங்குகள் சூழப்பத்மாசனத்தில் இருக்கின் றார். பசுபதியாகவும், மகாயோகியாகவும் சிவனைக் கருதும் மரபு அந்நாளிலேயே நிலை கொண்டமைக்கு இது அத்தாட்சியாகும்"

என்று கூறப்பட்டிருப்பதும் மேற்படி சிந்தனை க்கு அரண் செய்வதாக அமையும் இதனால் இன்றுவரை யோகமார்க்கம் மேற்குநாடுகளிலும் பெற்றுள்ள செல்வாக்கினைக் காணும் போது சைவசித்தாந்தமானது ஒரு அறிவுப் பயிற்சியுடைய அசைவியக்கமாக செயல்படுகின்றதெனவும் கருத முடியும். இதிகாச புராணங்களிலும் சிவன் மகா யோகி எனவும், பதஞ்சலி சிவனருள் பெற்ற ஒரு யோகி எனவும், சித்தர்களுட் சிறந்த சித்தன் - சிவன் என தேவார கால நாயன்மார்களும் மெய் யடியார்களும் போற்றிப் புகழ்ந்துள்ளமையி னாலும் இவ்வுண்மை பெறப்படும்.

**யோகத்தின் வகைகள்**

யோகம் என்பது முக்கியமாக ராஜயோகம், ஹடயோகம் என்னும் இரு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. ராஜயோகம் மனதுடன் தொடர்பு டையது; ஹடயோகம் உடற்பயிற்சிகள், ஆசனங் களுடன் தொடர்புடையதாகும். ஒவ்வொரு சமயப் பிரிவும் தாம் கையாளும் முறைகட்கேற்ப அதற் குரிய பெயர்களைக் கொண்டு அழைக்கப்படும். பொதுவாகக் குண்டலினி யோகம் எனவும் பொதுப் படக் கூறுவதுண்டு. குண்டம் என்பது யாக குண்டம், யாகம் செய்யுமிடமாகும்; மூலாதாரத் தீயினால் செய்யும் ஆதாரயோகமே யாகம் என்பது சித்தர்க ளது கருத்தாகவுள்ளது. சைவசித்தாந்தம் யோக வகையிலே பக்தியோகம், கருமயோகம் . ஞான யோகம் எனவும் வேதாந்தம் கருமயோகம், ராஜ யோகம், ஞானயோகம் எனவும் இவற்றை மூன்று வகையாக இலகுபடுத்தி மனச்சமநிலை யடைதல் யோகம் எனவும் யோகத்தின் ஆரம்பப் படிநிலை யினை எடுத்து விளக்குகின்றன.

"யோகச்சமயமேயோகம் பலவுன்னல்
யோகவிசேடமே அட்டாங்கயோகமாம்
யோகநிர்வாணமேயுற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண் சித்தியுற்றவே"

எனத் திருமந்திரம் யோகம்பற்றிக் கூறியுள் ளது இது யோகதீட்சை எனப்படும்.

**பிரசாத யோகம்**

ஆன்மா ஈடேற்றத்திற்கு உதவும் வகையில் யோகசாதனைகட்கு முன்னோடியாக தன்னை யுணர்தல் என்னும் நிலைக்கு அழைத்துச் செல் லும் வகையில் மனதினை ஒழுங்குபடுத்தும் முறைமைகட்குப் பிரசாதயோகம் என்று பெயரா கும். இது பற்றி பிரசாதசந்திரிகா, பிரசாத சுலோகி போன்ற வடமொழி நூல்களிலும் கி.பி 14ம் நூற் றாண்டைச்சேர்த்த தமிழ்நூல்களிலுமே அதிக மாகக் கூறப்பட்டுள்ளன. சூக்குமநாடியான குண்டலினிநாடியைச் சுத்தப்படுத்தி ஆன்ம தரிசனம் பெறுவதே பிரசாதயோகமாகும். இதில் பதினாறுநிலைகள் கூறப்படும். இவை தவிர யோகநிலைக்குரிய அங்குலம், மாத்திரை, உருவம், நிறம், தத்துவம், தேவதைகள் பற்றியும் கூறப்படுகின்றது. இவை சோடசகால பிரசாத யோகம் எனவும் கூறப்படும். இறுதியில் Merger union - இணைதல் ஐக்கியப்பட்டு கலத்துநிற்றல் இதன் முடிவான ஆனந்தநிலை என்றும் கூறப் பட்டுள்ளது. எனவே சைவசித்தாந்தமானது ஆன்மா சாதாரண உலகியல் வாழ்வெனும் வாகனத்திலிருந்து சிவவாகனமாகிய ஞானத்தை அடைதற்கு பத்துப் படிகளைக் கடந்து செல்ல வேண்டும் எனக்காட்டியுள்ளது. அவை தச காரியங்கள் எனக் கூறப்பட்டது. அவற்றிலே தத்துவ சுத்தியினை அடுத்து ஆத்மதரிசனமும் உயிர்காட்சியும், பரதரிசனத்திலே சிவக்காட்சி

யைக் கண்டு. சிவயோகத்தில் இறையுடன் இணைந்து பரயோகமாகிய சிவப்பேறடைதலே ஆன்மீகவாழ்வின் இலட்சியமாகும். என்பதை யும். இத்தகைய ஆன்மாவின் ஞானப்பயணத்துக் குரிய இறுதியான பாதைகள் பத்தும் திருவாசகத் தில் திருச்சதகம் என்ற பகுதியில் அறிவுறுத்தப்பட் டுள்ளன.

"இவற்றிலே முதல் மூன்றையும் அறிதல் பாச
ஞானம், அடுத்த மூன்றையுமறிதல் பசு ஞானம்
இறுதி மூன்றுமான சிவதத்து வத்தை அறிதல்
பதிஞானம் எனவும் சித்தாந்தம் விளக்கும்"

என்பதனால் யோக மார்க்கமாவது ஞானமார்கத் திற்கு அழைத்துச் செல்லுகின்ற வாகனமாகவும் விளங்குகின்றமை பெறப்படும்.

உடலையும் மனதையும் கையாளப்பழகி னால் பாரமாரத்திக வாழ்வும் கைகூடும்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம் படமெய் ஞானம் சேரவும் மாட்டார்......"

எனக் காயமாகிய உடலைப் பேணினால் அதனை

இறைவனது கோயிலாக்கலாம் இதனை.

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்"

எனவும் திருமூலர் தெளிவுபடுத்தினார். எனவே உடலை வளர்க்கும் உபாயங்களினால் உணவி லுள்ள தூல சூக்குமப் பகுதிகளையறிந்து பயன் படுத்தவேண்டும். இதுவே நல்ல உடற்பயிற்சிக் கான யோகப்பயிற்சியாகும். உணவு வேறுபாடுகட் கேற்பவே யோகசாதனைகளில் வாழ்விலே முன் னேற்றம்காண முடியும். இத்தகைய வாழ்க்கை முறையினைக் கற்றுக்கொண்டால் இந்த உடம்பி னையே கண்ணுக்குத் தெரியாத நிலையிலும் மாற்றுதல் கைகூடும் என்பர்.

பொருள்கள் மூன்று நிலையுடையன அவை யாவன.

1. ஒளிபுகும் பொருள் - Transparent
2. ஒளிபுகாப்பொருள் - opaqu
3. ஒளிகசியும் பொருள் - Transcu cent

என்பனவாகும். இதில் உடல் ஒளிபுகாப் பொரு ளாக அடங்கும். யோகசாதனையினால் உடலின் இயல்பினை மாற்றமுடிந்தால் அது ஒளிபுகும் பொருளாக மாறும் கண்ணுக்குப் புலனாகாத வடிவினையடையும் இதன் உயர்நிலை காற்றின் வடிவமாதல் எனவும் (Suspended Animation) பஞ்சபூதங்களில் எந்தவடிவமாகவும் இந்நிலை கைகூடினால் இருக்க முடியும் என்பதைச் சித்தர் கள் வாழ்த்துகாட்டியுள்ளனர். "வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம். எனத் தாயு மானவர் குறிப்பிட்டதும் இந்தநிலையாகும்.

## யோக சக்தியினை உருவாக்கும் ஆதாரங்கள்

உடலுக்கும் உள்ளத்திற்கும் எல்லையற்ற சக்தியினை வழங்கும் யோகக்கலையினைப் பயிலும் முறைகளைப் பற்றியும் அறிந்திருப்பது அவசியமாகும். மனித உடலிலே யோக மையங் கள் என்று கூறப்படும் ஆறு ஆதாரச்சக்கரங்கள் இருக்கின்றன. இவை மனிதரது சூக்கும சரீரத்தையுடைய சக்தி மையங்களாகும். மனித உடல் வெறும் ஸ்தூல சரிரம் மட்டுமன்றி மனம், கர்மா, ஞானம், ஆனந்தம் போன்ற பல்வேறு அடுக்குத் தளங்கள் கொண்டது இவற்றினை கோசங்கள் என ஞானி கள் அழைப்பர். இவற்றுள் பிராணமய கோசம் அல்லது சக்தி கோசம் என்பது பல்வேறு சக்கரங்களையும் நாடிகளையும் கொண்டது. இச்சக்கரங்கள், நாடிகள் வழியாக உறக்கத்திலிருக்கும் குண்டலினி என்னும் ஆன்மீக சக்தி என்னும் பிராண மயகோசம் வழி யாகப் பாயும்போது உடலின் எல்லா உணர்வுக ளும் தூண்டப்பட்டு நல்ல ஆரோக்கியமான உட லும், மனமும் உருவாகுதற்கு ஏதுவாகின்றது. அதன் பயனாக மன அமைதியும் ஆனந்தமும் உண்டாகின்றன. என யோகியர் கூறுவர். அத்து டன் முறைகேடான வாழ்வு முறை, உணவுப் பழக்கம், தவறான கண்ணோட்டங்களினால், எதிர் மறையான கர்மாக்களினால் உடலும் மனமும் மக்கட்கு அடிக்கடி பாதிப்படைகின்றன.

அதனால் எதிர்மறையான அலைகளால் எதிரான சூழ்நிலைகளும் உருவாகின்றன. சக்கரத்தியானம் என்பது உடலில் உள்ள சூக்கும சக்தியை எழுப்பி நல்ல ஆரோக்கியத்தை வழங்கு கின்ற தெனப்படும். ஆதாரங்கள் என்பவை ஆற் றொழுக்கில் நீர்ச்சுழிபோன்று பிராண உடம்பிலே வெளிப்புறச் சுழிகளாகச் சுழன்று கொண்டிருக்கும் தாமரை. பூசணி. ஊமத்தம் பூப்போல பல நிறங்க ளில் ஒளி வீசிக்காணப்படும் என யோகக் காட்சி யுடையோர் கூறுவர். அப்பூங்காம்புகளிலிருந்து மெல்லிய நாளங்கள் புறப்பட்டு முதுகுத்தண்டின் நடுவே ஓடும் சுழுமுனை நாடியில் மூங்கில் கணுக் கள் அமைந்திருப்பது போல வேரூன்றிக் காணப் படும். மனித உடலில் சக்திகளை ஒன்றிலிருத்து மற்றொன்றிற்கு இறக்கும் துவாரங்களே இந்த ஆறு ஆதாரங்களுமாகும். இவற்றின் துணையின்றி ஒன்றும் உயிர்த்திருப்பதில்லை. இவை எல்லாப் பிராணிகளது உடம்பிலும் காணப்படுபவையா கும். ஆனால் அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கபடி இச்சக்திகள் உடலுக்கு உடல் ஒரே உடம்பி லேயே ஆதாரத்திற்கு ஆதாரம் அளவிலும் சுழற்சி யிலும் வேறுபடும். சாதாரண மக்களிடம் இரண்டு அங்குல வட்டமாய் நெருப்புத் தணல் போன்று மந்தநிலையில் உடல் ஜீவித்திருப்பதற்கு மாத்திம் தேவையான அளவு சக்திகளை வழங்கிக் கொண்டிருக்கும்.

பூரணமான அறிவும் ஆற்றலுமுள்ளவர்களி டமோ அவை ஒரு கண் அகலத்தில் வானவில் நிறங்களுடன் மின் னொளி வீசி. மின்வேகத்தில் சுழன்று பலவித ஆற்றல் சக்திகளை வழங்கிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சக்கரமும் ஒவ்வொரு சிறு சூரியன் போல பிரகாசிக்கும் அன்னார் அறிவும் ஆற்றலும் உலகம் வியக்கத்தக்கதாகக் காணப்படும். இச்சக்கரங்கள் உடம்பின் பாகங் களல்ல பிராண உடம்பின் அவயவங்களாகும். பிராணன் உடலைவிட்டு நீங்கும் போது அவை யும் தூல உடலைவிட்டு நீங்கும் போது அகன்று விடும். பிராண உடம்பின் ஆறு ஆதாரங்களும் ஆறு தாமரைமலர் போல விரியும் போது தமக்கு மேலுள்ள சக்கரமும் விரிவடையுமாதலால் அதனை ஒரு சக்கரமாகக் கூறுவதில்லை. சிலர் பிரம்மஸ்தானம் அல்லது சகஸ்ராம் என்ற ஏழாவது சக்கரமாகவும் இதனைக் கொள்வ துண்டு. எனவே அது மிக மேலான ஸ்தான மாகும். இந்த ஏழு ஆதாரங்க ளுமே ஒன்று முதல் ஏழுவரை ஆலயங்களில் பிரதானமூர்த்திகளின் இருப்பிடங்களாக அமைந்துள்ளன. அவற்றின் மூலாதாரம் கொடிமரத்தின் பீடமாகவும் கொடிமரம் அன்ன உடம்பின் முதுகுத்தண்டமாகவும். சுழு முனை நாடியையும் அறிகுறியாகக் கொண்டுள்ள தெனலாம்.

**ஆறு ஆதாரச் சக்கரங்கள்**

ஆறு ஆதாரங்களாவன. மூலாதாரம். சுவாதிட் டானம். மணிபூரகம். அநாகதம். விசுத்தி. ஆக்ஞை என அழைக்கப்படும். பிராணன் ஆகிய சுவாசம் குண்டலினியை அடைய இந்த ஆறு ஆதாரங்களையும் கடக்க வேண்டும்.

மூலாதரமானது மனிதனது உடலிலே கரு வாயில் எருவாயில் இரண்டுக்குமிடைப்பட்ட இடத்திலே இருக்கின்றது; உந்திக்கமலம் அல்லது நாபியில் சுவாதிட்டானம்: இதயஸ்தானத்தல் மணி பூரகம்; மார்பிலே அநாகதம். தொண்டையிலே விசுத்தி. புருவமத்தியில் ஆக்ஞா சக்கரம் என்பன முறையே அமைந்துள்ளன. ஆக்ஞா சக்கரமானது சுழுமுனை அல்லது சகஸ்ராரம் துவாதசப் பெரு வெளி எனவும் அழைக்கப்படும். குண்டலினி யானது ஒவ்வொரு ஆதாரத்திலே பொருந்தும் போதும் ஒவ்வொர் அதிர்வுகள் ஏற்படும். சுற்றி யுள்ள ஒவ்வொர் இதழ்களிலும் அதிர்வினாலே ஓர் ஒலி உண்டாகும்.

அவ்வாறு ஐம்பது இதழ்கட்க்கும் ஐம்பது ஒலிகள் உள்ளன. பிரணவம் என்ற ஒலியே அனைத்திற்கும் ஆதாரமாதலால் அதனையும் சேர்த்து ஐம்பத்தியொரு ஒலிகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆதாரத்திற்கும் ஒவ்வோர் அதிதேவதைகள் உள்ளன அவை யாவன. ஆதாரம் அதிதேவதை அதிர்வொலிகள் மூலாதாரம் வாலை ஓம் நான்கெழுத்து சுவாதிட்

டானம் பிரம்மா ந ஐம் ஆறுஎழுத்து நாபிக்கமலம் திருமால் ம கிலீம் பத்துஎழுத்து இதயம் உருத்திரன் சி சௌம் பன்னிரண்டு எழுத்து தொண்டை மகேஸ்வரன் வா ரீம் பதினாறு எழுத்து புருவமத்தி சதாசிவம் ய ஸ்ரீம் மூன்று எழுத்து என இவை மொத்தம் ஐம்பத்தியொரு ஒலிகளையுடைய எழுத்துக்களைக் கொண்டிருக் கின்றன. ஓம் என்னும் மூலாதார ஓசை அனைத்து ஒலிகளுக்கு முன்னர் சேர்த்த ஒலிக் கப்படுவதால் அது யாவற்றுக்கும் பொதுவான மூலமந்திரம் எனப்படும்.

குண்டலினி மேலே எழுந்து செல்லும் தனது பயணத்தின் போதும் சந்திக்கும் ஒவ்வொரு ஆதாரத்தில் தங்கும் போதும் சாதனை செய்வோரி டத்து ஒரு சில சித்திகளுக்கு வலிமைகள் ஏற்படு கின்றன. சாதாரண யோகசித்தியுடையோர் ஓரிரு ஆதாரங்கள் விருத்தி பெற்று சித்தி கைகூடியதும் அதனுடன் சாதனையைக் கைவிட்டு சித்திகளைக் காட்டி பணம் சேர்க்கத் தொடங்குவதனால் காலப் போக்கில் யோகசாதனை கைகூடாது யோகம் என்பது "சித்து" என்று மட்டும் கருதும் தவறான போக்கும் உருவானது. ஒவ்வோர் இதழ்கள் என்பன ஆதாரங்களைச் சுற்றியிருக்கும் நரம்புக ளாகும். அவற்றினை உருவகமாகக் கூறும் போது இதழ்கள் எனக் குறிப்பிட்டுமிருக்கவேண்டும். ஆதாரங்களும் அவற்றின் எழுத்துக்களும் ஒருவித ஓசை அல்லது ஒலி அதிர்வின் வரி வடிவங்கள் எனவும் கருதலாம்.

சைவசித்தாந்தம் பொதுவாக முப்பத்தியாறு தத்துவங்களைக் கொண்டுள்ளது. அவற்றிலே முப்பத்தி ஐந்தாவது சக்தி, மூப்பத்திநான்காவது சதாசிவமாகும். சக்தி யிடமிருந்து சதாசிவதத்துவம் தோன்றுவதால் சக்தி சதாசிவத்தின் தாய் எனவும், முப்பத்தியாறா வது சிவதத்துவத்திடமிருந்து சக்தி தோன்றுவதால் சக்தி சிவனின் மகள் எனவும் பின் சதாசிவத்தை மணமுடிப்பதனால் தாராமாகவும் சேர்த்து உலகினை உற்பத்திசெய்வதால் உலக னைத்தும் சிவசக்தி தத்துவம் என்றும் ஞானிய ரால் உணரப் பட்டது. சக்தியும் சிவனும் ஒருவரில் ஒருவர் அன்பு கொள்ளும் போது எல்லா உயிரக ளும் அவற்றிலே அடங்கின. ஆதலால் சிவத்திற்கு ஆதாரம் சக்தி எனவும் சக்திக்கு ஆதாரம் சிவன் எனவும் ஆதார ஆதேயமாக சிவசக்தி தத்துவம் அமைந்தது அதனால் எல்லையற்ற ஆற்றல் சக்தியை மனிதனுக்கு வழங்கும் குண்டலினி சக்தியும், சிவசக்தி தத்துவமாக உருவகம் செய்யப் பட்டன என்பதை மெய்கண்ட சாத்திர நூல்கள் அறிவித்துள்ளன.

பிராணாயாமம் அல்லது சுவாசப்பயிற்சியும் மாணிடநலமும் யோகத்தின் எட்டு அங்கங்களில் இமயம், நியமம், ஆசனம் என்னும் ஒழுக்கப் பயிற்சிகள், உடற்பயிற்சிகளினால் புறத்தூய்மை யடைந்து ஆசனங்கள் பயிற்சியானபின் அவ் வாசனத்திலமர்ந்து பிராணாயாமத்தினைப் பயின்று பயிற்சி செய்வது அடுத்த முக்கியமான செயல் முறையாகும். பிராண - அயாமா என்றால் உயிர் மூச்சினைக் குறிக்கும்; அயாமா எனில் கட்டுப்பாடு என்பது பொருளாகும். "சுவாசத்தின் கட்டுப்பாடு" என்று இதனைக் கூறலாம். இக்கலை யினைக் கற்றே சித்தர்கள் அட்டமாசித்திகளைப் பெற்றனர். பிராணனைக் கட்டுப்படுத்துதல் என்ப தனை விடப் பிராணனை அடக்குதல் எனலாம். (Not control but Regulate) இது அறிவியல் ரீதியாக மனிதகுலத்திற்குத் தேவையான ஆற்ற லையும் நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துவதா கவும் அறியப்பட்டுள்ளது. இது ஜீவசக்தி அல்லது உயிர்சக்தி எனவும்படும். உயிர்க்காலின் அசைவு எதுவோ அதனை வெல்ல முடிந்தால் சித்தத்தை வசப்படுத்துவது சுலபமாகும். பிராணன் பிரபஞ்ச சக்தியின் ஜீவதத்துவமாகும். அது பிரபஞ்சவெளி யில் அநாதியாகவே சஞ்சரிக்கின்றது.

இப் பிராணன் மனிதன் இறப்புடன் முடிவ தில்லை. மண்ணிலே பெய்த மழையானது வெள்ளமாகி, நதியாகி மலையிறங்கி சமுத்திர மாகச் சங்கமிப்பது போல உடலைப் பிரிந்ததும் பிராணன் அடுத்த மாற்றத்திற்குத் தயாராகிறது. இத்தகைய பிராண வாயுவை ஒழுங்குநெறியிலே உடலுக்குள் கட்டுப்படுத்திவைப்பதே பிராண

யாமம் எனப்பட்டது. சுவாசம் சரியாக இயங்கினால் மனிதர்களுக்குப் பிணியுமில்லை. மூப்புமில்லை. சித்தர்கள் நோயினால் மரித்தாகச் செய்திகளில்லை. ஆனால் ஞானியர் அடியார்கள் நோயினால் வருந்தினா லும் அது "கர்மவினை" என மகிழ்வுடன் அனுபவித்துக் கழித்திருக்கின்றனர். உள்ளும் புறமும் ஓடிக்கொண்டிருக்கும் "வாசி" என்ற வாயுவைக் கட்டுப்படுத்துதல் பிராணாயாமத்தினை ஒரு பகுதியாகும். இவை இடகலை. பிங்கலை எனவும் சந்திரகலை சூரியகலை எனவும் படும். இரண்டிற்குமிடையே மத்தியில் இருப்பது சுழுமுனை அல்லது அக்கினிகலை எனக் கூறப்படும். பிராணா யாமம் செய்யும்போது மூச்சு எட்டு அங்குலம் உட்சென்று பன்னிரண்டு அங்குலம் வெளியே வருகின்றது. சூரிய. சந்திர கலையில் பிராணன் செல்லும்போது பிருதுவி அப்பு. தேயு. வாயு என்ற நான்கு தத்துவமும் விரவி நின்று ஆகாயத்தை அடையும். அச்சமயம் சுவாசம் தானாகக் குறைந்து விடும். உதித்த இடத்திலே பிராணனாகிய சுவாசம் தானாகச் சுழன்று கொண்டிருப்பதனால் அந்த யோகி நீண்டகாலம் அன்னவாகரமின்றி உலக இச்சை அற்று சீவித்திருப்பான் என சித்த நூல் அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

மேலும் இடகலை தொழிற்படும் போது அது மனிதர்களது காமக்குரோத லோபமோகங்களையும் சிற்றின்ப இச்சைகட்கும் உதவிசெய்கின்றது. பிங்கலை தொழிற்படும் போது அலைபாயும் மனதினை அடக்கி ஒருமுகப்படுத்த உதவுகின்றது. சுழுமுனைநாடி பகுத்தறிவினைப் பெருக்கி ஆன்மீக முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்திவிடும். இவை உதவிசெய்யும் என்பதனால் மனித முயற்சி தேவையற்றது என்பது பொருளல்ல உடலில் உறங்கிக் கிடக்கும் இவற்றினை உதவிக்கழைப்பதற்கு மனித முயற்சியும் நற் செயல்களும் ஒழுக்க நியதிகளும் அவசியமாகும். அப்போதுதான் நல்ல விதமான பலன்கள் மனிதர்களை வந்தடைகின்றன. நெல்லு உலர்வதற்கு வெய்யில் உதவுகின்றது எனினும் அது தானாக வீட்டிலே புகுந்து நெல்லை உலரவைப்பதில்லை. அறிவு. இச்சை இவற்றினை நல்வழிப்படுத்தவிரும்பும் மக்கட்கு இந்த நாடிகளும் அதனைத்தூண்டும் தீட்சைகளும் துணைபுரியுமேயன்றி அவை தாமாக ஒன்றும் செய்யமாட்டாது.

எனவே முயற்சி செய்யாத மனிதரிடத்து தீட்சைகளால் திறக்கப்பட்ட நாடிகள் பழக்கமின்மையால் மீண்டும் தூர்ந்து விடும் தண்ணீர் பாயாத கால்வாய் தூர்ந்து விடுவது போலஎன இதனை விளக்கலாம். மின்சாரத்தை எடுத்தால் நெகட்டிவ் (Negative) பொஸிட்டிவ் (possitive) எர்த்து (Earth) என்னும் இம் மூன்றும் ஒன்றாகச் சேரும் போது மின்விளக்கு எரிகின்றது. அவ்வாறே மனிதரிடம் சூரியகலை. சந்திரகலை சுழுமுனை நாடி மூன்றும் ஒன்று சேரும் போது அவர்களிடத்தும் ஜோதிதோன்றுகின்றது.

அவ்வாறு தோன்றுமிடம் இரண்டு புருவத்திற்கும் மத்தியிலுள்ள இடமாகும் என்பதனை யோக வாழ்வில் சித்திபெற்றோரிடத்தும் அனுமுதிமான்களிடமும் தரிசிக்கலாம். இம் மூன்று நாடிகளிலும் குண்டலினி சக்தியானது நடுநாடியான சுழுமுனை வழியாகவே மேல் நோக்கிச் செல்கின்றது. நாடி சுத்தமின்றியிருந்தால் குண்டலினி மேலே செல்ல முடியாது தண்ணீர் செல்லும் குழாயில் அடைப்பு இருந்தால் தண்ணீர் பாயாதது போலவே இதுவுமாகும். குண்டலினியை எழுப்பவும் நாடியைச் சுத்திகரிப்பதற்கும் காரணமாயிருப்பது பிராணயாமமேயாகும். இவ்வாறு பிராணாயாமப் பயிற்சியினால் விந்துவாகிய குண்டலினியை யோகசக்தியினால் மேல் நோக்கி எழுப்பி அமுதமாக மாற்றும் கலை இதுவெனவும் திருமந்திரம் ஏழாம் தந்திரம் கூறும். நஞ்சின் இயல்பு ஒன்றினை அழித்தலாகும். அமுதமத்தின் இயல்பு எதையும் நீண்டநாள் பாதுகாத்து வைத்தலாகும். விந்து சக்தியை மனிதன் இழப்பது மெல்ல மெல்ல இறப்பதற்குச் சமமாகும். அழிக்கும் இயல்புடைய விந்தினை வீணாக்காது மேலேற்றி அதனை அமுதமாகப்பருகினால் நீண்ட காலம் ஜீவித்திருக்கலாம். எனவே சிவன் உண்டது நஞ்சு அல்ல நஞ்சினையும் அமுதமாக்கி உண்டவர். இதனைப்

புராணவரலாறுகள் தெரிவித்துள்ளன.

"கண்டங் கறுத்த கருத்தறிவாரில்லை
உண்டது நஞ்சென்று உரைப்பர் உணர்விலோர்"

என இதன் பொருளை திருமூலர் தெளிவுபடுத்தி னார்.

இந்துக்கோயில்களின் சரியை முறைகள் யாவும் யோகநெறியையும் ஸ்தூல உலகில் உள்ள உபாய தீட்சாமுறைகளையும் சூக்கும உலகிலே நடைபெறும் தீட்சாமார்கத்தையும் விளக்குவனவாகும். சைவசித்தாந்த சாத்திரங்கள் இதனை கிரியையில் யோகம் என்ற பகுதியில் எடுத்துக் காட்டும். ஆலயங்களில் கொடியேற்றும் போது கொடிப்பட்டமானது இடகலைபோல கொடி மரத்தை வளைந்து சுற்றிச் சென்று மேலேறும். குண்டலினி குடிலை என்றும் வளைந்தது எனவும் ஒரு பொருளுண்டு பாம்பு போன்ற தண்டிலே சுற்றிச்சுற்றி ஐந்து நிலைகளைக் கடந்து ஆறாம் நிலையாகிய சகஸ்ராரம் அதுவே ஐந்து தலை நாகம் போலச் சீறி வெளிக்கிளம்பும் சக்தி என்பர். கொடிச்சீலை மேலேறி விரிந்து விளங்கும் காட்சி மனித சக்தியின் நோக்கத்தைக் குறிக்கும் எனலாம்.

குண்டலினியின் ஏழு அடுக்கும் நீண்டகால யோகாப்பியாசங்களால் சங்கமமாகி பிரமரதரத் தில் பொங்கி வழிந்து உச்சம் தலையைக் குளிப் பாட்டும் போது தான் சாகாஅமுதமாகிய பிறப்பு இறப்பினைக் கடந்தவனாக அம்மனிதன் ஆகின் றான் இதுவே ஆறாதரசக்கரங்களின் போக சக்தி யின் மகிமையான வாழும் கலையாகும். என்ப தனை யோகேஷ்மித்ரா போன்றோர் விளக்குவர். பொதுவாக இடகலை, பிங்கலையிரண்டும் மாறு பட்ட இயக்கங்கட்கும். காரணமாகும் இவற்றினை அமிர்தநாடி, விஷநாடி எனவும் கூறுவர். இடகலை ஞானேந்திரியம் வழியாகவும் பிங்கலைகள் பிர மேந்திரியம் வழியாகவும் இயங்குகின்ற தெனப் படும். அமிர்தநாடி இடகலை வழியாக இது நற் பண்புகட்குக் காரணமாகின்றது. அன்பு, கருணை தெய்வீகம், தியானம் இவற்றுக்கு உதாரணம் பிங் கலை நாடி. விஷநாடியாக கோபம், பொறாமை, சுயநலம், சூது வாதுகட்குக் காரணமாவது; கீழ்த்தர உணர்ச்சிகளை மேலோங்கச் செய்வது ஆகும்.

எனவே விஷநாடி இயக்கத்தைத் தடுத்து அமிர்தநாடி இயக்கத்தை ஊக்குவித்தற்குத் தினமும் தியானமும் யோகப் பயிற்சியும் அவசிய மாகும். சகஸ்ராரம் என்பது தலைப்பகுதியிலுள் ளது. இதுவே மூன்றாவது கண் அருள் சுரப்பி எனப்படும். உயர் ஞானபீடம் என்பது இருபுருவங் கட்கும் மத்தியில் (Pitiutary glands) இருக்கும் ஆக்ஞை என்பது மூளையின் அடிப்புறத்தில் உள் நாக்கின் மேலே இமைசிவப்பு நிறத்திலே உள் ளது. இதனை நெற்றிக் கண் என்று கூறுவர். இது மற்ற எல்லா நாடிகளையும் சுரப்பிகளையும் கட்டுப் படுத்தவல்லதாம் ஆரோக்கியமோ, நோயாளித் தன்மையோ குட்டையோ நெட்டையோ எதையும் இதுவே திர்மானிக்கும் எனவும் மருத்துசவ சித்தர்கள் குறிப்பிடுவர் தலைப்பகுதியிலிருந்து கீழே முதுகுநுனிவரை தண்டுவடம் ஒரு மூலமாக ஒரு நுண்ணிய நரம்புக் குழல் செல்கின்றது. அதுவே சுழுமுனைநாடி எனப்படுகின்றது. நாடி களும், வாயுக்களும் பத்து என சித்தாந்த நூல் களும் சித்தர் இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. சுழுமுனை இயக்கம் ஏற்பட்டால் இடகலைநாடி பிங்கலை நாடி இரண்டும் சமமாக இயங்கும் என்பது யோக ஞானியரின் முடிபாகும். இதனால் தான் யோகம் என்பது மனச்சமநிலை பேணுதல் என பகவத்கீதை "சமத்துவம் யோகம்" எனக் கூறியது. ஓம் என்பதன் பொருள் மனிதர்களது சுவாசத்திற்குரிய நுரையீரல்கள் மார்புக்கூட்டில் வலப்புறம் ஒன்று. இடப்புறம் ஒன்றாக உள்ளன.

வலப்புறம் பெரியதாகவும் சுவாசத்தின் போது காற்று உள்ளே போகும் போது மார்புத்தசைகள் விரிவடைகின்றன. பின்னர் அழுத்தத்தால் அவவை சுருங்கும் போது காற்று வெளியேறுகின் றது. சுவாசிக்கும் போதுதான் பிராணவாயுவின் அளவு கூடுகின்றது. இரத்தம் சுத்திகரிக்கப்படுகின் றது. நோய்களும் இலகுவில் அண்டமுடியாது. அதனால் சுவாசத்தைச் சரியாகக் கையாள வேண்

டும். அப்படி சுவாசத்தை ஒழுங்குபடுத்தும் முறை தான் பிராணாயாமத்தின் ஆரம்ப நிலையாகும். அதனால் சுவாசம் நமது கட்டுப்பாட்டிற்குள் வரு கின்றது. இதயத்துடிப்பை நமது விருப்பப் படி இயக்கமுடியாது. ஆனால் சுவாசத்தை நிறுத்தி வைத்துப் பின் வேகமாகவும் சுவாசிக்கலாம். காற்றினை நமது விருப்பப்படி உடலில் இயங்க வைக்கும் முறைக்கு பிராணயாமம் என்று பெயராகும். பிராணன் அல்லது குண்டலினி பிர பஞ்சம் முழுவதும் இயங்குவதற்கான ஆதாரசக்தி யாகும். உடல் என்னும் யந்திரத்தை இயக்கும் சக்தியும் அதுவேயாகும்.

அதனை நமது விருப்பப் படி இயங்க வைப்ப தனை பிராணாயாமம் என யோகியர் அழைத்த னர். கவலைகள் தீரவும் மனம் தெளிவாவதற்கும் பிராணயாமப் பயிற்சியும் தியானமும் சிறந்த வழி என்பதனை இன்று உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஓம் என்ற மந்திரம் இந்துக்க ளின் புனிதமான மூலமந்திரமாகும். எந்த மந்திர மாயினும் அதற்கு ஓம் என்பதினைச் சேர்ந்தே உச்சரிப்பது அவசியமாகும். சான்றாக ஓம் நமசிவாய, ஓம் நாராயணய, என்பது போலவாம். உலகிலே காணும் பொருட்கள் யாவும் தோன்றி மறைவதும் உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் (ஒடுக்கம்) அனைத்திற்கும் அதுவே மூலாதார மாக உள்ளது இவ்வாறாக இந்து மக்களின் உள வியல் ஆற்றுப்படுத்தல் என்பது யோக வாழ்வியல் அடிப்படைகளில் தங்கியுள்ள தென்பதனையும் இந் யோகக்கலை நன்கு உணர்த்தியுள்ளது.

**அற ஒழுக்க நியமங்கள்**

யோகநெறியிலே எட்டு அங்கங்கள் இன்றி யமையாதனவாக வேண்டப்படும். சித்தத்தை அடக்கியாளும் எண்வகைப் பயிற்சிகளை இவை உணர்த்துகின்றன. இதனால் அட்டாங்கயோகம் எனக்கூறப்படும். இவற்றிலே தனிமனிதர் ஒவ்வொருவருக்குமுரிய ஒழுக்கமுறைகள் முதல் இரு பிரிவிலும் இடம் பெற்றுள்ளன. முதற் பகுதி யாகிய இயமம், நியமம், என்பவற்றிலே ஒழுக்க விதிகளும், ஒழுகலாறுகளுமே கூறப்பட்டுள்ளன. அடுத்து ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன இடம் பெற்றுள்ளன. இயமத்தில் இடம் பெறும் ஒழுக்க விதிகளாவன தீதகற்றல், கொல்லாமை, வாய்மை, களவிலனாதல், நல்லனநாடல், மாசிலனாதல், பயனிலபேசாமை, காமம் அகற்றல், கள்ளுண் ணாமை, பிறன்மனை நயவாமை, என்னும் பத்து ஒழுக்க விதிகளாகும். இவை யோகத்தின் பத்துக் கட்டளைகள் என்றும் கூறப்படும். அவ்வாறே நியமம் என்பதில் புறத்தூய்மை, அகத்தூய்மை, தபம், ஜெபம், அடக்கமுடமை, நடுநிலமை, மனத்திருப்தி, கல்வி, கடவுள் நாட்டம் என்றும் ஒழுக்கப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன. ஆசனம் என்றால் உடலை தன் வசப்படுத்திக் கட்டுப்பாட்டில் வைத் திருத்தல், ஆசனம் என்றால் "இருத்தல்" என்றும் பொருள் படும். உடலை ஆசனங்கள் என்னும் பயிற்சிகள் மூலம் தூய்மையாக வைத்திருத்தலாகும். இயம நியமங்களைப் பின்பற்றி ஒழுகும் போது உடலை யும் யோகத்தில் இருக்கத்தக்கதாக தகுதி பெறச் செய்தல்: அதனால் உள்ளமும் உறுதியடையும். சரீரம் அசையாது இருத்தலே ஆசன முறை யாகும்.

ஓம் என்பது ஆதாரமந்திரமாதலால் கிறிஸ்த மதமும் பிரார்த்தனையில் இறுதியில் ஆமென் எனவும் அதே பொருளில் இஸ்லாமிய மதத்த வரும் ஆமென் வாழ்த்தி முடிப்பதுண்டு. சீக்கியமத நூலலான ஜப்புஜி "ஒன்றாகிய ஓங்காரம்" என்றும் நேபாளியர் ஓம் பேமியி எனவும் தீபெத்தியர் "ஓம் மணிபத்மே ஓம் எனவும் பௌத்தமும் ஓங்காரத் துடனேயே தமது பிரார்த்தனைகளைத் தொடங்கு கின்றன. இந்து ஆலயங்களின் தோற்றத்தினை முழுமையாகக் கூர்ந்து நோக்கிளால் ஓம் என்ற வடிவிலேயே அமைந்துள்ளதைக் அறிஞர் பலரும் விளக்கியுள்ளனர். விநாயகர் வடிவினையும் அவர் திருமுகத்தையும் ஓம் என்னும் பிரணவப் பொருளாக ஞான நூல்கள் விளக்கியிருக்கின்றன. எனவே ஓங்காரம் தத்துவப் பொருளையும் பிரணவப் பொருளையும் குறிப்பதனால் உடலின் இயக்கத்திற்குக் காரணமான பிராணனும்

பிரணவம் போன்றதாகும். ஆகையால் அலையும் மனதினை இழுத்துப் பிடித்துத் தன் வசப்படுத்தி நிலை நிறுத்தற் சக்தியும். ஞானசக்தியும் இப் பயிற்சியால் அதிகரிக்கின்றன. எனவே பள்ளிப் பருவ மாணவர்கட்கு இது சிறந்த பயனை யளிக்க வல்லது சிறந்த உளவியற் சிகிச்சையினையும் வழங்குகின்றது. சில இடங்களில் யோகப் பயிற்சி இன்று வெறும் உடற் பயிற்சியாகவே விளங்கு கின்றது. அப்பயிற்சி ஆன்மீக பயிற்சியுடன் இணையுமானால் குழந்தைகளிடத்து சிறந்த நற்பண்புகளை உருவாக்கமுடியும்.

**தியாணமும் திருக்கல்யாணமும்**

பிராணசக்தி, ஜீவசக்தி இரண்டின் சந்திப்பும் உடலில் உயிர் இருக்கும் வரை இரவும் பகலும் இடைவிடாது நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஆதாரங்களும் சுழன்று கொண்டேயி ருக்கின்றன. இந்த இணைப்பும் நின்ற சக்கரங்கள் சுழல்வதும் நின்று விட்டால் அந்த உடலும் உடனே இயக்கமற்று நின்று விடுகின்றது. அதே சக்தியானால் தோற்றம் அனைத்துமே மாயமாய் மறைந்து விடும். எனப் பண்டைய ஞான இலக்கி யங்கள் எடுத்துக் கூறியுள்ளன. அதனால் உட லிலே உறையும் குண்டலினியாகிய பிராணசக்தி பெண்தன்மையுடையது அதனால் அம்மை எனவும், ஜீவசக்தி ஆண்தன்மையுடை யது "அப்பன்" எனவும் விளக்கப்பட்டன.

இவ்விரண்டிற்கும் இடைவிடாது நடந்து கொண்டிருக்கும் திருமணசம்பந்தத்தினாலே உலகிலே சைவசித் தாந்தம் விளக்கியது போன்று தனு, கரண, புவண, போகங்கள் தோன்றுவதும் நிலைபெறுவ தாகவும் கூறப்பட்டுள்ளன. அதுவும் ஒரு ஒழுங்கு நியதிக்குட்பட்டே நடைபெறும் என்பதினை சிவா கமங்கள் கூறும் நியதித்துவ மும் விளங்கியிருக் கின்றது. தினம்தோறும் நடை பெறும் அதன் இயக்கசக்தியை அத்திருமணத் தின் அறிவிப்பா கவே ஆலயங்களில் பள்ளியறைப் பூசை வைப்ப தும் திருவிழாக்காலங்களில் இறுதி யாகத் திருக்கல்யாணம் நடத்துவதும் அத்தத்துவத் தின் உட் பொருளை உணர்த்தும் காரியங்களாக அமைந் தன. ஆகையினால் மனிதர்களது இறுதி விடுதலையின்பமும் இணைப்பும் ஜீவான்மா பரமான் மாவுடன் இரண்டறக் கலந்து முத்தி யின்பம் பெறுவது என்ற கொள்கை விளக்கமும் இத்திருக் கல்யாண வைபவத்தின் உட்பொரு ளையே விளக்குவன எனக் கூறமுடியுமா என்பதும் சிந்தனைக்குரியவையாகும்.

**ஆழ்நிலைத் தியானம்**

தியானத்திலே ஆழ்நிலைத் தியானம் என்று ஒன்றுள்ளது. தற்காலத்தில் உயர்நிலைக் கல்வி யாளர்களிடம் அதிக செல்வாக்கினையும் கவர்ச்சி யும் நிறைந்த பலன்களையும் வழங்கியி ருப்பது இதன் தனிச்சிறப்பாகும். யோக வாழ்வியல் என் பது இன்றைய நவீனயுத்திலே "ஆழ்நிலைத் தியானப் பயிற்சி மூலமே அதிகமாக முன்னெடுக் கப்படுகின்றதென்பதற்கு அறிவியல் ரீதியாகவும் பல சான்றுகள் கிடைக்கின்றன. "புறப்பொருளின் மேல் அலைகின்ற மேல் மனதின் ஓர் ஒலியின் வாயிலாக ஆழ்நிலைக்குக் கொண்டு சென்று மெய்யுணர்வு பெற வைப்பதுதான் ஆழ்நிலைத் தியானம்" என இன்று தியானமாவது கல்வியாளர் களிடையே விளக்கம் பெற்றுள்ளது கடலின் மேல் பரப்பில் தான் கொந்தளிப்புக்கள் அதிகமாக உள்ளன. அதன் அடித்தளமோ மிகவும் அமைதி யாக, அசைவற்றாக இருக்கின்றது. அவ்வாறே மனதின் மேல் நிலை குழம்பமாக கொந்தளிப்பாக இருக்கின்றது ஆனால் மனதினுடைய ஆழ்நிலை மிகவும் அமைதியாக இருக்கின்றது. மனம் அலை பாய்வது இயற்கையானதே என்னும் இப் பயிற்சி யினால் புலப்படுகின்றது. மனதைக் கட்டுப்படுத்தித் தியானம் செய்கின்றபோது பற்றற்ற தன்மை ஏற் படுகின்றது இன்றைய அறிவியல் அறிஞர்களும் இத் தியானஇயக்கம் நிறைந்த பலன்களைத் தரு கின்றது என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தற்காலத்தில் மனித குலத்திற்குப் பலநவீன வைத்திய சிகிச்சை முறைகள் நோய்களிலிருந்து பாதுகாத்தற் பொருட்டு அளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலே ஆழ்நிலைத்தியானமும் ஒரு சிகிச்சை முறையாக இன்று பலருக்கும் பயன்படுகின்றது.

கூறப்பட்டுள்ளது. இந்திய மருத்துவர்களும் மேலைநாட்டு மருத்துவர்களும் தாம் சிகிச்சை செய்வதற்கு முன்னர் முதலில் நோயாளிகளைத் தம்மிடம் தியானம் கற்பதற்கு அனுப்புவதாக சென்னை ஆழ்நிலத்தியானமையம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. ஆழ்நிலைத் தியானப் பயிற்சி யின் போது மனதில் இயக்கம் குறைக்கப்படுகின் றது. உடலின் இயக்கமும் சற்றுக்குறையும் போது ஆழ்ந்தஓய்வு உடலுக்கும் மனதிற்கும் கிடைக் கின்றது. அப்போது தேவையில்லாத மனதில் பதிந்துள்ள அழுத்தங்கள். அழிவுகள் நீக்கப்படு கின்றன. களைப்பு இருவகையில் நீங்குவதுண்டு ஒன்று மேல் நிலையில் தோன்றும் களைப்பு (Tiredness) மற்றது ஆழ்நிலையில் ஏற்படும் களைப்பு (Stress) இது அழுத்தங்கள் எனப்படும். ஆழ்நிலைத் தியானத்தின் போது இந்த இரண்டு வகையான களைப்பும் நீங்கி உடலும் மனமும் சீராகத் தொழிற்படுகின்றது. இதனால் உறக்க மின்மை மனக்கவலைகள், இதயநோய்கள், இரத்தஅழுத்தம் குறைதல், நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாதல் ஆஸ்த்மா குறைதல் என்னும் வகையில் பல்வேறு உடல் நலம் மன நலன்கள் விருத்தியாகி வாழ்விலே படப்படப்பு பதட்டநிலை குறைந்து அமைதியும், ஆறுதலும் சாந்தமும் உண்டாகின்றன என யோகாசன மருத்துவம் என்ற நூல் கூறும். குடிப்பழக்கம் சிகரட்பிடிக்கும் பழக்கம் போதை மாத்திரைப் பழக்கம் இவற்றிற் கும் அடிமையானவர்களைத் திருத்துவதில் ஆழ் நிலைத்தியானம் மிகுந்த நிறைவான பலனை யளித்துள்ள தென்பது ஆய்வாளர் கணிப்பீடாகும். இவை சைவசித்தாந்தம் கூறும் சிறப்பான உளவியல் சீர்மியங்களாகும்.

மாணவசமுதாயத்தைப் பொறுத்தவரை அவர்கள் தேர்வில் வெற்றிபெற்றால் மட்டும் போதாது அது மாபெரும் வெற்றியாகி உலகம் பாராட்டும் வகையில் இருக்க வேண்டும். ஆனால் உழைத்த உழைப்பு கொஞ்சமாக இருக்க வேண் டும். பயன்நிறைய ஏற்பட வேண்டும் என்றால் ஆழ்நிலைத் தியானமே அதற்குக் வழிகாட்டிருக் கின்றது. அவர்களது நினைவாற்றலை வளர்த்து விட மன எழுச்சிகளைக் குறைத்து விட ஒழுங்கும், கட்டுப்பாடும் வளர ஆழ்நிலைத் தியானம் சிறந்த பயிற்சியளித்துள்ளது. என்பது பல்கலைக்கழகம் கல்லூரிகள், பள்ளிகள் என்பவற்றின் பேராசிரியர் கள், அறிவியளாளர்கள், முதல்வர்கள், ஆசிரியர் கள் எழுத்தாளர்கள் அனைவரும் ஒப்புக் கொண் டுள்ளமை ஆழ்நிலைதியானத்தின் சக்திமிக்க ஆற்றல் திறனை அறிவிப்பதாகக் காணப்படுகின் றது. இன்றைய சத்தியசாயி ஆன்மீக மேம்பாட்டுக் கல்வி நிலையங்கள் அமிர்த விஸ்வவித்யாபீடம் வாழும்கலை மையம், மனவளக்கலை மன்றங் கள் போன்ற பல உலக ஆன்மீக பல்கலைக்கழ கங்கள் இத்தகைய தியானநிலையங்களாக விளங்குவதை அறிந்து கொள்ளமுடியும்.

**யோக நெறியின் அறிவியற் சிந்தனைகள்**

இன்றைய விஞ்ஞான உலகிலே யோக மார்க் கமும் விஞ்ஞானசிந்தனைகளைக் அடிப்படை யாகக் கொண்ட ஒரு உன்னதமான வாழ்வியல் நெறி என்பதனை நவீன கால ஆராய்ச்சிகளிலி ருந்தும் ஒப்புக் கொள்ள முடிகின்றது. தியானப் பயிற்சியானது இன்று குழந்தைகள், மாணவர் கள், முதியவர்கள் வரை உலகில் எல்லா நாடுகளி லும் மனித ஆளுமைத்திறன் வளர்ச்சியின் பொருட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இன்றைய அறிவியல் உலகில் யோகமார்க்கம், தியானமார்க் கம் என்பவற்றிற்குப் பெருவரவேற்புக் கிடைத் திருப்பதே யோகவாழ்வியல் நெறிக்குக் கிடைத்த பெருவெற்றியாகும் மானிடவியல் விஞ்ஞானிகள் மனித மூளையின் மொத்தத்திறனில் ஒரு பங்கு மட்டுமே உபயோகிக்கப்படுகின்றமை போன்று முள்ளந்தண்டுவடமும் அதையொட்டிய நாளமில் லாச் சுரப்பிகளும் முழுச் செயலுடன் இயங்கவல் லது எனவும் அவற்றிற்கு அதிகசக்தியை வழங்கி ஊக்குவித்தால் அவை அதிகத்திறமையை வெளிப் படுத்தும் எனக் கருதுகின்றனர்.

நவீன விஞ்ஞானம் ஆறாம் அறிவினைக் காந்த சக்தியுணர்வு என்று தான் சொல்லுகின்றது. நெற்றிப்பகுதியில் மூக்கின் உச்சியில் மிகவும் சக்தி வாய்ந்த காந்த லோகம் சிறிதளவு இருப்பதாகவும்

அந்த இடத்தின் ஆக்ஞாசக்கரம் எனவும் யோகியர் சிறப்பித்துள்ளனர் இதுவே தத்துவஞானத்தில் ஞானபீடம் ஞானக்கண். ஞானதிருஷ்டி என அழைக்கப்பட்டிருக்கின்றதா என பொருத்தி பார்க்க லாமா? சைவாலயங்களின் அமைப்பிலும் சிவாக மங்கள் யோகசரீர அமைப்பினை அடிப்படை யாகக் கொண்டே சிவாலய அமைப்பு விதிகளும் அமைந்துள்ளன நமது சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களும் கோயிலில் காணுகின்ற யாக மண்டபம் அலங்காரமண்டபம். திருக்கல்யாண மண்டபம். நிருத்த மண்டபம். மகாமண்டபம். அர்த்த மண்டபம் என்னும் ஆறு மண்டபங்க ளைத் தெரிவிக்கின்றன. இதனை அறிவியலாளர் விபரிக்கும் கருத்துக்களுடன் ஒப்பிட்டால் அணுவுக் குள்ளே இருக்கும் தூணின் அமைப்பும் இயக்க மும் அண்டத்திலிருக்கும் கோள்களின் அமைப் பும் இயக்கமும் உயிர்ப்பொருள்களின் அடிப்படை யான செல்களின் அமைப்பும் இயக்கமும் ஏறத் தாழ சிவலிங்கமூர்த்தத்தின் அமைப்பினையும் ஒத்திருப்பதுகண்டு அறிவியலாய்வாளர்கள் வியப் படைகின்றனர். என செய்திகள் வருகின்றன.

மனித உடலும். சிவாலயமும் ஒரே இலட்சியத் தின் அமைப்பினை எடுத்துக் காட்டி மானிட சமுதாயத்தினை உயிர்நிலைக்குறிக் கோள்களு டன் வாழச் செய்வதற்குத் தூண்டுதலாக உள்ள தெனவும் கருதலாம். கட்டுக் கடங்காது துள்ளித் திரியும் மனதினை அடக்கத் தெரிந்தவனே மகா யோகி ஆகையால் இல்லறவாழ்வில் அனைவருக் கும் மனக்கட்டுப்பாட்டுப்பயிற்சிக்கு யோகசாதனை உயர்பயனளிப்பதாகவுள்ளதென்பதில் தவறி ல்லை. மெள்சர் (mezer) என்ற ஜேர்மன் நாட்டவர் சார்ளஸ் பெல் (Charles Bells) போன்ற அறிவியல் மேதைகள் உள்ளங்கையில் விசித்திரமான வகையில் நுண்ணுயிர்கள் பரவிக்கிடப்பதாகவும் அவற்றுக்கு தனிப்பட்ட ஒலிஅதிர்வுகள் உண்டு எனவும் கூறுவர். உலகிலே கோடானு கோடி மக்கள் இருந்தாலும் கையின் உட்பாகத்து ரேகை கள் அதிர்வுகள் ஒரே மாதிரி இருப்பதில்லை இந்த வகையில் கைரேகை ஆய்வுகளும் குற்றவாளிக ளைக் கண்டுபிடிக்க அடையாளம் காண உதவு கின்றன. நுனிவிரல்களில் உணர்ச்சி நரம்புகளும் செயற்றிறம் அதிகமுள்ளன எனப்படும். காலின் விரல்கட்கு இவை இடையாது மனித மின்சக்தி உள்ளங்கையிலும் விரல் நுனிகளிலும் அதிக முள்ளது. உள்ளங்கை. விரல்நுனிகளில் சக்தி கால்கட்டை விரல் வழியாக வெளியேறுகின் றது என்பதனையும் கிரிலியன் புகைப்படக்கருவி மூலம் படம் பிடித்துள்ளனர். மனோசக்தி அதிக மானால் உள்ளங்கையிலிருந்து அதிர்வுகளும் அடர்த்தியும் அதிகமாகின்றன.

அதனால் தான் மனோசக்திஆற்றல் அதிக முள்ளவர்கள் பெரியவர்கள். மகான்கள். ஆசீர் வதிக்கும் போது கைகளைத் தூக்கி வாழ்த்துவ துண்டு. அப்போது அதன் சக்தி அலைகள் வெளிச் சென்று மக்களை சக்திமான்களாக்குகின்றது என நம்பப்படுகின்றது. குழந்தை களை மிருகங்களை மெல்லத்தடவ அவை வசியமாவதற்கும் இதுவே காரணமெனப்படும்.

எனவே மனோ சக்தியலைகளை அதிகரிக்கச் செய்வதற்கு யோகக்கலை சிறந்த சாதனமாகக் கொள்ளப்படும். தியானத்திலீடுபடும் போது ஆழ்ந்த ஓய்வு மனதிற்கும் உடலுக்கும் கிடைக்கின்றது என்பது யோகிகளின் அனுபவமாகும். இன்று இக் கருத்தினை டாக்டர். றொபேட்கீத் வாலஸ் Dr. Herbert ஸ்பென்சர் போன்றோர் விளக்கும் போது இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட இருபத்தி இரண்டுபேர்களைவைத்து செய்த ஆய்விலே அறுபத்தி மூன்று வாரத்தியானப் பயிற்சியின்பின் உயர்ந்த அழுத்தம் - குறைந்த இரத்த அழுத்தம் என்பன சமநிலைக்கு வந்துள்ளன. என்று ஆய்வு களில் விளக்கியுள்ளனர். தியானப்பயிற்சியானது இளமையிலே ஆரம்பிக்கப்பட வேண்டும். இது காட்டுக்குப் போகும் விடயமல்ல இளமையிலே தியானம் செய்யும் போது அச்சமயம் எண்ணப் படும் எண்ணங்கள் வேரூன்றிச் செழித்து வளர் ந்து வலிமை பெறுகின்றது. சோம்பேறியின் மூளை சைத்தானின் பட்டறை எனப்படும். சிறு வயது முதற் கொண்டே மனதைக்கட்டுப்படுத்தப் பழகிவிட்டால் புகை. மது. மாதர். சூதாட்டம்

என்றும் தவறான வழிகளில் செல்வதிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றன.

தியானத்தைப் பழகிவிட்டாலே மாணவ சமுதாயமும் கூட வளர்ச்சியடைந்து தொழில் அதிப ராக கல்விமான்களாக, விஞ்ஞானிகளாக, சிந்த னையாளர்களாக பேச்சாளர்களாக உயர முடியும். பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கட்கு கல்வித்துறையிலே அவர்கள் நினைத்தவற்றைச் சாதனையாக்க தியான சக்தி துணைபுரிகின்றது. மாணவர் நடத்தைகளில் மாற்றம், மனதிலே உறுதி, படிப்பிலே ஆர்வம் , சிந்தனையலைகளில் ஒழுங்கு, மூளைச் செயற் றிறன்களில் ஒழுங்கு யாவும் அதிகரிக்கின்ற தென பல சான்றுகள் காட்டப்பட்டுள்ளன. ஆக்க அறிவு, கற்கும் திறன் அதிகரிப்பதற்காவும், தன்னம் பிக்கை, விளையாட்டுத் துறையில் ஆர்வம், மனதில் சக்தி அதிகரிக்கும் தன்மை என்பன அதிஉயர்வாகக் காணப்படுகின்றதென யோகப் பயிற்சியாளர்கள் தியானம் பயிற்சி பலன் அடைந்த வர்கள் பலரும் கூறுகின்றனர்.

இதன் விளைவாக உலகில் பல பாகங்களில் தியான மன்றங்களும் தியானம் பற்றிய பாடத்திட்டங்களும் எழுந்தன. 1963ல் பிரிட்டனில் நடந்த தியானம் பற்றிய அறிவியல் ஆய்வுகள், 1976ல் ஆழ்நிலைத்தியான மேல்நிலைப்பயிற்சி அமெரிக்க சர்வதேசப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டது. 1980ல் சுவிற்சலாந்தில் மகரிஷியால் ஐரோப்பிய ஆராய்ச்சிப்பல்கலைக் கழகமும் 1986ல் வேத விஞ்ஞான பல்கலைக் கழகம் - டெல்லி போன்ற ல தியான மையங்கள் பல்கலைக்கழகங்களினாலும் முன்னெடுக்கப் பட்டமை யோகமார்க்கத்தின் பெரும் பயன்பாட்டை அறிவிப்பதாகவுள்ளன. இத்தியான இயக்கத்தின் ஓர் சிறந்த அம்சம் யாதெனில் எந்த இடத்திலும் எந்த நிலையிலும் இத்தியானம் செய்ய உகந்தது மட்டுமல்ல எந்த விதமான சமயாபிமானங்களும் கடந்த ஒரு சர்வதேச ஆன்மநேய ஒருமைப்பாட் டினை இப்பயிற்சிகள் எடுத்துக்காட்டுகின்றன என்ப தாகும்.

தியானத்தால் உலக வாழ்க்கை எளிதாகி விடுகின்றது அமைதியுடனிருந்து தெளிவான முடிவுகளை எடுத்துச் செயலாற்றும் திறன் அதிகரிக்கின்றது. தியானமாவது உண்மையைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஒரு விஞ்ஞான முறை யாகும் என்பதே தற்கால ஆய்வாளர்களின் கருத் தாக அமைந்துள்ளது. எனினும் சிலர் நவீன உளவியல் பகுப்பாய்வுகள் தவறு என்றும் கூறு சுவாமி அரவிந்தர்அவை யோக வாழ்வியலுடன் சேர்க்க முடியாதவை எனவும் நவீன உளவியல் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்ற தென்றும் துடுக்குத்தனமும் தடுமாற்றமுமுடை யதும் எல்லா அறிவியல் (Freud) துறையிலும் நடப்பது இதிலும் நடக்கின்றது என்னும் "பிறொய்ட்" என்பாரின் உளவியல் சிந்தனைகள் யோக முறைக்கு முற்றிலும் முரணாவை; குறுகிய சூத்திரத்தைக் கொண்டு இயற்கை முழுவதையும் விளக்கமுற்படுவது மனித அறிவின் தவறான பழக்கம்; இத்தவறான பழக்கம் உளவியல் ஆய்வுத்துறையில் கட்டுமீறிப்போகாதது; இதற்கு அதிக முக்கியத்துவமளிப்பது ஆபத்தான பொய் மையாகும். மனதையும், உடலையும் பிராண னையும் முன்னயதை விட அசுத்தமாக்கிவிடும். என பலவாறு விமர்சித்துள்ளார். சேற்றினை ஆரா யாது முளைக்கின்ற தாமரையின் தத்துவத்தை அறியமுடியாது. அதன் ரகசியம் பிரபஞ்ச ஏணியில் மலரும் அரவிந்தரின் மூலதத்துவமாகும். அதையே ஒளிபெற்ற உளவியல் துறையானது தியான இயக்கங்கள் மூலமாச் செய்துகாட்டப்போகின்றது எனவும் ஆணித்தரமாக அவர் தமது உளவியற் சிந்தனைகள் தியானத்தின் வழி மானிட சமூக த்தை ஒழுங்குபடுத்தி உயர்நிலைக்கு அழைத்துச் செல்வதாகவே அமையும் எனவும் எடுத்து ரைத்தமை ஈண்டு நினைவு கூறத்தக்கது.

மனிதமின்சக்தி பிராணன் எனக்கருதப்படும் அது உடல் முழுவதும் பரவிச் செயற்படுவது நாடி களினால் தான். என்பதும் நாடிகளே எண்ணங் களையும் மின்துடிப்புக்களையும் எடுத்துச் செல் கின்ற தென்பதும் சித்தர்கள் சிந்தனையாகக் காணப்படுகின்றது. குண்டலினி சக்தியும்

மூலாதாரத்திலிருந்து நாடிகள் வழியாகவே செயல் படுகின்ற தென்பதனையும் சித்தர்களே கண்டறிந்து உணர்த்தினார்கள். நாடிவைத்தியம். மற்றும் சைவசித்தாந்தம் கூறும் தசநாடிகள் பற்றிய தத்துவங்கள் இவற்றின் தாற்பரியத்தினை உணர்த்துவனவாக கொள்ளமுடியுமா என ஆராய்வதும் அவசியமாகும். பஞ்சநத தியாக சுந்தரம் என்பாரின் ஆய்வுகள் இவ்விடத்தில் கவனத்திற்குரியவையாகும். நமது நாட்டு யோகியரும் சித்தர்களும் சிறப்பான ஆற்றல் பெற்று நெடும் காலம் வாழ்ந்தனர் என அறியப்படுகின்றது. அவர்கள் திரிகால உணர்வும், அட்டமா சித்திகளும் பெற்று விளங்கினர். அவர்கட்கு எப்படி அத்தகைய ஆற்றல்கள் கிடைத்தன எனச் சிந்தித்தால் அவர்களது நேரிய சிந்தனைகள் அவர்களை நெறிப்படுத்தியிருக்கவேண்டும் பிராண யாமம் தவம், ஒழுக்கம்.

தியானம் யோகப் பயிற்சிகளால் அவர்கள் தமது ஜீவமின்சக்தி வலுவினை அதிகப்படுத்தி யோக நெறி வாழ்க்கை முறையினைக் கடைப் பிடித்து வாழ்ந்த முறைமையினைச் சித்தர் இலக்கியங்கள், சித்த மருத்துவ வரலாற்றுக் செய்திகளிலிருந்து அறிய முடிகின்றது. அவர்களது உடலினால் எப்பகுதிகளி லும் அவர்கள் ஜீவமின் சக்தி வலுவினைக் குண்டலினி என்னும் ஜெனறேற்றறிலிருந்து உற்பத்தியாக்கி மூளை, இருதயம், முள்ளந்தண்டு நாடிகள் நாளமில்லாச் சுரப்பி கள் அனைத்தையும் திறம்பட இயக்கும் சக்தி படைத்தவர்களாக விளங்கினர். அவர்கட்குத் தெய்வீகஆற்றல்களும் சித்துக்களும் இவற்றால் கைவரப் பெற்றன வாயின. இவ்வகையான கைவரப் பெற்ற சகல சித்திகளாலும் அவர்கள் சதாரண மனிதர்களை விட அசாதாரண மானவர்களாகவும் தெய்வ நிலை பெற்றவராகவும் மதிக்கப் பெற்றனர். இதுவே சீவன் சிவமாகும் தன்மை என்பதான தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவ லிங்கம் என்ற திருமூலரின் சித்தாந்த சிந்தனையாகக் கொள்ள முடியுமா? என்பதும் சிந்தனைக் குரிய விடயமாகும்.

சைவசித்தாந்தமும் சமரசன்மார்க்கமும் ஞானம் அல்லது அறியும் நெறி என்பது சைவ சித்தாந்தத்திலே வாழும் நெறிபற்றிய ஒரு வாழ்வியல் மார்க்கம் என்றே கருத்தியலை அஷ்டப்பிரகரண தத்துவக் கொள்கைகளும் சரி மெய்கண்ட சாத்திரங்களும் சரி - விடுதலைக் கான வழி முறைகளில் ஞானம் தான் இறுதியான வழிமுறை என்பதனையும் அழுத்திக் கூறுவன வாக உள்ளன. சித்தாந்தம் என்ற சொல்லினையும் சமரசசன்மார்க்கம் என்னும் தொடரையும் முதன் முதல் திருமூலர் என்பவரே பயன்படுத்தியுள்ளார். சித்தாந்த தத்துவமானது சிவவழி பாட்டியலுடன் இணைந்து சைவசித்தாந்த மாகியது. சமரசன்மார்க்க விழுமியமானது பிற் காலத்தில் வள்ளலார் தாயுமானவர் போன்றவர்களால் பின்பற்றப்பட்டு பெருவழக்காகியது இந்த சமரச நெறியிலே யோகமார்க்கமே அதிமுக்கிய பங்கு வகிக்கின்றது. திருமந்திரமும் சிவாகம முடிபுகளின் வாயிலாக ஞானவிடுதலை என்பது யோகநெறியினால் அடையப்படுவது என்பதனை சைவசித்தாந்த யோகபாதத்தடன் இணைத்தும் விளங்குகின்றது. உயிர்கட்குச் செய்யும் மனித நல முன்னேற்றமே இறைவனுக்குச் செய்யும் வழிபாடு என்பதனையும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும் பொதுமைக் கோட்பாட்டினை அன்றே திருமந்திரம் முன்வைத்துப் பேசியது. உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயர்களால் அழைத்துப் போற்றுகின்றன. "சைவம் எல்லாச் சமயங்களையும் அரவணைத்து சகோதரநோக்குடன் சகிப்புத்தன்மையுடன் விளங்கும் சமயம் சமரச நோக்குடைய சன்மார்க்க சமயம் எனப்போற்றப்படும்"

சைவசித்தாந்தமும் சமரசன்மார்க்கமும்என்று ஜி.யு. போப் என்றும் அறிஞர் குறிப்பிட்டார். அவ்வாறே சைவத்திலே பல சமய உட்பிரிவுகள் காணப்பட்டாலும் அவையாவும் முத்திநிலை வேறுபாட்டுக் கொள்கை தவிர முழுமுதல் கடவுள் வழிபாட்டிலே சிவன்: என்னும் ஒரு பரம் பொருளே அனைத்தினையும் இணைத்து நின்று அவற்றின் ஒருமைப்பாட்டு நெறியினை உணர்த்வாக

உள்ளது. சைவசித்தாந்தம் கூறும் சமரசநெறி இரு தன்மைப்பட்டது எனக் கூறலாம். ஒன்று சித்தாந் தம் தம்மோடொத்த சைவப்பிரிவுகள் தத்துவப் பிரிவுகளுடன் கொண்ட உறவு; மற்றொன்று சைவமல்லாத ஏனைய உலகசமயங்களுடன் அது கொண்டிருக்கும் தொடர்பும் ஒத்துழைப்பும் உளப்பாங்கும் ஆகும். சமய சமரசநிலையும் உலகின் சமாதானம் அமைதிக்கு இன்றியமையா தாகும். பரம் பொருளுடன் அன்பினையும் முத்தி யின்பத்தினையும் பற்றிப்பேசும் தத்தத்துவ ஞான மாவது சமுதாயவிடுதலைக்கா அல்லது ஆன்ம விடுதலை நோக்கியா பயணம் செய்கின்றது என்ற வினாவானது இன்றய இளம் தலைமுறையினரி டையே பல்வேறு சிந்தனைகளையும் பரிண மிக்கச் செய்கின்றது சமயம் என்பது மதம், இனம், மொழி, ஆண், பெண், முதியவர், இளையவர் என்ற பிரிவினைக்கட்கும் அப்பாற்பட்டு நின்று அது ஆன்மாவின் உயர்ந்த விழுமியம் பற்றியே சிந்திப்பது உண்மையானால் சமுதாய நடை முறைகளில் சமயத்தின் பெயரால் கோயில்கள், சடங்குகள், கிரியைகளின் பெயரால் பொருளா தாரச் சுரண்டல்கள், சமூக ஏற்றத்தாழ்வுகள், சாதீயம் போன்ற சமூகப்பிரச்சனை, வறுமை போன்ற துயரங்களை நீக்குவதற்கு அவை என்ன வழி சொல்கின்றன என்பது முதலில் கூறப்பட வேண்டும் என்பது நியாயமான நிலைப்பாடாகவே கருதமுடியும். அனைத்து உயிர்களும் இறை வனின் அம்சம் என்பதனை உணர்ந்து கொண் டால் சமயபேதம் பராட்டாது சமுக சேவையில் சமயநெறிகள்யாவும் யாவருக்கும் சேவைசெய்ய முன்வரவேண்டும் இத்தகைய தொரு நிலைப் பாட்டிலே தத்துவஞானம் சொல்லும் அகம் பிரம் மாஸ்மி என்பதும், அன்பே சிவம் என்பதும் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்னும் போதனைகளும் நடைமுறைப் படுத்தப்பட்டு அவை சமூகத்தில் பரிசீலிக்கப்பட்டதாக இருக்கும். அதனை விடுத்து தத்தமது சமய நெறி கட்கு ஆட்சேர்க்கும் நோக்குடனே செய்யும் சேவை கள் உதவிகள் ஆன்மநேய சமரச நெறியாகாது.

சைவசித்தாந்தமும் பக்திமார்க்கத்திலிருந்து முத்திமார்க்கம் வரை எங்கும் சாதியத்தை ஒரு தடையாகக் கருதியமைக்கு ஆதாரங்களைக் காண முடியவில்லை. இந்தநிலைப்பாட்டினைச் சிவ ஞானசித்தியார் வெகு நுட்பமாக தெரிவித்துள்ளது.

“ஞானமதில் ஞானநிட்டையுடையோர்க்கு
நன்மையொடுதீமையில்லை நாடுவதொன் றில்லை
சீல மில்லை விரதமொடு ஆச்சிரமச் செயலில்லை
தியானமில்லைச் சித்தமில்லை
கோலமில்லைச் புலனில்லைக் கரணமில்லை
குணமில்லைக் குறியில்லைக் குலமுமில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்
குணமருவிப் பாடலியோடாடலிவை
பயின்றிடினும் பயில்வர்”

சிவஞானியர்கள் சிவயோகியர் சிவசித்தர்களது அருள்நிலையும் அவர்கள் சாதி, சமய, சாத்திர சம்பிரதாயங்களையும் கடந்த குணசீலர்கள் என மிகவும் தெளிவாக அறிவுறுத்தியுள்ளது. ஒருவர் க்கு மலநீக்கமடையும் போது சாதிசமயா சாரக் கட்டுப்பாடுகள் அனைத்தினின்றும் அவன் விடுபடு கின்றான் என்பது மதங்கம், மிருகேந்திரம், சுவாயம்புவம், சர்வஞானேந்திரஆகமங்களிலும் சுட்டிக்காட்டிப்பட்டுள்ளது.

“சரியை, கிரியை யோக, நியமங்கள்
செறிவு அன்னா ஆச்சிரமங்கள் முதலாய
நிகழ்த்தும் தேசகாலம் திக்கு
சிவஞானி யர்க்காகா”

என்பது சிவாகமங்களின் சாரமாகும் இந்த நிலையினை ஒருவர் அடைந்து விட்டால் அவர் களிடத்திலே சாதியபிமானம், சமயாபிமானம், இன, மொழியபிமானமும் கடந்த ஒருமைத் தன் மையில் சிவத்தன்மை கலந்திருக்கும் உலகியல் வாழ்விலே இருக்கும் வரை தான் மனிதருக்குள் பேதங்கள் வர்க்கங்கள் வேற்றுமைகள் அகன்று விடும் ஆன்மநேயத்தில் உயர்நிலையடைந்து விட்டால் அன்பு, பரிவு, கருணை இவையே எல்லா அபிமானங்களையும் விட மேலோங்கியிருக்கும் இந்தநிலையடைந்தாரை வர்க்க, இன, சாதி, மத பேதங்கள் அணுகாது என்ற நிலையிலே தான்

தாயுமானவர் போன்றவர்கள் வேதாந்த சித்தாந்த சமரச நிலைகண்ட "வித்தகச் சித்தர் கணமானார் கள். கிறிஸ்தவர்கள் யேசு எனவும், முகமதியர்கள் அல்லா எனவும் பௌத்தர்கள் புத்தர் எனவும் சைவம் சிவன் எனவும் அழைக்கும் பெயர்களில் வேறுபாடு இருந்தாலும் அவை பரம் பொருள் ஒன்று என்ற உண்மையை உணர்த்துவன வாகும் என்பது இவற்றால் பெறப்படும்.

சைவசித்தாந்த சாத்திரங்களில் இக்கருத் தானது "யாதொரு தெய்வம் கொண்டீர் அங்கே மாதொருபாகனையும்தாம் வருவார்" என உணர்த்தப்பட்டிருப்பதனையும் ஒப்பிட்டுப்பார்க்க லாம். உலகிலே உள்ள எல்லாவச் சமயநெறிக ளும் ஒரு கடவுளையே பல பெயரால் வாழ்த்துவதும் எல்லாத் தத்துவஞானிகளும் இறைவனின் திரு வருளினால்தான் அமைதிகாணமுடியும் எனக் கூறுவதிலும் ஒருமைப்பட்டே நிற்கின்றன எனலாம்.

"எல்லாச்சமயங்களையும் அரவணைத்துச்
சகோதர நோக்குடன் சகிப்புத்தன்மையு
டன் விளங்கும் சமயம் சமரச நோக்குடைய
சன்மார்க்க சமயமாகப் போற்றப்படும்"

என்றார் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார்.

"அண்டர் கோண் இருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானியர்
கண்ட கோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே"

என்ற வழியிலும் யோக வாழ்வியல் நெறி நின்றோர் ஒழுகியதில்லை என்பதற்கு சிவயோக சுவாமிகள் சிறந்த இலக்கணமாவதுடன் சமரச சன்மார்க்க நெறி யோக நெறி என்பதையும்.

"மயலறியா மௌனத்திலுற்றேன்
செயலறியாச் சிவத்தைக் கற்றேன்
இயமநியமாதி யாவையுமற்றேன்"

என்ற பாடலில் தொளிவாக்கினார்.

இஸ்லாம், கிறிஸ்து, பௌத்தம் ஆகிய சமயங்கள் அனைத்தும் தமது சமயத்தை அரச சமயங்களாக அவ்வவ்நாடுகளில் பிரகடனப்படுத்தி யுள்ளன. ஆனால் இந்துசமயத்தின் தாயகமான இந்திய நாடு தனது சமயத்தை மதச்சார்பற்ற சமய மாகவே அரசில் சாசனத்திலே பிரகடனப் படுத்தி யிருக்கும் தன்மை அதன் சமயச்சார்பின்மையை வெளிப்படுத்துவதாகவும் மதிப்பிட முடியும். ஆகை யினால் தான் உலகநாடுகளின் சமயப்பணிகள் அனைத்திற்கும் இந்திய நாடு மதிப்பளித்து கௌர வித்திருக்கின்றது. இந்த ஒன்றே சைவசமயமா னது உலகளாவிய சமயங்கள் அனைத்திற்கும் மூலமாக முதற்சமய நெறியாக விளங்கும் "தாய் அனைய சமயநெறி" என்பதைப் புலப்படுத்துவ தாகவும் கொள்ளலாம்.

சமயம் கடந்த நிலையில் நின்று சமயசமரசசன் மார்க்கத்தை நிறுவிய சைவஅருளாளர்களும் இதனை,

"மால் அறவும் சைவ முதல் மதங்களாகி
மதாதீதமான சைவமரபு வாழி" (தாயுமானசுவாமிகள்)

என உலகின் முதல் மூத்த சமய நெறியான சித் தாந்த சைவத்தை தாயுமானசுவாமிகள் வாழ்த்திச் சென்றனர்.

இவற்றிலிருந்து யோக வாழ்வியற் செல்நெறி சமயாதீத சமரசன் மார்க்கநெறி என்பதும் பெறப் படும்.

**சான்றாதாரங்கள்**


1. சிவஞானசித்தியார், திருவிளக்கம் புத்துரை, யாழ்ப்பாணம் 1971
2. சிவப்பிரகாசம் திருவிளக்கம் புத்துரை, யாழ்ப் பாணம், 1974
3. சர்வஞானோத்தராகமம், (தமிழில்) பொ. முத்தையாபிள்ளை, சென்னை, 1923
4. திருமூலர் திருமந்திரம், திருப்பறைதாள் காசிமட வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1968
5. சுவாமி, இரவிந்தர் ஸ்ரீ அரவிந்தா யோகத்தின் அடிப்படைகள், புதுச்சேரி, 1997
6. Swami Sivanandar, Kundalini yoga, Himalayas, Rishikesh, 1963
7. Avalon ARTHOR, The serpent power, madras, 1924
8. G. Vasanth, The Mysterious Kundalini

9. மு. சேகரன் அணுசக்தியும் ஓம்சக்தியும் சென்னை. 1980

10. பஞ்சந்த. தியாக சுந்தரம், ஆன்மீகமும் அறிவியலும், சென்னை

11. செல்லத்துரை சுவாமிகள், யாழ்ப்பாணம். யோகர் சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டலும் , 2004

12. யோகாசன மருத்துவம், ஸ்ரீ நடராஜ சிவாச் சார்யார் சென்னை. 1998

13. DR. பொன். இராமநாதன், மருத்துவநோக்கில் சித்தர்களும் தத்துவசிந்தனைகளும், யாழ்ப் பாணம் . 2009

14. யோகஷ் மித்ரா, பிராணாயாமம், (தமிழில்) செல்வராகவன் , சென்னை. 1999

15. யோகிராஜ் வேதாந்தரிமகரிஷி . மனவளக் கலை. சென்னை (பகுதி I, II ) 1992

16. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா, யோகத்தின் பூரணத்துவம், சென்னை 1990

17. கே. கிருஷ்ணன், மகரிஷியின் ஆழ்நிலைத் தியானம், சென்னை 2001

18. பதஞ்சலி யோகசூத்திரம், விளக்கவுரை, (தமிழில்) (N.R.சம்பத்) ஸ்வாமி, சென்னை 2000



# நல்லைக்குமரன் மலர்

நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்களை அனுப்பி வைப்பவர்கள் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் இதற்கு முன் வெளிவந்த நல்லைக்குமரன் மலரில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே வெளிவந்த கட்டுரைகள், ஆக்கங்களிலிருந்து புதிதான ஆய்வுப் பார்வையில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.
3. தயாரிக்கப்படும் ஆக்கங்களை கணனியில் தட்டச்சு செய்து அதனை ஒப்புநோக்கி இறுவட்டிலும், பிரதிகளாகவும் அனுப்பி வைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.
4. ஆக்கங்களைத் தயாரிக்கும் போது அதற்கு உதவிய ஏனைய கட்டுரைகள், நூல்களின் பெயர் விபரங்களை உங்கள் ஆக்கத்தின் கீழ் குறிப்பிடுவது பொருத்துடையது.
5. ஆக்கங்களை அனுப்புகின்றவர்கள் தங்களின் தபால் முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தவறாது குறிப்பிடுவதன் மூலம் கட்டுரைகள் தொடர்பில் ஏற்படும் ஐயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும்.

- பதிப்பாசிரியர்

# நல்லூர்க் கந்தன் ஆலய ஷண்முகர் வாசல் இராஜகோபுரம்



# 2014இல் யாழ் விருது பெறும் வித்யாசாகரம் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்

பு.ஆறுமுகதாசன்
செயலாளர், சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.



சித்தன்கேணி சிவன் தேவஸ்தான ஸ்தானிக குருவாக விளங்குபவர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள். சித்தன்கேணியைச் சொந்த ஊராகக் கொண்ட குருக்களின் தந்தையார் பிரம்மஸ்ரீ. ஞான.சபாரட்ணசர்மா. தாயார் வடிவாம்பிகை. இவருடைய வழித்தோன்றல்கள் சித்தன்கேணி சிவகாமி சமேத ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலயத் தில் ஸ்தானிக குருவாகத் திகழ்ந்து வருகின்றனர்.

வாசுதேவக்குருக்களின் பேரனார் சிவஸ்ரீ.த. ஞானபண்டிதக்குருக்கள். அவர் இவ் ஆலயத்தில் தனது கிரியைகளை செய்யும் போது சிறுவயதில் இருந்தே வாசுதேவக்குருக்களையும் தனது அர வணைப்பில் ஆலய சேவையில் இணைத்துக் கொண்டார். பின்னர் தமிழ், சமஸ்கிருதம் போன்ற வற்றையும் கற்றுக் கொடுத்தார்.

மேலும் வாசுதேவக்குருக்களது சம்ஸ்கிருதக் கல்வியை மேம்படையச் செய்வதற்காக அவரது ஏழாவது வயதில் குருகுலக் கல்வியை ஆரம்பிப்ப தற்காக யாழ்ப்பாணம் சிவானந்த குருகுலத்தில் அவரது தந்தையார் இணைத்தார். இவரின் ஒன்பதாவது வயதில் அந்தணர்களுக்குரிய உபநயனம் என்று சொல்லப்படுகின்ற பூணூல் அணியும் சடங்கினை நல்லூர் வியாகரண சிரோன்மணி.கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள் நடாத்தி வைத்ததோடு பிரம்மோபதேசத்தையும் உபதேசித்தார்.

சமகாலத்தில் இவர் தனது முன்பள்ளிக் கல்வியை சித்தன்கேணி மாதர்சங்க பாலர் பாடசாலையில் செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்களிடம் கற்று பின் ஆரம்பக்கல்வியை சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்திலும் பின் வட்டு இந்துக் கல்லூரியி லும் பயின்று தனது உயர்தரக் கல்வியை யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அதேபோல சிவானந்த குருகுலத்தில் குருப்பட்டம் பெறுவதற்குரிய கல்வியையும் கற்றுக் கொண்டார். நயினை சிவஸ்ரீ முத்துக்குருக்கள், மட்டுவில் பிரம்மஸ்ரீ.சதாசிவசர்மா போன்றோர் இவருக்கு கல்வி கற்பித்தனர். இவர் சமஸ்கிருதத் துடன் நாகரம், வானசாஸ்திரம், எண்கணிதம் போன்ற பலவற்றையும் கற்றார்.

பேரனுக்குப் பின் தந்தையார் பிரம்மஸ்ரீ சபாரத்தினசர்மா சிவாலயத்தில் பிரதம குருவானார். வாசுதேவக்குருக்கள் கற்றுக்கொண்டிருக்கும் போதே தந்தையாரது வழிகாட்டலில் தனது குல தெய்வமாகிய சித்தன்கேணி சிவாலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகளை ஆற்றியதோடு அங்கும் வேறு பல ஆலயங்களிலும் மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளுக்கும் பத்ததி வாசித்து வந்தார். அத்துடன் தனது ஆலயத்தின்

மூலம் மாணவர்களை ஆன்மீகத்துடன் இணைப்பதற்கு பல்வேறு செயற்பாடுகளை ஆற்றினார். ஆன்மீகப் போட்டிப் பரீட்சைகளை நடாத்துதல், நடனம், சங்கீதம், வீணை, வயலின், மிருதங்கம் போன்ற கலைகள் சம்பந்தமான போட்டிகளை நடாத்தி அதில் வெற்றி பெற்றவர்களை கௌரவப்படுத்தினார்.

மேலும் ஆலயங்களில் நடைபெறுகின்ற விழாக்கள், நித்திய கிரியைகள், பூசைகள், விரதங்கள் போன்றவற்றின் தார்ப்பரியங்களைக் கூறியும் வருபவர். ஆலயங்களில் நடைபெறுகின்ற கிரியைகளுக்கு விளக்கங்களும் அதன் முக்கியத்துவம் பற்றியும் அடியார்களுக்கு எடுத்துக் கூறுவதோடு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருகின்றார்.

இவர் தனது பேரனார், பேர்த்தியார் ஞாபகார்த்தமாக "ஞானரத்தினம்" என்ற பெயருடன் ஒரு ஆன்மீக அமைப்பை தனது சகோதரனாகிய பிரம்மஸ்ரீ உமாபதிசர்மாவுடன் ஆரம்பித்து பல விடயங்களை ஆற்றி வருகின்றார். இவருடன் குடும்பத்தவரும் பங்காற்றி வருகின்றனர். இவரின் தந்தையார் பிரம்மஸ்ரீ.சபாரத்தினசர்மா அவர்களின் ஆலோசனைக்கமைய ஏழை மாணவர்களுக்கு உதவுதல், உணவு வழங்கல், உடை வழங்கல், கல்வி பயில்வதற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்றவற்றைச் செய்து வருகின்றார். மேலும் பல ஆலயங்களில் சொற்பொழிவுகளை மேற்கொண்டு வருகின்றார். ஞானரத்தின வெளியீடாக வெளிவந்த பைரவ கீதங்கள் இறுவெட்டுக்கு பாடல் வரிகளை எழுதியமை, விரதமஞ்சரி காணொளியை வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கன. அர்த்தமுள்ள விவாகம், வாழ்வியற் கிரியைகள், நலம் தரும் சனீஸ்வரன், சூரிய ஆராதனை, குரு ஆராதனை, பிரதோஷ விரதம், ராகுகால துர்க்காபூஜை, ஆலயம் தொழுவது சாலவும் நன்று, தீட்சா மஞ்சரி (வடமொழி) அகிய நூல்களை எழுதியுள்ளார்.

2003ம் ஆண்டு ஆச்சார்யாபிஷேகம் என்னும் குருப்பட்டத்தினை சிவஸ்ரீ நா.சர்வேஸ் வரக்குருக்கள் மூலம் பெற்றார். அதன் பின் மகோற்சவங்கள், விவாக நிகழ்வுகள், கும்பாபிஷேகங்கள் என்பவற்றை நிகழ்த்தி வருகின்றார். முதன்முதலாக சித்தன்கேணி சிவன் ஆலயத்தில் 33குண்ட மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினார். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கொழும்பு, வன்னி, மலைநாடு போன்ற இடங்களிலும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, சுவிஸ் போன்ற வெளிநாடுகளிலும் கிரியைகளை ஆற்றி வருகின்றார்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்திற்கு 2010ம் ஆண்டு தலைவராகத் தெரிவானார். அந்தணர்களுக்குரிய இவ்வமைப்பின் மூலமாக எழுத்தாளர் அவை, ப்ரம்ம கானசபா, ஸ்ரீமாதா மாதர் அபிவிருத்திச் சங்கம், முதியோர் நலன் பேணும் ஆனந்தபவனம், என பல குழுக்களை செயலாளர் மற்றும் உறுப்பினர்களது ஒத்துழைப்புக்களுடனும் மூத்தகுருமார்களின் வழிகாட்டலுடனும் அமைத்து சமூக மேம்பாட்டிற்காக சேவைகளை ஆற்றி வருகின்றார்.

மாணவர்களது சமயப்பற்று, ஒழுக்கநெறி மேம்பாடடைய வட்டு இந்துக்கல்லூரி, விக்ரோறியா கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சித்தன்கேணி ஸ்ரீ கணேசவித்தியாலயம் என பல கல்லூரிகளில் கருத்தரங்குகள் சொற்பொழிவுகளை நடாத்திவருகின்றார். சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களுக்கும் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயங்களுக்குட்பட்ட சமய பாட ஆசிரியர்களுக்கு கருத்துரை வழங்கியமை. அவ்வப்போது நோயாளர்கள் நலம் வேண்டியும் முதியோர் நலம் வேண்டியும் பிரார்த்தனை நிகழ்வுகள் ஏற்பாடு செய்து அவற்றை சிறப்புற நிறைவேற்றியுள்ளார்.

அந்தண மூத்த சிவாச்சாரியர்களை கௌரவித்தல், சிவானந்தம் சஞ்சிகையின் ஆசிரியராக

வும் இருப்பதுடன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யில் அந்தண மாணவர்களின் அந்தண கலாசார மேம்பாட்டிற்காக அந்தண பண்பாட்டு கல்வி வகுப்பு நடாத்தியமை, சிறப்பாக காலத்தின் சமூகத் தின் தேவைகளுக்கமைவாக வாழ்த்துகள், கருத்துரைகள் வெளியிட்டு வருவதும் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். ஓம் நமசிவாய பிரார்த்தனை நிகழ்வின் மூலமாக இளையோர் மத்தியில் சமயப்பற்றினை வலுச்சேர்க்கும் வகையில் விசேட செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி யமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் வண்ணார்பண்ணைச் சிவன் ஆலயத்தில் இருந்து கீரிமலை நகுலேஸ்வரம் வரை ஆத்மீக பாதயாத்திரை நடத்தியமை விசேட அம்சமாகும்.

அத்துடன் சைவ ஆலயங்களிற்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனை, கருத்துரை வழங்குவதற்காக மாவட்டச் செயலகத்தால் நிய மிக்கப்பட்டுள்ளார். மேலும் வலி.மேற்கு பிரதேச சபை, ஸ்ரீகணேச வித்தியாலயம், வட்டு இந்துக் கல்லூரி, சுப்றா கல்வி நிறுவனம், வட்டு பொலிஸ் நிலையம், சங்கானை சுகாதார பணிமனை ஆகியவற்றின் ஆலோசனை உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகின்றார்.

இத்தகைய சிறப்புமிகு சேவையாற்றிவரும் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்களுக்கு 2014ம் ஆண்டின் யாழ் விருது கிடைப்பதையிட்டு சைவசமய விவகாரக்குழு மனமகிழ்வடைகிறது.

# கர்மயோகி சுவாமி சித்ரூபானந்தா

கலாநிதி நா.வி.மு.நவரெத்தினம்



பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தை நிறுவி அதன் மூலம் கடந்த ஆறு தசாப்தங்கட்கு மேலாக மக்கள் பணியை மகேசன் பணியாகக் கருதி தன்னிகரில்லாத் தொண்டு புரிந்த கர்மயோகி சுவாமி சித்ரூபானந்தா சுவாமிகள் சமாதி அடைந்த செய்தி ஆத்மீக உலகை ஆழ்ந்த துன்பத்தில் ஆழ்த்தி உள்ளது.

அவரது அரிய சேவையால் எண்ணில்லாத ஏழைப்பிள்ளைகள் பலர் கல்வியில் உயர்ந்து உயர்பதவி வகிக்கின்றனர். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஏழை மக்களதும் சிறார்களதும் உயர்வுக்காக சுவாமிகள் எண்ணற்ற பல உதவிக ளைப் புரிந்துள்ளார்கள். புகழை. விளம்பரத்தை விரும்பாத மக்களின் மகத்தான சேவகனாக அவர் தம் பணிகளை ஆற்றி உள்ளார். யாழ் மாவட்டத் திலும் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள கல்வி நிலையங்களில் ஏழை மாணவர்க்கு உதவிக ளைப் புரிந்த பெருமகன் அவர். அன்னை சாரதா தேவியை தம் தெய்வமாக ஏற்றிப்போற்றி அவர் வழியில் நின்று வாழ்ந்து காட்டி இலங்கை மற்றும் இந்திய இராமகிருஷ்ண நிறுவனங்களுக்கு சீரிய உதாரண புருஷராக திகழ்ந்துள்ளார். போர்ச் சூழலில் யாழ்ப்பாண ஏழைப்பிள்ளை தனது கல்வியை விடாமல் காத்து அத்துடன் எங்கெங்கு ஏழைப்பிள்ளை கல்வி பயில வசதியற்று இருந்தார் களோ அவர்கள் இல்லம் தேடிச் சென்று அக் குழந்தைகளது கல்விக்காக வேண்டிய அனைத்து உதவிகளையும் தன்னந்தனியனாக நின்று ஆற்றிய பெருமகான் அவரது சேவையை யாழ்ப் பாண மக்களோ அல்லது இலங்கை மக்களோ எந்த வகையிலும் மறக்கவோ மறைக்கவோ முடியாதென்பதை யாவரும் அறிவர்.

தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும் என்பதை தமது நிறுவனத்தூடாக உலகின் அனைத்து சர்வமத நிறுவனங்கட்கு உணர்த்திய மகாபுருஷர் கர்மயோகி அவர் வாழ்ந்த காலத்தில் இம் மண்ணின் மக்களோ நிறுவனங்களோ அவரது அர்ப்பணிப்பான சேவையை போற்ற தவறி விட்டனர் என்பது மிகந்த வேதனைக்குரிய விடய மாகும். அவர் தம் ஜீவாத்மா அன்னை திருவடிக ளில் பேரானந்த நிழலில் இணைந்து எம் மக்களு க்கு சீரிய வாழ்வைத் தர வேண்டும் என இறை வன் திருவடிகளை இறைஞ்சுதல் செய்வோம்.

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# நல்லைக் குமரன் மலர் - 2014

## மணங்கமழ பங்களித்த உங்களுக்கு

## எங்கள் உளங்கனிந்த நன்றிகள்


2014ம் ஆண்டின் "நல்லைக்குமரன்;; இருபத்தி இரண்டாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆதீன முதல்வர்கள் மற்றும் சைவப் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் இவ் விளம்பரங்களைப் பெற்றுத் தந்துதவிய அன்பர்களுக்கும்

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் இறைஞ்சுகின்றோம்.

11.08.2014

**சைவசமய விவகாரக்குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**



# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
# சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் - 2014



**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்):** திரு.சோ.கனேசநாதன், திரு.கு.விஜயகுமார், திரு.செ.பன்னீர்ச்செல்வன், செல்வி.இ.தர்சினி, செல்வி.பொ.புஸ்பலதா, திரு.க.கேதீஸ்வரன்

**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):** திரு.க.ஜெயானந்தன், திரு.நா.ரகுமார் (பொருளாளர்), திரு.து.ராஜன், திரு.பு.ஆறுமுகதாசன் (செயலாளர்), திரு.செ.பிரணவநாதன் (தலைவர், சைவசமய விவகாரக்குழு), திருமதி.யோ.பற்குணராஜா (போசகர், சைவசமய விவகாரக்குழு), திரு.ந.விஜயசுந்தரம் (கௌரவ பதிப்பாசிரியர்), திரு.ச.லோகசிவம், திரு.நா.மோகனசுந்தரம்

**சமூகமளிக்காதவர்கள்:** திரு.ச.சற்குணமூர்த்தி, திரு.சி.கிருஸ்ணமூர்த்தி

# நல்லைக்குமரன் மலர்





## விளம்பரங்கள்

## 2014




# உங்கள் திருமண தினத்தில்

## 18 plus மூலம் தங்க நாணயம் பரிசு*

## ஏனைய சலுகைகள்

- கூடிய வட்டி
- உயர் தரம் சித்தியடைந்த திறமைசாலிகளுக்கு புலமைப்பரிசில்
- முதற்குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு
- Credit / Debit அட்டை வசதிகள்
- இலவச ஆயுள் காப்புறுதி
- பாரதூரமான 10 நோய்களுக்கு வைத்திய காப்புறுதி

*(நிபந்தனைகளுக்குட்பட்டது)

seraidea.lk

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

நல்லூர் முருகா! தேர் பவனி காட்சி எமது
உளம் நிறைந்த அமைதியை தருகுதையா!



46 ஆண்டுகளாக உங்கள்
நன் மதிப்பைப் பெற்ற

# காவடி

## மார்க் கற்பூரம்

SINCE 1967

கற்பூரம் என்று கேட்காதீர்கள்
**காவடி**
என்று கேட்டு வாங்குங்கள்.

நின்று நிலைக்கும் ஜோதி மயம் காவடி கற்பூரம் என்றும் தரும்




## தயாரிப்பாளர்கள்

Ms Sons Group of Companies
672/3, Galle Road,
off Mayura Mw, Ratmalana.
Phone: 2636818, 2329426
e-mail: mcsons@hltnet.lk

ஏக விநியோகஸ்தர்கள்
பிரபா ரேடிங் கம்பனி
31, கபேஸ் லேன்,
கொழும்பு - 11
தொலைபேசி: 329426, 422750


"நல்லைக் குமரன் நீ கண் கொள்ளா காட்சி தனை தந்து ஆறு முகங்களோடு
தங்கரத மேறி மக்கள் படும் துன்பங்களுக்கு விடிவுதந்திடுவாய்"
ராஜா
கிறீம் ஹவுஸ்
ஒருமுறை விஜயம் செய்தால்
மனம் குளிர நிதமும் வருவீர்கள்.
RAJA
CREAM HOUSE
36, KASTHURIYAR ROAD, JAFFNA.
T.P: 021 222 8437


இல.30,31, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5381



SARASWATHY HALL
Fully Air Conditioned
திருமணம் மற்றும்
மங்கள நிகழ்வுகளுக்கு
அனைத்து வசதிகளையும்
கொண்ட மண்டபம்
SARASWATHY HALL
மேலதிக விபரங்களுக்கு :
www.saraswathyhall.com
தொடர்புகளுக்கு :
சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்)
37,சேர்.பொன்இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். Call : 021 3207369, 0779234176




## Your Style for a Dazzling Future

- An attractive Interest Rate to multiply your savings
- Your very own personalised DotCom ATM card
- Eligibility for special loan concessions when you turn 18
- Credit Card or Shopping Debit Card when you turn 18

**If you are aged between 10-18 years, start your very own DotCom Account today with just Rs.1,000/-.**

DotCom COMMERCIAL BANK



நல்லைக்குமரன் மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்
அண்ணா கோப்பி
ESTD 1959
ANNA
අන්නා කෝපි
Anna Coffee
ANNA SPICED COFFEE
ANNA SPICED COFFEE
ANNA COFFEE
ANNA COFFEE
அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063

நல்லைக்குமரா உன் நாமம் நினைவிருத்த
நாம் வேண்டுவதெல்லாம் அமைதியல்லவோ!



தரமான சைவ உணவு வகைகளுக்கு

# சிறி நிகேத பவன்

## சைவ உணவகம்

சுத்தம், சுகாதாரம் நாவுக்கினிய

சைவ சாப்பாடு அது மட்டுமா

பல வகை சிற்றுண்டி

வகைகளுக்கும் தயார் நிலையில்

என்நேரமும் கிடைக்கும்

# Sri Negetha Bavan

இல.163, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212219597



நல்லூர் முருகா! கந்தா கார்த்திகேயா என
ஆர்ப்பரித்து ஆலயம் நோக்கி
அடியவர்கள் தங்கரதமேறி காட்சி தந்து எமை காத்திடப்பா!

# சிறி சிவராம்
# ரேடர்ஸ்

**யாழ்ப்பாணத்தில் புதுமை பொலிவுடன் இயங்கும்
ஒரு மொத்த விற்பனை நிலையம் கொழும்பில் இருந்து
பல பொருட்களையும்
மலிவு விலையில் விற்பனை செய்கிறோம்.**

# Sri Sivaram
# Traders

இல.248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212228629, 0777560760

**No.189, Kateresan Street, Colombo**
**T.P: 0777560760**

வேல் உண்டு வினையில்லை
முருகன் அருள் உண்டு துன்பமில்லை



SUNDHARSON

நலம் யாவும் நல்கும் நல்லை கந்தனின்
புகழ் பாடும் பக்தர் கூட்டம்!
உன் காலடி பற்றித் தொழுதிட
நல்லை நகர்ப்பதியில்
வானோங்கி நின்று அருள் பாலிக்கும்!
உம்மைத் தேடி அலையலையாக
ஏகிநிற்கும் அடியார்

குறைதீர்த்து அருள்வாய் பழனி அப்பா!
கஷ்டங்கள் யாவும் மீண்டும் எமை
நாடாது சாந்தி, சமாதானம் தொடர வேண்டுமென
நின் திருப்பாதம் பற்றி வணங்குவோம்!

சகல விதமான மின்சார உபகரணங்கள், நீர் வழங்கு பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் நியாயம், நிதானம், தரம், விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.

மானிப்பாய் நகரில் மின்சார உபகரணங்களில் கொடி கட்டிப் பறக்கும்
புகழ் பெற்ற ஸ்தாபனம்

# சுந்தர்சன்

யாழ் வீதி,
மானிப்பாய்.

தொ.பே: 021 2255136
பக்ஸ்: 021 2256036



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

நல்லைக்குமரன் வருடாந்த உற்சவம்
யாழ் நகர் விழாக் கோலம்



# திருமுருகன் கொம் நெற்

உலகின் எந்தப்பாகத்தில் இருந்தும் பணத்தை

MMBL MONEY MASTER

DHL

மூலம் ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்,

உள்நாடு வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு
பொதிகளை , V.D.O கசட்டுக்கள் ஆவணங்கள் எதுவானாலும்
துரித கதியில் உரியவர் கைகளில் சென்றடையவும்,

எமது சேவையை பெற்றவர்கள் மீண்டும் மீண்டும் தொடருகிறார்கள்.
புதியவர்கள் இடத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு இதோ!

# Thirumurugan
## Com Net

இல.46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இல.117A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

e-mail:-
thirumurugan@lycosmail.com



நாளும் பொழுதும் உனை வேண்டி அழுதிட நான் செய் கருமமெலாம்
நன்றே நிறைவெய்திட அருள் பாலிப்பாய்!

NSB

**உயர் சாதனையாளர்களுக்கு உலகளாவிய வாய்ப்பு**

சாதனைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வாழ்க்கையில் சிறந்த உயரத்தினை அடைய வேண்டும் என எண்ணுவோருக்கு உதவிக்கரம் வழங்குவதில் நம்பிக்கையுள்ள வங்கியான தேசிய சேமிப்பு வங்கி உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் தமது உயர்கல்வியினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு NSB "புத்தி" உயர் கல்விக் கடன் வழங்குவதில் பெருமிதம் அடைகின்றது.

**தகைமை**

உயர் கல்வியைப் பெற விரும்புபவர்கள், விண்ணப்பதாரியின் வயது மற்றும் தொழில்நிலை என்பன கடன் வழங்கும் தன்மைகளைத் தீர்மானிக்கும்

**கடன் பெறுவதற்கான அடிப்படைத் தகுதி விதிகள்**

விண்ணப்பதாரர் தொழில் வாய்ப்பு அற்றவர் எனின் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடன் இணைந்து விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி தொழில் செய்பவர் எனின் சுயாதீன விண்ணப்பிக்க முடியும்.

வெளிநாட்டு கல்விக் கடனுக்கு கூட்டு விண்ணப்பம் கட்டாயமாகும். கூட்டு விண்ணப்பதாரி இலங்கையில் வதிபவராக இருக்க வேண்டும். (பெற்றோர், நெருக்கிய குடும்ப உறவினர்)

விண்ணப்பதாரர் அல்லது கூட்டு விண்ணப்பதாரர் தேசிய சேமிப்பு வங்கி அல்லது வேறு எந்த வங்கியிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக கடன் செலுத்தத் தவறியவர்களாக இருக்கக் கூடாது.

**கடன் தொகை**

வெளிநாட்டு கல்விக் கடன்

அதிகபட்ச கடன் தொகை ரூ.10 மில்லியன் அல்லது முழு பாடநெறி கட்டணத்தின் 75% ஆக இருக்கும். (சொத்துக்களை ஈடாக வைத்து வழங்கப்படும்)





முருகா நீ நல்லூரில் மாவிட்டபுரத்தில் சந்நிதியில் வீற்றிருந்து
அருட்பாலித்து எமக்கு அமைதியை தந்திடப்பா

# ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

Importers of books, Magazines, Agriculture Equipments,
all kind of Stationary, All Kinds of Paper Items, Chemicals,
Sports Goods, Office Equipment etc,
and Government Suppliers

No.212, K.K.S Road, Jaffna. T.P: 0212225542, 0212227983
E-mail: acdil@ymail.com Fax: 0212227983



ஆவணி மாதமதில் முருகன் விழா கோலம்
பக்தர் கூட்டம் அலைமோதி அமைதி வேண்டுதையா
யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் சாம்ராஜ்யம்

# சிவகணேசன்

## புடவையகம்

நவநாகரீக
நங்கையர்களே!

வண்ணத் துணியகத்தும் வளமார் வகையனைத்தும்
எண்ணம் போல் தேர்ந்தெடுக்க ஏற்றதோர் எழிற்கூடம்

கண்ணைக் கவரும் சாறிகள், கண்கள் மிளிரும் சுடிதார் வகைகள், சிறியோர்
பெரியோர்களுக்கேற்ற நாகரீக ஆடை அணிகள்


## Sivakaneshan Textiles

இல.41, பெரிய கடை, யாழ்ப்பாணம். தொ.பே: 0212222063



நல்லூர் முருகா! உலகையே உன் பால் ஈர்த்த
பெருமை உன் அருட் காட்சியும் அருளுமன்றோ!

# RANJANAS Ceramic



யாழ் நகரில் அனைத்து விதமான
குளியலறை உபகரணங்கள்,
நில ஓடுகள், கிரனைட் வகைகள்
மற்றும் Adhesive வகைகள் ஆகிய
அனைத்தையும் வெளிநாடுகளில் இருந்து
நேரடியாகத் தருவிக்கும்.
எம்மிடம் உங்கள் இஷ்டம் போல்
தெரிவு செய்து பூரிப்படையுங்கள்.

#212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044

#05, Stanly Road, Jaffna.
021 222 4777 / 021 222 4888

The metro engineering (pvt) ltd



நல்லூரில் குடிகொண்டு பக்தர் நலம் காக்கும் முருகா
தேரேறி பக்தர் நலம் காக்க வீரவேலுடன் வா முருகா

# அன்னை புத்தகசாலை

**கணனி உபகரணங்கள் மற்றும்**

**பல பொலித்தீன், றோல் வகைகள்**

**அற்லஸ் எஸிபியுடர்ஸ் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்**

*No. 07, New Market,*
*Jaffna*

Office:
Tel: 0212229881
Fax: 0212220665
Mobile: 0772487662



"நல்லைக்குமரன்" மலர் வாடாது என்றும் முருகனின்
அருட்கடாட்சத்தை பிரவாகித்து கொண்டே இருக்கும்.



# S.V.MURUGESU

**ஒரே இடத்தில் வீட்டுக்கு தேவையான**
**அத்தனை பொருட்களையும்**
**ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.**
**விஜயம் செய்யுங்கள்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212228899,
0214925831

நித்தம் நித்தம் முருகா உன் அருட்
கடாட்சம் வேண்டி நிற்கின்றேன்



**காப்புறுதி துறையில் முன்னோடியாக விளங்குவது**
**இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்**

ஒவ்வொருவரும் காப்புறுதி செய்து கொள்வது தனக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் பெரும் நன்மை அளிக்கும் புதிய புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் காப்புறுதி – வீட்டு காப்புறுதி, வர்த்தகர்களுக்கான காப்புறுதி,
வாகன காப்புறுதி, வியாபார ஸ்தல காப்புறுதி, பென்சன் காப்புறுதி

இலங்கைக் காப்புறுதி ஸ்தாபனமே ஆயுள் காப்புறுதியாளருக்கு அதிகூடிய போனஸ் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

# இலங்கை காப்புறுதி

படித்த இளைஞர் மங்கையரே! வேலை இல்லை என்று கவலை வேண்டாம். எல்லையில்லா வருமானம் பெறலாம். ஏஜண்டாக சேர்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

அமைப்பாளர்:– திரு.த.கனகசபை
*இல.7, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தொ.பே: 021 222 6369



முருகா! துன்பம் நேர்கையில் வேல் எடுத்து
நீ இன்பம் தர வாராயோ!



# ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

பிடவை வியாபாரம்

# G.S.Linganathan & Co

*51-13-14, Grand Bazaar Road, Jaffna*

T.P: 0212223139, 2228107



நல்லைக்குமரா உன் திருப்பாதம் நினைந்துருகி
துன்பமெலாம் அகன்றிட வரம் தாருமையா!

**இதோ வாருங்கள்! பாருங்கள்!!**

# அற்புதா
## ரேடிங் கொம்பனி

சகல விதமான ஆடம்பரப் பொருட்கள், துவிச்சக்கர வண்டிகள்
அதன் உதிரிப்பாகங்கள், வீட்டுத்தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள்,
பலவித பிளாஸ்ரிக் உபகரணங்கள்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்**

இல.198, ஆஸ்பத்திரி வீதி,
பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2222057
021 2222505



அலங்கார கந்தன் ஆறுமுகமாகி தங்கரதத்தில் அருட் காட்சி தர வருகின்றார்



# ராசி கலெக்சன்



இங்கு சல்வார், நவீன சாறி வகைகள்,
ஆண்கள், குழந்தைகள்
உடு புடவைகள் தாராளம்.
தெரிவு செய்வதற்கேற்ற இடம்

**No.199, Power House Road, Jaffna.**
**T.P: 021 2225571**



என்றும் முருகன் நினைவிருத்தி அவன் தாழ்
வணங்கி அவன் அருள் பெற்றிடுவோம்

**புதுமைப் பொலிவுடன் புதிய புடவையகம்,**
**அழகான காட்சியறை புதிய புதிய புடவை தினுசுகள்**
**நவ உலகத்திற்கேற்ப அழகிய ரெடிமேட் ஆடைகள்,**
**சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை நங்கையரும்**
**கூட விரும்பி தெரிவு செய்யக்கூடிய இடம்**

# சீவம் ரெக்ஸ்ரைல்

**மின்சார வீதியிலே அழகாக காட்சி தருகிறது சீவம் ரெக்ஸ்ரைல் அழகுடனும் புது பொலிவுடனும் திகழும் புடவையகம் சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை ஏன்! நவ நாகரிக பெண்களும் விரும்பி தெரிவு செய்யக்கூடிய இடம் விஜயம் செய்து பாருங்களேன்!**

**14A, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**T.P:- 222 6749**



அலங்கார கந்தன் ஆறுமுகமாகி தங்கரதத்தில்
அருட் காட்சி தர வருகின்றார்



**வாடிக்கையாளர்களே!**

**தங்களுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்**
**தரமானதாகவும், நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும்,**
**மங்களகரமான நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த சகல வசதிகளையும்**
**உள்ளடக்கிய மண்டப வசதியைப் பெற நாடவேண்டிய ஒரே இடம்**

## TCT MULTI TRADE CENTRE
**ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்**



**527, நாவலர் வீதி, நல்லூர்.**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 7451895**
**Email. tctmc@dialognet.lk**

## TCT SORNAMBIKAI HALL
**ரிசிரி சொர்ணாம்பிகை மண்டபம்**



**எமது நிகழ்வுகளுக்கான பதிவுத் திகதிகளை**
**இணையத்தளத்தில் பார்வையிடலாம்.**
**தொ.பே: 021-222-8025**
**www.tcthall.com**

*(இங்கு பெறப்படும் வருமானம் அனைத்தும் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது)*


ANDRA
PRINTERS
Awards Shields Medals Trophies
T Shirt Printing ID Card Printing Mug Printing
புத்தகங்கள் | சஞ்சிகைகள்
லேபிள்கள் | விசிற்றிங் காட்
போஸ்ரர்கள் | துண்டுப்பிரசுரங்கள்
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 221 7279 / 077 6622981
பிரதான அலுவலகம் :
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8929
கிளைகள்
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9929
470/2, கண்டி வீதி (A9), கிளிநொச்சி. 021 720 1275


நாளும் பொழுதும் முருகா உன் திருப்பாதம் நினைவிருத்தி வேண்டுவதெல்லாம்
தமிழினம் அமைதி பெற்று வாழ வேண்டுகின்றோம்!
நங்கையர் மனங் கவரும் ஒரே இடம்
கோபிகா டெக்ஸ்
Specialist in Wedding Sarees,
Shalwar Kameez,
&
Ladies Gents
&
Children Wear.
No.5/4, New Market (Inside) Jaffna
தொ.பே: 0212222377


நாளும் பொழுதும் உனை வேண்டி அழுதிட நான் செய் கருமமெலாம்
நன்றே நிறைவெய்திட அருள் பாலிப்பாய்!
இதோ! யாழ் நகரில் பாடசாலை மற்றும் காரியாலய உபகரணங்கள்,
அச்சுக்கூடங்களுக்குத் தேவையான பல வர்ண பற்பல காகிதாதிகள்,
மாணவ மாணவிகளுக்கு தேவையான புதிய டிசைன்களில் பைகள்,
கவர்ச்சி தரும் அப்பியாசக் கொப்பிகள்
அனைத்தும் நாட வேண்டிய இடம்
பேப்பர் ஹவுஸ்
கணனி உபகரணங்கள் மற்றும் பல பொலித்தீன் றோல் வகைகள்
'அற்லஸ்' டிஸ்றிபியுடர்ஸ் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
Paper House
இல.300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 5343


GET THE RIGHT LOOK
MODERN & LUXURY
NHT
High Quality Products Available Under One Roof
LANKATILES HUIDA GROHE American Standard MOMALI JAT SWISSTEK PERMOGLAZE
Get the right finish, first.
Multibond Hants DANKOTUWA pureit NIPPON CEMENT Nestlé
NARAYANA HARDWARES TRADER
92C, Stanley Road, Jaffna - Tel: 021 222 5390, 021 567 5390
Branches
United Home Needs
No:469, K.K.S Road, Jaffna. Tel: 021 221 9565, 021 567 0166
Narayana Ceramic Unit
118, Kandy Road, Kilinochchi. - Tel: 021 228 0092, 021 567 9790
House of Ceramic
54A, Jaffna Road, Vavuniya. - Tel: 024 222 7766, 021 567 7250



நல்லூர் முருகா! நாளும் பொழுதும் வேண்டி நயமுடன்
நன்றெலாம் செழித்திட உன் திருப்பாதம் இறைஞ்சுகிறோம்.

# லிங்கன்

## கிறீம் ஹவுஸ்

லிங்கன் என்றால் நினைவுக்கு வருவது ஐஸ்கிறீம்

சுவைத்துப் பாருங்கள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

* ஸ்பெசல் ஐஸ்கிறீம்
* சொக்லேட் ஐஸ்கிறீம்
* நட்ஸ் ஐஸ்கிறீம்
* புருட்சலட் ஐஸ்கிறீம்
* ஜெலி ஐஸ்கிறீம்
* மஸ்கட்
* மெகா ஸ்பெஷல்
* வெனிலா ஐஸ்கிறீம்
* சண்டே ஸ்பெஷல்
* கித்துள் நட்ஸ் ஐஸ்கிறீம்
* ஸ்ரோபெரி ஐஸ்கிறீம்
* ஸ்பெசல் பீடா

## அத்தனையும் ஓரே இடத்தில்

யாழ் நகரில் அதி விசேட பல் சுவை ஸ்தாபனம் என்றால் அது லிங்கனே தான்
உள்ளே சென்றால் கண் குளிரும், மனம் குளிரும், சுவை குளிரும்,
திருப்தி குளிரும் விஜயம் செய்து பாருங்கள்.

# LINGAN

## Cream House

119, Kasthuriyar Road,
Jaffna.

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# Learning – Saving



HNB Singithi Lama
*Keep learning - Keep saving*

Learning can be rewarding when it's interesting, motivating and exciting. Now saving can be equally rewarding with HNB Singithi Lama because we reward and motivate our children with fascinating gifts, including loans to buy computers which would help them in their education.

You can now open an HNB Singithi Lama Account for your new born child up to 12 years of age.

What's more, you can open this account for just Rs. 500/- and keep saving as you wish.

**Singithi Lama also rewards your little one with**

- Scholarships worth Rs. 7 million
- Lovely gifts
- Loans to purchase computers

Conditions Apply

***Open an HNB Singithi Lama Account for your child today***

HNB
Your Partner in Progress

**Fitch Rating : AA-(lka)**
HNB Head Office, HNB Towers, 479, T.B. Jayah Mawatha, Colombo 10.
Tel: 011 2661983 E-mail: bergiep@hnb.lk Web: www.hnb.net

Hatton National Bank is a Licensed Commercial Bank, supervised by the Central Bank of Sri Lanka. Hatton National Bank PLC - PQ 82



நல்லூர் முருகனைள சுற்றி வந்தால் ஒரு பொல்லாப்பும்
இல்லை என்றார்கள் நல்லூரில் ஈடேறிய ஞானிகள்



யாழ் நகரின் முதல் தர அரச அனுமதி பெற்ற
கனரக (AD) சாரதி பயிற்சி பாடசாலை



யாழ் நகரில்
முதல் முறையாக
"கிருபா லேணர்ஸ்"
வழங்கும் இரவு நேர சாரதி
பயிற்சி நெறி

# L கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

- L எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாத விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்
- L அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- L எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- L மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்
- L தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.

**தலைமைக் காரியாலயம்**
**இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பே: 021 2224353, 021 4923200, 0777225292

**கிளைகள்**

| பருத்தித்துறை | சாவகச்சேரி | சுன்னாகம் | விசுவமடு |
|---|---|---|---|
| 021 4923201 | 021 4923202 | 021 2242022 | 021 3201515 |
| 0714546958 | 021 2270700 | 0714546956 | 0714546955 |
| **கிளிநொச்சி** | **நெல்லியடி** | **முழங்காவில்** | **பூநகரி** |
| 021 2285505 | 021 3006550 | 021 3006544 | 021 3201818 |
| 0714546955 | 0714546957 | 0714546955 | 0714546955 |

இல.216, A9 வீதி, வவுனியா.
(வசந்தி தியேட்டருக்கு முன்பாக)
024 2227777, 0777100444



வருடா வருடம் வாடா மலராகிய 'நல்லைக்குமரன்" மலர் வெளிவந்து முருகன்
அருள் பரப்ப நாமும் முருகனின் அருள் வேண்டி ஆறுதல் அடைய வேண்டும்
நவநாகரிக மங்கையர்க்கு கண்கவரும்
புடைவை ஸ்தாபனம் அது தான்
சரவணா
புடைவையகம்
நங்கையர் ஒருமுறை விஜயம் செய்தால் மறுநாள்
நண்பிகளையும் கூட்டி வருவீர்கள் பலவர்ண கண்கவர்
மினுங்கும் சாறிகள் திருப்தியுடன்
சாறி தெரிவு செய்யலாம்.
புதியதோர் ஸ்தாபனம் புதுமையான புடைவை ரகங்கள்
பட்டு சாறிகள், பான்சி மற்றும் கொட்டன் சாறிகள்,
பஞ்சாபி, பஞ்சாபி துணிகள் மற்றும் ரெடிமேட்
ஆடைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
Saravana Tex
வாருங்கள்! வாருங்கள்
தட்டாதெரு சந்தி,
கே.கே.எஸ் வீதி.
021 2219878
நல்லூர்
526,529, பருத்தித்துறை வீதி.
021 222 1723



அலங்கார கந்தன் ஆறுமுகமாகி தங்கரதத்தில்
அருட் காட்சி தர வருகின்றார்
லலிதா புடவையகம்
என்றும் இளமையை
விரும்புவது நங்கையர்
என்றும் அழகை
விரும்புவது நங்கையர்
Lalitha Textiles
No.5,6, Modern Market, Jaffna.
T.P: 0212225260




நல்லைக்குமரன் அருட் கடாட்சம் உலகெலாம் பரவ
"நல்லைக்குமரன்" மலர் பூக்கட்டும்
சகல விதமான வைபவங்களுக்கும் தேவையான
சைவ உணவு வகைகள் ஓடருக்கு செய்து தரப்படும்
ஸ்ரீ சாயி பவன்
சைவ உணவகம்
இல.195, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212217116



முருகா முருகா என கூவி உன்
கோபுர வாசல் தன்னில் வந்து
கைகூப்பி தொழுவதெல்லாம் நாம்
அச்சமின்றி வாழ்வதற்கன்றோ!
ஹரன்
Since 1970
ஜுவல்லர்ஸ்
பழம் பெரும் புகழுடன்
புதுமைப் பொலிவுடன்
இயங்கும் தங்க நகை
மாளிகை
விரும்பிய டிசைன்களை
புதிய முறையில்
22 கரட்டில் செய்து
பெற்றுக் கொள்ளலாம்.
இல.217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2226083, 0714182480
emial: haranjewellers@gmail.com
skype: haanjewellers
Haran Jewellers


மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை.
newmaithily40@gmail.com
ந.கஜநந்தன்
நியூ மைதிலி
ஜுவலர்ஸ்
புதிய கட்டடத்தில்
யாழ்மண்ணில் தனக்கே உரித்தான
தன்னிகரில்லா தலைமை நிறுவனம்
N.Kajanthan
New Maithily
JEWELLERS
38 40
NO.38,40, KASTHURIYAR ROAD, JAFFNA.
Tel : 021 221 7878 Fax : 021 221 7877


நல்லூர் முருகா! நாளும் பொழுதும் உனை
வேண்டி நயமுடன் நல்வாழ்வு தந்தாயப்பா
இதோ! யாழ் நகரிலே புதியதோர் புடவை ஸ்தாபனம் கம்பீரமாக கொடி கட்டி பறக்கிறது.
அதுதான்
கமலேஸ்வரி ரெக்ஸ்
கொழும்பிலும் புடவை விற்பனையில் முன்னணி வகிக்கிறது.
இங்கு சல்வார், நவீன சாறி வகைகள், ஆண்கள்,
குழந்தைகள் உடு புடவைகள் தாராளம்.
தெரிவு செய்வதற்கேற்ற இடம்
Kamaleswary Tex
இல.214, பிரதான வீதி, கொழும்பு -11
தொ.பே: 2452878, 2433778
இல.பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228419
Web: Kamaleswary Tex
email: into@kamaleswary.com


நல்லூர் முருகா உன் அழகு திருமுகம் கண்டேன்
நாளும் பொழுதும் உனை நினைந்திருகி நிற்கின்றேன்.
நீலாம்பரி உணவகம்
சைவ, அசைவ உணவு வகைகளுக்கு நாடுங்கள்
இல.744, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212220351
0215100245
Neelampary Unavakam


குருவாய் வருவாய் அருள்வாய் குகனே
செல்வா
இரும்பகம்
Selva Hardware
No.120, Stanley Road, Jaffna.


எந்நாளும் நல்லூரரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போகுமே
ஸ்ரீ நதியா
நகைமாடம்
தங்க ஆபரணங்களுக்கு என்றும்
ஈடு இணைற்ற ஸ்தாபனம்
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2222709



நல்லைக்குமரன் அருள் வேண்டி
ஞாலமெலாம் பிரார்த்தனையாம்

அதோ! என்ன சனக் கூட்டம்!

அட!! இங்கேதான் மக்கள் விரும்பும் சைவ சாப்பாடு

நல்லூர் விரதமிருப்பவர்களும் இங்கேதான்

நாடி வருவார்கள்.

சுத்தம் சுகாதாரம் நாவுக்கினிய பாகத்துடன்

சைவ சாப்பாடு அது மட்டுமா

பல வகை சிற்றுண்டி வகைகளுக்கும் தயார் நிலையில்

என்நேரமும் கிடைக்கும்.

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

# சண்முகம்

## சைவ ஹொட்டல்

சிவன் கோவில் அருகில்
இல.10, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 222 8445

ஞானிகள் முருகன் வீதிதனில் நடமாடி
அழகன் முருகன் அருட்கடாட்சம் பெற்றார்கள்



♦ நியூஸ் பிறின்ட் ♦ றோணியோ பேப்பர்
♦ பான்ட் பேப்பர் ♦ போஸ்டர் பேப்பர்
♦ பரிசுப் பேப்பர் ♦ றைப்பிங் சீற்
♦ பொக்ஸ் போர்ட் ♦ பிறிஸ்டல் போர்ட்

**ஆகிய சகல விதமான பேப்பர் வகைகளையும்**
**அச்சகத்துக்குத் தேவையான மை வகைகளையும்**
**வேண்டிய அளவிலும்**

**நாங்கள் "மலிபன் பிஸ்கட்"**
**ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்**
**என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.**

இல.152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215670922

*********************************************************

*ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கற், இனிப்பு,*
*பீடா ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல மூலப் பொருட்களையும்*

*ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத் திரவியங்கள்,*
*ஆயுள்வேத மருந்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம்,*
*குங்குமப் பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு இரசாயனப்*
*பொருட்கள், பிஸ்கட் சொக்லேட், ரொபி வகைகளுக்கும்,*
*நாடவேண்டிய ஒரே இடம்*

# பெற்றா
## எசன்ஸ் சப்ளையர்ஸ்

104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212222386



என்றும் எல்லோரையும் கவர்பவன் நல்லூர் முருகன்
அவன் அழகும் அருளும் அல்லவா!

யாழ் நகரில் மூன்று சந்தியில் பிரகாசமாக அமைந்துள்ளது

# ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## பல்பொருள் வாணிபம்

## ஆஹா!

**என்ன கவர்ச்சி**
**அற்புதமான பல்பொருள் காட்சி**
**உள்ளே சென்றால்**

## "சுப்பர் மார்கட்" தான்

ஒரே இடத்தில் வீட்டுக்கு தேவையான அத்தனை
பொருட்களையும் ஒரே இடத்தில் மலிவாக
பெற்றுக் கொள்ளலாம் விஜயம் செய்யுங்கள்

இல.342, 344, 346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228666



ஞானிகள் முருகன் வீதிதனில் நடமாடி
அழகன் முருகன் அருட்கடாட்சம் பெற்றார்கள்.

# பூபாலசிங்கம் புத்தகசாலை

**புத்தக விற்பனையாளர்கள்.**

**ஏற்றுமதி இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்**

## *தலைமை*

**340, 202, செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**தொ.பே: 2422321**

## கிளைகள்

**இல.309A, 2/3, காலி வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு - 6.**
**தொலைபேசி: 4515775**

**இல.04, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி:021 2226693**

**இல.212, 1ம் குறுக்குத்தெரு, வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 2221637**

## *லண்டன் கிளை*

**இல.110, கொலண்ட் றோட், ஈஸ்ட் ஹம், லண்டன் Eb 2EP U.K**
**தொலைபேசி: 02084704416**

# வடமாகாண
# புற்று நோய், எயிட்ஸ் நோய்
# தடுப்புச் சங்கம்



## புற்று நோய் சார்பான எமது பணிகள்

நோயாளர்களை இனம்காணல். குறிப்பாக ஆரம்ப நிலையில் இனம் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

இனம் காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்

ஆதரவற்ற நோயாளர்களுக்கும் இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்

சமூக நல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவுபடுத்தல்

புற்று நோய் சார்பான சமூக சுகாதாரக்கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்

## எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்

**இந் நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இயக்குனர்கள் மத்தியில் மேற்கொண்டு வரமுன் காத்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்**

எம் பணி சிறக்க நிதி உதவியை வேண்டுகின்றோம்.
புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட அழைக்கின்றோம்.
நன்றி.

## வடமாகாண
## புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

**வேம்படி வீதி,**
**ரிம்மர் மண்டபம்.**

**தொ.பே: 021 3207040**




வள்ளி தெய்வானை சமேதராய் பச்சை மயில் மீதினில்
எமக்கு காட்சி தந்து எமது அமைதிக்கு வரமருள் முருகா!

மின்னுவதெல்லாம் பொன்னல்ல
மின்னுவதோ மின்னுவதாகவே இருக்க வேண்டும்
அது தான் தங்க நகை.
மனம் கவரும் கண்கவர் டிசைன்களுடன்
அமைக்கப்பட்ட ஆபரணங்கள் வாங்குவதற்கு

நங்கையர் நாடி வரும் இடம்

# நதியா நகைமாடம்

# கவுசன் நகைமாடம்

129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இல.149 -02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 - 3479



நல்லைக்குமரன் அருள் வேண்டி
ஞாலமெலாம் பிரார்த்தனையாம்
ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய பிரபல ஆசிரியர்களின்
தமிழ் ஆங்கில மொழி மூலமான புத்தகங்கள், பயிற்சிகள் வினாப்பத்திரங்கள்,
மும்மொழி அகராதிகள், அலுவலக மற்றும் பாடசாலை உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
இன்னும் பற்பல பாடசாலை மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள்
அத்தனையும் ஒரே இடத்தில் பெற்று நன்மையடையலாம்.

# லக்ஸ்மி காகிதாதிகள்

மங்கள நிகழ்வுகளுக்குரிய அழைப்பிதழ்கள், றெஜிபோம் வர்ண எழுத்துக்கள்.
அழகான காட்சி அறை மலிவான விற்பனை. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இல. 2, நவீன சந்தை கட்டிடம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212224375
0776913066



அலங்கார கந்தன் ஆறுமுகமாகி தங்கரதத்தில்
அருட் காட்சி தர வருகின்றார்

JT

# JAFFNA TRADERS

## யாழ்ப்பாண வணிக நிலையம்

*இல.302, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* *தொ.பே: 021 2229453*

# யாழ்ப்பாண இரும்பகம்

# ஏசியன் பெயின்ற்ஸ்

32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 5589, 7028

யாழ்–கொழும்பு–யாழ் பாரஊர்தி சேவை போக்குவரத்து

## J.T. ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

135, ஆட்டுப்பட்டி வீதி, கொழும்பு–13
தொ.பே: 0114987935

190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 5672214



அலங்கார தேரேறி அடியார் புடைசூழ வெள்ளை மணல் வீதி
தனில் நமையாளும் திருமுருகன் பவனி வருகின்றான்

புதிய இடம் புதுமைப்பொலிவு அழகான காட்சிக்கூடம்
- இராஜபுரம்-

# இராஜேஸ்வரி
# ரெக்ஸ்ரைல்

உங்களுக்கு வேண்டிய புதுவகையான ஆடைகள், கண்கவர் பஞ்சாபிகள்
சிறுவர் பெரியவர்களுக்கு ரெடிமேட் உடைகள் என்பவற்றை வாங்கி மகிழ்ச்சி அடையுங்கள்.
கண்ணை மயக்கும் பளபள மினுமினு புதிய புடைவைகளுக்கு
கொழும்பு "பாஷன்களுக்கு நிகர் யாழ்ப்பாணத்தில் "ராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் தான்"

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் புதிய இடமல்லவா லாபகரமான விற்பனை.
ஒரு முறை விஜயம் செய்தால் இராஜேஸ்வரியின் பெருமிதம் தெரியும்
வாருங்கள் பாருங்கள்

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 6953



நல்லைக்குமரா உன் நாமம் நினைவிருத்த
நாம் வேண்டுவதெல்லாம் அமைதியல்லவோ!

புதுப் பொலிவுடன் விசாலமான மாடிக் கட்டடத்தில் அமையப் பெற்ற

# பெசன் ஹவுஸ்

சகல விதமான அலுமினிய, வெண்கலப் பாத்திரங்கள் அன்பளிப்பு பொருட்கள்
கோவிலுக்குரிய பொருட்கள் சிறுவர்களுக்கேற்ற விளையாட்டு பொருட்கள் அப்பப்பா உள்ளே
சென்று உங்கள் எண்ணப்படி விரும்பிய பொருட்களை தெரிவு செய்யலாம்

# FASHION HOUSE

புதிய இடமல்லவா! உங்கள் விருப்பம் நிறைவேறும்

இல. 65, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பே: 021 2228713

45வது வருட சேவையில் ....



# பரிமளா ஸ்ரோர்ஸ்

மகப்பேற்றுத் தாய்மாருக்கும், மழலைகளின் வளர்ச்சிக்கும், பூப்பெய்திய மங்கையருக்கும்
கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும், விளையாட்டில் வெற்றிபெற வீரர்களுக்கும்
வீராங்கனைகளுக்கும், குடும்பத்தில் அங்கத்தவர்கள் அனைவருக்கும் அருமருந்தாகத் திகழ்வது

**நல்லெண்ணை உலகில் முன்னணி வகிப்பது** V.S.P.

# V.S.P ஸ்பெஷல் லஞ் ஓயில்

கொழும்பு வாழ் மக்களின் நன்மை கருதி இவ் விலாசங்களில் V.S.P. நல்லெண்ணையை பெற்றுக் கொள்ளலாம்.

ஆச்சிபூத் சென்ரர்
இல.44, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே: 2366484

ஏக விநியோகஸ்தர்
இல.26, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222785

யாழ் ரேஸ்றிபூட் புறோசல்
இல.30/9, ஹம்டன் லேன்,
கொழும்பு - 6
தொ.பே: 0773631613



ஞானிகள் முருகன் வீதிதனில் நடமாடி
அழகன் முருகன் அருட்கடாட்சம் பெற்றார்கள்.



# எரிக்கணேஷ்

கண் வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும் கண்ணாடிகளை
சரிவரப் பெற்றுக் கொள்ளவும், நவீன ரக Frame களையும் தரமான
Lense களையும் பெற்றுக் கொள்ள அன்றும் இன்றும் என்றும்
கண்ணாடிகளுக்குப் பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்

# Eric Ganesh

இல.60, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

இல.546, 556, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2456

இல.91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.



நல்லைக்குமரா உன் நாமம் நினைவிருத்த
நாம் வேண்டுவதெல்லாம் அமைதியல்லவோ!

Multilac

மிக உயர்ந்த தரம் ஆகக் குறைந்த விலை

# கந்தவேலன் ரேடர்ஸ்

## Multilac Colour Bank

வர்ண உலகில் புரட்சி

**உயர்தரச் சான்றிதழ்களுக்கு இப்போது அதிகம் செலவு செய்யாதீர்கள்.**

இல.110, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

T.P: 021 2222822





என்றும் முருகன் நினைவிருத்தி அவன் தாழ்
வணங்கி அவன் அருள் பெற்றிடுவோம்

# சீமாட்டி

தரமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரம்

பெயருக்கேற்ற ஸ்தாபனம்!
யாழ்.நகரில் தேடித்தேடி
நாடுவது

*Wholesale & Retail*
*Dealers in Textiles*
*Specialist in Wedding Sarees*

மங்கையர் நாடி ஓடிவரும்
பெருமை மிக்க
புடவை ஸ்தாபனம்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 2228564

நித்தம் நித்தம் முருகா! உன் அருளுடன் நான் செய் கருமமெல்லாம்
சிறப்படைய அருள் தாருமையா!

இதோ!

புதிய உதயம் ராஜன் பான்சி நன்மதிப்பு பெற்ற புதிய

# சிறி ராஜன் பன்சி ஹவுஸ்

ஆகா!
என்ன அதிசயம்
அழகுசாதன அன்பளிப்பு பொருட்கள்
நிறைந்து இருப்பதோடு
மங்கையர் கூட்டமாக வந்து
அழகுசாதனங்களை பெற்று குதூகலித்து
செல்வதை பார்க்கலாம்.
எல்லோரையும் கவர்ந்திழுக்கும்
புதிய ஸ்தாபனம்

# "ஹரிஷ் அன்பளிப்பு அகம்"

வாருங்கள் பாருங்கள்

இல.65, 66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224327

இல.18A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776003205


எமது எதிர்கால தலைவர்களுக்காக
05 வயது தொடக்கம் 18 வயது வரையிலான
குழந்தைகளுக்கு
மக்கள் வங்கியிடமிருந்து
மக்கள் வங்கி
சிசு உதான
சிறந்த எதிர்கால சந்ததியினர்
www.peoplesbank.lk
நாட்டின் எதிர்கால
தூண்களான உங்களுடன்
என்றும் நாம் இருப்போம்
திடசங்கற்பத்தினாலும் திறமைகளினாலும் உந்தப்பட்டு பல்வேறு வித்தியாசமான துறைகளிலும் பிரகாசிக்கும் சிறுவர்களினால் நமது தேசம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியினராகிய நாம் அவர்கள் ஒவ்வொருவரினதும் மறைந்திருக்கும் திறமைகளையும் சாதனை வல்லமைகளையும் ஊக்குவிப்பதில் எமது தேசத்தின் சிறுவர்களுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றோம். சாதனைப் பயணத்தில் எமது சிறுவர்களுக்கு உதவுவதற்கான அத்திவாரமாக விஷேடமாக வடிவமைக்கப்பட்டிருப்பதே "சிசு உதான" ஆகும்.
இளம் பருவம் முதலே பிள்ளைகளுக்கு சேமிப்பின் மகிமையை ஊக்குவிப்பதன் மூலம் பெரியவர்களான பின்பும் அவர்கள் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வதை நிச்சயப்படுத்துங்கள். இன்றே மக்கள் வங்கியின் "சிசு உதான" சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து, உங்கள் பிள்ளையின் ஒளிமயமான எதிர்காலத்திற்கான பரிசொன்றை வழங்குங்கள்.
AA-Brand Finance Rating, AA+ Fitch Rating
*நிபந்தனைகளுக்குட்பட்டது
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி



எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போகுமே!
"யோக சுவாமிகள்"

BATA

"பாட்டா" என்றால் காலணி பற்பல வடிவமைப்பில்
பற்பல நிறங்களில் நவீன காலத்திற்கேற்ப
வரவழைத்து விற்பனை செய்யும் பெயர் பெற்ற பாட்டா முகவர்

# யாழ் காலணியகம்

BATA **YARL BATA** BATA

உலகளாவிய காலணி பெயர் 'பாட்டா'
அதிலே விரும்பி தெரிவு செய்வதற்கு தகுந்த ஒரே இடம்

# YARL TRADE CENTRE

ஆஸ்பத்திரி வீதி,
இல.11, நவீன சந்தை (வெளிப்புறம்)

BATA

தொ.பே: 021 2223152





வேல் உண்டு வினையில்லை
முருகன் அருள் உண்டு துன்பமில்லை



# சானுகா
# நகைமாடம்

நீங்கள் விரும்பிய டிசைன்களை
புதிய முறையில் 22 கரட்டில் செய்து
பெற்றுக் கொள்ளலாம்.

# Shanuga Nagaimaadam

இல.64D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


குருவாய் வருவாய் அருள்வாய் குகனே
உதயா
ஜுவல்லர்ஸ்
ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
செய்து தரப்படும்
நவீன நங்கையர்க்கேற்ற புதிய புதிய
அமைப்பில் 22 கரட்டில் உருவாக்கப்பட்ட
அழகிய நகைகள்
தரத்தை விரும்பினால் நாடுங்கள்
இல.81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4434


எந்நாளும் நல்லூரானை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போகுமே
Dulux
SIVAN MOTORS STORES
70/1, Manipay Road, Jaffna. T.P: 021 222 2763
Fax: 021 222 8647
Dulux
Paint Centre
Branches
103, Kandy Road,
Chavakachcheri.
Sivakumaran Enterprices
75, Stanly Road, Jaffna.
97, A9 Road
Karadippokku Junction,
Kilinochchi.


தமிழினம் மீட்சி பெற அடியார் கூட்டம் அரோகரா
என ஆர்ப்பரித்து இறைஞ்சுகின்றோம் முருகா!
நங்கையரோ விரும்புவது நாகரீக மாற்றம்
அதற்கேற்றவாறு நடை உடைகளிலும் மாற்றம்
என்றும் இளமையை விரும்புவது நங்கையர்,
என்றும் அழகை விரும்புவது நங்கையர்
என்றும் இளவரசியாக இருக்க விரும்புவது நங்கையர்
அது தான் என்னவோ! நங்கையர் இளவரசி
சேலைச் சோலைக்கு படையெடுப்பது! எங்கே....
இளவரசி
வாருங்கள்! பாருங்கள்! தெரியுங்கள்!
நாடுங்கள் திருப்தியுடன் செல்வீர்
சேலைச் சோலை
இல.57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2503



Chelva
Wedding Hall & Restaurant
Chelva
GROUPS
செல்வா குழுமம்
021 221 9779
No.1229, Poonari Marathtadi, K.K.S Road, Jaffna


நாளும் பொழுதும் முருகா உன் திருப்பாதம் நினைவிருத்தி வேண்டுவதெல்லாம்
தமிழினம் அமைதி பெற்று வாழ வேண்டுகின்றோம்!
YALLARUVI
BOTTLED DRINKING WATER
இது வெறும் தண்ணீர் அல்ல
உங்கள் ஆரோக்கியமான வாழ்வு...
It's not Just Water
Taste & see the difference with our purified drinking water purification process with our latest reverse osmosis technology
Think again!!
Swissmineral
Call for Free Home & Office Delivery
Jaffna : 021 222 81 22 Vavuniya : 024 324 97 02


Save Money With LED
Light up
with Led!
Eco - Friendly as led does not contain mercury
Up to 80% saving in energy
Lasts 50 times longer than conventional Lights
No Replacement for up to 20years (based on usage of 6hr/day)
ECO LED ஐ
பொருத்துவதன் மூலம்
உங்களது எதிர்கால சேமிப்பை
அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.....
Distributors
Global Business Network
231, Temple Road, Nallur, Jaffna.
021 320 1771 , Colombo Contact : 077 778 3253



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு வாகன வசதி உண்டு
E.S.P.NAGARATNAM & CO.
Cycles, Cycle Parts & Electrical Goods.
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்.
American Water
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3096, 021 221 7277


நாளும் பொழுதும் முருகா உன் திருப்பாதம் நினைவிருத்தி வேண்டுவதெல்லாம்
தமிழினம் அமைதி பெற்று வாழ வேண்டுகின்றோம்!
செல்விகளே செல்விகளே என்ன தேடுகிறீர்கள்
"ஹம்சிகா" பான்சி ஹவுஸ்
அடடா! அதோ போங்கள் மலாயன் கபேக்கு நேர் தெற்கு பக்கமாய் இருக்கிறது
உங்கள் எண்ணம் போல் விரும்பியவாறு அழகுசாதனப் பொருட்கள் நிறைய உண்டு.
ஒரே இடத்தில் விரும்பியதை பெற்றுக் கொள்ளலாம். வாருங்கள் பெற்று மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்.
ஹம்சிகா பான்சி ஹவுஸ்
இல.5, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224347
இதோ! புதியதோர் கிளை நிறுவனம்
மது கிப்ற் அன்ட் செலக்ஷன்
இல.29, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.


தமிழினம் மீட்சி பெற அடியார் கூட்டம் அரோகரா
என ஆர்ப்பரித்து இறைஞ்சுகின்றோம் முருகா!
சாரங்கா
நகைமாடம்
தங்கம் என்றால் தங்கம் தான்.
தங்க ஆபரணங்களுக்கு என்றும்
ஈடு இணையற்ற ஸ்தாபனம்
நம்பிக்கை நாணயத்துடன் நன் மங்கையர்
நாடும் இடம் 22 கரட்டில் தங்க நகைகள்
புதிய புதிய டிசைன்களில் செய்யும் ஸ்தாபனம்
பணம் பரிமாற்றும் தனியார் நிறுவனம்
Sharangaa
Money Exchange (Pvt) Ltd
Nagai Madam
இல.157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226972,
021 2222480
இல.109, புதிய கட்டிட தொகுதி,
கஸ்தூரியார் வீதி.
இல.55, செட்டித்தெரு,
கொழும்பு.
தொ.பே: 02434971
பக்ஸ்: 0112434071


Malayan Cafe
மலாயன் கபே
A FIRST CLASS
MALAYAN CAFE
மலாயன் கபே
இல.36,38, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
சுத்தம் சுகாதாரம் அது மட்டுமா
பாயாசத்துடன் சைவ சாப்பாடு.

# நல்லைக்குமரன் மலர்
# 2014



ஈழத்து முதற் பெண்சித்தர்
தவத்திரு சடையம்மா ஞானியர்

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
## சைவசமய விவகாரக்குழு

MATHI COLOURS
Nallur 021 2229285